# தாய்வீடு

235

ISSN 2369-3657

THAIVEEDU | OCTOBER | 2026

தாய்வீடு | ஒக்ரோபர் | 2026

## ‘சாகித்திய ரத்னா’ மு. சிவலிங்கம்

■ மல்லியப்புசந்தி திலகர்

## மனித குலம் எதிர்நோக்கும் பேராபத்து

■ சுப்ரமணியம் ஜெயசீலன்

## வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்காற்றுச் சட்டத் திருத்த மசோதா, இந்திய தேசத்தின் சிறுபான்மையினருக்கு எதிரானதா?

■ நெல்லை ஜெயசிங்



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**தொழினுட்ப உதவி**
சாம் டானியல்

**நிர்வாக ஒருங்கிணைப்பு**
சாம்பவி நிரோஷன்

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

## நீதிக்கான பாதையும் நீடித்த அமைதிக்கான தேவையும்

2019-ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறன்று நிகழ்த்தப்பட்ட கோரமான கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்குக் காலந்தாழ்த்தியாகினும் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை வரவேற்கத் தக்கதே. இருநூற்றெழுபதுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு, ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த அந்த ஒருங்கிணைந்த தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் எனப் பதினைந்து பேர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டு, ஒவ்வொருவருக்கும் இருநூறு முதல் இருநூற்றறுபது ஆண்டு வரையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட மக்களின் நீண்டகாலக் காத்திருப்புக்கு ஓரளவுக் கேனும் பதிலளித்து, இன்றும் ஆறாதிருக்கும் அவர்களின் மனவடுக்களுக்கு ஒத்தடமாக அமைந்திருக்கிறது.

இதிலே மனதை உறுத்திக்கொண்டிருக்கும் ஒரு முக்கிய விடயம், தண்டனை பெற்ற பதினைந்து பேருள் ஒருவர்கூட தமது குற்றச்செயலுக்காக மனம்வருந்தவோ மன்னிப்புக்கோரவோ இல்லை என்பதே. தாம், தமது மதத்துக்கான தியாகிகள் என்பது போன்ற இறுமாப்புடனேயே அவர்கள் இறுதிவரை இருந்தார்கள். அது மோசமானதொரு மனநிலையின் வெளிப்பாடு.

'அளவற்ற அருளாளன்' என்றும், 'நிகரற்ற அன்புடையோன்' என்றும் இறைவனை விளிக்கின்ற ஒரு மறை, இறைவன் ஒருவரே என்று ஆணித்தரமாக நம்புகின்ற ஒரு மறை, இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்கள்மீது கொலைத் தாக்குதல் புரிய ஒருபோதும் தூண்டாது. குற்றமற்ற ஒருவரைக் கொல்வது முழு மனிதகுலத்தையே கொல்வதற்குச் சமமானது எனப் போதிக்கின்ற ஒரு மதத்தின் பெயராலேயே இந்தக் கொலைகள் செய்யப்பட்டன என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

மாறாக, சுயநல அரசியலின் தூண்டுதலாகவும் மதத் தீவிரவாதத்தின் வெளிப்பாடாகவுமே இந்தத் தாக்குதல்கள் அமைந்துள்ளன. உலகின் எல்லா மதங்களிலுமே இன்று அடிப்படைவாதிகளும் தீவிரவாதிகளும் முனைப்புடன் செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எனினும், சிறுபான்மையினரான அவர்களால் மேற்கொள்ளப்படும் வெறிச்செயல்களுக்கு, சகிப்புத்தன்மை மிக்க, அன்பைப் போதிக்கின்ற, மக்களின் மனங்களிலே அமைதியை வேண்டுகின்ற எந்தவொரு மதமும் ஒருபோதும் பொறுப்பாக முடியாது.

அந்த வகையிலே, இலங்கையின் பல்வேறு மதச் சமூகங்களுக்கிடையே நிலவி வந்த மத அடிப்படையிலான பிளவுகளையும், ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள அவநம்பிக்கைகளையும், தவறான புரிதல்களையும் ஓரளவுக்கேனும் தீர்க்க இந்தத் தீர்ப்புப் பெரிதும் உதவும் என நம்பலாம். பன்மைத்துவச் சமூக அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்த சில தீவிரவாதிகளின் செயலால், அதே மதத்தைச் சார்ந்த ஒட்டுமொத்தச் சமூகத்தின் மீதும் சுமத்தப்பட்டிருந்த அபாண்டமான சந்தேகப் பார்வையை நீக்க இது வழிவகுக்கும்.

இருப்பினும், இந்தத் தீர்ப்புடன் நீதி வழங்கல் முழுமையடைந்துவிட்டதா என்ற கேள்வியும் எழுகிறது. தண்டிக்கப்பட்டுள்ள பதினைந்து பேரும் குற்றமற்றவர்கள் அல்லர். அவர்கள் இந்தக் கொடுங்குற்றத்துக்குத் துணை நின்றவர்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது அவர்கள் ஆற்றிய எதிர்வினையும், வழங்கிய வாக்குமூலங்களுமே அவர்களின் குற்றத்துக்குச் சான்று.

ஆனால், தண்டிக்கப்பட்டவர்கள் இந்த சதியின் உண்மையான பின்னணியாளர்கள் அல்லர் என்ற உண்மையையும் கருத்திற்கொள்ளாது இருக்கமுடியாது. இந்தப் பதினைந்து பேரும் வெறும் கருவிகளாகவே பயன்படுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பாரிய உயிர்க்கொலைகளின் பின்னணியில் உள்ள முதன்மையான சூத்திரதாரிகளும், உண்மையான சதிகாரர்களும் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

இந்தக் கொடுங்குற்றத்துக்கான உண்மையான நீதியும், கொல்லப்பட்ட ஆன்மாக்களுக்கான அமைதியும், அவர்களின் உற்றார், உறவினருக்கான ஆறுதலும் கிடைக்கவேண்டுமானால், இந்தத் தாக்குதலின் பின்னாலிருந்த அரசியல், சர்வதேச சதி வலைகள் போன்றன முழுமையாக அவிழ்க்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட வேண்டும். அதிகாரத்தின் நிழலில் ஒளிந்திருக்கும் முக்கிய சதிகாரர்கள் அனைவரும் கண்டறியப்பட்டு, தகுந்த முறையில் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் இந்த விடயத்திலே முழுமையான நீதி நிலைநாட்டப்படும்.

அதுவரை, பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான குரலும், உண்மையை நோக்கிய தேடலும் தொடர்ந்து கொண்டிருக்கும். அத்தோடு, சதிகாரர்கள் நீதியின்முன் நிறுத்தப்படாது தப்பிக்குமிடத்து, அவர்கள் இன்னுமொரு முறை இத்தகையதொரு கோரத்தாண்டவத்தை ஆடத் தயங்கமாட்டார்கள் என்ற உண்மையையும் மறவாதிருப்போம்.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


நீதிக்கான பாதையும்
நீடித்த அமைதிக்கான தேவையும் 3

வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்காற்றுச் சட்டத் திருத்த மசோதா (FCRA) 2026, இந்தியதேசத்தின் சிறுபான்மையினருக்கு எதிரானதா? 5
- நெல்லை ஜெயசிங்

பூமியின் உயரத்தில் நேபாளம் 9
- சிவா முருகுப்பிள்ளை

அமிர்தலிங்கத்தின் மரபும் அனைவருக்கும் பொதுவான எதிர்காலத்துக்கான ஜனநாயகத் தெரிவுகளும் 16
- வீரகத்தி தனபாலசிங்கம்

மொழியின் அரசியல் 4
தனிச்சிங்களச் சட்டத்தின் 70 ஆண்டுகள் 20
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மனித குலம்
எதிர்நோக்கும் பேராபத்து 27
- சுப்ரமணியம் ஜெயசீலன்

காற்பந்தாட்டமும் சில வீரர்களும் 31
- குரு அரவிந்தன்

பைன் காடுகளின் சாம்பல் நிழலும் நிலத்தின் மரண அமைதியும்
மரங்கள் பேசும் நிலத்தின் அரசியல் 03 34
- அருள்கார்க்கி

21-ஆம் நூற்றாண்டில் சிறுவர் உரிமைகள்: டிஜிட்டல் வெளியும் மனநலப் பாதுகாப்பும் 37
- அகமட் பிஸ்தாமி

குழந்தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாடும் அறிவாற்றல், செயற்றிறன் பாதிப்பும் 41
- த. சிவபாலு

பதின்மவயதினருக்கும் உங்களுக்கும் இடையே மாற்றத்துக்கான கற்றலும் வளர்ச்சியும் 44
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

கால இயந்திரம் இல்லாத உலகில் காப்புறுதியின் அவசியம் 47
- செந்தூரன் புனிதவேல்

இலையுதிர்கால வீட்டுப் பராமரிப்பு 50
- வேலா சுப்ரமணியம்

காதல் தந்த காயம்...
காலத்துக்குத் தந்த பேரறம் 53
- குமார் புனிதவேல்

அகவிழிப் பார்வையின் உரிமையொளி!
சர்வதேச வெண்பிரம்புப் பாதுகாப்பு நாள் 56
- சி. நற்குணலிங்கம்

ஓர் ஈழ நாட்குறிப்பு – 8 60
- ஓவியர் ஜீவா

புலம்பெயர் இளைய தலைமுறையினரைத் தாயகத்துடன் இணைத்தல் 64
- நடராசா சிறிரஞ்சன்

2000-க்குப் பிந்தைய ஈழத்துப் போரிலக்கியப் போக்குகள் 66
- யமீனா கிருஷ்ணசாமி

இலங்கையில் தமிழர்களின் தொன்மை நிலையை வலியுறுத்தும் இராமாயணத் தடங்கள் 69
- அருணாசலம் லெட்சுமணன்

ஹாச்சிகோ: ஒரு நாயின் பேரன்பும் நீண்ட காத்திருப்பும் 77
- ரூபன் சிவராஜா

சிலந்தியும் சதுரங்கமும்: இங்மார் பெர்க்மனின் மௌன முத்தொகுதியும் ஏழாம் முத்திரையும் – II 80
- சொர்ணவேல்

தோட்டத் தொழிலாளியாகத் தொடங்கி பாடசாலை அதிபராகப் பணி நிறைவு! - ஒரு தலைமுறையை வழிநடத்திச் செல்லும் மலையகக் கதை 88
- மல்லியப்புசந்தி திலகர்

ஈழத்து அரசியல் எதிர்ப்புக் கவிதை மரபும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமானும்: ஒரு நவீனத்துவ -அமைப்பியலாய்வு 93
- ஈழக்கவி

பல்துறை அறிவின் தமிழ்த் தடம் பேராசிரியர் சபா. ஜெயராசா 96
- இக்பால் அலி

வரலாற்றின் பக்கங்களில் மறைக்கப்பட்ட சுவடு: பொன். கந்தையாவின் வாழ்வும் அரசியலும் 100
- கனகசபை ஸ்ரீஸ்கந்தன்

வாழ்நாள் சாதனையாளர் மு. சிவலிங்கத்தின் சிறப்பும் ‘சிவாமுதம்’ சிறப்பிதழும்! 104
- ஜீவா சதாசிவம்

‘சாகித்திய ரத்னா’ மு. சிவலிங்கம் 108
- மல்லியப்புசந்தி திலகர்

தமிழ்ப் பட்டிமன்ற உலகில் நீங்கா இடம்பிடித்த சாலமன் பாப்பையா 110
- புட்பா கிறிட்டி

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் – 15
தொல்காப்பியத்தில் தொடரியல் – II 113
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

புனித மலையும் பண்பாட்டு மானுடவியலும் - அலெக்ஸாண்டர் மெக்கின்லி எழுதிய ‘Mountain at a Center of the World’ நூல் மீதான ஒரு மானுடவியல் வாசிப்பு 118
- அனுஷ்கா கஹந்தகமகே
தமிழில்: ஜிஃப்ரி ஹாசன்

ஆ. மாதவன் கதைகள்
தலைகீழாகும் கணிப்புகள் 123
- சு. வேணுகோபால்

போருக்குப் பிந்தைய ‘தேசப்பற்று’ இலங்கையில் வரலாறு தேசியப் பழமரபாக உருமாற்றப்படுதல் – II நிகழ்கால மேலாதிக்கச் சொல்லாடலின் கட்டுமானம் 125
- நீரா விக்கிரமசிங்க
தழுவல் தமிழாக்கம்: ச. சத்யதேவன்

ஆனந்த குமாரசுவாமி எனும் பேரறிஞன்:
மறந்தவர்களும் மறைத்தவர்களும் 131
- என். சரவணன்

மா சேதுங் 50
மாவோ: நவீன சீனாவின் சிற்பி 141
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

சித்தன் வாக்கும் கவியின் போக்கும் 147
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 150
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

சுந்தரப்பா 155
- பஞ்சகல்யாணி

இயந்திர உலகு 158
- சுடரி சிவகௌரி

முலையறுகாதை!
பெண்துயரப் பெருங்கதை – 19 160
- மா. சித்திவினாயகம்

சில மணித்துளி நேரப் புகழ் 163
- நுகி வா தியாங்கோ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்



நெல்லை ஜெயசிங்

## வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்காற்றுச் சட்டத் திருத்த மசோதா (FCRA) 2026

# இந்தியதேசத்தின் சிறுபான்மையினருக்கு எதிரானதா?

வெளிநாடுகளில் இருந்து பல்வேறு வடிவங்களில், இந்திய தொண்டு நிறுவனங்களுக்கும் சிறுபான்மையினரின் அமைப்புகளுக்கும் வருகின்ற, நிதி மீதான கட்டுப்பாட்டையும், அரசின் அதிகாரப் பிடியையும் மேலும் இறுக்கமாக்கும் வகையில், 2026 மார்ச் மாதம் மசோதா ஒன்று நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. இந்த FCRA, (The foreign contribution (Regulation) Amendment Bill) மசோதா சிறுபான்மையினரின் உரிமைக்கு எதிரானது என்பதால் எதிர்கட்சிகள், சமூக செயற்பாட்டாளர்கள், சிறுபான்மை அமைப்புகள், குறிப்பிட்ட இம்மசோதாவை நிறைவேற்றக்கூடாதென கண்டனம் தெரிவித்து வருகின்றன.

FCRA என்பது, தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள், சங்கங்கள், தனிநபர்கள், வெளிநாடுகளிடமிருந்து பெறும் நிதியுதவிகளை ஒழுங்குபடுத்துகின்ற ஒரு சட்டம் எனக் கூறலாம். இதன் நோக்கம் தேசப் பாதுகாப்பு, மற்றும் வெளிப்படைத்தன்மை எனக் கூறப்படுகிறது.

### FCRA வரலாறு:

மேற்படி சட்டம் தற்போது திடுதிப்பென கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல. இந்திராகாந்தி அம்மையாரின் ஆட்சிக்காலத்தில், 1976 மார்ச் 31-இல் முதற்தடவையாக வெளிநாட்டு பங்களிப்பு தொடர்பான சட்ட வரைவு கொண்டுவரப்பட்டது. அது இன்றைய சட்டவடிவிலிருந்து பெருமளவு வேறுபட்டதாகும்.

அச்சட்டம் வெளிநாட்டிலிருந்து வரும் நிதி, பொருள், அன்பளிப்பு என்பவற்றின் மீது கட்டுப்பாட்டை கொண்டிருந்தது. அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற அங்கத்தவர்கள், அந்நிய நிதியைப் பெற இதன் மூலம் தடைவிதிக்கப்பட்டது. செய்தித்தாள்கள் மீதும் அரசுப் பணியாளர்கள் மீதும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. வெளிநாட்டு நிதி வரவு, அனைத்து வகையிலும் அரசின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இதன் தொடர்ச்சியாக 1984 ஒக்ரோபர் 20-இல் அவசர சட்டமாக கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் பின்னர், 1985-இல் ராஜிவ்காந்தி ஆட்சியில் சட்ட திருத்தமாக அமுல்படுத்தப்பட்டன. அதன்படி வெளிநாட்டு நிதி பெறும் அமைப்புகள் மீது கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டன. அத்துடன் அரசின் முன் அனுமதி பெறும் விதிமுறைகள் வலுப்படுத்தப்பட்டன. குறிப்பாக தொண்டு நிறுவனங்களின் (Non Governmental Organization) பதிவுகள், கட்டாயம் எனக் குறிப்பிடப்பட்டது. மேலும் வெளிநாட்டு நிதி, இந்திய அரசியல் நிர்வாகத்தின் மீது தேவையற்ற பாதிப்பை ஏற்படுத்தாமல் கண்காணிக்க இச்சட்டம் அவசியம் என கூறப்பட்டது. இக்காலப்பகுதியில் இச்சட்டங்களின் பின்னர் 4138 அமைப்புகளின் பதிவுகள் இரத்தானமை கவனிக்க வேண்டிய விடயமாகும்.

### 2010–இல் புதிய சட்டம்:

ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட 1976-ஆம் ஆண்டு, FCRA சட்டம், 2010-இல் நீக்கப்பட்டு, புதிய சட்டம் 2011-இல் நடைமுறைக்கு வரலாயிற்று. இச்சட்டத்தில் நிதி பெறும் அமைப்புகள் மீது அரசின் வழிமுறைகள், கட்டுப்பாடுகள், தொடர்ந்து கடுமையாக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

“ FCRA மேற்படி சட்டம் தற்போது திடுதிப்பென கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல. இந்திராகாந்தி அம்மையாரின் ஆட்சிக்காலத்தில், 1976 மார்ச் 31-இல் முதற்தடவையாக வெளிநாட்டு பங்களிப்பு தொடர்பான சட்ட வரைவு கொண்டுவரப்பட்டது. அது இன்றைய சட்டவடிவிலிருந்து பெருமளவு வேறுபட்டதாகும். ”

> 2020-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தங்களால் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படலாயின. நூற்றுக்கணக்கான நிறுவனங்களின் பதிவுகள் இரத்தாயின. சிறிய நிறுவனங்களின் நிதி ஆதா ரங்கள் குறையலாயின. மனித உரிமை அமைப்புகளின் செயற்பாட்டின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரிக்கலாயின. இவை அனைத்தும் நேரிடையாக சிறுபான்மையினருக்கு எதிரானதொரு தோற்றத்தை வெளிப்படையாக காட் டாவிட்டாலும், நடைமுறையில் சிறுபான்மையினரின் சமூகப்பணி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகலாயிற்று.

வெளிநாட்டு நிதி வரவில் கட்டுப்பாடு, மற்றும் தொண்டு நிறு வனங்களின் பதிவு காலம் 5 வருடமாக மட்டுப்படுத்தப் பட்டது. குறிப்பிட்ட அரசியல் அமைப்பின் மீது அதிக கட் டுப்பாடு, அதன் நிர்வாகச் செலவின் மீது வரம்பு, என அரசின் தலையீடும் கட்டுப்பாடும் கூர்மைப்படுத்தப்பட்டன. அத்துடன் மேலதிகமாக பதிவை இரத்துச்செய்யும் அதிகா ரத்தையும் அரசு தன்வசப்படுத்திக் கொள்ளலாயிற்று.

## 2020–ஆம் ஆண்டு பாஜக ஆட்சியில் FCRA திருத்தங்கள்:

காலத்திற்கு காலம் அவ்வப்போது FCRA மாறுதலுக்கு உள்ளாகி வந்த நிலையில், 2014-இல் ஆட்சிக்கு வந்த மோடி தலைமையிலான பாஜக அரசு வெளிநாட்டு நிதி வரவு தொடர்பாக 2020-இல் கடுமையான சட்டங்களை நிறை வேற்றத் தொடங்கியது. இதுவே தற்போது வரைக்கும் நடை முறையில், செயல்பாட்டில் இருந்து வருகிறது. அதில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்,

- நிர்வாகச் செலவு நிதி, 50%-இலிருந்து 20% ஆக குறைக் கப்பட்டது.
- வங்கி கணக்குகளில் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டது. SBI வங்கியில் மட்டுமே கணக்கு தொடங்க வலியுறுத்தப் பட்டது.
- நிர்வாகிகளின் ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டது.
- பதிவை இடைநிறுத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு என கூறப்பட்டது.
- தன்னார்வ அமைப்புகளை கண்காணிக்க அரசுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது.
- வெளிநாட்டு நன்கொடையை மாற்றவும் தடை விதிக்கப் பட்டது.

இவ்வாறு பாஜக ஆட்சியில் 2020-ஆம் ஆண்டு கொண்டுவ ரப்பட்ட திருத்தங்களால் தன்னார்வ தொண்டு நிறுவனங் களின் செயற்பாடுகள் பாதிக்கப்படலாயின. நூற்றுக்க ணக்கான நிறுவனங்களின் பதிவுகள் இரத்தாயின. சிறிய நிறு வனங்களின் நிதி ஆதாரங்கள் குறையலாயின. மனித உரிமை அமைப்புகளின் செயற்பாட்டின் மீதான கட்டுப்பா டுகள் அதிகரிக்கலாயின. இவை அனைத்தும் நேரிடையாக சிறுபான்மையினருக்கு எதிரானதொரு தோற்றத்தை வெளிப் படையாக காட்டாவிட்டாலும், நடைமுறையில் சிறுபான்மையி னரின் சமூகப்பணி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகலாயிற்று. நிதி மீது மட்டுமல்ல மனித உரிமை செயற்பாடுகள் மீதும் அரசின் தலையீடு அதிகரிக்கலாயிற்று. ஏராளமான அமைப் புகள் காணாமல் போய்விட்டன. தன்னார்வ அமைப்புகளை கண்காணிக்க, நிதி வரவை கட்டுப்படுத்த, இன்னும் பல்வேறு அதிகாரங்களை மேற்கொள்ள ஒன்றிய அரசுக்கு தற்போதைய சட்டதிட்டங்கள் மூலம் போதிய வாய்ப்பு இருந்தும், பாஜக அரசு 2026 மார்ச் மாதம் புதிய கட்டுப்பா டுகளை முன்மொழிந்திருப்பது தேசிய அளவில், எதிர் கட்சிகள் உட்பட சிறுபான்மை மக்கள் மத்தியில் கடும் அதி ருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

மேலோட்டமாக தற்போதைய சட்டத்தின் வாசகத்தை பார்த்தால், கிறீஸ்தவ அமைப்புகளை மட்டும் குறிவைத்து சட்டம் கொண்டுவர முற்படுவதாக கூற முடியாது. ஆனால் கூர்ந்து கவனித்தால் அமைப்புகளின் சொத்துக்களை நிர்வ கிக்க Designated Authority என அமைப்பொன்று கொண்டு வரப்படும் என அரசு கூறுவதில் உள்நோக்கம் இருப்பதாக கிறீஸ்தவ அமைப்புகள் குற்றம் சுமத்துகின்றன. ஆனால் அரசு, வெளிநாட்டு நிதி தவறாக பயன்படுத்துவதை கட்டுப் படுத்துவதற்கே இந்த ஏற்பாடு என அதனை நியாயப்படுத்து கிறது.

## முக்கியமான கட்டுப்பாடுகள்:

- பதிவு இரத்தானால் அல்லது முடிவடைந்தால் நிறுவனங் களின் சொத்துக்கள் அரசு வசம் (D.A.) சென்றுவிடும்.
- புதுப்பிக்க தவறினாலும் இதே நிலை ஏற்படும்.
- வெளிநாட்டு நிதியைப் பெற, முன்அனுமதிக்கு காலவ ரம்பு விதிக்கப்படும்.
- நிதியை கையாள்வதில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக் கப்படும்.

இவ்வாறான நிபந்தனைகள் கிறீஸ்தவ அமைப்புகளின் வளர்ச்சிக்கு எதிரானது என அம்மக்கள் கடும் அதிருப்தியை பதிவிட்டு வருகிறார்கள்.

> யாரும் தொட்டுப்பார்க்க முனையாத, தொழு நோயாளிகளை கரம் தொட்டு பராமரித்துவந்த கிறீஸ்தவ நிறுவனங்கள் சார்ந்த அருட்சகோதரிகளின் சேவையும் இதனால் பாதிக்கப்படலாம் என கூறப்படுகிறது. இச்சட்டம் சிவில் சமூக அமைப்புகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. சிவில் சமூக அமைப்புகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. மேலும் அர சாங்கத்தின் கட்டுப்பாட்டில் இவை இயங்கும் நிலை வரும்போது, மத சுதந் திரமும் பாதிக்கப்படும் என கூறப்படுகிறது.

## அரசின் முன்மொழிவு சிறுபான்மையினருக்கு எதிரானதா?

அரசின் FCRA தொடர்பான சட்டதிட்டங்கள் எந்த மதத் தையும் நேரிடையாக குறிப்பிட்டு, வெளிநாட்டு நிதி வரக் கூடாது என கூறவில்லை. ஆனால் நடைமுறையில், கிறீஸ்தவ அமைப்புகள் மீது இச்சட்டம் பயன்படுத்தப்ப டலாம் என பரவலாக பேசப்படுகிறது. மேலும் அவை கடுமை யாக்கப்படும் நிலை உருவாகி வருவதாகவும் மனித உரிமை அமைப்புகள் கூறிவருகின்றன.

நிதி உதவி பெற்று, மருத்துவமனைகள், பாடசாலைகள், கல் லூரிகள், முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல் லங்கள், என பல்வேறு சேவை சார்ந்த அமைப்புகளை கிறீஸ்தவ நிறுவனங்கள் உருவாக்கி, நீண்ட காலமாக மக்கள் சேவை செய்து வருகின்றன. இவற்றால் பெரிய அளவில் இந்து மக்கள் உட்பட அனைத்து மதத்தினரும் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். இவை நாட்டில் சமூக நீதியை வளர்ப்பதற்கும் உதவிகரமாக இருந்துள்ளன. பல தசாப்தங்களாக இந்திய தொண்டு நிறுவனங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு அரசுடன் இணைந்து செயற்பட்டு வந்துள்ளன. இயற்கை பேரிடரின் போது, NGO அமைப்புகள் ஆற்றிய சேவைகளை மறந்துவிடக்கூடாது. எனினும் கடந்தகாலங் களில் சிறுபான்மை மக்கள் மீதான ஒன்றிய அரசின் செயற் பாடுகள் அதிருப்தி தரும் வகையிலேயே இருந்துள்ளன.

குடியுரிமைச் சட்டம், மக்கள் தொகை கணக்கெடுப்பு, வாக்காளர் பட்டியல் திருத்தம், விசேட சட்டப்பிரிவு 370, பொது சிவில் சட்டம், வக்பு வாரிய சட்டம், உட்பட சிறுபான் மையினரின் வீடுகளை இடிக்கும் புல்டோசர் கலாசாரம், ஒற்றை கலாசாரத்தை உருவாக்கும் மனநிலை, வெறுப்பு அரசியல் பேச்சு, இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவ சரிவு, மதமாற்ற தடைச் சட்டம், பசுவதை தடுப்புச் சட்டம் என பல வற்றால் சிறுபான்மை மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ள நிலையில், FCRA திருத்தங்கள் மேலும் பாதிப்பை ஏற்ப டுத்தும் என நினைக்கின்றனர். மாநிலம் கடந்து வரும் நோயா ளிகளுக்கு சேவை செய்தால் FCRA இரத்தாகும் என்ற அச்சமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

யாரும் தொட்டுப்பார்க்க முனையாத, தொழு நோயாளிகளை கரம் தொட்டு பராமரித்துவந்த கிறீஸ்தவ நிறுவனங்கள் சார்ந்த அருட்சகோதரிகளின் சேவையும் இதனால் பாதிக்கப்படலாம் என கூறப்படுகிறது. இச்சட்டம் சிவில் சமூக அமைப்புகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி யுள்ளது. மேலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இவை இயங்கும் நிலை வரும்போது, மத சுதந்திரமும் பாதிக்கப் படும் என கூறப்படுகிறது. சிறுபான்மை மத நிறுவனங்களின் சொத்துக்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்து பறிமுத லாகும்போது, அந்நிறுவனங்கள் படிப்படியாக அழிந்து விடும் என கூறப்படுகிறது.

இன்றைய அரசு சிறுபான்மையினரின் அமைப்புகளை பார்க்கும் பார்வையும், இந்துத்துவ அமைப்புகளை, குறிப்பாக ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் சார்பு அமைப்புகளை பார்க்கும் பார்வையிலும் பாரபட்சம் இருப்பதாக கூறப்படு கிறது. ஆர்எஸ்எஸ் அமைப்பின் கிளை அமைப்புகளுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து இரகசியமாக பண உதவிகள் வருவதாக கூறப்படுகிறது. 2021-ஆம் ஆண்டு Frontline ஆய்வுகள், மற்றும் அமெரிக்காவின் Congressional Research Service-இன், 2026-ஆம் ஆண்டு அறிக்கை, இதனை தரவுகளுடன் வெளிப்படுத்தியுள்ளன. ஆர்எஸ்எஸ் அமைப்பு ஆரம்பித்து 100 வருடங்களாகியும் அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்படவில்லை எனக்கூறும் 27/08/2026 தீக்கதிர் நாழிதழ், அதன் காரணமாக அவ்வ மைப்பு பணம் வரும் விபரத்தை வெளியிடுவதில்லை எனவும் கூறியுள்ளது. ஆர்எஸ்எஸ் அமைப்புகளின் செயற்பாடுக ளுக்கு எந்த தடையும் கிடையாது. அதனுடன் பதிவு பெறாத பல்லாயிரம் அமைப்புகள் இருக்கின்றன. சங்பரிவார் நிறு வனங்கள் வெளிநாட்டு நிதி பெறுவதில், அரசு மென்மையான போக்கை கடைப்பிடித்து வருகிறது. பாஜக அரசின் இந்துத்துவ கொள்கையின் தீவிரம், சிறுபான்மை மக் களிடையே அச்ச உணர்வை அதிகரிக்கச் செய்து வருகிறது. மதச்சார்பற்ற நாட்டில் அடிநாதமான மதச்சார்பின்மை வலுக் கட்டயமாக சிதைக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு அம்சமாக அனைத்து அமைப்புகளும் கைப்பற்றப்பட்டு வருகின்றன. மேலும் சிறுபான்மையினரின் எதிர்ப்பை புறந்தள்ளி, பெரும் பான்மை மத தெய்வங்களை மட்டும் முன்நிறுத்தி, தேசிய கீதத்தை பின்னுக்கு தள்ளி, வந்தேமாதரம் பாடலை பாடுவதை இந்த அரசு கட்டாயமாக்கியிருக்கிறது.

## ஆர்எஸ்எஸ் தலைவருக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு:

ஆர்எஸ்எஸ் அமைப்பின் தலைவர் திரு. மோகன் பகவத், ஓகஸ்ட் மாத இறுதியில் அமெரிக்காவில் வாழும் இந்து மக்களிடையே உரையாற்ற சென்றிருந்தார். இந்தியாவில் சிறுபான்மை மக்கள் மீதான அவ்வமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்ட சில அமெரிக்க அமைப்புகள், மோகன் பகவத் அவர்களின் வருகைக்கும் உரையாடலுக்கும எதிர்ப்பு தெரிவிக்கலாயின. USCIR (US Commission of International Religious Freedom) எனப்படும், மதச் சுதந்திரம் தொடர்பாக அமெரிக்க அரசுக்கு பரிந்துரை வழங்கும் அமைப்பு, இந்தியாவில் RSS, மதச் சிறுபான்மையினருக்கு எதிராக செயற்படுவதாக குற்றம் சுமத்தி அமெரிக்க அரசிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அமெரிக்க ஜனநாயக கட்சியின் செனெட்சபை உறுப்பினர் திரு. EdMarkey, இந்தியாவில் சிறுபான்மை சமூகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாக அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். மேலும் திரு. Zohran Mamdani எனும் நியுயார்க் நகர மேயர், மோகன் பகவத் அவர்களின் அமெரிக்க பொது கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு தனது அரசியல் எதிர்ப்பையும் பதிவு செய்துள்ளமை கவனிக்கத் தக்கதாகும்.

'இஸ்லாமியர்கள் மீது வெறுப்பு கொள்ளும் ஓர் இந்து, உண்மையான இந்துவே அல்ல' என அமெரிக்க மக்களிடம் உரையாற்றி இருக்கிறார் ஆர்எஸ்எஸ் தலைவர் திரு மோகன் பகவத். வேற்றுமையில் ஒற்றுமை எனக் கூறி, இந்தியா பன்முகத்தன்மையை போற்றி பாதுகாத்து வரும் நாடு என்றெல்லாம் பெருமைப்பட கூறியிருக்கிறார். இவற்றை அவர் இந்தியாவிலும், இந்தியாவில் செயற்படும் அவரது துணை அமைப்புகளிடமும் அழுத்தமாக கூற முன் வரவேண்டும்.

இந்திய சனநாயகம், அண்மைக்காலங்களில் பெரும்பான்மைவாதமாக மாற்றப்பட்டு வருகிறது. இந்திய மக்கள் தொகையில் 23 கோடி சிறுபான்மையினர் நாடெங்கும் வாழ்வதை அரசு மறந்து விடக்கூடாது. சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்க தவறினால் சனநாயகம் தொடர்ந்து நீடிக்க முடியாது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். எனவே சிறுபான்மை சமூகம் அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அனைத்து அடிப்படை உரிமைகளுடன் வாழ்ந்திட, இந்த அரசு பாரபட்சமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். மார்ச் மாதம் முன்மொழியப்பட்ட வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்காற்று சட்டத்திருத்த மசோதா, விரிவான பரிசீலனைக்காக, ஓகஸ்ட் 12, 2026 அன்று, நாடாளுமன்றத்தின் இரு அவைகளைச் சேர்ந்த 31 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் இன்றைய அரசு, சிறுபான்மையினர் மற்றும் அரசு சாரா அமைப்புக்களின் நலன் கருதி உடனடியாக இம்மசோதாவை கைவிட முன்வர வேண்டும்.



jeyasingh@thaiveedu.com



# பூமியின் உயரத்தில் நேபாளம்

■ **சிவா முருகுப்பிள்ளை**

இமயமலையின் மடியில் அமைந்துள்ள நேபாளம், கலாசாரம், இயற்கை எழில் மற்றும் ஆன்மீகத்திற்குப் பெயர் பெற்ற நாடாகும். ஒன்றுபட்ட நேபாளம் அமைக்கப் படுவதற்கு முன்னர், காத்மாண்டு சமவெளி 'நேபாள்' என்று அறியப்பட்டது. 'நேபாள்' என்ற சொல்லின் துல்லியமான தோற்றம் குறித்து தெளிவான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. நேபாளத்தின் தேசியக் கொடி, உலகின் தேசியக் கொடிகளில் செவ்வகமற்ற ஒரே கொடியாகும். கொடியின் ஓரம் வழியே காணப்படும் நீல நிறம் சமாதானத்தைக் குறிக்கிறது; செந்நிறம் நேபாளத்தின் தேசிய நிறமாகும்.

இந்து மற்றும் பௌத்த மதத்தினரின் புனிதத் தலங்கள் பல இங்குள்ளன. குறிப்பாக, பசுபதிநாத் கோவில் மற்றும் பல்வேறு திபெத்திய பௌத்த ஆலயங்கள் புகழ்பெற்றவை. உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரம் நேபாளத்தில் அமைந்துள்ளது; இது உலகெங்கிலும் உள்ள மலையேற்ற வீரர்களை ஈர்க்கிறது.

'புத்தனின் சிந்தனை' என்று மனித வாழ்க்கையை அமைதி, மகிழ்ச்சி மற்றும் நல்வழியை நோக்கி அழைத்துச் செல்லும் உன்னதத் தத்துவங்களாக வாழ்விற்கு வழிகாட்டியாக அமைந்த கௌதம புத்தர் பிறந்த இடமான லும்பினி (Lumbini) நேபாளத்தில் உள்ளது. மனிதர்கள் மட்டுமன்றி, உலகில் உள்ள அனைத்து உயிரினங்கள் மீதும் இரக்கமும், கருணையும் காட்டுவதே உண்மையான ஆன்மீகம் என்ற புத்தனின் சிந்தனை பின்னர் புத்த மதமாகப் பரிணாமம் பெற்றதும் இங்குதான். இந்தப் புனிதம், மலையேற்றம், மலைவாழ் இரம்மியங்கள் ஆகியவற்றுடன் தம்மை இணைத்துக் கொள்ள ஆண்டுதோறும் பல இலட்சம் உல்லாசப் பயணிகள், யாத்திரிகர்கள், மலையேற்ற வீரர்கள் நேபாளம் நோக்கிப் படையெடுத்துச் செல்கின்றனர்.

நேபாளம், அதிகாரபூர்வமாக நேபாள கூட்டாட்சி சனநாயக குடியரசு (Federal Democratic Republic of Nepal) என்று அழைக்கப்படும், தெற்காசியாவில் உள்ள ஒரு நிலம் சூழ் மலை நாடாகும். இதன் தலைநகரம் காத்மண்டு (Kathmandu). அதிகாரபூர்வ மொழி நேபாளி (Nepali); இதுவே பல மொழி பேசும் நேபாள மக்களின் இணைப்பு மொழியாகவும் திகழ்கிறது. நேபாளம் இரண்டு பெரிய நாடுகளுடன் மட்டுமே தனது தரைவழி எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது: இந்தியா மற்றும் சீனா. வடக்கு எல்லையில் சீனா (திபெத்), கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு எல்லைகளில் இந்தியா அமைந்துள்ளன.



tg.theeban@gmail.com

நேபாளம் இமால்-பகத்-தெராய் என்று அறியப்படும் மூன்று முதன்மையான இயற்புவியியல் பட்டைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இமால் என்பது பனிப்பாறைகளை உள்ளடக்கிய மலைப் பகுதியாகும். இது பெரிய இமயமலைத் தொடரில் அமைந்து, நேபாளத்தின் வடக்குப் பகுதியை உருவாக்குகிறது. சீன எல்லையில் அமைந்துள்ள 8848.86 மீட்டர் உயரமுடைய எவரெஸ்ட் சிகரம் (நேபாளியில் சகர்மாதா) உள்ளிட்ட உலகின் மிக உயரமான சிகரங்களில் சிலவற்றை இது கொண்டுள்ளது. உலகின் 'எண்ணாயிரம் மீட்டரை மீறும் மலைகளில்' பிற ஏழு மலைகளும் நேபாளத்திலோ அல்லது திபெத்துடனான இந்நாட்டின் எல்லையிலோ அமைந்துள்ளன: லோட்சே, மக்காலு, சோ ஓயு, கஞ்சஞ்சங்கா, தவளகிரி, அன்னபூர்ணா 1, மனசுலு. பகத் என்பவை பொதுவாகப் பனிப்பாறைகளைக் கொண்டிராத மலைத் தொடராகும்.

நேபாளம் ஐந்து காலநிலைப் பகுதிகளைக் கொண்டுள்ளது: கோடைகாலம், பருவமழைக் காலம், இலையுதிர்காலம், குளிர்காலம், இளவேனிற்காலம் ஆகிய ஐந்து பருவங்களை ஓராண்டில் காண்கிறது. குளிர்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து வரும் குளிர்ந்த காற்றுகளை இமயமலை தடுக்கிறது. பருவப்பெயர்ச்சிக் காற்றுகளின் போக்கின் வடக்கு எல்லையாகவும் இமயமலை உள்ளது. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தால் (IUCN) அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இனங்கள் என்று குறிப்பிடப்பட்ட 107 உயிரினங்களை நேபாளம் கொண்டுள்ளது. இவற்றில் 88 விலங்கினங்கள், 18 தாவர இனங்கள், மற்றும் பூஞ்சை அல்லது ஆல்காக்களின் குழுவின் ஓர் இனம் அடங்கும். நேபாளத்தின் நாணயம் நேபாள ரூபாய் (Nepalese Rupee) ஆகும்.

### வளரும் மலைகளும் வளரும் தேசமும்:

உலகின் உயரத்தில் அமைந்துள்ள நேபாளத்தின் நிலவியல் வரலாறு மிகவும் சுவாரசியமானது. பூமியின் இயற்கை மாற்றங்களால் உருவான மலைகளைப் புவியியலாளர்கள் மடிப்பு மலைகள், எரிமலை மலைகள், பிளவிடை மலைகள் மற்றும் எஞ்சிய மலைகள் என நான்கு வகைகளாகப் பிரிக்கின்றனர். இவற்றில் இமயமலை மிகவும் இளமையான 'மடிப்பு மலை' (Fold Mountain) வகையைச் சேர்ந்ததாகும். பூமியின் இரு கண்டத் தட்டுகள் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும்போது, ஏற்படும் கடுமையான அழுத்தத்தால் நிலப் பரப்பு மேல்நோக்கி சுருங்கி மேலெழுகின்றது. துணியின் இரு முனைகளைத் தள்ளும்போது நடுப்பகுதி சுருங்கி உயருவதைப் போன்றதே இச்செயல்முறையாகும். சுமார் 4 முதல் 5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியத் தட்டும் ஆசியத் தட்டும் மோதிக்கொண்டதால் இமயமலை உருவானது. இத்தட்டுகளுக்கு இடையிலான நகர்வும் மோதலும் இன்றும் தொடர்வதால், இமயமலை ஒவ்வொரு ஆண்டும் சில மில்லி மீட்டர்கள் உயர்ந்து கொண்டே போகின்றது. இங்ஙனம் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கும் இமயமலையின் மடியிலேயே நேபாளம் அமைந்துள்ளது.

உயர்ந்த மலையில் உள்ள பனிப்பாறைகள் உருகுவதினால் உருவாகும் பனிச் சகதிகளால் அங்காங்கே தற்காலிகமான அணைகள் இயல்பாக ஏற்படுத்தப்பட்டு, இதற்குள் தேங்கும் நீரால் உருவாகும் பனிச் சகதி வாவிகள் (Glacial Lakes) இமயமலையின் தனித்தன்மையாகப் பார்க்கப்படுகின்றன. ஆனால், இவை உடைபடும் வெப்பநிலையை அடையும்போது ஏற்படும் வெள்ளமும், பனிப்பாய்சல்களும் (Glacial Lake Outburst Floods - GLOF) பல அழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்தப் பனிச் சகதி வாவிகளின் உடைவுக்கு உலக வெப்பமாதல் பிரதான காரணமாகவும், கட்டுப்பாடற்ற கட்டுமானங்களினால் ஏற்படும் அதிர்வுகளும் மரங்களை அழிக்கும் செயற்பாடுகளும் உப காரணங்களாகவும் அமைகின்றன. அண்மையில் ஏற்பட்ட பேரனர்த்தம் இந்த வகையானதே.

இந்தப் பனிமலையில் இருந்து உருவாகும் ஆறுகள்தான் இந்தியாவின் வட பகுதி மாநிலங்களின் விவசாயத்திற்கும், குடிநீர் ஆதாரத்திற்கும் மிக முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றில் பிரதானமாக கோசி ஆறு, கண்டக் ஆறு, கக்ரா-கர்னாலி ஆறு ஆகிய மூன்றும் ஏனைய முக்கிய ஆறுகளாக சாரதா, பாக்மதி, மேற்கு ராப்தி, கமலா, மகாநந்தா ஆகியனவும் அறியப்படுகின்றன.

இமயமலையில் அமைந்த நேபாளம், இந்தியா மற்றும் சீனாவின் திபெத் தன்னாட்சிப் பகுதியின் தாக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பல்வேறு மொழியினர், இனத்தவர், பண்பாட்டினர் வாழும் நேபாள நாடு, 15 முதல் 16-ஆம்

> ***நேபாளம் பல நூற்றாண்டுகளாக உலகின் ஒரே 'இந்து முடியாட்சியாக' (Hindu Kingdom) இருந்தது. மக்கள்தொகை அடிப்படையில் தற்போது நேபாளத்தில் சுமார் 81 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் இந்து மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இதன் காரணமாக, உலகிலேயே மிக அதிக சதவீதத்தில் இந்துக்கள் வாழும் நாடாகவும் நேபாளம் திகழ்கிறது.***



*11-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய சாளுக்கியப் பேரரசின் கீழ் நேபாளம் வந்தபோது, பௌத்த சமயத்தின் ஆதிக்கத்திலிருந்த இந்நாடு இந்து சமய நாடாக மாற்றப்பட்டது. வரலாற்று ரீதியாக, அன்றைய வர்ணாசிரமப் பிற்போக்குகளை மறுதலித்து மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் சிந்தனையாகவே புத்தரின் தத்துவம் உருவானது.*

நூற்றாண்டு வரை மூன்று பகுதிகளாகப் பிரிந்திருந்தது. அதனை கோர்கா நாட்டின் ஷா வம்சத்து அரசர்கள் ஒரே நாடாக ஒருங்கிணைத்தனர்.

நேபாளத்தின் குடிமக்கள் நேபாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இந்தியா, திபெத், வடக்கு பர்மா, மற்றும் அசாம் வழியாக சீனாவின் யுன்னான் மாகாணத்திலிருந்து வந்த மூன்று முதன்மையான புலம்பெயர்ந்தவர்களின் வழித்தோன்றல்களே நேபாளிகள் ஆவர். கிழக்குப் பகுதியின் கிராத மக்கள், காத்மாண்டு சமவெளியின் நேவார் மக்கள், தெராய் சமவெளியின் பூர்வகுடி தாரு மக்கள், தூரமேற்குக் குன்றுகளின் காசு பகாரி மக்கள் ஆகியோர் இந்நாட்டின் ஆதிகால குடியிருப்பு வாசிகள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

சமீபத்திய ஆண்டுகளில் தெராய்க்குள் மக்கள் தொகையின் பெரும் பங்கினர் புலம்பெயர்ந்த போதும், நேபாளிகளில் பெரும்பாலானவர்கள் மலை அடிவாரத்திலும் மலை உச்சியிலும் வாழ்வதைத் தவிர்த்து, அதிகம் நடு உயர் நிலங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். நேபாளத்தின் வடக்கு மலைப்பகுதிகளில் மிகக் குறைவான மக்களே வாழ்கின்றனர். நேபாளம் பல பண்பாடுகளையும், பல இனங்களையும் கொண்ட நாடாகும். இந்து சமயம், பௌத்தம், இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகியவற்றுடன் சேர்த்து, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பூர்வகுடி மற்றும் நாட்டுப்புறச் சமயங்களைப் பின்பற்றும், மேலும் 123 வெவ்வேறு தாய்மொழிகளைப் பேசும் 125 தனித்துவமான இனக்குழுக்களுக்குத் தாயகமாக இந்நாடு உள்ளது.

நேபாளம் பல நூற்றாண்டுகளாக உலகின் ஒரே ‘இந்து முடியாட்சியாக’ (Hindu Kingdom) இருந்தது. மக்கள்தொகை அடிப்படையில் தற்போது நேபாளத்தில் சுமார் 81 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் இந்து மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இதன் காரணமாக, உலகிலேயே மிக அதிக சதவீதத்தில் இந்துக்கள் வாழும் நாடாகவும் நேபாளம் திகழ்கிறது. முழுமையான அதிகாரமுள்ள மன்னராட்சி, அரசியலமைப்புக்குட்பட்ட மன்னராட்சி, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மற்றும் பிற சிறப்பு வடிவ முடியாட்சி என்ற வகையிலான மன்னர் ஆட்சி முறைமைகளுக்கும் இல்லாத வகையாக, நேபாளம் 2008-ஆம் ஆண்டு தன்னை விடுவித்துக் கொண்டது.

2008-ஆம் ஆண்டில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, ஜனநாயக முறைப்படி மக்கள் பிரதிநிதிகளால் உருவான நாடாளுமன்ற அரசு முறையினால், நேபாளம் ஒரு மதச்சார்பற்ற குடியரசு நாடாக (Secular Republic) அந்நாட்டின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஒரு நீண்ட கால இந்து முடியாட்சியிலிருந்து மதச்சார்பற்ற குடியரசு நாடாக நேபாளம் மாறியது, பல வருட உள்நாட்டுப் போர் மற்றும் அது சார்ந்த அரசியல் மாற்றங்களின் விளைவால் ஏற்பட்டதாகும். சுமார் 240 ஆண்டுகள் பழைமையான இந்து மன்னராட்சி, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) ஆயுதப் போராட்டத்தினாலேயே முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

நேபாளத்தின் வரலாறு புதிய கற்காலக் கருவிகளிலிருந்தும், அதன் ஆதிகுடிகளான குசுந்தா வேட்டைச் சமூகத்திலிருந்தும் தொடங்குகின்றது. உபநிடதங்கள், அலகாபாத் தூண் கல்வெட்டுகள் மற்றும் ஸ்கந்த புராணத்தின் ‘நேபாள மகாத்மியம்’ அத்தியாயம் ஆகியவற்றில் இந்நாட்டின் வளங்கள் குறித்த பழைமையான தகவல்கள் காணப்படுகின்றன. பொ.ஆ.மு. 500-க்கு முன்னர் தெற்கு நேபாளத்தைச் சாக்கிய வம்சத்தினரும், மத்திய காத்மாண்டு சமவெளியை லிச்சாவி மற்றும் மல்லர் மன்னர்களும், கிழக்கு நேபாளத்தைக் கிராதர்களும் ஆட்சி செய்தனர்.

### சாளுக்கியர் காலமும் சமய மாற்றமும்:

மௌரியப் பேரரசு மற்றும் தாக்கூரி வம்சத்திற்குப் பின்னர், பொ.ஆ.பி. 1201 முதல் 1769 வரை காத்மாண்டு சதுக்கத்தை மையமாகக் கொண்டு நேவார் மல்லர் மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். 11-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய சாளுக்கியப் பேரரசின் கீழ் நேபாளம் வந்தபோது, பௌத்த சமயத்தின் ஆதிக்கத்திலிருந்த இந்நாடு இந்து சமய நாடாக மாற்றப்பட்டது. வரலாற்று ரீதியாக, அன்றைய வர்ணாசிரமப் பிற்போக்குகளை மறுதலித்து மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் சிந்தனையாகவே புத்தரின் தத்துவம் உருவானது. ஆனால் அது மதமாக உருப்பெற்ற பின்னணியில், சாளுக்கியர் காலத்தில் புத்த மதத்தின் செல்வாக்கு குறைக்கப்பட்டு நேபாளம் இந்து நாடாக மாற்றியமைக்கப்பட்டது.



1482-இல் காத்மாண்டு, பாடன், பக்தபூர் என மூன்றாகப் பிள வுற்றிருந்த நேபாளத்தை, 1768-இல் கோர்க்கா மன்னர் பிரிதிவி நாராயணன் ஷா மல்லர் வம்சத்தினரை வென்று ஒருங்கிணைத்தார். இவர் நிறுவிய ஷா வம்சமே மே 2008 வரை நேபாளத்தை ஆண்டது. இவர்களின் ஆட்சியில் நேபா ளத்தின் எல்லை கிழக்கே டீஸ்டா ஆறு முதல் மேற்கே சத்லஜ் ஆறு வரை விரிவடைந்தது.

எனினும், திபெத் எல்லைப் போரின் விளைவாக 1816-இல் சீனாவுடனான உடன்படிக்கையின்படி நேபாளம் திபெத் மீதான தன் கட்டுப்பாட்டை இழந்தது. இத்திபெத்திய மண் ணின் கலாசார மற்றும் மதச் சுதந்திரத்துடனான 'உண் மையான தன்னாட்சிக்காகவே' (Genuine Autonomy) 14-ஆவது தலாய் லாமா 1959 முதல் இந்தியாவில் தஞ்சம டைந்து போராடி வருகின்றார்.

## பிரித்தானியர் காலம் மற்றும் 'கோத்' படுகொலைகள்:

எல்லைத் தகராறுகளால் 1815 - 1816-இல் நடைபெற்ற ஆங்கிலேய-நேபாளப் போரின் முடிவில் கையெழுத்தான 'சுகௌலி ஒப்பந்தப்படி', நேபாளம் கைப்பற்றியிருந்த சிக் கிம், கார்வால், குமாவுன் மற்றும் டார்ஜிலிங் பகுதிகள் கிழக் கிந்தியக் கம்பெனிக்கு கைமாறின.

இதனைத் தொடர்ந்து, 1846-இல் அரண்மனைச் சதிகளால் நடந்த 'கோத் படுகொலைகள்' (Kot Massacre) மூலம் படைத்தலைவர் ஜங் பகதூர் ராணா அதிகாரத்தைக் கைப் பற்றினார். ஷா வம்ச மன்னர்களைப் பொம்மைகளாக வைத் துக்கொண்டு, 1846 முதல் 1951 வரை ராணா வம்சத்தினர் பரம்பரை பிரதமர்களாக நாட்டைத் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இவர்கள் பிரித்தானிய ருக்கு ஆதரவாகச் செயல்பட்டு, 1857 சிப்பாய் கிளர்ச்சியை அடக்கவும் இரு உலகப் போர்களுக்கும் கூர்க்கா படை களை வழங்கி உதவியதற்கு ஈடாக, தெராய் சமவெளிப் பகு திகளைப் பரிசாகப் பெற்றனர்.

நேபாளத்தில் இருந்த ஆண்டான்-அடிமை முறை 1924-இல் ஒழிக்கப்பட்டது. இதற்குப் பின்னால் பிரித்தானியாவின் அழுத்தங்கள் இருந்தன. இது ஒரு வகையில், ஆண்டான்-அடிமை முறையை உலகெங்கும் ஒழித்ததன் தொடர்ச்சி தான். தெராய் சமவெளிப் பகுதியில், கடனைத் திருப்பிச் செலுத்தாத குடியானவர்கள், தங்கள் குடும்பத்துடன், கடனை வழங்கியவர்களுக்கு அடிமையாக்கப்பட்டனர், தங்களது பொருளாதார மேம்பாட்டிற்கு அடிமைகளின் உழைப்பைச் சுரண்டினர். ராணா வம்ச அரசர்கள் இத்தகைய அடிமை முறையை ஒழித்தனர்.

1951 நேபாள புரட்சியின் முடிவில், நேபாளத்தில் ராணா வம் சத்தின் 105 ஆண்டு கால பரம்பரை கொடுங்கோல் ஆட்சி முடிவிற்கு வந்தது. அதனால் திரிபுவன் வீர விக்ரம் ஷா மீண்டும் நேபாள மன்னரானார். இதனைத் தொடர்ந்து, மாத் ரிக பிரசாத் கொய்ராலா தலைமையில் நேபாளி காங்கிரஸ் கட்சியின் அமைச்சரவை பதவியேற்றது. இந்த நேபாள காங்கிரஸ் கட்சிக்கு, எல்லா வகையிலும், இந்திய சுதந்திரத் திற்குப் பின்னரான இந்தியாவின் பின்புலத்திலிருந்து ஆதர வளிக்கப்பட்டது. இதற்குள் 'நேபாளம் இந்திய நாட்டின் ஒரு மாநிலம்' என்றான சிந்தனையின் போக்குகளும் இல்லாமல் இல்லை; அது இன்று வரை தொடரவே செய்கிறது. இதற் காகவே, நேபாளத்தை இந்தியா உலக அரங்கில் இன்று வரை இந்து நாடாகவே அடையாளப்படுத்தியும் வருகிறது.

நேபாளத்தின் முடியாட்சிக்கு எதிராக, ஜனநாயக அரசு முறை நடைமுறைப்படுத்திடவும், அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் இயக்கங்கள் போராட்டங்கள் தொடங்கின. இதன் தொடர்ச்சியாக, 1960-களில் நேபாளத்தில் அரசியல் கட்சி சார்பற்ற நேபாள தேசியப் பஞ்சாயத்து ஆட்சி முறை நடை முறைப்படுத்தப்பட்டது. இது ஒரு வகையான போராட்டங்க ளுக்குக் கிடைத்த அதிகாரப் பரவலாக்கம்தான். 1955 முதல் 1972 வரை நேபாள மன்னராக இருந்த மகேந்திரா, நேபாள அரசின் நிர்வாகத்தை ஏற்று நடத்த, அரசியல் கட்சிகள் சார்பற்ற பஞ்சாயத்து ஆட்சி முறையை 1960-இல் உருவாக் கினார். இந்தப் பஞ்சாயத்து அமைப்பு, நேபாளத்தை 1990 வரை நிர்வகித்தது.

1972 முதல் 2001 வரை நேபாள மன்னராக இருந்த வீரேந்தி ரரின் காலத்தில், 'ஜன் அந்தோலான்' எனும் மக்கள் இயக்கத் தின் நீண்டகால போராட்டத்திற்குப் பின், மன்னர் பிரேந்திரா அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற் கொண்டு, மே 1991-இல் பல அரசியல் கட்சிகள் கொண்ட நாடாளுமன் றம் அமைக்கப்பட்டது. இது போராட்டங்களுக்குக் கிடைத்த இரண்டாம் கட்ட வெற்றியாகவும் பார்க்கப்படுகிறது.

ஜன் அந்தோலான் (Jan Andolan) என்பது ஒரு குறிப்பிட்ட திட்டமல்ல; மாறாக, மக்களின் தீவிர பங்களிப்புடன் கூடிய ஒரு பொது மக்கள் இயக்கம் (People's Movement) ஆகும். இந்திய உபகண்டத்தில், அரசின் பல்வேறு நலத்திட்டங் களை அதிகாரத்துவ மட்டத்தோடு நிறுத்தாமல், சமூகத்தின் ஒவ்வொரு பிரஜையையும் அதில் பங்கேற்கச் செய்து, ஒரு கூட்டு மாற்றத்தை உருவாக்குவதே இதன் அர்த்தமாகும். 1996-ஆம் ஆண்டில், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ யிஸ்ட்), மன்னரின் கீழ் இயங்கும் நாடாளுமன்ற நடை முறையை நீக்கி, மக்கள் குடியரசு அமையக் கிளர்ச்சிகள் செய்தன. இதனால் நேபாளம் முழுவதும் நீண்ட காலம் நடந்த உள்நாட்டுப் போராட்டப் போரில் 17,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.

20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைதி திரும்பியி ருந்த நேபாளத்தை, 2001-இல் நடந்த கொடூரமான அரண் மனைப் படுகொலைச் சம்பவம் உலுக்கியது. ஜூன் 1, 2001 அன்று நடந்த இச்சம்பவத்தில் மன்னர் வீரேந்திரர், ராணி ஐஸ்வர்யா உட்பட அரச குடும்ப உறுப்பினர்கள் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலைகளைச் செய்த பட்டத்து இளவரசர் தீபேந்திராவும் மூன்று நாட்களுக்குப் பின் உயிரிழந்ததைத் தொடர்ந்து, மன்னர் வீரேந்திரரின் சகோ தரரான ஞானேந்திரா புதிய மன்னராகப் பொறுப்பேற்றார்.

அக்காலகட்டத்தில் நாட்டில் தீவிரமடைந்திருந்த மாவோ யிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியின் ஆயுதப் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதைக் காரணங்காட்டி, பெப்பிரவரி 1, 2005 அன்று மன்னர் ஞானேந்திரர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன் கைவசப்படுத் தினார். எனினும், கிராமப்புறங்களில் பெருமளவில் செல் வாக்கு பெற்றிருந்த மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களை ராணுவ ரீதியாக ஒடுக்கும் மன்னரின் முயற்சிகள் தோல்விய டைந்து, அவரை தீவிர அரசியல் நெருக்கடிக்குத் தள்ளின.

> ***டிசம்பர் 28, 2007 அன்று மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தைத் தொடர்ந்து, நேபாளம் முறைப்படி ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 240 ஆண்டு கால பழைமைவாய்ந்த ஷா வம்சத்தின் முடியாட்சி முற்றிலும் ஒழிக்கப்பட்டு, அரச குடும்பத்தினர் அரண்மனையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.***

நேபாளத்தில் நாடாளுமன்ற மக்களாட்சியை நிறுவவும், நேபாள மன்னரின் ஜனநாயகமற்ற நேரடி முடியாட்சியை ஒழிக்கவும், நேபாள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இரண்டாவது மக்கள் இயக்கம் (ஜன் அந்தோலான் II) போராடியதின் விளைவாக, நேபாளத்தில் மே 28, 2008 அன்று மன்னராட்சி முறை முற்றாக ஒழிக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. நேபாளி காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட கட்சிகள் தான் மன்னரின் கீழான காலத்தில் நாடாளுமன்றத்தில் அதிகம் ஆட்சியில் இருந்தனர், அவற்றில் முக்கியமானவர் கிரிஜா பிரசாத் கொய்ராலா. இந்த நேபாள காங்கிரஸ் கட்சிக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவையும் வழங்கியிருந்தது.

## ஜனநாயகப் புரட்சியும் இந்து அரசின் முடிவும்:

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராக நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் மாவோயிஸ்ட் இயக்கத்தினர் முதன்மைப் பங்காற்றினர். இக்காலகட்டத்தில் நடைபெற்ற ஹர்தால் போன்ற போராட்டங்களின் போது, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்படும் சூழல்களில் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு பின்வாங்கும் உத்திகளையும் போராளிகள் கையாண்டனர்.

மக்களின் வீரியமிக்க 'ஜனநாயக இயக்கத்தின்' (Jan Andolan II) தொடர் போராட்டங்களால் பணிந்த மன்னர் ஞானேந்திரர், ஏப்பிரல் 24, 2006 அன்று முடக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டினார். மே 18, 2006-இல் கூடிய நாடாளுமன்றம் மன்னரின் அனைத்து அதிகாரங்களையும் பறித்ததுடன், நேபாளத்தை மதச்சார்பற்ற நாடாகவும் அறிவித்தது. இதன் மூலம் 'உலகின் ஒரே இந்து நாடு' என்ற நேபாளத்தின் வரலாற்று அடையாளம் சட்டபூர்வமாக முடிவுக்கு வந்தது.

டிசம்பர் 28, 2007 அன்று மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தைத் தொடர்ந்து, நேபாளம் முறைப்படி ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 240 ஆண்டு கால பழைமைவாய்ந்த ஷா வம்சத்தின் முடியாட்சி முற்றிலும் ஒழிக்கப்பட்டு, அரச குடும்பத்தினர் அரண்மனையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களின் கொரமான அரண்மனை பின்னாளில் பொது அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

முடியாட்சி வீழ்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற ஜனநாயகப் பொதுத்தேர்தலில், போராட்ட அமைப்பான மாவோயிஸ்ட் கட்சியும் பாரம்பரிய நேபாளி காங்கிரஸ் கட்சியும் முக்கியச் சக்திகளாக உருவெடுத்தன. மே 2009-இல் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (Unified Marxist-Leninist) மற்றும் நேபாளி காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து நாட்டின் நலனை முன்னிறுத்தி ஐக்கிய முன்னணி அரசை அமைத்தன.

அரசு அமைந்த பின்னர், போராட்ட காலத்தில் தங்களுக்கு எதிராகச் செயற்பட்ட இந்தியாவுடனான உறவு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மாவோயிஸ்ட்கள் அளித்த பதில் உலகளாவிய கவனத்தைப் பெற்றது: 'இந்தியா எமது அயல்நாடு; எமது நாட்டின் இறையாண்மையின் அடிப்படையில் அயல் நாடான இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதே சரியானது...' எனக் குறிப்பிட்டனர். அண்டை நாட்டுடன் பகையை வளர்க்காமல் பிராந்திய யதார்த்தத்தையும் நாட்டின் நலனையும் முதன்மைப்படுத்திய இம்முதிர்ச்சியான இராஜதந்திரப் பார்வை, உலகளாவிய அரசியல் நிபுணர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

போராட்டத்திற்குப் பிந்தைய சமாதானச் சூழலில், முரண்பாடுகளைக் கடந்து எவ்வாறு மக்கள் நலன் சார்ந்த நல்லிணக்க அரசியல் செய்ய வேண்டும் என்பதற்கு நேபாளத்தின் இச்செயல்முறை உலக வரலாற்றில் ஒரு முக்கிய சான்றாகப் பதிவானது.

## அரசியலமைப்புச் சட்டத்தின் பிறப்பு:

இதன் பின்னரான காலத்தில், குறித்த காலத்தில் அரசு நேபாளத்தின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றத் தவறியது. எனவே, அரசைக் கலைத்துவிட்டு, புதிய தேர்தலுக்குக் குடியரசுத் தலைவர் ஆணையிட்டார். நேபாள உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைமையிலான தற்காலிக அரசு, நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியது. புதிய அரசு, நேபாளத்திற்கான புதிய அரசியலமைப்புச் சட்டத்தை 2015-இல் உருவாக்கி நிறைவேற்றியது. நேபாளத்தை மதச்சார்பற்ற, ஜனநாயக கூட்டாட்சிக் குடியரசு நாடாக புதிய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றது. புதிய அரசியலமைப்புச் சட்டம் செப்ரெம்பர் 20, 2015 அன்று நடைமுறைக்கு வந்தது.

புதிய வரையறுக்கப்பட்ட நேபாள அரசியலமைப்புச் சட்டத்தின்படி, கூட்டாட்சித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, நேபாளத்தின் 75 மாவட்டங்களைக் கொண்டு ஏழு புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இரு அவை என்றாக மத்திய அரசு-மாநில அரசு முறைமையில், மத்திய அரசிற்கு 334 உறுப்பினர்கள் கொண்ட நேபாள நாடாளுமன்றம் நிறுவ வழிகோலியது.

புதிய குடியரசுத் தலைவர் தேர்தலில், பொதுவுடைமைக் கட்சியை (ஒன்றிணைந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) சேர்ந்த வித்யா தேவி பண்டாரி வெற்றி பெற்று, 29 ஒக்ரோபர் 2015 அன்று முதல் பெண் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக, நேபாளக் காங்கிரஸ் மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) களின் தொடர் செயற்பாடுகளினால், நேபாள கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசு (2015) உருவானது. இதன்படி, நேபாளம் ஒரு கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசு (Federal Democratic Republic) நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பின்படி, நேபாள

அரசு மூன்று அடுக்கு ஆட்சி முறையைக் கொண்ட, மதச்சார்பற்ற நாடாகத் தற்போது செயற்பட்டு வருகிறது.

ஆனாலும், இந்தியாவுடன் தரையால் எல்லையைப் பகிர்ந்துள்ள நாடாக நேபாளம் இருப்பதுவும், இந்தியாவுடனான நீண்ட பாரம்பரிய விசா அற்ற பயணம் மற்றும் இரு நாடுகளிலும் ஒரே வகை நாணயங்களை உபயோகிக்கலாம் என்ற எல்லைகளைத் திறந்துவிட்ட நிலையிலான முறைமையும், இந்தியா தனது விருப்பத்திற்கு ஏற்ப அதனைத் திரும்பவும் இந்து நாடாக மாற்றுவதற்குரிய முறையற்ற செயற்பாடுகளைத் தூண்டி வரும் 'பெரியண்ணன் மனப்பாங்குடன்' நடந்து வருகிறது. இதனால், அண்மையில் நடைபெற்ற ஜென்சி போராட்டங்களில், திரும்பவும் 'மன்னர் ஆட்சி-இந்து நாடு' என்றான கோசங்களும் இங்கு ஒரு சில பகுதியினரால் முன்னிலை பெற்றிருந்தாலும், அது இடதுசாரிகளின் செயற்பாடுகளினால் நிறுத்தப்பட்டது.

## மக்கள்தொகை அமைப்பும் நகரமயமாக்கலின் சவால்களும்:

ஐக்கிய நாடுகள் சபையின் 2026-ஆம் ஆண்டைய தரவுகளின்படி, நேபாளத்தின் மொத்த மக்கள்தொகை சுமார் 2.96 கோடியாகும். இதில் பெண்கள் 51.1% ஆகவும் ஆண்கள் 48.9% ஆகவும் உள்ளமை பாலின விகிதச் சமநிலையைக் காட்டுகின்றது. சதுர கிலோமீட்டருக்கு 207 பேர் வாழும் இந்நாட்டின் சராசரி வயது 25.7 ஆண்டுகள் என்பதால், இளைஞர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஆரோக்கியமான மக்கள்தொகை அமைப்பை நேபாளம் பெற்றுள்ளது.

உலக அளவில் மிகக் குறைவாகவும், அதேவேளை மிக வேகமாக நகரமயமாகி வரும் நாடுகளின் பட்டியலிலும் நேபாளம் இடம்பெற்றுள்ளது. சுற்றுலாத் துறையை அடிப்படையாகக் கொண்டு தெராய் சமவெளிகள் மற்றும் நடுக்குன்றுப் பள்ளத்தாக்குகளில் நகரமயமாக்கல் அதிவேகமாக நடைபெற்று வருகின்றது. 'கோயில்களின் நகரம்' என்றழைக்கப்படும் தலைநகர் காத்மண்டு, நாட்டின் பண்பாட்டு மற்றும் பொருளாதார மையமாகத் திகழ்கின்றது. இதர முதன்மை நகரங்களான பொக்காரா, லலித்பூர், பிரத்நகர் போன்றவற்றிலும், குறிப்பாகக் காத்மண்டு பள்ளத்தாக்கிலும் ஏற்படும் அதிவேக நகரமயமாக்கல் காரணமாக நெரிசல், சுற்றுச் சூழல் மாசுபாடு மற்றும் குடிநீர்த் தட்டுப்பாடு போன்ற கட்டமைப்புச் சவால்கள் உருவாகி வருகின்றன.

நேபாளத்தின் பன்முகத்தன்மை கொண்ட மொழியியல் பாரம்பரியம், இந்திய-ஆரிய, சீன-திபெத்திய மொழிக் குடும்பங்கள் மற்றும் பல பூர்வகுடித் தனி மொழிகளிலிருந்து உருவாகியதாகும். தேசியக் கணக்கெடுப்பின்படி, தேவநாகரி எழுத்துமுறையில் எழுதப்படும் சமஸ்கிருதக் குடும்பத்தைச் சேர்ந்த 'நேபாளி' மொழி (44.6%) நாட்டின் அதிகாரபூர்வ மொழியாகவும், பல்வேறு சமூகங்களுக்கு இடையிலான இணைப்பு மொழியாகவும் திகழ்கின்றது. இதனுடன் மைதிலி, போச்புரி, தாரு, தாமாங், நேபாள் பாசா, உருது போன்ற பல மொழிகளும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன.

மேலும், இந்நாட்டில் குறைந்தது நான்கு பூர்வகுடி சைகை மொழிகள் பயன்பாட்டில் உள்ளன. எழுத்துவடிவமற்ற பழங்குடி மற்றும் உள்ளூர் பேச்சுவழக்குகளைப் பாதுகாக்கும் பொருட்டு, அவற்றை தேவநாகரி அல்லது ரோமானிய எழுத்துமுறையில் ஆவணப்படுத்தும் முயற்சிகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

சமய ரீதியாக, வரலாற்று ரீதியாகப் பல்வேறு அரசாங்கக் கொள்கைகள் விளிம்புநிலைச் சமூகங்களைப் புறந்தள்ளியிருந்தாலும், நேபாளச் சமூகம் பொதுவாகச் சமயச் சகிப்புத் தன்மையுடனேயே இயங்கி வருகின்றது. இருப்பினும், நாட்டின் மதச்சார்பற்ற தன்மையைப் பேணவும் சமூக அமைதியைப் பாதுகாக்கவும், அரசியலமைப்பின் வழிகாட்டுதலின்படி 2017-இல் கடுமையான மதமாற்றத் தடைச் சட்டங்களை நேபாள அரசு அமல்படுத்தியது.

## பொருளாதாரக் கட்டமைப்பும் கல்வி நிலையும்:

நேபாளத்தின் பொருளாதாரம் முதன்மையாக விவசாயம், சுற்றுலா, வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணவரவு (Remittance), நீர்மின் உற்பத்தி மற்றும் பாரம்பரியக் கைவினைப் பொருட்களைச் சார்ந்துள்ளது. நாட்டின் மக்கள் தொகையில் 65 சதவீதத்திற்கும் அதிகமானோர் விவசாயத்திலேயே ஈடுபட்டுள்ளனர்; இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 20% முதல் 30% வரை பங்களிக்கின்றது. நெல், கோதுமை, மக்காச்சோளம் மற்றும் கரும்பு ஆகியவை இங்கு முதன்மையாகப் பயிரிடப்படுகின்றன.

எவரெஸ்ட் சிகரம், காத்மண்டு பள்ளத்தாக்கு, பொக்காரா மற்றும் சித்வான் தேசியப் பூங்கா போன்ற இடங்கள் மூலம் கிடைக்கும் சுற்றுலா வருவாய் நாட்டின் முதன்மையான அந்நியச் செலாவணி ஆதாரமாகும். அதேவேளை, மலேசியா, வளைகுடா நாடுகள் மற்றும் இந்தியாவில் பணிபுரியும் நேபாளத் தொழிலாளர்கள் அனுப்பும் பணமே (Remittance) பெரும்பாலான குடும்பங்களின் அன்றாட வாழும் செலவையும் வாங்கும் திறனையும் தீர்மானிக்கின்றது.

மேலும், கர்னாலி, கோசி, கண்டகி போன்ற வேகமான ஆறுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர்மின்சாரத்தை இந்தியா போன்ற அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமும் வருவாய் ஈட்டப்படுகின்றது. நாட்டின் தொழிற்றுறை ஜிடிபியில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தாலும், கைவினைத் துறை குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியடைந்துள்ளது. இக்கைவினை உற்பத்தியில் 60 சதவீதத்திற்கும் அதிகமாகப் பெண்கள் ஈடுபடுவது அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கு வழிவகுத்துள்ளது. அதேநேரம், பாரம்பரிய உலோக மற்றும் மரச் சிற்பக் கலைகளில் ஆண்களின் பங்களிப்பு முதன்மையாக உள்ளது.

நிலங்களால் சூழப்பட்ட நிலவியல் தடைகள் இருந்தபோதிலும், கற்கள் பரப்பப்பட்ட ஓடுதளங்களைக் கொண்ட 11 விமான நிலையங்கள் உட்பட 47 விமான நிலையங்களைக் கொண்ட வான்போக்குவரத்து அமைப்பை நேபாளம் பெற்றுள்ளது.

கல்வி நிலையைப் பொறுத்தவரை, ஆரம்பப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை வீதம் 97 சதவீதத்தை எட்டியுள்ளபோதிலும், இரண்டாம் நிலைக் கல்வியில் 60 சதவீதத்திற்கும் குறைவாகவும், உயர்கல்வியில் 12 சதவீதமாகவும் குறைகின்றது. ஒட்டுமொத்த எழுத்தறிவில் பாலின இடைவெளி நீடித்தாலும், தற்போதைய கல்வி நிலைகளில் மாணவர் சேர்க்கையில் பெண்கள் ஆண்களை முந்தி வருவது நேபாளச் சமூகத்தின் நேர்மறையான மாற்றத்தைக் காட்டுகின்றது.

## வெளியுறவுக் கொள்கையும் பண்பாட்டு –இலக்கிய வரலாறும்:

தேசியப் பாதுகாப்பில் தூதரக உறவுகளை மட்டுமே முதன்மையாகச் சார்ந்திருக்கும் நேபாளம், பிராந்திய வல்லரசுகளுக்கு இடையே நடுநிலை வகிப்பதுடன் உலகளாவிய தளத்தில் அணிசேராக் கொள்கையைப் பேணி வருகின்றது. சமூகக் கட்டமைப்பில் பல தலைமுறைகளாகத் தந்தைவழி கூட்டுக் குடும்ப முறையே நிலவி வந்தபோதிலும், தற்கால நகரமயமாக்கலால் தனிக் குடும்ப வாழ்க்கை முறையும் அதிகரித்து வருகின்றது.

நேபாளக் கட்டடக்கலையின் பழைமையான சான்றுகளாகக் கபிலவஸ்துவில் அமைந்த தொடக்ககால பௌத்த தூபிகளும், பொ.ஆ.மு. 250-இல் காத்மண்டு சமவெளியில் பேரரசர் அசோகரால் அமைக்கப்பட்ட பௌத்தக் கட்டமைப்புகளும் திகழ்கின்றன.

இலக்கியத் துறையில், பானுபக்த ஆச்சார்யா (1814 - 1868) நேபாளி மொழியில் எழுதிய 'பானுபக்த இராமாயணம்' மூலமே நவீன நேபாளி இலக்கிய வரலாறு தொடங்குகின்றது. இவர் மக்களின் பேச்சு மொழியான நேபாளியிலேயே முதன்மையான இலக்கியப் படைப்புகளைத் தொகுத்து, மொழியியல் மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்.

பௌத்த சிந்தனையின் தளத்தில் உருவாகி, கால ஓட்டத்தில் இந்து சமய மேலாதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட நேபாளம், இன்று மாவோயிஸ்ட் இடதுசாரி இயக்கங்களின் தொடர் போராட்டங்களால் அனைத்துச் சமயங்களையும் சமமாகப் பார்க்கும் மதச்சார்பற்ற நாடாகப் பரிணமித்துள்ளது.

பௌத்த சிந்தனைகளின் தளத்தில் உருவாகி, கால ஓட்டத்தில் இந்து சமய மேலாதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட நேபாளம், ஜனநாயகப் போராட்டங்கள் மற்றும் இடதுசாரி இயக்கங்களின் அரசியல் தீவிர முனைப்பினால் இன்று அனைத்துச் சமயங்களையும் சமமாகப் பேணும் மதச்சார்பற்றக் குடியரசாகப் பரிணமித்துள்ளது.

இத்தகைய மாற்றம், மதச் சார்புநிலை மேலாதிக்கக் கட்டமைப்புகளுக்குள் இயங்கும் பிற தெற்காசிய நாடுகளுக்கும், குறிப்பாகப் பௌத்த பேரினவாதச் செல்வாக்கைக் கொண்ட இலங்கை போன்ற பல்லினச் சமூகங்களுக்கும் ஒரு முக்கிய ஒப்பீட்டுப் புள்ளியை வழங்குகின்றது. அரசியல் அதிகாரப் பரவலாக்கமும், மதச்சார்பற்ற சட்டக் கட்டமைப்பும் எவ்வாறு ஒரு பல்லின தேசத்தின் அமைதிக்கும் ஜனநாயக ஸ்திரத் தன்மைக்கும் வழிவகுக்கும் என்பதற்கு நேபாளத்தின் சமகால அரசியல் வரலாறு ஒரு பிராந்தியச் சான்றாகத் திகழ்கின்றது. வளரும் நாடாகவும், பன்முகப் பண்பாடும் தனித்துவமான புவியியல் அமைப்பும் கொண்ட தேசமாகவும் விளங்கும் நேபாளம், இமயமலைப் பிராந்தியத்தின் முதன்மையான இயற்கை மற்றும் அரசியல் அடையாளமாகவே சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படுகின்றது.



James@thaiveedu.com




இன்று $200,000 வரை ஒரு புதிய வீட்டின் மீது மிச்சப்படுத்திடுங்கள் நாளை அது நிறைய குடும்பங்களாகவும் நிறைய வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000 வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது என்பதை பின்வரும்இணையப் பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:

ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

வீரகத்தி தனபாலசிங்கம்



tg.theeban@gmail.com

# அமிர்தலிங்கத்தின் மரபும் அனைவருக்கும் பொதுவான எதிர்காலத்துக்கான ஜனநாயகத் தெரிவுகளும்

கடந்த நூற்றாண்டில் இலங்கைத் தமிழ் அரசியலின் திசைமார்க்கத்தைத் தீர்மானித்த அத்தியாயங்களை எழுதிய தலைவர்களில் ஒருவரான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 99-வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் 2026 ஓகஸ்ட் 29, சனிக்கிழமை மாலை நினைவுப் பேருரை நிகழ்வு நடைபெற்றது.

அமிர்தலிங்கம் நினைவு அறக் கட்டளையின் ஏற்பாட்டில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா 'அமிர்தலிங்கத்தின் மரபும் அனைவருக்கும் பொதுவான எதிர்காலத்துக்கான இலங்கையின் ஜனநாயகத் தெரிவுகளும்' (Amirthalingam's Legacy and Sri Lanka's Democratic Choices for A Shared Future) எனும் தொனிப்பொருளில் உரை நிகழ்த்தினார்.

ஜெகான் பெரேராவின் ஆங்கில உரை, வெறுமனே ஓர் அரசியல் தலைவருக்கான அஞ்சலியாகவோ கடந்தகால நினைவுகளின் மீள்வாசிப்பாகவோ மாத்திரம் அமையாமல், சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் இனப் பிரச்சினை, ஜனநாயக நிறுவனங்களின் வீழ்ச்சி மற்றும் சமகாலத்தில் நாடு எதிர்கொள்ளும் அரசியலமைப்புச் சவால்களுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு இருக்கக்கூடிய தெரிவுகள் பற்றிய அவரது நோக்கிலான விளக்கமாகவும் ஒருவிதத்தில் எச்சரிக்கையாகவும் அமைந்திருந்தது. அமிர்தலிங்கத்தைப் பற்றிப் பேசுவது என்பது தனிநபரைப் பற்றியது அல்ல, மாறாக இலங்கையின் மிகவும் இடர் மிகுந்த வரலாற்று அத்தியாயம் ஒன்றைப் பற்றி பேசுவதாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஜெகான் பெரேரா சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து தொடர்ந்து குரல் கொடுத்துவரும் முக்கியமான சிவில் சமூகப் பிரதிநிதியாவார். இனப்பிரச்சினை என்பது வெறுமனே பொருளாதார அல்லது சமூக அபிவிருத்தி சார்ந்த பிரச்சினையல்ல, மாறாக அது அதிகாரப்பகிர்வும் அரசியல் உரிமைகள் மற்றும் அடையாளமும் சார்ந்த பிரச்சினை என்பதில் அவர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர்.

தென்னிலங்கை பெரும்பான்மைவாதச் சிந்தனைகளைத் தாண்டி, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் தனித்துவமான அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்கும் பன்மைத்துவ ஆட்சிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அவர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குப் புறம்பாக, மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகளின் தீர்வுகளுக்காகவும் அபிலாசைகளுக்காகவும் ஜெகான் பெரேரா தீவிரமாகக் குரல் கொடுத்து வருகிறார்.

> **“‘இலங்கையின் மோதல் வரலாற்றுக்கு இருவேறு ஒருதலைப்பட்ச வாதங்களே (Unilateralisms) காரணம். சிங்களப் பெரும்பான்மை வாதம் பெரும் பான்மைப் பலம் மட்டுமே அரசின் தன்மையை நிர்ணயிக்கலாம் என நம்பியது. தமிழ்ப் பிரிவினை வாதம் தொடர் ஏமாற்றங்களால் தனி அரசு மட்டுமே தீர்வு என நம்பியது.”**

அவரின் அணுகுமுறை தென்னிலங்கைச் சமூகத்துக்கும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகச் சமூகங்களுக்கும் இடையில் ஒரு பாலம் போன்ற உரையாடலை உருவாக்கும் நோக்கில் அமைந்திருக்கிறது. தென்னிலங்கையின் தீவிர தேசியவாத எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அர சியல் அபிலாசைகளை அங்கீகரிப்பதே இலங்கையின் நீண்டகால அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஒரே வழி என் பதில் அவர் உறுதியாக நிற்கிறார்.

தென்னிலங்கையில் குறிப்பிடத்தக்க தாராள ஜனநாயகச் சிந்தை கொண்ட (Liberal democrats) அறிவுஜீவிகளில் ஒருவரான ஜெகான் பெரேரா தனது கருத்துகளை முன்வைக்கும் பாணியிலும் எழுத்துநடையிலும் கடுமையான தொனியைக் காண முடியாது; பிரச்சினைகளை ஆராயும்போது அகவுணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் நிதானமாகக் கருத்துரைப்பது அவரது பண்புகளில் ஒன்று. ஆனால், தனது நிலைப்பாடுகளை தெளிவாகக் கூறிவிடுவார். பிரச்சினைகளில் பங்கும் ஈடுபாடும் கொண்ட தரப்புகளை விரோதித்துக் கொள்ளாமல் உண்மைகளைக் கூறுவதில் பெருமளவுக்கு அக்கறை செலுத்தும் அவரது இயல்பு இந்த நினைவுப் பேருரையில் வியாபித்திருந்தது.

அவரது உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு;

‘வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி, தெற்கிலும் மலையகத்திலும் இழப்புகளையும் வடுக்களையும் சுமந்து நிற்கும் குடும்பங்களின் நினைவாற்றல் (Memory) தகுந்த ஞானமாக (Wisdom) மாற வேண்டும். அந்த நினைவாற்றல் வெறும் மனக்குறையாக மட்டுமே எஞ்சுமாயின் அது மோதலைத் தொடரச் செய்யும். மாறாக ஞானமாக மாறும்போது அது எதிர்கால சந்ததிக்கான பொறுப்பை உருவாக்குகிறது. (அனுபவத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்கு ஒத்த முடிவுகளையும் மதிப்பீடுகளையும் செய்யும் விவேகத்தையும் ஆற்றலையுமே அவர் ஞானம் என்கிறார்) சக வாழ்வு என்பது அரசியலமைப்புச் சட்டங்களில் மட்டும் எழுதப்படும் விதியல்ல. அது நித்திய விழிப்புணர்வுடன் (Eternal Vigilance) பேணப்பட வேண்டிய அன்றாடப் பயிற்சியாகும்.’

‘எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் இலங்கை தமிழரசு கட்சி சமஷ்டிக் கட்சியைத் தொடங்கியபோது தலைவர்களின் நோக்கம் நாட்டுப் பிரிவினை அல்ல; ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வைப் பெறுவதே நோக்கமாக இருந்தது. ஆனால், பண்டா-செல்வா ஒப்பந்தம் முதல் டட்லி-செல்வா ஒப்பந்தம் வரை அடுத்தடுத்து வந்த சாத்வீகப் போராட்டங்களும் பேச்சுவார்த்தைகளும் தேர்தல் அழுத்தங்களால் முறிவடைந்தபோது, தமிழ் அரசியலின் நம்பிக்கை சீர்குலைந்தது.’

‘1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது ஒரு திடீர் உணர்ச்சிவசப்பட்ட முடிவோ வெற்றிடத்திலிருந்து உருவானதோ அல்ல. அது பல தசாப்த கால அரசியலமைப்பு ஏமாற்றங்களின் திரண்ட வெளிப்பாடாகும். 1977 பொதுத் தேர்தலில் அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி பெற்ற அமோக மக்கள் ஆணை, தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய விரக்தியின் ஜனநாயக வடிவமாகும். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்டவாறே, ஒரு நாட்டைப் பிரிப்பதற்கான மக்கள் ஆணையையும் சுமந்திருந்த அமிர்தலிங்கத்தின் நிலைமை, இலங்கை அரசியலின் மிகவும் முரண்பாடான, அதேநேரம் கடினமான ஒரு ஜனநாயகத் தருணமாகும்.’

‘இலங்கையின் மோதல் வரலாற்றுக்கு இருவேறு ஒருதலைப்பட்ச வாதங்களே (Unilateralisms) காரணம். சிங்களப் பெரும்பான்மைவாதம் பெரும்பான்மைப் பலம் மட்டுமே அரசின் தன்மையை நிர்ணயிக்கலாம் என நம்பியது. தமிழ்ப் பிரிவினைவாதம் தொடர் ஏமாற்றங்களால் தனி அரசு மட்டுமே தீர்வு என நம்பியது.’

‘ஜனநாயகத்திற்கு பெரும்பான்மை ஆட்சி இன்றியமையாதது. ஆனால் அரசு மீதான பெரும்பான்மை உரிமை என்பது முற்றிலும் வேறுபட்டது. தேர்தல்கள் அரசாங்கத்தைத் தீர்மானிக்கலாமே தவிர, யார் இந்த நாட்டிற்கு அதிகமாகச் சொந்தக்காரரர் என்பதைத் தீர்மானிக்கக் கூடாது. அத்துடன் 'யார் அரசைக் கட்டுப்படுத்துவது?' என்று கேட்பதை விடுத்து, 'ஒவ்வொரு சமூகமும் எவ்வாறு இந்த அரசில் ஒரு

பங்குதாரராக (Shareholder) மாற முடியும்?' என்ற வினாவை எழுப்புவதே பன்மைத்துவ ஜனநாயகத்தை உருவாக்கும்.'

'13-வது திருத்தம் 1987-ஆம் ஆண்டில் இந்தியத் தலையீடு மற்றும் ஆயுத மோதல் சூழலில் பிறந்தது என்பதும் இன்று விடுதலை புலிகள் இயக்கமோ அல்லது அன்றைய புவிசார் அரசியல் அழுத்தங்களோ அதே வடிவில் இல்லை என்பதும் நிதர்சனமாகும். எனினும், தற்போதைய அரசியலமைப்பு முறைமைக்குள் அதிகாரப் பகிர்வுக்குச் சட்டபூர்வத் தன்மையைக் கொண்டுள்ள ஒரே ஏற்பாடு 13-வது திருத்தம் மட்டுமே. எனவே அதை நிராகரிப்பது புத்திசாலித்தனமல்ல. அதன் பலவீனங்களைச் சீரமைத்து முழுமையாக நடைமுறைப்படுத்துவதே பொறுப்புணர்வுடைய செயலாக இருக்கும்.

'கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் முடக்கப்பட்டிருக்கிறது. பொலிஸ், காணி அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு மேலும் பலப்படுமே தவிர பலவீனமடையாது. அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளும் தீரும் வரை நல்லிணக்கத்தைக் காத்திருக்க வைக்க முடியாது.

'1989 ஜூலையில் அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தமிழ்ச் சமூகத்தின் மாற்று ஜனநாயகக் குரல்களையும் இனங்களுக்கு இடையே பாலத்தை அமைப்பவர்களையும் திட்டமிட்டு ஒழித்த கொடூரமான நடவடிக்கையின் ஓர் அங்கமாகும். இத்தகைய தலைவர்களை இழந்ததன் விலையை இலங்கை மீண்டும் மீண்டும் செலுத்தியுள்ளது.

> **“ *1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது ஒரு திடீர் உணர்ச்சி வசப்பட்ட முடிவோ வெற்றிடத்திலிருந்து உருவானதோ அல்ல. அது பல தசாப்த கால அரசியலமைப்பு ஏமாற்றங்களின் திரண்ட வெளிப்பாடாகும். 1977 பொதுத் தேர்தலில் அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி பெற்ற அமோக மக்கள் ஆணை, தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய விரக்தியின் ஜனநாயக வடிவமாகும்.* ”**

'ஜனநாயக அரசியல் என்பது ஒரேயடியாக இறுதி இலக்கை அடைந்துவிடக்கூடிய மார்க்கம் அல்ல. அது சிறுமைப்படுத்தல் இல்லாத சுயமரியாதைக்கும், பழிவாங்கல் இல்லாத நீதிக்கும், ஆதிக்கம் இல்லாத சமத்துவத்திற்குமான தொடர்ச்சியான தேடலாகும். அரசியல் அரிதாகவே பரிபூரண தெரிவுகளை வழங்கும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து, அரை குறை வாய்ப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தும் தைரியமே அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவப் பண்பாக இருந்தது. அந்தப் பாதையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ள சட்டத்தின் ஆட்சி மற்றும் ஊழலற்ற நிர்வாகத்துடன் இணைந்து, அனைத்துச் சமூகங்களையும் சமமான பங்குதாரர்களாகக் கொள்ளும் புதிய அரசியலமைப்பு எதிர்காலத்தை நோக்கி நாடு நகர வேண்டும்.'

ஜெகான் பெரேராவின் இந்த உரை கடந்த காலக் கசப்புணர்வுகளில் இருந்து விடுபட்டு, நடைமுறைச் சாத்தியமான அரசியலமைப்புத் தீர்வுகளின் மூலம் அனைத்துச் சமூகங்களையும் அரவணைக்கும் 'பன்மைத்துவ ஜனநாயகத்தை' இலங்கையில் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான இன்றைய காலப் பகுதியில் உச்சபட்சக் கோரிக்கைகளுக்காக காத்திருந்து இருக்கின்ற வாய்ப்புகளையும் இழப்பதை விட 13-வது திருத்தம் போன்ற நடைமுறையில் உள்ள சட்டக் கட்டமைப்





புகளை பயன்படுத்திப் படிப்படியாக அதிகாரங்களைப் பெற முயற்சிப்பதே சாணக்கியமான அணுகுமுறை என்பதையும் அதன் பிரதான செய்தியாகக் கொண்டிருக்கிறது.

போரினாலும் அரசியல் அடக்குமுறைகளினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களின் இழப்புகளையும் நினைவுகளையும் வெறுமனே மனக்குறையாகத் தேக்கிவைக்காமல், அனுபவங்களைப் பயன்படுத்தி நிலைவரங்கள் வேண்டிநிற்பதன் பிரகாரம் நடைமுறைக்குப் பொருத்தமான தீர்மானங்களையும் மதிப்பீடுகளையும் செய்யும் மெய்யறிவாக மாற்ற வேண்டும் என்பதும் ஜெகான் பெரேராவின் முக்கிய வலியுறுத்தலாக இருக்கிறது.

அமிர்தலிங்கம் போன்று பேச்சு வார்த்தைகளுக்கு தயாராக இருந்த மிதவாதத் தலைவர்களின் இழப்பு அன்றைய காலகட்டத்தில் தமிழச் சமூகத்துக்கு ஏற்படுத்திய அரசியல் வெற்றிடத்தை இந்த நினைவுப் பேருரை மீண்டும் நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்த வெற்றிடம் இன்று வரை நிரப்பப்படாமலேயே இருக்கிறது.

ஜெகான் பெரேராவின் உரை இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், பல்வேறு தரப்பினராலும் வெவ்வேறான கோணங்களில் அணுகப்பட்டு வியாக்கியானம் செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை.

மிதவாதச் சிந்தனை கொண்ட தமிழ் அரசியல் சக்திகள் 13-வது திருத்தத்தை நிராகரிக்காமல் அதைப் பயன்படுத்தி அதிகாரப் பகிர்வை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை வரவேற்கும் என்கிற அதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற தீவிர தமிழ்த் தேசியவாதப் போக்குடைய சக்திகள் ஜெகான் பெரேராவின் இந்த உரைமீது கடுமையான விமர்சனப் பார்வையைக் கொண்டிருக்கும்.

13-வது திருத்தம் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதல்ல என்றும் ஜெகானின் வலியுறுத்தல்கள் மாகாணசபைகள் முறைமையில் உள்ள பாரதூரமான போதாமைகளை மூடிமறைக்கும் முயற்சியாக அமைந்திருக்கின்றன என்றும் அவர்கள் கூறுவார்கள். ஒற்றையாட்சிக்குள் இணக்கப்பாடு என்ற அணுகுமுறை ஏற்கனவே தோல்வி கண்டுவிட்டது என்றும் அவர்கள் வாதிடுவார்கள்.

ஆனால், பொதுவில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தென்னிலங்கையில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட தங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் நிறைவு செய்யக்கூடிய பயனுறுதியுடைய அதிகாரப்பகிர்வை வழங்கப் போவதில்லை என்ற சந்தேகம் அவர்கள் மத்தியில் மிகவும் ஆழமாகவே உள்ளது.

பதவிக்கு வந்ததும் ஒரு வருடத்திற்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிப்பதற்கான உத்திகளைக் கடைப்பிடித்து வருவதும் காணிகள் விடுவிப்பு மற்றும் இராணுவமயக் குறைப்பு போன்ற போரின் விளைவான மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு (மோதல்கள் முடிவுக்கு வந்து 17 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும் கூட) தீர்வுகளைக் காண்பதில் அக்கறையின்றி இருப்பதும் தமிழ் மக்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், தென்னிலங்கைச் சமூகத்தின் 'மனமாற்றத்துக்கு' அழைப்பு விடுப்பது கோட்பாட்டு ரீதியாக வரவேற்கக்கூடியது என்றாலும், நடைமுறையில் அது எந்தளவுக்கு சாத்தியம் என்ற கேள்வி தொடர்ந்தும் நிலையானதாகவே இருக்கிறது.



Thanabalasingham.V@thaiveedu.com

## மொழியின் அரசியல் : 4

# தனிச்சிங்களச் சட்டத்தின்




# ஆண்டுகள்




தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

tg.theeban@gmail.com


> “
> ***சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டையும் பொது அதிகாரத்தின் மொழிகளாக அங்கீகரித்துக் கொண்டே, ஆங்கிலத்தின் மேன்மையை அகற்றியிருக்கக்கூடிய ஒருமாற்றுத் தீர்வு இருந்திருக்கமுடியும். அந்தச் சீர்திருத்தம் 'சிங்களம் மட்டும்' என்ற வடிவத்தை எடுத்தது என்ற உண்மையே, பகிரப்படக் கூடிய சாத்தியமுள்ள ஒரு வட்டார மொழிப் போராட்டத்தை, இரண்டு பிரதான சுதேச மொழிகளுக்கு இடையேயான ஒரு சமமற்ற உறவாக மாற்றியது.***
> ”

### தொடக்கக் குறிப்புகள்: மொழிச் சீர்திருத்தம் எப்போது அரசுக்கான நெருக்கடியாக மாறியது?

1956-இல் இலங்கையின் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய மொழி தொடர்பான சர்ச்சை, வெறும் நிர்வாக வசதி சார்ந்த கருத்து வேறுபாடு மட்டுமல்ல. அது சுதந்திரத்தின் சமூகப் பொருள் குறித்தும், காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசை யார் ‘தங்களுடையது’ என்று அங்கீகரிக்க முடியும் என்பது குறித்தும் எழுந்த ஒரு மோதலாக இருந்தது. 1956-ஆம் ஆண்டின் 33-வது எண் கொண்ட ‘அலுவல் மொழிச் சட்டம்’ (Official Language Act), 'சிங்கள மொழியே இலங்கையின் ஒரே அலுவல் மொழியாக இருக்கும்' என்று மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டது. அந்த வாக்கியம் சிறியதாக இருந்தாலும், ஆங்கிலத்திற்கு இருந்த சலுகைமிக்க நிலை குறித்த பல தசாப்தகால அதிருப்தியையும், சிங்களம் பேசும் பெரும்பான்மையினர் தீர்மானிக்கும் அரசியல் சக்தியாக மாறியிருந்த தேர்தல் சூழலின் மாற்றத்தையும் அது உள்ளடக்கியிருந்தது. சிங்களம் பேசுபவர்கள் பலருக்கு - குறிப்பாக உயர்தர ஆங்கிலவழிப் பள்ளிகளில் பயிலாதவர்களுக்கு - இச்சட்டம், சுதந்திரத்திற்குப் பிறகும் கலாசார ரீதியாகத் தங்களுக்கு எட்டாத தூரத்தில் இருந்த அரசை ஜனநாயகப்படுத்துவதாகத் தோன்றியது. அதேவேளையில், தமிழ் பேசும் பலருக்கு, அந்த வாக்கியம் இரண்டு உள்நாட்டு மொழிகளுக்கும், அவற்றைச் சார்ந்த குடிமக்களுக்கும் இடையே ஒரு படிநிலையை (மேல்-கீழ் நிலையை) உருவாக்குவதாகத் தெரிந்தது. இந்த இரண்டு விதமான அனுபவங்களின் இணைவுதான் 1956-ஆம் ஆண்டின் நெருக்கடியை உருவாக்கியது.

காலனித்துவ எதிர்ப்பு மனக்குறையின் நியாயத்தன்மையிலிருந்து தொடங்குவது முக்கியம். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஆங்கிலம் என்பது வெறும் தகவல் தொடர்பு மொழியாக மட்டும் இருக்கவில்லை. அது ஓர் அரிய 'கலாசார மூலதனமாக' (cultural capital) செயற்பட்டது. அலுவலகப் பணிகள், தொழில்முறை வேலைவாய்ப்புகள், உயர் கல்வி மற்றும் நிர்வாகத்தின் உயர் நிலைகளை அடைவதற்கான வாய்ப்புகளை அது வழங்கியது. இதன் விளைவாக, 1948-க்குப் பிறகு அரசு முறைப்படி சுதந்திரம் பெற்றிருந்தாலும், சமூகரீதியாக அது பெரும்பான்மை மக்களுக்கு எட்டாத ஒன்றாகவே இருந்தது. எனவே, சிங்களமொழி ஆர்வலர்களால் மொழிச் சீர்திருத்தத்தை ஜனநாயகப்படுத்துதல் என்ற கோணத்தில் முன்வைக்க முடிந்தது. கர்னியும் (1967) ரிகின்ஸ்சும் (1960) வெவ்வேறு விதமாகக் குறிப்பிட்டது

> **பெரும்பான்மை ஆட்சியானது, பெரும்பான்மையினருக்கு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டுமல்லாமல், பெரும்பான்மை சமூகத்திற்கு வெளியே உள்ள குடிமக்களை நிரந்தரமாகப் பின்தங்கச் செய்யும் வகையில் அரசின் கலாசார அடையாளத்தை வரையறுக்கவும் உரிமை அளிக்கிறதா என்பதே பிரச்சினையாக மாறியது.**

போல, மொழி அரசியல் பெரும் சக்தியைப் பெற்றது. ஏனெனில் அது கலாசார அங்கீகாரத்தை சமூக முன்னேற்றம், வேலைவாய்ப்பு மற்றும் வெகுஜன ஜனநாயகத்தால் உருவான மாறிவரும் எதிர்பார்ப்புகளுடன் இணைத்தது. எனவே, 1956-ஆம் ஆண்டின் தேர்தல் புரட்சியை வெறும் இனமோதலாக மட்டும் சுருக்கிவிட முடியாது. தங்கள் அன்றாட வாழ்க்கையை நிர்வகிக்கும் நிறுவனங்களைச் சுதந்திரம் இன்னும் முழுமையாகச் சென்றடையவில்லை என்று நம்பிய சமூகக் குழுக்களின் தேசிய அரசியலுக்கான வருகையை அது பிரதிபலித்தது.

அரசைக் காலனித்துவ நீக்கம் செய்வதற்கும், பெரும்பான்மையினரின் பிம்பத்தில் அதனை தேசியமயமாக்குவதற்கும் இடையிலான வேறுபாடு தீர்க்கமானதாக அமைந்தது. அரசியல் மாற்றுவழிகள் வெறுமனே ஆங்கிலம் அல்லது சிங்களம் என்பதாக இருக்கவில்லை. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டையும் பொது அதிகாரத்தின் மொழிகளாக அங்கீகரித்துக்கொண்டே, ஆங்கிலத்தின் மேன்மையை அகற்றியிருக்கக்கூடிய ஒருமாற்றுத் தீர்வு இருந்திருக்கமுடியும். அந்தச் சீர்திருத்தம் 'சிங்களம் மட்டும்' என்ற வடிவத்தை எடுத்தது என்ற உண்மையே, பகிரப்படக்கூடிய சாத்தியமுள்ள ஒரு வட்டார மொழிப் போராட்டத்தை, இரண்டு பிரதான சுதேச மொழிகளுக்கு இடையேயான ஒரு சமமற்ற உறவாக மாற்றியது. நீல் டிவோட்டா (2004) அக்காலகட்டத்தை இனப்போட்டி எனும் மொழியில் விவரித்துள்ளார். சிங்கள அரசியல்வாதிகளுக்கு இடையேயானபோட்டி, மொழிக் கொள்கையை எவ்வாறு மேலும் மேலும் பிரத்தியேகமான நிலைப்பாடுகளை நோக்கித் தள்ளியது என்பதை அவர் வலியுறுத்துகிறார். விக்கிரமசிங்க (2014), ஜெயவர்தன (1985), தம்பையா (1986) ஆகியோரின் நீண்ட சமூக வரலாறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவரது வாதம் குறிப்பாகப் பயனுள்ளதாக அமைகிறது. ஏனெனில், மொழியியல் தேசியவாதம் காலத்தால் அழியாத பகைமையிலிருந்து ஆற்றலைப் பெறாமல், கல்வி விரிவாக்கம், சமூக அந்தஸ்து குறித்த கவலை, வர்க்கநகர்வு, மதப் புத்துயிர், சமகால அரசியல் அமைப்பு ஆகியவற்றிலிருந்து ஆற்றலைப் பெற்றது என்பதை அவை நமக்கு நினைவூட்டுகின்றன.

இந்த வேறுபாடு, தமிழ் எதிர்வினையைப் புரிந்துகொள்ளும் விதத்தை மாற்றுகிறது. தமிழ் எதிர்ப்பு என்பது ஆங்கிலம் பேசும் சிறுபான்மை மேட்டுக் குடியினரின் ஒரு பாதுகாப்பு மட்டுமல்ல. தமிழ் அரசியல் அமைப்புகளுக்கே ஆங்கில ஆதிக்கத்தை விமர்சிக்கக் காரணங்கள் இருந்தன. அவை நீண்டகாலமாக தாய்மொழி அங்கீகாரத்தை அதிகரித்துக் கோரிவந்தன. 'மட்டும்' என்ற சொல்லின் அரசியல் அர்த்தமே சிக்கலாக இருந்தது. குடிமக்கள் தங்கள் சொந்த மொழியின் மூலம் அரசை எதிர்கொள்ளவேண்டும் என்பதால் ஆங்கில ஏகபோகத்தின் முடிவு நியாயப்படுத்தப்பட்டால், அதே கொள்கை தமிழ் பேசுபவர்களுக்கு ஏன் நீட்டிக்கப்படவில்லை என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்க முடிந்தது. எனவே, இந்த சர்ச்சை நிர்வாக மொழியிலிருந்து அரசியலமைப்புச் சமத்துவத்திற்கு வேகமாக நகர்ந்தது. பெரும்பான்மை ஆட்சியானது, பெரும்பான்மையினருக்கு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டுமல்லாமல், பெரும்பான்மை சமூகத்திற்கு வெளியே உள்ள குடிமக்களை நிரந்தரமாகப் பின்தங்கச் செய்யும் வகையில் அரசின் கலாசார அடையாளத்தை வரையறுக்கவும் உரிமை அளிக்கிறதா என்பதே பிரச்சினையாக மாறியது.

நாடாளுமன்ற விவாதம் இந்த ஆபத்தை அசாதாரணமான தெளிவுடன் படம்பிடித்தது. லங்கா சமசமாஜக் கட்சி சார்பாகப் பேசிய கொல்வின் ஆர். டி சில்வா, அரசியலமைப்புச் சிக்கலை, பிற்காலத்தில் தீர்க்கதரிசனமாக நினைவு கூரப்படும் ஒரு சொற்றொடரை நாடாளுமன்றில் கூறினார். 'இரு மொழிகள், ஒருதேசம்; ஒரு மொழி, இருதேசங்கள்'. அந்தக் கருத்தின் மதிப்பு, அது பிற்காலத்தில் பெற்ற புகழைவிட, அந்த ஆபத்து அக்காலத்திலேயே புலப்பட்டது என்பதை அது நிரூபிப்பதில்தான் அடங்கியுள்ளது. 1956-ஆம் ஆண்டின் அரசியல் உலகில், மாற்றுவழிகளைக் கற்பனை செய்ய முடியாதவர்கள் இருக்கவில்லை. சிங்கள-தமிழ் சமநிலை, இருமொழி நிர்வாகம், பிராந்திய ரீதியான வேறுபாடுகள் மற்றும் இடைக்கால அளவில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை அக்காலகட்டத்து விவாதங்களில் இடம்பெற்றிருந்தன. எனவே, அதன் பின்னர் நிகழ்ந்த மாற்றங்களின் போக்கை வெறும் மக்கள் தொகை சார்ந்த உண்மைகளின் இயந்திரத்தனமான விளைவாக மட்டும் விவரிக்க முடியாது. ஆரம்பத்தில் பரந்த அளவில் இருந்த வாய்ப்புகளை அரசியல் ரீதியான தேர்வுகள் சுருக்கி விட்டன.



இந்த நெருக்கடி அரசின் அரசியல் பொருளாதாரத்தையும் உள்ளடக்கியிருந்தது. அரசு வேலைவாய்ப்பு, கல்வித் தகுதிகள், நிலநிர்வாகம் மற்றும் நலத்திட்டங்களுக்கான அணுகல் ஆகியவை அரசாங்க நிறுவனங்கள் மூலம் விநியோகிக்கப்

பட்டன. அந்த நிறுவனங்களின் மொழியில் ஏற்பட்ட மாற்றம், மொழித்திறன்களின் சார்புமதிப்பை தவிர்க்க முடியாமல் மாற்றியது. முன்பு ஆங்கிலத்தை ஒரு தடையாகக் கருதிய சிங்களம் பேசும் ஆசிரியர் அல்லது எழுத்தர், சீர்திருத்தத்தை ஒரு வர்க்கத் தடை நீக்கப்படுவதாக உணரமுடிந்தது. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கல்விகற்ற ஒரு தமிழ் அரசு ஊழியர், அதே மாற்றத்தை புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு தொழில் சார் பாதிப்பாக உணரமுடிந்தது. இவை ஒரு எளிய தார்மீக அர்த்தத்தில் சமச்சீரான கதைகள் அல்ல. மாறாக, பியர் போர்தியோ பின்னர் 'மொழி மூலதனம்' என்று அழைத்ததை, ஒரே ஒரு நிறுவன சீர்திருத்தம் எவ்வாறு மறுபகிர்வு செய்ய முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும். மொழிக் கொள்கை முக்கியத்துவம் பெற்றது, ஏனெனில் அது பொருள் சார் வாழ்வில் நுழைந்தது.

அதனைத் தொடர்ந்த நிகழ்வுகள், இந்த மோதலை அரசின் சட்டபூர்வத்தன்மைக்கான நெருக்கடியாக மாற்றின. தமிழர்களின் அகிம்சைப் போராட்டம் வன்முறையை எதிர்கொண்டது. நிலப் பங்கீடு மற்றும் பிராந்திய மக்கள் தொகை தொடர்பான பதட்டங்கள் மொழியுடன் இணைக்கப்பட்டன. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட ஒரு பேச்சு வார்த்தை ஒப்பந்தம், இணக்கத்தை நோக்கிய ஒரு அரசியலமைப்புப் பாதையைச் சுருக்கமாகப் பரிந்துரைத்தது. ஆனால் தேசியவாத எதிர்ப்பின் கீழ் அது சரிந்தது. மே 1958-இல், பெரிய அளவிலான இனவன்முறை அரசாங்கத்தை அவசர நிலையை அறிவிக்க நிர்ப்பந்தித்தது. நிர்வாக மொழியுடன் தொடங்கிய ஒரு சர்ச்சை, இப்போது உடல்கள், வீடுகள், வணிகங்கள் மற்றும் நடமாட்டத்தின் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டது. கேள்வி இனி வெறுமனே அரசு எந்த மொழியில் பேசும் என்பது அல்ல. மாறாக, அரசு யாரிடம் பேசுகிறதோ அவர்கள் அனைவரையும் நம்பகத்தன்மையுடன் பாதுகாக்க முடியுமா என்பதே ஆகும்.

இந்தக் கட்டுரை 1956 - 1958 காலகட்டத்தை உள்நாட்டுப் போரின் முன்நிர்ணயிக்கப்பட்ட தொடக்கமாகக் கருதாமல், காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசின் ஒரு ஆரம்பகால நெருக்கடியாகக் கருதுகிறது. இத்தகைய வேறுபாடு இன்றியமையாதது. பிற்காலப் பிரிவினைவாதமும் ஆயுத மோதலும் 1950-களை ஒரு நோக்கவியல் ரீதியாக முழுமையானதாகத் தோன்றச் செய்யலாம். ஒவ்வொரு கூட்டாட்சிக் கோரிக்கையும் ஏற்கனவே பிரிவினையைக் கொண்டிருந்தது போலவும், ஒவ்வொரு வன்முறைச் செயலும் தவிர்க்க முடியாமல் போரை நோக்கிச் சுட்டிக்காட்டியது போலவும் அது தோற்றமளிக்கலாம். அந்த விளக்கம், பிற்கால விளைவுகளை முந்தைய நோக்கங்களாகத் தவறாகப் புரிந்துகொள்கிறது. 1950-களின் பிற்பகுதியில், தமிழ் அரசியல் பெரும்பாலும் நாடாளுமன்றத்தை மையப்படுத்தியதாகவும் கூட்டாட்சியைக் கோருவதாகவும் மிகவும் முக்கியமான வன்முறையற்றதாக இருந்தது. சிறுபான்மையினர் அரசில் சமமாக நிலைத்திருக்கும் வகையில் அரசைப் புனரமைப்பதே செல்வநாயகத்தின் திட்டமாக இருந்தது. அந்நியமாதல் தோன்றிக்கொண்டிருந்தது, ஆனால் அது இலங்கையையே முற்றிலுமாக நிராகரிப்பதாக இல்லாமல், மையப்படுத்தப்பட்ட பெரும்பான்மைவாதத்திலிருந்து ஏற்படும் அந்நியமாதலாகவே இருந்தது.

இந்தக் கட்டுரை முழுவதும் ஓடும் பகுப்பாய்வுக் கேள்வி, உரிமை மற்றும் சொந்தம் பற்றியது. சிங்களப் பெரும்பான்மையினரால் தேர்தல் மூலம் ஆளப்படும் ஒரு அரசு, அந்தப் பெரும்பான்மையினரைச் சாராத குடிமக்களுக்கு நிறுவனரீதியாகப் பொதுவானதாக இருக்க முடியுமா? தமிழ் மொழி அடிமைத்தனம் இல்லாமல் சிங்கள மொழி விடுதலை ஏற்பட முடியுமா? மக்கள் தொகை அச்சம் இல்லாமல் நிலப் பகிர்வு தொடர முடியுமா? நிரந்தர சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் அரசியலமைப்பு கட்டுப்பாடுகளுடன் நாடாளுமன்ற இறையாண்மை இணைந்து இருக்க முடியுமா? இந்தக் கேள்விகளுக்கு உறுதியான பதில்களை அளிக்கத் தவறியதுதான், மொழியை ஒரு சீர்திருத்தப் பிரச்சினையிலிருந்து அரசியல் சமூகத்தின் நெருக்கடியாக மாற்றியது. அந்தவகையில், 1956-ஐ முரண்பாட்டு ரீதியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அது விடுதலையளிப்பதாகவும் விலக்குவதாகவும், ஜனநாயகமாகவும் பெரும்பான்மைவாதமாகவும், காலனித்துவ எதிர்ப்பாகவும் படிநிலையை மீண்டும் உருவாக்கும் திறனுடையதாகவும் இருந்தது. ஏதேனும் ஒரு தனிப்பட்ட முத்திரையை விட, இந்த முரண்பாடே அதன் நீடித்த முக்கியத்துவத்தை விளக்குகிறது.



## 1956–க்கு முந்தைய தமிழ் அரசியல்: பிரதிநிதித்துவத்திலிருந்து கூட்டாட்சி வரை:

தமிழ் அரசியல் அணிதிரட்டல் உத்தியோக மொழிச் சட்டத்துடன் தொடங்கவில்லை. 1956-ஆம் ஆண்டிற்குள், வாக்குரிமை மற்றும் பிராந்தியப் பிரதிநிதித்துவத்தை மையமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அரசியலமைப்பு ஒழுங்கிற்குள், எண்ணிக்கையில் சிறிய சமூகமாகிய தமிழ், எவ்வாறு அரசியல் செல்வாக்கைப் பெறமுடியும் என்பது குறித்து தமிழ் அரசியல் தலைவர்கள் பல தசாப்தங்களாக விவாதித்து வந்தனர். காலனித்துவப் பிரதிநிதித்துவத்திலிருந்து காலனித்துவத்திற்குப் பிந்தைய ஜனநாயகத்திற்கான மாற்றம், இந்தப் பிரச்சினையின் தன்மையை மாற்றியமைத்தது. காலனித்துவ அமைப்பின் கீழ், மேட்டுக்குடிப் பேச்சுவார்த்தையும் வகுப்புவாதப் பிரதிநிதித்துவமும் சிறுபான்மையினருக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமற்ற செல்வாக்குவழிகளை வழங்கியிருந்தன. டொனமோர் சீர்திருத்தங்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுவாக்குரிமை, ஜனநாயகத்தை விரிவுபடுத்தியது, ஆனால் நிரந்தர சிறுபான்மையினரின் கட்டமைப்புச் சிக்கலையும் கூர்மைப்படுத்தியது. அரசியல் அதிகாரம் தேர்தல் எண்களை எந்த அளவிற்கு முழுமையாகப் பின்பற்றுகிறதோ, அந்த அளவிற்கு தேசிய அதிகாரம் சிங்கள மக்கள் தொகைப் பெரும்பான்மையைப் பிரதிபலிக்கும் போக்கைக் கொண்டிருக்கும். எனவே, 1956-க்கு முந்தைய தமிழ் அரசியலின் வரலாற்றை, பிரிவினைவாதத்தை நோக்கிய ஒரு நேர்கோட்டுப் பயணமாகப் புரிந்துகொள்வதை விட, ஒரு பொதுவான அரசிற்குள் நிறுவனப் பாதுகாப்புகளை வகுப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளாகவே சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும் (வில்சன் 1988, 2000).

ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சமச்சீர் பிரதிநிதித்துவத்திற்கான கோரிக்கை, பொதுவாக 'ஐம்பதுக்கு ஐம்பது' எனச் சுருக்கமாகக் கூறப்படுவது, இந்தக் கவலையிலிருந்து உருவானது. இந்தச் சூத்திரம், பாதிப் பிரதிநிதித்துவத்தை சிங்களவர்களுக்கும், மீதிப் பாதியை சிறுபான்மையினருக்கும் கூட்டாக ஒதுக்குவதன் மூலம், எந்தவொரு தனி சமூகமும் சட்டமன்றத்தில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க முயன்றது. இது சோல்பரி அரசியலமைப்புச் சட்டச் செயல்முறையால் நிராகரிக்கப்பட்டது. தேர்தல் ஜனநாயகத்தின் நேரடியான பெரும்பான்மைவாதக் கருத்தாக்கத்துடன் இதை எளிதில் இணக்கப்படுத்த முடியவில்லை. ஆயினும், அது அடையாளம் காட்டிய சிக்கலில்தான் அதன் வரலாற்று முக்கியத்துவம் அடங்கியுள்ளது. ஒருமொழிச் சமூகம் நிலையான தேசியப் பெரும்பான்மையாக இருக்கும் இடத்தில், தனிநபர் வாக்குகளின் முறையான சமத்துவம் கூட்டுப் பாதுகாப்பின்மையுடன் ஒருங்கே நிலவக்கூடும். சமச்சீர் பிரதிநிதித்துவத்தின் தோல்வி அந்தச் சிக்கலை அகற்றவில்லை. அது தமிழ் அரசியலமைப்புச் சிந்தனையைப் பிராந்தியத் தீர்வுகளை நோக்கித் திருப்பி விட்டது.

1940-களின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டங்கள் இந்தக் கவலைகளைத் தீவிரப்படுத்தின. 1948-ஆம் ஆண்டின் இலங்கை குடியுரிமைச் சட்டமும், அதனைத் தொடர்ந்த சட்டங்களும், பெருமளவிலான இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை பெறுவதை மிகவும் கடினமாக்கின. அதேநேரத்தில், தேர்தல் மாற்றங்கள் அந்த மக்களில் பெரும்பாலோரை வாக்குரிமையிலிருந்து திறம்பட அகற்றின. மலையகத் தமிழர்கள், வடக்கு மற்றும் கிழக்கின் இலங்கைத் தமிழ் மக்களிடமிருந்து சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபட்டிருந்தனர். அவர்களின் அரசியல் அமைப்புகள் தமக்கெனத் தனிப்பட்ட பாதைகளைப் பின்பற்றின. ஆயினும்கூட, இந்த நிகழ்வு சிறுபான்மையினர் நம்பிக்கை குறித்த பரந்த அரசியலுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. பாதிக்கப்படக்கூடிய ஒரு மக்கள் குழுவிற்கு மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வழிகளில் நாடாளுமன்றப் பெரும்பான்மையினரால் உறுப்பினர் தகுதியை மறுவரையறை செய்யமுடியும் என்பதை இது நிரூபித்தது. மேலும், இது பெரும்பாலும் இடதுசாரிகளை ஆதரித்த ஒரு வாக்காளர் குழுவைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தேர்தல் சமநிலையையும் மாற்றியது. ஜெயவர்தனவின் வர்க்க மற்றும் இன அரசியல் குறித்த ஆய்வு வலியுறுத்துவதுபோல, குடியுரிமை, உழைப்பு மற்றும் சமூகப் பிரதிநிதித்துவம் ஆகியவை அரசியல் அதிகாரத்தின் பரந்த விநியோகத்திலிருந்து பிரிக்க முடியாதவை (ஜெயவர்தன 1985).

ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிலிருந்து பிரிந்த பிறகு, 1949-இல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில், அது கூட்டாட்சி, மொழிச் சமத்துவம், குடியுரிமைகள் மற்றும் அரசால் ஆதரிக்கப்படும் காலனித்துவத்திற்கு எதிரான பாதுகாப்புகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு செயற்றிட்டத்தை படிப்படியாக உருவாக்கியது. கட்சியின் தமிழ் பெயரின் பொதுவான ஆங்கில மொழிபெயர்ப்பே ஒரு விவாதத்தை உருவாக்கியுள்ளது, ஏனெனில் 'தமிழ் அரசு' என்பது தமிழ் அரசாங்கம் அல்லது ஆட்சியுடன் தொடர்புடைய அர்த்தங்களைக் கொண்டிருக்கக்கூடும். வரலாற்று ரீதியாக முக்கியமானது. 1950-களில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டம் என்பது ஒரு தனி இறையாண்மை கொண்ட தமிழ் அரசு அல்ல, மாறாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு. செல்வநாயகம் பற்றியும் தமிழ் தேசியம் பற்றி விரிவாக எழுதிய அவரது மருமகன் வில்சன் (2000), கூட்டாட்சிக் கட்டத்தை ஒரு தனித்துவமான அரசியலமைப்புத்

> *1948-ஆம் ஆண்டின் இலங்கை குடியுரிமைச் சட்டமும், அதனைத் தொடர்ந்த சட்டங்களும், பெருமளவிலான இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை பெறுவதை மிகவும் கடினமாக்கின. அதேநேரத்தில், தேர்தல் மாற்றங்கள் அந்த மக்களில் பெரும்பாலோரை வாக்குரிமையிலிருந்து திறம்பட அகற்றின. மலையகத் தமிழர்கள், வடக்கு மற்றும் கிழக்கின் இலங்கைத் தமிழ் மக்களிடமிருந்து சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபட்டிருந்தனர்.*



திட்டமாகவே கருதுகிறார், அதன் பிற்கால மாற்றத்தை பின்னோக்கித் திட்டமிடக்கூடாது.

சுயாட்சி மற்றும் பகிரப்பட்ட ஆட்சி ஆகியவற்றை இணைப்பதன் மூலம், நிரந்தர சிறுபான்மைநிலை குறித்த சிக்கலுக்குக் கூட்டாட்சி முறை ஒரு தீர்வை முன்வைத்தது. மக்கள் தொகை அடிப்படையில் அமையும் போட்டி மூலம் தமிழ்ப் பிரதிநிதிகளால் தேசிய அரசாங்கத்தை அமைக்க முடியாத சூழலில், கூட்டாட்சி ஏற்பாடானது, தமிழர்கள் கணிசமாக வாழும் பகுதிகளில் அர்த்தமுள்ள அதிகாரத்தை உறுதிசெய்வதோடு, அதே வேளையில் மத்திய அரசிலும் அவர்களின் பங்கேற்பைத் தக்கவைக்கவும் வழிவகுத்தது. இது ஒரு அரசியல் வெற்றிடத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விசித்திரமான யோசனை அல்ல. பல மொழிகள் பேசும் நாடுகளில் அரசியலமைப்பு வடிவமைப்பின் பரந்த நடைமுறைகளில் கூட்டாட்சி ஏற்பாடுகளும் ஒரு பகுதியாகவே இருந்தன. நிர்வாக அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருந்ததால், மொழியும் கூட்டாட்சியும் ஒன்றோடொன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டன. கல்வி, நிலம், வேலைவாய்ப்பு, பொது நிர்வாகம் தொடர்பான முடிவுகள் பெரும்பாலும் கொழும்பிலேயே எடுக்கப்பட்ட நிலையில், மத்திய அரசின் மொழி அனைத்து இடங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. நில ஆவணங்களைக் கையாளும் தமிழ்ப் பேசும் விவசாயி, பணி நியமனம் கோரும் ஆசிரியர் அல்லது பதவி உயர்வை எதிர்பார்க்கும் அரசு ஊழியர் என அனைவரும் தேசிய அளவில் விதிகள் வகுக்கப்பட்ட நிறுவனங்களையே சார்ந்திருக்க வேண்டியிருந்தது. சில அதிகாரங்களைத் தமிழ்ப் பேசும் பகுதிகளுக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதன் மூலம் அந்தச் சார்புநிலையைக் குறைக்க கூட்டாட்சிமுறை உறுதியளித்தது. அந்த வகையில், இந்தக் கோரிக்கை ஒரே நேரத்தில் கலாசார மற்றும் பொருள்சார்ந்த தன்மையைக் கொண்டிருந்தது.

குடியேற்றத் திட்டங்கள் பிரதேசம் சார்ந்த கேள்வியை மிகவும் உணர்வுபூர்வமானதாக மாற்றின. அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன, குடியேற்றத் திட்டங்கள் வெவ்வேறு குழுக்களால் வெவ்வேறு விதமாகப் பார்க்கப்பட்டன. நிலம் குறைவான சிங்கள விவசாயிகளைப் பொறுத்தவரை, புதிதாக நீர்ப்பாசன வசதி பெற்ற பகுதிகளில் குடியேறுவது என்பது சமூக முன்னேற்றத்தையும், உற்பத்தித் திறன் கொண்ட ஒரு சொத்தை அடைவதையும் குறிப்பதாக அமைந்தது. ஆனால் தமிழ் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை - குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் - அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்கள், தங்கள் அரசியல் பாதுகாப்பிற்கு மிக முக்கியமானதாகக் கருதப்படும் பகுதிகளின் மக்கள் தொகை அமைப்பையே மாற்றி அமைப்பதாகத் தோன்றின. இத்தகைய கண்ணோட்டங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. நிலம் என்பது உற்பத்திக்கான ஒரு வழியாகவும், அதேசமயம் ஒரு பிரதேச வளமாகவும் இருந்தது. 'கல் ஓயா' அபிவிருத்தித் திட்டம் பிற்காலத்தில் மிகவும் பதற்றமான ஒரு களமாக மாறியது. ஏனெனில் அங்கு அபிவருத்தி, இடம்பெயர்வு, நிர்வாக அதிகாரம் மற்றும் இனக் குழுக்களுக்கிடையிலான பாதுகாப்பின்மை ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்திருந்தன (ரிகின்ஸ் 1960, தம்பையா 1986).

தமிழ்ச்சமூகம் ஒரு படித்தானதாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தின் கல்விச் சாதகங்கள் சிலசாதி மற்றும் வர்க்கக் குழுக்களுக்குச் சமமற்ற முறையில் பயனளித்தன. அரசியல் தலைமைதொழில் வல்லுநர்கள் மற்றும் நிலவுடைமை மேட்டுக்குடியினரால் வடிவமைக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட தமிழர்கள், தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் ஏழை கிராமப்புற மக்கள் தமிழ் தேசியவாதத்தை ஒரேமாதிரியாக அனுபவிக்கவில்லை. ஒரு பெரும்பான்மை அரசுக்கு எதிராக ஒரு சிறுபான்மை சமூகத்தின் ஜனநாயகக் கோரிக்கைக்கும், அந்த சமூகத்திற்குள் நீடிக்கக்கூடிய உள் படிநிலைகளுக்கும் இடையில் வேறுபடுத்திக் காட்டவேண்டும். சிறுபான்மையினரின் கூட்டு உரிமைகள், தாங்களாகவே சமூகமாற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும் அவசியமானவையாக இருக்கலாம். வர்க்கம் மற்றும் இனத்தின் வெளிப்பாட்டைப் பகுப்பாய்வு செய்வதில் நியூட்டன் குணசிங்கவின் பிற்கால வலியுறுத்தல் இங்கு பயனுள்ளதாக இருக்கிறது. தேசிய சமூகங்கள் அரசியல் ரீதியாக சக்தி வாய்ந்தவையாக மாறுவதற்குக் காரணம், அவற்றின் உட்பொருள் நலன்கள் வேறுபட்டிருக்கும் குழுக்களை அவற்றால் ஒன்றிணைக்க முடிவதே ஆகும்.

கிழக்கு மாகாணம் எந்தவொரு சாதாரண சிங்கள-தமிழ் இருமையையும் மேலும் சிக்கலாக்கியது. தமிழ் பேசுபவர்களில்

தமிழர்களும் முஸ்லிம்களும் அடங்கியிருந்தனர். அங்கு மொழியியல் பொதுத்தன்மை தனித்துவமான அரசியல் அடையாளங்களை அழிக்கவில்லை. முஸ்லிம் சமூகங்களுக்கு நிலம், பிரதிநிதித்துவம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு குறித்துத் தங்களுக்கென சொந்தக் கவலைகள் இருந்தன. எனவே, தமிழ் அரசியல் கோரிக்கைகளை மையமாகக் கொண்டு பிராந்திய ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட எந்தவொரு கூட்டாட்சி ஏற்பாடும், ஒரு சிறுபான்மையினருக்குள் மற்றொரு சிறுபான்மையினர் என்ற சிக்கலை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இந்தப் பிரச்சினை, அதிகாரப் பகிர்வு குறித்த பிற்கால விவாதங்களில் மையமாகத் தொடர்ந்ததுடன், ஒருதேசிய சிறுபான்மையினரை ஒரு தேசிய பெரும்பான்மையினரிடமிருந்து பாதுகாப்பதை விட, பன்மைத்துவம் ஏன் பலநிலைகளில் செயல்பட வேண்டும் என்பதையும் விளக்குகிறது.

1950-களின் முற்பகுதியில், தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை, பல திரண்ட நிகழ்வுகளுக்கான ஒரு எதிர்வினையாகப் புரிந்துகொள்ள முடிந்தது. மேட்டுக்குடியினரின் வகுப்புவாதப் பேரங்களின் வீழ்ச்சி, குடியுரிமைச் சட்டங்களின் அனுபவம், அதிகரித்துவரும் மையப்படுத்தல், தீர்வுகுறித்த கவலைகள், மற்றும் மொழியின் வளர்ந்துவரும் அரசியல் முக்கியத்துவம் ஆகியவை அந்த நிகழ்வுகளாகும். மாற்றப்பட்ட அரசியலமைப்புச் சூழ்நிலைகளின் கீழ் இலங்கைக்குள் நிலைத்திருப்பதற்கான ஒரு உத்தியாக அது இருந்தது. 1956-இல் ஏற்பட்ட தீர்க்கமான மாற்றம் என்ன வென்றால், ஒரு மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி முறையானது, தேசிய அங்கத்துவத்தின் நிபந்தனைகளை வரையறுக்க பெரும்பான்மையினருக்கு வழிவகுக்கும் என்ற தமிழரசுக் கட்சியின் எச்சரிக்கையை, சிங்களம் மட்டும் சட்டம் உறுதிப்படுத்துவது போல் தோன்றியதுதான். மொழிச் சட்டம் தமிழ் அரசியலமைப்பு குறித்த கவலையை ஒன்றுமில்லாமல் உருவாக்கவில்லை. அது அந்தக் கவலைக்கு ஒரு சக்திவாய்ந்த புதிய சான்றைக் கொடுத்தது.

## சிங்களம் மட்டுமும் பெரும்பான்மை ஆட்சியின் பொருளும்:

1956-ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியானது பெரும்பாலும் ஒரு கலாசாரப் புரட்சி என்று விவரிக்கப்படுகிறது, ஆனால் அதன் சமூகக் கட்டமைப்பு, அந்தச் சொற்றொடருக்கு ஏன் அரசியல்- பொருளாதார உள்ளடக்கம் தேவைப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. பண்டாரநாயக்கவின் கூட்டணி, மொழிசார் தேசியவாதத்தின் தேர்தல் சக்தியை அங்கீகரித்திருந்த நிலைபெற்ற அரசியல்வாதிகளுடன், பௌத்த பிக்குகள், சிங்கள மொழி ஆசிரியர்கள், ஆயுர்வேத மருத்துவர்கள், எழுதுவினைஞர்கள் கிராமப்புறத் தொழில் வல்லுநர்கள், சிறு வணிகர்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாய வர்க்கத்தின் சில பிரிவினரிடமிருந்தும் ஆதரவைத் திரட்டியது. இத்தொகுதிகள் யாவும் சீரான ஒரே வர்க்க நலனைப் பகிர்ந்துகொள்ளவில்லை. ஆங்கிலேயரின் சிறப்புரிமை, கலாசார அவமானம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம் ஆகியவற்றை தேசிய மீட்சிக்கான கோரிக்கையாக மொழிபெயர்க்கக்கூடிய ஒரு அரசியல் கதையாடலே அவர்களை ஒன்றிணைத்தது. கிராம்சியின் 'தேசிய-மக்கள்' அணி என்ற கருத்து இங்கே பயனுள்ளதாக இருக்கிறது. அதாவது, பல்வேறு சமூகக் குறைகளை, அவற்றின் வேறுபாடுகளை நீக்காமல் ஒருமைப்பாட்டை வழங்கும் ஒரு பொதுவான மொழியின் மூலம் வெளிப்படுத்த முடியும்.

சிங்களத்திற்கான கோரிக்கை ஒரு ஜனநாயகக் கோரிக்கையைக் கொண்டிருந்தது. கிராமங்களிலும் மாகாண நகரங்களிலும், ஆங்கிலத்தின் மூலம் அரசாங்கத்தை எதிர்கொண்ட குடிமக்கள், நிர்வாகத்தில் வட்டாரமொழியாக்கம் காலங்கடந்த ஒன்று என நியாயமாகக் கருதலாம். சிங்களத்தில் பல தலைமுறை குழந்தைகளுக்குக் கற்பிக்கத் திறனுள்ள ஒரு ஆசிரியர்கூட, உயர் அதிகார வர்க்கத்தை கலாசார ரீதியாக அந்நியமானதாகக் கருதலாம். ஒரு வழக்காளிக்கோ விண்ணப்பதாரருக்கோ, நீதிமன்ற நடவடிக்கைகளையோ உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றங்களையோ புரிந்துகொள்ள மொழிபெயர்ப்பு தேவைப்படலாம். அரசின் ஆங்கிலமுகம், காலனித்துவ வர்க்க அதிகாரத்தின் தொடர்ச்சியை அடையாளப்படுத்தியது. 1956-ஆம் ஆண்டு இயக்கம் வெற்றிபெற்றது, ஏனெனில் அது ஒரு புதிய உத்தியோகபூர்வ மொழியை மட்டுமல்ல, முன்னர் தாழ்வாகக் கருதப்பட்ட கல்வி மற்றும் கலாசாரத் திறன்களைக் கொண்ட மக்களின் மறுமதிப்பீட்டையும் உறுதியளித்தது.

இந்த ஜனநாயகக் கோரிக்கை, பெரும்பான்மை மொழியே ஒரே உத்தியோகபூர்வ மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையாக மாற்றப்பட்டபோது அரசியலமைப்புச் சிக்கல் எழுந்தது. பெரும்பான்மை ஆட்சியார் ஆள வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. அரசு பெரும்பான்மையினரின் கலாசார அடையாளத்தை மட்டுமே கொண்டிருக்கவேண்டும் என்று அது தர்க்கரீதியாகத் தீர்மானிப்பதில்லை. ஒரு நாடாளுமன்றப் பெரும்பான்மை வரிவிதிப்பு அல்லது பொதுக் கொள்கையைச் சட்டமாக்கலாம், பின்னர் அது மாற்றப்படலாம். இருப்பினும், ஒரு மொழிப் பெரும்பான்மை அதிக நீடித்த தன்மை கொண்டது. பெரும்பான்மையினர் சாதாரண பாராளுமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியுரிமையின் அடிப்படை மொழியை வரையறுக்கும்போது, ஒரு தற்காலிக தேர்தல் ஆணை ஒரு நிரந்தர கட்டமைப்பு நன்மையை உருவாக்க முடியும். இதனால்தான் மொழிப் பிரச்சினை, ஜனநாயகத்தைப் பற்றிய முற்றிலும் நடைமுறை சார்ந்த புரிதலின் வரம்புகளை வெளிப்படுத்தியது.

1956-ஆம் ஆண்டு சட்டத்தின் வார்த்தைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. அது சிங்களத்தை வெறும் உத்தியோகபூர்வ மொழியாக ஆக்கவில்லை. அது சிங்களத்தை 'ஒரே உத்தியோக பூர்வ மொழியாக' ஆக்கியது. இந்த மாற்றம் செயற்படுத்தப்படும் வரை, ஏற்கனவே உள்ள மொழிகளை இடைக்காலமாகப் பயன்படுத்த அந்த ஏற்பாடு அனுமதித்தது, ஆனால் அதன் நெறிமுறை சார்ந்த இலக்கு தெளிவாக இருந்தது. 'ஒரே உத்தியோக பூர்வமொழி' என்ற சொற்றொடர், அங்கீகாரத்திற்கான கோரிக்கையை ஏகபோக உரிமைக்கான கோரிக்கையாக மாற்றியது. 'ஒரே' என்ற வார்த்தையின் அரசியல் சக்தி, அது சமத்துவத்தை விலக்கியதில் துல்லியமாக அமைந்திருந்தது.

மொழி என்பது அரசு வேலைவாய்ப்பு மற்றும் நிர்வாக அணுகலுடன் பிணைக்கப்பட்டிருந்ததால், இந்தக் கொள்கை பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தியது. 1950-களின் பிற்பகுதியில், உயர் ஆங்கிலப் பின்னணி இல்லாத குடும்பங்களிலிருந்து வந்த, சிங்கள வழிக் கல்வி கற்ற ஒரு பட்டதாரியையும், தமிழ் வழிக் கல்விகற்ற ஒரு பட்டதாரியையும் கற்பனை செய்துபாருங்கள். பழைய ஒழுங்கின் கீழ், இருவருமே ஆங்கிலத்தை ஒரு தடையாக உணர்ந்திருக்கக்

கூடும். இருவரும் தங்கள் சொந்த மொழிகளில் பணியாற்ற வழிவகுக்கும் ஒரு சீர்திருத்தம், சமூகங்கள் முழுவதும் அரசை ஜனநாயகப்படுத்தியிருக்கக்கூடும். மாறாக,'சிங்களம் மட்டும்' என்றகொள்கை, ஒரு பட்டதாரியின் தாய்மொழி மூல தனத்தின் மதிப்பை மற்றவரின் மதிப்பைவிட அதிகமாக உயர்த்தியது. எனவே, இந்த மறுபங்கீடு உண்மையானதாக இருந்தாலும், சீரற்றதாக இருந்தது. இக்கொள்கை காலனித் துவக் காலப் படிநிலை அமைப்பைத் தகர்த்த அதேவே ளையில், காலனித்துவத்திற்குப் பிந்தைய புதியதொரு பாகு பாட்டுப் படிநிலைக்கான சூழலையும் உருவாக்கியது.

இங்குதான் இனரீதியான போட்டி முக்கியத்துவம் பெற்றது. மிதவாதத்தைக் காட்டிக்கொடுப்பாகச் சித்தரிக்க முடியும் என்பதால், சிங்கள அரசியல் மேட்டுக்குடியினரிடையே நில விய போட்டி, கட்சிகளை மேலும் மேலும் சமரசமற்ற மொழிநி லைப்பாடுகளை ஏற்கத் தூண்டியது என்று டிவோட்டா (2004) வாதிடுகிறார். ஒரு கட்சி 'சிங்களம் மட்டுமே' என்று வாக்குறுதி அளித்தவுடன், அதன் போட்டியாளர்கள் சமமான அல்லது அதைவிட அதிகமான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண் டிய அழுத்தத்தை எதிர்கொண்டனர். எனவே, தேர்தல் போட்டியின் இயக்கவியல், இருமொழி சமரசத்திற்கான வாய்ப்பைக் குறைத்தது. தேசியவாதப் பேச்சுக்கள், சமத்து வத்தை காலனித்துவ நீக்கத்தின் ஒரு மாற்று வடிவமாகத் தோன்றச் செய்யாமல், பெரும்பான்மையினரின் வரலாற்று வெற்றியை நீர்த்துப்போகச் செய்யும் ஒரு சலுகையாகத் தோன்றச் செய்தன.

மதம், பௌத்தமத குருமார்களை அரசியல் ரீதியாக ஒரேமா திரியாக மாற்றாமல், குறியீட்டு ரீதியான முக்கியத்துவத்தை அதிகரித்தது. சில துறவிகள், சிங்கள மொழி, பௌத்தம், வரலாற்று நினைவு, காலனித்துவத்திற்குப் பிந்தைய இறை யாண்மை ஆகியவற்றை இணைக்கும் அமைப்பாளர்களா கவும் கருத்தியல் தொழில் முனைவோராகவும் செயல்பட் டனர். ஆயினும், பௌத்த குருமாரின் சங்கத்தில் பல்வேறு அரசியல் போக்குகள் இருந்தன. மேலும் பிக்குகளை ஒரே மையப்படுத்தப்பட்ட சக்தியாகக் கருதுவது தவறான வழிகாட் டுதலாகும். காலனித்துவத்தால் தடைபட்டதாகக் கருதப்படும் ஒரு தேசிய ஒழுங்கின் மீட்சியுடன் சிங்கள-பௌத்தப் புத்து யிர்ப்பை அடையாளப்படுத்தக்கூடிய பரந்த வரலாற்றுப் புனைவே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அந்தப் புனைவில், பெரும்பான்மையினரின் பண்பாட்டுப் புத்துயிர்ப்பு என்பது எளிதாக ஒரு முந்தைய உரிமை கோரலாக மாறியது.

சிங்கள தேசியவாத உரையாடலில், காலனித்துவ ஆட்சியின் கீழ் தமிழர்கள் அனுபவித்ததாகக் கூறப்படும் சலுகைகளைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாகவே தமிழ் எதிர்ப்பு அடிக்கடி சித்தரிக்கப்பட்டது. இந்த விளக்கம், தொழில்கள் மற்றும் அரசு வேலைகளில் சில பகுதிகளில், குறிப்பாக மிஷனரிச் சமயக் கல்வி மூலம் பயனடைந்த யாழ்ப்பாணத் தமிழர்க ளிடையே காணப்பட்ட தமிழ் பிரதிநிதித்துவத்தை அடிப்படை யாகக் கொண்டது. ஆனால் அது தமிழ் சமூகத்திற்குள் இருந்த வர்க்க, பிராந்திய வேறுபாடுகளைச் சமப்படுத்திய துடன், ஆங்கிலக் கல்வி கற்ற தமிழர்களின் ஒரு பிரிவினரின் நிலைப்பாட்டை ஒட்டுமொத் த தமிழ் பேசுபவர்களின் நலன்க ளுடன் குழப்பியது. தமிழ் விவசாயி, தொழிலாளி அல்லது தாய்மொழி ஆசிரியர் ஆங்கிலத்தின் மூலம் இலங்கையை ஆளவில்லை. எனவே, தமிழர்களின் உரிமைச் சமத்துவத் தைக் காலனித்துவ காலச் சலுகைகளைப் பாதுகாக்கும் முயற்சியாகச் சித்தரிப்பது, ஒரு சக்திவாய்ந்த அரசியல் தவறாகக் கட்டியெழுப்பப்பட்ட விவரிப்பாகவே அமைந்தது.

இடதுசாரிகளின் எதிர்ப்பு முக்கியமானது, ஏனெனில் அது ஒரு மாறுபட்ட காலனித்துவ எதிர்ப்புவாதம் இருந்ததைக் காட்டு கிறது. கொல்வின் ஆர். டி சில்வாவின் புகழ்பெற்ற எச்ச ரிக்கை ஆங்கிலேய ஆதிக்கத்தை ஆதரிக்கவில்லை. அது தேசிய ஒற்றுமைக்கான ஒரு வழியாக சமத்துவத்தை ஆத ரித்தது. இடதுசாரிகளின் நிலைப்பாடும் தந்திரோபாயச் சிக் கல்களிலிருந்து விடுபட்டிருக்கவில்லை. வர்க்க அரசியல், சிங்களப் பண்பாட்டு அவமானத்தின் உணர்ச்சிபூர்வமான தாக்கத்தைக் கையாள்வதில் பெரும்பாலும் சிரமப்பட்டது. ஆயினும்கூட, ஒரு புதிய சுதேசி ஏகபோகத்தை எதிர்க்கும் அதேவேளையில், காலனித்துவ மொழிச் சிறப்புரிமையையும் எதிர்க்க முடியும் என்பதை அது நிரூபித்தது.

பெரும்பான்மையினருக்கு ஆளும் உரிமை உள்ளதா அல் லது பண்பாட்டு ரீதியாக அரசைச் சொந்தமாக்கிக் கொள் ளும் உரிமை உள்ளதா என்பதே மையக் கேள்வியாக இருந் தது. முந்தையது தேர்தல் மக்களாட்சியிலிருந்து பெறப்படு கிறது; பிந்தையதற்கு மிகவும் வலுவான ஒரு கோரிக்கை தேவைப்படுகிறது. ஒரு பன்மை மக்களாட்சி, எண்ணிக்கைப் பெருக்கத்தை வேறுபட்ட குடியுரிமையாக மாற்றாமல், பெரும் பான்மையினர் அரசியல் அதிகாரத்தைச் செலுத்த அனும திக்க வேண்டும். ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து மீள்வ தற்கு சிங்களத்திற்குத் தமிழைத் தாழ்வுநிலையில் வைக்கும் தேவை ஏற்படவில்லை. நிறுவனரீதியாக வெளிப்படையாகத் தெரிந்த அந்த முன்மொழிவு, அரசியல் ரீதியாகக் கடினமாக இருந்தது. ஏனெனில் தனிமொழி அந்தஸ்தின் குறியீட்டு வெற் றியானது காலனித்துவ நீக்கத்தின் பொருளின் ஒரு பகுதி யாகவே மாறியிருந்தது.

1956-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நாடாளுமன்ற விவாதம் மட்டுமே, பெரும்பான்மை ஆட்சியின் கணக்கீடுகளை மாற்றி விடமுடியாது என்ற முடிவுக்கு தமிழ் தலைவர்கள் வலுப்பெற் றனர். அவர்களின் பதில் ஆயுதக் கிளர்ச்சியாக இருக்க வில்லை, மாறாக வன்முறையற்ற அரசியலமைப்பு எதிர்ப்பாக இருந்தது. எனவே, நாடாளுமன்ற எதிர்ப்பிலிருந்து சத்தியாகி ரகத்தை நோக்கிய இந்த இயக்கம், ஒரு ஜனநாயக முரண் பாட்டை அம்பலப்படுத்தும் முயற்சியாக அமைந்தது. ஒரு நிரந்தர சிறுபான்மைக் குழுவின் நிலையை வரையறுக்கும் கேள்விகளில், அக்குழுவை எப்போதும் வாக்கெடுப்பில் தோற்கடிக்க முடியும் என்றால், அதற்கு மற்ற சட்டபூர்வமான அரசியல் அழுத்த வடிவங்கள் தேவைப்பட்டன. இந்த நெருக் கடியின் அடுத்தகட்டம், காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசால் அத்தகைய எதிர்ப்பைப் பாதுகாக்க முடியுமா என்ப தைச் சோதிக்கும்.



meenilankco@thaiveedu.com

சுப்ரமணியம் ஜெயசீலன்

# மனித குலம் எதிர்நோக்கும் பேராபத்து

மதிநுட்பமே இன்றைய மானுட சமூகத்தின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமையப்பெற்றுள்ளது என்றால் அது பிழையாகாது. எனினும், இந்த மதிநுட்பம் ஒட்டுமொத்த மனித இனத்தையும் அழித்து ஒழித்து விடக்கூடிய பேராபத்துகளை தன்னகத்தே தாங்கி நிற்கின்றது என்றால் நம்ப முடிகின்றதா ? ஆம் உண்மையில் தற்பொழுது உலகம் முழுவதும் பேசப்படும் செயற்கை நுண்ணறிவு அசுர வேகத்தில் வளர்ச்சிப் படிகளை எட்டிப்பிடித்து வெற்றிக் கொடிகளை நாட்டியு ள்ளது. எனினும், இந்த அதீத வளர்ச்சியானது ஒட்டுமொத்த மனுக் குலத்தையும் சொற்ப காலத்தில் கூண்டோடு அழித்தொழிக்கக்கூடிய அபாயங்கள் நிறைந்தது என ஆய்வாளர்கள் அச்சம் வெளியி டுகின்றனர்.

நோய்களைக் கண்டறிந்து அதற்கு சிகிச்சை அளிப்பதற்கான நவீன உத்திகள் முதல் எமது அன்றாட வாழ்விற்கு தேவையான பல விடயங்களுக்கு செயற்கை நுண்ணறிவு இன்று இன்றியமையா அம்சமாக மாறி வருகின்றது. இவ்வாறான ஒரு பின்புலத்தில் உயிரி ஆயுதங்களை உருவாக்குதல் ஆபத்தான அழிவை ஏற்படுத்தக் கூடிய இயந்திர சாதனங்களையும் ஆயுதங்களையும் தயாரித்தல் போன்ற ஏதுக்களுக்கும் இந்த செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப் படுவதாகவும் இது குறித்த கட்டுப்பாடுகள் ஒழுங்குபடுத்தல்கள் கிரமமாக இல்லை எனவும் ஆய்வாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். எனவே, இது மனித குலத்திற்கு முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு பெரும் சவால்களையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி உள்ளது. உலகின் முதல் நிலை செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் அண்மைக்காலமாக எதிர்நோக்கிய பல்வேறு பாதுகாப்பு சிக்கல்களும் பேராபத்து விளைவிக்கக்கூடிய முயற்சிகளும் பற்றிய ஓர் ஊடாடாக இந்த பத்தி அமைந்துள்ளது.

மனிதகுலம் அழிவடையக்கூடிய பேராபத்தை எதிர்நோக்கியுள்ளதாக உலகின் முதல் நிலை செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தின் ஆய்வாளர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அந்த்ரோபிக் என்ற உலகின் முதல் நிலை செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தின் ஆய்வாளர் எவான் ஹுபின்கர் (Evan Hubinger) என்பவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். ஒட்டுமொத்த மனித குலத்தையும் செயற்கை நுண்ண றிவு அழித்தொழித்து விடக்கூடிய வாய்ப்புகள் 10 வீதத்தை விட அதிகம் என அவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஒரு தசாப்த காலத்தில் ஒட்டுமொத்த மனித குலமும் அழிவடைந்து போகக்கூடிய மிகப்பெரிய அபாய நிலை காணப்படுவதாக ஆய்வாளர் குறிப்பிடு கின்றார். பிரபல சமூக ஊடகங்களில் ஒன்றான எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை இட்டதன் மூலம் அவர் இந்த விடயத்தை குறிப்பிடுகின்றார்.

உலகில் தற்பொழுது காணப்படக்கூடிய செயற்கை நுண்ணறிவு மாதிரிகளின் ஊடாக இவ்வாறான அபாய நிலைமைகள் கிடையாது என்ற போதிலும் தொழினுட்ப வளர்ச்சியின் அபரிமித வேகம் மிக விரைவில் மனித குலத்தை இல்லாது ஒழித்து விடக்கூடிய அபாயத்தை



ஏற்படுத்தியுள்ளது என அவர் எச்சரிக்கின்றார். செயற்கை நுண்ணறிவு காரணமாக எதிர்காலத்தில் மனித குலம் எவ்வாறு அழிக்கப்படும் என்பது பற்றிய மேலதிக விபரங் களை அவர் வெளியிடவில்லை.

ஓப்பன் ஏஐ (Open AI) மற்றும் அந்த்ரோபிக் (Anthropic) ஆகிய நிறுவனங்களில் ஆய்வாளராக கடமையாற்றிய ஜேக்காப் ஆக்சன் (Jacob Coxon) என்ற மற்றுமொரு ஆய் வாளரும் தனது எக்ஸ் தளத்தில் 'இந்த பிரதான இரண்டு நிறுவனங்களும் பொறுப்புடன் செயற்படுவதில்லை' என அவர் பதிவிட்டு ஆய்வாளர் ஹூபின்கர் வெளியிட்ட பதி விற்கு பதில் அளிக்கும் வகையிலான பதிவினை இட்டிரு ந்தார்.

செயற்கை நுண்ணறிவானது சூப்பர் ஹியுமன்கள் (Super Human) அல்லது அதீத சக்தி கொண்ட மனித பொறி முறைகளை உருவாக்கி வருவதாகவும் எந்த ஒரு விடயத் தையும் கற்று, உணர்ந்து புரட்சிகரமான விடயங்களை ஒரே இரவில் மேற் கொண்டு அதிகாரத்தையும் வளங்க ளையும் கைப்பற்றக் கூடிய திறனை உடையவை என குறிப்பி டுகின்றார்.

இதேவேளை, ஹூபின்கர் மற்றும் ஆக்சன் ஆகியோரின் சமூக ஊடக பதி வுகள் அதிர்ச்சி அளிப்பதாக செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆய்வு ஆலோசனை விஞ் ஞானி டேம் வென்டி ஹால் (Dame Wendy Hall) கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த சில கருத்துகள் தங்களைப் பிரபல்யப்படுத்திக் கொள்வதற்கோ அல்லது சந்தைப்படுத்தல் நோக்கங் களுக்காகவோ இந்தக் கருத்துகள் அமைந்திருக்கக்கூடும் என வென்டி ஹால் ஊகம் வெளியிட்டார். எனினும், ஓப்பன் ஏஜ மற்றும் அந்த்ரோபிக் ஆகிய நிறுவனங்கள் பங்குச்சந்தையில் முக்கிய நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றன குறித்த நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டாம் என உங்கள் முதலீடுகள் பயனற்றவை எனவும் கூறுவதற்கான முனைப்பாகவும் இந்த கருத்துகளை நோக்க முடியும் என அவர் குறிப்பிடுகின்றார்.

செயற்கை நுண்ணறிவு அபிவிருத்தி பாதுகாப்பானதாக அமைய வேண்டும் என்பதற்காக புதிய பல்நாட்டு ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டும் என பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் கியர் ஸ்ட்ராமரின் பிரதம செயலாளரும், திறை சேரியன் முன்னாள் செயலாளருமான டெரன் ஜோன்ஸ் (Darren Jones) தற்போதைய பிரதமர் அன்டி புர்ன்ஹாமிற்கு (Andy Burnham) திறந்த மடல் ஒன்றை எழுதியுள்ளார்.

அதீத நுண்ணறிவுத் திறன் மேம்பாடுகள் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது குறித்து உலக நாடுகள் ஒன்றிணைந்து கலந்தாலோசனை செய்து ஓர் உடன்பாட்டை எட்ட வேண்டும் எனவும் அதற்கான உடன்படிக்கை தயாரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தும் வகையில் தனது கடிதத்தில் விடயங்களை சுட்டிக்காட்டி உள்ளார். உலக நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள் இந்த விவகார த்தில் கவனம் செலுத்த தவறினால் பாரதூரமான விளை வுகளை சந்திக்க நேரிடலாம் என அவர் எச்சரிக்கின்றார்.

உலகின் முன்னணி செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு நிறுவனங்களில் ஒன்றான பிரித்தானியாவின் செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு நிறுவகத்திடம் (AISI), அந்த்ரோபிக் நிறுவனம் தனது அண்மைய செயற்கை நுண்ணறிவு மாதிரி பற்றிய பூரண தகவல்களை வழங்கவில்லை என பிரபல ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. எனினும், இந்த தகவல் தொடர்பில் அந்த்ரோபிக் நிறுவனம் எவ்வித கருத்துகளையும் அதிகாரபூர்வமாக இதுவரையில் வெளியிட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> “அண்மைய நாட்களில் சில செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் தன்னிச்சையாக செயற்படக்கூடிய திறன் கொண்ட முகவர்கள் அல்லது செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள் இணைய வழி தாக்குதல்களை மேற்கொண்டதாக கண்டறியப்பட்டுள்ளது. மனித மாண்புகளுக்கு முரணான வகையில் இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.”

செயற்கை நுண்ணறிவு மனித இனத்தின் அழிவிற்கு வழிவகுக்கும் பேராபத்தை ஏற்படுத்துகின்றது என மெய்யாகவே நம்புகின்றோம் என ஹூபின்கர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்த பதிவு சுமார் பத்து மில்லியனுக்கும் மேற்பட்டவர் களினால் பார்க்கப்பட்டுள்ளது. 'நிறுவனம் முடிந்த அளவு சிறப்பாக செயற்பட முயற்சிக்கின்றது என நம்புவதாக' அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், மிகை நுண்ணறிவு (super intelligence) கொண்ட செயற்கை நுண்ணறிவு மாதிரியை மனிதர்களின் நோக்கங் களுக்கும் பெறுமதிகளுக்கும் ஒத்திசைவாகச் செயற்பட செய்வதற்கான முனைப்பு களுக்கு சரியான தீர்வுகள் இதுவரையில் இல்லை, அவ்வாறு இயைபொத்துப் போகச் செல்வதற்கான முனைப்புக்கள் சரியான பாதையில் நகர்கின்றதா என்பதனை உறுதிப்படுத்தவும் தம்மால் முடியாது என கூறுகின்றார்.

ஹூபின்கர், செயற்கை நுண்ணறிவு ஒத்திசைவு துறையில் பணியாற்று கின்றார். செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தில் மனித மாண்புகளையும் நெறிமுறைகளையும் கொள்கைகளையும் பெறுமதிகளையும் ஒரு துறையாக, இந்த செயற்கை நுண் ணறிவு ஒழுங்குபடுத்தல் துறை அமைகின்றது. அதாவது, மனிதர்கள் மதிக்கக்கூடிய விடயங்களுக்கு ஏற்ப செயற்கை நுண்ணறிவை செயற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட ஒரு துறையாகும். எனினும், இந்த துறை பெரும் வெற்றியை இதுவரையில் எட்டவில்லை எனத் துறைசார் ஆய்வாளர்கள் தங்கள் கரிசனைகளை வெளியிட்டுள்ளனர். அண்மைய நாட்களில் சில செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் தன்னிச் சையாக செயற்படக்கூடிய திறன் கொண்ட முகவர்கள் அல்லது செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள் இணைய வழி தாக்குதல்களை மேற்கொண்டதாக கண்டறியப் பட்டுள்ளது. மனித மாண்புகளுக்கு முரணான வகையில்

இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, கடந்த ஓகஸ்ட் மாதம் அந்த்ரோபிக் நிறுவனம் வெளியிட்ட தனது பாதுகாப்பு அறிக்கையில் சில முக்கிய விடயங்கள் பற்றி தகவல்களை வெளியிட்டிருந்தது. தங்களது செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் ஏனைய கணினி கட்டமைப்புகளுடன் முரண்பட்டு தாக்குதல் நடத்தவோ அல்லது அவற்றில் தலையீடு செய்யவோ கூடிய அபாயங்கள் குறைவாக காணப்படுவதாக தெரிவித்துள்ளது. மேலும், செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள் தாமாகவே சுய ஆய்வுகளை மேற்கொண்டு புதிய கட்டமைப்புகளை உருவாக்கக்கூடிய அபாயமும் குறைவாக காணப்படுகிறது என அந்த்ரோபிக் நிறுவனம் அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது. எனினும், கடந்தகால மதிப்பாய்வுகளை விடவும் தற்பொழுது இந்த தலையீடுகள் தொடர்பில் குறைந்த நம்பிக்கையே உண்டு என அந்த்ரோபிக் நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் பல பிரபலங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே எச்சரிக்கை விடுத்திருந்தனர். கடந்த 2023-ஆம் ஆண்டில் ஓபன் ஏஐ, கூகுள், டீப் மைண்ட் மற்றும் அந்த்ரோபிக் நிறுவனங்களின் தலைவர்கள் இந்த அபாயம் குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தனர். செயற்கை நுண்ணறிவு நிறுவனங்கள் அவற்றை கட்டுப்படுத்துவதில் சில அசௌகரியங்களை எதிர்நோக்குவதனையே இந்த எச்சரிக்கை வெளிப்படுத்துகின்றது.

கடந்த சில வாரங்களாகவே செயற்கை நுண்ணறிவின் ஆபத்து தொடர்பான எச்சரிக்கை அறிக்கைகள் அதிக அளவில் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. செயற்கை நுண்ணறிவின் முன்னேற்றம் மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதாக ஓபன் ஏஐ நிறுவனத்தின் தலைமை விஞ்ஞான ஆய்வாளர் ஜாகொப் பசோகி (Jakub Pachocki) தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தைக் கட்டுப்படுத்தும் திறன் மனிதர்களிடையே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்கு செயற்கை நுண்ணறிவு விவகாரத்தில் கூடுதல் தலையீடு செய்ய வேண்டும் என அவர் எச்சரிக்கின்றார்.

அண்மையில் செயற்கை நுண்ணறிவுத் துறையில் பணியாற்றி வரும் சுமார் 1300 பணியாளர்கள் உலக அரசாங்கங்களுக்கு திறந்த மடல் ஒன்றை எழுதியிருந்தனர். இதில், தானியங்கி செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி வேகத்தை திட்டமிட்டு கட்டுப்படுத்துவதற்கு தேவையான தொழினுட்ப மற்றும் நிர்வாக கருவிகளை உருவாக்க வேண்டிய அவசியம் இருந்துள்ளது என வலியுறுத்தியிருந்தனர்.

அந்த்ரோபிக் நிறுவனம் உயிரி ஆயுதங்களை தயாரிப்பதற்கு உதவக்கூடிய தீங்கான செயற்பாடுகளுக்கு தனது செயற்கை நுண்ணறிவு மாதிரி பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியை அடையாளம் கண்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ்வாறு, உயிரி ஆயுத தயாரிப்பிற்கு தனது செயற்கை நுண்ணறிவு மாதிரி பயன்படுத்தப்பட்டதை அடையாளம் கண்டதுடன் அதனை தடுத்து நிறுத்தியதாகவும் நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு அச்சுறுத்தல் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித இனத்திற்கு செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தினால் ஏற்படுத்தப்படக்கூடிய அபாயங்கள் தொடர்பில் ஆய்வாளர்கள் துறைசார் நிபுணர்கள் தொடர்ச்சியாக எச்சரிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான ஒரு பின்னணியில் அந்த்ரோபிக் நிறுவனம் இந்த பேரதிர்ச்சி தரக்கூடிய தகவலை வெளியிட்டுள்ளது.

> “ அந்த்ரோபிக் நிறுவனம் உயிரி ஆயுதங்களை தயாரிப்பதற்கு உதவக்கூடிய தீங்கான செயற்பாடுகளுக்கு தனது செயற்கை நுண்ணறிவு மாதிரி பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியை அடையாளம் கண்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ்வாறு, உயிரி ஆயுத தயாரிப்பிற்கு தனது செயற்கை நுண்ணறிவு மாதிரி பயன்படுத்தப்பட்டதை அடையாளம் கண்டதுடன் அதனை தடுத்து நிறுத்தியதாகவும் நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. ”

உலகின் பல நாடுகளில் செயற்கை நுண்ணறிவின் அபரிமிதமான வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் எனவும் அரசியல் உயர்மட்டத்தில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருவதனை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. மிகை நுண்ணறிவு தடை செய்யப்பட வேண்டும் என அமெரிக்க சட்டசபை உறுப்பினர் செனட்டர் பெர்னி சான்ட்ரெஸ் (Bernie Sanders) கூறியுள்ளார். எனினும், இவ்வாறான செயற்கை நுண்ணறிவு ஆபத்துக்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நிராகரித்து வருவதுடன் செயற்கை நுண்ணறிவு துறையில் முன்னேற்றம் காண தவறினால் அமெரிக்கா உலக அரங்கில் பின்தள்ளப்படும் என்ற கரிசனையையும் வெளியிட்டுள்ளார்.

அந்த்ரோபிக் நிறுவனம் உள்ளிட்ட பல செயற்கை நுண்ணறிவு நிறுவனங்கள் அண்மைக்காலமாக இவ்வாறான ஆபத்தான செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு தகவல்களையும் எச்சரிக்கைகளையும் வெளியிட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. தொடர்ச்சியான கண்காணிப்பு மூலம் இவ்வாறான பேராபத்துக்களை கண்டறிந்து தடுக்க முடிவதாக முதனிலை தொழினுட்ப நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

அந்த்ரோபிக் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு மாதிரியான கிளவுட்டை இணைய குற்றச் செயல்களில் ஈடுபடும் சில சட்டவிரோத கும்பல்கள் தவறாக பயன்படுத்தியதாகவும் ஈரானிய பிரசார அமைப்பு ஒன்றும் தவறான முறையில் பயன்படுத்தியதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையில் செயற்கை நுண்ணறிவு துறையில் பதிவான

பல்வேறு ஆபத்துக்கள் தொடர்பில் வெளியான அறிக்கை பெரும் அதிர்ச்சி அளிக்கும் வகையிலேயே காணப் படுகின்றது.

டேட்டிங் செயலிகள் ஹோட்டல் மோசடிகள் அரசாங்க த்திற்கு எதிரான மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரை கண்காணித்தல் என பல்வேறு விடயங்களுக்கு இந்த செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுவதனை அப் பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

அந்த்ரோபிக் நிறுவனத்தின் கிளவுட் செயற்கை நுண்ணறிவு மாதிரியின் முக்கிய அம்சங்களைச் சட்ட விரோதமான முறையில் பிரதி எடுப்பதற்கு சில சீன நிறுவனங்கள் முயற்சித்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. குற்றக் கும்பல்கள் உளவு தேவைகளுக்காக கிளவுட் மென்பொருட் களைத் தயாரிக்கும் தரப்புகள், அரசாங்கத் பிரசாரங்களில் ஈடுபடும் நிறுவனங்கள் குற்றச் செயல்களில் ஈடுபடும் நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் திட்டமிட்ட அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் தரப்புகள் இந்த செயற்கை நுண்ணறி தொழினுட்பத்தை பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு மனிதருக்கு தீங்கு இழைக்கக்கூடிய பல்வேறு முயற்சிகள் கண்டறியப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டதாக அந்த நிறுவனம் தெரிவிக்கின்றது. உயிரி தொழினுட்பத்தை தவறாக பயன்படுத்தி ஆபத்துக் களை ஏற்படுத்துவது முன்னணி செயற்கை நுண்ணறிவு அமைப்புக்களினால், உலகிற்கு ஏற்படக்கூடிய பேராபத்து என அந்த்ரோபிக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உயிரி பாதுகாப்பு வழிமுறைகள் கொள்கைகள் பின்பற்றப்படாவிட்டால் முதல்நிலை செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை கொண்டு அவற்றின் அபரிமிதமான திறன்களை பயன்படுத்தி ஒட்டுமொத்த உலகிற்கும் பேரழிவையும் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்த முடியும் என அந்த்ரோபிக் நிறுவனம் கடுமையான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த உலகத்தை அழிக்கக்கூடிய உயிரி ஆயுதம் ஒன்றை தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய தகவல்களை மிக பாரதூரமான நோய் ஒன்றைக் காண சிகிச்சை முறைமை க்காகவோ அல்லது தடுப்பூசி ஒன்றை கண்டுபிடிப் பதற்காகவோ பயன்படுத்த முடியும் என இந்த நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றது. எனவே, செயற்கை நுண்ணறிவு தொழினுட்பம் மேம்படும் நிலைமையானது பேராபத்தாகவும் மனித குலத்தின் வெற்றிக்கான ஓர் வரமாகவும் பார்க்க வேண்டி இருப்பதாக துறை சார் நிபுணர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு துறையின் முன்னணி மாதிரிகளை கொண்டு ஆயுதங்கள், குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் ட்ரோன்கள் போன்றவற்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் தொடர்பான ஆதாரங்களும் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

இணைய வழியில் ஹாக்கிங் செய்தும் குற்றக் கும்பல்களும் சில அரசாங்கங்களும் இந்த செயற்கை நுண்ணறிவு தொழி னுட்பத்தை தீங்கிழைக்கும் வகையில் பயன்படுத்துகின்றனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட அந்த்ரோபிக் நிறுவனம் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் கண்டறியப்பட்ட இந்த தகவல்களைக் கொண்டு எதிர்காலத்தில் ஆபத்துக்களை கட்டுப்படுத்தவும் சிறந்த முறையில் செயற்கை நுண்ணறிவுத் துறையை மேம் படுத்தவும் உதவும் என தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் துல்லியமாக கண்டறிந்து அவற்றைத் தடுக்கக்கூடிய வலுவான கண்காணிப்பு கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்படும் வரையில் முதல்நிலை நிறுவனங்களும் ஏனைய சிறு நிறுவனங்களும் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழினுட்ப முன்னேற்றங்களைத் தன்னார்வ அடிப்படையில் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை கையாளுதல் தொடர்பில் உலக நாடுகள் மத்தியில் ஓர் ஒழுங்குபடுத்த கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் தன்னிச் சையாக இந்த தொழினுட்பத்தை பயன்படுத்தி ஏற்படுத்தக் கூடிய பேராபத்துக்களைத் தவிர்க்க கண்காணிப்பு மற்றும் தடுப்பு கட்டமைப்புகள் அத்தியாவசியமானது எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகின் பல நாடுகள் இந்த செயற்கை நுண்ணறிவின் அசுர வளர்ச்சியினால் ஏற்படக்கூடிய தீங்குகள் தொடர்பில் வாதப் பிரதிவாதங்களை முன்வைக்கின்றன. எனினும், உலக அளவில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, மானுட மாண்புகளுக்கும் தாற்பரியங்களுக்கும் உட்பட்ட ஒரு கட்டமைப்பாக இருக்க வேண்டுமே தவிர எந்த நேரத்திலும் மனிதரின் கட்டுப்பாட்டை விஞ்சிய ஒரு கடிவாளமற்ற தொழினுட்பமாக மாறிவிடக்கூடாது. அவ்வாறான கட்டுப் பாட்டை மீறிய நிலைமை மனித குலத்திற்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்த பூமிப்பந்திற்கும் சொல்ல முடியாத துன்பியில் அனுபவங்களைத் தரக்கூடும் அல்லது அழிவு களை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.



jeyaseelan.s@thaiveedu.com




# காற்பந்தாட்டமும் சில வீரர்களும்

**குரு அரவிந்தன்**

சர்வதேசக் காற்பந்தாட்டத் தொடரில் இம்முறை உலகளவில் தடம் பதித்த சில பிரதான வீரர்களின் சாதனைகள் மற்றும் விளையாட்டு வாழ்க்கை குறித்து இங்கு சுருக்கமாகப் பதிவு செய்யப்படுகின்றது. உலகப் புகழ்பெற்ற வீரர்கள் பலர் வாழும் இவ்விளையாட்டில், பக்க எல்லைகளைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட சில முக்கிய வீரர்கள் மட்டும் இங்கு அடையாளப்படுத்தப்படுகின்றனர். அச்சாதனையாளர்களைப் பற்றி நோக்குவதற்கு முன்பாக, காற்பந்தாட்ட விளையாட்டின் சில அடிப்படை அம்சம் சார்ந்த தகவல்களைச் சுருக்கமாகப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

விளையாட்டை வெறும் விளையாட்டு என்று எடுத்துக்கொள்ளாமல், அதில் நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பல வாழ்வியல் விடயங்களும் அடங்கியிருக்கின்றன. ஒழுக்கம், நேர்மையான ஆட்டம், கவனச்சிதறல்களுக்கு மத்தியிலும் கவனம் செலுத்தும் திறன், தோல்வியிலிருந்து மீண்டு வரும் மனவுறுதி, சவாலான மனிதர்களுடனும் ஒத்துழைத்து இயங்கும் திறன், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல், விதிகளுக்கு அமைய நடந்து கொள்ளும் பண்பாடு, ரசிகர்கள் மத்தியில் உங்களை ஒரு குறிப்பிட்ட தரத்திற்கு உட்படுத்திக் கொள்ளும் திறன் மற்றும் உடலாரோக்கியம் ஆகியவை இதில் முக்கியமாக அடங்குகின்றன.

இதைவிட இத்துறையில் முன்னேற வேண்டுமானால் தொடர்ச்சியான, ஈடுபாட்டுடன் கூடிய பங்கேற்பே முக்கியமானது. வாழ்க்கையைப் போலவே, விளையாட்டிலும் செயற்றிறன் ஒருபோதும் நேர்கோடாக இருப்பதில்லை. அதில் ஏற்றங்களும் இறக்கங்களும் இருக்கும், அவற்றை நம்பிக்கையுடனும் நிதானத்துடனும் மனவுறுதியுடனும் கடந்து செல்லக் கற்றுக்கொள்வது உங்களை மற்றவர்களிடமிருந்து தனித்துக் காட்டும். விளையாட்டில் உங்களுக்குக் கிடைக்கும் அனுபவங்கள் முக்கியமாக நேர்மை, பொறுமை, நிதானம் போன்ற பண்புகள் உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டி என்பதை நீங்களும் ஒருநாள் புரிந்து கொள்வீர்கள். இதையெல்லாம் அடைவதற்குக் கடின உழைப்புத் தேவை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

தங்களிடம் உள்ள தனித்துவமான திறமையாலும் தொடர் முயற்சியாலும் சர்வதேசக் காற்பந்து அரங்கில் வெற்றிகளைப் பதிவுசெய்த வீரர்கள் பலர் உள்ளபோதிலும், அவர்களுள் குறிப்பிட்ட சில வீரர்களின் விளையாட்டு வாழ்க்கை மட்டுமே இங்கு பதிவு செய்யப்படுகின்றது. மேலும், இங்கு இடம்பெற்றுள்ள வீரர்களின் பெயர்கள் தரவரிசை அல்லது காலவரிசை சார்ந்த எந்தவொரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையின் அடிப்படையிலும் வரிசைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கிறிஸ்டியானோ ரொனால்டோ (Cristiano Ronaldo):

கிறிஸ்டியானோ ரொனால்டோ வரலாற்றின் மிகச்சிறந்த காற்பந்து வீரர்களில் ஒருவர். அவர் 1985-ஆம் ஆண்டு பெப்பிரவரி 5-ஆம் தேதி, போர்ச்சுக்கலின் மதீரா தீவில் பிறந்தார். சிறு வயதிலேயே பெரும் திறமையை வெளிப்படுத்திய அவர்,

பின்னர் ஸ்போர்டிங் சிபி அணியில் சேர்ந்தார். அங்கு அவரது திறமையும் வேகமும் சர்வதேச கவனத்தை ஈர்த்தன.

2003-ஆம் ஆண்டில், ரொனால்டோ மான்செஸ்டர் யுனைடெட் அணியில் இணைந்து, உலகின் சிறந்த இளம் வீரர்களில் ஒருவரானார். அவர் அந்த அணியுடன் பிரீமியர் லீக் மற்றும் யுஇஎஃப்ஏ சாம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட முக்கிய கோப்பைகளை வென்றார். 2009-ஆம் ஆண்டில், அவர் ரியல் மாட்ரிட் அணிக்கு மாறினார். அங்கு அவர் அந்த அணியின் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரரானார் மற்றும் பல சாம்பியன்ஸ் லீக் பட்டங்களையும் வென்றார். பின்னர் ரொனால்டோ யுவென்டஸ் அணிக்காக விளையாடி, மான்செஸ்டர் யுனைடெட் அணிக்குத் திரும்பினார். அதன் பிறகு சவுதி அரேபியாவில் உள்ள அல் நஸ்ர் அணியில் இணைந்தார். போர்ச்சுகல் அணிக்காக, அவர் யுஇஎஃப்ஏ யூரோ 2016 மற்றும் 2019 யுஇஎஃப்ஏ நேசன்ஸ் லீக் கோப்பைகளை வெல்ல உதவினார்.

களத்தில் காட்டும் வேகம், தலையால் முட்டி கோல் அடிக்கும் நுட்பம், வேகம், தொழில்முறை ஒழுக்கம் மற்றும் கோல் அடிக்கும் தனித்துவமான திறமை ஆகியவற்றால் புகழ் பெற்ற ரொனால்டோ, காற்பந்து வரலாற்றின் மிக வெற்றிகரமான மற்றும் செல்வாக்குமிக்க வீரர்களில் ஒருவராக ரொனால்டோ திகழ்கின்றார்.

## ஹாரி எட்வர்ட் கேன் (Harry Kane):

ஹாரி கேன் இங்கிலாந்தின் தலைசிறந்த காற்பந்து வீரர்களில் ஒருவர். அவர் 1993-ஆம் ஆண்டு ஜூலை 28-ஆம் திகதி இங்கிலாந்தின் லண்டனில் பிறந்தார். கேன் தனது காற்பந்து வாழ்க்கையை டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் இளைஞர் அமைப்பில் தொடங்கினார். பின்னர் அந்த கிளப்பின் மிக முக்கியமான வீரர்களில் ஒருவரானார்.

டோட்டன்ஹாம் அணியில் விளையாடிய காலத்தில், பந்தை வலிமையாகவும் துல்லியமாகவும் உதைக்கும் திறன், பந்தைச் சீராகக் கடத்தும் ஆட்டப் பார்வை மற்றும் தலைமைத்துவத்திற்காகப் புகழ் பெற்றார். அக்கழகத்தின் வரலாற்றில் அதிக கோல்களைப் பதிவு செய்த வீரராகவும், இங்கிலீஷ் பிரீமியர் லீக் வரலாற்றில் அதிக கோல்களை அடித்த முன்னணி வீரர்களில் ஒருவராகவும் இவர் சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்து தேசிய அணியின் தலைவராகப் பொறுப்பேற்ற கேன், 2018 ஃபிஃபா உலகக் கோப்பையின் அரையிறுதிக்கும், யுஇஎஃப்ஏ யூரோ 2020 மற்றும் யூரோ 2024 தொடர்களின் இறுதிப் போட்டிகளுக்கும் அணியை வழிநடத்தினார். இங்கிலாந்து தேசிய அணியின் வரலாற்றில் அதிக கோல்களை அடித்த வீரர் என்ற பெருமையும் இவருக்குரியதே.

2023-ஆம் ஆண்டில் ஜேர்மனியின் பேயர்ன் முனிச் கழகத்தில் இணைந்த இவர், தொடர்ந்து பல கோல்களை அடித்து தனது தலைமுறையின் சிறந்த ஸ்ட்ரைக்கர்களில் ஒருவராகத் தன்னை நிரூபித்தார். 2026 உலகக் கோப்பை தொடரில் 6 கோல்களை அடித்திருந்தார்.

## ஏர்லிங் பிராட் ஹாலண்ட் (Erling Haaland):

எர்லிங் பிராட் ஹாலண்ட், உலகின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் வெற்றிகரமான காற்பந்து முன்கள வீரர்களில் ஒருவர். அவர் ஜூலை 21, 2000 அன்று இங்கிலாந்தின் லீட்ஸ் நகரில் பிறந்தார். அக்காலப்பகுதியில் அவரது தந்தை ஆல்ஃபி ஹாலண்ட் அங்கு காற்பந்து விளையாடிக் கொண்டிருந்தார். அவர் நோர்வேயில் வளர்ந்து, பிரைன் எஃப்கே அணியுடன் தனது (Bryne FK) காற்பந்து பயணத்தைத் தொடங்கினார்.

நோர்வேயில் உள்ள மோல்டே (Molde) அணிக்காகவும் பின்னர் ஆஸ்திரியாவில் உள்ள ரெட் புல் சால்ஸ்பர்க் (Red Bull Salzburg) அணிக்காகவும் விளையாடிய பிறகு ஹாலண்ட் நன்கு அறியப்பட்டார். அங்கு அவர் UEFA சாம்பியன்ஸ் லீக்கில் பல கோல்களை அடித்தார். 2020-இல் அவர் ஜேர்மனியில் உள்ள போருசியா டார்ட்மண்ட் (Borussia Dortmund) அணியில் சேர்ந்தார். அங்கு தனது வேகம், வலிமை மற்றும் அபாரமான கோல் அடிக்கும் திறனுக்காகப் புகழ் பெற்றார்.

2022-ஆம் ஆண்டு, ஹாலண்ட் மான்செஸ்டர் சிற்றி அணிக்கு மாறினார். தனது முதல் பருவத்தில் பிரீமியர் லீக், எஃப்ஏ கோப்பை மற்றும் யுஇஎஃப்ஏ சாம்பியன்ஸ் லீக் ஆகியவற்றை வெல்ல அந்த அணிக்கு உதவினார். மேலும், ஒரே பருவத்தில் அதிக கோல்கள் அடித்த பிரீமியர் லீக் சாதனையையும் அவர் முறியடித்தார்.

நோர்வேயைப் பொறுத்தவரை, ஹாலண்ட் அந்நாட்டின் மிகப்பெரிய காற்பந்து நட்சத்திரமாக உருவெடுத்துள்ளார். தனது உயரம், வலிமை மற்றும் கோல் அடிக்கும் உள்ளுணர்வுக்காக அறியப்படும் அவர், தன் தலைமுறையின் சிறந்த முன்கள வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். 2026 உலகக் கோப்பை தொடரில் 7 கோல்களை அடித்திருந்தார்.

## கிலியன் எம்பாப்பே லோட்டின் (Kylian Mbapp´)

எம்பாப்பே லோட்டின், அவரது தலைமுறையின் மிகவும் பிரபலமான காற்பந்து வீரர்களில் ஒருவர். அவர் டிசம்பர் 20, 1998 அன்று பிரான்சின் பாரிஸ் நகரில் பிறந்தார். வலுவான காற்பந்து கலாசாரத்திற்குப் பெயர் பெற்ற புறநகர்ப் பகுதியான பாண்டியில் அவர் வளர்ந்தார். அவரது தந்தை ஒரு காற்பந்து பயிற்சியாளராகவும் அவரது தாய் ஒரு முன்னாள் கைப்பந்து வீராங்கனையாகவும் இருந்ததால் சிறு வயதிலிருந்தே விளையாட்டு அவரது வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருந்தது.

எம்பாப்பே தனது தொழில்முறை வாழ்க்கையை ஏ.எஸ். மொனாக்கோ அணியில் தொடங்கினார். அங்கு அவரது வேகம் திறமை மற்றும் கோல் அடிக்கும் திறன் ஆகியவை அவரை விரைவாக ஒரு வளர்ந்து வரும் நட்சத்திரமாக மாற்றின. 2017-ஆம் ஆண்டு அவர் பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் அணியில் சேர்ந்தார். அங்கு அவர் அந்த அணியின் மிக முக்கியமான வீரர்களில் ஒருவரானார். பல பிரெஞ்சு லீக்

பட்டங்களை வென்றதுடன் பி.எஸ்.ஜி-யின் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

பிரான்ஸ் அணிக்காக 2018 ஃபிஃபா உலகக் கோப்பையில் எம்பாப்பே ஒரு உலகளாவிய நட்சத்திரமாக உருவெடுத் தார். அங்கு அவர் பிரான்ஸ் அணி கோப்பையை வெல்ல உதவியதுடன், உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் கோல் அடித்த பீலேவுக்குப் பிறகு முதல் இளம் வீரர் என்ற பெருமையையும் பெற்றார். 2022 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், அர்ஜென்டினாவுக்கு எதிராக ஹாட்ரிக் கோல் அடித்த அவர், தொடரின் அதிக கோல் அடித்த வீரருக்கான தங்கப் பூட் விருதை வென்றார். அத்துடன், 2026 ஃபிஃபா உலகக் கோப்பைத் தொடரிலும் 10 கோல்களைப் பதிவு செய்து, மீண்டும் இத்தொடரின் அதிக கோல் அடித்த வீரருக் கான 'தங்கப் பாதணி' விருதைத் தனதாக்கிக் கொண்டார்.

தனது வேகம், தன்னம்பிக்கை மற்றும் கோல் அடிக்கும் திறனுக்காக அறியப்படும் எம்பாப்பே, காற்பந்தின் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவராகவும் அவ்விளையாட்டின் எதிர் காலத்தில் ஒரு முக்கிய நபராகவும் கருதப்படுகிறார்.

### லியோனல் மெஸ்ஸி (Lionel Messi):

லியோனல் மெஸ்ஸி, வரலாற்றின் மிகச்சிறந்த காற்பந்து வீரர்களில் ஒருவராகப் பரவலாகக் கருதப்படுகிறார். அவர் 1987-ஆம் ஆண்டு ஜூன் 24-ஆம் திகதி அர்ஜென்டினாவின் ரொசாரியோவில் பிறந்தார். சிறு வயதிலேயே மெஸ்ஸி அசா தாரணத் திறமையை வெளிப்படுத்தினார். தனது 13-வது வயதில், அவர் ஸ்பெயினுக்குச் சென்று எஃப்சி பார்சிலோனா வின் இளைஞர் பயிற்சி மையமான லா மாசியாவில் சேர்ந்தார்.

மெஸ்ஸி 2004-ஆம் ஆண்டில் பார்சிலோனா அணிக்காக தனது முதல் அணியில் அறிமுகமானார். அடுத்த 17 ஆண்டு களில். அவர் அந்த கிளப்பின் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரரானார். மேலும், லா லிகா பட்டங்கள், யுஇஃப்ஏ சாம்பியன்ஸ் லீக் பட்டங்கள் மற்றும் உள்ளூர் கோப்பைகள் உட்பட பல முக்கிய கோப்பைகளை பார்சிலோனா வெல்ல உதவினார். தனது பந்தை இலாவகமாகக் கையாளுதல், தொலைநோக்குப் பார்வை, பந்து பரிமாற்றம் மற்றும் கோல் அடிக்கும் திறனுக்காக அறியப்பட்ட மெஸ்ஸி, உலகின் சிறந்த காற்பந்து வீரருக்கு வழங்கப்படும் ‘பலோன் டிசஓர்’ விருதுகளை வென்றார்.

2021-ஆம் ஆண்டில், மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு விலகி பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் அணியில் சேர்ந்தார். 2022-ஆம் ஆண்டு, கத்தாரில் நடைபெற்ற FIFA உலகக் கோப்பையில் அர்ஜென்டினாவை வெற்றிக்கு வழிநடத்தி, மிகப்பெரிய பரிசை அவர் அடைந்தார். மேலும், 2021 மற்றும் 2024-இல் கோபா அமெரிக்கா கோப்பையை வெல்லவும் அர்ஜென்டினாவுக்கு அவர் உதவினார். 2023-ஆம் ஆண்டு, மெஸ்ஸி அமெரிக்காவில் உள்ள இன்டர் மியாமி அணியில் இணைந்தார். இது மேஜர் லீக் சொக்கருக்கு மிகப்பெரிய உலகளாவிய கவனத்தை ஈர்த்தது. 2026 உலகக் கோப்பை தொடரில் 8 கோல்களை அடித்திருந்தார்.

மெஸ்ஸியின் தொழில்முறை வாழ்க்கையானது, அவர் படைத்த சாதனைகள் மற்றும் வென்றெடுத்த கோப்பைகளுக்காக மட் டுமன்றி, அவரது விசுவாசம், பணிவு, ஆட்டப் படைப்பாற்றல் (Playmaking creativity) மற்றும் உலகக் காற்பந்தாட்டத்தில் அவர் ஏற்படுத்திய நீடித்த தாக்கத்திற்காகவும் நினைவு கூரப்படுகின்றது.

### உஸ்மான் டெம்பலே (Ousmane Dembele):

உஸ்மான் டெம்பலே 1997-ஆம் ஆண்டு மே 15-ஆம் திகதி பிரான்சின் வெர்னான் நகரில் பிறந்தார். அவர் தனது தொழில் முறை வாழ்க்கையை ரென்னஸ் அணியில் தொடங்கினார். பின்னர் 2016-இல் போருசியா டார்ட்மண்ட் அணியில் சேர்ந் தார். அங்கு அவரது வேகம், பந்தை இலாவகமாகக் கையா ளும் திறன் மற்றும் இரு கால்களாலும் விளையாடும் ஆற்றல் ஆகியவை சர்வதேச கவனத்தை ஈர்த்தன.

2017-ஆம் ஆண்டு டெம்பலே எஃப்சி பார்சிலோனா அணிக்கு மாறினார். அங்கு காயங்களால் அவதிப்பட்ட போதிலும் பல உள்நாட்டு கோப்பைகளை வெல்ல உதவினார். அவர் 2023-இல் பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் அணியில் சேர்ந்தார். பின்னர் அந்த அணியின் முன்னணி தாக்குதல் வீரர்களில் ஒருவரானார். அவரது சிறப்பான 2024 - 25 சீசன் PSG தனது முதல் UEFA சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வெல்ல உதவிய துடன், அவருக்கு 2025-ஆம் ஆண்டின் பலோன் டிசஓர் விருதையும் பெற்றுத் தந்தது.

டெம்பலே 2016 முதல் பிரான்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். மேலும் 2018 FIFA உலகக் கோப்பையை வென்ற அணியிலும் அவர் இடம்பெற்றிருந்தார். அவர் தனது வேகம், படைப்பாற்றல் மற்றும் இரு பக்கங்களிலும் விளையாடும் திறனுக்காக அறியப்படுகிறார். 2026 உலகக் கோப்பை தொடரில் 6 கோல்களை அடித்திருந்தார்.

உலகம் முழுவதும் உள்ள சிறந்த காற்பந்தாட்ட வீரர்களை அடையாளம் காண்பதற்குப் பல சர்வதேசப் போட்டிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வீரர்கள் வரிசையில் பீலே, டியேகோ மாரடோனா, ரொனால்டினோ கௌச்சோ, ஜினெடின் ஜிதேன், யோஹான் குருஃப், நெய்மர் போன்ற வரலாற்று நாயகர்களும் முதன்மையானவர்களாக இடம்பெறுகின்றனர். இவர்களுள் பெரும்பாலான புகழ்பெற்ற வீரர்கள் தற்போது காற்பந்து விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட போதிலும், அவர்கள் படைத்த மகத்தான உல கச் சாதனைகளினாலும் விளையாட்டுக்கு ஆற்றிய அழியாத பங்களிப்பினாலும் காற்பந்து வரலாற்றில் அவர்களின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.



kuruaravindan@thaiveedu.com

# பைன் காடுகளின் சாம்பல் நிழலும் நிலத்தின் மரண அமைதியும்

3

## மரங்கள் பேசும் நிலத்தின் அரசியல்

அருள்கார்க்கி

மத்திய மலைநாட்டின் சரிவுகளிலும், குன்றுகளிலும் வீசும் காற்றில் பைன் (Pine - Pinus caribaea) மரங்கள் எழுப்பும் ஓசை ஒருவிதமான பெருமூச்சைப் போலிருக்கும். வெளியிலிருந்து வந்து செல்லும் பயணிகளுக்கு அந்த ஊசியிலைக் காடுகளின் அடர்த்தியும் வானை நோக்கி நிமிரும் அவற்றின் பிரமாண்டமும் ஐரோப்பியக் காடுகளின் அழகியலைக் கண்முன் நிறுத்தலாம். ஆனால், அந்தப் பச்சை நிறப் போர்வையை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தால், அங்கே பறவைகளின் கூச்சலோ, சிறு பூச்சிகளின் ரீங்காரமோ, அல்லது சருகுகளில் ஓடும் சிறு விலங்குகளின் அரவமோ கேட்காது. அங்கு உறைந்திருப்பது ஒரு மயானத்தின் மரண அமைதி. ஒரு நிலம் எவ்வாறு தனது சொந்த இயல்பிலிருந்து முற்றாகப் பிரிக்கப்பட்டு, வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஆக்கிரமிப்பால் மூச்சுத் திணறிச் சாகிறது என்பதை இந்த அமைதி மௌனமாக விவரிக்கிறது. 'மரங்கள் பேசும் நிலத்தின் அரசியல்' என்பது இதுதான்; இங்கு பைன் மரங்கள் வெறுமனே தாவரங்கள் அல்ல, அவை நிலத்தின் ஆன்மாவை எரித்துச் சாம்பலாக்கும் நவீன காலனித்துவத்தின் ஆயுதங்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியாளர்கள் தேயிலைக்காகக் காடுகளை அழித்தார்கள் என்றால், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுதந்திர இலங்கையின் அரச இயந்திரம் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் வழிகாட்டலில் 'சுற்றாடல் பாதுகாப்பு' என்ற பெயரில் ஒரு புதிய வன ஆக்கிரமிப்பைத் தொடங்கியது. 1970 மற்றும் 1980-களில் உலக வங்கி (World Bank), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை (USAID) ஆகியவற்றின் நிதி உதவியுடன், இலங்கையின் அரிப்பிற்குள்ளான மலைச்சரிவுகளையும், பத்தன நிலங்களையும் (Patanas - புல்வெளிகள்) மீளமைப் பதாகக் கூறி 'பைனஸ் கரிபேயா' கன்றுகள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் நடப்பட்டன.

இந்தக் 'காடாக்கல்' (Afforestation) திட்டம் என்பது சுதேசியச் சூழலியலைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு தூரநோக்கையும் கொண்டிருக்கவில்லை. மாறாக, சர்வதேசக் காகிதக் கூழ் (Paper Pulp) மற்றும் பிசின் (Resin) சந்தைகளுக்கான மலிவான மூலப்பொருளைப் பெருக்கும் ஒரு வர்த்தகச் சதியாகவே இது அரங்கேறியது. இது டேவிட் ஹார்வி (David Harvey) முன்வைக்கும் 'சுவீகரிப்பின் ஊடான மூலதனக் குவிப்பு' (Accumulation by Dispossession) என்ற கோட்பாட்டிற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் கிராமிய மக்களும், விளிம்புநிலைத் தோட்டத் தொழிலாளர்களும் பாரம்பரியமாகத் தமது கால்நடைகளை மேய்க்கவும், மூலிகைகளைச் சேகரிக்கவும், விறகு வெட்டவும் பயன்படுத்தி வந்த 'பொதுக் காணிகள்' (Commons) அனைத்தும் இந்த மரங்களை நடுவதன் ஊடாக சுவீகரிக்கப்பட்டன. நிலம் மக்கள் வசமிருப்பதிலிருந்து பறிக்கப்பட்டு, வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் இறுக்கமான அதிகார வேலிகளுக்குள் முடக்கப்பட்டது.

சர்வதேச அளவில் இதனைச் சிலி (Chile) நாட்டின் அனுபவத்தோடு ஒப்பிடலாம். 1974-ஆம் ஆண்டில் ஒகஸ்டோ பினோசேயின் (Augusto Pinochet) சர்வாதிகார ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட 'சட்டம் 701' (Decree Law 701), சிலியின் பூர்வீக மாபுச்சே (Mapuche) மக்களின் காணிகளில் பலவந்தமாகப் பைன் மரங்களை நட்டுப் பெருநிறுவனங்களிடம் கையளித்தது. இன்று மாபுச்சே மக்கள் தமது காணி உரிமைக்காகவும், வறண்டுபோன நீர் ஆதாரங்களுக்காகவும் எப்படி அரசோடு போராடுகிறார்களோ, அதே அரசியல் வன்முறைதான் அன்றைய சூழலில் எந்தவிதமான ஆயுதங்களுமின்றி 'சுற்றாடல் பாதுகாப்பு' என்ற போர்வையில் எமது மலைநாட்டிலும் அரங்கேறியது. மரங்கள் இங்கு இயற்கையின் பிரதிநிதிகளாக அன்றி, அரசிடம் நிலத்தைத் தாரைவார்க்கும் வேலையாட்களாகவே செயற்பட்டன.

பல்லுயிர்மை என்பது ஒரு நிலத்தின் ஜனநாயகப் பண்பு. ஆனால் பைன் மரங்களின் உயிரியல் கட்டமைப்பு எதேச்சாதிகாரத் தன்மை கொண்டது. பைன் மரத்தின் இலைகள் (Pine needles) உதிர்ந்து நிலத்தில் விழும்போது, அவை



தடிப்பான ஒரு காய்ந்த மெத்தையைப் போல மண்ணை முழுமையாக மூடிக்கொள்கின்றன. இந்த இலைகளில் உள்ள அதிகளவிலான பிசின் மற்றும் அமிலத்தன்மை, அவை இலகுவில் மக்கிப் போவதைத் தடுத்து, மண்ணை முழுமையாக அமிலமயமாக்குகிறது (Soil Acidification). இந்த வேதியியல் வன்முறையின் காரணமாக, பைன் மரத்தின் நிழலில் கஹட்ட, பத்தங்க, நில்லு போன்ற சுதேச மரங்களின் விதைகளோ, சிறு மூலிகைகளோ முளைக்கவே முடியாது. மண்ணின் நுண்-சூழல் (Micro-ecology) முற்றாக அழிக்கப்பட்டு, நிலத்தடி நுண்ணுயிரிகள் செத்தொழிகின்றன. உதிர்ந்த இலைகள் தடிமனான படலமாக இருப்பதனால், மழைநீர் மண்ணுக்குள் ஊடுருவி நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதும் முற்றாகத் தடுக்கப்படுகிறது. ஒருகாலத்தில் நுண்-நீரேந்து மண்டலங்களாக படுகைகளும் இன்று கோடைகாலத்தில் கொடிய வறட்சியைச் சந்திக்கின்றன. பைன் காடுகளுக்குள் நிலவும் அந்த மயான அமைதி வெறுமனே தாவரவியலின் விளைவல்ல; அது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சூழலியல் பேரழிவு. தமக்கான நீரைத் தேடித் தினமும் நடக்கும் மலையகப் பெண்களின் உழைப்புச் சுரண்டலுக்கும், பைன் காடுக ளின் இந்த அமைதிக்கும் நேரடித் தொடர்புண்டு. நிலத்தடி நீர் வறள வறள, விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரமும் உழைப்புச் சுமையும்தான் முதலில் பாதிக்கப்படுகின்றன.

பைன் காடுகளின் மற்றொரு கொடிய முகம், அது செயற்கையாக உருவாக்கும் அனர்த்தங்களாகும். பைன் மரங்கள் அதிக பிசின் தன்மையைக் கொண்டிருப்பதால், மிக எளிதில் தீப்பற்றக்கூடியவை. உலர் காலங்களில் பண்டாரவளை, பபஹின, எல்வால மற்றும் பதுளையின் மலைச் சரிவுகளில் ஏற்படும் காட்டுத் தீக்கள் வெறுமனே தற்செயலான நிகழ்வுகள் அல்ல. அவை இந்தத் தவறான காடாக்கல் கொள்கையால் கட்டமைக்கப்பட்ட அரசியல். ஒரு பாரிய காட்டுத்தீ ஏற்படும்போது, அரச அதிகாரிகளும் ஊடகங்களும் உடனடியாகக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது அந்த வன எல்லைகளுக்குள் விறகு தேடச் செல்லும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும், கிராமப்புற இளைஞர்களையும்தான். 'அறியாமையினால் மக்கள் காட்டுக்குத் தீ வைக்கிறார்கள்' என்ற பொதுப் புத்தித் தர்க்கம் திட்டமிட்டுக் கட்டமைக்கப்படுகிறது. இது அதிகார வர்க்கம் மிக நுட்பமாகக் கையாளும் ஓர் ஒடுக்குமுறை உத்தியாகும். காட்டுத்தீயைக் காரணம் காட்டி, அந்த நிலங்களின் மீது மக்களுக்கு இருக்கும் எஞ்சியிருக்கும் சிறிதளவு நடமாடும் உரிமையையும் அரச இயந்திரம் பறித்துக்கொள்கிறது.

2017-ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் போர்த்துகல் (Portugal) நாட்டில் ஏற்பட்ட பாரிய காட்டுத்தீயில் பல டஜன் கிராமிய மக்கள் உயிரிழந்தார்கள். அந்தப் பேரழிவிற்குக் காரணம் அங்கு காகித ஆலைகளுக்காகப் பெருநிறுவனங்களால் நடப்பட்டிருந்த பைன் மற்றும் யூகலிப்டஸ் மரங்கள்தான். அங்கு பெருநிறுவனங்கள் தப்பித்துக்கொள்ள, பலியாடுகளாக்கப்பட்டது உள்ளூர் சிறு விவசாயிகளே. அதேபோன்றுதான், இலங்கையிலும் காலநிலைக்கு ஒவ்வாத மரங்களை நட்டுச் சூழலியல் வறட்சியை உருவாக்கியவர்கள் சர்வதேச நிதியங்களும் அரச அதிகார வர்க்கமும்; ஆனால் அதற்கான பழியையும், அதனால் எழும் புகை மண்டலத்திற்குள் மூச்சுத் திணறும் அவலத்தையும் சுமப்பது விளிம்புநிலை மக்களாகவே தொடர்கின்றனர்.

பைன் மரங்கள் நிலத்தின் ஆன்மாவை மட்டும் சிதைக்கவில்லை; அவை அங்கே உழைக்கும் மனிதர்களின் உடல்களையும் மெல்ல மெல்லத் தின்று தீர்க்கின்றன. இன்று மலையகத்தின் பல பைன் காடுகளில் பிசின் சேகரிக்கும் தொழில் (Resin Tapping) நடைபெறுகிறது. பைன் மரத்தின் பட்டைகளைக் கீறிவிட்டு, அதிலிருந்து பிசின் அதிகமாகச் சுரப்பதற்காகத் தீவிர நச்சுத்தன்மை வாய்ந்த கந்தக அமிலம் (Sulfuric acid) போன்ற இரசாயனத் தூண்டிகள் அந்த வெட்டுக்களில் பூசப்படுகின்றன. இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்படுபவர்கள் முறையான எந்தவொரு பாதுகாப்பு உபகரணங்களும் அற்ற, நாளாந்தக் கூலிக்கு அமர்த்தப்படும் ஒப்பந்தத் தொழிலாளர்கள். கைகளில் உராய்வைத் தடுக்கும் கையுறைகளோ, முகக்கவசங்களோ இன்றி, அந்த இரசாயனப் புகைகளுக்கும், மரத்திலிருந்து வழியும் பிசினுக்கும் மத்தியில் அவர்கள் உழைக்கிறார்கள். பலரது கைகளில் இரசாயனப் புண்கள் ஏற்பட்டுத் தோல்கள் உரிக்கப்பட்டிருக்கும். இவர்களுக்குக் கடுமையான சுவாசக் கோளாறுகளும், தோல் நோய்களும் ஏற்படுகின்றன.

கார்ல் மார்க்ஸ் (Karl Marx) குறிப்பிடும் 'உழைப்பிலிருந்து மனிதர் அந்நியப்படுதல்' (Alienation of Labor) என்ற கோட்பாடு இங்கு அதன் உச்சகட்ட குரூரத்தோடு அரங்கேறுகிறது. சர்வதேசச் சந்தையில் பெயிண்ட், வார்னிஷ், பிளாஸ்டிக் மற்றும் பசைகள் (Adhesives) தயாரிப்ப

> "பைன் காடுகளின் மற்றொரு கொடிய முகம், அது செயற்கையாக உருவாக்கும் அனர்த்தங்களாகும். பைன் மரங்கள் அதிக பிசின் தன்மையைக் கொண்டிருப்பதால், மிக எளிதில் தீப்பற்றக்கூடியவை. உலர் காலங்களில் பண்டாரவளை, பபஹின, எல்வால மற்றும் பதுளையின் மலைச்சரிவுகளில் ஏற்படும் காட்டுத் தீக்கள் வெறுமனே தற்செயலான நிகழ்வுகள் அல்ல. அவை இந்தத் தவறான காடாக்கல் கொள்கையால் கட்டமைக்கப்பட்ட அரசியல்."

தற்கான மூலப்பொருளாக இந்தப் பிசின் அதிக விலைக்கு ஏற்றுமதியாகிறது. ஒப்பந்தக்காரர்களும், அரச முகவராண்மைகளும் பல மில்லியன் ரூபாய்களை லாபமாகச் சுருட்டிக் கொள்கிறார்கள். ஆனால், அந்த மரங்களில் கீறல்களை ஏற்படுத்துவது போலவே, தமது சொந்த உடலிலும் நோயின் கீறல்களைச் சுமந்துகொண்டு வீடு திரும்பும் ஒரு தொழிலாளிக்கு, தனது உழைப்பினால் உருவாகும் மூலதனம் எங்கே செல்கிறது என்றுகூடத் தெரிவதில்லை. மரங்கள் உலகச் சந்தைக்காகப் பிசினைச் சுரக்கின்றன; மனிதர்களோ தமது ஆயுளைச் சுரந்து கொண்டிருக்கிறார்கள்.

பைன் மரங்கள் இழைத்த வடுக்களை ஆற்றுவது என்பது வெறும் சுற்றுச்சூழல் சீரமைப்பு அல்ல; அது வேரறுக்கப்பட்ட மக்களின் காணி உரிமையை மீட்டெடுக்கும் ஒரு அரசியல் விடுதலைப் போராட்டம். ‘தவறான மரங்களை வெட்டி எறிவது மட்டுமே சூழலியல் நீதியாகிவிடாது; அந்த நிலத்தை அதன் வரலாற்று உரிமையாளர்களிடம் கையளிப்பதே உண்மையான நீதியாகும்.’ சர்வதேசச் சுற்றாடல் அமைப்புகள் முன்வைக்கும் 'நீதியான மாற்றம்' (Just Transition) என்ற கோட்பாடு இங்கு முழுமையாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். முதலாவதாக, சரிவுகளில் உள்ள பைன் மரங்களை இயந்திரத்தனமாக ஒரே அடியில் வெட்டி வீழ்த்துவது (Clear-cutting) பாரிய மண்சரிவுகளையும் (Land-slides) அழிவுகளையும் ஏற்படுத்தும். எனவே, சூழலியல் அதிர்ச்சியைக் குறைக்கும் வகையில் மரங்களைப் படிப்படியாகத் தடிப்பிளத்தல் (Selective thinning) முறையில் அகற்ற வேண்டும். அந்த நிலத்தின் அமிலத்தன்மை சீரடைந்தவுடன், பெருந்தோட்டக் கம்பனிகளிடமும் வனத் திணைக்களத்திடமும் முடங்கிக் கிடக்கும் இந்தக் காணிகளை விடுவித்து, காணியற்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கப்பட வேண்டும்.

இங்குதான் உலகப் புகழ்பெற்ற சூழலியலாளர் கலாநிதி ரணில் சேனாநாயக்க இலங்கையில் அறிமுகப்படுத்திய 'அனலொக் வனவியல்' (Analog Forestry) கோட்பாட்டை நாம் ஒரு மாற்றுப் பொருளாதாரக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும். பைன் மரங்கள் நின்ற அந்த மரண அமைதி கொண்ட நிலத்தில், மீண்டும் பல்லுயிர்மையைக் காக்கும் சுதேச மரங்கள் துளிர்க்க வேண்டும். அதன் நிழலில் மிளகு, ஏலக்காய், கோப்பி எனப் பணப்பயிர்களைக் கூட்டாகப் பயிரிடும், சூழலியலோடு இணைந்த விவசாய முறை (Agro-Forestry) மலர வேண்டும்.

காணி உரிமையும், சிறு தோட்ட உரிமையாளர் மாதிரியும் (Tea Smallholder Model) இணையும்போது, லயன் அறைகளில் முடங்கிக் கிடந்த ஒரு சமூகம் உற்பத்தியின் தீர்மானிப்பாளர்களாகவும், கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகிகளாகவும் உருமாற்றம் பெறுவார்கள். வறண்டுபோன ஊற்றுகள் மீண்டும் உயிர்பெறுவதோடு, தமது உடலை இரசாயனத்திற்குப் பலி கொடுத்த தொழிலாளர்கள் கௌரவமான விவசாயிகளாகத் தலைநிமிர்வார்கள்.

நிலம் என்பது வரைபடத்தில் உள்ள வெறும் கோடுகள் அல்ல; அது உயிரோடும், பண்பாட்டோடும் பிணைந்தது. மலையகத்தின் சரிவுகளில் நிற்கும் ஒவ்வொரு பைன் மரமும் அந்த நிலத்திற்கு எதிராக அரசும் மூலதனமும் நிகழ்த்திய வன்முறையின் மௌனச் சாட்சிகள். மரங்கள் பேசும் இந்த நிலத்தின் அரசியலைப் புரிந்துகொள்வதும், அந்த அந்நிய வேர்களை அறுத்துவிட்டு, மண்ணின் உண்மையான உரிமையாளர்களிடம் காணிகளைக் கையளிப்பதும் மட்டுமே இந்த சாம்பல் நிழலிலிருந்து நிலத்தை விடுவிப்பதற்கான ஒரே வழியாகும்.



Arulkarki@thaiveedu.com





tg.theeban@gmail.com

# 21ஆம் நூற்றாண்டில் சிறுவர் உரிமைகள்:

## டிஜிட்டல் வெளியும் மனநலப் பாதுகாப்பும்

அகமட் பிஸ்தாமி

> *ஒரு சிறுவரின் உணர்வுசார் மற்றும் உளவியல் வளர்ச்சியைப் புரிந்து கொள்வது என்பது, சமகால நவீன உலகம் அவர்கள் மீது சுமத்தும் தனித்துவமான அழுத்தங்களை அங்கீகரிப்பதில் இருந்தே தொடங்குகின்றது. இன்றைய சிறுவர்கள் முன்னெப்போதையும் விட அதிகளவிலான டிஜிட்டல் தகவல்களையும் சமூக அழுத்தங்களையும் கையாள வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத் தொடர்ச்சியான தகவல் வீச்சு, சிறுவர்களிடத்தில் தீவிரமான அறிவுசார் சுமையையும் உணர்ச்சிப் போராட்டங்களையும், கவனச்சிதறல்களையும் ஏற்படுத்துகின்றது.*

நவீன பாடசாலைக் கட்டமைப்புகள், நவீனத்துவக் கல்வி வாய்ப்புகள் மற்றும் துறைசார் கண்காணிப்பு அமைப்புகள் விரிவடைந்துள்ள இன்றைய சூழலில், சிறுவர் உரிமை கள் குறித்த விழிப்புணர்வும் உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளது. ஆயினும், சிறுவர்கள் மீதான பாரபட்சம், அமைப்பியல் பாகுபாடுகள், வன்முறை மற்றும் பல்வேறு அத்துமீறல்கள் சமகாலச் சமூகத்தில் புதுப்புது வடிவங்களில் தொடர்ச்சியான சவால்களாகவே நீடிக்கின்றன.

இன்றைய நவீன சூழலில், ஒரு சிறுவரின் பாதுகாப்பிற்கான உரிமை என்பது உடல் மற்றும் சமூக எல்லைகளைத் தாண்டி, டிஜிட்டல் வெளியையும் அதன் அதிநவீனத் தொழினுட்பச் சூழலையும் உள்ளடக்கியதாக அகலப்பெற்றுள்ளது. இணையவழி வன்முறை (Cyber bullying), தனிப்பட்ட தரவுச் சுரண்டல் மற்றும் தொடர்ச்சியான இணையத் தொல்லைகள் ஆகிய பாரம்பரிய அச்சுறுத்தல்களுடன் சேர்த்து, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான போலியான உள்ளடக்கங்கள் (Deepfakes), வழிமுறைசார் அடிமைத்தனம் (Algorithmic Addiction) மற்றும் கட்டுப்பாடற்ற தனியுரிமை மீறல்கள் போன்ற அதிநவீன அபாயங்களை இளந்தலைமுறையினர் நேரடியாக எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான சர்வதேச விவாதங்கள், இணையப் பாதுகாப்பையும் தாண்டி டிஜிட்டல் இறையாண்மை மற்றும் தொழினுட்ப அறவியலையும் (Tech Ethics) முதன்மையான ஒரு கூறாகக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன.

சிறுவர் உரிமைகளின் சமகாலப் போக்குகள், வெறுமனே கருவிகளைப் பயன்படுத்துவதை தாண்டி, விமர்சனபூர்வமான டிஜிட்டல் கல்வியறிவையும் தரவுத் தனியுரிமைப் பாதுகாப்பையும் இன்றியமையாத தேவைகளாக வலியுறுத்துகின்றன. அதேவேளை, மனநலம் என்பது ஒரு முதன்மையான மனித உரிமையாகக் கருதப்படும் நிலையில், சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் முழுமையான வளர்ச்சிக்கான உரிமையின் அடிப்படைக் கூறாகவும் அது பரந்த அளவில் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, கல்விச் சாதனையை மையமாகக் கொண்ட சமூக எதிர்பார்ப்புகளும், பரீட்சைகளைச் சுற்றி உருவாக்கப்படும் நெருக்கடியான போட்டிச் சூழலும், சமூக ஊடகங்களால் தூண்டப்படும் ஒப்பீட்டு மனப்பான்மையும் சிறுவர்களின் மன நலத்தில் குறிப்பிடத்தக்க எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. எனவே, சிறுவர்களின் கல்வி மற்றும் உடலாரோக்கியத்துடன் இணைந்த வகையில், அவர்களின் மன நலப் பாதுகாப்பிற்கும் உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டியது சமகால அணுகுமுறைகளின் அவசியமான தேவையாகும்.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது என்பது, உணர்வுபூர்வமான சமூக ஆதரவு அமைப்புகளை உருவாக்குவதையும், உளவியல் தேவைகளுக்கான சமூகக் களங்கமற்ற கவனிப்பையும், பாதுகாப்பான டிஜிட்டல் சூழலைச் சட்டரீதியாக உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு அமைய வேண்டும்.

## சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் 12–ஆம் பிரிவும் சிறுவர்களின் உரையாடல் உரிமையும்:

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் (UNCRC) 12-ஆவது பிரிவு, தங்களைப் பாதிக்கும் அனைத்து விவகாரங்கள் குறித்தும் சுயாதீனமாக அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கும், அவ்வாறு வெளிப்படுத்தப்படும் கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதற்கும் சிறுவர்களுக்கு உள்ள உரிமையை உறுதியாக வலியுறுத்துகின்றது. இருபத்தோராம் நூற்றாண்டில், சிறுவர்கள் பெரியவர்களின் முடிவுகளை எந்தக் கேள்வியுமின்றி ஏற்றுக்கொள்ளும் செயலற்ற பெறுநர்கள் அல்லர். மாறாக, கால நிலை மாற்றத்திற்கு எதிரான குரல்கள், சமூக மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்பாளர்கள் எனப் பல்வேறு தளங்களில் முடிவெடுக்கும் அதிகாரத்தை எதிர்நோக்கும் உலகளாவிய குடிமக்களாகவே அவர்கள் உருவெடுத்துள்ளனர்.

சிறுவர்கள் என்பவர்கள் பெற்றோரின் விருப்பங்களுக்கு அமைய இயங்கும் நிறுவனங்களோ அல்லது அவர்களின் பிரதி பிம்பங்களோ அல்லர். சிறுவர்களுக்கென்று தனித்துவமான எண்ணக் கோலங்கள், உரிமைகள், தெரிவுகள் மற்றும் சுதந்திரம் காணப்படுகின்றன. எனவே, பெற்றோர்களும் சமூகமும் அவர்களை வெறுமனே பராமரிப்பாளர்களாக மட்டுமன்றி, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துச் சரியான பாதையில் வழிநடத்துபவர்களாகவும் இயங்க வேண்டியது அவசியமாகின்றது.

ஒரு சிறுவரின் உணர்வுசார் மற்றும் உளவியல் வளர்ச்சியைப் புரிந்துகொள்வது என்பது, சமகால நவீன உலகம் அவர்கள் மீது சுமத்தும் தனித்துவமான அழுத்தங்களை அங்கீகரிப்பதில் இருந்தே தொடங்குகின்றது. இன்றைய சிறுவர்கள் முன்னெப்போதையும் விட அதிகளவிலான டிஜிட்டல் தகவல்களையும் சமூக அழுத்தங்களையும் கையாள வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத்தொடர்ச்சியான தகவல் வீச்சு, சிறுவர்களிடத்தில் தீவிரமான அறிவுசார் சுமையையும் (Cognitive Overload), உணர்ச்சிப் போராட்டங்களையும், கவனச்சிதறல்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே, டிஜிட்டல் யுகத்தின் இத்தகைய நுட்பமான சவால்களில் இருந்து சிறுவர்களின் உளவியல் நல்வாழ்வைப் பாதுகாப்பது சர்வதேசக் கொள்கை வகுப்பாளர்களின் பிரதான கடமையாக மாறுகின்றது.

## போட்டிமயப்பட்ட கல்வியும் சிறார்களின் உளவியல் அழுத்தமும்:

கல்வி மற்றும் சமூக ரீதியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அழுத்தமும், சமூக வலைத்தளங்களில் உருவாக்கப்படும் செயற்கையான தரநிலைகளால் தூண்டப்படும் பெற்றோரின் அளவுகடந்த எதிர்பார்ப்புகளும், சிறார்களிடையேயும் இளையோரிடையேயும் தீவிரமான மனப்பதற்றத்தை உருவாக்கியுள்ளன. இவற்றுடன், தங்களுக்கிடையேயான ஒப்பீடுகளால் உருவாகும் ஏற்றத்தாழ்வு உணர்வு, தாழ்வுச் சிக்கல் மற்றும் சுயமரியாதை இழப்பு போன்ற ஆழமான உளவியல் பாதிப்புகளும் அதிகரித்துவருகின்றன.

## டிஜிட்டல் இணைப்பு நிலையும் சமூகத் தனிமை முரண்பாடும்:

டிஜிட்டல் இணைப்பு அதிகரித்து வரும் நிலையில், அது மறுபுறம் ஆழ்ந்த சமூகத் தனிமையையும் உருவாக்கும் முரண்பாட்டைக் கொண்டுள்ளது. குழந்தைகள் தங்களைச் சூழவுள்ள இயல்பான நிதர்சன உலகம், குடும்ப உறவுகள் மற்றும் அன்றாட வாழ்வியல் தொடர்புகளைப் புறக்கணித்து, டிஜிட்டல் தளங்களால் கட்டமைக்கப்படும் போலித்தன்மையான உலகின் மீது அளவுகடந்த ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்ளும் நிலை காணப்படுகிறது. இத்தகைய நிலை, அவர்களிடையே மன அழுத்தத்தையும் உணர்வுசார் சிக்கல்களையும் உருவாக்கக்கூடும்.

> ***சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது என்பது, உணர்வுபூர்வமான சமூக ஆதரவு அமைப்புகளை உருவாக்குவதையும், உளவியல் தேவைகளுக்கான சமூகக் களங்கமற்ற கவனிப்பையும், பாதுகாப்பான டிஜிட்டல் சூழலைச் சட்டரீதியாக உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு அமைய வேண்டும்.***

டிஜிட்டல் இணைப்பு நிலைகள் அதிகரித்து வரும் அதேவேளை, அது மறுபுறம் ஆழ்ந்த சமூகத் தனிமையை உருவாக்கும் முரண்பாட்டைக் கொண்டுள்ளது. சிறுவர்கள் தங்களைச் சூழவுள்ள இயல்பான நிதர்சன உலகம், குடும்ப உறவுகள் மற்றும் அன்றாட வாழ்வியல் தொடர்புகளைப் புறக்கணித்து, டிஜிட்டல் தளங்களால் கட்டமைக்கப்படும் போலி உலகத்தின் மீது அளவுகடந்த ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இப்போக்கு, அவர்களிடையே தீவிர மன அழுத்தத்தையும் உணர்வுசார் சிக்கல்களையும் தோற்றுவிக்கின்றது.

சிறுவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுடன் கணப்பொழுதில் தொடர்புகொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தபோதிலும், அர்த்தமுள்ள நேரடி மனிதத் தொடர்புகளை உருவாக்குவதிலும், பிறரது உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் பச்சாதாபத்தை (Empathy) வளர்த்துக்



கொள்வதிலும் தொடர்ச்சியான சவால்களை எதிர்கொள்கின் றனர். இதனால், தொழினுட்பம் மனிதர்களை இணைக்கும் கருவியாகச் செயற்படும் அதேவேளை, ஆழமான மனித உற வுகளில் இருந்து அவர்களைத் தனிமைப்படுத்தும் முரண் பாடும் தீவிரமடைந்துள்ளது.

### சுற்றுச்சூழல் கவலையும் (Eco-Anxiety) சிறார்களின் உளவியல் பாதிப்பும்:

உலகளாவிய சுற்றுச்சூழல் மாற்றங்கள் மற்றும் காலநிலை நெருக்கடிகளுக்கு மத்தியில் வளர்ந்து வரும் இளைய தலை முறையினர், தங்களது எதிர்காலம் குறித்த அவநம்பிக்கை, அச்சம் மற்றும் மன அழுத்தங்களுக்கு மேன்மேலும் ஆளாகி வருகின்றனர். சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மை என்பன, குறிப்பாகச் சிறார்கள் மற்றும் இளைஞர்களிடையே தீவிரமான உணர்வுசார் பாதிப் புகளை ஏற்படுத்தக்கூடிய முதன்மைக் காரணிகளாக உரு வெடுத்துள்ளன.

அதிக அளவிலான உணர்வுசார் தேவைகளைக் கொண்ட சிறுவர்கள் ஆரோக்கியமாகவும் ஆளுமைச் செழுமையுடனும் வளர்வதற்கு, அவர்களின் மனவெழுச்சி சார்ந்த நிலைமை களைப் புரிந்து கொள்ளும் சமூக அணுகுமுறை அவசியமா கின்றது. சிறுவர்களின் உரிமைகளும் உணர்வுகளும் புறக்க ணிக்கப்படும்போது, அவர்கள் கடுமையான மன அழுத்தங்க ளுக்கும் உளவியல் நெருக்கடிகளுக்கும் ஆளாகக்கூடும். இத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு, சிறுவர்களுக் குக் கட்டமைப்பு சார்ந்த பாதுகாப்பு மட்டுமன்றி, உணர்வுபூர் வமான ஏற்பு, புரிதல், அன்பு மற்றும் சமூக ஆதரவும் தேவைப் படுகின்றன. இக்கவனிப்புகள் உரிய நேரத்தில் உரிய முறை யில் வழங்கப்படாதபோது, சிறுவர்களின் தன்னாளுமை வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு, அவர்களின் ஆளுமைச் சிதை வுக்கும் அது வழிவகுக்கக்கூடும்.

### குழந்தைகளின் உணர்வுகளுக்கான அங்கீகாரமும் ஆதரவும்:

குழந்தைகள் பெரியவர்களின் நடத்தைகளைக் கவனித்தும் அவற்றைப் பின்பற்றியும் தமது உணர்ச்சிகளை ஒழுங்குப டுத்தக் கற்றுக்கொள்கிறார்கள். எனவே, பெற்றோரும் கல்வி யாளர்களும் குழந்தைகளின் தவறான நடத்தைகளுக்குத் தண்டனை அளிப்பதைவிட, அவற்றின் பின்னணியில் உள்ள உணர்வுகளைப் புரிந்துகொண்டு பொறுமையுடனும் பரிவு டனும் பதிலளிக்கும்போது, குழந்தைகள் தங்களுடைய கடின மான உணர்வுகளைப் பாதுகாப்பான முறையில் கையாள்வ தற்கான திறனை வளர்த்துக்கொள்கிறார்கள்.

அதேவேளை, கோபம், சோகம், கவலை போன்ற உணர்வுகள் இயல்பானவை என்பதையும் அவற்றை வெளிப்படுத்துவது தவறல்ல என்பதையும் குழந்தைகள் உணர வேண்டியது அவ சியமாகும். குழந்தைப் பருவத்தில் தோன்றும் கவலைகள் மற் றும் உணர்வுகளை ‘அற்பமானவை’ எனக் கூறி நிராகரிப்பது, அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பைத் தடுக்கிறது. இதன் விளைவாக, எதிர்காலத்தில் அவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தத் தயங்குவதோடு, தனிமை உணர்வுக்கும் ஆளாகி, உணர்வுசார் முதிர்ச்சியை வளர்த்துக்கொள்வதில் தடைகளை எதிர்கொள்ளக்கூடும். எனவே, குழந்தைகளின் உணர்வுகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை வெளிப்படுத்துவதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது அவர்களின் ஆரோக்கியமான உணர்வுசார் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது.

### சிறுவர்களின் உணர்வுகளுக்கான அங்கீகாரமும் சமூக ஆதரவும்:

சிறுவர்கள் பெரியவர்களின் நடத்தைகளைக் கவனித்தும் அவற்றைப் பின்பற்றியும் தமது உணர்ச்சிகளை ஒழுங்குப டுத்தக் கற்றுக்கொள்கிறார்கள். எனவே, பெற்றோர்களும் கல் வியாளர்களும் சிறுவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளுக் குத் தண்டனை அளிப்பதைவிட, அவற்றின் பின்னணியில் உள்ள உணர்வுகளைப் புரிந்துகொண்டு பொறுமையுடனும் பரிவுடனும் பதிலளிக்கும்போது, சிறுவர்கள் தங்களுடைய கடினமான உணர்வுகளைப் பாதுகாப்பான முறையில் கையாள்வதற்கான திறனை வளர்த்துக்கொள்கிறார்கள்.

அதேவேளை, கோபம், சோகம், கவலை போன்ற உணர்வுகள் இயல்பானவை என்பதையும் அவற்றை வெளிப்படுத்துவது தவறல்ல என்பதையும் சிறுவர்கள் உணர வேண்டியது அவசி யமாகும். சிறுவர் பருவத்தில் தோன்றும் கவலைகள் மற்றும் உணர்வுகளை ‘அற்பமானவை’ எனக் கூறி நிராகரிப்பது, அவர் களின் அகவுணர்வுகளைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பைத் தடுக்கின்றது.

இதன் விளைவாக, எதிர்காலத்தில் அவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தத் தயங்குவதோடு, தனிமை உணர்வுக்கும் ஆளாகி, உணர்வுசார் முதிர்ச்சியை வளர்த்துக்கொள்வதில் தீவிரமான தடைகளை எதிர்கொள்ளக்கூடும். எனவே, சிறுவர்களின் உணர்வுகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை வெளிப்படுத்துவதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது அவர்களின் ஆரோக்கியமான உணர்வுசார் வளர்ச்சிக்கு முதன்மை அடிப்படையாக அமைகின்றது.

### சமூக–உணர்ச்சி கற்றலின் (SEL) ஒருங்கிணைப்பு:

அறிவுசார் வளர்ச்சியானது சிறுவர்களின் உணர்வுசார் நல்வாழ்வுடன் ஆழமாகப் பிணைந்துள்ளது என்பதை நவீன கல்வித்துறை பரவலாக அங்கீகரிக்கின்றது. இந்நிலையில், சமூக-உணர்ச்சி கற்றல் (Social and Emotional Learning - SEL) என்பது விருப்பத்திற்கேற்ப இணைத்துக் கொள்ளப்படும் ஒரு துணைப் பாடமாகக் கருதப்படாமல், பயனுள்ளதும் முழுமையானதுமான கல்வியின் முதன்மையான கட்டமைப்புத் தூணாகக் கருதப்பட வேண்டும். சிறுவர்கள் தமது உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவற்றைச் சீராகக் கையாளுதல், பிறருடன் ஆரோக்கியமான உறவுகளை உருவாக்குதல், பொறுப்பான முடிவுகளை மேற்கொள்ளுதல் போன்ற திறன்களை வளர்த்துக்கொள்வதற்குச் சமூக-உணர்ச்சி கற்றல் அவசியமானதாக அமைகின்றது.

> ***“சிறுவர்களின் உரிமைகளும் உணர்வுகளும் புறக்கணிக்கப்படும்போது, அவர்கள் கடுமையான மன அழுத்தங்களுக்கும் உளவியல் நெருக்கடிகளுக்கும் ஆளாகக்கூடும். இத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு, சிறுவர்களுக்குக் கட்டமைப்பு சார்ந்த பாதுகாப்பு மட்டுமன்றி, உணர்வுபூர்வமான ஏற்பு, புரிதல், அன்பு மற்றும் சமூக ஆதரவும் தேவைப்படுகின்றன.”***

இந்த வகையில் நோக்கின், இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வியானது சிறுவர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மதிப்புடன், அவர்களின் மனவெழுச்சி சார்ந்த நல்வாழ்வுக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் அமைய வேண்டியது கட்டாயமாகின்றது. வெறும் அறிவை மட்டுமே புகட்டுவதைக் கல்வியின் நோக்கமாகக் கொள்ளாமல், சிறுவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் புரிந்துகொண்டு, அவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் கல்விச் சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் நிலவுகின்றது.

bisthamy.ahamed@thaiveedu.com





த. சிவபாலு

# குழந்தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாடும் அறிவாற்றல், செயற்றிறன் பாதிப்பும்

இன்றைய காலக்கட்டத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்து என்பது வெறும் உணவு சார்ந்த விஷயம் மட்டுமல்ல; அது நமது பொருளாதார நிலைமையோடும், வாழும் சூழலோடும் நெருங்கிய தொடர்புடையது. இன்றைக்கு உலக அளவிலும் சரி, நமது ஊர்களிலும் சரி, ஊட்டச் சத்துத் துறையில் ஒரு முரண்பாடான சூழலைத்தான் பார்க்கிறோம். ஒருபுறம் வறுமை, விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் பல குழந்தைகளுக்கு அன்றாடச் சத்துணவு கூடக் கிடைப்பதில்லை. மறுபுறம், துரித உணவுகளாலும் மாறிப்போன நகர்ப்புற வாழ்க்கை முறையாலும் அளவுக்கு அதிகமான உணவை உண்டு சிறு வயதிலேயே உடற்பருமன் மற்றும் மன உளைச்சலுக்கு ஆளாகும் குழந்தைகளையும் பார்க்கிறோம்.

குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதற்கும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கும் சத்தான உணவு மிகவும் அவசியம். வளர்ச்சிப் பருவத்தில் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போனால், அவர்களின் உடலும் மூளையும் பலவீனமடைவது தவிர்க்க முடியாதது. அதேநேரம், சரியான உடற்பயிற்சியோ விழிப்புணர்வோ இன்றி அளவுக்கு அதிகமாக உணவளிப்பதும், பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவுகளைக் கொடுப்பதும் குழந்தைகளிடம் உடற்பருமன் உள்ளிட்ட பல ஆரோக்கியச் சிக்கல்களை உருவாக்கிவிடுகின்றது. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு, அவர்களின் மூளை மற்றும் நரம்பு மண்டல வளர்ச்சியைக் கடுமையாகப் பாதிக்கின்றது. இது குழந்தைகளின் சிந்தனைத் திறன், செயற்றிறன் மற்றும் சமூக உறவுகளைக் கையாளும் உணர்ச்சி பூர்வமான வளர்ச்சியில் பாதிப்புகளை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்நாள் முழுமைக்கும் தொடரக்கூடிய குறைபாடாக மாறுகின்றது' என உலக சுகாதார அமைப்பு (WHO) எச்சரிக்கின்றது

### ஊட்டச்சத்துக் குறைபாடு (Malnutrition):

ஊட்டச்சத்துக் குறைபாடு என்பது வெறும் 'உணவு போதாமை' மட்டுமன்று; தேவைக்கு அதிகமான 'மிகை ஊட்டச்சத்து' (Over nutrition) உண்பதையும் சேர்த்தே குறிக்கின்றது. உடலுக்குத் தேவையான புரதம், மாச்சத்து, கொழுப்பு போன்ற முதன்மை ஊட்டச்சத்துகளும், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் போன்ற நுண் ஊட்டச்சத்துகளும் சரியான அளவில் கிடைக்காமல் சமநிலை தவறும்போதே இக்குறைபாடு ஏற்படுகின்றது.

சமீபத்திய தேசியத் தரவுகளும், வளர்ந்த நாடுகளின் ஆய்வுச் சான்றுகளும் சமூக-பொருளாதாரப் பின்னணிகள் மற்றும் குடும்பப் பராமரிப்பு முறைகளைக் கருத்தில் கொண்ட பிறகும் இத்தகைய பாதிப்புகளையே சுட்டிக்காட்டுகின்றன. எனினும், குழந்தைகளின் ஆரம்பகால வளர்ச்சிப் பருவத்திலேயே சரியான சத்துணவையும், அன்பான உளவியல்-சமூக அரவணைப்பையும் ஒருங்கிணைத்து வழங்கி தகுந்த தலையீடுகளை மேற்கொள்வது, அக்குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்குச் சிறந்த பலன்களைத் தரும் என்பதைச் சுகாதார ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

### ஊட்டச்சத்து போதாமை (Under nutrition):

சீரான உணவு கிடைக்காதபோதோ அல்லது உணவிலுள்ள சத்துகளை உடல் சரிவர உறிஞ்ச முடியாதபோதோ ஊட்டச்சத்து போதாமை ஏற்படுகின்றது. இது தசைகள் மற்றும் கொழுப்புச் சத்துக் குறைந்து உடலை மெலியச் செய்யலாம். சிலவேளைகளில் வெளித்தோற்றத்தில் எவ்வித மாற்றமும் தெரியாமலும் இருக்கலாம். ஒருவர் அதிக எடையுடன் இருந்தாலும்கூட ஊட்டச்சத்து போதாமைக்கு உள்ளாக முடியும். எனவே,



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதிசெய்ய உணவின் அளவு மட்டுமன்றி, அதில் நிறைந்திருக்கும் ஊட்டச்சத்தின் தரமும் மிகவும் முக்கியமாகும்.

இத்தகைய சூழலில், சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுப்பதும் தேசிய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும் அரசின் முக்கியமான பொறுப்புகளாகின்றன. இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவும் சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்பாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் கருத்துகளைத் தெரிவித்துள்ளார். 2026 ஜூன் 04 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் (UNICEF) செயற்குழுவுடனான கலந்துரையாடலில், சிறுவர்களுக்கான சட்டப் பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன் சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோல, 2025 ஜூலை 09 - 11-இல் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய ஊட்டச்சத்து மாநாட்டில் உரையாற்றிய அவர், சிறுவர்கள் மற்றும் இளம் பெண்களிடையே காணப்படும் இரத்த சோகையைத் (Anemia) தெற்காசியப் பிராந்தியக் கூட்டுறவின் மூலம் ஒழிக்க முடியும் எனவும், பாடசாலை மாணவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுத் திட்டங்களை அரசு முழுமையாகச் செயற்படுத்தும் என்றும் உறுதியளித்தார். இதன் மூலம், சிறுவர் ஊட்டச்சத்து என்பது தனிநபர் அல்லது குடும்ப மட்டத்தில் மட்டும் கவனம் செலுத்த வேண்டிய விடயமல்ல; அது அரசின் பொதுச் சுகாதாரக் கொள்கையுடனும் கல்வி மற்றும் சமூக நலத் திட்டங்களுடனும் தொடர்புடையதாக விளங்குகிறது.

இதே அணுகுமுறை சர்வதேச மட்டத்திலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 2026 ஒகஸ்ட் 24 அன்று வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்க வேளாண்மைத் துறை (USDA) குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை வழங்குவதன் அவசியத்தையும், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துத் திட்டங்களும் நடவடிக்கைகளும் அறிவியல் ஆய்வுகள் வழங்கும் சான்றுகளின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அது வலியுறுத்தியுள்ளது.

எனவே, அரசாங்கங்கள் இத்தகைய கொள்கை ரீதியான முயற்சிகளை அவ்வப்போது முன்னெடுத்தாலும், குழந்தைகளின் அன்றாட உணவுப் பழக்கத்தைத் தீர்மானிக்கும் பெற்றோரும் இதுகுறித்து போதிய விழிப்புணர்வுடனும் கூடுதல் கவனத்துடனும் செயற்படுவது அவசியமாகிறது. குழந்தைகளுக்கு வெறும் உணவை வழங்குவதோடு நிறுத்திவிடாமல், அதன் ஊட்டச்சத்துத் தரம், சரியான அளவு மற்றும் சீரான விகிதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுவதன் மூலமே ஆரோக்கியமான எதிர்காலத் தலைமுறையை உருவாக்க முடியும்.

## ஊட்டச்சத்துக் குறைபாட்டின் பொதுவான அறிகுறிகள்:

குழந்தைகள் மற்றும் பெரியவர்களிடம் ஊட்டச்சத்துக் குறைபாடானது பல்வேறு உடலியல் மற்றும் உளவியல் அறிகுறிகளின் வழியே வெளிப்படுகின்றது. குறிப்பாக,

- பசியின்மை அல்லது உணவு மற்றும் பானங்களில் விருப்பமின்மை
- எந்நேரமும் சோர்வாகவும் உடலளவில் பலவீனமாகவும் உணர்தல்
- அடிக்கடி நோய்களுக்கு ஆளாகுதலும், நோயிலிருந்து குணமடைய நீண்ட காலம் எடுத்தலும்
- காயங்கள் ஆறுவதில் காலதாமதம் ஏற்படுதல்
- கவனத்தை ஒருமுகப்படுத்துவதில் சிரமம் மற்றும் அடிக்கடி உடல் குளிர்தல்

இவற்றுடன் மனச்சோர்வு, மன அழுத்தம் மற்றும் கவலை போன்ற உளவியல் ரீதியான மாற்றங்களும் ஏற்படக்கூடும். எனவே, இவ்வாறான அறிகுறிகள் தொடர்ந்து காணப்படும் போது, அவற்றை அலட்சியப்படுத்தாமல் ஆரம்பத்திலேயே உரிய மருத்துவக் கவனத்துடன் அணுகுவது மிக அவசியமாகும்.

## குழந்தைகளிடம் காணப்படும் விசேடமான அறிகுறிகள்:

குழந்தைகளிடம் ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படும்போது, பெரியவர்களுக்குரிய பொதுவான அறிகுறிகளையும் தாண்டிச் சில தனித்துவமான பாதிப்புகளும் வெளிப்படுகின்றன. வயதிற்கேற்ற வளர்ச்சி அல்லது எடை அதிகரிக்காமல் இருத்தல், வழக்கத்திற்கு மாறாக அதிக கோபம், எரிச்சல்,

*"ஊட்டச்சத்துக் குறைபாட்டின் தாக்கம் வெறும் உடல் வளர்ச்சியோடு மட்டும் நின்றுவிடுவதில்லை; அது குழந்தைகளின் நரம்பியல் மற்றும் உளவியல் வளர்ச்சியிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, குழந்தைகளின் சிந்தனைத்திறன், செயலாக்கம், சமூக-உணர்ச்சி வளர்ச்சி மற்றும் உடலியல் இயக்க ஆற்றல்கள் ஆகியவை போதிய ஊட்டச்சத்துடன் நெருங்கிய தொடர்புடையவை."*



> ***குறை ஊட்டமும் மிகை ஊட்டமும் அற்ற வகையில், உடலுக்குத் தேவையான சத்துகளைச் சரியான அளவில் பெறுவதும், சீரான உணவுடன் உடற்பயிற்சியையும் இணைத்துக் கொள்வதும் ஆரோக்கியமான வாழ்விற்கு இன்றியமையாததாகும்.***



சோம்பல் அல்லது பதற்றம் காட்டுதல், மற்றும் தசை வலுக்குறைந்து மற்ற குழந்தைகளுடன் இணைந்து விளையாட முடியாமல் எளிதில் சோர்வடைதல் போன்றவை இவற்றுள் முக்கியமான அறிகுறிகளாகும். இவ்வாறான பாதிப்புகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, உரிய மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஊட்டச்சத்துணவு மூலம் குழந்தைகளுக்கான சுறுசுறுப்பையும் ஆரோக்கியமான வளர்ச்சியையும் மீட்டெடுக்க முடியும்.

இருப்பினும், குழந்தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாடு என்பது வெறும் குடும்ப மட்டத்தோடு முடிந்துவிடும் தனிநபர் பிரச்சினையல்ல; குறிப்பாக, குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட வளர்முக நாடுகளில், அது ஒரு நாட்டின் எதிர்கால மனித வளத்தையும் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியையும் முடக்கும் உலகளாவிய சவாலாகத் தொடர்கிறது. 2020-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட உலகளாவிய மதிப்பீட்டின்படி, ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 14.9 கோடி குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலையிலும் (Stunting), சுமார் 4.5 கோடி குழந்தைகள் கடுமையான உடலிளைப்பு மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டினாலும் (Wasting) பாதிக்கப்பட்டிருந்தனர். எனவே, குழந்தைகளிடம் தென்படும் ஆரம்பகால அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல், சரியான நேரத்தில் ஊட்டச்சத்தும் மருத்துவப் பராமரிப்பும் வழங்குவது அவர்களின் எதிர்கால அறிவுத் திறன், உடலியல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு முதன்மையான அடிப்படையாகும்.

## ஊட்டச்சத்தும் குழந்தைகளின் நரம்பியல் – உளவியல் வளர்ச்சியும்:

ஊட்டச்சத்துக் குறைபாட்டின் தாக்கம் வெறும் உடல் வளர்ச்சியோடு மட்டும் நின்றுவிடுவதில்லை; அது குழந்தைகளின் நரம்பியல் மற்றும் உளவியல் வளர்ச்சியிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, குழந்தைகளின் சிந்தனைத்திறன், செயலாக்கம், சமூக-உணர்ச்சி வளர்ச்சி மற்றும் உடலியல் இயக்க ஆற்றல்கள் ஆகியவை போதிய ஊட்டச்சத்துடன் நெருங்கிய தொடர்புடையவை. வளர்முக நாடுகளில் நிலவும் வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை, தொற்றா நோய்கள் மற்றும் போதிய மன ரீதியான அரவணைப்பின்மை போன்ற காரணிகளுடன் ஊட்டச்சத்துக் குறைபாடும் இணையும்போது, இத்தகைய வளர்ச்சிப் பாதைகள் கடுமையாக முடங்குகின்றன.

அதேவேளை, விட்டமின்கள் மற்றும் தாதுக்களின் பற்றாக்குறை ஆரம்பத்தில் வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், நீண்டகாலத்தில் பாரதூரமான உடல்நலப் பாதிப்புகளை உருவாக்கிவிடும். மறுபுறம், அளவுக்கு அதிகமான ஊட்டச்சத்து உண்பதும் உடற்பருமன் உள்ளிட்ட தொற்றா நோய்களின் அபாயத்தை அதிகரிக்கச் செய்கின்றது. எனவே, குறை ஊட்டமும் மிகை ஊட்டமும் அற்ற வகையில், உடலுக்குத் தேவையான சத்துகளைச் சரியான அளவில் பெறுவதும், சீரான உணவுடன் உடற்பயிற்சியையும் இணைத்துக்கொள்வதும் ஆரோக்கியமான வாழ்விற்கு இன்றியமையாததாகும். இதனையே,

***'மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு'***

என்ற திருக்குறளும் வலியுறுத்துகின்றது. உடலுக்கு ஒத்துவராத உணவுகளைத் தவிர்த்து, அளவோடு உண்டு வாழ்ந்தால் உடலுக்கு எந்தவொரு நோய்ப் பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதே இக்குறளின் தெளிவுரையாகும்.

எனவே, குழந்தைகளின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஊட்டச்சத்து என்பது வெறும் உடலியல் வளர்ச்சிக்கான அடிப்படைத் தேவை மட்டுமன்று; அது அவர்களின் சிந்தனைத் திறன், உணர்ச்சி மேலாண்மை, சமூக உறவுகள் மற்றும் நரம்பியல்-இயக்க ஆற்றல்களின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத அடித்தளமாகும். குறை ஊட்டத்தையும் மிகை ஊட்டத்தையும் ஒருசேரத் தவிர்த்து, உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைச் சரியான விகிதத்தில் வழங்குவதுடன், ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தையும் உடற்பயிற்சியையும் குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்கப்படுத்துவதே ஆற்றல்மிக்கதொரு எதிர்காலத் தலைமுறையை உருவாக்குவதற்கான முதன்மையான வழியாகும்.



sivapalu@thaiveedu.com

## 15

# பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

## மாற்றத்துக்கான கற்றலும் வளர்ச்சியும் 2

எஸ்.கே.விக்னேஸ்வரன்

tg.theeban@gmail.com

**ஒரு செல்வந்தனாகப் படிப்பை நிறுத்தியவன்:**

பத்தொன்பது வயதான ஹாரிஸ், ஒரு புத்திசாலி. கலைத்திறன் மிக்கவன். சற்றே கூச்ச சுபாவமுள்ள, கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவன் அவன். படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டான். அது அவனது தந்தை தேர்ந்தெடுத்திருந்த ஒரு உயர்ந்த தரத்திலுள்ள கல்லூரி. இந்தச் சம்பவம் அந்தக் குடும்பத்தை, ஒரு பாரிய குண்டு வெடிப்பைப் போல் தாக்கியது.

அவனது தந்தை அவனுக்கு ஒரு 'ஸ்போர்ட்ஸ் கார்' வழங்குவதன் மூலம் லஞ்சம் கொடுக்கவும், உலகச் சுற்றுப் பயணச் சீட்டுகளை வாங்கிக் கொடுக்கவும் முயன்றார். அவன் மீண்டும் பள்ளிக்குத் திரும்பினால் அவனுக்குச் சொர்க்கம் கிடைக்கும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது; கல்வியின் முக்கியத்துவம் பற்றி அவனுக்கு வலியுறுத்தப்பட்டது; பணம் சம்பந்தமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டன. கூடவே, அவனுக்கு வழங்கப்படும் நிதி சம்பந்தமான தடைகள் பற்றியும் மறைமுக எச்சரிக்கைகளும் உணர்த்தப்பட்டன. ஹாரிஸ் அந்த அச்சுறுத்தல்களையும், வாக்குறுதிகளையும் எதிர்த்து நின்றான். ஒரு கடிதத்தில், அவன் அந்த முடிவை எடுக்கத் தன்னைத் தூண்டிய காரணங்களை இவ்வாறு விபரித்திருந்தான். அந்தக் கடிதம் இது:

'என் தந்தை பெரிய அந்தஸ்த்துகளைத் தேடுகின்ற ஒருவர். அவரது வாழ்க்கை என்பது, அதன் உயர்ச்சியின் சின்னங்களைத் தேடுகின்ற ஒரு தொடர் பயணமாகவே இருக்கிறது. தான் உண்மையிலேயே வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிட்டேன் என்பதைத் தனக்குத்தானே நிரூபித்துக் கொள்ள, அவர் இப்படியெல்லாம் தன் அதிகாரத்தின் அடையாளங்களைப் பயன்படுத்துகிறார்: அவர், தனது தனிப்பட்ட சாரதியுடன் கூடிய சொகுசுக் காரில் பயணிக்கிறார். எப்போதும் விமானத்தின் முதல் வகுப்பு இருக்கையிலேயே அவர் பயணம் செய்கிறார்; 300 'டொலர்' மதிப்புள்ள 'கோட் சூட்'களையே அவர் அணிகிறார். அது மட்டுமல்ல, அமெரிக்காவிலேயே மிகவும் விலையுயர்ந்த, 'மனநல ஆலோசகர்கள்' பாவிக்கும் சாய்மனைக் கதிரைகளில் தான் அவர் சாய்ந்து இருக்கிறார். அவரது குளியலறையில் தங்கக் குழாய்கள் உள்ளன, அத்துடன் அவரது அலுவலகத்தில் பிக்காசோவின் ஓவியங்கள் இருக்கின்றன. அவரது விலையுர்ந்த 'மகோகனி' மரத்தாலான மேசை... அவ ரது தரை விரிப்பின் நிறம் என்பவை எல்லாமே அவருக்குப் பொருத்தமாக இருக்கின்றன. அவரிடம் ஒரு 'ஃபின்னிஷ் சானா' என்று அழைக்கப்படும் விலையுயர்ந்த குளியலறையும், ஒரு 'பிரெஞ்சு' மதுக்கூடமும் கூட இருக்கின்றன. ஆனால், அவருக்கு இந்த உலகில் ஒரு நண்பர் கூட இல்லை. அவரது ஊழியர்கள் அவரை வெறுக்கிறார்கள். அவர் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார். அவர் முக்கிய பிரமுகர்களிடம் மட்டுமே பேசுகிறார். அவரைப் பொறுத்தவரை, மக்கள் வெறுமனே தொடர்புகளுக்கானவர்கள் மட்டுமே. பழைய அறிமுகங்கள் கைவிடப்பட்டு, சமூக அந்தஸ்துக்கு ஏற்ப சமூக அந்தஸ்த்துள்ள புதியவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். தனது உலகியல் வெற்றிகள் அனைத்தையும் பெற்றிருந்த போதிலும், எனது தந்தை தன்னம்பிக்கை அற்றவராகவும், தோல்விக்கு அஞ்சுபவராகவும் இருக்கிறார். அவரது சுயமரியாதை, அவரது வெற்றிச் சின்னங்களுக்கு ஈடுகொடுப்பதாக இருக்கவில்லை.



‘இப்போது என் தந்தை, நான் அவரது நடுத்தர வர்க்க ஏணிப் படியில் - அதாவது, அவரது பாதுகாப்பு மற்றும் அந்தஸ்துக் கான முன்னேற்றத் திட்டத்தில் - இணைய வேண்டும் என்று விரும்புகிறார். அதாவது, கல்லூரி; பட்ட மேற்படிப்பு; குடும்ப சட்ட நிறுவனம்; அடர்த்தியான கம்பளம் விரிக்கப்பட்ட ஓர் உயர் அதிகாரியின் அறை, ஒரு பெருநிறுவன மனைவி, அத்துடன் ஒரு குறைபாடற்ற ஓய்வூதியம்... என்று இப்படியான ஒரு வாழ்க்கை. என் தந்தையின் இலட்சியம் எவ்வளவுதான் நேர்த்தியாக இருந்தாலும், அதில் எனக்கு எந்தப் பங்கும் தேவையில்லை. என் தந்தை இவை தவிர்ந்த வேறு எந்த இலக்குகளோ, கனவுகளோ, பேரார்வங்களோ இல்லாத ஒரு வரைப் போலவே வாழ்கிறார்.

‘உன் வாழ்க்கையில் நீ என்னதான் செய்யப் போகிறாய்?’ என்று அவர் தொடர்ந்து என்னிடம் கேட்டுக்கொண்டே இருந்தார். நான் ‘எனக்குச் சுற்றித் திரிவதும், ஓவியம் வரைவதும், ஓவியம் வரைந்து வரைந்து சுற்றித் திரிவதும் தவிர வேறெந்தத் திட் டமும் இல்லை.’ என்று அவரிடம் சொன்னேன். அவர் அதிர்ச் சியில் உறைந்து போனார்.

பின்னர் என்னிடம் ‘இன்னும் எவ்வளவு காலம் இப்படிக் (கன வுலகில்) மிதந்துகொண்டு இருக்கப் போகிறாய்?’ என்று அவர் கேட்டார்.

‘என் வாழ்வின் பெரும்பாலான ஓட்டங்களை, நான் ஓவியங் களாக வடிக்கும் வரை’ என்று நான் பதிலளித்தேன்.

ஒரு மனநோய் பிடித்த பைத்தியக்காரனைப் பார்ப்பது போல அவர் என்னைப் பார்த்தார். பின் குழப்பத்துடனும் ஏமாற்றத்து டனும் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

நான் கல்லூரியை விட்டுப் பாதியில் நின்றுவிட்டேன்.

## பொருளாதார நிபுணரான மகன்:

ஒரு தந்தை இவ்வாறு புலம்பினார்: ‘என் மகனுக்குச் சிறந்த பள்ளிகள், முகாம்கள் மற்றும் எண்ணற்ற ஆடம்பரங்களை வாங்கிக் கொடுப்பதற்காக நான் என்னை வருத்திக்கொண் டேன். அதற்குப் பிறகும், அவன் திடீரென்று என்னிட மிருக்கும் பணம் களங்கப்பட்ட பணம் என்பது போல நடந்துகொள்கிறான். அவன் கல்வியி யல் துறையில் பட்டப்படிப்பு படிக்கிறான், ஆனால் ஆசிரியராக விரும்ப வில்லை. அவன் எப்படிப் பிழைக் கப் போகிறான் என்று நான் கேட்டபோது, ‘பணம் சம்பாதிப் பதை விட வாழ்க்கையில் முக் கியமான விஷயங்கள் இருக் கின்றன?’ என்று இகழ்ச்சியு டன் பதிலளித்தான்.



அவன் சொன்னதை விளக்கச் சொன்னபோது, அவன் எனக் குப் பொருளாதாரம் பற்றி ஒரு விரிவுரை செய்தான்.

அவன் சொன்னான்: ‘பொருளாதார நன்மைக்கான உங்களிட முள்ள தார்மீக வழிகாட்டுதல்கள் அனைத்துமே தவறானவை. ‘சேமித்த ஒரு காசு, சம்பாதித்த ஒரு காசுக்குச் சமமாகுமா?’, ‘வீணாக்காதே, பற்றாக்குறை வராது?’ என்ற இதுபோன்ற உண்மைகள் இப்போதெல்லாம் உண்மையாகவே இல்லை. கவிஞர் ‘ஜோன் சியார்டி’ கூறியது போல, ‘சிறு விஷயங்களில் சிக்கனம் என்பது ஒரு பணவீக்க முட்டாள்த்தனம், வீணாக் காதே அதனால் எந்தப் பலனும் இல்லை என்று நம்பும் ‘சிக் கனமான மனிதரும் அவரது கஞ்சத்தனமான மனைவியும்’ நமது பொருளாதாரத்திற்கே ஆபத்தானவர்கள். அவர்களது இந்தச் செயல் இன்னுமொரு பொருளாதார மந்தநிலையை ஏற்படுத்தக்கூடும். உங்கள் யோசனைகள் காலாவதியான யோசனைகள். நீங்கள் பிழைப்பு நடத்துவதில் தான் ஆர்வம் காட்டுகிறீர்கள். நானோ வாழ்வதில் ஆர்வம் காட்டுபவன். அதுதான் வித்தியாசம்.’

அவனுடைய தர்க்கத்தையும் அவனது திமிரையும் கண்டு நான் திகைத்துப் போனேன். அவனுடன் வாதிடுவதற்குப் பதி லாக, நான் அவனது ‘கிற்றாரில்’ இதற்கு எதிரான ஒரு பாடலை வாசித்தேன்: அதில், ‘என் மகன் என்னை ஒரு பழமைவாதி என்றும் வேடிக்கையானவன் என்றும் நினைக்கிறான், ஆனால் அவனோ என் காரை இரவல் வாங்கி ஓட்டி, என் பணத்தைச் செலவழிக்கிறான்?’ என்று எழுதப்பட்டிருந்தது. குறைந்தபட் சம், நாங்கள் இருவரும் நன்றாகச் சிரித்தோம். உண்மை என் னவென்றால், என் மகன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது, அதாவது அவன் வளர்ந்து, மாறி, வாழ்க்கையில் தனக்கான வழியைக் கண்டுபிடிப்பான் என்ற நம்பிக்கை.

## என் மகன் ஒரு புரட்சியாளன்:

ஒரு ‘தீவிரவாத’ மகனின் தந்தை இவ்வாறு புலம்பினார்: ‘இந்த உலகம் பாசாங்கு, வஞ்சகம், ஏமாற்று ஆகியவற்றால் நிறைந் துள்ளது என்பதை என் மகன் கண்டறிந்துவிட்டான். அதனால், அவன் எல்லாவற்றையும் சரிசெய்ய முடிவு செய்திருக்கிறான். திருடர்களுக்கு மரியாதையையும், நரமாமிச உண்ணிகளுக்கு ஊட்டச்சத்தையும், பென்டகனுக்கு (Pentagon - அமெ ரிக்க பாதுகாப்பு அமைச்சகம் அமைந்துள்ள ஐந்துபக்க அலு வலகம்) அமைதியையும் கற்பிப்பதில் அவன் உறுதி யாக இருக்கிறான். வாழ்க்கை முழுமையற்றது என்ற உண்மையை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவன் சொல்கிறான்: ‘இந்த உல கம் எப்படி இருக்கிறது என்பதை நான் காண் கிறேன், ஆயினும் அது எப்படி மாறக்கூடும் என் பதையும் நான் கற்பனை செய்கிறேன்.’ தேவைப்பட்டால், நானே தனி ஒருவனா கவேனும், இந்த உலகத்தையே அன்பு, அமைதி அழகு என்று அனைத்தும் நிறைந்த ஒன் றாக மாற்றப் போகிறேன்.’

‘அவன் தனது மனிதாபிமானத் திட்டத்தில், தன் குடும்பத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மட்டுமே நான் விரும்புகிறேன். வீட்டில் உள்ள சில தாங்க முடியாத நிலைமைகளை மாற்றுவதன் மூலம் அவன் இந்தப் புரட்சியைத் தொடங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உலகில் உள்ள குழப்பங்களைச் சரி செய்யும் அதே வேளையில், அவன் தன் அறையையும் சுத்தம் செய்ய வேண்டும். மனிதகுலத்திற்கு உதவும் அதே வேளையில், வீட்டு வேலைகளிலும் அவன் உதவ வேண்டும்.

‘இந்த எண்ணங்களை நான் எனக்குள்ளேயே வைத்துக்கொள்கிறேன், ஏனென்றால் இவற்றுக்கான அவனது பதில்கள் (எப்படியிருக்கும் என்பது) எனக்கு மனப்பாடமாக இருக்கின்றன. அவனது பதில் எப்படி இருக்கும் என்பதைச் சுருக்கமாக இப்படிச் சொல்லலாம்: ‘ஒரு உலகப் புரட்சியாளர், தனது ஆடைகளைக் களைந்து உரிய இடத்தில் தொங்விடுவது, தனது காலணிகளை மினுக்கி வைப்பது, குப்பைகளை வெளியே எடுத்துச் சென்று குப்பை வாளிகளில் கொட்டுது என்பவற்றையெல்லாம் செய்யவேண்டும் என்று, ஒரு சராசரிக் குட்டி முதலாளித்துவவாதி மட்டுமே எதிர்பார்ப்பான்.’

## என் மகள்: ஒரு மனிதப் பிறவி:

பதின்மூன்று வயதான ரோனா, சமையலறையில் இருந்தபடி தன் வயலினைப் பயிற்சி செய்ய விரும்புகிறாள். இரவு உணவு தயாராகுகின்ற நேரத்தில் - மாலை 5 மணி முதல் 7 மணி வரை - மட்டுமே அவள் வயலின் வாசிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் மாலை, அவள் தன் வயலினை வாசிப்பதற்காக சமையலறைக்கு வந்தாள். அம்மா சொன்னார்: ‘மாலை 6 மணிக்கு சமையலறையில் பயிற்சி செய்யக்கூடாது.’ கோபத்துடன், அவள் தன் வயலினை திருப்பி வைத்து விட்டுத் திரும்பினாள். அப்போது அவளுடைய சகோதரி பியானோப் பயிற்சி செய்வதற்காக வரவேற்பறைக்குச் சென்றாள்.

ரோனா கோபமாக சமையலறைக்குள் திரும்பி வந்து, ‘எனக்கு ஒரு பதில் சொல்! அவள் இப்போது பயிற்சி செய்யலாம், நான் ஏன் செய்யக்கூடாது?’ என்று கத்தினாள்.

அம்மா சொன்னார்: ‘பதில் உனக்குத் தெரியும்.’

மறுநாள் காலை, ரோனா சொன்னாள்: ‘நேற்றிரவு நடந்த செயல்களால் நான் இன்னும் மிகவும் கோபமாக இருக்கிறேன்!’

அம்மா அவளுடைய புகார்களை எழுத்துபூர்வமாக ஓர் அறிக்கையாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டார்.

அது இதோ:

அன்புள்ள அம்மா,

நீங்கள் என்னை ஒரு மனிதப்பிறவி அல்லாதவளைப் போலவே நடத்துகிறீர்கள். நீங்கள் என்னிடம் எப்போதும் சொல்வதெல்லாம், ‘நான் உனக்கு விளக்க வேண்டியதில்லை! நீ ஒரு குழந்தை, நான் ஒரு பெரியவள்!’ என்பதுதான். இது நியாயமற்றது. நான் ஒரு மனிதப் பிறவி, உங்களிடமிருந்தோ, அப்பாவிடமிருந்தோ, அல்லது வேறு யாரிடமிருந்தோ மரியாதையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை எனக்கு உண்டு. நீங்கள் என்னை ஒரு குப்பையைப் போல, மனிதர்களுடன் பழகுவதற்குத் தகுதியற்றவள் போல நடத்துகிறீர்கள். நான் வேறெதையும் கேட்கவில்லை, ஒரு மனிதப் பிறவியைப் போல நடத்தப்பட வேண்டும் என்றுதான் கோருகிறேன்.

என்னிடம் ஒரு நியாயமான பதிலைச் சொல்ல உங்களுக்கு முடியவில்லை, அதனால் உங்கள் பிரபலமான ‘நீயே கண்டுபிடித்துக்கொள்!’ என்ற பதிலைச் சொல்கிறீர்கள். நீங்கள் தடுமாறும் போதெல்லாம் இப்படித்தான் செய்கிறீர்கள் என்பது ஒன்றும் எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறீர்கள்?

எனக்கு நீங்கள் செய்யும் அநியாயத்தைப் போலவே, நான், உங்களுக்கும் அதேபோன்றதைத் திருப்பிக் கொடுக்க விரும்புகிறேன். இங்குள்ள நிலைமை மாற வேண்டும். ஏனென்றால், நான் இனிமேலும் இப்படி, இந்த நிலமையில் இங்கே வாழப் போவதில்லை. தயவுசெய்து உங்கள் பிரபலமான ‘உரைகளில்’ ஒன்றை எனக்கு வழங்குவதற்காக என்னை உங்கள் அறைக்கு அழைக்க வேண்டாம். அது எனக்குப் பிடிக்கவில்லை. எனக்கு நல்ல விளக்கங்களைக் கொடுங்கள். அதுதான் தேவை, மழுப்பலான பதில்களை அல்ல.

அம்மா இவ்வாறு பதிலளித்தார்:

அன்புள்ள ரோனா,

உன்னுடைய ஆழ்ந்த உணர்வுகளை என்னுடன் பகிர்ந்துகொண்டதற்கு நன்றி. உன்னுடைய நேர்மையையும் வெளிப்படைத் தன்மையையும் நான் பாராட்டுகிறேன். உன்னுடைய சில கேள்விகளுக்கு நான் ஏன் பதிலளிப்பதில்லை என்று கேட்கிறாய். இதோ என் விளக்கம்: உனக்கு பதில்கள் தெரிந்திருந்தும் நீ அடிக்கடி கேள்விகள் கேட்பதாக நான் உணர்கிறேன். இருப்பினும், இந்த விஷயத்தில் நீ மிகவும் உறுதியாக உணர்வதால், உனக்கு இருக்கும் உண்மையான கேள்விகள் அனைத்திற்கும் பதிலளிக்க நான் முயற்சிப்பேன். ஒரு மனிதப் பிறவியாக நீ முழு மரியாதை பெறத் தகுதியானவள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அன்புடனும் மரியாதையுடனும்,

அம்மா

பி.கு. நான் இரவு உணவு தயாரிக்கும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலான நேரத்தைத் தவிர, மற்ற எல்லா நேரங்களிலும் எங்கள் சமையலறையில் வயலின் வாசிப்பது வரவேற்கப்படுகிறது.

(தொடரும்...)



vickneaswaran.sk@thaiveedu.com

tg.theeban@gmail.com



# கால இயந்திரம் இல்லாத உலகில் காப்புறுதியின் அவசியம்

செந்தூரன் புனிதவேல்

உலகப்புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளரான எச்.ஜி. வெல்ஸ் (H.G. Wells), 1895-ஆம் ஆண்டில் The Time Machine எனும் புதினத்தை எழுதினார். இது அறிவியல் புனை கதை வகையைச் சேர்ந்த படைப்பாகும். இந்நூல் பின்னர் 'கால இயந்திரம்' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு பல பதிப்பகங்களால் வெளியிடப்பட்டுள்ளது.

ஐன்ஸ்டீன் முன்வைத்த சார்பியல் கோட்பாட்டின்படி, ஒளியின் வேகத்திற்கு அண்மித்த வேகத்தில் பயணிக்கும்போது கால இடைவெளியில் வேறுபாடுகள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. எனினும், மனிதர்கள் தமது விருப்பத்திற் கேற்ப கடந்த காலத்திற்குப் பின்னோக்கிப் பயணித்து நிகழ்வுகளை மாற்றக்கூடிய கால இயந்திரம் இதுவரை நடைமுறையில் கண்டுபிடிக்கப்படவில்லை. இவ்வாறான ஒரு கால இயந்திரம் உண்மையில் கண்டுபிடிக்கப்பட்டால், காப்புறுதித் துறையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படக்கூடும். இதனை ஓர் எளிய கற்பனையின் மூலம் புரிந்துகொள்ளலாம்.

ஒருவர் 2018-ஆம் ஆண்டிற்குத் திரும்பிச் சென்று, அப்போது காப்புறுதி அவசியமில்லை எனக் கருதி காப்புறுதி எடுக்காமல் இருந்ததாகக் கொள்வோம். பின்னர், 2026-ஆம் ஆண்டில் அவரது வீடு வெள்ளத்தால் சேதமடைவதுடன், அவரது வாகனமும் தீக்கிரையாகி, அவருக்கு உடல்நலப் பிரச்சினையும் ஏற்படுகின்றது எனக் கருதலாம். இந்நிலையில் அவர் மீண்டும் கால இயந்திரத்தின் மூலம் 2018-ஆம் ஆண்டிற்குச் சென்று, 'நான் எனது முடிவை மாற்றிக்கொண்டேன், எனக்குக் காப்புறுதி வேண்டும்' என்று கூறினால், கடந்த காலத்திலேயே அந்தக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைக்கலாம். ஆனால், நடைமுறை உலகில் இத்தகைய வாய்ப்பு இல்லை. கால இயந்திரம், குறிப்பாக கடந்த காலத்திற்குச் சென்று ஏற்கனவே எடுக்கப்பட்ட நிதிசார் முடிவுகளை மாற்றும் வகையிலான கால இயந்திரம், இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயங்களிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக நிகழ்காலத்திலேயே காப்புறுதி போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியத்துவம் பெறுகின்றது. எனது தந்தையார் அடிக்கடி, 'நாளை என்பதும், பின்பு என்பதும் இல்லை என்பதற்கான அறிகுறி' என்று கூறுவார். காப்புறுதி தொடர்பாகவும் பலர், 'நான் இதைச் செய்ய வேண்டும்; இப்போது முடியவில்லை, ஆனால், நிச்சயமாகப் பின்னர் செய்வேன்' என்று கூறுவதுண்டு. ஆனால், இத்தகைய 'பின்னர்' என்ற எண்ணமே சில நேரங்களில் முக்கியமான வாய்ப்புகளைத் தவறவிடச் செய்யக்கூடும். காப்புறுதியின் கட்டணம் காலப்போக்கில் மாறக்கூடும். அதேபோன்று, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒருவர் காப்புறுதி பெறுவதற்குத் தகுதியற்ற நிலையும் ஏற்படலாம். ஒருவர் ஆரோக்கியமாகவும், தொழிலில் ஈடுபட்டவராகவும், எந்தவித விபத்துமின்றி வாகனம் செலுத்துபவராகவும் இருக்கும்போது, காப்புறுதியின் அவசியம் அவருக்குத் தெளிவாகத் தெரியாமல் இருக்கலாம். 'நான் பயன்படுத்தாத ஒன்றுக்காக ஏன் ஒவ்வொரு மாதமும் பணம் செலுத்த வேண்டும்?' என்ற எண்ணமும் ஏற்படலாம். இங்கே காப்புறுதியின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்துகொள்வது அவசியமாகின்றது.

சமையலறையில் தீயணைப்புக் கருவி வைக்கப்படுவது அங்கு தீப்பற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பினால் அல்ல. ஒருவர் வாகனம் செலுத்தும்போது பாதுகாப்புப் பட்டியை அணிவது விபத்து ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பினாலும் அல்ல. அதேபோன்று, ஒருவர் குறிப்பிட்ட நாளில் மரணமடைவார் என்ற எதிர்பார்ப்பில் ஆயுள் காப்புறுதி செய்வதில்லை. மாறாக, நாம் விரும்பாத எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்பட்டால் அவற்றினால் ஏற்படக்கூடிய பொருளாதார இழப்புகளைக் குறைப்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கை ஏற்பாடாகவே காப்புறுதி அமைகின்றது. எனவே, ஆபத்து ஏற்பட்ட பின்னர் பாதுகாப்பைத் தேடுவதைக் காட்டிலும், ஆபத்து ஏற்படுவதற்கு முன்னரே அதற்கான பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வதே காப்புறுதியின் அடிப்படை நோக்கமாகும்.

### இன்றைய உங்கள் ஆரோக்கியம் ஒரு சொத்து:

இன்றைய உலகில் மக்கள் தங்களுடைய மதிப்புமிக்க சொத்துகளாக வீடு, வாகனம், முதலீடுகள் போன்றவற்றையே

பொதுவாகக் கருதுகின்றனர். ஆனால், உண்மையில் மனிதரின் மிகப் பெறுமதியான சொத்து அவனது ஆரோக்கியமே ஆகும். ஒருவர் ஆரோக்கியமாக இருக்கும்போது, காப்புறுதிக்கான கட்டணமும் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கலாம். மேலும், பல்வேறு வகையான காப்புறுதிகளைப் பெறுவதற்கும், அதிகளவிலான தொகைக்கு காப்புறுதி செய்வதற்கும் வாய்ப்புகள் கிடைக்கலாம். ஆரோக்கியமாக இருக்கும் காலத்தில் பெறக்கூடிய சில காப்புறுதிகளை, பின்னர் உடல்நலக் குறைபாடு ஏற்பட்டால் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்படலாம்.

ஆரோக்கியக் குறைபாடுகள் பொதுவாக ஏற்படலாம், சில வேளைகளில் அவை திடீரெனவும் தோன்றக்கூடும். அவற்றில் சில மனிதரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகவும் இருக்கலாம். எனவே, அனைத்தும் சிறப்பாக இருக்கும் காலத்திலேயே தேவையான காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். நாம் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் காலத்திலேயே காப்புறுதியைப் பெற்று வைத்துக்கொள்வது சிறந்ததாகும். பொதுவாக, இளம் வயதில் ஆரோக்கியமாக இருக்கும்போது, ‘எனக்கு எதுவும் ஏற்படாது; எனவே காப்புறுதி தேவையில்லை’ என்று சிலர் எண்ணுகின்றனர். இது, ‘எனது வாகனத்தின் டயர் இதுவரை ஒரு போதும் பழுதடைந்ததில்லை; ஆகவே, மேலதிகமாக ஒரு உதிரி டயரை ஏன் வைத்திருக்க வேண்டும்?’ என்று கேட்பதற்கு ஒப்பானதாகும். எதிர்பாராத சூழ்நிலைகளில் ஏற்படும் சுகயீனங்கள் மற்றும் உடல்நலப் பாதிப்புகளிலிருந்து நிதிப் பாதுகாப்பைப் பெறுவதற்காகவே காப்புறுதி முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, ஆரோக்கியமாக இருக்கும் காலத்திலேயே காப்புறுதியைப் பெற்றுக்கொள்வது அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விடயமாகும்.

## உழைப்புத் திறனிழப்புக் காப்புறுதி:

Disability Insurance எனப்படும் உழைப்புத் திறனிழப்புக் காப்புறுதி, ஒருவரது வருமானத்தைச் சார்ந்திருக்கும் குடும்பத்திற்கு முக்கியமான நிதிப் பாதுகாப்பை வழங்கக்கூடியதாகும். நோய், விபத்து அல்லது வேறு காரணங்களால் ஒருவர் தமது பணியைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டால், அதன் காரணமாக ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்வதில் இவ்வகைக் காப்புறுதி உதவக்கூடும். ஒருவரால் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டாலும், குடும்பத்தின் அன்றாடச் செலவுகள் நின்றுவிடுவதில்லை. வீட்டுச் செலவுகள், பிள்ளைகளின் உணவு மற்றும் கல்வித் தேவைகள், கடன் தவணைகள் போன்றவை தொடர்ந்து இடம்பெறும். எனவே, எதிர்பாராத உழைப்புத் திறனிழப்புக் காரணமாக ஏற்படும் வருமான இழப்பிலிருந்து குடும்பத்தைப் பாதுகாப்பதற்கும் உழைப்புத் திறனிழப்புக் காப்புறுதி உதவுகிறது.

ஒருவர் தனது எதிர்கால உழைப்பின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தாமல், குறிப்பிட்ட சொத்துக்களுக்கு மட்டும் அதிகளவிலான காப்புறுதியைப் பெற்றிருப்பது, பூந்தோட்டத்தில் உள்ள சிறிய கொட்டிலுக்கு ஐந்து டொலர் மதிப்புள்ள பூட்டு ஒன்றைப் பொருத்திவிட்டு, வசிக்கும் வீட்டின் முன்கதவைப் பூட்டாமல் இருப்பதற்கு ஒப்பானதாகும். எனவே, ஒருவரின் வருமானம் மற்றும் எதிர்கால நிதிப் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு காப்புறுதித் திட்டங்களைத் தெரிவுசெய்வது அவசியமாகும்.

உழைப்புத் திறனிழப்புக் காப்புறுதியின் முக்கிய நோக்கம், நோய் அல்லது இயலாமை காரணமாக வேலைக்குச் செல்ல முடியாத காலப்பகுதியில் ஏற்படும் வருமான இழப்பை ஓரளவிற்கு ஈடுசெய்வதாகும். இதன் மூலம், வேலை செய்ய முடியாத காலத்திலும் தனிநபருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தேவையான நிதிப் பாதுகாப்பைத் தொடர்ந்து பேணுவதற்கு உதவ முடியும்.

## ஆயுள் காப்புறுதி – மரணத்தைப் பற்றியது மட்டுமல்ல:

ஆயுள் காப்புறுதி என்பது மரணத்துடன் தொடர்புடைய பாதுகாப்பு மட்டுமே எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. மேலும், அடமானக் கடனைப் பாதுகாப்பதற்கும் பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மட்டுமே அது பயன்படும் என்ற கருத்தும் காணப்படுகிறது. எனினும், ஆயுள் காப்புறுதி பல்வேறு நிதித் தேவைகளை நிறைவேற்றுவதற்கான முக்கியமான நிதிப் பாதுகாப்பு வழிமுறையாக விளங்குகின்றது. நிதித் திட்டமிடல், எதிர்பாராத சூழ்நிலைகளால் ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்தல், கடன்களைத் தீர்த்தல், பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகளுக்கான நிதியை ஏற்படுத்துதல், கல்விச் செலவுகளைச் சமாளித்தல், வாழ்க்கைத் துணைக்கு நிதிப் பாதுகாப்பை வழங்குதல், வியாபாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் வாரிசுகளுக்கான நிதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்ற பல்வேறு தேவைகளுக்கு ஆயுள் காப்புறுதியின் மூலம் கிடைக்கும் நிதி உதவியாக அமையக்கூடும்.



**“எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியாத நிலையில், காப்புறுதி என்பது அத்தகைய சூழ்நிலைகளுக்கு நிதி ரீதியாகத் தயாராக இருப்பதற்கான ஒரு முக்கியமான வழிமுறையாகும்.”**

**காப்புறுதி என்பது எதிர்பாராத சூழ்நிலைகளுக்காக முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் ஒரு நிதிப் பாதுகாப்பு ஏற்பாடாகும். அதனைத் தேவைப்படும் நேரத்தில் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதைவிட, அனைத்தும் சிறப்பாக இருக்கும் காலத்திலேயே பொருத்தமான காப்புறுதியைப் பெற்றுவைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.**

### தீவிர நோய்க் காப்புறுதி (Critical Illness Insurance):

தீவிர நோய்க் காப்புறுதி என்பது எதிர்பாராத உடல்நலப் பாதிப்புகளுக்கு முன்கூட்டியே நிதி ரீதியாகத் தயாராக இருப்பதற்கான ஒரு முக்கியமான பாதுகாப்பு ஏற்பாடாகும். ஒருவருக்கு தீவிரமான நோய் ஒன்று ஏற்பட்டால், மருத்துவச் சிகிச்சைக்கான செலவுகளுடன் பல்வேறு கூடுதல் நிதிச் சுமைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். இத்தகைய சூழ்நிலையில், தீவிர நோய்க் காப்புறுதி மூலம் கிடைக்கும் நிதி உதவி குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை ஓரளவுக்குக் குறைக்க உதவும்.

தீவிர நோய் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அடமானக் கடனுக்கான தவணைகளைச் செலுத்துதல், மருத்துவச் செலவுகளைச் சமாளித்தல், சிகிச்சைக்காக வேறு இடங்களுக்குச் செல்வதற்கான பயணச் செலவுகளை ஈடுசெய்தல், குடும்பத்தின் அன்றாடச் செலவுகளைப் பேணுதல் போன்ற பல்வேறு தேவைகள் தொடர்ந்து காணப்படும். அதேவேளை, நோய் காரணமாக வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால் வருமான இழப்பும் ஏற்படலாம். மேலும், வீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒருவரை பணியமர்த்த வேண்டிய சூழ்நிலையும் உருவாகலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில், தனிநபரின் மருத்துவத் தேவைகளுடன் அவரது குடும்பத்தின் அன்றாடத் தேவைகளையும் சமாளிப்பதற்கு நிதிப் பாதுகாப்பு அவசியமாகிறது.

ஒரு குடும்பத்தில் தீவிரமான நோய் தோன்றும்போது, நோயை எதிர்கொள்வதற்கான மனவேதனையுடன் நிதிச் சுமைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவது நிலைமையை மேலும் கடினமாக்கலாம். எனவே, இத்தகைய எதிர்பாராத சூழ்நிலைகளுக்கு முன்கூட்டியே தயாராக இருப்பது முக்கியமானதாகும். தீவிர நோய்க் காப்புறுதி, நோயின் தாக்கத்தால் ஏற்படக்கூடிய சில நிதிச் சுமைகளைச் சமாளிப்பதற்கான ஒரு வழிமுறையாக அமைகிறது.

காப்புறுதியின் தனிச்சிறப்புகளில் ஒன்று, அதைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஒருபோதும் ஏற்படக்கூடாது என்றே ஒருவர் விரும்புவதாகும். அதேவேளை, எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டு காப்புறுதியைப் பயன்படுத்த வேண்டிய நிலை வந்தால், முன்கூட்டியே அதனைப் பெற்றுவைத்திருப்பதன் பயனை உணர முடியும். இந்த வகையில் காப்புறுதியை ஒரு குடையுடன் ஒப்பிடலாம். வெயில் நிறைந்த ஒரு நாளில் குடையை எடுத்துச் செல்வது தேவையற்ற சுமையாகத் தோன்றலாம். ஆனால், எதிர்பாராத விதமாக மழை பெய்யும்போது அதனை எடுத்துச் சென்றிருப்பதன் பயனை உணர முடியும். அதுபோலவே, காப்புறுதி தேவைப்படாத காலத்தில் அது தேவையற்றதாகத் தோன்றினாலும், எதிர்பாராத நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும்போது அது வழங்கக்கூடிய நிதிப் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாக அமையலாம்.

எனவே, காப்புறுதியைப் பெறுவதை ஏன் பிற்போட வேண்டும்? நாளை என்ன நடைபெறும் என்பதை யாராலும் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியாது. ஒருவர் பல தசாப்தங்கள் முழுவதும் ஆரோக்கியமாக வாழலாம்; ஒருபோதும் விபத்துக்கு உள்ளாகாமல் இருக்கலாம்; அவரது வீட்டிலும் எதிர்பாராத பாதிப்புகள் எதுவும் ஏற்படாமல் இருக்கலாம். இவை அனைத்தும் மகிழ்ச்சியளிக்கும் விடயங்களே. ஆனால், காப்புறுதியின் நோக்கம் ஏதேனும் துரதிர்ஷ்டவசமான சம்பவம் நிச்சயமாக நடைபெறும் என்று கருதுவது அல்ல. எதிர்பாராத ஒரு நிகழ்வு ஏற்பட்டால், அதனால் ஏற்படக்கூடிய நிதிச் சுமையிலிருந்து தனிநபரையும் அவரது குடும்பத்தினரையும் பாதுகாப்பதே காப்புறுதியின் அடிப்படை நோக்கமாகும்.

காப்புறுதி என்பது எதிர்பாராத சூழ்நிலைகளுக்காக முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் ஒரு நிதிப் பாதுகாப்பு ஏற்பாடாகும். அதனைத் தேவைப்படும் நேரத்தில் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதைவிட, அனைத்தும் சிறப்பாக இருக்கும் காலத்திலேயே பொருத்தமான காப்புறுதியைப் பெற்றுவைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

இன்றைய உலகில் மனிதரின் ஆரோக்கியம், வருமானம் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் எதிர்பாராத சூழ்நிலைகளால் பாதிக்கப்படக்கூடியவை. எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியாத நிலையில், காப்புறுதி என்பது அத்தகைய சூழ்நிலைகளுக்கு நிதி ரீதியாகத் தயாராக இருப்பதற்கான ஒரு முக்கியமான வழிமுறையாகும். ஒருவேளை எதிர்காலத்தை முன்கூட்டியே அறிந்துகொள்ளக்கூடிய அல்லது காலத்தைப் பின்னோக்கிச் செல்லக்கூடிய ஒரு வழிமுறை கண்டுபிடிக்கப்பட்டால், காப்புறுதியின் தேவையும் வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால், அத்தகைய சாத்தியம் நிஜமாகும் வரை, எதிர்பாராத ஆபத்துகளிலிருந்து நிதிப் பாதுகாப்பைப் பெறுவதற்கு காப்புறுதி முக்கியமானதாகவே உள்ளது.

எனவே, ஒருவர் ஆரோக்கியமாகவும் பொருளாதாரரீதியாக வசதியாகவும் இருக்கும் காலத்திலேயே தனது தேவைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான காப்புறுதிகளைப் பெற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத சூழ்நிலைகளுக்கு முன்கூட்டியே தயாராக இருப்பது சிறந்ததாகும். ‘வருமுன் காப்போம்’ என்ற எண்ணத்துடன், நமக்கும் நமது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவோம்.



senthuran.p@thaiveedu.com

# இலையுதிர்கால
# வீட்டுப் பராமரிப்பு

வேலா சுப்ரமணியம்

நாம் எமது வாழ்நாளில் செய்திருக்கக்கூடிய பாரிய முதலீடு 'வீடு' என்று சொல்வதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எனவே அத்தகைய முதலீட்டைப் பேணி உரிய முறைப்படி பராமரிக்க வேண்டியது மிக அவசியமானது. தவறும் பட்சத்தில் அல்லது கவனயீனமாக இருந்துவிட்டால் காலப்போக்கில் அதிக செலவினை எதிர்கொள்ள வேண்டி வரலாம். மறுவார்த்தைகளில் கூறுவதானால் நாங்கள் போட்ட முதலீட்டிற்கேற்ற முழுப் பலாபலனையும் அடையமுடியாது போகலாம். இதனைக் கருத்திற்கொண்டே வீட்டுப் பராமரிப்புப் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றது.

வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மாறிவரும் பருவகால நிலைக்கேற்றவாறு நாமும் வீட்டுப் பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பருவகால மாற்றத்தைக் கருத்திற்கொண்டு பராமரிப்பு வேலைகளை முக்கிய 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

- வசந்தகாலப் பராமரிப்பு (Spring)
- கோடைகாலப் பராமரிப்பு (Summer)
- இலையுதிர்காலப் பராமரிப்பு (Fall)
- குளிர்காலப் பராமரிப்பு (Winter)

வழமைக்கு மாறாக இவ்வாண்டு குளிர்காலம் நேரகாலத்திற்கே தொடங்கிவிட்டதுபோலத் தெரிகிறது. எனவே அதற்கேற்றபடி எமது பராமரிப்பு வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். கோடைகாலத்தில் ஓடியாடித் திரிந்த நாம் வரப்போகும் 4-5 மாதங்களுக்கு நான்கு சுவர்களுக்கு மத்தியில் அடைபட்டுக் கிடப்பது மட்டுமல்லாது எமது நடவடிக்கைகளையும் குறுகிய வட்டத்துள் அடக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. அத்தகைய குளிர்காலத்திற்கு ஏற்றவாறு முன்கூட்டியே வீட்டினை, வீட்டுச் சூழலைத் தயார்படுத்துவதையே இலையுதிர்காலப் பராமரிப்பு குறித்து நிற்கின்றது. மறுவார்த்தைகளில் கூறுவதானால் வெள்ளம் வருமுன்னரே அணைகட்டுதல் அவசியமல்லவா?

### வெப்பமாக்கி (Furnace):

வீட்டில் இருக்கக்கூடிய இயந்திரக் கருவிகளில் வெப்பமாக்கி (Furnace) மிக முக்கியமானது. எதிர்கொள்ளப் போகும் குளிர்காலத்திற்கேற்ப அதனைத் தயார்நிலையில் வைத்துக்கொண்டால் பெருங்குளிர்நேரத்தில் ஏற்படப்போகும் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். பெரும்பாலான வீடுகளில் எரிவாயுவில் இயங்கும் (Gas Furnace) வெப்பமாக்கிகளே பயன்பாட்டில் உள்ளன. இத்தகைய வெப்பமாக்கிகளைக் குறைந்தது இரண்டு வருடத்திற்கொரு முறை தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் (Qualified Technician) மூலம் சரிபார்த்துக்



tg.theeban@gmail.com



கொள்வது நல்லது. சிலர் 'Winter Tune up' என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் தயார்படுத்திக் கொள்வதும் உண்டு.

எண்ணெயில் இயங்கும் (Oil Furnace) ஆக இருந்தால் ஒவ் வொரு வருடமும் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர் களின் உதவியுடன் சரிபார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

- வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Air Filter) 3 மாதத்திற் கொருமுறை மாற்ற வேண்டும். வெப்பமாக்கியின் தொழிற் பாடு குளிர்காலத்தில் தொடர்ச்சியாக இருக்கப்போவதால் முன்கூட்டியே இதனை மாற்றித் தயார் நிலையில் வைத்தி ருத்தல் மிகப் பொருத்தமானது. ஆரோக்கியமான வாழ் விற்கு இச்செயற்பாடு மிக இன்றியமையாதது. தொய்வு, ஒவ்வாமை (Ashma, Alergy) போன்ற நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீட்டில் இருந்தால் வடிகட்டியை மாற்றும் போது ஏற்ற தரமான வடிகட்டிகளை மாற்றுவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். புதிய வடிகட்டியைப் போடும் போது வடிகட்டியில் போடப்பட்டிருக்கும் அம்புக்குறி குளிர்காற்றுப் பகுதியிலிருந்து வெப்பமாக்கி நோக்கிப் போகும் விதத்தில் போடப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
- முதன்மை விளக்கு (Pilot Lamp) அணைக்கப்பட்டிருந் தால் அந்த விளக்கினைக் கொழுத்தித் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வெப்பமாக்கி 8-9 வருடத்திற் குட்பட்டதாக இருந்தால் Pilot Lamp இல்லாமல் இருக் கலாம். அதாவது புதிய வெப்பமாக்கிகளில் பொருத்தப் பட்டிருக்கும் Electronic Ignitor தேவையான போது மட்டும் இயங்கி பொறியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்தது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### Heat Register:

இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Duct Cleaning செய்வது நல்லது. தவறினால் இக்காலப்பகுதியில் ஒவ் வொரு அறைகளிலும் மற்றைய வீட்டுப் பகுதிகளிலும் இருக் கக்கூடிய வெப்பமூட்டும் வழிகளுக்கான தடைகளைத் (Heat Register) திறந்து சுத்தம் செய்து (Vacum) வைத்துக்கொள் வது நல்லது.

### தண்ணீர்க் குழாய்கள் (Pipes):

கோடைகாலத்தில் முன்வளவு, பின்வளவு போன்ற இடங்க ளுக்கு இருக்கக்கூடிய தண்ணீர்க் குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சியிருப்போம். தற்போது அவற்றின் பயன்பாடு அடுத்த கோடைகாலம் வரை இருக்காது. எனவே இவற்றுக்குரிய கட் டுப்படுத்திகள் (Control Valve) வீட்டிற்குள் உள்ள நிலக்கீழ்



அறையில் இருக்கும். பொதுவாக முன்பக்கத்திற்கு ஒன்றும் பின்பக்கத்திற்கு ஒன்றுமாக 2 கட்டுப்படுத்திகள் பொருத்தப் பட்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து இறுகப் பூட்டிவிடு தல் மிக அவசியம். தவறும் பட்சத்தில் குளிர் காரணமாகத் தண்ணீர் உறைநிலைக்குச் செல்லும் போது குழாய்கள் வெடித்து வீட்டிற்குள் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பிருக் கிறது.

அத்துடன் வெளியில் உள்ள பிளாஸ்ரிக் குழாய்களில் இருக்கும் தண்ணீரைத் திறந்து வடியவிடுதல் வேண்டும். அல்லது அத்தகைய குழாய்களிலும் வெடிப்பு ஏற்படுவதால் அடுத்த வருடம் பாவிக்க முற்படும்போது ஒழுக்கு ஏற்படு வதைக் கண்டு புதிதாக அவற்றை மாற்ற வேண்டிய நிலை உருவாகும்.

### குளிரூட்டி (AC):

இனி வரப்போகும் 6 - 7 மாதங்களுக்கு குளிரூட்டியின் தேவை இருக்காது எனவே அதனை உரிய முறையில் பேணி னால் அதன் ஆயுட்காலத்தைக் கூட்ட வாய்ப்பிருக்கும். குளி ரூட்டிகளைக் கொட்டும் பனியில் மூழ்க விடுவதைவிட உரிய உறைகளைப் போட்டு மூடி வைத்தல் நல்லது. துருப்பிடித் தலைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிப் பகுதிக்கு 'Anti Rust Spray' அடித்த பின்னர் மூடிவிடுதல் நல்லது. 6 - 7 டொலர்களுக்கு வாங்கக்கூடிய Anty Rust Spray பல தட வைகள் பாவிக்கப் போதுமானது.

### Weather Stripes:

தலைவாசற் கதவு, பின்கதவு, கராஜ் கதவு என்பன குளிர் உட்புகாதவாறு மூடப்படுகின்றனவா ? என்பதை உறுதி செய் தல் வேண்டும். இடைவெளிகள் காணப்படும் பட்சத்தில் கால நிலைக்கேற்ற Weather Stripe-ஐ பொருத்தி விடுதல் அல் லது சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும். வருடாந்தம் ஏற் படும் வெப்பமாக்கலுக்கான செலவின் கணிசமானளவு திருப் திகரமில்லாத வாசல்களின் ஊடாக ஏற்படுவதாகப் பல அறிக்கைகள் கூறுகின்றன.

### ஈரப்பதனாக்கி (Central Humidifer):

குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னரே ஈரப்பதனாக்கிக் குரிய வடிகட்டிகளைச் (Evaporator grid) சுத்தம் செய்து வைத்திருப்பது நல்லது. ஒவ்வொரு வருடமும் இலையுதிர்கா லப்பகுதியில் இத்தகைய வடிகட்டிகளையும் மேலதிக நீர் வழிந்தோடும் குழாய்களையும் நீரினால் கழுவிச் சுத்தம் செய்வதை ஒரு பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளல் நல்லது.



## Garage Man–Door:

கராஜ்ஜில் இருந்து வீட்டிற்குள் செல்லும் கதவு தானே இறுக்கமாக மூடவேண்டியது மிக அவசியம். குளிர்காலத்தில் ஊர்திகளை வெப்பமாக்குவதற்காகக் கராஜ்ஜின் உள்ளே இயங்க விடுவதும், நிறம், மணம் அற்ற காபன்மொனோக்சைட் வாயு பாதுகாப்பற்ற கதவுகளின் ஊடாக வீட்டிற்குள் செல்வதும், இதன் நச்சுத் தன்மை காரணமாகப் பலர் உயிரிழப்பதும் நாம் வருடா வருடம் கனடாவில் அறியும் செய்திகள். இத்தகைய கதவுகள் தானே மூடப்படுவதற்காகப் பொருத்தப்பட்டிருக்கும் ‘Auto Closer’ சரியாகச் செயற்படுகின்றதா ? என்பதைப் பரிசோதித்து அதன் விசையை உரிய நிலைக்குச் சரிசெய்து விடவேண்டியது மிக அவசியம்.

## கூரை வடிகால்: (Gutters):

கூரை வடிகால்களில் சருகுகள் தேங்கிக் கிடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றைச் சுத்தம் செய்து அத்துடன் தண்ணீர் ஒழுங்காகக் கீழ்நோக்கிச் செல்லும் குழாயினூடாக



(Downspout) அகற்றப்படுகின்றதா ? என்பதை உறுதிப்படுத்துதல் நல்லது.

## குறிப்பு:

சுற்றுப் புறங்களில் அதிக மரங்கள் உள்ளவர்கள் Gutters-க்குரிய துவாரமிடப்பட்ட மூடிகளைப் பொருத்துவதன் மூலம் சுத்தம் செய்யும் மேலதிகப் பழுவைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஜன்னல்கள் மற்றும் கூரையில் கண்ணாடிகள் (Sky Light) பொருத்தப்பட்டிருந்தால் அவை இறுக்கமாக மூடப்படுகின்றனவா ? என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

கோடைகாலத்திற்குரிய யன்னல் திரைச்சீலைகளை மாற்றிவிட்டு குளிரை எதிர்க்கக்கூடிய திரைச்சீலையை மாற்றுபவர்கள் இக்காலப்பகுதியில் அதனையும் மறக்காது செய்தல் வேண்டும்.

வீடுகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக யன்னல் கண்ணாடிகளில் நீர்ப்படிவு ஏற்படுவதை அவதானித்திருக்கலாம். குறிப்பாகத் திறக்கக்கூடிய யன்னல் பகுதிக்கு உட்பக்கமாகப் போடப்பட்டிருக்கும் Net அடியிலேயே அதிகளவு நீர்ப்படிமானம் ஏற்படுவது, வழிந்தோடுவது, பங்கசு பிடிப்பது போன்ற பல இடர்களைக் காணக்கூடியதாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்பவர்கள் முன்கூட்டியே அத்தகைய Net-களை எடுத்து வைத்துவிட்டு மீண்டும் கோடைகாலத்தில் போடலாம். இத்தகைய Net-கள் காற்றோட்டத்திற்கு இடையூறு செய்வதாலேயே அத்தகைய இடர்கள் ஏற்படுகின்றன. ஆனால், உயர்ந்த மாடிகளில் இருப்பவர்கள் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு அதனைத் தவிர்த்துவிட வேண்டும்.

Smoke Detectors + Carbon Monoxide Detectors என்பன உரிய முறையில் வேலை செய்கின்றனவா ? என்பதனை உறுதிசெய்தல் வேண்டும். ஏனெனில் குளிர்காலத்தில் இவற்றின் தொழிற்பாடு அதிகளவில் தேவைப்படும்.

## முக்கிய குறிப்பு:

எரிபொருளில் இயங்கும் புல் வெட்டும் இயந்திரத்தை வைத்திருப்பவர்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம். அதனை எவ்வாறு குளிர்காலத்தில் பாதுகாப்பது என்பதே.

இதைப் பலரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. புல் வெட்டும் இயந்திரத்தினை உரியமுறைப்படி பாதுகாக்காவிட்டால் வரப்போகும் கோடைகாலத்தில் அதனை முதற்தரம் இயங்கவைக்கப் படாதபாடு படவேண்டியிருக்கும். அல்லது அதனைத் திருத்துபவர்களிடம் எடுத்துச் சென்று பணம் செலவு செய்து குணப்படுத்திய பின்னர் பாவிக்க வேண்டியிருக்கும். இதற்கான மாற்று வழி மிக இலகுவானது.

இந்த வருடம் கடைசியாகப் புல் வெட்டிய பின்னர் இயந்திரத்திலுள்ள கொள்கலனில் இருக்கும் பெற்றோலை (gas) முற்றாக எடுத்து விடவேண்டும்.

இயந்திரத்தை ஒரு பக்கமாகச் சரித்து ஒரு பழைய மாஜரின் பெட்டியில் பெற்றோலை மிக இலகுவாக எடுத்து விடலாம். அதன் பின்னர் அவ்வியந்திரத்தை ஸ்டார்ட் செய்து தானாக அது நிற்கும் வரை இயங்கவிடவும். அதாவது ‘காபோரேற்றரில்’ இருக்கும் பெற்றோல் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அதன் பின்னர் சாதாரணமாக ஒரு இடத்தில் பனியின் தாக்கம் நேரடியாக இல்லாதவாறு பாதுகாத்து விடலாம். அடுத்த வருடம் பெற்றோலை நிரப்பிய பின்னர் வழமை போல 3 தடவை ‘பம்’ செய்துவிட்டு ஸ்டார்ட் செய்தால் இயந்திரம் மிக இலகுவாகத் தயாராகிவிடும்.



velasubramaniam@thaiveedu.com

குமார் புனிதவேல்

tg.theeban@gmail.com




# காதல் தந்த காயம்...
## காலத்துக்குத் தந்த பேரறம்

தமிழ்நாட்டின் பெருமையை எடுத்துரைக்க வந்த மகாகவி பாரதியார், 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' எனச் சிலப்பதிகாரக் காப்பியத்தைப் போற்றிப் புகழ்கின்றார். அதுமட்டுமன்றி, திருவள்ளுவர், கம்பன் மற்றும் இளங்கோவடிகள் ஆகிய பெருங்கவிகளை ஒருங்கிணைத்து, தமிழ்ப் பண்பாட்டின் உன்னதத்திற்குச் சான்றாக அவர்களின் படைப்புகளை அடையாளப்படுத்துகின்றார். செவ்வியல் இலக்கியமான சிலப்பதிகாரத்தின் முதன்மைப் பெண் மாந்தரான கண்ணகி, தமிழ்நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் 'பத்தினித் தெய்வம்' என்ற பெயரில் வரலாற்று ரீதியாகவும் சமய-பண்பாட்டு ரீதியாகவும் போற்றப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரம் குறிப்பிடும் சேரன் செங்குட்டுவனின் காலத்துடன் வரலாற்று ரீதியாகத் தொடர்புபடுத்தப்படும் முதலாம் கஜபாகு மன்னன், இலங்கையில் பத்தினி வழிபாடு பரவுவதற்குக் காரணமான ஆளுமையாகக் கருதப்படுகின்றான். இலங்கையின் வரலாற்று மரபுகளில் கஜபாகு மன்னனின் இப்பண்பாட்டுப் பங்களிப்பு முக்கிய இடம்பெறுகின்றது. இலங்கையின் இராகமப் பகுதியை அண்டிய நாவகமுவ பகுதியில் பத்தினித் தெய்வத்திற்காக அமைக்கப்பட்டிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம், பின்னாளில் ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்பால் அழிக்கப்பட்டதாகவும், அப்பகுதியில் வாழ்ந்த சிங்களப் பெண்கள் 'எங்கள் பத்தினித் தெய்வம்' எனக் கூறி அத்தெய்வ வழிபாட்டைத் தொடர்ந்து பேணியதுடன் ஆலயத்தையும் மீள அமைத்தனர் என்றும் வாய்மொழி வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. இச்சம்பவம், தமிழ் மொழிக் காப்பியத்தின் முதன்மைப் பெண் மாந்தரான கண்ணகி, எவ்வாறு எல்லைகளைக் கடந்து இலங்கையின் சிங்கள மக்களின் சமய-பண்பாட்டு நினைவிலும் பத்தினித் தெய்வமாக நிலைபேறு பெற்றார் என்பதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

கண்ணகியைக் கதாநாயகியாகக் கொண்டு இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில், மாதவி என்னும் சுயசார்பான கலை

ஆளுமை மிக்க பெண் பாத்திரமும் மிக முக்கிய இடம் பெறுகின்றது. கண்ணகி வணிகர் சமூகத்தைச் சேர்ந்தவளாகவும், மாதவி கலைப் பாரம்பரியத்தைக் கொண்ட கணிகையர் சமூகத்தைச் சேர்ந்தவளாகவும் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். பண்டைய தமிழ்ச் சமூகத்தில் ஆடல், பாடல் உள்ளிட்ட நுண் கலைகளில் சிறந்து விளங்கிய நாடகக் கலைஞர்கள் வாழ்ந்த சமூகப் பிரிவையே இக் 'கணிகையர் சமூகம்' குறிக்கின்றது. இத்தகைய பெண்களைத் திருவள்ளுவர் திருக்குறளில் ‘வரைவின் மகளிர்’, ‘பொருட்பெண்டிர்’ போன்ற கலைச் சொற்களால் சுட்டுகின்றார். இவர்கள் மரபுசார் குடும்பக் கட்டமைப்பிற்குள் மட்டும் சுருங்காமல், தங்களின் கலைத் திறனையே பிரதான வாழ்வாதாரமாகவும் அடையாளமாகவும் கொண்டு வாழ்ந்த சமூகப் பிரிவினராக விளங்கினர்.

சித்திராபதி எனும் கலைப் பாரம்பரியக் குடும்பத்தைச் சேர்ந்த தாய்க்கு மகளாகப் பிறந்தவளே மாதவி ஆவார். கலைப் பின்னணி கொண்ட சித்திராபதி, தனது மகள் மாதவிக்குச் சிறுவயதிலேயே ஆடற்கலையைக் கற்பித்தார். தனது ஐந்தாவது வயதில் நடனம் கற்கத் தொடங்கிய மாதவி, பன்னிரண்டு வயது வரையிலான ஏழு ஆண்டுகள் தீவிரப் பயிற்சியைப் பெற்று, ஒப்பற்ற ஆடல் ஆளுமையாக உருவெடுத்தார். பதினொரு வகையான வெவ்வேறு கூத்து வடிவங்களைக் கற்றுத் தேர்ந்த சிறந்த நாட்டியக் கலைஞராகவும் அவர் திகழ்ந்தார். இந்நிலைக்களத்தில், தனது மகளின் கலைத் திறனை அரசனின் அவையில் அரங்கேற்றச் சித்திராபதி முற்பட்டார். நாட்டின் சான்றோர்களும் மக்களும் திரண்டு அந்த அரங்கேற்றத்தைக் கண்டு மகிழ்ந்த வேளையில், அக்கூட்டத்தில் கண்ணகியின் கணவனான கோவலனும் வருகை தந்திருந்தான். அவனைக் கூத்து மேடையிலிருந்த மாதவியும் கண்டதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

அந்நாட்டு அரச இயல்பினின்றும் வழுவாமல், சோழ மன்னன் மாதவியின் ஒப்பற்ற கலைத் திறனைப் பாராட்டி, அவளுக்கு ‘தலைக்கோலி’ என்ற பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தான். மேலும், அக்கால மரபுப்படி ஆயிரத்தெட்டுப் பொன்னையும் பரிசாக அளித்தான். அவ்வேளையில், மாதவியின் தாயாரான சித்திராபதி, அந்நகரத்து கலை வழக்கத்தின்படி, தன்னிடம் பணிபுரிந்த கூனி என்பவரிடம் மாதவி அணிந்திருந்த அப்பச்சைமாலையைக் கொடுத்து, ‘ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் தந்து இம்மாலை வாங்குபவர் மாதவியின் கலை வாழ்க்கைத் துணையாக அமைவார்’ எனச் சோழ நாட்டின் பெருந்தெருவில் அறிவிக்குமாறு அனுப்பிவைத்தார். ஏற்கனவே மாதவியின் நாட்டியக் கலையிலும் எழிலிலும் ஈர்க்கப்பட்டிருந்த கோவலன், அப்பச்சைமாலையைப் பெற்றுக்கொண்டு மாதவியுடன் இணைந்து வாழத் தொடங்கினான்.

அவர்கள் இருவருக்கும் ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. கடலில் விபத்தில் சிக்கிய தன் முன்னோரைக் காப்பாற்றிய கோவலனின் குடும்பக் குலதெய்வமான 'மணிமேகலா தெய்வம்' நினைவாக, அக்குழந்தைக்குக் 'மணிமேகலை' எனப் பெயரிட்டு இருவரும் அன்போடு வளர்த்து வந்தனர். பொதுவாகக் கலைச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் ஒரே ஆடவனுடன் தொடர்ந்து வாழ்வது அரிதாக இருந்த அன்றைய சூழலில், கோவலன் மாதவியுடன் பண்பாட்டுப் பிணைப்புடன் தொடர்ந்து இணைந்து வாழ்ந்து வந்தான்.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் மழை வளம் வேண்டி இந்திர விழா கொண்டாடுவது வழக்கமாக இருந்தது. அவ்விழாவின்போது காவிரிக் கரையில் கோவலனும் மாதவியும் இருந்து பாடி மகிழ்ந்தனர். இருவருமே பாடல் வல்லுநர்களாக விளங்கிய நிலையில், தன் முன்னே ஓடிக்கொண்டிருந்த காவிரி ஆற்றைப் பார்த்துக் கோவலன் அதனைப் போற்றிப் பாடினான். வெண்கொற்றக் குடையையுடைய சோழ மன்னன் தனது செங்கோலைச் செலுத்தி கங்கையைச் சென்று அடைந்தபோதும், அதற்காகக் காவிரி அவனை வெறுக்கவில்லை. இதனை எடுத்துக்காட்டிய கோவலன், ‘காவிரியே! மன்னன் கங்கையைக் கூடினாலும் நீ அவனை வெறுக்காமல் இருப்பது, காதலினைக் காக்கும் மகளிரின் பெருமித மாண்பாகும்’ என்ற பொருளில் காவிரியைப் போற்றிப் பாடினான். இறுதியில், ‘காவேரி! நீ வாழ்க’ என்று காவிரியை வாழ்த்தினான். கோவலன் பாடிய இப்பாடலின் பொருளை மாதவி வேறுவிதமாகப் புரிந்துகொண்டாள். கோவலன் வேறொரு பெண்ணை மனத்தில் கொண்டு பாடுவதாக அவள் கருதியதால், அவளது உள்ளத்தில் ஊடல் தோன்றியது. இதுவே பின்னர் கோவலனுக்கும் மாதவிக்கும் இடையே பிரிவு ஏற்படுவதற்கான தொடக்கமாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து மாதவியும் பாடினாள். சோழ மன்னவன் குமரியையும் சென்று கூடினான். கன்னியாகிய குமரியைச் சோழன் கூடினாலும், நீ அவனை வெறுக்காது இருப்பது பெண்களின் பெருந்தன்மைக்கே உரிய பண்பாகும் ‘காவேரியே! நீ வாழ்க!’ என்று மாதவியும் காவேரியைப் போற்றிப் பாடினாள். மாதவி பாடிய இப்பாடலில் வேறொரு ஆடவனைப் பற்றிய குறிப்பிருப்பதாகக் கருதிய கோவலன், அவள் மனத்தில் வேறு ஒருவன் இருக்கிறான் என ஐயுற்று மனவிலக்கம் கொண்டான். இந்நிலையில் கோவலன் வள்ளுவனுடைய 1302-வது குறளை அறிந்திலன் போலும். இதோ அந்த குறள்,

***உப்பு அமைந் தற்றால் புலவி அது சிறிது***
***மிக்கற்றால் நீள விடல்’***

அதாவது, ஊடலுக்கும் கூடலுக்கும் இடையில் உள்ள காலம் உணவில் இடும் உப்பு போல் அளவோடு இருக்க வேண்டும். குறைந்தாலும் சுவை இருக்காது கூடினாலும் உண்ண முடியாது. கோபம் கொண்ட கோவலன் மாதவியையும் மகள் மணிமேகலையையும் பிரிந்து கண்ணகியிடம் சென்றான். மாதவி எவ்வளவு சொல்லியும் அது கோவலன் காதில் விழவில்லை.

தனியே தனது இல்லத்திற்குத் திரும்பிய மாதவி, தனது தோழியான வசந்தமாலையிடம் முதல் ஓலை ஒன்றைக்



கொடுத்து, அதைக் கோவலனிடம் சேர்க்குமாறு அனுப்பினாள். ஆனால், கோவலன் கோப மிகுதியால் அதனை ஏற்க மறுத்துவிட்டான். இதனைத் தொடர்ந்து, கோவலன் தனது மனைவி கண்ணகியுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டான். இச்செய்தியை அறிந்த மாதவி, கோவலனுடனான தனது தூய பிணைப்பை மதித்து, மீண்டும் அவனிடம் தன் உண்மையான மனநிலையைத் தெரிவிக்க விரும்பினாள். அதன்படி, தாழம்பூ மடலில் தன் கைப்படக் கடிதம் எழுதி, கோசிக மாணி என்னும் தூதுவர் மூலம் கோவலனுக்கு அனுப்பி வைத்தாள் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

மாதவியின் கூந்தல் நறுமணம் கமழ்ந்த அந்தக் கடிதத்தைக் கோவலன் வாங்கிப் படித்தான். அதில், 'பெற்றோரின் சொல்லை மீறி நடந்துகொண்டதற்கும், உங்களது குடும்ப மாண்பிற்குப் பொருத்தம் இல்லாத வகையில் நாம் பிரிந்ததற்கும் என் பிழையைப் பொறுத்தருள்க. மேலும், முதிய வயதிலுள்ள உங்கள் பெற்றோரைத் தனியே விட்டுச் செல்வது அறமன்று' என மாதவி அன்புடன் சுட்டிக்காட்டியிருந்தாள். கோவலனுடன் ஏற்பட்ட மனவிலக்கிற்குப் பின்னரும், மாதவி அவன்மீது கொண்டிருந்த தூய அன்பையும், அவனது பெற்றோர்மீது கொண்டிருந்த பெருமதிப்பையும் இக்கடிதம் வெளிப்படுத்தியது. இதைப் படித்தபோது கோவலன் மாதவியின் குற்றமற்ற தூய்மையான உள்ளத்தையும், தன் தவறான நடத்தையையும் உணர்ந்து மனம் உருகினான். பின்னர் அக்கடிதத்தை மடித்துக் கோசிக மாணையிடம் கொடுத்து, அதனைத் தனது பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொண்டான்.

கோவலன் கொல்லப்பட்ட கொடூரச் செய்தியைக் கேட்டவுடன் பெரும் வேதனைக்கு உள்ளான மாதவி, தனது கலைப் பின்னணியிலான வாழ்வியலிலிருந்து முற்றாக விலகித் துறவறத்தை மேற்கொள்ள முற்பட்டாள். அக்காலத்தில் பாரம்பரியக் கலைத் தொழிலைத் துறந்து வெளியேறுபவர்களைச் சமூகம் எளிதில் ஏற்றுக்கொள்ளாத சூழல் நிலவியபோதிலும், அவள் தன் முடிவில் உறுதியாக நின்றாள். மாதவி தான் பௌத்தத் துறவியாக வாழத் தலைப்பட்டதுடன், தனது மகள் மணிமேகலையையும் அறநெறி சார்ந்த துறவு வாழ்க்கையில் ஈடுபடுத்தினாள். தான் எதிர்கொண்ட சமூக நெருக்கடிகளும் துன்பங்களும் தன் மகளுக்கு நேரக்கூடாது என்ற தன்னாளுமையும் தாய்மை உணர்வுமே இம்மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தன. இந்நிலையில், பழைய கலைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மணிமேகலையை மீண்டும் கலைத் தொழிலில் ஈடுபடுத்துமாறு வலியுறுத்தியபோது, மாதவி அளித்த பதில் அவளது சுயமரியாதையையும் பேரறத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

*'அவள் காவலன் பேரூர் கணையெரி ஊட்டிய*
*மாபெரும் பத்தினி கண்ணகி மகள், மணிமேகலை'*

என்கிறாள்...

மதுரை மாநகரில் நீதி கேட்டுப் போராடி அறச்சீற்றம் கொண்ட கண்ணகியின் மகளே இம்மணிமேகலை; அவள் இனி இக்கலைத் தொழிலுக்கு உரியவள் அல்லள்' எனத் தீர்க்கமாகக் கூறிய மாதவி, தன் மகளை முழுமையான பௌத்த அறவாழ்வில் ஈடுபடுத்தினாள். பின்னாளில், அமுதசுரபி என்னும் ஆருயிர்ப் பாத்திரத்தின் வழியே வறியவர்களின் பசிப்பிணி போக்கும் பேரறத்தை மணிமேகலை முன்னெடுக்க மாதவியின் வழிகாட்டலே பேரரணாக அமைந்தது.

இவற்றை நோக்கின், துயரங்கள் நிறைந்த சூழலிலும் தன் மகளைப் பாரம்பரியக் கலைச் சமூகத்தின் சமூகப் பிடிகளிலிருந்து விடுவித்து, பேரற வழியில் உயர்த்திய மாதவியின் செயற்பாடு மகத்தான பண்பாட்டு மாற்றமாகக் கொள்ளத்தக்கது. ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்புகளும் மரபுசார் கலைக் கட்டுப்பாடுகளும் நிறைந்திருந்த அக்காலத்தில், தங்கள் சுயசார்பான முடிவுகளாலும் அறநெறியாலும் உயர்ந்த மாதவியும் மணிமேகலையும், கண்ணகியைப் போன்றே வரலாற்று ரீதியில் போற்றத்தக்க கலை மற்றும் ஆன்மீக ஆளுமைகளாக நிலைபெற்றுள்ளமை புலனாகின்றது.



kumar.punithavel@thaiveedu.com



# அகவிழிப் பார்வையின் உரிமையொளி!

## சர்வதேச வெண்பிரம்புப் பாதுகாப்பு நாள்


சி. நற்குணலிங்கம்

tg.theeban@gmail.com


ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 15-ஆம் திகதி உலகம் முழுவதும் 'சர்வதேச வெண்பிரம்புப் பாதுகாப்பு நாள்' கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனைப் பார்வை மாற்றுத்திறனாளிகளின் சுதந்திரத்தையும் சுயாட்சியையும் கௌரவிக்கும் ஒரு நாள் என்று மட்டும் நாம் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. இது ஒரு முதன்மையான சமூகநீதி நாள், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை வலியுறுத்தும் ஒரு முக்கிய நாளாகும்.

வெண்பிரம்பு என்பது வழிகாட்ட உதவும் வெறும் நடைக்கோல் மட்டுமல்ல; அது ஒரு வலுவான அரசியல் அடையாளம். பார்வை மாற்றுத்திறனாளிகள் பிறரை எதிர்பார்க்காமல் சுதந்திரமாக வாழும் உரிமையையும் சமூகத்தில் சமமான இடத்தைக் கோருவதையும் அது உலகிற்கு உணர்த்துகின்றது. 'பரிதாபப்படுதல்' என்ற அணுகுமுறையிலிருந்து விலகி, 'உரிமைகளை அங்கீகரித்தல்' என்ற தளத்திற்குச் சமூகத்தை நகர்த்துவதிலேயே இந்நாளின் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது.

### தனிமனிதக் கண்டுபிடிப்பிலிருந்து உலகளாவிய அங்கீகாரம் வரை:

வெண்பிரம்பின் வரலாறு ஒரு எளிய மனிதரின் அத்தியாவசியத் தேவையிலிருந்தே தொடங்கியது. 1921-ஆம் ஆண்டில், பிரிட்டனின் பிரிஸ்டல் நகரில் வாழ்ந்த புகைப்படக் கலைஞரான ஜேம்ஸ் பிக்ஸ் (James Biggs) விபத்தொன்றில் தனது பார்வையை இழந்தார். வீதிப் போக்குவரத்தில் பாதுகாப்பாக நடமாடுவது அவருக்குச் சவாலாக இருந்ததால், வாகன ஓட்டிகளும் பாதசாரிகளும் தன்னை இலகுவாக அடையாளங்காணும் பொருட்டுத் தனது கைத்தடிக்கு வெள்ளை நிறத்தைப் பூசினார். இந்த எளிய சிந்தனையே வெண்பிரம்பின் நூறாண்டு வரலாற்றுப் பரிணாமத்திற்கு வித்திட்டது.

பின்னர் வெண்பிரம்பைச் சட்டரீதியாகவும் நிறுவனரீதியாகவும் விரிவுபடுத்திய பெருமை அமெரிக்காவின் இல்லினோய் மாநிலத்தில் அமைந்த பியோரியா நகர லயன்ஸ் கழகத்தைச் சாரும். 1930-ஆம் ஆண்டில் அக்கழகத்தின் தலைவரான ஜார்ஜ் ஏ. பான்ஹாம் (George A. Bonham), கறுப்பு நிற கைத்தடியைப் பயன்படுத்திய பார்வை மாற்றுத்திறனாளி ஒருவர் வீதியில் சந்தித்த ஆபத்தைக் கவனித்தார். அதன் விளைவாக, சிவப்புப் பட்டைகள் கொண்ட வெள்ளை நிறக் கைத்தடியைப் பயன்படுத்துமாறு அவர் பரிந்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து, லயன்ஸ் கழகம் வெண்பிரம்புகளை விநியோகிக்கத் தொடங்கியதோடு, பியோரியா நகர சபையும் வெண்பிரம்பு வைத்திருப்போருக்கு வீதியைக் கடப்பதற்கான முதன்மை உரிமையை வழங்கும் சட்டத்தைக் கொண்டுவந்தது. அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில், இல்லினோய் மாநிலம் வெண்பிரம்புப் பயன்பாட்டிற்கெனத் தனிச்சட்டம் இயற்றிய உலகின் முதல் மாநிலமாக மாறியது.

இதன் தொடர்ச்சியாக, 1964-ஆம் ஆண்டில் அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் ஒக்ரோபர் 15-ஆம் திகதி 'தேசிய வெண்பிரம்பு பாதுகாப்பு நாளாக' பிரகடனப்படுத்தப்பட்டது.

பின்னர் 1969-ஆம் ஆண்டில், உலகப் பார்வை மாற்றுத்தி றனாளிகள் ஒன்றியம் (World Blind Union) இத்திகதியை 'சர் வதேச வெண்பிரம்பு பாதுகாப்பு நாளாக' அதிகாரபூர்வமாக அறிவித்தது.

குறிப்பாக, இச்சர்வதேச நினைவு நாளின் வரலாற்றில் இலங்கை தனித்துவமானதொரு முத்திரையைப் பதித்துள் ளது. 1969-ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற சர்வதேச பார்வையற்றோர் கூட்டமைப்பின் இரண்டாவது உலக மாநாட் டிலேயே, 'சர்வதேச வெண்பிரம்பு நாள்' முதன்முதலில் உத் தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அம்மாநாட் டிற்குத் தலைமை தாங்கி நடத்தியவர் இலங்கையைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் மறைந்த ரியன்சி அழகிய வண்ண (Rienzie Alagiyawanna) ஆவர். அதாவது, இந் நாளை உலகளவில் நிறுவனமயப்படுத்திய வரலாற்றுச் செயற்பாட்டில் இலங்கை முதன்மையான பங்காற்றியுள்ளது என்பது நமக்குப் பெருமையளிக்கும் விஷயமாகும்.

### சமகால உலகளாவிய தரவுகள்: பார்வை மாற் றுத்திறனின் மெய்யான வீச்சு:

உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்டுள்ள தரவுக ளின்படி, உலகம் முழுவதும் குறைந்தது 220 கோடி மக்கள் அண்மை அல்லது தூரப் பார்வைச் சவால்களுடன் வாழ்கின் றனர். இவர்களில் 100 கோடிக்கும் அதிகமானோரின் பார்வை இழப்பை முறையான முன்னெச்சரிக்கை மற்றும் சிகிச்சை கள் மூலம் தடுத்திருக்க முடியும் என்றபோதிலும், சரிசெய் யப்படாத பார்வைச் சவால்களும் கண்புரையுமே (Cataract) இதற்கான முதன்மைக் காரணிகளாக அமைந்துள்ளன. இப் புள்ளிவிவரங்களின் பின்னணியில் ஆழமான சமூகநீதிசார் ஏற்றத்தாழ்வுகள் ஒளிந்திருக்கின்றன.

குறைந்த வருவாய் கொண்ட ஏழை நாடு களில் பார்வைச் சீரமைப்புக் கண்ணாடி தேவைப்படுவோரில் மூன்றில் இரண்டு பங்கினருக்கும், கண்புரை அறுவை சிகிச்சை தேவைப்படுவோரில் பாதிக்கும் மேற்பட்டோருக்கும் அவ்வசதிகள் எட்டாக் கனியாகவே உள்ளமை வர்க்கப் பாகு பாட்டையும் கட்டமைப்புசார் வறுமையை யுமே வெளிப்படுத்துகின்றது. அத்துடன், பணக்கார நாடுகளை விட ஏழை நாடுக ளிலேயே பார்வைச் சவால்களின் வீச்சு நான்கு மடங்கு அதிகமாக உள்ளதுடன், ஆண்டுதோறும் ஏற்படும் 4,110 கோடி டாலர் உற்பத்தித்திறன் இழப்பைத் தடுக்க வெறும் 250 கோடி டாலர்களே போதுமா னது எனும் நிலை உலகளாவிய அரசி யல் விருப்பமின்மையையே உணர்த்துகின் றது. எனவே, 'தடுக்கப்படக்கூடிய பார் வைச் சவால்கள் ஏன் இன்னும் தடுக்கப்ப டவில்லை?' என்ற அடிப்படைச் சமூக நீதிக் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் வெண்பிரம்பு தினத்தைக் கொண்டாடுவது வெறும் போலித்தனமான சடங்காகவே எஞ்சும்.

> **"பார்வைச் சவால்கள் கொண்டோர் பரிதாபத்திற்குரியவர்கள் அல்லர்; அவர்கள் சுயாட்சியும் சுயமரியாதையும் கொண்ட சமத்துவக் குடிமக்கள் என்பதும், அவர்களின் அவ்வுரிமையின் அடையாளமாகவே வெண்பிரம்பு திகழ்கின்றது என்பதுமே சர்வதேச வெண்பிரம்பு நாளின் உண்மையான செய்தியாகும்."**

### மாற்றுத்திறனாளர் உரிமைகள்: 'பரிதாபம்' என்பதிலிருந்து 'உரிமை' என்பதற்கு:

வரலாற்று ரீதியாக மாற்றுத்திறனாளிகள் பரிதாபத்திற்குரிய வர்களாகப் பார்க்கப்பட்ட பிற்போக்குத்தனமான அணுகு முறையை, சர்வதேச மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் இயக் கம் (Disability Rights Movement) முற்றிலும் மாற்றியமைத் துள்ளது. மாற்றுத்திறனைக் குணப்படுத்தப்பட வேண்டிய உடலியல் குறைபாடாக மட்டும் பார்க்கும் 'மருத்துவ மாதிரி யையும்' (Medical Model), அவர்களை வாழ்நாள் நோயாளிக ளாகச் சித்தரிக்கும் பார்வையையும் இவ்வியக்கம் நிராகரிக் கின்றது. மாறாக, மாற்றுத்திறன் என்பது தனிநபரிடம் இல்லை; பொருத்தமற்ற உட்கட்டமைப்புகள் மற்றும் அணுக முடியாத பொதுப்போக்குவரத்து போன்ற சமூகத் தடைகளா லேயே அது உருவாக்கப்படுகின்றது எனும் 'சமூக மாதிரி யையும்' (Social Model), மாற்றுத்திறனாளிகளைச் சலுகை கோருவோராக அன்றி முழுமையான உரிமைகள் கொண்ட குடிமக்களாக அங்கீகரிக்கும் 'உரிமை மாதிரியையும்' (Rights Model) அது முதன்மைப்படுத்துகின்றது.

பார்வைச் சவால்கள் கொண்டோர் பரிதாபத்திற்குரியவர்கள் அல்லர்; அவர்கள் சுயாட்சியும் சுயமரியாதையும் கொண்ட சமத்துவக் குடிமக்கள் என்பதும், அவர்களின் அவ்வுரிமை யின் அடையாளமாகவே வெண்பிரம்பு திகழ்கின்றது என்ப துமே சர்வதேச வெண்பிரம்பு நாளின் உண்மையான செய்தி யாகும். பார்வைச் சவால்கள் கொண்டோர் பரிதாபத்திற்குரிய வர்கள் அல்லர்; அவர்கள் சுயாட்சியும் சுயமரியாதையும் கொண்ட சமத்துவக் குடிமக்கள். அவர்களின் அவ்வுரிமை யின் அடையாளமாகவே வெண்பிரம்பு திகழ்கின்றது.

### பால்நிலைக் கூருணர்வு: மறைக்கப்பட்ட பரிமாணம்:

மாற்றுத்திறனாளர் உரிமைகள் பற்றி உரையா டும்போது, பால்நிலைப் பாகுபாடு என்ற முக்கிய பரிமாணம் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் மறைக்கப்பட்டுவிடுகின்றது. ஆனால், பார்வைச் சவால்கள் கொண்ட பெண்கள் சமூகத்தில் மாற் றுத்திறனாளிகள் என்பதால் ஒரு பக்கமும், பெண் கள் என்பதால் மறுபக்கமுமாக 'இரட்டைப் பாகு பாட்டை' எதிர்கொள்கின்றனர். உலகளவில் பார் வைச் சவால்கள் கொண்டோரில் பெரும்பான்மை யானோர் பெண்களாவர். குறிப்பாக, வளர்முக நாடுகளில் இவர்களின் எண்ணிக்கை ஆண்களை விட அதிகமாக உள்ளதோடு, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் பொதுச் சுகாதாரச் சேவைக ளைப் பெறுவதிலும் இவர்கள் ஆண்களை விடக் குறைந்த வாய்ப்புகளையே பெறுகின்றனர்.

அத்துடன், பார்வைச் சவால்கள் கொண்ட பெண் கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் திறன் அற்றவர்கள் என்ற தவறான சமூகக் கணிப்பாலும், அவர்களின் குரல்கள் அதிகார மட்டத்தில் செவிம டுக்கப்படாமையாலும் பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை மற்றும் பால்நிலை சார்ந்த அச் சுறுத்தல்களுக்கு அதிகளவில் ஆளாகின்றனர்.

மேலும், இவர்கள் தாய்மைக்கும் குடும்பப் பொறுப்புகளுக்கும் 'தகுதியற்றவர்கள்' என்ற தவறான சமூக முத்திரையையும் சுமக்க நிர்பந்திக்கப்படுகின்றனர்.

எனவே, வெண்பிரம்பு நாளைக் கொண்டாடும் போது 'பார்வை மாற்றுத்திறனாளிகள்' என்று பொதுவாகப் பேசுவதோடு நிறுத்திவிடாமல், பார்வைச் சவால்கள் கொண்ட பெண்களின் தனித்துவமான அனுபவங்களையும் போராட்டங்களையும் உரையாடலின் மையத்திற்குக் கொண்டுவர வேண்டும். தவறினால், நாமும் மற்றொரு வகையான பால்நிலைப் பாகுபாட்டிற்கு மறைமுகமாகத் துணைபோனவர்களாகவே முடிவோம். அதே வேளை, பால்நிலை மற்றும் பாலியல் சிறுபான்மையினரான (LGBTQIA+) பார்வை மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் மூன்றடுக்குப் பாகுபாடுகளையும் அவர்களின் குரல்களையும் வெண்பிரம்பு தினச் சமூகநீதி உரையாடல்களில் மையப்படுத்துவது இன்றியமையாததாகும்.

## இலங்கைச் சூழல்: சாதனைகளும் தொடரும் கட்டமைப்புசார் சவால்களும்:

பார்வை மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அங்கீகரிப்பதிலும் இலங்கை வரலாற்றுப் பூர்வமான பதிவைக் கொண்டுள்ளது. சர்வதேச வெண்பிரம்பு நாளின் உலகளாவிய பிரகடனம் இலங்கையிலேயே முதன்முதலில் நிறைவேற்றப்பட்டதுடன், ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 15-ஆம் திகதி இலங்கை பார்வை மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் (Sri Lanka Federation of the Visually Handicapped) பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளையும் தேசியக் கொடி வாரத்தையும் நடத்தி வருகின்றது.

“
**சர்வதேச வெண்பிரம்பு நாளின் உலகளாவிய பிரகடனம் இலங்கையிலேயே முதன்முதலில் நிறைவேற்றப்பட்டதுடன், ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 15–ஆம் திகதி இலங்கை பார்வை மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளையும் தேசியக் கொடி வாரத்தையும் நடத்தி வருகின்றது.**
”

அரசாங்க மட்டத்திலான நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, இந்நாளில் ஜனாதிபதி செயலகத்தில் அடையாளபூர்வமான முதல் கொடி அணிவிக்கும் நிகழ்வு நடத்தப்பட்டு, அதன் மூலம் திரட்டப்படும் நிதி பார்வை மாற்றுத்திறனாளிகளின் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. வெண்பிரம்பு என்பது பயனரின் பிறர் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்து, அவர்களின் பாதுகாப்பு உணர்வையும் சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் வலுப்படுத்தும் பிரதான அடையாளம் என்பதை இலங்கை சமூக நல அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இருப்பினும், கொள்கை மற்றும் நடைமுறை சார்ந்த தளங்களில் பாரிய இடைவெளிகள் நிலவுகின்றன. 2024-ஆம் ஆண்டின் மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதிக் கணக்கெடுப்புத் தரவுகளின்படி, இலங்கையில் பார்வை, கேட்டல், இயக்கம், அறிதிறன், சுயபராமரிப்பு மற்றும் தொடர்பாடல் ஆகிய ஆறு முக்கிய செயற்பாட்டுத் துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றுத்திறன் கொண்டவர்களாக 7,27,293 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், இதில் பெண்களின் எண்ணிக்கை மற்றும் நிலை குறித்த தனியான வகைப்படுத்தப்பட்ட தரவுகள் வெளியிடப்படவில்லை. மாற்றுத்திறன் கொண்ட பெண்களின் நிலை குறித்த துல்லியமான புள்ளிவிவரங்கள் இல்லாத சூழலில், அவர்களுக்கான முறையான அரச கொள்கைகளையோ நலத்திட்டங்களையோ உருவாக்க முடியாது என்பதே பிரதான சமூக நீதிப் பிரச்சினையாகும்.

இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் நடைமுறையிலிருந்தபோதிலும், அவற்றில் பால்நிலைக் கூருணர்வு போதுமான அளவில் வெளிப்படுவதில்லை. குறிப்பாக, பார்வை மாற்றுத்திறன் கொண்ட பெண்களுக்கான தொழிற்பயிற்சித் திட்டங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. மேலும், பாலியல் வன்முறைத் தடுப்பு நடைமுறைகளிலும் தாய்மைச் சுகாதாரச் சேவைகளிலும் பார்வை மாற்றுத்திறன் கொண்ட பெண்களின் அணுகல்தன்மை உறுதியாக்கப்படவில்லை. இலங்கை பார்வை மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் போன்ற முன்னணி அமைப்புகள் இத்தகைய கட்டமைப்புசார் பாகுபாடுகளைக் களைவதற்கான அழுத்தங்களை அரசுக்கு அளிக்க வேண்டியது அவசியமாகும்.

## இந்தியச் சூழல்: சட்டமும் யதார்த்தமும்:

இந்தியாவில் 2016-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றுத்திறனாளர் உரிமைகள் சட்டம் (Rights of Persons with Disabilities Act, 2016), மாற்றுத்திறனாளிகளுக்கு விரிவான உரிமைப் பாதுகாப்பை வழங்குகின்றது. இச்சட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான பாகுபாடுகளைத் தடை செய்வதற்கான பிரத்யேக விதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இருப்பினும், கள யதார்த்தம் முற்றிலும் வேறாகவே உள்ளது. இந்தியாவில் பார்வை மாற்றுத்திறன் கொண்ட பெண்களின் கல்வியறிவு விகிதம், ஆண்களின் கல்வியறிவை விடக் கணிசமாகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதேபோல, வேலைவாய்ப்புச் சந்தையிலும் பார்வை மாற்றுத்திறன் கொண்ட பெண்கள் பால்நிலை மற்றும் மாற்றுத்திறன் சார்ந்த இரட்டைப் பாகுபாடுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். குறிப்பாக, கிராமப்புற சமூகங்களில் இவர்கள் குடும்பத்திற்குப் பாரமானவர்களாகக் கருதப்பட்டு, அவர்களின் சமூகப் பங்கேற்பு வெகுவாக முடக்கப்படுகின்றது. இத்தகைய சூழலில், இந்தியாவின் தேசிய பார்வையற்றோர் சங்கம் (National Association for the Blind) போன்ற முதன்மை அமைப்புகள் பால்நிலைக் கூருணர்வு சார்ந்த செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அதேவேளை, தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளது. 'ஸ்மார்ட் கேன்' (Smart Cane) போன்ற நவீன உதவித் தொழில் நுட்பக் கருவிகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அல்ட்ராசோனிக் உணர்விகள் (Ultrasonic Sensors) மூலம் தலைக்கு மேலே தொங்கும் தடைகளைக் கண்டறிந்து அதிர்வுகள் மூலம் எச்சரிக்கும் இக்கருவி, மாற்றுத்திறனாளிகளின் பயணப் பாதுகாப்பில் புதிய திசையைக்

காட்டியுள்ளது. இருப்பினும், இதன் அதிகப்படியான சந்தை விலை மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டுத் தேவைகள் காரணமாக, கிராமப்புறத்தைச் சேர்ந்த பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் பெண்களுக்கும் இத்தொழில் நுட்பங்கள் இன்னும் எட்டாக்கனியாகவே நீடிக்கின்றன.

## வெண்பிரம்பின் ஆழ்ந்த பொருள்: கருவியிலிருந்து உரிமைச் சின்னம் வரை:

வெண்பிரம்பின் முதன்மைச் செயற்பாடு என்பது வெறுமனே 'நடக்க உதவும் ஒரு கருவி' என்ற எல்லையை விட மிக ஆழமானது. சட்டக் கண்ணோட்டத்தில், உலகின் பல நாடுகள் வெண்பிரம்புச் சட்டங்களின் வாயிலாகக் கைத்தடி வைத்திருப்போருக்குச் சாலைப் போக்குவரத்தில் முதன்மை முன்னுரிமையை சட்டபூர்வமாக வழங்குகின்றன. அதேவேளை சமூகக் கண்ணோட்டத்தில், வெண்பிரம்பு என்பது பார்வைச் சவால்கள் கொண்டோரைச் சமூகத்தின் 'கண்ணுக்குத் தெரியாத ஓரங்கட்டப்பட்ட நிலையிலிருந்து' மீட்டு, அவர்களைச் 'சுதந்திரமான மனிதர்களாக வெளிப்படுத்தும்' பிரகடன அடையாளமாகத் திகழ்கின்றது.

வெண்பிரம்பைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு முறையான வழிகாட்டல் தொழிற்பயிற்சித் தேவையாகும். உடலின் மையப் பகுதியிலிருந்து கைத்தடியைக் கால்களுக்கு முன்னும் பின்னுமாகவோ அல்லது இடது-வலதாகவோ அசைப்பதே இதன் அடிப்படை நுட்பமாகும். பயனர் அக்கைத்தடியிலிருந்து பெறப்படும் தொடு உணர்வின் (Tactile Feedback) மூலமே வீதியின் தன்மை மற்றும் தடைகளைத் துல்லியமாக மதிப்பிடுகின்றார். இதில் வெவ்வேறு வகையான கைத்தடிகள் வெவ்வேறு தேவைகளுக்காகப் பயன்படுகின்றன. பயணத் தடைகளைக் கண்டறிய நீண்ட கைத்தடியும் (Long Cane), உடல் சமநில பேண ஆதரவுக் கைத்தடியும் (Support Cane), தான் பார்வைச் சவால்களைக் கொண்டவர் என்பதைப் பிறருக்கு உணர்த்தக் குறியீட்டுக் கைத்தடியும் (Symbol Cane) பயன்படுகின்றன. குறிப்பாக, இரண்டு சிவப்புப் பட்டைகள் கொண்ட வெண்பிரம்பு, அப்பயனருக்குப் பார்வை மற்றும் செவிப்புலன் ஆகிய இரண்டு சவால்களும் ஒருசேர உள்ளன என்பதைக் குறிக்கும் சர்வதேச அடையாளமாகும்.

அதேவேளை, பொதுமக்களின் சரியான புரிதலும் விழிப்புணர்வுமே பார்வைச் சவால்கள் கொண்டோரின் பாதுகாப்பை உறுதிசெய்கின்றன. வெண்பிரம்பு வைத்திருப்பவருடன் தொடர்புகொள்ளும்போது அவரின் கைத்தடியைப் பிடித்து இழுக்கவோ அல்லது பலவந்தமாக நகர்த்தவோ கூடாது; ஏனெனில் அக் கைத்தடி பயனரின் உடலின் நீட்சியாகவே கருதப்படுகின்றது. ஒருவருக்கு உதவி தேவைப்பட்டால் முதலில் நம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு உதவி அவசியமா எனக் கேட்டறிய வேண்டும்; தானாக முன்வந்து வலுக்கட்டாயமாக உதவ முனைவது தவறான அணுகுமுறையாகும். அதேபோல திசைகளைக் கூறும்போது சைகைகளைத் தவிர்த்து, 'இடது', 'வலது', 'முன்னே' போன்ற தெளிவான சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இத்தகைய சிறிய நடைமுறை மாற்றங்களே பார்வைச் சவால்கள் கொண்டோரின் சுயாட்சியையும் மனித சுயமரியாதையையும் பாதுகாக்கும் வழிகளாகும்.

பார்வை மாற்றுத்திறனாளிகளின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்தல், பொது இடங்கள் மற்றும் போக்குவரத்துகளில் தடைகளற்ற வசதிகளை ஏற்படுத்துதல், மற்றும் அவர்களின் தனித்துவமான திறமைகளை அங்கீகரிக்கும் சமத்துவமான சூழலை உருவாக்குவதுமே இந்நாளின் முதன்மையான நோக்கமாகும். இதன் ஆழமான செய்தியையும் அவசியத்தையும் உலகிற்கு உணர்த்தும் பொருட்டே, ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 15-ஆம் திகதி சிறப்புமிக்க உலகளாவிய கருப்பொருள்கள் வெளியிடப்பட்டு விழிப்புணர்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2025-ஆம் ஆண்டிற்கான சர்வதேச வெண்பிரம்பு நாளின் பிரதான கருப்பொருள், 'பார்வைக்கு அப்பாற்பட்ட தொலைநோக்கு: சுதந்திரம், மீள்தன்மை ஆகியவற்றைக் கொண்டாடுதலும் ஆற்றலை அங்கீகரித்தலும்' (Vision Beyond Sight: Celebrating Independence, Resilience and Recognizing Ability) என்பதாகும். இதனுடன் இணைந்ததாகப் பல்வேறு உலகளாவிய மற்றும் பிராந்திய அமைப்புகள், 'அதிகாரமளித்தலும் சமவாய்ப்பும்: ஒன்றிணைந்து பார்வைச் சவால்கள் கொண்டோருக்கான அனைத்துமடங்கிய உலகை உருவாக்குவோம்' எனும் கருப்பொருளையும் முதன்மைப்படுத்தி விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுத்தன.

இதன் தொடர்ச்சியாக, 2026-ஆம் ஆண்டில் உலகளாவிய மாற்றுத்திறனாளர் இயக்கங்கள் நவீன தொழில் நுட்பச் சமத்துவத்தையும் தடைகளற்ற அணுகல்தன்மையையும் (Digital & Physical Accessibility) வலியுறுத்தும் நோக்கில், 'அனைத்துமடங்கிய சேர்க்கை மற்றும் சமத்துவப் பங்கேற்பு: தொழில் நுட்பம் மற்றும் உலகளாவிய அணுகல்தன்மை மூலம் பார்வைச் சவால்கள் கொண்டோருக்கு அதிகாரமளித்தல்' எனும் விரிவாக்கப்பட்ட பார்வையை மையப்படுத்தி இந்நாளை உலகளவில் முன்னெடுத்து வருகின்றன.

வெண்பிரம்பு பாதுகாப்பு நாள் என்பது ஏதோ ஆண்டில் ஒருநாள் மட்டும் பார்வை மாற்றுத்திறனாளிகள் மீது பரிதாபத்தைக் காட்டும் சடங்கல்ல. மாறாக, அவர்களின் சுயாட்சி, சுயமரியாதை மற்றும் மனித உரிமைகளை உலகிற்கு உணர்த்தும் அரசியல் பிரகடனம். 1921-இல் ஒரு தனிமனிதரின் பாதுகாப்பிற்காக உருவான எளிய சிந்தனை, இன்று சர்வதேச அளவில் உரிமைச் சின்னமாக பரிணமித்திருப்பது சமூகநீதிப் போராட்டத்தின் மகத்தான சான்றாகும்.

இருப்பினும், கட்டமைப்புசார் தடைகள், வர்க்க பாகுபாடுகள் மற்றும் பால்நிலை ரீதியான புறக்கணிப்புகள் தொடரும் வரை வெண்பிரம்பின் பணி நிறைவடைவதில்லை. பார்வைச் சவால்கள் கொண்டோரை வெறும் அனுதாபத்திற்குரியவர்களாகப் பார்க்காமல், அவர்களைப் பரிபூரண உரிமைகளும் திறன்களும் கொண்ட குடிமக்களாக அங்கீகரித்து, தடைகளற்ற உலகளாவிய சூழலையும் தொழில் நுட்பச் சமத்துவத்தையும் உருவாக்குவதே நாம் அவர்களுக்குச் செய்யும் உண்மையான மரியாதையாகும். வெண்பிரம்பு சுட்டிக்காட்டும் பாதை, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கானது மட்டுமல்ல; அது முழுச் சமூகமும் சமத்துவத்தை நோக்கி நடப்பதற்கான பாதையுமாகும்.



natkunalingam@thaiveedu.com




# ஓர் ஈழ நாட்குறிப்பு

ஓவியர் ஜீவா

இலங்கையில் இறங்கியவுடன் முதன் முதலில் உணவருந்திய யாழ் மனையில் மீண்டும் ஒரு மதிய உணவு. முடித்துவிட்டு நல்லூரில் இருக்கும் மறைந்த ஓவியர் ஆசை இராசையாவின் வீட்டிற்கு செல்லும் ஒரு திட்டம் இருந்தது. ஏற்கனவே அவருடைய மகள் காயத்ரியையும், மருமகன் ரவீந்திரனையும் மட்டக்களப்பு தாய்வீடு கூடுகையில் சந்தித்திருந்தோம். ரவீந்திரன் எங்கள் கோவையை சேர்ந்தவர் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இலங்கையின் புகழ் பெற்ற ஓவியர்களின் ஒருவர் ஆசை இராசையா. 2020-இல் மறைந்தவர். ஓவியக்கலையில் பன்முகத்திறமை படைத்தவர். மெய்யுரு என்றழைக்கப்படும் போர்ட்ரைட் ஓவியங்கள், நிலவுரு என்றழைக்கப்படும் லேண்ட்ஸ்கேப் ஓவியங்கள், அட்டைப்பட ஓவியங்கள், நூல்கள் வடிவமைப்பு என்று செயல்பட்ட இவர், இலங்கை முத்திரைப் பணியக ஓவியக் குழுவில் ஒருவராகவும் பணி புரிந்தவர். கல்லூரி ஆசிரியராக ஓவியக் கலையை மாணவர்களுக்கும் கற்பித்து வந்த இராசையாவின் படைப்புகள் யாழ் மண்ணின் மனத்தைக் கொண்டவையாக இருந்தன என்று ஆர்வலர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அவரது இல்லத்தில் அவருடைய சுய உருவ ஓவியத்தை கண்டோம். அவரது மனைவியாரும் குடும்பத்தினரும் அனைவரையும் வரவேற்று உபசரித்தனர். பெரும் புகழ் பெற்ற ஓவியரின் புத்தக சேகரிப்பு, வண்ணங்கள், தூரிகைகள் அனைத்தையும் பரவசத்துடன் ஓர் ஓவியனாக கண்டு ஆனந்தப்பட்டேன். காயத்ரி தந்த இலங்கை மண்ணுக்கேயுரிய பண்டமான 'பனங்காய் பணியாரத்தை' உண்டு மகிழ்ந்தோம்.

அன்று மாலை கலம் அரங்கில் இன்னொரு நிகழ்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா. அகிலன் ஏற்பாடு செய்திருந்தார். ஓவியக்கலை குறித்து மருது அவர்கள் உரையாற்றுவதாக நிகழ்ச்சி. 'கலம்' அரங்கு என்பது யாழ்ப்பாணத்திலுள்ள ஜேர்மன் கலாசார நிறுவனமான 'கோதே நிறுவனத்தின்' (Goethe-Institute) அனுசரணையில் இயங்கும் ஒரு நிகழ்வு அரங்காகும். நிறைய இளைஞர்களும் கலை ஆர்வலர்களும் வந்திருந்தனர். நாங்கள் வருவதை அறிந்து எழுத்தாளர் அ. யேசுராசா முன்னதாகவே வந்திருந்தார். ஏற்கனவே அவரை சில வருடங்களுக்கு முன் கவிஞர் சேரனுடன் கோயம்புத்தூர் நகரத்தில் சந்தித்திருக்கிறேன். என்னைப்போலவே திரைப்பட ஆர்வலர். கூட்டத்தில் சென்னை காந்தளகம் பிரசுரத்தின் நிறுவனர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் போன்ற பிரமுகர்களையும் காணும் சந்தர்ப்பம் வாய்த்தது. மருது அவர்களின் உரை அற்புதமாக இருந்தது. ஓவியக்கலையின் பல்வேறு அம்சங்களையும் இன்றைய நிலையையும் விரிவாகப் பேசினார். நிறைய இளம் ஓவியர்களை சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

எங்களின் அடுத்த சந்திப்புக்கான அழைப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலை வரலாற்றுத்துறைப் பேராசிரியர் தா. சனாதனன் அவர்களிடமிருந்து வந்திருந்தது. பழைமையான பாரம்பரியக் கட்டடமொன்றைப் புதுப்பித்து, அதற்குள் உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் 'சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணகத்திற்கு' நாங்கள் சென்றோம். அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பட்டதாரிகளின் 'எதிரொலிப்பு' என்ற சமகாலக் கலைக் கண்காட்சியைக் காண்பதும், அப்படைப்புகளுக்குச் சொந்தக்காரர்களான இளம் கலைஞர்கள் மற்றும் மாணவர்களுடன் உரையாடுவதுமே எங்களின் அப்பயணத்தின் நோக்கமாக இருந்தது. நாங்கள் அங்கு சென்றடைந்ததும் பேராசிரியர் சனாதனன் எங்களை இன்முகத்தோடு வரவேற்றார். அப்பழைமைவாய்ந்த கட்டடத்தின் சுவர்களிலும் கூடங்களிலும் சமகால ஓவியங்களும் சிற்பப் படைப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை உருவாக்கிய கலைஞர்கள் எங்களைச் சந்திக்கக் காத்திருந்தனர். அப்பாரம்பரியச் சூழலில் நின்றபடி, சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணகத்தின் நோக்கங்களையும், அது ஆற்றிவரும் பணிகளையும் பேராசிரியர் சனாதனன் எங்களுக்கு விளக்கிக் கூறினார்.

prasadbatti@gmail.com

யாழ்ப்பாணப் பகுதியின் பல நூற்றாண்டுகள் பழைமையான பாரம்பரியக் கைவினைத் திறன்களையும், கலை மரபுகளையும் சமகால கலை வடிவங்களுடன் இணைத்துப் பாதுகாப்பதே இவர்களின் முதன்மை நோக்கம் என்று கூறினார். 'மனிதநேயம் அறக்கட்டளை' என்ற அமைப்பின் ஆதரவோடு இயங்கும் இக்குழு, யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூர் கைவினைஞர்களுடன் இணைந்து பணியாற்றி அவர்களுக்கு முறையான வருமானத்தையும் சிறந்த வேலைச் சூழலையும் உரு வாக்கித் தருகிறது. உள்ளூர் தாவரங்களின் வேர்கள், பழங்கள், மரப்பட்டைகள் மற்றும் கறிவேப்பிலை, மஞ்சள், நீலம் போன்றவற்றிலிருந்து பெறப்படும் இயற்கைச் சாயங்களை கொண்டு கைத்தறி புடவைகள், லுங்கிகள், சால்வைகள் போன்றவற்றை வடிவமைக்கின்றனர். கூடவே இயற்கைப் பொருட்களிலிருந்து கைப்பைகள், நகைகள், அலங்காரப் பொருட்களும் தயாரிக்க ஊக்கம் தரப்படு கிறது!



அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கலைப்படைப்புகள் பெரும்பாலும் நவீன பாணியில் இருந்தன. மருது அவர்கள் இளம் கலைஞர்களுடன் ஒவ்வொரு படைப் பையும் பார்த்து ரசித்து தன் கருத்தைப் பகிர்ந்துகொண்டார். கலைஞர்களும் விளக்கமாக தங்கள் பார்வைகளை எங்களிடம் வெளிப்படுத்தினர். அந்த மாலையை மேலும் இனிமையாக்க சனாதனன் ஒரு ருசிமிகுந்த விருந்தையும் அளித்தார். ‘ஒடியல் கூழ்’ என்றழைக்கப்படும் கடல் வாழ் உயிரினங்களைக் கொண்டு சமைத்த ஒரு வகை கஞ்சியும், டெஸ்ஸர்ட்டாக வயலட் நிறத்தில் ராச வள்ளிக் கிழங்குக்கூழும் அருமை! அருமை! இளம் ஓவியர்களின் விருந்தோம் பலும் இனிமையாகவே இருந்தது. அன்றிரவு ஒரு தங்கும் விடுதியில் நானும் சாம் டேனியலும் இளைப்பாறினோம்! ஓவியர் மருது, விவேகானந்தன், சரவணன் அனைவரும் அடுத்த நாள் சென்னை திரும்ப இருப்பதால் இன்னொரு விடுதியில் தங்கினர். எங்களுக்கு அதற்கு அடுத்த நாள்தான் டிக்கெட் வாங்கப்பட்டிருந்தது.



அடுத்த நாள் காலை நடைப்பயிற்சியை நாங்கள் தங்கியிருந்த அரியாலைப்பகு தியில் தொடங்கினோம். வீடுகள், கடைகள், அவற்றின் விளம்பரப்பலகைகள் என்று வேடிக்கை பார்க்க நிறைய இடங்கள் இருந்தன. புங்கங்குளம் ரயில் நிலையத்தை கடந்தும் தொடர்ந்தது நடை. அடுத்த நாள் காலையில்தான் விமா னப்பயணம் என்பதால் அன்றே அறையை காலி செய்துவிட்டு சத்தியதேவன் தனது வீட்டில் இரவு தங்கிவிடலாம் என்று சொன்னார்.



யாழ்ப்பாணத்தில் ஒரு முஸ்லிம் கடை ஸ்டைல் உணவு உண்ண வேண்டும் என்ற என் கோரிக்கைக்கிணங்க, சத்யன் எங்களை யாழ் பிரதான வீதியில் உள்ள நியூ தாஜ் ஓட்டலுக்கு அழைத்து சென்றார். ஒரு நெய்ச்சோறு உண்டுவிட்டு கடை முத லாளியுடன் சிறிது அளவளாவிவிட்டு விடை பெற்றோம். சத்யன் குடும்பத்தினர் இருப்பது ஒரு பழைமையான பெரிய வீடு. கூரை உயரம் கூட 15 அடி இருக்கும் என்று நினைக்கிறேன். ‘ட’ வடிவத்தில் வீடு அமைந்திருந்தது. பின்னால் ஒரு தோட்டமும் உண்டு. வீட்டில் அகலமான வெராந்தாக்களும் அமைந்திருந்தன. குளியலறையில் ஒரு பெரிய தொட்டி நிறைய நீர். மொண்டு மொண்டு குளிக் கலாம். அவருக்கு இரண்டு சுட்டிப் பெண் குழந்தைகள். இருவரும் ஓவியங்கள் வரைந்து தள்ளுகிறார்கள். அவர்களுக்கு ஒரு சிறிய ஓவிய வகுப்பெடுத்தேன். மனித உருவங்கள் வரைவது எப்படி என்று சில சுலப வழிகளை சொல்லிக்கொ டுத்தேன். அவர்களையும் வரைந்து தந்தேன். பகல் முழுதும் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்க திட்டமிட்டோம்.



யாழ். மத்திய கல்லூரி வளாகம் அருமையான ஓர் இடம். அதன் அருகில் இருந்த பாட நூல் நிறுவனத்திற்குச் சென்றோம். அங்கிருந்த அலுவலர்களிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு நூல்களை பார்வையிட அனுமதி கேட்டவுடன், புத்தக அலுமாரிகள் அருகே செல்ல விட்டார்கள். என் கண்கள் சென்றது ஓவி யப்பாட நூல்களிடம்தான். பள்ளிக்கல்வியில் இவ்வளவு தரமான ஓவியப்பாட நூல்களை தமிழகத்தில் பார்த்ததில்லை. நுண்கலைகளுக்கு மாற்றாந்தாய் மனப் பான்மைதான் இங்கு. பிற பாட நூல்களையும் பார்த்து வியந்தேன்.



மீண்டும் ஒரு முறை யாழ். நூலகம் சென்றேன். வாயிலில் பாதுகைகள் கழற்றி வைக்கப்பட்டிருந்ததை பார்த்து ஆச்சரியப்பட்டேன். பேருந்து நிலையம் அருகில்












பூபாலசிங்கம் புத்தகச்சாலை என்ற பெயரை பார்த்து மகிழ்ந்தேன். புத்தகம் என்ற பெயர் எப்போதும் நம்மைப்போன்றவர்களின் பிரியமான ஒன்றல்லவா!

இலங்கை வருகை நினைவாக துணிமணிகள் வாங்கலாம் என்று ஆசைப்பட்டு பேருந்து நிலையத்தை சுற்றியிருந்த சில கடைகளில் ஷாப்பிங் செய்தோம். ஏற்கனவே ஒருமுறை தாமதமாக சென்று நல்லூர் கந்தசாமி கோவில் நடை சாத்தப்பட்டுவிட்டதால், உள்ளே போக முடியவில்லை, ஆகவே அதையும் பூர்த்தி செய்ய அங்கு சென்றோம். தமிழகக்கோவில் கட்டடக் கலைக்கு முற்றிலும் மாறாக, கோபுரம் தவிர்த்து, வேறு பாணியில் இருந்ததை ரசித்தேன். தமிழ்நாட்டு கோவில்களில் அர்ச்சனை டிக்கெட்கள் குறைந்தபட்சம் 10 ரூபாய் இருக்கும். மூலவரை தரிசிக்க பல கட்டண வழிகளும் இருக்கும். இங்கு அதெல்லாம் இருப்பதாகத் தெரியவில்லை. அர்ச்சனை டிக்கெட் வெறும் ஒரு ரூபாய்தான். கோவிலுக்கு ஏதாவது நன்கொடை தர விரும்புபவர்கள்... நூறுக்கோ இருநூறுக்கோ டிக்கெட்கள் வாங்கி, தனக்கு தேவையான ஓரிரு டிக்கெட்கள் போக மீதத்தை அங்கேயே வைத்துவிட்டு போய்விடுகிறார்கள். நமக்கு தேவை என்றால் எடுத்து பயன்படுத்திக்கொள்ளலாம்! கோவிலுக்குள் புத்த பிக்குகளும் நடமாடுவதை பார்த்தேன். தனியார் நிர்வாகத்தில்தான் இந்தக் கோவில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

சென்ற முறை நல்லூர் வந்திருந்தபோது புகழ் பெற்ற லிங்கம் கிரீம் ஹவுசில் அருமையான ஐஸ் கிரீம் வகைகளை உண்டு மகிழ்ந்தேன். இந்த முறை அதே பகுதியில் உள்ள 'ரியோ கிரீம் ஹவுஸ்' கவர்ந்திழுத்தது. இந்த கடையில் கூடியிருந்த கூட்டமும், ஹால்களின் நீள அகலங்களும் பிரமிக்க வைத்தன. ருசியும் அபாரம்! துறவிகள் கூட பனிக்கூழை சுவைக்க வரிசையில் நின்றிருந்த காட்சி வியக்கவைத்தது.

அன்று மாலை திரு அ. யேசுராசா, அவர் வீட்டுக்கு அழைத்திருந்தார். அவருடைய வீட்டில், அவரும் அவரது சகோதரியும் வசிக்கிறார்கள். மிகவும் ஆர்வத்துடன் எனக்கு ஒரு இலங்கை இனிப்பையும் தந்து உபசரித்து, தன்னுடைய நூலகத்தையும் திறந்து காட்டினார். அற்புதமான சேகரிப்பு. நான் அட்டை ஓவியம் வரைந்திருந்த நூல்கள் கூட இருந்தன. அவரது வீட்டில் மாட்டப்பட்டிருந்த பழைய புகைப்படங்களையும் திரைப்பட சேகரிப்புகளையும் காட்டி விளக்கினார். விடைபெறும்போது அவருக்கு பிரியவே மனமில்லை! அடுத்த நாள் ஊர் திரும்பும் திட்டம் வேறு எங்களுக்கு இருந்தது.

அன்று மாலையில் கனடாவிலிருந்து நண்பர் சேகர் தம்பிராஜா அழைத்தார். 'எங்கள் ஊருக்கும் ஒருமுறை வந்து போங்கள்'. என் தந்தை தம்பிராசா, 1950-களில் இந்தியாவிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது, தலைமறைவாக இலங்கை வந்த தோழர் ஜீவாவுக்கு உதவிய தோழர்களில் ஒருவர். எங்கள் ஊருக்கு அவரை அழைத்து வந்து பேசச் செய்தார். அவர் உரையாற்றிய இடம் இன்னும் இருக்கிறது. பிரேம் செய்து மாட்டப்பட்டிருந்த அவர் பேசும் புகைப்படத்தை எங்களால் போர் சமயத்தில் காப்பாற்ற முடியவில்லை. போருக்கு பின் புதிய கட்டடமாக உள்ளது' என்றார்.

தோழர் சத்தியன் என்னை பைக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து சென்றார். செம்மணி தாண்டி கண்டி சாலையிலிருந்து பிரிந்த ஒரு சிறிய சாலையில் நாவற்குழி இருந்தது. சேகரின் தமக்கை குடும்பத்தினரை சந்தித்தேன். அவர் எங்களை அந்த கட்டடத்திற்கு அழைத்து சென்றார். இருள் கவிந்த நேரத்தில் அங்கு சென்று பார்த்தேன்.

15-7-1945-இல் துவக்கப்பட்ட 'பாரதி சனசமூக நிலையம்' இன்னும் அங்கு ஒரு சிறிய நூலகமாக இயங்கிக்கொண்டிருக்கிறது! இருள் படிந்து பூட்டப்பட்டிருந்ததால் உள்ளே சென்று பார்க்க இயலவில்லை.

அற்புதமான அந்த கணத்தை பதிவு செய்துகொண்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அடுத்த நாள் கிளம்புவதற்காக பொருட்களையெல்லாம் பேக் செய்துவிட்டு உணவருந்திவிட்டு படுத்தவுடன், பெருமழை பெய்யத் தொடங்கியது. ஓட்டு வீடு என்பதால் மழையின் பேரோசையும் ஆங்காங்கே நீர் ஒழுகி வழிவதையும் கண்டு இரவு தூக்கம் போனது. விடிந்தவுடன் சத்தியன் என்னை தன் பைக்கில் அழைத் துக்கொண்டு யாழ். மீனவர்கள் குடியிருப்புப் பகுதிகளில் வலம் வந்தார். காலை நேரம் புகைப்படங்கள் எடுக்க ஏதுவாக இருந்தது. மீனவர் வாழ்க்கைத் துணுக் குகள், கடல் அட்டை விவசாயம், கடலுக்குள் அமைக்கப்பட்டிருந்த காவல் பரண்கள், அங்கிருந்த எம்ஜிஆர், அண்ணாத்துரை சிலைகள் எல்லாமே புதுமையாக இருந்தன.

சத்தியன் குடும்பத்தினருடன் விடைபெற்று விமான நிலையம் சென்றடைந்து, அனைத்து செக்கிங்களும் முடித்து விமானத்திற்கு காத்திருந்தபோது, திருச்சியி லிருந்து வந்த விமானம் வானத்தில் சுற்றிக்கொண்டே இருந்தது. அரை மணி நேரம் கழித்து காலநிலை சரியில்லாததால் எங்கள் விமானம் ரத்து செய்யப்பட்ட தாகவும், பயணிகள் டிக்கெட்டுகளை வாபஸ் பெற்றுக்கொண்டோ மூன்று நாளைக்கு பிறகு புறப்படும் திருச்சி விமானத்திற்கு மாற்றிக்கொண்டோ செல்லலாம் என்று திடுக்கிடும் அறிவிப்பு வந்தது. மீண்டும் பல சடங்குகளுக்கு பிறகு வெளியே வந்தால், அந்த சிறிய விமான நிலையத்தின் லவுஞ்சில் பெரும் வாக்குவாதங்களும் கூச்சலும் நிலவின. நண்பர் சாம் மிக துணிச்சலுடன் குரல் எழுப்பினார். நாங்கள் வெளிநாட்டினர்... எங்களிடம் பணம் கூட இல்லை. இரவு தங்குவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும். அடுத்த நாள் எப்படியாவது எங்கள் பயணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று போராட்டக்குரல் எழுப்பினார். ஒரு வழியாக அப்போதுதான் நட்பான ஒரு அலுவலர் உதவியுடன், எங்களுக்கு அடுத்த நாள் சென்னைக்கும், அங்கிருந்து இன்னொரு விமானத்தில் திருச் சிக்கும் டிக்கெட் ஒதுக்கினார்கள். இயற்கை சூழல் காரணமாக விமானம் ரத்தா னதால் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யமுடியாது என்று இண்டிகோ நிறுவனம் மறுத்துவிட்டது. நண்பர்களிடம் உதவி கேட்பதற்கு விமான நிலைய வைஃ பை மட்டுமே உதவ முடிந்த நிலையில் பதற்றத்துடன் இருந்தோம். மாலை விமான நிலையத்தை பூட்டுவதற்கு, ஆம் பூட்டுவதற்குத்தான், ஆட்களும் வந்துவிட் டனர். தினமும் இரண்டே விமானங்கள் வந்து போகும் நிலையமல்லவா!

நண்பர் சத்தியன் உதவியுடன் மீண்டும் ஒரு விடுதியில் ஒரு அறையை தயார் செய்து அங்கு தங்கினோம். செய்தி அறிந்து தாய்வீடு நண்பர் ரமேஷ் இரவு வந்து எங்களை உணவருந்த அழைத்து சென்றார். இன்னும் சில இளம் நண்பர் களும் வந்து சந்தித்தனர்.

அடுத்த நாள் ஞாயிறு. நாங்கள் இருந்த பகுதியில் ஒரு கடையும் திறக்க வில்லை. காலை உணவாக பக்கத்தில் இருந்த ஒரு டீக்கடையில் ஒரு பன்னுடன் டீயை குடித்துவிட்டு விமான நிலையத்திற்கு மீண்டும் கிளம்பினோம்... அங்கும் உணவகம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. விமானத்தில் ஏறி சென்னையில் இறங்கினோம். அங்கிருந்த உணவக விலைப் பட்டியல் மிரட்டி யதால் திருச்சி வந்து இறங்கி ஒரு ஆட்டோ பிடித்து, பஸ் நிலையத்தில் ஓர் உண வகத்தில் இரண்டு இட்லியை உள்ளே தள்ளியவுடன்தான் உயிரே வந்தது! அங் கிருந்து சாம் நாகர்கோவிலுக்கும், நான் கோவைக்கும் பேருந்தில் கிளம் பினோம்!

இந்த பயணம் வாழ்வில் மறக்கமுடியாத இனிய அனுபவங்களையும், தாய்வீடு நண்பர்களின் விருந்தோம்பல்களையும், புதிய நட்புகளையும், தடங்கல்கள் வந்தால் எப்படி சமாளிப்பது என்ற பாடங்களையும் அளித்தது என்று சொன்னால் மிகையாகாது!



jeeva@thaiveedu.com













# புலம்பெயர் இளைய தலைமுறையினரைத் தாயகத்துடன் இணைத்தல்

■ நடராசா சிறிரஞ்சன்

உலகிலேயே அதிகளவான நெருங்கிய உறவினர் நண்பர்களைப் பல அபிவிருத்தியடைந்த நாடுகளில், குறிப்பாக உலகின் முக்கிய நகரங்களில் கொண்ட சமூகங்களில் ஈழத் தமிழர்கள் முதன்மையானவர்களாவர் என்றால் அது மிகையாகாது. பல ஐரோப்பிய, வட அமெரிக்க மற்றும் ஓசியானியப் பிராந்தியங்களின் முன்னணி நகரங்களில் ஈழத் தமிழர்கள் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். அந்நாடுகளில் அவர்கள் ஒரு தலைமுறை கடந்து வாழ்கிறார்கள். அவர்களில் பலர் பேரப்பிள்ளைகளும் கண்டுவிட்டார்கள் என்ற வகையில் அவர்களின் மூன்றாவது தலைமுறையினரும் அந்நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நாடுகளில் உள்ள அடுத்த சந்ததியினர்களில் பெரும்பான்மையானவர்கள் அந்த நாடுகளில் பிறந்தவர்கள். அத்துடன் அவர்களில் கணிசமானவர்கள் தமிழ் மொழி தெரியாதவர்கள். இதனால் தாயகத்தில் உள்ள உறவினர்களுடனான இவர்களது உறவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமின்றிப் பல குடும்பங்களில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் கூட நெருக்கமான உறவு இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று பொதுவாகவே மேற்கத்திய நாடுகளில் வளர்ந்த பிள்ளைகள் சுதந்திரமாகத் தீர்மானமெடுப்பவர்களாக இருப்பர். அதே வாழ்க்கை முறையில் வளர்ந்த புலம்பெயர் ஈழத் தமிழர்களின் பிள்ளைகளும் அவ்வாறானதொரு முறையைப் பின்பற்றுவதும் இயல்பாகும். அடுத்தது, பெற்றோர்கள் இரண்டு வேலை, மூன்று வேலை என்று ஓடியோடி உழைப்பதால் பிள்ளைகளுடன் அவர்களால் செலவிடக்கூடிய நேரம் மிகவும்

> **“எம்மவர்களில் பலர் அந்நாடுகளில் உள்ள பெற்றோர்கள் போன்று, தமது வாழ்க்கைத் துணையுடனான அன்பு, காதல், பாசம் அரவணைப்பு போன்றவற்றை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. இதனால் தமது பெற்றோர்களுக்கிடையில் சிறந்த அன்பு, பாசம், காதல் முதலியவை இல்லை என்று இளையவர்கள் தவறாகக் கருதுமொரு துரதிர்ஷ்டவசமான நிலையும் காணப்படுகிறது.”**

tg.theeban@gmail.com



மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதாகும். அதனால் அவர்களுக்கிடையே சரியான உறவு மற்றும் பிணைப்பு இல்லாது போகிறது. அதுமாத்திரமன்றி அந்நாடுகளில் உள்ள அவர்களது உறவினர்கள் நண்பர்களின் பிள்ளைகளுடனான உறவும் பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இதுவொரு துரதிர்ஷ்டமான நிலையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் அந்நாடுகளில் உள்ள இளைய சந்ததியினர், தாம் வாழும் நாடுகளின் வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாடு என்பவற்றிற்கு நன்றாகப் பழக்கப்பட்டவர்களாகவும், எமது கலாசாரம், பண்பாடு வாழ்க்கைமுறை போன்றவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் உள்ளனர். அவர்களுக்குப் புரியும் வகையில் அவற்றை தர்க்கரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் எடுத்துக்கூறி விளங்கப்படுத்தக்கூடிய நிலையில் பெரும்பாலான பெற்றோர்கள் இல்லை. மற்றொருபுறத்தில், எம்மவர்களில் பலர் அந்நாடுகளில் உள்ள பெற்றோர்கள் போன்று, தமது வாழ்க்கைத் துணையுடனான அன்பு, காதல், பாசம் அரவணைப்பு போன்றவற்றை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. இதனால் தமது பெற்றோர்களுக்கிடையில் சிறந்த அன்பு, பாசம், காதல் முதலியவை இல்லை என்று இளையவர்கள் தவறாகக் கருதுமொரு துரதிர்ஷ்டவசமான நிலையும் காணப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில், புலம்பெயர்ந்து வாழும் இளைய சந்ததியினர் எதிர்காலத்தில் தனித்துவிடப்பட்டவர்களாகப் போய்விடக்கூடிய நிலை தோன்றக்கூடும். அதனால் அவர்கள் எமது கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் இருந்து முற்றுமுழுதாக விடுபட்டுத் தாம் வாழும் கலாசாரம், பண்பாடுகளுக்கு முழுவதுமாக உள்ளீர்க்கப்பட்டு விடலாம்.

இவ்வாறானதொரு பின்னணியில் அவரவர்கள் வாழும் நாடுகளில் உள்ள உறவினர், நண்பர்களின் பிள்ளைகளையும் வேறும் பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உறவினர், நண்பர்களின் பிள்ளைகளையும் தொடர்பு சாதனங்களினூடாக இணைத்தல் பல நன்மைகளைப் பெற்றுத்தரும். அந்தந்த நாடுகளில் அவர்களது வாழ்க்கை முறைகள், சாதக பாதக விடயங்கள், பெற்றோர், உறவினர் மற்றும் நண்பர்களுடனான அவர்களது பிணைப்பின் தன்மை முதலியவற்றை பகிர்ந்து, அறிந்து, கலந்துரையாடி, விவாதித்துத் தெளிவுபெறுவதற்கும் இது வழிவகுக்கும்.

அது மாத்திரமின்றி அந்தந்த நாடுகளில் உள்ள கல்வி முறை, வேலைவாய்ப்புகள், அவற்றில் உள்ள சிறப்புகள் போன்ற இன்னோரன்ன விடயங்களையும் அவர்கள் அறிந்து, தெரிந்து, தெளிவடைய வாய்ப்பேற்படும். அதன்மூலமாக அவற்றில் உள்ள நல்ல விடயங்களைத் தமது வாழ்க்கை, தொழில் முதலியவற்றிலும் பிரயோகித்துப் பின்பற்ற இது துணை செய்யும். அதாவது சிறந்த அறிவுப் பரிமாற்றம் அவர்களிற்கிடையே ஏற்பட்டு அது அவர்களது வாழ்க்கை செழிப்படைய உதவுவதாக அமையும்.

தற்போது, புலம்பெயர் ஈழத் தமிழர்களில் பலர் தங்களது உறவினர்கள், பாடசாலை நண்பர்கள், பல்கலைக்கழக நண்பர்கள், தொழில் நிலைய நண்பர்கள் எனப் பல்தரப்பட்டவர்களுடன் புலனக் குழுக்கள் (Whatsup groups) முதலிய பல்வேறுபட்ட சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தொடர்பில் உள்ளனர். இவற்றைப்போன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் எமது இளைய தலைமுறையினர்களையும் பொருத்தமான குழுக்களினூடாகத் தொடர்புபடுத்துதல் வேண்டும்.

இவ்வாறு இளைய தலைமுறையினர்களைத் தொடர்புபடுத்தாது போனால் இவர்கள் தாம் வாழும் நாடுகளின் கலாசாரம் பண்பாடுகளுக்குள் பெருமளவுக்கு உள்வாங்கப்பட்டு தமது அடையாளத்தை முற்று முழுதாக இழந்துபோய்விடும் நிலைமை தோன்றக்கூடும். பதிலாக இவ்வாறு எம்மவர்களுடன் தொடர்புபட்டு வாழும்போது தாம் வாழும் நாட்டின் கலாசாரம், பண்பாடு என்பவற்றுடன் எமது கலாசாரம் பண்பாடு என்பவற்றையும் உரிய முறையில் அறிந்து, விளங்கி அவற்றில் உள்ள சாதக பாதகத் தன்மைகளைத் தமக்கிடையே விவாதித்துத் தேர்ந்தெடுத்து அவற்றில் சிறப்பானவற்றையும் பொருத்தமானவற்றையும் கைக்கொள்வதற்கு வாய்ப்பேற்படும். அதனூடே அவர்களது வாழ்கைத்தரம் மென்மேலும் சிறப்படைவதுடன் உலகெங்கும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் எம்மவர்கள் தமது அடையாளத்துடன் வாழ்வதற்கும் பல்வேறு பரஸ்பர நன்மைகளைப் பெற்றுத்தருவதாக அமையும்.



Nadarasa.sriranjan@thaiveedu.com

# 2000-க்குப் பிந்தைய ஈழத்துப் போரிலக்கியப் போக்குகள்

**யமீனா கிருஷ்ணசாமி**

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் கண்ணாடி. அது ஒரு மொழியின் வெளிப்பாடாகும். மொழி என்பது ஒரு சமூகத்தின் முழுமையான வெளிப்பாடாகும். சமூகம் என்பது சகமனிதர்களின் வாழ்வியல் திரட்சி ஆகும். மனித வாழ்வியல் என்பது சமூகப் பொருளுற்பத்தியை யும் சமூகப் பண்பாட்டு நிறுவனங்களையும் சார்ந்து இயங்குதல் ஆகும். சார்ந்து இயங்குதலைச் சமூகக் கருத்தியல்கள் நெறிப்படுத்துகின்றன. சமூகக் கருத்தி யல்களின் இயக்கத்திற்கு மொழி கருவியாக அமைகின் றது. மனித சமூகப் பண்படுத்தல்கள் அனைத்தும் மொழி யில் வெளிப்படுகின்றன. மொழியின் வெளிப்பாட்டில் பண்பட்ட கருத்தியல் களமாக இலக்கியம் திகழ்கின்றது. எனவே, கருத்தியல்களின் ஆகச்சிறந்த களமாக இலக்கி யத்தை உணரலாம்.

இலக்கியம் என்பது சமூக வாழ்வியலின் அதி முக்கியக் களமாகச் செயலாற்றுகின்றது. இலக்கியங்களை அணுகு தல் என்பது சமூகப் பண்பாட்டு நிறுவனங்களை அணு குதல் என்பதன் அங்கமாகும். இதனால் மனித குலத்தின் சமூக வாழ்வியலை மதிப்பிடுவதற்கு ஒரு பொருத்தமான களமாக இலக்கியம் திகழ்கின்றது. ஈழத்து தமிழ் இலக்கியம் கடந்த 40 வருடங்களாக ஈழத் தமிழர்களின் வலி, போராட்டம், நம்பிக்கை, இழப்பு ஆகிய அனைத் தையும் பதிவு செய்துள்ளது. 1983 ஜூலை கலவரத்தில் இருந்து 2009-வரை நடந்த யுத்தம் ஈழ இலக்கியத்தின் போக்கையே மாற்றியது. அதை 'யுத்த இலக்கியம்' அல்லது 'எதிர்ப்பு இலக்கியம்' என்று அழைத்தனர். 2000-ஆம் ஆண்டு என்பது யுத்தத்தின் உச்சகட்ட காலம். அதன் பிறகு 2009-இல் யுத்தம் முடிவுக்கு வந்தது. இந்த 'போருக்குப் பிந்தைய காலம்' ஈழ சமூகத்திலும் இலக்கியத்திலும் மிகப்பெரிய திருப்புமுனையை உரு வாக்கியது. இனி துப்பாக்கி பற்றி அல்ல, மனிதர் பற்றி பேச வேண்டிய கட்டாயம் வந்தது. இந்த கட்டுரை 2000-க்குப் பிந்தைய, ஈழத்து இலக்கியம் எவ்வாறு சமூக மாற்றங்களை எதிர்கொண்டது என்பதை ஆராய்வதாக காணப்படும்.

## 2000 – 2009 காலகட்டம் – யுத்தத்தின் நிழலில் இலக்கியம்:

2000-களின் ஆரம்பம் ஈழத்திற்கு மிகவும் கொடூரமான காலம். இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வு, பொரு ளாதார தடை எல்லாம் சேர்ந்து மக்களை நசுக்கியது. இக்காலப்பகுதியில் ஈழ இலக்கியம் பெரிதும் போரின் அனுபவங்களால் வடிவமைக்கப்பட்டது. எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் நினைவுகள், இடம்பெயர்வு,



வன்முறை, எதிர்ப்பு, மற்றும் சமூக விமர்சனங்களை வெளிப் படுத்தினர். போரின் கொடுமைகள், காணாமல் போனவர் கள், அகதிகளின் வாழ்க்கை ஆகியவை கவிதை, நாவல், சிறுகதைகளில் பிரதிபலித்தன. உதாரணம்: சோபாசக்தியின் கொரில்லா, ம், தாமரைச்செல்வியின் நாவல் பச்சைவயல் கனவு, வீதியெல்லாம் தோரணங்கள், செங்கை அழியானின் சாம்பவி, வானும் கனல் சொரியும் தமிழ்கவியின் இனி வானம் வெளிச்சிரும் முதலான நாவல்களைக் கூறலாம்.

அகதிகளின் பயணம், தாயக இழப்பு, வெளிநாட்டு வாழ்வு ஆகியவை இலக்கியத்தின் மையமாக அமைந்தன. புலம் பெயர் எழுத்தாளர்கள் தாயக நினைவுகளை இலக்கியமாக மாற்றினர். அரசின் அடக்குமுறைகளையும், போரின் கொடு மைகளையும் இலக்கியம் சாட்சியமாகப் பதிவு செய்தது. இலக்கியம் அதிகாரபூர்வ அரசியல் மொழிக்கு எதிரான மாற்று குரலாக இருந்தது. ஆங்கில இலக்கியம் மற்றும் புலம்பெயர் படைப்புகள் சமூகங்களுக்கிடையேயான உரை யாடலை உருவாக்க முயன்றன. பெண்களின் அனுபவங்கள், குடும்ப இழப்புகள், சமூகத்தில் அவர்களின் நிலைமைகள் வலுவாக வெளிப்பட்டன. பெண் எழுத்தாளர்கள் பாரம்பரியக் கட்டுப்பாடுகளையும் போரின் அரசியலையும் விமர்சித்தனர்.

இக்கால இலக்கியங்கள் அவசர பதிவுகளாகவும் காணப் பட்டன. யுத்த நிலைமைகளின்போது அதிகப்படியான அவல நிலைகளை எழுத்துருவில் வடிக்கப்படுவதற்கு மிகுந்த நேரங்கள் ஏற்படுவதன் காரணமாக இலக்கியங்கள் அவசர அவசர பதிவுகளாக நாவல் வடிவமைப்பில் எழுதுவதற்கான நேரம் இல்லாததன் காரணமாக நடந்ததை உடனே எழுதக் கூடிய வகையில் சிறிய கவிதைகளாகவும் சிறுகதைகளாக வும் அதிகமாக எழுதப்பட்டது. நடந்ததை உடனே எழுத வேண்டிய தேவை. கிளைமோர் வெடி (முன்னமே திட்டமிடப் படிப்பட்டு ஆழ ஊடுறுவும் படையணியினராலும் இலங்கை இராணுவத்தினராலும் தங்களுடைய எதிரிகளை வீழ்த்த பயன்படுத்தப்பட்ட மூலோபாயம்), வான் குண்டுவீச்சு, முகாம் வாழ்வு, கடல் கடத்தல், போராளிகளின் தியாகம் என்பன அடிப்படை உள்ளடக்கங்களாக்கப்பட்டன. இந்த வடுக்களை சி. கருணாகரன், நிலாந்தன். சு. வில்வரத்தினம், அநாமிகன், அமரதாஸ், சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், அ. யேசுராசா இவர்கள் எல்லோரும் 'சாட்சிகளாக' எழுதினார்கள். இக்கால கட்ட இலக்கியம் 'நாம் இன்னும் உயிரோடு இருக்கிறோம்' என்று உலகத்திற்கு சொல்லும் கூக்குரலாக இருந்தது.

## 2009–க்குப் பிந்தைய ஈழ இலக்கிய நிலை:

2009 மே மாதத்தில் இலங்கை உள்நாட்டுப் போர் முடி வடைந்தது. அந்தப் போரின் முடிவு ஈழ மக்களின் வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. போருக்குப் பிந் தைய காலத்தில் இலக்கியம் சமூகத்தின் மனநிலையை, துக்கத்தை, மற்றும் மறுசீரமைப்பை பிரதிபலிக்கும் முக்கிய கருவியாக இருந்தது. குறிப்பாக கவிதைகள், சிறுகதைகள், மற்றும் நாவல்கள் போரின் நினைவுகளை, அகதி முகாம் களின் அனுபவங்களை, மற்றும் காணாமல் போனவர்களின் துயரங்களைப் பதிவு செய்தன. இலக்கியம் போரின் கொடு மைகளை மறக்காமல், சமூக நினைவுகளை தலைமுறை களுக்குப் பாதுகாக்கும் சாட்சியமாக இருந்தது.

போருக்குப் பிந்தைய ஈழ இலக்கியத்தில் அகதி அனுப வங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் முகாம்களில் வாழ்ந்த மக்களின் துயரங் கள் சிறுகதைகளிலும் கவிதைகளிலும் வெளிப்பட்டன. தாயக இழப்பு, இடம்பெயர்வு, மற்றும் அடையாளக் குழப்பம் போன்றவை புலம்பெயர் எழுத்தாளர்களின் படைப்புகளில் பிரதிபலித்தன. அவர்கள் தங்கள் நினைவுகளை இலக்கிய மாக மாற்றி, தாயகத்தின் குரலை உலகளாவிய வாசகர் களிடம் கொண்டு சென்றனர்.

பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு இந்தக் காலத்தில் குறிப்பிடத்தக்கது. அவர்கள் தங்கள் படைப்புகளில் போரின் போது பெண்கள் எதிர்கொண்ட சவால்களை, குடும்ப இழப் புகளை, மற்றும் சமூகத்தில் அவர்களின் நிலையை வெளிப் படுத்தினர். பெண்களின் குரல் இலக்கியத்தில் வலுவாக வெளிப்பட்டதால், அது சமூக விமர்சனமாகவும், எதிர்ப்பின் குரலாகவும் அமைந்தது. அதே நேரத்தில், இலக்கியம் சமரசம் மற்றும் உரையாடல் நோக்கிலும் முன்னேறியது. ஆங்கிலம் மற்றும் புலம்பெயர் இலக்கியங்கள் சமூகங்களுக் கிடையேயான உரையாடலை உருவாக்க முயன்றன. சில படைப்புகள் போரின் கொடுமைகளை மட்டுமே பதிவு செய் யாமல், எதிர்காலத்தில் அமைதி மற்றும் சமரசம் எவ்வாறு சாத்தியமாகும் என்பதை ஆராய்ந்தன. 2009-க்குப் பிந்தைய ஈழ இலக்கியம் சமூகத்தின் துயரங்களை, நினைவுகளை, மற்றும் எதிர்ப்பை பதிவு செய்ததோடு, மறுசீரமைப்பு மற்றும் சமரசம் நோக்கிலும் முன்னேறியது. இலக்கியம் போருக்குப் பிந்தைய ஈழ சமூகத்தின் மன உளைச்சலையும், எதிர்கால நம்பிக்கையையும் பிரதிபலிக்கும் முக்கிய ஆவணமாக இருந்து வருகிறது.

2009-க்குப் பிந்தைய ஈழ சமூக நிலைமை மிகக் கடினமான மறுசீரமைப்பு காலமாக இருந்தது. போரின் முடிவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி, அடிப்படை வசதிகள் அழிந்த நிலையில் இருந்தன. இந்த குழப்பமான சூழல்தான் புதிய இலக்கியத்திற்கு வித்திட்டது.

போருக்குப் பிந்தைய இலக்கியத்தின் முதன்மையான போக்கு நினைவுகள் ஆகும். போரின் கொடுமைகள், காணா மல் போனவர்கள், குடும்ப இழப்புகள், மற்றும் அகதி முகாம் களின் அனுபவங்கள் இலக்கியத்தில் வலுவாக வெளிப்பட் டன. சோபாசக்தியின் கொரில்லா போன்ற நாவல்கள் அகதி களின் வாழ்க்கையை, அரசியல் அடக்குமுறைகளை, சமூ கத்தின் மன உளைச்சலை வெளிப்படுத்தும் சாட்சியங் களாக இருந்தன. கவிதைகளில் சேரன், வ.ஐ,ச. ஜெயபாலன், சி. கருணாகரன் போன்ற கவிஞர்கள் போரின் நினைவுகளை, தாயக இழப்பை, மற்றும் எதிர்ப்பின் குரலை பதிவு செய் தனர். இரண்டாம் விடியல் போன்ற கவிதைகள் சமூக நினை வுகளை தலைமுறைகளுக்கு பாதுகாக்கும் கருவிகளாகவும், எதிர்ப்பின் குரலாகவும் அமைந்தன.

போருக்குப் பிந்தைய இலக்கியத்தில் இடம்பெயர்வு முக்கிய விடயமாக இருந்தது. அகதி முகாம்களில் வாழ்ந்த மக்களின் துயரங்கள் சிறுகதைகளிலும் கவிதைகளிலும் வெளிப்பட் டன. புலம்பெயர் எழுத்தாளர்கள் தாயக நினைவுகளை,



அடையாளக் குழப்பங்களை, புதிய சூழலின் சவால்களை தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்தினர். கனடா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் தங்கள் இலக்கியம் மூலம் தாயகத்தின் குரலை உலகளாவிய வாசகர்களிடம் கொண்டு சென்றனர். புலம்பெயர் கவிதைகள் தாயக இழப்பின் துயரத்தையும், புதிய சூழலில் வாழ்வதற்கான சவால்களையும் பதிவு செய்தன. போருக்குப் பிந்தைய இலக்கியத்தில் பெண் எழுத்தாளர்கள் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் தங்கள் சிறுகதைகள் மற்றும் கவிதைகளில் போரின் போது பெண்கள் எதிர்கொண்ட சவால்களை, குடும்ப இழப்புகளை, மற்றும் சமூகத்தில் அவர்களின் நிலையை வெளிப்படுத்தினர். இவ்வகையில் கவிதைத் தொகுப்புகளாக நீத்தார் பாடல்கள், ஒலிக்காத இளவேனில் முதலான தொகுப்புகள் வெளிவந்தன.

2009-க்குப் பிந்தைய ஈழ இலக்கியம், போரின் துயரங்களையும் நினைவுகளையும் பதிவு செய்ததுடன், எதிர்ப்பு, சமரசம், மறுசீரமைப்பு ஆகிய தளங்களிலும் புதிய பரிமாணங்களைப் பெற்றது. குறிப்பாக, இறந்தவர்களையும் காணாமல் போனவர்களையும் நினைவுகூரும் நினைவு இலக்கியம், பாலியல் வன்முறை, குழந்தைகளின் அச்சம், கணவரை இழந்தவர்களின் தனிமை போன்ற போரால் ஏற்பட்ட உளவியல் பாதிப்புகளை வெளிப்படுத்தும் அதிர்ச்சி மற்றும் உளவியல் இலக்கியம், கல்வி, காதல், வேலைவாய்ப்பு, சாதி போன்ற போருக்குப் பிந்தைய அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளைப் பேசும் அன்றாட வாழ்வு இலக்கியம் ஆகியவை முக்கியத்துவம் பெற்றன. இதன் மூலம் முன்னர் வீரத்தையும் போராட்டத்தையும் முன்னிறுத்திய இலக்கியம், பலவீனம், வலி, அச்சம், தனிமை போன்ற மனித அனுபவங்களையும் பேசத் தொடங்கியது.

இதேவேளை, புதிய தலைமுறை எழுத்தாளர்களின் வருகையால் ஈழ இலக்கியத்தின் மொழிநடையும் பார்வையும் மாற்றமடைந்தன. போரைக் குறிப்பிடத்தக்க அளவில் நேரடியாக அனுபவிக்காத இத்தலைமுறையினர் இளைஞர்களின் குரல், பெண்ணியப் பார்வை, புலம்பெயர் வாழ்வு போன்ற புதிய கருப்பொருள்களை முன்வைத்தனர். ஆவேசம் குறைந்து கேள்விகளும் தனிமனித அனுபவங்களும் அதிகரித்த இவ்வெழுத்துகள், ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு இடையிலான இலக்கியத் தொடர்பையும் மேலும் நெருக்கமாக்கின.

யுத்தத்தின் போது ஒதுக்கி வைக்கப்பட்ட பிரச்சினைகள் இப்போது வெளிவந்தன. போரில் கணவனை இழந்த பெண்கள், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெண்கள் பற்றிய எழுத்துகள் அதிகமானது. ‘தாய்’ என்ற ஒற்றை பிம்பம் உடைந்து, ‘பெண்’ என்ற தனிநபர் குரல் ஒலித்தது. ‘நாம் எல்லோரும் தமிழர்கள்’ என்ற ஒற்றை அடையாளத்திற்குள் மறைந்திருந்த சாதி, யுத்தத்திற்கு பின் மீண்டும் தலை தூக்கியது. இதை சுமதிரூபனின் உறையும் பனிப் பெண்கள், யாதுமாகி நின்றாள், நிருபாவின் சுணைக்கிது முதலான தொகுப்புகளில் காணலாம்.

## புலம்பெயர் ஈழ இலக்கியத்தின் பங்கு:

2000-க்குப் பிந்தைய ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் புலம்பெயர் எழுத்தாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. பல்வேறு புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்த ஈழத் தமிழர்கள் தமது படைப்புகள், இதழ்கள், பதிப்பகச் செயற்பாடுகள் மற்றும் நிதியுதவிகள் வழியாக ஈழத்து இலக்கியத்துடன் தொடர்ந்து தொடர்பைப் பேணி வந்தனர். குறிப்பாக, ஈழத்தில் நூல்கள் வெளிவருவதற்கான பதிப்புப் பணிகளுக்கும் இலக்கியச் செயற்பாடுகளுக்கும் புலம்பெயர் சமூகத்தினரின் ஆதரவு கிடைத்தது. அதேவேளை, ஈழத்து மக்களின் துயரங்களையும் அனுபவங்களையும் புலம்பெயர் சூழலில் இருந்து பிரதிபலிப்பது தொடர்பாக விமர்சனக் கேள்விகளும் முன்வைக்கப்பட்டன.

போர் கால இலக்கியங்களிலிருந்து 2000-க்குப் பிந்தைய ஈழத்து இலக்கியம் புதிய மாற்றத்தையும் பரிணாமத்தையும் பெற்றது. போரின் வலி, இழப்பு, நினைவு, இடப்பெயர்வு ஆகியவற்றைப் பதிவு செய்த நிலையில் இருந்து, போருக்குப் பிந்தைய சமூகத்தின் உளவியல் பாதிப்புகள், அன்றாட வாழ்வு, அடையாளம், மீள்கட்டமைப்பு மற்றும் எதிர்கால நம்பிக்கை போன்ற புதிய தளங்களை நோக்கி அது விரிந்தது. இதனால் ஈழத்து இலக்கியம் ஒரு காலத்தின் போர்ச் சாட்சியமாக மட்டுமன்றி, அதன் பின்னரான சமூக வாழ்வின் தொடர்ச்சியான பதிவாகவும் திகழ்கிறது.



yameena.k@thaiveedu.com

அருணாசலம் லெட்சுமணன்

# இலங்கையில் தமிழர்களின் தொன்மை நிலையை வலியுறுத்தும் இராமாயணத் தடங்கள்



இன்று உலகளாவியரீதியில் தமிழர்களின் தொன்மைமிக்க வரலாறு குறித்த கவனம் அதிகரித்து வருகிறது. மொழி, வாழ்வியல், சமூகம், அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுகளிலும் தேடல்களிலும் தமிழர்களின் தொன்மைமிக்க தடயங்கள் வலிமையான சான்றுகளாகத் திகழ்கின்றன. குறிப்பாக, கீழடி அகழாய்வுகளும் அவற்றின் ஆய்வு முடிவுகளும் தமிழர்களின் தொன்மை, நகர்ப்பண்பாடு, வாழ்வியல் மற்றும் அறிவு சார் வளர்ச்சி குறித்த புதிய கவனத்தை உலகளவில் ஏற்படுத்தியுள்ளன. இதனுடன், உலகின் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகளும் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை மேலும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

கடல்சார் தொல்லியல் ஆய்வுகள், தமிழர்களின் பண்டைய வரலாற்றையும் கடல்சார் தொடர்புகளையும் ஆராய்வதற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இவ்வாய்வுகளின் ஊடாக ஆசிய மற்றும் ஆபிரிக்கப் பகுதிகளுடனான பண்டைய தமிழர் தொடர்புகள் குறித்தும் ஆராய முடிகிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் தொன்மைமிக்க நாகரிகச் சான்றுகளுடன் தமிழர்களின் வரலாற்றைத் தொடர்புபடுத்தி நோக்குவதன் மூலம், அவர்களின் பூர்வீகம், பண்பாட்டு வளர்ச்சி மற்றும் பிற சமூகங்களுடனான தொடர்புகள் குறித்த பல்வேறு பரிமாணங்களை அறிந்துகொள்ள முடிகிறது. அதே வேளை, தெற்காசியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் தொன்மை வரலாறுகளை ஆராயும்போதும் தமிழர்களுடனான பண்பாட்டு, வணிக மற்றும் கடல்சார் தொடர்புகளுக்கான தடயங்கள் கவனத்திற்குரியவையாக அமைகின்றன.

இலங்கையிலும் தமிழர்களின் தொன்மைமிக்க வரலாற்றுத் தடயங்கள் தொடர்பான ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக, அவ்வரலாற்றுத் தடயங்களைப் புறக்கணித்தல், மறைத்தல் அல்லது அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தல் போன்ற போக்குகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில், இந்தியப் பண்பாட்டு மரபில் முக்கியத்துவம் பெற்றுள்ள இராமாயணத்தை ஒரு வரலாற்று, பண்பாட்டு மற்றும் குறியீட்டுப் பிரதியாக அணுகுவது ஆய்வுக்குரிய புதிய தளத்தைத் திறக்கிறது. இராமாயணக் கதைமரபில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத அல்லது இதுவரை போதிய கவனத்திற்கு உட்படுத்தப்படாத தமிழர்களின் பூர்வீகம், வாழ்வியல், பண்பாட்டு அடையாளங்கள் மற்றும் வரலாற்றுத் தொடர்புகள் குறித்த சாத்தியமான தடயங்களை ஆராய்வது இவ்வாய்வின் முக்கிய நோக்கமாக அமைகிறது. அவ்வகையில், இராமாயணத்தில்

tg.theeban@gmail.com

இடம்பெறும் நிலவியல், இனக்குழு, பண்பாடு, மொழி, வாழ்வியல் மற்றும் சமூக அடையாளங்கள் தொடர்பான சுவடுகளை ஆராய்ந்து, அவற்றின் ஊடாகத் தமிழர்களின் தொன்மை மற்றும் வரலாற்றுத் தொடர்புகளை அடையாளம் காணும் நோக்கில் இவ்வாய்வு விரிவுபெறுகிறது.

இன்று உலகளாவிய ரீதியில் தமிழர்களின் தொன்மைமிக்க வரலாறு குறித்த கவனம் அதிகரித்து வருகிறது. மொழி, வாழ்வியல், சமூகம், பண்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தமிழர்களின் தொன்மை மற்றும் வரலாற்றுத் தொடர்ச்சி குறித்த புதிய சான்றுகளை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, கீழடி அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகள் தமிழர்களின் தொன்மை, நகர்ப்பண்பாடு மற்றும் வாழ்வியல் குறித்த ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளன. அதேவேளை, தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தொல்லியல் மற்றும் வரலாற்றாய்வுகள் தமிழர்களின் பண்டைய பண்பாட்டு, வணிக மற்றும் கடல்சார் தொடர்புகளை அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றன. இந்நிலையில், இலங்கையில் தமிழர்களின் தொன்மைமிக்க வரலாற்றுத் தடயங்கள் தொடர்பான ஆய்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழர்களின் பூர்வீகம், பண்பாடு, வாழ்வியல் மற்றும் வரலாற்றுத் தொடர்புகளை அறிந்துகொள்வதற்குப் பல்வேறு வரலாற்று மற்றும் இலக்கிய ஆதாரங்களை மீளாய்வு செய்வது அவசியமாகிறது. அவ்வகையில், இந்தியப் பண்பாட்டு மரபில் முக்கியத்துவம் பெற்றுள்ள இராமாயணத்தை ஒரு இலக்கிய மற்றும் பண்பாட்டுப் பிரதியாக அணுகி, அதில் காணப்படும் நிலவியல், இனக்குழு, பண்பாடு, வாழ்வியல் மற்றும் சமூக அடையாளங்களை ஆராய்வதன் மூலம் தமிழர்களின் தொன்மை மற்றும் வரலாற்றுத் தொடர்புகள் குறித்த சாத்தியமான தடயங்களை அடையாளம் காண முடியும். அவ்வகையில், இராமாயணக் கதைமரபில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத அல்லது போதிய கவனம் பெறாத தமிழர்களின் பூர்வீகம் மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் தொடர்பான சுவடுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

சங்ககாலத்திற்கு முற்பட்ட தமிழர்களின் வரலாற்றையும் பூர்வீகத்தையும் தேட வேண்டிய தேவை, தமிழர்களின் தொன்மைச் சான்றுகளை நோக்கிய ஆய்வுப் பயணத்திற்கு வழிவகுக்கிறது. இத்தகைய பூர்வீகத் தேடலுக்கு வழிகாட்டக்கூடிய முக்கிய இலக்கிய ஆதாரங்களுள் இராமாயணமும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இராமாயணம் வடஇந்தியப் பண்பாட்டு மரபை முதன்மைப்படுத்தும் இதிகாசமாக விளங்குவதோடு, இலங்கை தொடர்பான பல்வேறு செய்திகளையும் பதிவுசெய்கிறது. அவற்றில் தமிழர்களின் பூர்வீகம், வாழ்வியல் மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளுக்கான சாத்தியமான தடயங்களை அடையாளம் காண்பது கவனத்திற்குரியதாக அமைகிறது. ஆரிய-தமிழர் முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களை இழிவுபடுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட அல்லது பின்னாளில் விளக்கப்பட்ட கருத்தாக்கங்கள் தொடர்பாகவும் பல்வேறு விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய கருத்துநிலைகளைப் புரிந்துகொள்வதற்கும் இராமாயணத்தின் வரலாற்று மற்றும் பண்பாட்டு வாசிப்புகளை மதிப்பிடுவதற்கும் மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், பெரியார், வின்சென்ட் ஸ்மித், ரமேஷ் சந்திர தத், சி.பி. சாமிவேல் ஆகியோரின் கருத்துகள் கவனத்திற்குரியவையாக அமைகின்றன.

இராமாயணம் பல்வேறு கருத்துநிலைகளையும் வாசிப்புகளையும் கொண்ட தொன்மையான இதிகாசமாக விளங்குவதுடன், இலங்கை தொடர்பான பல்வேறு செய்திகளையும் பதிவுசெய்துள்ளது. இதனால், தமிழர்களின் பூர்வீகம், வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுகளில் இராமாயணம் கவனத்திற்குரிய இலக்கிய ஆதாரமாக அமைகிறது. குறிப்பாக, சூர்ப்பணகை, இராவணன், சீதை ஆகியோரை மையமாகக் கொண்ட கதைப்போக்கில் இலங்கை முக்கியக் களமாக இடம்பெறுகிறது. மேலும், இராமாயணத்தில் இடம்பெறும் இந்தியா-இலங்கை நிலவியல் தொடர்பான குறிப்புகளும், பின்னாளில் 'ஆதாம் பாலம்' அல்லது 'இராமர் பாலம்' என அழைக்கப்படும் கடல்சார் நில அமைப்புடன் தொடர்புபடுத்தப்படும் கருத்துகளும் ஆய்வுக்குரியவையாக உள்ளன. இவ்வகையில், இராமாயணத்தில் காணப்படும் இலங்கைத் தொடர்பான குறிப்புகளை ஆராய்வதன் மூலம் தமிழர்களின் தொன்மை மற்றும் பூர்வீகம் குறித்த புதிய பார்வைகளை முன்வைக்க முடியும்.

இராமாயணத்தின் கதையம்சம் நகர்த்தப்படுகையில், இலங்கையின் நுவரெலியா பகுதி முக்கியக் களமாக அமைகிறது. இராமாயணம் குறிப்பிடும் சித்தரிப்புகளுடன் ஒப்பிடத்தக்க வகையில் இப்பகுதியின் இயற்கைச் சூழல் காணப்படுகிறது. கருமண், காடுகள், அசோகவனம், அனுமனின் பாதச்சுவடுகள் என நம்பப்படும் தடயங்கள் போன்றவை இராமாயணச் சித்தரிப்புகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இக்காடுகளில் காணப்படும் மரங்களின் வயது தொடர்பான ஆய்வுகள் இப்பகுதியின் காலத்தொன்மையை அறிய உதவுகின்றன. சீதை இருந்ததாகக் கூறப்படும் வனப்பகுதியில் அமைந்துள்ள நந்தவனம் 'ஹக்கலை' என அழைக்கப்படுகிறது. சீதை உலாவியதாகக் கூறப்படும் இப்பகுதியில் சீதா எலிய ஆலயமும் அமைந்துள்ளது. ஹக்கலை அசோக வனத்தில் சீதைக்கும் மண்டோதரிக்கும் இடையிலான சந்திப்பும், பின்னர் அனுமன் சீதையைச் சந்தித்து இராமனின் கணையாழியைக் காண்பித்து நம்பிக்கையை ஏற்படுத்திய நிகழ்வும் இடம்பெற்றதாக இராமாயணக் கதையம்சம் குறிப்பிடுகிறது. இக்கதைச் சித்தரிப்புகளுடன் தொடர்புபடுத்தப்படும் சூழல் இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

நுவரெலியாவை அண்டிய பகுதிகளில் கொத்மலை (கொத்தமல்லி), இராவணன் கோட்டை, லபூக்கலை, இரம்பொடை போன்ற இடங்கள் இராமாயணத் தொடர்புடையவையாகக் கருதப்படுகின்றன. அவற்றுள் இராவணன் கோட்டை இராவணனின் ஆட்சியுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இப்பெயர் மருவி இன்று 'இராவணாங்கொடை' என வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இராமாயணத்தில் சீதைக்குத் தேவையான மூலிகைகளைப் பெறுவதற்காக அனுமன் சஞ்சீவி மலையை எடுத்துவந்ததாகக் கூறப்படுகிறது. இக்கதை இலக்கிய மிகைப்படுத்தல்களைக் கொண்டிருந்தாலும், இப்பகுதியில் மூலிகை வளமும் சித்த மருத்துவப் பாரம்பரியமும் காணப்படுவது கவனத்திற்குரியது. அதேபோன்று, வானரங்கள் வாழ்வதற்கான இயற்கைச் சூழல், பழைய குடியிருப்புகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை இப்பகுதியின் வரலாற்றுத் தொடர்புகளை ஆராய்வதற்குரிய கூறுகளாக அமைகின்றன. இந்து வழிபாட்டுத் தலங்கள் பின்னாளில் பௌத்த விகாரைகளாக மாற்றப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், இப்பகுதியில் காணப்படும் கல்வெட்டுகள் உள்ளிட்ட தொல்லியல் சான்றுகளை ஆய்வுக்குட்படுத்துவது அவசியமாகிறது.

இராமர் படை தரித்த இடம்' என அழைக்கப்பட்ட பகுதி, காலப்போக்கில் 'இரம்பொடை' என மருவியதாகக் கூறப்படுகிறது. இராவணனுடன் போரிடுவதற்காக இராமனின் படைகள் இப்பகுதியில் தங்கியிருந்ததாக நிலவும் மரபுவழிக் கருத்து இதற்குக் காரணமாகக் குறிப்பிடப்படுகிறது. இராவணன் கோட்டைக்கும் இரம்பொடைக்கும் இடைப்பட்ட பகுதி 'கொத்தமல்லி' என அழைக்கப்பட்டதாகவும், அனுமன் கொண்டுவந்ததாகக் கூறப்படும் மூலிகைகளில் ஒன்றான கொத்தமல்லி இப்பகுதியில் வளர்ந்ததன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டதாகவும் கருதப்படுகிறது. பின்னாளில் இப்பெயர் 'கொத்மலை' என மருவியதாகக் கூறப்படுகிறது. கொத்மலைப் பகுதி துட்டகைமுனு மற்றும் எல்லாளன் தொடர்பான வரலாற்றுச் செய்திகளுடனும் இணைத்துப் பேசப்படுகிறது. எல்லாளனுக்கு எதிரான போருக்குத் தயாராகும் காலத்தில் துட்டகைமுனு இப்பகுதியில் தங்கியிருந்து படைதிரட்டல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. மேலும், கண்டி இராசதானியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கும் கொத்மலை, ஹங்குராங்கெத்த பகுதிகளுக்கும் இடையே வரலாற்றுத் தொடர்புகள் காணப்படுகின்றன. இவ்விடங்களின் தொன்மை மற்றும் வரலாற்றுத் தொடர்புகளை ஆராய்வதற்கு அவற்றுடன் இணைந்துள்ள இடப்பெயர்கள், மரபுவழிக் கதைகள் மற்றும் தொல்லியல் சான்றுகள் கவனத்திற்குரியவையாக அமைகின்றன.

இரம்பொடைப் பகுதியின் பூர்வீக வரலாற்றை நினைவுபடுத்தும் வகையில் அங்கு ஆஞ்சனேயர் ஆலயம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தொன்மையையும் மனிதகுலத்தின் அறிவியல் வளர்ச்சியையும் அறிந்துகொள்வதில் கற்காலச் சான்றுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நுவரெலியாவில் அமைந்துள்ள சீதையம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள கற்களில் காணப்படும் பாதச்சுவடுகளை ஒத்த சுவடுகள் சிவனொளிபாத மலையிலும் காணப்படுகின்றன. அவை சிவனின் பாதச்சுவடுகள் எனும் நம்பிக்கையும், பின்னர் கௌதம புத்தரின் பாதச்சுவடுகள் எனும் கருத்தும் நிலவி வருகின்றன. அண்மையில் மஸ்கெலியா காட்மோர் தோட்டப் பகுதியில் இதனை ஒத்த பாதச்சுவடுகள் கண்டறியப்பட்டதாகவும், அவ்விடம் தற்போது வழிபாட்டுத் தலமாகப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. இப்பாதச்சுவடுகள் தொடர்பான முறையான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது, இப்பிரதேசத்தின் தொன்மையையும் தமிழர்களின் வரலாற்றுத் தடயங்களையும் ஆராய்வதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

சிவனொளிபாத மலைக்கு அண்மித்த பகுதியில் அமையப்பெற்றுள்ள ஏழுமலை மலைத்தொடரோடு தொடர்புபட்ட கதைகள் பல உள்ளன. அவற்றுள் இராவணனின் புஸ்பக விமானம் இம்மலையில் மோதுண்ட விடயம் முக்கியமானதாகும். அவ்விமானத்தின் உதிரிப்பாகமாக நம்பப்படுகின்ற பகுதி ஒன்று இன்னமும் தடயமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பின்னாளில் இந்த மலைத்தொடரில் பாரிய விமான விபத்து ஒன்றும் இடம்பெற்றுள்ளது. 1974.12.04 அன்று 191 பிராயாணிகளை ஏற்றி வந்த ஒல்லாந்து நாட்டினுடைய மார்டின் எயார் விமானமே விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் அனைவரும் காவுகொள்ளப்பட்டனர். இவ்விமானத்தின் டயர் (சக்கரம்) இன்னும் நோட்டன் பிரிஜ் நகரில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது.




ஏழுமலை, சிவனொளிபாதமலை மற்றும் காட்மோர் தோட்டப் பகுதிகளில் கண்டறியப்பட்டதாகக் கூறப்படும் காலடித்தடங்களும், நுவரெலியா சீதையம்மன் ஆலய வளாகத்தில் உள்ள கற்களில் காணப்படும் காலடித்தடங்களும் ஒத்த தன்மையைக் கொண்டுள்ளன. இவை இராவணனுடைய காலத்துடன் தொடர்புடையவையாக இருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. எனினும், பிற்பட்ட காலங்களில் ஆரிய







மற்றும் பௌத்த மேலாதிக்கச் சூழலில் இத்தடயங்களுக்கு வேறுபட்ட விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நுவரெலியா, மஸ்கெலியா மலைத்தொடர்கள் ஊடாக அமைந்த கினிகத்தேனை நகரம் இராமாயணக் கதையோடு மிக நெருங்கிய தொடர்பை கொண்டிருக்கின்றது. இந்த நகரம் பிரித்தானியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட காலக்கட்டத்தில் ஒத்தைக்கடை என அழைக்கப்பட்டுள்ளது. இதனை மு. சிவலிங்கம் தனது வரலாற்று நாவலில் குறிப்பிடுவார். இராமாயணத்தில் அனுமனின் வாலில் தீ மூட்டி அந்த தீ இலங்கையின் பல பகுதிகளை பற்றி எரிந்ததாகவும் கதையமைப்பு நகர்கிறது. இயற்கை கட்டமைப்பு காடுகளாகவே இருந்த இந்த பிரதேசங்களில் இராமயணக் கதைகளின்படி தீ பரவ வாய்ப்பாக அமைந்திருக்கும். இப்பிரதேசத்தை அண்மித்த இடமாக லக்சபான நீர்வீழ்ச்சி காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இம்மலைத்தொடர் பகுதிகளில் இருந்தே களனி ஆறு, மகாவலி கங்கை ஆகிய நீர் நிலைகள் ஓடுகின்றன. கினிகத்தேனைக்கு அண்மையில் அல்லித்தோட்டம் காணப்படுகிறது. இந்த நகருக்கு அண்மையில் வட்டவளை, கடைவளை போன்ற ஊர்கள் புவியியல் தோற்றப்பாட்டுக்கு அமைய பெயர்களைக் கொண்டமைந்துள்ளது. ஆறு வட்டமாக வளைந்து ஓடுகின்ற தன்மையின் காரணமாக வட்டவளை எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

அனுமனால் பரவப்பட்ட தீ இந்த பிரதேசத்திலுள்ள நீரோடைகளின் காரணமாகப் பரவாமல் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அச்சம்பவத்தில் தீ பற்றாத இடமாக இந்த பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பின்னாளில் தீ பற்றாத இடம் சிங்களத்தில் மருவி 'கினிகத்ஹேன' என மொழி மாற்றமடைந்தது. அவ்வாறே நுவரெலியா பகுதியில் அதீத தீப்பரவலால் அணையாமல் தீ தொடர்ந்து எரிந்துள்ளது. தீ அணையாததை 'நூரளை' எனக் கூறுவர். 'நூரளை' என்ற இதன் தொடர்ச்சியான அடையாளமே பின்னாளில் 'நுவரெலியா' என மருவி வந்துள்ளது.

மஸ்கெலியா, தெய்வகந்த தோட்டப் பகுதியில் 'ஏழு கன்னியர் மடம்' என அழைக்கப்படும் இடம் காணப்படுகிறது. இப்பகுதியில் ஏழு சிவலிங்கங்கள் கன்னியர்களால் வழிபட்டதாகக் கூறப்படும் மரபை நினைவூட்டும் தடங்கள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. மேலும், இராவணனின் விமானப் பாதையுடன் தொடர்புபடுத்தப்படும் வழித்தடத்தின் ஊடாகவே தெய்வகந்த மலையும் அமைந்துள்ளது. இதனடிப்படையில், இவ்வழித்தடம் இராவணனால் சிவதரிசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கொத்மலைப் பிரதேசத்திலுள்ள கொண்டக்கலைத் தோட்டம் தற்போது 'லபூக்கலை' எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. இத்தோட்டப் பகுதி அசோகவனத்தின் பரப்பில் அமைந்துள்ளதாகக் கருதப்படுவதுடன், சீதை வனத்தில் உலாவியபோது நீராடியதாகக் கூறப்படும் இடமும் இங்கு காணப்படுகிறது. அத்துடன், நீரூற்று மற்றும் கிணறு போன்ற நீர்நிலைகளும் இப்பகுதியில் காணப்படுகின்றன. சீதை தனது கொண்டையைக் களைந்து இவ்விடத்தில் நீராடியதாகக் கூறப்படுவதன் அடிப்படையில், இவ்விடம் 'கொண்டக்கலை' எனப் பெயர் பெற்றதாக ஒரு மரபுவழிக் கதை நிலவுகிறது. இவ்விடத்திற்கு 'கொண்டக்கலை' எனப் பெயர் ஏற்பட்டதற்குப் பிறிதொரு காரணமும் நாட்டார் மரபில் கூறப்படுகிறது. இராவணன் சீதையின் அருகில் வர முயன்றபோது, சீதை தனது கொண்டையைக் களைத்து இராவணனிடம் சபதம் செய்ததாகவும், அதன் நினைவாகவே இவ்விடம் 'கொண்டக்கலை' என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னாளில் இவ்விடம் 'லபூக்கலை' என அழைக்கப்பட்டது. 'லபு' என்பது சுரைக்காயைக் குறிக்கும். சுரைக்காய் பயிரிடப்பட்ட தோட்டப் பகுதியாக இது இருந்ததன் அடிப்படையில் 'கொண்டக்கலை' என்ற பெயர் திரிந்து இன்று 'லபூக்கலை' என மருவியதாக கூறப்படுகிறது.

இராவணனால் சீதை கடத்திச் செல்லப்பட்டபோது, தன்னை அடையாளம் காண்பதற்கான தடயமாகத் தனது கொண்டையில் இருந்த ஆபரணங்களை ஒவ்வொன்றாகக் களைத்து வழியில் இட்டுச் சென்றதாகச் செவிவழிக் கதைகள் கூறுகின்றன. இவ்வாறு, சீதை ஆபரணங்களைத் தடயங்களாக விட்டுச் சென்றதன் காரணமாகவே இப்பகுதி 'கொண்டக்கலை' என அழைக்கப்பட்டதாகவும் உள்ளூர் மரபில் குறிப்பிடப்படுகிறது. இராமன் தன்னைக் காப்பாற்றி வருவான் என்ற நம்பிக்கையுடன் சீதை இவ்வாறு அடையாளங்களை விட்டுச் சென்றதாகவும் இக்கதைகள் விளக்குகின்றன. இப்பகுதியில் காணப்படும் நீரூற்று சீதை நீராடிய இடமாகவும் உள்ளூர் மரபில் அடையாளப்படுத்தப்படுகிறது. அதேவேளை, இந்நீரூற்று சீதை இராமனை நினைத்து சிந்திய கண்ணீரால் உருவானது என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. இக்கருத்து வரலாற்று ஆதாரத்தைவிட இலக்கியக் கற்பனை மற்றும் நாட்டார் மரபின் மிகைப்படுத்தலுடன் தொடர்புடையதாகக் கருதத்தக்கது. மேலும், இந்நீரூற்றைச் சூழவுள்ள தாவரங்களில் பூக்கும் சில மலர்கள் 'சீதைப்பூ' என அழைக்கப்படுவதும் இப்பகுதியுடன் தொடர்புடைய சீதை மரபின் பண்பாட்டுச் சுவடாக அவதானிக்கத்தக்கதாகும்:





### இராவணன் கொழுக்கட்டை:

இராவணன் கொழுக்கட்டை நுவரெலியா, கண்டி, கேகாலை, பதுளை ஆகிய பகுதிகளில் உள்ள தேயிலை மலைகளில் காணப்படுகிறது. சிறிய கற்களைப் போன்று, கற்களில் இருந்து வித்தியாசத்தை இலகுவில் அறிந்துகொள்ளும் வகையிலான பதார்த்தமாக இக்கொழுக்கட்டைகள் சிதறி கிடக்கின்றன. பொதுவாக இப்பண்டம் மூலிகை பதார்த்த மாகக் கொள்ளப்படுகிறது. கற்கள் போன்ற பளபளப்பான மேற்பகுதியைச் சுரண்டினால் உள்ளே அரிசி இணைந்தவாறு இக்கொழுக்கட்டை காட்சியளிக்கும். இதனை மென்று தின் னும்போது அரிசி சுவை காணப்படும். உப்புச்சுவை இல்லா மல் காணப்படும். இதனை மருத்துவ அம்சத்தோடு பயன் படுத்துகின்ற வழமையும் காணப்படுகிறது. இக்கொழுக்கட் டைகள் தற்போதும் தேயிலை மலைகள் அதனை அண் மித்த காடுகளில் காணப்படுகின்றமை வியப்பிற்குரியதாகும்.

இக்கொழுக்கட்டை தொடர்பில் இரு வேறுபட்ட கதைகள் காணப்படுகின்றன. இராவணன் தனக்கு வழங்கிய தனக்கு விரும்பமான அரிசி கொழுக்கட்டைகளில் உப்புச்சுவை இல் லாத காரணத்தினால் அதனை வீசி எறிந்ததாகவும் அதுவே இன்றும் சிதைவடைந்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. இக் கொழுக்கட்டை தொடர்பில் இராவணனால் கடத்திவரப்பட்ட சீதை பல்வேறு இடங்களில் சிறை வைக்கப்பட்டிருந்த நிலை யில் சீதைக்கு கொழுக்கட்டைகள் உணவாக வழங்கப்பட் டுள்ளது. ஆத்திரமடைந்த சீதை இக்கொழுக்கட்டைகளை தூக்கி எறிந்ததாகவும் அக்கொழுக்கட்டைகளே இவ்வாறு சிதறிக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### கிரனைட் கற்கள் தொடர்பிலான ஆதாரங்கள்:

கினிகத்தேனை இராவணனுடைய ஆட்சியுடன் தொடர்பு படுத்திப் பேசப்படும் இடங்களுள் ஒன்றாகக் காணப்படு கிறது. குறிப்பாக, அம்பகமுவைப் பிரதேசத்தில் காணப்படும் கல்வெட்டுகள் இத்தொடர்பில் கவனத்திற்குரியனவாகும். இப் பகுதியிலும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் கிரனைட் பாறைகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அம்பகமுவை யிலிருந்து பலாந்தொட்ட, வெலிகம்பொல, இம்புல்பிட்டிய, கல்லாறு, ஹோல்கமை போன்ற பகுதிகளிலும் கிரனைட் பாறைகள் செறிவாகக் காணப்படுகின்றன. இப்பாறை வளம் இப்பிரதேசங்களில் கல் சார்ந்த பல்வேறு கைத்தொழில் நட வடிக்கைகள் இடம்பெறுவதற்கும் வழிவகுத்துள்ளது.

கிரனைட் என்பது பூமியின் ஆழப்பகுதியில் காணப்படும் மாக்மா மெதுவாகக் குளிர்ந்து திடப்படுவதன் மூலம் உரு வாகும் தீப்பாறை வகையைச் சேர்ந்ததாகும். இது பொது வாகக் கடினத்தன்மையும் நீடித்த தன்மையும் கொண்டிருப் பதால் கட்டடங்கள், நினைவுச்சின்னங்கள், சிலைகள் உள் ளிட்ட பல்வேறு பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அம்பகமுவைப் பிரதேசத்தில் காணப்படும் கல்வெட்டுக் கற்களின் பாறையியல் தன்மையும், அப்பகுதியில் இயற்கை யாகக் காணப்படும் கிரனைட் பாறைகளின் தன்மையும் தொடர்புபடுத்தி ஆராய்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. எனினும், இக்கற்கள் ஒரே பாறையியல் மூலத்தைக் கொண் டவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு முறையான பாறை யியல் மற்றும் தொல்லியல் ஆய்வுகள் அவசியமாகின்றன.

அம்பகமுவை மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகளில் காணப் படும் கல்வெட்டுகள், பாறை வளங்கள், தொல்லியல் சான்று கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உள்ளூர் மரபுவழிக் கதைகள் ஆகியவை ஒருங்கிணைத்து ஆராயப்பட வேண் டிய முக்கியமான தரவுகளாகும். குறிப்பாக, கல்வெட்டுக் கற்களின் பாறையியல் அமைப்பு, அவை அமைந்துள்ள காலப்பகுதி, அவற்றின் மொழி மற்றும் எழுத்து வடிவம், அப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொல்லியல் அகழ்வாய் வுகளின் முடிவுகள் ஆகியவற்றை ஒப்பீட்டு அடிப்படையில் ஆராய்வதன் மூலம் இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தன் மையை மேலும் தெளிவுபடுத்த முடியும்.

இவ்வகையான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, கினிகத்தேனை மற்றும் நாவலப்பிட்டியை அண்மித்த பிரதே சங்கள் இராவணன் தொடர்பான தொன்மவியல் மரபுகளுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய முடியும். அதேவேளை, இச்சான்றுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இராவணனின் வரலாற்று ஆட்சி இப்பகுதியில் நிலவியது அல்லது இப்பகுதியில் பூர்வீகமாகத் தமிழர்கள் வாழ்ந்தனர் என்று உறுதியான வரலாற்றுத் தீர்மானத்தை மேற்கொள்வது ஆய்வியல் ரீதியாகத் தகுந்ததல்ல. அதற் குத் தொல்லியல், கல்வெட்டியல், பாறையியல், வரலாற் றியல் மற்றும் மானிடவியல் சார்ந்த மேலதிக சான்றுகள் தேவைப்படுகின்றன. எதிர்காலத்தில் இப்பிரதேசங்களில் முறையான தொல்லியல் மற்றும் புதைபொருள் ஆய்வுகள் விரிவாக மேற்கொள்ளப்படுமானால், இப்பகுதியின் பழங் காலக் குடியிருப்பு, தொழில் நுட்பப் பயன்பாடு மற்றும் பண்பாட்டு தொடர்புகள் குறித்த மேலதிகத் தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இக்கிரனைட் கற்பாறை தொகுதிகள் தமிழர்கள் தோட்டம் அமைத்து வாழ்ந்த இடப்பகுதிகளிலேயே காணப்படுகிறது. குறிப்பாகக் கண்டி மாவட்டம், நாவலப்பிட்டி, இம்புல்பிட்டி தோட்டத்திற்கு சொந்தமான நிலப்பரப்பிலேயே உள்ளடக்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த இயற்கை வளம் இயற்கை நியதியின்படி இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கே பிரயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மாறாக, இதன் பின்பிருந்த நுண் அரசியல் இத் தோட்டத்தில் வாழ்ந்த தொழிலாளர் வர்க்கத்தினரை அவ் விடங்களிலும் கூலிகளாகவே அடையாளமாக்கியுள்ளமை கவனத்துக்குரியதாகும்.

இராவணனின் மாளிகை தொடர்பான மரபுக் கதைகள் பல் வேறு இடங்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன. தற்போது ‘வெளிமடை’ என அழைக்கப்படும் ஊர், முன்னர் இராவணனின் ‘வெளிமாடம்’ அமைந்திருந்த இடமாகக் கரு தப்பட்டதாக உள்ளூர் மரபில் குறிப்பிடப்படுகிறது. காலப் போக்கில் ‘வெளிமாடம்’ என்ற பெயர் மருவி ‘வெளிமடை’ என வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனுடன் தொடர்பு படுத்தப்படும் மற்றொரு இடமாக, இராவணன் நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள சுரங்கப் பகுதி குறிப்பிடப்படுகிறது. இராவ ணனின் சுரங்கப் பாதையின் எல்லைப் பகுதியாக இவ்விடம் கருதப்பட்டதன் காரணமாக, இப்பகுதி ‘எல்லை’ என அழைக் கப்பட்டதாக உள்ளூர் வழக்கில் கூறப்படுகிறது. அண்மைக் காலங்களில் இக்குகை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொல்லியல், வரலாற்றியல் ஆய்வுகள் மீதான ஆர்வம் அதி கரித்து வருவதைக் காணமுடிகிறது. குறிப்பாக, இப்பகு தியின் தொன்மை மற்றும் அதன் வரலாற்றுப் பின்னணியைப் பௌத்த சமயத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும் முயற்சி களும் சில ஆய்வுகளில் இடம்பெற்று வருகின்றன. எனினும், இக்கருத்துகள் அனைத்தும் ஒரே அளவிலான வரலாற்று ஆதாரங்களைக் கொண்டவை எனக் கருதாமல், அவற்றை உள்ளூர் மரபுகள், வாய்மொழிக் கதைகள் மற்றும் கிடைக்கப்பெறும் தொல்லியல் சான்று களின் அடிப்படையில் தனித்தனியாக ஆராய வேண் டியது அவசியமாகும்.

இதேபோன்று களனி விகாரை, கிண்ணியா, முன்னேஸ்வரம் ஆலயம், திருகோணேஸ்வரம், நயினாதீவு உட்படத் தென்மா காணம், சிலாபம் மற்றும் மாத்தளை மாவட்டங்களின் பல இடங்களும் இராமாயணக் கதையாடல்களுடன் தொடர்புப டுத்தப்பட்டு வருகின்றன. இத்தலங்களுடன் தொடர்புடைய மரபுவழி நம்பிக்கைகளும் வாய்மொழி வழக்காறுகளும் ஏற்கனவே விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளமையால், அவற்றை இக்கட்டுரையில் விரிவாக ஆராய்வது தவிர்க்கப் பட்டுள்ளது.

## இராமாயணத் தடங்கள் சமூக நகர்வில் செலுத்தும் தாக்கம்:

இராமாயணத்துடன் தொடர்புபடுத்தப்படும் இடங்கள், மரபு கள், வழிபாட்டு முறைகள், கலை வடிவங்கள் மற்றும் வாய் மொழிக் கதையாடல்கள் இலங்கையின் சமூக மற்றும் பண் பாட்டு நகர்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளன. குறிப்பாக, தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியலுடன் இந்து சமய மரபுகள் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள நிலையில், இராமாயணக் கதையம்சங்கள் பல்வேறு சமூகங் களின் நினைவுகள், வழிபாடுகள் மற்றும் பண்பாட்டு வெளிப் பாடுகளில் இடம்பெற்று வருகின்றன. எனினும், இராமாய ணத்தில் இடம்பெறும் சம்பவங்களை வரலாற்று நிகழ்வுகளா கவும், அவற்றுடன் தொடர்புபடுத்தப்படும் உள்ளூர் மரபு களை வரலாற்றுச் சான்றுகளாகவும் கருதுவதில் ஆய்வியல் ரீதியான எச்சரிக்கை அவசியமாகிறது. தொன்ம மரபு, இலக் கியப் பதிவு, வாய்மொழி வரலாறு, தொல்லியல் சான்று ஆகியவை தனித்தனியாக அணுகப்பட வேண்டியவை.





இராமாயணத்துடன் தொடர்புபடுத்தப்படும் இலங்கைப் பகுதிகள் குறித்த மரபுகள், இலங்கையின் தொன்மை மற்றும் குடியேற்ற வரலாறு தொடர்பான பல்வேறு கருத்தாடல்க ளுக்கும் வழிவகுத்துள்ளன. இராவணன் மற்றும் அவனுடன் தொடர்புபடுத்தப்படும் இடங்கள் சில ஆய்வுகளில் இலங் கையின் பூர்வீக சமூகங்களின் வரலாற்றுடன் இணைத்துப் பார்க்கப்படுகின்றன. குறிப்பாக, இராவணனைத் தமிழர் மரபுடன் தொடர்புபடுத்தும் பார்வையும், அவனை இலங் கையின் பண்டைய அரச மரபுகளுடன் இணைக்கும் பார்வை யும் காணப்படுகின்றன. அதேவேளை, இக்கருத்துகளுக்கு மாறுபட்ட வரலாற்றியல் விளக்கங்களும் நிலவுகின்றன. எனவே, இத்தகைய கருத்துகளை உறுதியான வரலாற்றுத் தீர்மானங்களாக முன்வைப்பதைவிட, நிலவும் வரலாற்று மற் றும் பண்பாட்டு கருத்தாடல்களின் ஒரு பகுதியாக ஆராய் வது பொருத்தமானதாகும்.

இலங்கையின் வரலாற்றைக் கட்டமைப்பதில் விஜயன் தொடர்பான வரலாற்றுக் கதையாடல் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கை வரலாற்றின் ஆரம்பகாலம் தொடர் பான பாடத்திட்டங்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பரவி யுள்ள வரலாற்றுப் பார்வைகள் காலத்திற்கேற்ப மாற்றமடைந் துள்ளன என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக, விஜயன் வருகை, பூர்வீக மக்கள், தமிழர் தொன்மை, சிங்கள இன உருவாக்கம் ஆகியவை தொடர்பான வரலாற்றியல் விளக்கங்கள் பல்வேறு அரசியல் மற்றும் இன அடையாளக் கருத்தாடல்களுடன் தொடர்புபட்டுள்ளன. இத்தகைய விட யங்களை ஆய்வு செய்யும்போது பாடப்புத்தகங்கள், அரச ஆவணங்கள், கல்வியியல் ஆய்வுகள் மற்றும் தொல்லியல் சான்றுகள் ஆகியவற்றை ஒப்பீட்டு அடிப்படையில் பயன்ப டுத்துவது அவசியமாகிறது.

இராவணனைச் சுற்றியுள்ள கருத்தாடல்கள் இலங்கையின் இன மற்றும் சமய அடையாள அரசியலுடனும் தொடர்புபட்டி ருப்பதைக் காணமுடிகிறது. ஒரு புறம், இராவணனை தமிழர் அல்லது திராவிட மரபின் பண்டைய அரசனாகக் கருதும் பார்வைகள் காணப்படுகின்றன. மறுபுறம், இராவணனை இலங்கையின் பண்டைய வரலாற்றுடன் இணைத்து பௌத்த அல்லது சிங்கள வரலாற்றுப் பார்வைகளில் மறுவாசிப்பு செய் யும் முயற்சிகளும் காணப்படுகின்றன. இதனால் இராவணன் ஒரே ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக மட்டும் இல்லாமல், பல்வேறு சமூகங்கள் தத்தமது வரலாற்று நினை வுகளின் அடிப்படையில் மறுபொருளாக்கம் செய்யும் ஒரு பண்பாட்டு குறியீடாகவும் விளங்குகின்றான்.

இத்தகைய மறுபொருளாக்கம் மலையகத் தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியலிலும் அவதானிக்கத்தக்கதாகும். பிரித் தானியக் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவி லிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்திய வம்சா வளித் தமிழர்களின் சமூக வரலாறு, அவர்களின் சமய மற்றும் பண்பாட்டு நடைமுறைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. அவர்களது வழிபாட்டு மரபுகளில் சைவம், வைணவம், கிராமியத் தெய்வ வழிபாடு உள்ளிட்ட பல்வேறு சமயப் பண் பாடுகள் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. திருவெம்பாவை, திருப்பாவை போன்ற வழிபாட்டு மரபுகளின் நடைமுறையும் இச்சமூகத்தின் சமயப் பண்பாட்டு மாற்றங்களை ஆராய்வ தற்குரிய தளமாக அமைகிறது. எனினும், இத்தகைய மாற் றங்களை குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகத் திட்டமிட்டு திணிக்கப்பட்டவை எனக் கூறுவதற்கு வரலாற்று ஆதாரங் கள் தனித்தனியாக ஆராயப்பட வேண்டியுள்ளது.

மலையக மக்களின் கலை மரபுகளிலும் இராமாயணக் கதை யம்சங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, 'காமன்கூத்து' போன்ற கூத்து வடிவங்களில் இராமாயணக் கதையின் கூறு கள் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் வாறான நிகழ்த்துகலை வடிவங்களில் இராவணன் எதிர் மறையான கதாபாத்திரமாகச் சித்தரிக்கப்படுவது, இராமாய ணத்தின் பொதுவான கதையமைப்பின் தாக்கத்தைக் காட்டு வதாகக் கருதலாம். இதன் மூலம் ஒரு இலக்கியக் கதை யாடல் எவ்வாறு சமூகக் கலை வடிவங்களுக்குள் உள்வாங் கப்பட்டு தலைமுறைகளுக்கிடையே கடத்தப்படுகிறது என்ப தையும் அவதானிக்க முடிகிறது.

இதற்கு மாறாக, கிழக்கு மாகாணத் தமிழர் பண்பாட்டு வெளி யில் இராவணனை நேர்மறையாக அணுகும் மரபுகளும் காணப்படுகின்றன. திருகோணேஸ்வரம், கிண்ணியா உள் ளிட்ட பகுதிகள் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படும் தொன்ம இடங்களாக உள்ளூர் மரபுகளில் குறிப்பிடப்படு கின்றன. இராவணனைச் சிவபக்தனாகவும், பண்டைய அர சனாகவும் சித்தரிக்கும் கதையாடல்கள் இப்பகுதிகளில் காணப்படுகின்றன. இத்தகைய மரபுகள் இராவணனை எதிர்மறை கதாபாத்திரமாக மட்டும் பார்க்காமல், பிராந்தியப் பண்பாட்டு நினைவின் ஒரு பகுதியாக அணுகுவதற்கான வாய்ப்பை உருவாக்குகின்றன.

கூத்து மரபிலும் இத்தகைய மாற்றுப் பார்வைகள் வெளிப்பட் டுள்ளன. பேராசிரியர் மௌனகுருவின் 'இராவணேசன்' போன்ற கூத்து முயற்சிகள் இராவணனை வழக்கமான எதிர்மறைச் சித்திரத்திலிருந்து வேறுபட்ட பரிமாணத்தில் அணுகுவதற் கான கலை முயற்சிகளாகக் குறிப்பிடத்தக்கவை. இதன் மூலம் இராமாயணக் கதையம்சம் நிலையான ஒன்றாக இல் லாமல், காலம், சமூகச் சூழல் மற்றும் கலைஞரின் பார் வைக்கு ஏற்ப மறுவாசிப்புச் செய்யக்கூடியதாக இருப்பதை அறிய முடிகிறது. அதேபோன்று இராவணனை மையப் படுத்திய திரைப்பட மற்றும் பிற கலை முயற்சிகளும் இம்மறு வாசிப்பின் தொடர்ச்சியாகக் கருதப்படலாம்.

இராவணன் சிவபக்தனாகக் கருதப்படும் மரபு, இலங்கை யின் சைவத் தலங்களுடன் அவனை இணைக்கும் பல்வேறு கதையாடல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. குறிப் பாக, இலங்கையின் ஐந்து ஈச்சரங்களுடன் இராவணனுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் மரபுகள், அவனது பண் பாட்டு நினைவைப் பல்வேறு பிராந்தியங்களுடன் இணைக் கின்றன. வடக்கு, கிழக்கு, வடமேற்கு மற்றும் தென்பகுதி களில் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படும் இடங்கள் காணப்படுவதாகக் கூறப்படும் நிலையில், இம்மரபுகளை ஒப்பீட்டு முறையில் ஆராய்வது இலங்கையின் பண்பாட்டு நிலவியலைப் புரிந்துகொள்வதற்கு உதவக்கூடும்.

இராவணனைச் சுற்றியுள்ள இவ்வாறான வேறுபட்ட பார்வைகள், இலங்கையின் இன, சமய மற்றும் அரசியல் அடையாளங்கள் எவ்வாறு வரலாற்று நினைவுகளை மறுவடிவமைக்கின்றன என்பதையும் வெளிப்படுத்துகின்றன. ஒரு சமூகத்தின் வரலாற்று நினைவில் வீரராகவும், மற்றொரு கதையாடலில் எதிர்மறையான பாத்திரமாகவும் ஒரே நபர் இடம்பெறுவது, வரலாறு என்பது ஆவணங்களால் மட்டுமன்றி சமூக நினைவுகள், இலக்கியங்கள், சமய மரபுகள், வாய்மொழிக் கதைகள் மற்றும் கலை வடிவங்களாலும் கட்டமைக்கப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இந்தப் பின்னணியில், இராமாயணத் தடங்களை அணுகும் போது அவற்றை வெறுமனே ஒரு சமய அல்லது இலக்கியக் கதையுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதைவிட, அவை இலங்கையின் சமூக நகர்வில் எவ்வாறு பொருள்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கவனிப்பது முக்கியமானதாகும். குறிப்பாக, பூர்வீகத் தமிழர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட பல்வேறு சமூகங்களின் வரலாற்று நினைவுகளுக்குள் இராமாயணக் கதையம்சங்கள் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன என்பதை ஒப்பீட்டு நோக்கில் ஆராய முடியும்.

இவ்வகையான ஆய்வில், இராமாயணத் தடங்கள் தொடர்பான தொல்லியல் சான்றுகள், கல்வெட்டுகள், கோயில் மற்றும் விகாரை மரபுகள், இடப்பெயர்கள், வாய்மொழிக் கதைகள், கூத்து மற்றும் பிற கலை வடிவங்கள் ஆகியவற்றை தனித்தனி ஆதார வகைகளாகப் பிரித்து ஆராய்வது அவசியமாகும். இத்தகைய பல்துறை அணுகுமுறை மூலம் இராமாயணத்துடன் தொடர்புபடுத்தப்படும் இடங்களின் வரலாற்றுத் தன்மை, சமூக நினைவின் உருவாக்கம் மற்றும் அவற்றின் சமகாலப் பயன்பாடு ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். மேலும், இராவணன் தொடர்பான தொல்லியல் ஆய்வுகள் மற்றும் வரலாற்று விளக்கங்கள் எதிர்காலத்தில் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளன. இதுவரை வெளிப்படுத்தப்பட்டுள்ள மரபுகள் மற்றும் தடங்களுடன் புதிய அகழ்வாராய்ச்சி, கல்வெட்டு, தொல்லியல் மற்றும் ஆவணச் சான்றுகள் இணைக்கப்பட்டால், இலங்கையின் பண்டைய சமூகங்களின் வாழ்வியல் குறித்து மேலும் தெளிவான புரிதலை உருவாக்க முடியும். அதன்மூலம், வரலாற்றை இன அல்லது சமயப் போட்டியின் கருவியாக அணுகுவதற்குப் பதிலாக, பல்வேறு சமூகங்களின் நினைவுகளையும் பங்களிப்புகளையும் உள்ளடக்கிய பன்முக வரலாற்றுப் பார்வையை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். இத்தகைய அணுகுமுறை பல்லினச் சமூகச் சூழலில் பரஸ்பரப் புரிதலையும் வரலாற்று உரையாடலையும் மேம்படுத்துவதற்கும் உதவக்கூடும்.



letsumanan.a@thaiveedu.com




ரூபன் சிவராஜா

# ஹாச்சிகோ: ஒரு நாயின் பேரன்பும் நீண்ட காத்திருப்பும்

*ஜப்பானின் ஷிபூயா தொடருந்து நிலைய வெளிவாயிலில் நிலை கொண்டிருக்கும் அந்தச் சிலை, ஒரு நாயின் அதிவிசுவாசத்தை மட்டும் அல்ல, நினைவுகளின் நிலைத்தன்மை, கால எல்லை களைத் தாண்டிய காத்திருப்பு, பேரன்பு என்னும் மனித வாழ் வின் ஆழங்களையும் அழியாத்தன்மையுடன் தன்னுள் உருத் திரட்டி வைத்துள்ளது. ஹாச்சிகோ என்ற அந்த நாயின் உண் மைக் கதையும், அதைத் தழுவி உருவான திரைப்படமும் இந் தப் பதிவில் ஒரு மெய்யியற் தேடலாகவும், மனிதாபிமான மற் றும் உணர்வுபூர்வப் பயணமாகவும் விரிகின்றன.*

இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜப்பான் பயணத்தின்போது அதன் தலைநகர் டோக்கியோவில் நின்ற நாட்களில் மூத்தமகன் (கதிர்) அங்கு ஒரு நாயின் சிலையைப் பார்க்க வேண்டுமென்றார். அந்தச் சிலை பற்றியும் அதற் குப் பின்னால் உள்ள கதை பற்றியும் அறிந்துவைத்திருந்தார். மகன்கள் இரு வரும் மிருகங்களில் விருப்பமுடையவர்கள், குறிப்பாக நாய்கள் மீது அவர்க ளுக்குப் பிரியம் அதிகம். டோக்கியோவின் Shibuya எனும் இடம், முக்கிய வணிக மற்றும் தொழில்மையமாக விளங்குவதோடு, நவீன ஜப்பானிய இளை ஞர்களின் நவநாகரிக கலாசார, மற்றும் இரவு வாழ்வின் கொண்டாட்ட மையமா கவும் உள்ளது. Shibuya தொடருந்து நிலையத்தின் வெளிவாயிலுக்கு அருகில் Shibuya-Cross என்ற புகழ்பெற்ற சந்தி உள்ளது. ஒரே நேரத்தில் 2500-இற்கு மேற்பட்டோர் கடந்து செல்லக்கூடிய, உலகின் மிகப் பரபரப்பான 'பாதசாரிகள் சந்தி' இது. குறுக்குவெட்டான அந்தச் சந்தியில் நாலாபக்கமுமிருந்தும் வாக னங்கள் பரபரப்பாகக் கடந்துகொண்டிருக்கும். ஒரே நேரத்தில் வாகனங்களுக் குரிய சமிக்ஞை விளக்குகள் சிவப்பாகும், பாதசாரிகளுக்குரிய விளக்கு பச் சைக்கு மாறும். அந்தக் கணத்தில் அனைத்துத் திசைகளிலிருந்தும் பாதசாரிகள் வீதியைக் கடப்பர். பெரும் சனக்கடல் நகர்வது போன்ற காட்சி அங்கு தோன்றும்.

இந்தச் சந்தியை அண்டியதாக ஹாச்சிகோ (Hachiko) என்ற பெயரைக் கொண் டிருந்த நாய்க்கு வெண்கலச் சிலை (Hachiko Statue) அமைக்கப்பட்டுள்ளது. தொடருந்து நிலையத்தின் வெளிவாயில்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அடையாளப் பெயர்கள் உண்டு. Shibuya தொடருந்து நிலையத்தின் ஒரு வெளிவாயில் (Hachiko Exit) என்றழைக்கப்படுகிறது. சுற்றுலாப்பயணிகள் இந்த நாயின் சிலையைக் காணவும் அதனோடு நின்று ஒளிப்படம் எடுக்கவும் வரிசையில் நின்றனர்.

நாய்களின் அதிவிசுவாசத்தையும் பேரன்பையும் அடையாளப்படுத்தும் வகை யில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்த அதிவிசுவாசத்திற்குப் பின் னால் ஒரு பெரும் கதை இருக்கிறது. கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் தொன்மை வாய்ந்த கதை அது. நாய்களின் நற்பண்புகளுக்குச் செலுத்தப்படும் ஒரு மரியா தையின் அடையாளமாக இந்த இந்தச் சிலை நிற்கிறது.



tg.theeban@gmail.com

## உண்மைக் கதை:



அது என்ன விசுவாசம்? 1923-ஆம் ஆண்டு அகிதா மாகாணத்தில் பிறந்தது ஹாச்சிகோ. அதனை டோக்கியோ பல்கலைக்கழக விவசாயப் பொறியியற்துறை பேராசிரியர் ஹிடேசபுரோ உயெனோ (Hidesaburo Ueno) தத்தெடுத்து டோக்கியோவுக்கு கொண்டு வந்து வளர்த்தார். பேராசிரியருக்கும் அந்த நாய்க்குமிடையில் உணர்வுபூர்வமான பாசப் பிணைப்பு ஏற்பட்டது. அவர், தினமும் அவர் பல்கலைக்கழகம் செல்லும்போது அவருடன் தொடருந்து நிலையம் வரை சென்று அவரை அந்த நாய்க்குட்டி வழியனுப்பி வைக்கும். அவர் பணி முடிந்து திரும்பும் போதும் தொடருந்து நிலையம் சென்று காத்திருந்து அவருடன் சேர்ந்து வீட்டுக்கு வருவதை வழமையாகக் கொண்டிருந்தது. இந்த வழக்கம் 1925 மே மாதம் வரை தொடர்ந்தது. அந்த ஆண்டில் ஒரு நாள் பேராசிரியர் சக பேராசிரியர் ஒருவரின் அலுவலகத்தில் உரையாடிக் கொண்டிருந்தபோது, மூளையில் திடீர் இரத்தக்கசிவு ஏற்பட்டு இறந்து போனார். தனது உரிமையாளரின் திடீர் மரணம் பற்றி அறியாத ஹாச்சிகோ இனியொரு போதும் திரும்பி வரமுடியாத அவருக்காக தொடருந்து நிலைய வெளிவாயிலில் பத்து ஆண்டுகள் தினமும் வந்து காத்திருந்தது.

தினமும் காத்திருந்த நாயைக் காலப்போக்கில் டோக்கியோவின் நாளாந்தப் பயணிகள் அவதானிக்கத் தொடங்கினர். பத்திரிகைகள் அதன் காத்திருப்பு, பொறுமை, இரக்கம், துயரத்தைப் பற்றி எழுதின. இதன் மூலம் உள்ளூர் மக்கள் மத்தியில் பேசும்பொருளாக மாறிய ஹாச்சிகோவின் கதை பரவலாக அறியப்பட்டு தேசிய மட்டத்திலும் பரவியது. ஹாச்சிகோ உயிரோடு இருக்கும்போது, அதாவது அது இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னரே (1934) அதற்கான வெண்கலச் சிலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மிகுந்து முதுமையடைந்த அந்த நாயும் திறப்புவிழாவின் போது நேரில் அங்கு இருந்திருக்கின்றது. 1935-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஹாச்சிகோ இறந்துபோனது. இறந்த பின், அதன் உடல் பேணப்பட்டு தேசிய இயற்கை மற்றும் அறிவியல் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

## விசுவாசத்தின் உலகளாவிய அடையாளம்:

நாய்க்காக அமைக்கப்பட்டுள்ள அந்தச் சிலை இறந்து போன தனது ‘உரிமையாளருக்காக’ தினமும் காத்திருந்த அந்த நாயின் விசுவாசத்தை நினைவுகூர்கிறது. இது காலத்தைக் கடந்து ஒரு நாயின் அர்ப்பணிப்பின் உணர்வைக் கடத்துகிறது, நாள்தோறும் நினைவூட்டவும் செய்கிறது. ஜப்பானின் ஒரு நகரத்தில் நடந்த கதை என்பதைத் தாண்டி ‘நிலைத்த பற்றுறுதியின்’ அடையாளமாக உலகத் திசையெங்கும் அறியப்பட்ட கதையாக இது மாறியிருக்கின்றது. அந்த வகையில் இது மிருகமொன்றின் கருணை மனதினை சுவடிப்படுத்தி, மனித மனங்களுக்குக் கடத்துகின்றது என்றே சொல்ல வேண்டும். ஜப்பானியர்களிற் பலருக்கு, ஹாச்சிகோவின் விசுவாசமும் உணர்ச்சிபூர்வமான சகிப்புத்தன்மையின் முன்மாதிரியாகவும் மனிதத்தன்மையினதும் அதன் உறவுகளினதும் மீதான அர்ப்பணிப்பணிப்பின் உவமையாகவும் விளங்குகிறது.

ஹாச்சிகோவின் கதையானது, பாடசாலைப் புத்தகங்கள், திரைப்படங்கள், சிறுவர் நூல்களின் பகுதியாகியது. ஜப்பானின் போர்க்கால வரலாறு, சிதைவுகள், அதன் பின்னான தேச மறுசீரமைப்புக் காலங்களை எல்லாம் கடந்து அர்ப்பணிப்பின் கதையாக நிலைத்துநிற்கிறது. இந்தக் கதையைத் தழுவி அதே பேரில் வெளிவந்த திரைப்படத்தினையும் அண்மையிற் பார்க்க முடிந்தது. ஹாச்சிகோவின் கதை, அதற்காக அமைக்கப்படுள்ள சிலையின் மானுடவியல் பெறுமதி, உண்மைக் கதையைத் தழுவி உருவாக்கப்பட்ட திரைப்படம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பதிவு விரிகின்றது.

## சமகால வாழ்வியற் சூழலும் ஹாச்சிகோவின் உணர்வும்:

இந்தக் கதை சமகால வாழ்வியற் சூழலோடு அந்நியமாக உணரப்படவும் வாய்ப்புள்ளது. இயந்திர வாழ்வு, சமூகச் சிதைவு, நீண்ட நேர உழைப்பு மற்றும் நகர்ப்புறத் தனிமை ஆகியவற்றை எதிர்கொண்டு வரும் சூழலில், ஹாச்சிகோவின் மாறாத எதிர்பார்ப்பும் காத்திருப்பும் அசாதாரணமாகவும் உணரப்படும். பிரதி உபகாரம் எதிர்பார்க்காத, ஆனால் தன் நண்பர் தன்னிடம் வருவார் என்ற எதிர்பார்ப்பு இது. அந்தக் காத்திருப்பு, தினமும் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்த ‘ஒரு தேர்வு’ என்பதைக் ஹாச்சிகோவின் கதை எடுத்தியம்புகின்றது.

ஹாச்சிகோவின் செயல் அங்கீகாரத்திற்கானது அல்ல. அது காத்திருத்தல் என்ற எளிமையானதொரு வடிவம். அதற்குள் ஓர் அமைதியான, பொறுமைமிக்க, நிலைத்தன்மையுடைய செயல் இருக்கிறது. இன்றைய நிலையற்ற மற்றும் சுயநலம் சார்ந்த சமூகத்திற்கு முற்றிலும் மாறான நிலையை அது பிரதிபலிக்கின்றது. இந்தக் கதையின் இன்னுமோர் பிரதிபலிப்பு, இதனை விசுவாசமாக மட்டும் பார்க்காமல், சவாலானதும் நிச்சயமற்றதுமான சூழலிலிலும் சக உயிர்கள் மீது கொண்டிருக்கக்கூடிய கரிசனையை, மனிதாபிமானத்திற்கான உந்துதலாகக் காணவைக்கின்றது.

## இறப்பின் பின் ஹாச்சிகோ:

ஹாச்சிகோவின் மறைவு ஜப்பான் முழுவதும் பெரும் துயரத்தை ஏற்படுத்தியது. ஷிபூயா தொடருந்து நிலைய வளாகம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டது. ஹாச்சிகோவின் சாம்பலின் ஒரு பகுதி பேராசிரியரின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது. ஹாச்சிகோவின் உடல் மருத்துவ ஆய்வுக்கான நன்கொடையாக வழங்கப்பட்டதோடு, அதனது தோல் பதப்படுத்தப்பட்டது (stuffed). ஹாச்சிகோவின் பதப்படுத்தப்பட்ட உடல் அருங்காட்சியகத்தில் நிரந்தரக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. வயிற்றில் ஏற்பட்ட தொற்றினால் இறந்ததாக பல தசாப்தங்களாக நம்பப்பட்டது. ஆனால் 2011-இல் செய்யப்பட்ட உடற்கூறாய்வு, ஹாச்சிகோ தீவிர புற்றுநோய் மற்றும் இதயப் புழு (filaria) தொற்றால் இறந்தாகக் கண்டறியப்பட்டது.

## திரைப்பட உருவாக்கம்:

'Hachi: A Dog's Tale' என்பது அந்த அமெரிக்கத் திரைப்படத்தின் தலைப்பு. 2009-இல் வெளிவந்த இந்தத் திரைப்படத்தில் பேராசிரியர் பாத்திரத்தில் Richard Gere நடித்திருந்தார். ஏற்றுள்ள பாத்திரத்தின் பெயர் 'பார்க்கர்'. இதனை சுவீடன் நாட்டைச் சேர்ந்த இயக்குநர் Lasse Hallstrom இயக்கியுள்ளார். இந்தத் திரைப்படம் 1987-இல் வெளிவந்த ஜப்பானியத் திரைப்படமான Hachiko Monogatari-இன் மீளுருவாக்கம் எனப்படுகின்றது. Hachiko Monogatari மூலக்கதையிலிருந்து பெரிதும் விலகாமல் உருவாக்கப்பட்ட திரைப்படம். இதற்கு ஜப்பானிய திரைத்துறையைச் சேர்ந்த Kaneto Shindo திரைப்பிரதியை எழுத, இயக்குநர் Seijiro Koyama நெறியாள்கை செய்திருக்கின்றார்.

'Hachi: A Dog's Tale' திரைப்படத்தில் நாயின் உரிமையாளர் ஓர் இசைத்துறைப் பேராசிரியராகச் சித்தரிக்கப்படுகிறார். வழியில் அநாதரவாக நின்ற நாய்க் குட்டி ஒன்றினைத் தன் வீட்டில் சேர்த்துக்கொள்கிறார். நாய்க்கும் அவருக்குமான பிணைப்பு இறுக்கமாகும் காட்சிகள் தத்ரூபமாக உருவாக்கப்பட்டுள்ளன. பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது இறப்பதாகக் காட்டப்படுகிறது. பேராசிரியரின் இறப்பிற்குப் பின்னான நாயின் தொடர் காத்திருப்பினையும் உணர்ச்சிப் பெருக்கு மிக்க அதன் பாசப்பிணைப்பினையும் பார்வையாளர்களுக்குக் கடத்தும் வகையில், பேராசிரியருக்கும் நாய்க்கும் இடையிலான பந்தத்தினை வெளிப்படுத்தும் காட்சிகள் உருவாக்கப்பட்டிருந்தன. நாயின் செயல்களால் வீட்டிற்குள் ஏற்படும் அசௌகரியங்களும் அதனைச் சரிப்படுத்தும் சம்பவங்களும் சுவாரஸ்யத்திற்குரியவை. நாய்களுக்கும் மனிதர்களுக்குமிடையிலான உறவு குறித்து உலகெங்கிலும் எத்தனையோ திரைப்படங்கள் வந்துள்ளன. ஆனால் உண்மைக் கதையைத் தழுவி உருவான இந்தத் திரைப்படம் மனதை ஆட்கொள்கிறது.

## அமெரிக்காவுக்கு வழிதவறிய ஹாச்சி:

இந்தத் திரைப்படத்தில், ஜப்பானிய மடாலயம் ஒன்றிவல் பிறந்த அகிதா இன நாய்க்குட்டி ஒன்று அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது. வழியில் அதன் 'அடையாள அட்டை (ID tag)' தொலைந்துவிடுகிறது. மரப்பெட்டி ஒரு வாகனத்திலிருந்து கீழே விழுந்து உடைந்து திறக்கிறது. துடிப்புமிக்க அந்தக் குட்டி பெட்டிக்குள்ளிருந்து வெளியே குதித்து, ரோட் ஐலண்டில் (Rhode Island) உள்ள தொடருந்து நிலையம் ஒன்றில் அலைந்து திரிகிறது. பல்கலைக்கழகத்தில் பணியை முடித்து வீடு திரும்பும்போது தொடருந்திலிருந்து இறங்கிய பார்க்கர் வில்சனிடம் (Richard Gere) அது செல்கிறது.

அந்தக் குட்டியை அதன் உரிமையாளர் தேடி வருவார் என்ற நம்பிக்கையோடு பேராசிரியர் தொடருந்து நிலைய மேலாளரிடம் தகவல் சொல்லிக் காத்திருக்கின்றார். ஆனால் தொடருந்து நிலைய மேலாளர் அதற்குப் பொறுப்பு ஏற்க மறுக்கிறார், அதனை வைத்திருக்கவும் அங்கு இடமில்லை. நாய்களை நேசிக்கும் பார்க்கர், அதனை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார். அதன் செவியில் கொழுவப்பட்டிருந்த அட்டையில் இருந்த ஒற்றைச் சொல்லை வைத்து அதற்கு 'ஹாச்சி' என்று பெயரிடுகிறார். வீட்டிற்கு கொண்டுவரப்பட்ட புதிய





பிராணியை ஏற்பதில் பார்க்கரின் மனைவி ‘கேற்’ (Joan Allen) இற்கு விருப்பமில்லை. அதனை நிரந்தரமாக வீட்டில் வைத்திருக்கப்போவதில்லை என்று முதலில் சமாளிக்கின்றார் பார்க்கர். இருப்பினும் மறுநாள் தொடருந்து நிலையத்தில் அந்தக் குட்டியை யாரும் கோரவில்லை என்றும், விலங்குகள் பாதுகாப்பு இல்லங்கள் ஏற்கனவே நிரம்பியுள்ளன என்றும் அவர் அறிந்துகொள்கிறார். தொடருந்து நிலையப் பகுதியில் நாயைத் தொலைத்தவருக்கான அறிவிப்புப் பதாகைகள் சிலவற்றை ஒட்டிவிட்டு ஹாச்சியை மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார். நாய்ப் பிரியரான பார்க்கருக்கு அந்த நாயைக் கைவிட மனம் ஒப்பவில்லை.

### அன்பின் பிணைப்பு:

சோபாவில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்க்கும்போது நாயை உடன் வைத்திருப்பது, வீட்டு வளாகத்தில் அதனுடன் விளையாடுவது, சேர்ந்து குளிப்பது என நாய்க்கும் அவருக்குமான உணர்வுப் பிணைப்பினைப் பிரதிபலிக்கும் பல தருணங்கள் படத்தில் இடம்பெறுகின்றன. ஹாச்சி வளர வளர, தனது மனித நண்பருடன் மேலும் ஆழமான பந்தமாகுகின்றது. மகிழ்ச்சியாக அவருடன் நடந்து வீடு திரும்புகிறது. தொடருந்து நிலைய வளாகத்தில் பணிபுரியும் ஹாட் டாக் மற்றும் கோப்பி விற்பனையாளர் உட்பட பலரும் நாளாந்தம் நிகழும் இந்த அன்பின் வெளிப்பாட்டினைக் கவனித்து மகிழ்கிறார்கள்.

பேராசிரியரின் மரணத்திற்குப் பின், அவரது மகள் மற்றும் அவளது குடும்பம் அந்த நாயைப் பராமரிக்க முயன்றாலும், அது அடிக்கடி தப்பித்து மீண்டும் தொடருந்து நிலையத்திற்கே சென்று தனது நண்பருக்காகக் காத்திருக்கிறது. பருவங்கள் மாறுகின்றன. பருவமாற்றங்களும் காலங்கள் கடப்பதுவும் திரைமொழியில் அழகாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. மிகவும் முதுமையடைந்த நாயாக இருந்தும் ஹாச்சி தொடர்ந்து காத்திருக்கிறது.

### நாய்கள்: மனித வாழ்வின் ஆன்மிக ஆசிரியர்கள்:

நாய்கள் நுண்ணுணர்வு மிக்கவை. மனிதர்களுடன் நெருக்கமாகப் பழகி நன்றி விசுவாசத்தோடும் துணையாகவும் இருந்துவருவன. அவற்றின் ஒலிகளும், அசைவுகளும், முகர்திறனும், துள்ளல்களும், வாலாட்டலும், குதூகலமும் மூலமாக மனிதர்களோடு அவை உரையாடுகின்றன. உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன, பகிர்கின்றன. அவற்றின் குறிப்பறியும் ஆற்றலும் அவதானிப்பும் அசாத்தியமானவை. மனிதர்களுக்கு நன்றியுடன் துணையாக மட்டுமல்ல, தருணங்களில் ஆசிரியராகவும் விளங்கக்கூடியவை. அவற்றிடமிருந்து மனிதர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

நாயை செல்லப் பிராணியாக வளர்ப்போர் உலகெங்குமுளர். அப்படியான அனுபவம் உள்ளவர்களுக்கு இந்த உண்மைக் கதையும் இந்தத் திரைப்படமும் இன்னும் நெருக்கமாக உணரப்படும்.உண்மைக் கதை இந்தத் திரைப்படச் சித்தரிப்பினைவிட உருக்கமானது என்று உணர முடிகிறது. விசுவாசத்தின் அடையாளம், சாட்சி என்பதைத் தாண்டி, எத்தனை பெரிய காத்திருப்பு என்பதை எண்ணிப்பார்க்க மனம் சிலிக்கிறது. அந்தக் காத்திருப்பிற்குள் எத்தனை பெரியதொரு ஏக்கம் உள்நின்று உளட்டியிருக்கும். எத்தனை பெரிய மனப்பாரம் வாட்டியிருக்கும். 9 ஆண்டுக் காத்திருப்பு என்ற செயலுக்குள் அந்த நாய் தனக்குள் அடைகாத்த பொறுமை எத்தனை மகத்துவமானது. என்ன உவமை கொண்டு அதனை விளம்புவது? நேசிப்பிற்குரியவர்களின் பிரிவுத்துயர் எத்தகையது என்பதை மனிதர்கள் நன்கறிவர். நாம் பேரன்பு செலுத்தியவர்கள், நம்மில் பேரன்பு கொண்டிருந்தவர்களின் அனுபவங்களின் நினைவுகளை நாம் சுமந்துகொண்டிருக்கிறோம். ஹாச்சிகோவின் காத்திருப்புடன் மனிதர்களிற் பலரும் தம்மை இலகுவில் அடையாளம் காணமுடியும்.

ஹாச்சிகோ ஒரு விலங்காக இருந்தபோதிலும், அது நற்பண்புகளைத் தூய்மையுடன் வெளிப்படுத்தியது. அதனது உருவம் மனிதத்தின் சிறந்த இயல்புகளான அன்பு, இரக்கம், கருணை ஆகியனவற்றின் அடையாளமாக மாறியிருக்கின்றது. கூட்டுணர்விற்கும் நல்லிணக்கத்திற்கும் தனிநபர் மதிப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்கும் ஒரு பண்பாட்டுப் பின்புலத்தில், ஹாச்சிகோவின் கதை அர்த்தபூர்வமான நினைவுகூர்தலின் ஆர்ப்பாட்டமற்ற பெறுமதியைப் பிரதிபலிக்கிறது.



rooban.s@thaiveedu.com

சொர்ணவேல்

IV

# சிலந்தியும் சதுரங்கமும்

## இங்மார் பெர்க்மேனின் மௌன முத்தொகுதியும் ஏழாம் முத்திரையும்

**மொழி இறந்த நகரம்: Tystnaden (1963):**

முத்தொகுதியின் மூன்றாம் படத்தில் தேவாலயமும் இல்லை, கடவுளும் இல்லை, வாதமும் இல்லை. ஒரு தொடர்வண்டி; ஓர் அறியப்படாத நாடு; 'திமோகா' (Timoka) என்று பெயர்கொண்ட ஒரு நகரம் - எஸ்தோனிய மொழியில் ‘கொலையாளிக்கு உரியது’ எனும் பொருளுடைய ஒரு சொல்லை, அதன் ஒலிக்காக மட்டுமே பெர்க்மன் எடுத்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது (Steene 2005). போர் நடக்கிறது; யாருக்கு எதிராக என்று தெரியவில்லை. தெருவில் ஒரு போர்த்தாங்கி (Tank) உருண்டு செல்கிறது. உணவகத்தில் பேசப்படும் மொழியை யாரும் அறிவதில்லை.

இரு சகோதரிகள். எஸ்தர் (இங்க்ரிட் தூலின்), மொழிபெயர்ப்பாளர், காசநோயால் சாவுக்கு நெருங்கிக் கொண்டிருப்பவள்; அன்னா (குன்னெல் லிண்ட்ப்லோம்), அவளது தங்கை, உடலின் குறியீடு; அன்னாவின் மகன் யோஹான் (யோர்கன் லிண்ட்ஸ்ட்ரோம்), பத்து வயதுப் சிறுவன், எல்லாவற்றையும் சாட்சியாகப் பார்ப்பவன். அர்த்தத்தை ஒரு மொழியிலிருந்து இன்னொன்றுக்கு எடுத்துச் செல்வதையே தொழிலாகக் கொண்டவள் சாகிறாள்; இது படத்தின் முழு வாதத்தையும் ஒரே உருவகத்தில் அடக்கிவிடுகிறது.



யோஹான் ஹோட்டலின் நடைபாதைகளில் அலைகிறான். நீளமான, காலியான, மங்கலான வழிகள்; திறந்த கதவுகள்; சுவரில் தொங்கும் ஒரு பெரிய ஓவியம். ஒரு குள்ளநாடகக் குழு அவனைத் தங்கள் அறைக்குள் அழைத்து, பெண் உடையை அணிவித்து விளையாடுகிறது; ஓர் முதியவர் வந்து அதை நிறுத்துகிறார். வயதான ஹோட்டல் ஊழியர் அவனுக்கு உணவும் பழைய புகைப்படங்களும் காட்டுகிறார். மொழி இயங்காத இடத்தில், சிறுவன் படங்களை வாசிக்கக் கற்றுக்கொள்கிறான். பெர்க்மனின் பால்யமும் அதுவே.

அன்னா வெளியேறி நகரத்தில் ஓர் அறியப்படாத ஆடவனைச் சந்திக்கிறாள்; திரும்பி வந்து, அதைத் தன் சகோதரியிடம் விவரமாகச் சொல்லிக் காயப்படுத்துகிறாள். சகோதரிகளுக்கு இடையிலான உறவு ஒரு தோல்வியுற்ற திருமணத்தின் அமைப்பைக் கொண்டது: பொறாமை, தேவை, வெறுப்பு, தீண்டல், பரிதாபம். மொழியும் உடலும் இரு பெண்களாகப் பிரிக்கப்பட்டு, ஒருவரையொருவர் மன்னிக்க முடியாமல் ஒரே அறையில் அடைபட்டுக்கிடக்கின்றன.

பெண் உடல்கள் மேல் ஆண் கலைஞனின் ஆன்மீக நெருக்கடியைச் சுமத்தும் இந்த அமைப்பை மரிலின் ஜான்ஸ் பிளாக்வெல் கூர்மையாகச் சுட்டிக்காட்டுகிறார்: முத்தொகுதி முழுவதிலும் பெண்களே இறையியலின் ஊடகங்களாக இருக்கிறார்கள் - கரின் கடவுளின் குரலைத் தாங்கும் பாத்திரம்; மார்த்தா நிராகரிக்கப்படும் வேண்டுநர்; எஸ்தரும் அன்னாவும் மொழியும் சதையுமாப் பிளக்கப்பட்ட ஒரே மனுஷி. ஆண்கள் ஐயப்படுகிறார்கள்; பெண்களோ அந்த ஐயத்தை உடலிலேயே ஏந்துகிறார்கள் (Blackwell 1997). இக்குற்றச்சாட்டு படங்களின் வலிமையைக் குறைக்கவில்லை; மாறாக, அவற்றின் விலையை வெளிப்படுத்துகிறது.

ழில்தெலூஸ் (Gilles Deleuze) பெர்க்மனை உணர்ச்சிப் பிம்பத்தின் - 'க்ளோஸ்-அப்' காட்சிகளின் - மிகத் தீவிரமான ஆய்வாளராகப் பார்க்கிறார். முகம் தன் அடையாளச் செயலை இழக்கும் அளவுக்கு 'க்ளோஸ்-அப்' நீட்டிக்கப்படும்போது, முகம் ஒரு நபராக இருப்பதை நிறுத்திவிட்டு, வெறும் உணர்வாக, பின்னர் வெறும் மேற்பரப்பாக, இறுதியில் ஒரு வெறுமையாக மாறுகிறது (Deleuze 1986). Tystnaden-இல்

prasadbatti@gmail.com

இந்த வெறுமை அடையப்படுகிறது. சூசன்சொன்டாக் அடுத்த ஆண்டின் Persona குறித்து எழுதியது இதற்கும் பொருந்தும்: பெர்க்மன் தகவல்களைத் தர மறுப்பதன் மூலமே ஒரு புதிய வகைக் கவனத்தை உருவாக்குகிறார் (Sontag 1969).



இறுதியில் எஸ்தர், தான் கற்றுக்கொண்ட அந்த அறியப் படாத மொழியின் சில சொற்களை ஒரு காகிதத்தில் எழுதி யோஹானிடம் கொடுக்கிறாள். தொடர்வண்டியில், தாய் தன் முகத்தில் நீரை வழிய விட்டுக்கொண்டிருக்கும்போது, சிறுவன் அந்தக் காகிதத்தைப் பிரித்து வாசிக்கிறான். சொற்கள் தெரிகின்றன; பொருள் புரியவில்லை. உதடுகள் அவற்றை உருவகிக்கின்றன; படம் முடிகிறது.

இதுவே பெர்க்மன் 'எதிர்மறை முத்திரை' (Negative Impression) என்று அழைத்தது (Bergman 1967). ஒரு முத்திரை மெழுகில் அழுத்தப்பட்டு எடுக்கப்பட்ட பின், அங்கே எஞ்சுவது உருவம் அல்ல; உருவத்தின் தலைகீழ் அச்சு. கடவுளும் அவ்வாறே எஞ்சுகிறார்: பொருளின்மையாக அல்ல, பொருள் இருந்த இடத்தின் வடிவமாக! இறக்கும் பெண் ஒரு குழந்தையின் கையில் புரியாத சொற்களை வைத்து விட்டுப் போகிறாள். மரபு என்பதும் இதுதான்; இறையியல் என்பதும் இதுதான்.

## அரை மணி நேர மௌனம்:
## Det sjundeinseglet (1957):

### • ஒரு வசனத்தின் விரிவாக்கம்:

வெளிப்படுத்தல் நூலின் எட்டாம் அதிகாரம் ஒரு விசித்திரமான வாக்கியத்துடன் தொடங்குகிறது: 'ஏழாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, வானத்தில் ஏறக்குறைய அரை மணி நேரம் மௌனம் நிலவியது' (வெளிப்படுத்தல் 8:1). அபோகாலிப்ஸ் இலக்கியத்தின் முழுப் பெருஞ்சத்தத் திற்கும் - எக்காளங்கள், குதிரைகள், விழும் நட்சத்தி ரங்கள், சிங்கங்களின் உறுமல்கள் - நடுவே ஒரு பேரமை தியின் துளை: மௌனம். அதுவும் காலக் கணக்குடன்: 'அரை மணி நேரம்'. வானத்தில் யார் கடிகாரம் பார்த்தார்கள்?

பெர்க்மனின் முழுத் திரைப்படமும் இந்த ஒரே வசனத்தின் விரிவாக்கம்தான். தொண்ணூற்றாறு நிமிடங்கள் - அந்த அரை மணி நேரத்தை மூன்று மடங்காக நீட்டித்த கால அளவு. படம் தொடங்கும்போது வானத்தில் ஒரு பறவை அசையாமல் மிதக்கிறது; கடல் ஓசையிடுகிறது; பாடகர் குழு ஒலிக்கிறது; பின்னர் ஒலிகள் யாவும் அடங்கி, வெளிப்படுத்தல் நூலின் அவ்வசனம் வாசிக்கப்படு கிறது. முதல் காட்சியிலேயே படம் தன் விதியை அறி வித்துவிடுகிறது: இது ஒரு விடையைத்தேடும் படம் அல்ல; இது 'ஒரு மௌனத்தின் கால அளவைப்' பற்றிய படம்.

### • சுவரிலிருந்து திரைக்கு:

இப்படத்தின் தோற்றம் ஒரு சுவர். ஸ்டாக்ஹோமுக்கு அருகில் உள்ள டேபி தேவாலயத்தில், 1480-களில் ஆல்பர்ட்டஸ்பிக்டர் என்னும் இடைக்கால ஓவியர் வரைந்த ஒரு சித்திரம்: ஒரு மனிதனும் ஒரு எலும்புக் கூடும் சதுரங்கப் பலகையின் இருபுறமும் அமர்ந்தி ருக்கிறார்கள். அவர்களுக்கு மேல் ஒரு நாடாவில், 'நான் ஆடி உன்னை வெல்வேன்' என்னும் வாக்கியம் மங்கிய எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கிறது. இப்ப டத்தின் மையப் படிமம் இந்தச் சுவரோவியத்திலிருந்தே பிறந்ததென பெர்க்மன் பலமுறை சொல்லியிருக்கிறார் (Bergman 1994; Steene 2005). பாதிரியார் தந்தையின் பிர சங்கங்களுக்குக் கீழே அமர்ந்து சிறுவன் பார்த்த சுவர், முப்பது ஆண்டுகள் கழித்து ஒரு திரையாக விரிகிறது.

இதற்கு இடையில் பிறந்த ஒரு நாடகம் உண்டு. 1954 - 55-இல் மால்மோ நகர நாடகப் பள்ளி மாணவர்களுக்கான பயிற்சிப் பொருளாக Trämålning ('மரச் சித்திரம்') என்னும்



தனியங்க நாடகத்தை பெர்க்மன் எழுதினார். தனிமொழி களின் தொகுப்பான அது, வானொலி நாடகமாகவும் பின்னர் மேடையிலும் நிகழ்த்தப்பட்டது (Steene 2005; Törnqvist 1995). அந்த முதல் வடிவத்தில் மரணம் ஒரு பாத் திரமாக இல்லை. நாடகம் திரைப்படமாவதற்கு அதற்கு ஒரேயொரு எதிராளி தேவைப்பட்டான்; சுவரோவியம் அவனைக் கொடுத்தது.

வடிவ வரலாற்று ரீதியாக இது ஒரு முக்கியமான தகவல். பெர்க்மேனின் மிகவும் போற்றப்பட்ட படமான The Seventh Seal / த செவெந்த்சீல் / ஏழாம் முத்திரை இடைக்காலத்தைப் பற்றிய படம் அல்ல; மாறாக, இடைக்காலக் கலையின் இலக்கணத்தைப் பயன்படுத்தும் ஒரு நவீனப்



படம். சுவரோவியத்தின் இலக்கணம் என்ன? ஆழத்தை (Perspective) மறுப்பது; ஒரே தளத்தில் பல உருவங்களை வரிசைப்படுத்துவது; உருவகத்தையும் உடலையும் ஒரே யதார்த்த நிலையில் நிற்க வைப்பது. அதனால்தான் மரணம் இங்கே ஒரு மனநோய் மாயையாகவோ, வெறும் நிழலாகவோ வரவில்லை. கறுப்பு அங்கியில், வெளிறிய முகத்தில், ஒரு நடிகனாக, மற்ற பாத்திரங்களைப் போலவே திடமான உடலோடு நிற்கிறார். யோஹான்ஹுய்சிங்கா இடைக்காலத்தின் இறுதி நூற்றாண்டுகளைப் பற்றிச் சொன்னது இதுவே: 'அப்போதைய கற்பனைகள் உருவகங்களை உலோகம் போல திடமாக்கிவிட்டன' (Huizinga 1996; Ariès 1981).

இப்படத்தில் இடைக்காலம் என்பது ஒரு உடை மட்டுமே. பார்பரா டக்மேன் பதினான்காம் நூற்றாண்டை 'தொலைவிலுள்ள கண்ணாடி' என்று அழைத்தார் - நமது நூற்றாண்டைத் திருப்பிக் காட்டும் ஒரு கண்ணாடி (Tuchman 1978). பெர்க்மனின் பிளேக் நோய் உண்மையில் அணுகுண்டின் குறியீடு. இதை அவரே மறுக்கவில்லை; படத்தின் அச்சம் சமகாலத்தினுடையது என்று பலமுறை சொல்லியிருக்கிறார் (Bergman 1988; Cowie 1982). ஆறு ஆண்டுகள் கழித்து Nattvardsgästerna-வின் மீனவன் சீன அணுகுண்டைப்பற்றிப் பேசும்போது, அவன் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து வந்த ஒரு மனிதனே; ஒரே பயம், இரண்டு உடைகள்!

- **சதுரங்கம் என்னும் வடிவம்:**

சிலுவைப் போரிலிருந்து பத்து ஆண்டுகளுக்குப் பின் திரும்பும் அந்தோனியஸ் ப்ளாக் (மாக்ஸ் ஃபான் சிடோவ்) கடற்கரையில் மரணத்தை (பெங்க்ட் எக்கரோட்) எதிர்கொள்கிறார். அவர் ஓர் ஆட்டத்தை முன்மொழிகிறார்: 'நான் ஆடும் வரை நான் உயிர்வாழ்வேன்.' மரணம் அதை ஏற்றுக்கொள்கிறது.

இது வெறும் கதைத் தந்திரம் அல்ல; இதுவே படத்தின் வடிவமும் கூட. சதுரங்கம் மூன்று விதங்களில் இப்படத்தை ஆள்கிறது:

- ஒளியியல்: குன்னர் ஃபிஷரின் ஒளிப்பதிவில் மிளிரும் கறுப்பு-வெள்ளை மாறுபாடு - வானமும் நிலமும், அங்கையும் முகமும், நிழலும் தோலும் - சதுரங்கப் பலகையின் அதே இருமை வடிவம். படம் தன் உள்ளடக்கத்தைத் தன் வடிவத்திலேயே பொறித்து வைத்திருக்கிறது.
- காலம்: ஒவ்வொரு நகர்வும் நேரத்தை விலைக்கு வாங்குகிறது. படத்தின் கதையே ஒரு தாமதம்தான்; பயணங்கள், சந்திப்புகள், உரையாடல்கள் - எல்லாமே தள்ளிப்போடுதலின் உள்ளடக்கங்கள். 'வாழ்க்கை என்பது மரணத்திடமிருந்து பேரம் பேசி வாங்கப்பட்ட இடைவெளி' என்று இதைவிடச் சுருக்கமாகச் சொல்ல முடியாது. இதுவே அந்த 'அரை மணி நேர மௌனத்தின்' இன்னொரு பெயர்.
- நெறிமுறை: ப்ளாக்கிற்கு அந்த இடைவெளி எதற்கு வேண்டும்? அறிவிற்காக. அவர் மரணத்திடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான்: கடவுள் இருக்கிறாரா, ஏன் அவர் பேசுவதில்லை? மரணமோ, 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்கிறது; தனக்கு ரகசியங்கள் எதுவுமில்லை என்கிறது. இதுவே படத்தின் மிகக் கொடூரமான நகைமுரண்: மரணம் பேசுகிறது, ஆனால் அது ஓர் அறியாமையின் சாட்சி! மனிதர் தேடிய விடைக்குக் கிடைப்பது - 'எனக்குத் தெரியாது' என்னும் பதில் மட்டுமே.



ஆனால், அந்த இடைவெளியில் ப்ளாக் ஒரேயொரு பயனுள்ள செயலைச் செய்கிறார். ஆட்டத்தின் இறுதியில், தன் அங்கையின் நுனியால் பலகையின் காய்களைக் கவிழ்த்து, மரணத்தின் கவனத்தைத் திசைதிருப்பி, ஜோஃபும் மியாவும் குழந்தையுடன் தப்பிச் செல்ல ஒரு கணத்தை உருவாக்குகிறார். மரணம் காய்களை மறுபடி அடுக்கி வைத்துக்கொள்கிறது; தான் எதையும் மறப்பதில்லை என்கிறது.

அந்தச் செயலைக் கவனிக்க வேண்டும்: அது ஒரு ஏமாற்று. இப்படத்தில் 'அருள்' என்பது ஒரு விதிமீறலின் வடிவில் வருகிறது. நேர்மையான ஆட்டத்தால் யாரையும் காப்பாற்ற முடிவதில்லை; ஒரு நைச்சியமான, சிறிய, நடுங்கும் கை பலகையைக் கவிழ்ப்பதாலேயே ஒரு குடும்பம் தப்புகிறது. நம்பிக்கையின் அனைத்து இறையியல் கேள்விகளுக்கும் பெர்க்மன் தரும் ஒரே நடைமுறைப் பதில் இதுதான்.

இப்படத்தின் மறுபாதி. ப்ளாக்வின்னைப் பார்த்துக் கேட்கிறார்; ஜோன்ஸோ கீழே பார்த்து உதவுகிறான். ஊமைப் பெண்ணைக் காப்பாற்றுவது, சிறுமியை அணைப்பது, கொல்லனுக்குச் சமாதானம் சொல்வது - அனைத்து நற்செயல்களும் அவனுடையவையே. பெர்க்மனின் தார்மீக நாயகன் தலைவன் அல்ல, அவன் வேலைக்காரன்!



ஜோஃப் (நில்ஸ் பொப்பே) தரிசனங்களைக் காண்கிறான். புல்வெளியில் கன்னிமரியாள் குழந்தைக்கு நடக்கக் கற்பிப்பதைப் பார்க்கிறான்; அதை யாரும் நம்புவதில்லை; அவனது மனைவி மியா (பீபி அண்டர்சன்) அன்புடன் அவனைப் பார்த்துச் சிரிக்கிறாள். ஜோஃப் ஒரு பொய்யனா, ஒரு தீர்க்கதரிசியா, அல்லது கலைஞனா என்று படம் தீர்மானிக்கவில்லை. இது தற்செயலான தெளிவின்மை அல்ல; இதுவே பெர்க்மனின் கலைக் கோட்பாடு. கலைஞர் காண்கிறாரா அல்லது கற்பிக்கிறாரா என்று அறுதியிட முடியாது; அவரது தரிசனத்தின் மதிப்பு அதன் 'உண்மையில்' இல்லை, அது 'யாரைக் காப்பாற்றுகிறது' என்பதில் மட்டுமே இருக்கிறது. இறுதியில் ஜோஃபின் தரிசனமே அவனைக் காப்பாற்றுகிறது: அவன் மரணத்தைப் பார்க்கிறான், ஆகவே தப்பி ஓடுகிறான்.

- **முகங்களும் முகமூடிகளும்:**

இப்படம் நாடக மனிதர்களால் நிரம்பியிருக்கிறது. மரணத்தின் வெளிறிய முகம் மேடையின் ஒப்பனையே. ஸ்காட் என்னும் நடிகன் மரத்தில் ஏறி இறந்ததாக நடிக்கிறான்; மரணம் ரம்பத்துடன் வந்து மரத்தை அறுக்கிறது; நடிப்பு உண்மையாய் மாறுகிறது. ஒரு கூடாரத்தில் ஆரம்பிக்கும் நகைச்சுவை நாடகம், தங்களைத் தாங்களே சாட்டையால் அடித்துக்கொள்ளும் பாவமன்னிப்பாளர்களின் ஊர்வலத்தால் குறுக்கிடப்படுகிறது - கலையை மதம் இடைமறிக்கும் காட்சி; பயத்தை வெகுஜனக் காட்சியாக மாற்றும் அமைப்பின் மேல் பெர்க்மன் வைக்கும் மிகக் கசப்பான குற்றச்சாட்டு இது. துறவியின் மறையுரை மக்களை மண்டியிட வைக்கிறது; அதற்குப் பின் அவர்கள் மேலும் அச்சத்தோடு எழுகிறார்கள். மதம் இங்கே ஆறுதல் அல்ல, அது ஒரு தொற்று நோய்!

ரவால் என்பவன், பத்து ஆண்டுகளுக்கு முன்பு ப்ளாக்கைச் சிலுவைப்போருக்குப் புறப்படும்படி வற்புறுத்திய இறையியலாளன். இப்போது அவன் பிணங்களிலிருந்து நகைகளைக் களவாடித் திரிகிறான். சிந்தனையாளன் ஒரு கொள்ளையனாக மாறுவதை பெர்க்மன் ஒரே பாத்திரத்தில் காட்டுகிறார். இறுதியில் ரவால் பிளேக் பிடித்து, தண்ணீருக்காக அழுது இறக்கிறான்; அவனுக்குத் தண்ணீர் கொடுக்கச் செல்லும் ஊமைப் பெண்ணை ஜோன்ஸ் தடுக்கிறான். அது கருணையின்மை அல்ல; பயனின்மையின் அறிவு!

ஜோன்ஸ் (குன்னர் ஜோர்ன்ஸ்ட்ராண்ட்) - வீரனின் தோழன், ஒரு பொருள்முதல்வாதி, பாடுபவன், பரிகாசம் செய்பவன் -

- **சூனியக்காரியின் கண்கள்:**

இப்படத்தின் மிகக் கொடிய காட்சி சதுரங்க ஆட்டத்தில் இல்லை. டியான் (மாவுட் ஹான்சன்) என்னும் சிறுமி பிசாசுடன் உறவுகொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு எரிக்கப்படக் கொண்டுசெல்லப்படுகிறாள். அவளது கைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. ப்ளாக் அவளிடம் செல்கிறார்.



அவர் அவளைக் காப்பாற்ற வரவில்லை; மாறாக, ஒரு கேள்வியுடன் வருகிறார்: 'நீ பிசாசைப் பார்த்திருக்கிறாயா? அவனை என்னிடம் அழைத்து வர முடியுமா? அவனுக்குக் கடவுளைப் பற்றித் தெரியும்.'

இது இறையியல் வரலாற்றின் மிக விபரீதமான வேண்டுகோள். கடவுளின் மௌனத்தை உடைக்க, ஒரு

மனிதன் நரகத்தின் சாட்சியைத் தேடுகிறான். பிசாசு இருந்தால் கடவுளும் இருக்க வேண்டும்; தீமையின் இருப்பே நன்மையின் இருப்பிற்குச் சான்று! ப்ளாக் அந்தச் சிறுமியின் கண்களுக்குள் ஊடுருவிப் பார்க்கிறார். ஜோன்ஸ் அவரிடம் சொல்கிறான்: அவள் கண்களில் ஒன்று மில்லை; வெறும் பயமும் வெறுமையும் மட்டுமே எஞ்சியி ருக்கிறது.



இதுவே படத்தின் இதயம். 'கடவுள் இல்லை' என்பது மட்டு மல்ல செய்தி - 'பிசாசும் இல்லை' என்பதுதான்! ஒரு சிறுமி வேதனையால் நிரம்பியிருக்கிறாள்; அந்த வேதனைக்குப் பொருள் தரும் எந்தவொரு அமைப்பும் - நரகம் உட்பட - இங்கே இல்லை. அர்த்தமற்ற துன்பம் என்பது கடவுள் இல்லாமையை விடவும் தாங்க முடியாத செய்தி; ஏனெனில் அதை எதிர்க்கவும் முடியாது, ஏற்கவும் முடியாது. ப்ளாக் ஒன்றும் பேசாமல் திரும்பி வருகிறார். மரணத்திடம் அவர் தொடர்ந்து ஆடுவது இந்தத் தோல்விக்குப் பின்னால்தான்.

- **காட்டு ஸ்ட்ராபெரியும் பாலும்: ஒரு உலகாயத நற்கருணை:**

பின்னர், ஒரு மலைச்சரிவில், அந்தி வெளிச்சத்தில், ஜோஃபும் மியாவும் ப்ளாக்கையும் அவரது குழுவையும் உணவருந்த அழைக்கிறார்கள். காட்டு ஸ்ட்ராபெரிகள்; ஒரு கிண்ணத்தில் புதிய பால். அந்தப் பாத்திரம் கையிலிருந்து கைக்கு நகர்கிறது. ஜோஃப் லூட் இசைக்கிறான்; குழந்தை உறங்குகிறது; அங்கே யாரும் கடவுளைப் பற்றிப் பேசுவதில்லை.

ப்ளாக் பேசுகிறார்: இந்தக் கணத்தை தான் என்றென்றும் நினைவில் கொள்ளப்போவதாகச் சொல்கிறார்; நிரம்பி வழியும் பால் கிண்ணத்தைச் சுமப்பது போல, இதை மிக மெதுவாகத் தன் மனதுள் சுமப்பதாகக் கூறுகிறார். அதே கிண்ணம்; உருவகம் இப்போது அவரது கையிலேயே இருக்கிறது.

இது ஒரு நற்கருணை (Eucharist). உணவைப் பங்கிடுதல், நன்றி கூறுதல், நினைவு கூர்தல் - திருவிருந்தின் மூன்று உறுப்புகளும் அங்கே இருக்கின்றன. ஒன்று மட்டும் இல்லை: கடவுள். அப்பமும் இரசமும் இங்கே பாலும் பழமு மாகின்றன; உருமாற்றம் நினைவாக மாறுகிறது. ஆறு ஆண்டுகள் கழித்து Nattvardsgästerna-வில் தோமஸ் காலியான தேவாலயத்தில் உண்மையான நற்கருணையை நம்பிக்கையின்றி வழங்குவார். இங்கே, ஒரு மலைச்சரிவில், நம்பிக்கையுள்ள மனிதர்கள் நற்கருணை அல்லாத ஒன்றை உண்மையாகப் பங்கிட்டுக்கொள்கிறார்கள். பெர்க் மனின் தீர்ப்பு தெளிவானது: சடங்கின் செல்லுபடி அதன் இறையியலில் இல்லை, அதன் மனிதப் புழக் கத்தில் இருக்கிறது. கிண்ணம் கைகளில் சுற்றினால் அது திருவிருந்து; சுற்றாவிட்டால் அது வெறும் வேலை!

நினைவே இப்படத்தில் மறுவாழ்வுக்கான ஒரே வடிவம். இதற்குத் தமிழ் அறவிலக்கியத்தில் ஒரு துணைப்பாடம் உண்டு. திருக்குறளின் 'நிலையாமை' (34) என்னும் அதிகாரம், 'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ் உலகு' என்று சாற்றுகிறது (திருக்குறள் 336; Tiruval-luvar). அதே அதிகாரம் உடலோடு உயிர்கொண்ட நட்பை, குடம்பையை விட்டுப் பறந்த பறவையின் பிரிவோடு ஒப்பிடுகிறது (திருக்குறள் 338).

இடைக்கால ஐரோப்பாவின் 'மரண நடனமும்' (Dance of Death) இந்தத் தமிழ்ச் செய்யுள்களும் ஒரே நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன: அதுதான் 'நிரல்'. மரணம் யாரையும் விடுவதில்லை என்பதை உணர்த்த, யாரையும் விடுக்காமல் ஒவ்வொருவரையும் பெயரிட்டு அழைத்துச் செல்லும் தாளம் அது.



படத்தின் கடைசிக் காட்சி அப்படியொரு அட்டவணை: வீரன், வேலைக்காரன், கொல்லன், அவன் மனைவி, நடிகன், மௌனமான பெண் - அனைவரும் கைகோத்து மலைமு கட்டில் ஏறிச் செல்லும் ஒரு நீண்ட வரிசை; அதை ஜோஃப் மட்டுமே பார்க்கிறான்; அவன் அதை வார்த்தைகளால் விவ ரிக்கிறான். மரணம் நடனமாகவும், நடனம் பட்டியலாகவும், பட்டியல் கவிதையாகவும் உருமாறுகிறது.

அந்தக் காட்சி ஹோவ்ஸ்ஹல்லார் கடற்கரையில் எடுக்கப் பட்டது. அன்று படப்பிடிப்பு முடிந்து குழு கிளம்பிக்கொண் டிருந்தபோது, வானத்தில் ஒரு வினோதமான மேகம் தோன்றியது; ஃபிஷர்கேமராவை மறுபடியும் நிறுத்தினார்; அப்போது கிடைத்த அந்தத் தற்செயல் காட்சியே சினிமா வரலாற்றின் மிக புகழ்பெற்ற படிமங்களில் ஒன்றாக மாறியது (Bergman 1994; Cowie 1982). இப்படத்தின் இறையியல் வாதத்தை இதைவிடச் சிறப்பாகச் சுருக்க



முடியாது: திட்டமிடப்பட்ட வேண்டுதலுக்குப் பதில் வருவ தில்லை; ஆனால் பொதி கட்டி முடித்த பின், வானம் தானாகவே ஒரு மேகத்தைத் தருகிறது!

## ● முடிவும் மௌனமும்:

ப்ளாக் தன் கோட்டையை அடைகிறார். பத்து ஆண்டுக ளுக்குப் பின் மனைவி கரின் (இங்கா லாண்ட்க்ரே) அவரை அடையாளம் காண்கிறாள். மேசையில் ஒரு உணவு; மெழுகுவர்த்திகள். அவள் வெளிப்படுத்தல் நூலை உரக்க வாசிக்கிறாள். மரணம் நுழைகிறது. ப்ளாக் இறுதியாக ஒரு ஜெபம் செய்கிறார் - இருளிலி ருந்து எங்களை மீட்பீர் என்று. விடை இல்லை. அப்போது, படம் முழுவதும் ஒரு சொல்லும் பேசாத ஊமைப் பெண் (குன்னெல் லிண்ட்ப்லோம்) மண்டி யிட்டு ஒரே ஒரு வாக்கியத்தைச் சொல்கிறாள்: ‘முடிந்தது’.

அது சிலுவையின் கடைசிச் சொல் (யோவான் 19:30). பெர்க்மன் அதை ஒரு பெண்ணின் நாக்கில், ஒரு வேலைக்காரியின் குரலில் படம் முழுவதும் மௌனமாக இருந்த ஒருவரின் வாயில் வைக்கிறார். வீரன் கேட்டுக்கொண்டே இறக்கிறான்; வேலைக்காரன் பரிகாசம் செய்துகொண்டே இறக்கிறான்; பேசாதவள் மட்டுமே இறையியலை உச்சரிக்கிறாள். அது ஏற்பா, முடிவா, விடுதலையா என்பதைப் படம் விளக்காது.

பின்னர், காலை வெளிச்சத்தில், ஜோஃபும் மியாவும் மகன் மிக்கேலுடன் தப்பியிருக்கிறார்கள். மியா குழந்தையைப் பார்த்துச் சிரிக்கிறாள். ஜோஃப் சொல்கிறான்: மிக்கேல் ஒரு பெரிய கலைஞனாகி, யாரும் செய்ய முடியாத ஒரு தந்தி ரத்தைச் செய்வான் - ஒரு பந்தைக் காற்றில் அசையாமல் நிற்க வைப்பான். மியா அது நடக்காது என்கிறாள். ஜோஃப் அது நடக்கும் என்கிறான்.

பெர்க்மன் அத்தந்திரத்தின் பெயரை வெளிப்படையாகச் சொல்லவில்லை. காற்றில் ஒரு பந்தை அசையாமல் நிற்க வைப்பது - நகர்வின் நடுவே ஒரு கணத்தைப் பிடித்து வைப்பது - வினாடிக்கு இருபத்திநான்கு படங்களால் மட்டுமே சாதிக்க முடியும். சதுரங்கம் தோற்கிறது; ஜெபம் விடையின்றிப் போகிறது; சுவரோவியம் மங்கு கிறது. பந்து மட்டும் நிற்கிறது.

## மௌனத்தின் இலக்கணம்:

இந்த நான்கு படங்களை ஒரு வளைவாகப் பார்த்தால், அதன் இயக்கம் கீழ்நோக்கியது அல்ல, உள்நோக் கியது.

1957-இல் மரணம் ஓர் உரையாடலுக்குக் கிடைக்கிறது. அதற்கு உடல் உண்டு, குரல் உண்டு, விதிகள் உண்டு. அது அறியாமையைச் சொன்னாலும், சொல் வதற்கு அது இருக்கிறது. உருவகக் கலையின் கொடை இதுதான்: எதிராளியை உற்பத்தி செய்வது. 1961-இல் கடவுள் இன்னும் தோன்றுகிறார், ஆனால் ஒரு சிலந்தியாக - உடல் உண்டு, குரல் இல்லை. 1963-இன் தொடக்கத்தில் கடவுள் ஒரு விடையளிக்கப்படாத கேள்வியாக மட்டுமே இருக்கிறார்; கெத்செமனேயின் மௌனம் ஒரு தேவாலயப் பணியாளரின் வாசிப்பாகச் சுருங் குகிறது. 1963-இன் இறுதியில் கேள்வியே இல்லை; இரு பெண்களும் ஒரு குழந்தையும் ஒரு அறியப்படாத மொழியில் எழுதப்பட்ட சில சொற்களும் மட்டுமே எஞ்சு கின்றன.



ஆகவே பெர்க்மனின் இயக்கம் நம்பிக்கையிலிருந்து நாத் திகத்திற்கு அல்ல; அது உருவகத்திலிருந்து முகத்திற்கு. மரணத்திற்கு ஒரு நடிகரைப் போட்டு நாடகமாக்குவதை அவர் கைவிட்டு, மரணத்தை ஒரு அறையின் வெளிச்சமாக, ஒரு தோலழற்சியாக, ஓர் இருமலாக, ஒரு நடைபாதையின்

நீளமாக மாற்றினார். இந்த மாற்றத்தின் தொழினுட்பப் பெயர் நெருக்கக்காட்சி. தெலூஸ் சொல்வது போல, பெர்க் மனிடம் முகம் ஓர் அடையாளம் அல்ல; அது நிலப்பரப்பு, பின்னர் மேற்பரப்பு, இறுதியில் வெறுமை (Deleuze 1986).



இங்கே இந்திய திரைப் பார்வை மரபுடனான ஒப்பீடு ஒரு கூர்மையான முடிவுக்கு நம்மை இட்டுச்செல்கிறது. தரி சனத்தின் அமைப்பில் திரை ஒரு சந்திப்பு: பார்ப்பவரும் பார்க்கப்படுபவரும் ஒருவரையொருவர் நோக்குகிறார்கள்; தெய்வத்தின் நேர்முகப் பார்வை பார்வையாளனை ஆசீர்வ திக்கிறது; நேர்முகம் என்பது ஒரு அருள் தொழினுட்பம் (Eck 1998; Vasudevan 2010; Kapur 1993). பெர்க்மனின் நெருக்கக்காட்சி இந்த அமைப்பின் நேர்மாறான பரிசோதனை. அவரது முகங்கள் கேமராவுக்குச் சற்றே அப்பால், எதுவும் இல்லாத ஒரு புள்ளியை நோக்கிப் பார்க் கின்றன. அவை ஒரு தரிசனத்தை வழங்குகின்றன; ஆனால் திரும்ப ஒரு பார்வை வருவதில்லை. மார்த்தா கேமராவை நேராகப் பார்த்துப் பேசும் அந்த ஒரே நெடுங்காட்சி இதன் விதிவிலக்கு அல்ல, இதன் நிரூபணம்: அவள் நேராகப் பார்க்கிறாள், ஏனெனில் அவள் பார்க்கும் இடத்தில் ஒரு கடவுள் இருக்க வேண்டும்; ஆனால் அங்கே இருப்பது நாம்.

பெர்க்மனின் இந்த 'மௌன முத்தொகுதி'யிலும் The Seventh Seal-லும் நிலவும் ஆன்மீக விசாரணையின் அரசியல் விலையையும் (political cost) நாம் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

இந்நான்கு படங்களிலுமே ஆன்மீகக் கேள்விகளைச் சுமப் பவர்களாக ஆண்களும், அதற்கான விடைகளையோ அதன் வேதனைகளையோ தங்கள் உடல்களில் சுமப்பவர் களாகப் பெண்களும், ஊமைகளும், கூன்விழுந்த மனிதர் களுமே இருக்கிறார்கள்.

- டியானின் வெளிறிய அஞ்சிய கண்கள்,
- ஊமைப் பெண்ணின் 'முடிந்தது' எனும் உச்சரிப்பு,
- ஆல்கொட்டின் வளைந்த முதுகு,
- மார்த்தாவின் சீழ்பிடித்த புண்கள்,
- கரினின் சிலந்திக் கடவுள்,
- எஸ்தரின் இருமல் உதிர்க்கும் ரத்தம்

என, ஆன்மீக நெருக்கடியின் முழுப்பாரமும் சமூகத்தில் அதிகாரமற்ற, ஒடுக்கப்பட்ட உடல்களின் மீதே ஏற்றப்படு கிறது (Blackwell 1997; Kalin 2003).

இது தற்செயலான ஒரு கதாபாத்திரப் பங்கீடு அல்ல; மாறாக, மேலைத்தேய சினிமா மற்றும் இலக்கியப் பாரம்பரியத்தின் நீண்டகாலப் பழக்கம். அதாவது, துன்பத்தை நேரில் அனுபவிக்கும் உடலாக அமைய வேண்டிய திறன் அதிகாரமற்றவர்களுக்குத் தரப்படு கிறது; ஆனால், அந்தத் துன்பத்தை ஆராய்ந்து விளக்கும் தத்துவ உரிமை அதிகாரத்தில் இருக்கும் ஆண்களுக்கு வழங்கப்படுகிறது.

பெர்க்மனின் சிறப்பு என்னவென்றால், அவர் இந்தச் சார்புநிலையைத் தவிர்க்க முயலவில்லை; மாறாக, பிறரின் வேதனையைத் தன் கலைக்கான மூலப்பொ ருளாக மாற்றிவிடும் கலைஞரின் இந்தத் தார்மீகக் குற்ற உணர்ச்சியைத் தன் படங்களின் தளத்திலேயே வெளிப்படையாக அம்பலப்படுத்துகிறார். டேவிட்டின் நாட்குறிப்பும், ஜோஃபின் தரிசனமும், தோமஸின் மறையுரையும் ஒரே குற்றத்தின் மூன்று வாக்கு மூலங்கள்: பிறரது வேதனையை மூலப்பொருளாக்கும் கலைஞனின் குற்றம்.

## முடிவுரை: அரை மணி நேரம்:

ஒரு நூறு ஈயச் சிப்பாய்கள். ஒரு தகரப் பெட்டி. ஒரு சுவர். பெர்க்மன் தன் முழு வாழ்நாளிலும் ஒரே இறையிய லைத்தான் நடைமுறையில் வைத்திருந்தார்: இருட்ட றையில் ஒரு சுவரின் மேல் ஒளியை வீசுவது, அந்த ஒளியில் ஒரு முகம் தோன்றுவது, அந்த முகம் ஒரு பதிலுக்குக் காத் திருப்பது. வானத்தில் மௌனம் அரை மணி நேரம் நீடித்தது; அவர் அதற்குள் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் அந்த மௌனத்தை நிரப்பமுயலவில்லை; அதை அளக்க முயன்றார். அதுதான் ஒரு படைப்பாளிக்கு உரிய பணி.

ஏழாம் முத்திரை எரிக்கப்படும் ஒரு சிறுமியின் வெறுமையான கண்களைக் காட்டுகிறது. Nattvardsgäs-terna (குளிர்கால வெளிச்சம் / Winter Light) காலியான ஒரு தேவாலயத்தில் 'பூமி மகிமையால் நிறைந்திருக்கிறது' என்று சொல்கிறது. Tystnaden (மௌனம் / The Silence) புரியாத சொற்களை ஒரு குழந்தையின் கையில் வைக்கிறது. இவை மூன்றும் ஒரே சைகையின் மூன்று வடி வங்கள் - விடையின்மையை நேர்கொண்டு நிற்கும் ஓர் உட லைப்படமாக்குவது. மற்றும் ஒரு பந்து. காற்றில், அசையாமல், ஒரு கணம். யாரும் அதைச்செய்ததில்லை என்று மியா சொல்கிறாள். செய்வான் என்று ஜோஃப் சொல்கிறான். தொண்ணூற்றாறு நிமிடங்களுக்கு முன்பு வானத்தில் அசையாமல் நின்ற அந்தப் பறவையை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம்.



Swarnavel@thaiveedu.com

## தோட்டத் தொழிலாளியாகத் தொடங்கி பாடசாலை அதிபராகப் பணி நிறைவு!

# ஒரு தலைமுறையை வழிநடத்திச் செல்லும் மலையகக் கதை



மல்லியப்புசந்தி திலகர்

### அறிமுகம்:

இலங்கையின் பதுளை மாவட்டத்தில் தெமோதர என சிங்களத்திலும் தென்மதுரை என தமிழிலும் அழைக்கப்படும் ஓர் ஊர் உண்டு. இரண்டு நதிகள் சங்கமிக்கும் இடம்தான் சிங்களத்தில் 'தொமோதர' என்றழைக்கபட்டாலும் அங்க மைந்த புகையிரத நிலையம் அற்புதமானது. அதனைப் பார்ப்பதற்கு என்றே தினந்தோறும் சுற்றுலாப் பயணிகள் புகையிரத நிலையத்தைச் சூழ்ந்து நிற்பர்.

அந்த புகையிரத நிலையம், புகையிரதப் பாதை சுரங்கத்தின் மேற்பகுதியில் அமைந்துள்ளது. சுரங்கத்திற்குள் பயணிக்கும் புகையிரதம் வெளியேறும் காட்சியை மேலிருந்து பார் த்துக் கொண்டிருக்கும் பயணிகளை ஏற்றுவதற்காக, அதே புகையிரதம் மீண்டும் மேலே அமைந்துள்ள நிலையத்திற்கே வந்து சேர்கிறது. இந்த ஆச்சரியமான காட்சியை அங்கு தினமும் வரும் பயணிகள் அனுபவித்து வருகின்றனர். அப்படியாக அடிமட்டத்து இருள்களைக் கடந்து மேல்நோக்கி வெளிச் சத்துக்கு வந்ததோடு ஒரு தலைமுறைக்கு தலைமை கொடுத்த இராஜமாணிக்கம் எனும் தெமோதர தோட்டத் தொழிலாளியின் சாதனைப் பயணமே இந்தக் கட்டுரை.

### சிறுபராயம்:

தென்மதுரை தோட்டத்தின் தொழிலாளர்களான சுப்பராயன் தம்பதிகளுக்கு மகனாக பிறந்த ராஜமாணிக்கம் சவுதம் தோட்டப் பாடசாலையில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அந்தப் பாடசாலையின் அதிபர் P.M.M.A. காதர் தனது கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் துணையாக இருந்தார் என பெருமிதம் கொள்கிறார் ராஜமாணிக்கம். பள்ளிக்கூட காலத்தில் பேச்சுப் போட்டிக்காக தலைநகர் செல்ல வேண்டிய நிலையில், பள்ளிக்கூட ஆடை தவிர பயணத் துக்கான மாற்று ஆடையின்றி கட்டிய சாரத்துடன் (லுங்கி) பஸ்ஸில் பயணித்துள்ளார் என்பது வறுமையின் உச்சத்தைக் காட்டி நிற்கும் காட்சி. எனினும், அந்தப் பேச்சுப் போட்டியில் திருகோணமலை பாடசாலை மாணவர்களுடன் போட்டியிட்டு முதலாமிடம் பெற்று தென் மதுரை திரும்பியுள்ளார் சிறுவன் ராஜமாணிக்கம். இந்தக் கதையை பெருமையுடன் சொல்பவர் அவரது பாடசாலை வகுப்பு நண்பரான பிரபாகரன் கேசவன்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்றாலும் தந்தை திடீரென மறைந்துவிட குடும்பச் சுமையைத் தோளில் தாங்க வேண்டிய நிலையில் தலைநகர் கொழும்பு நோக்கி வேலைக்கு செல்கிறார் ராஜமாணிக்கம். அங்கே தெமட்டகொடையில் ஒரு படமாளிகைக்கு முன்னே தட்டு வண்டிலில் கடலை வடை விற்பதுதான் அவரது முதல் தொழில். அவரது முதலாளியும் ஒரு முஸ்லிம்தான்.

### 1983 இன வன்முறை:

அப்போதுதான் தட்டு வண்டிலில் வடை விற்கும் தொழிலாளியாக தொழில் தொடங்கிய அந்த மலையக இளைஞனையும் 1983 இன வன்முறைகள் விட்டு வைக்க வில்லை. தமிழர்களைத் தேடித் தேடி தாக்கிய போது என்ன செய்வதென்று தெரியாத இளங்கன்று எப்படியோ பம்பலப் பிட்டிய கதிரேசன் மண்டபத்தில் அமைந்த அகதிகள் முகாமில் தஞ்சம் பெற்றுள்ளது. பசி வயிற்றைக்கிள்ள

வயிற்றைத் தடவிக்கொண்டு வானத்தைப் பார்த்த இளை ஞனுக்கு கோயில் வளாக தென்னை மரத்தில் தேங் காயும் இளநீருமே தெரிந்திருக்கின்றன. இளமை முறுக்குடன் மேலே ஏறி காய்களைப் பறித்துத் தள்ளியிருக்கிறார். கீழே பலரும் பரிதவித்து கையேந்தி நின்றுள்ளனர். அப்படி நின்றவர்கள் பலர் நகைக் கடை முதலாளிகள் என பின்னாளில் அறிந்துகொண்டாராம். அகதி முகாமில் உள்ள மக்களைப் பஸ்களில் ஏற்றி ஊர்களுக்கு அனுப்பி இருக்கி றார்கள். அவர்களில் பெரும்பாலோர் யாழ்ப்பாணத்துக்கே சென்றுள் ளனர்.

'பதுளை பக்கம் தோட்டங்களை எல்லாம் எரித்து சாம்பலாகிக்கி மக்களைக் கொன்று குவித்துவிட்டார்கள். நீ யாழ்ப்பாணப் பக்கம் போய் பிழைத்துக்கொள்' என்றே பெரியவர்கள் இந்தச் சிறுவனுக்குப் புத்திமதி சொல்லி யுள்ளார்கள். சரி என பஸ் ஏறியவருக்கு ஏதோ ஒரு நெருடல். அம்மாவையும் சகோதரிகளையும் ஒருமுறை பார்த்து விடவேண்டும். அவர்கள் இல்லை என்றால் மாற்றி யோசிக் கலாம் என்ற எண்ணத்தில் யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்ட பஸ்ஸில் இருந்து இறங்கி ஓடி எப்படியோ புகையிரத நிலையத்தை அடைந்து பதுளை ரயிலில் ஏறியுள்ளார். தெமோதரை சுரங்க இருள் கடந்து புகையிரத நிலையத்தை அடைந்திருக்கிறது புகையிரதம். இறங்கி ஓட்டமும் நடையுமாக ஊர் போய் சேரந்துள்ளார். அங்கே அம்மாவும் சகோதரிகளும் 'எப்படியோ பிள்ளை வந்துவிடுவான்' என்ற ஏக்கத்தோடும் எதிர்பார்ப்போடும் காத்திருக்கிறார்கள். கண்ணீர் மல்க கட்டியணைத்து இருக்கிறார்கள்.

## தோட்டத் தொழிலாளியாக:

தலைநகரில் தட்டில் வடை விற்கும் தொழிலையும் கைவிட்டு ஊர் வந்து சேர்ந்தவருக்கு இருந்த ஒரே வழி தோட்டத்தில் 'பேர் பதிந்து' தொழிலாளியாவதுதான். அதனையே செய்தார். தேயிலை மலைகளில் புல்லு வெட்டுதல், அருகெடுத்தல். காணுவெட்டுதல் என ஆண்களுக்கு உரிய வேலைகளே சுப்பராயனின் அடுத்த பரம்பரைக்கும் வாய்த்திருக்கிறது. ஆனாலும் வேறு தொழில் தேடும் முயற்சிகளில் ஆர்வம் காட்டி வந்த நிலையில் ஊருக்கு தொலைவே ஒரு தேயிலைத் தோட்ட காரியாலயத்தில் அலுவலக உதவியாளர் வேலை கிடைத்துள்ளது.

## உதவி ஆசிரியராக:

தோட்ட அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்த காலத்தில் Plantation Schools Education Development Program (PSEDP) எனும் திட்டத்தில் ஆசிரியப் பணிக்கு விண்ணப்பிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தனது பள்ளிக்கூட நண்பனான கேசவன் பிரபாகரனின் தாயார் ஒரு ஆசிரியை. ராஜமாணிக்கத்தின் திறமை அறிந்தவர். தனது மகனுக்கும் அவரது நண்பரான ராஜமாணிக்கத்துக்கும் சேர்த்தே விண்ணப்பித்துள்ளார். இருவருக்கும் ஆசிரிய நியமனமும் கிடைத்திருக்கிறது. ரோபேரி-எலமுல்ல தமிழ் வித்தியாலயத்தில் 1988-ஆம் ஆண்டு ஆசிரியராக தொழில் தொடங்கியுள்ளார் ராஜமாணிக்கம். (பிரபாகரன் தற்போது பசறை தேசிய கல்லூரியின் அதிபர்)

## ஆசிரியராகவும் தற்காலிக அதிபராகவும்:

1943-ஆம் ஆண்டு இலங்கையில் இலவசக் கல்வி அறிமு கப்படுத்தப்பட்டபோதிலும், அந்த வாய்ப்பு மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்பது இலங்கையின் இலவசக் கல்வி வரலாற்றில் படிந் துள்ள ஒரு கறைபடிந்த அத்தியாயமாகும். 1972-ஆம் ஆண்டு முதல் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப் பேற்கத் தொடங்கிய பின்னரே இந்நிலை படிப்படியாக மாறத் தொடங்கியது. குறிப்பாக, 1980-களிலேயே மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகள் தோட்டப் பாடசாலை முறைமையிலிருந்து அரச பாடசாலை முறை மைக்குள் உள்வாங்கப்பட்டன.

இதனையடுத்து, பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென தனியான ஆசிரிய நியமனங்கள் (P.E.T.P.P.) வழங்கப்பட்டன. இந்நியமனங்களின் ஊடாகப் பணியில் இணைந்த ஆசிரி யர்கள், பல சந்தர்ப்பங்களில் அப்பாடசாலைகளின் அதிபர் பொறுப்பையும் ஏற்க வேண்டிய சூழல் உருவானது. இதற்குக் காரணம், அதற்கு முன்னர் இப்பாடசாலைகள் தோட்ட நிர்வா கங்களின் கீழேயே இயங்கியமையாகும். தோட்டத் துரை மார்களே பாடசாலைகளையும் நிர்வகித்து வந்தனர். அக்கா லத்தில் அவர்களின் கீழ் பணியாற்றிய ஆசிரியர்கள் 'மாஸ்டர்' என அழைக்கப்பட்டனர். இன்றும் மலையகப் பகுதி களில் ஆண் ஆசிரியர்களை 'மாஸ்டர்' என அழைக்கும் மரபு தொடர்வது, அந்த வரலாற்றின் ஒரு சமூக நினைவாகவே காணப்படுகிறது.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே 1988-ஆம் ஆண்டு எலமுல்ல பாடசாலையில் ஆசிரியராகப் பொறுப்பேற்ற ராஜ மாணிக்கம், ஆசிரியப் பணியுடன் அதிபர் பொறுப்பையும் ஏற்று செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின்னர், 1993-ஆம் ஆண்டு பதுளை, எல்ல, நிவ்பர்க் தமிழ் மகா வித் தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்படும் வரையில், சுமார் ஐந்து ஆண்டுகள் அப்பிரதேசத்திலுள்ள பல்வேறு பாடசா லைகளில் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் பெற்ற இட மாற்றங்களும், பல்வேறு பாடசாலைகளில் பணியாற்றிய அனுபவங்களும், பின்னாளில் நிவ்பர்க் தமிழ் மகா வித்தியா லயத்தை திறம்பட வழிநடத்துவதற்குத் தேவையான நிர்வாக மற்றும் கல்வி அனுபவங்களை அவருக்கு வழங்கின.

## பாடசாலையின் அதிபராகவும் தலைவராகவும்:

1929-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தோட்டப் பாடசாலையான 'நிவ்பர்க்' தமிழ் வித்தியாலயம் 1980-களுக்குப் பின் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு இருந்ததது. 1993-ஆம் ஆண்டு அந்தப் பாடசாலையில் ஓர் அதிபர் வெற்றிடம் ஏற்பட அங்கு ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் ராஜமாணிக்கம் பொறுப்பேற்கின்றார். 1993 தொடங்கி தொடர்ச்சியாக 33 ஆண்டுகள் அந்தப் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றி 2026 ஜுலை மாதம் பணி ஓய்வு பெற்றார். 33 ஆண்டுகள் ஓர் அரச பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றுவது என்பது இலகுவானதல்ல. அதற்கு அடிப்படையாக அமைந்ததே அவரது தலைமைத்துவ ஆற்றல்தான்.

## விளையாட்டுத்துறை:

அடிப்படையில் ஒரு கரப்பந்தாட்ட விளையாட்டு வீரரான ராஜமாணிக்கத்தின் முதல் ஆயுதமாகவும் அதுவே அமைந்ததது. மாணவர்களோடு களத்தில் இறங்கி கரப்பந்தாட்டம் விளையாடுவதும் அவர்களைப் பயிற்றுவிப்பதும் என மாணவர்களை வழிநடத்தியது மட்டுமல்லாமல் அந்தப் பிரதேச இளைஞர்களையும் அந்த விளையாட்டின்பால் ஈர்க்கச் செய்து சமூக உறவாடலையும் ஏற்படுத்தினார். தனியே பாடசாலைக்கு அதிபர் என்ற நிலையில் மாத்திரம் அல்லாது அந்த ஊருக்கு ஒரு தலைவனாக, வழிகாட்டியாக மாறினார். சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழும் அந்தப் பிரதேசத்தில் கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றுக்காக சென்றிருந்த சமயத்தில் 'தோட்டத்தில் இருந்து வந்தவர்களுக்கு என்ன கரப்பந்தாட்டம் தெரியும்' என ஒரு சிங்கள அதிகாரி ஏளனமாகப் பேசி இருக்கிறார். அதற்கு எதிராக குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாது கரப்பந்தாட்ட விளையாட்டில் 'ராசா' எனும் நாமத்தை தனக்கென உருவாக்கினார். இளைஞர்களுடன் மலையகத்தின் பல கரப்பந்தாட்ட போட்டிகளில் நிவ் பாரதி வளையாட்டுக் கழகத்துக்காக விளையாடினார். ஊவா மாகாண கரப்பந்தாட்ட சம்மேளனத்துக்கே தலைவராகத் தன்னை தெரிவு செய்யும் நிலைக்குக் கொண்டுவந்தார். நிவ்பேர்க் பாடசாலை மாணவர்கள் மாகாண மட்ட கரப்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி நிறையத் தடவைகள் வெற்றி பெற்றுள்ளனர். மாகாண அணிகளிலும் அங்கம் வகிக்கலாயினர். மாணவர்கள் மட்டுமல்லாது மாணவிகளும் இந்த விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். கரப்பந்தாட்டம் தவிர கடினப் பந்து கிரிக்கெட் பயிற்சியையும் வழங்கி மாணவர்களைத் தயார் செய்தார். பல போட்டிகளில் வென்று மாணவர்கள் சாதனை படைத்தனர்.

## கலை இலக்கியத்துறை:

விளையாட்டுத்துறை ஒர் ஆயுதம் என்றால் கலை இலக்கியத் துறையை இன்னமொரு ஆயுதமாக எடுத்து மாணவர்களை ஊக்கப்படுத்தினார். 'குறிஞ்சிப்பேரவை' எனும் இலக்கிய அமைப்பை நிறுவி பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் இலக்கிய இயக்கத்தைக் கட்டியெழுப்பினார். முன்னோடி இலக்கியவாதிகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார். கவிஞர் சக்தீ பால ஐயா தெளிவத்தை ஜோசப் அல் அஸுமத் போன்ற மூத்த எழுத்தாளர்களை அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்தினார். 'தாகம்' எனும் சஞ்சிகையை வெளியிட்டார். தேமோதர பிரதேச கவிஞரான மு. துரைசாமியின் கவிதைகளைத் தொகுத்து 'நாளெந்த நாளோ' எனும் கவிதைத் தொகுதியை வெளியிட்டார். அவ்வப்போது கலை இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தியதுடன் கடந்த ஆண்டு தெளிவத்தை ஜோசப் மூன்றாம் ஆண்டு நினைவேந்தலையும் தெளிவத்தை நினைவு விருது வழங்கலையும் குறிஞ்சிப்பேரவை ஒழுங்கு செய்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழித்தின போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் பல எல்லைகளைத் தொட்டனர்.

## சமூகப் பண்பாட்டு அடையாளங்கள்:

பாடசாலை மண்டபங்களுக்கு கோ. நடேசய்யர் மண்டபம், சி.வி. வேலுப்பிள்ளை மண்டபம், சிவனு லட்சுமணன் மண்டபம் என மலையகப் பாரம்பரியத்தை எடுத்தியம்பும் பெயர்களைச் சூட்டினார். இந்தப் பெயர்களை வாசித்தபடி பாடசாலை சூழலில் நடப்பது ஒரு பரவசத்தை ஏற்படுத்தும். வகுப்பறை சுவர்களில் கார்ல் மார்க்கஸ் முதல் சுவாமி விபுலானந்தர் வரை வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மலையகம் எனும் உணர்வை, அது கட்டியெழுப்பப்படவேண்டிய வகிபாகத்தை பாடசாலை சுவர்கள் அலங்கரித்து நிற்கின்றன. நாட்டின் பிற பாகங்களிலும் வெளிநாடுகளிலும் இருந்து வரும் ஆளுமைகளை அழைத்து மாணவர்களுடன் ஊடாடச் செய்வது, உரைகளை வழங்குவதை வழக்கமாகக் கொண்டார்.

## கல்வி முன்னேற்றம்:

இணைப்பாடவிதானங்கள் வழியாக மாணவர்களை ஒருங்கிணைத்து பிரதான அங்கமான கல்வித்திசை நோக்கி மாணவர்களை நகர்த்தி பாடசாலையின் கல்வி பெறுபேறுகளை உயர்த்தினார். தரம் 5, சாதாரண தரம், உயர்தரம் என வகுப்புகள் விரிவடைந்தன. கிடைக்கக்கூடிய வளங்களைக்கொண்டு கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தி ஆண்டுதோறும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. கலைத்துறை, வணிகத்துறை, தொழினுட்பத்துறை என உயர் தர வகுப்புகள் உருவாகின. தான் சாதாரண தரம் வரை கற்றவராயினும் தானாக உயர்தர பாடப்பரப்புகளைக் கற்று உயர்தர மாணவர்களுக்கு தமிழும் அரசறிவியலும் கற்பிக்கும் ஆசிரியருமானார். அருகமைந்த பாடசாலைகளுக்கு உயர்தர விஞ்ஞான பிரிவுக்கு மாணவர்களை அதிகளவு அனுப்பும் பாடசாலையாகவும் நிவ்பேர்க் பாடசாலை மாறியது.

## தேசிய மட்ட அங்கீகாரம்:

கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு எனப் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய இத்தோட்டப் பாடசா லையின் கல்விச் சூழலில் ஒழுக்கமும் முறையான முகா மைத்துவமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பாடசாலை வளாகத்திற்குள் மாணவர்கள் நடந்து செல்லும் முறை தொடக்கம், அன்றாட ஒழுக்காற்று நடைமுறைகள் வரை அனைத்தும் ஜப்பானிய முகாமைத்துவ நுட்பமான 5S முறையின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் பாடசாலையில் தூய்மை, ஒழுங்கு, பொறுப்பு ணர்வு, நேர்த்தி ஆகிய பண்புகள் மாணவர்களிடத்திலும் பணியாளர்களிடத்திலும் வளர்க்கப்பட்டன. இந்த முறையான முகாமைத்துவத்தின் சிறந்த வெளிப்பாடாக, நிவ்பர்க் தமிழ் மகா வித்தியாலயம் தேசிய மட்ட உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றி, அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தது. இதன் மூலம் பாடசாலை கல்விச் சாதனைகளில் மட்டுமன்றி, சிறந்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திலும் தேசிய அளவில்

தன்னுடைய திறனைப் பதிவு செய்து, விருதுகளையும் பெற்றது.

## அரசியல் பங்கேற்பு:

அரசாங்க பாடசாலை ஆசிரியராக, அதிபராக செயற்பட்ட வண்ணமே அரசியலிலும் கால்பதித்த ராஜமாணிக்கம் எல்ல பிரதேச சபையின் உறுப்பினராகத் தெரிவாகி உபதலைவராகவும் செயற்படலானார். 2010-ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட்டு சில நூறு வாக்கு வித்தியாசத்தில் ஊவா மாகாண சபை உறுப்பினராகும் வாய்ப்பை இழந்தார். ஆனாலும் அரசியல் தொழிற்சங்கக் களத்தில் தொடர்ந்து இயங்கி மாவட்டத்தின் பல அபிவிருத்திப் பணிகளுக்குப் பங்களிப்பு செய்தார். நிவ்பர்க் பிரதேசத்தில் 'சுப்பையாபுரம்' எனும் மலையக புதிய கிராமம் உருவாகவும் மீரிபெத்த மண் சரிவில் பாதிப்புற்ற மக்களுக்கு 'மக்கல் தெணிய'வில் வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கவும் பங்களிப்பு செய்தார்.

## குடும்பத் தலைவனாகவும் தந்தையாகவும்:

ஆசிரியராகவும் அதிபராகவும் தனது சமூகப் பணிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த அதேவேளை, குடும்பப் பொறுப்புகளையும் திறம்பட வழிநடத்தியவர் ராஜமாணிக்கம். ஆசிரியரான தனது துணைவியாருடன் இணைந்து, கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் முன்னுரிமை அளித்த அழகிய குடும்பத்தை உருவாக்கியதோடு, வெற்றிகரமான பெற்றோராகவும் திகழ்ந்துள்ளனர். அவர்களது மூத்த மகள் விஞ்ஞானத் துறையில் மேற்படிப்பைத் தொடர்வதற்காகப் புலமைப்பரிசில் பெற்று ஐக்கிய அமெரிக்காவிற்குச் சென்றுள்ளார். இரண்டாவது மகள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்று, தற்போது அவுஸ்திரேலியாவில் திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார். மூன்றாவது பிள்ளையான மகன், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தில் இறுதியாண்டு மாணவராகக் கல்வி பயின்று வருகிறார். ஒருபுறம் பாடசாலை, மறுபுறம் சமூகப் பணி எனப் பல்வேறு பொறுப்புகளைச் சுமந்தபோதும், தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்திற்கும் உரிய வழிகாட்டுதலை வழங்கியிருப்பது, ராஜமாணிக்கம் - அவரது துணைவியார் தம்பதியரின் குடும்பப் பொறுப்புணர்வையும் கல்வி மீதான ஆழ்ந்த நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது. சமூகத்திற்காக ஒரு தலைமுறையை உருவாக்கியதோடு, தமது குடும்பத்திலும் கல்வியறிவும் திறமையும் கொண்ட அடுத்த தலைமுறையை உருவாக்கியிருப்பது அவர்களின் வாழ்வின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

## பணி ஓய்வு:

இத்தகைய பின்னணியுடன், 33 ஆண்டுகால ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளில் நிவ்பேர்க் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் ராஜமாணிக்கத்துக்குச் சிறப்பான பிரியாவிடை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவரது நீண்டகால கல்விப் பணியுடன் இணைந்திருந்த விளையாட்டுத்துறைப் பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில் சிறப்பு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. பாடசாலை மைதானத்தின் மத்தியில் பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடி அவரைக் கௌரவித்தனர்.

பிரியாவிடை விழா நாளன்று நமுனகுல நகரிலிருந்து வாகனப் பேரணியாக அதிபர் ராஜமாணிக்கம் அழைத்துவரப்பட்டார். மாகாண, வலய, கோட்ட மட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட கல்வித்துறை அதிகாரிகள் விழாவில் பிரசன்னமாகியிருந்தனர். பெற்றோரும் பெருமளவில் ஒன்றுகூடி தங்கள் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்தினர். அவர் வழிகாட்டிய பல்வேறு ஆண்டுகளைச் சேர்ந்த பழைய மாணவர்கள், தங்களது ஆசிரியருக்கும் அதிபருக்கும் நன்றி செலுத்துவதற்காக நூற்றுக்கணக்கில் திரண்டிருந்தனர். அவர்களில் 200-க்கும் மேற்பட்டோர் அரச உத்தியோகத்தர்கள். அதிபர்கள், ஆசிரியர்கள், வணிகத்துறையினர் எனப் பல்வேறு துறைகளில் பணியாற்றுவோர் அங்கு இடம்பெற்றிருந்தனர்.

அவரது மாணவர்கள் பொன்னாடைகள் போர்த்தியும், பூமாலைகள் அணிவித்தும், வாழ்த்து மடல்கள் வழங்கியும் தங்கள் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்தினர். அதற்கும் மேலாக, தங்களது அதிபருக்கு தங்க மோதிரம் அணிவித்து மகிழ்ந்தனர். 33 ஆண்டுகளாக தங்களையும் தங்கள் ஊரையும் சுற்றிச் சுற்றி, அவர்களின் கல்வி மற்றும் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக உழைத்த அதிபர் ராஜமாணிக்கம் இனியாவது தமது வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், '33 ஆண்டுகளாக எங்களையும் இந்த ஊரையுமே சுற்றிவந்து எங்களை வாழ வைத்துள்ளீர்கள். இனியாவது நீங்கள் உலகத்தைச் சுற்றி வாருங்கள்' எனக் கூறி, ராஜமாணிக்கம் தம்பதியருக்காக வெளிநாட்டுப் பயணங்களையும் ஏற்பாடு செய்து கொடுத்தனர். ஒரு ஆசிரியரின் பணி ஓய்வு என்பது அவரது பணிக்காலத்தின் முடிவாக இருக்கலாம்; ஆனால், அவர் உருவாக்கிய மாணவர்களின் வாழ்வில் அவரது பயணம் ஒருபோதும் முடிவதில்லை என்பதற்கு ராஜமாணிக்கத்தின் பிரியாவிடை விழா ஓர் அழகிய சான்றாக அமைந்தது.

மலையக வரலாற்றில், ஒரு தோட்டத் தொழிலாளியாகத் தனது பணிவாழ்வைத் தொடங்கிய ஒருவர், அதே சமூகத்தின் கல்வி நிறுவனமொன்றை அரச பாடசாலையாக மாற்றிய பின்னர், அதனை தேசிய மட்டத்தில் சிறந்த நிர்வாக முகாமைத்துவத்திற்கான விருதைப் பெறும் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார் என்பது சாதாரண சாதனையல்ல. ராஜமாணிக்கம் என்ற ஆளுமையின் வாழ்க்கைப் பயணம், தனிமனித வெற்றியின் கதை மட்டுமல்ல; அது மலையகத் தொழிலாளர் சமூகத்தின் ஆற்றலையும், கல்வியின் மூலம் உருவாகக்கூடிய சமூக மாற்றத்தையும் உலகறியச் செய்யும் வரலாற்றுப் பதிவாகும்.

அவரது பணி ஓய்வு வருங்காலச் சந்ததியினருக்குப் பல முக்கியமான செய்திகளைச் சொல்லிச் செல்கிறது. குறிப்பாக, தோட்டத் தொழிலாளர் சமூகத்தினருக்கு அது நம்பிக்கையூட்டும் ஒரு முன்னுதாரணமாக அமைகிறது. நாம் தொழிலாளர்களாகப் பிறந்தது நமது வாழ்க்கையின் இறுதி அடையாளமல்ல; அது ஒரு வரலாற்றுச் சூழலால் உருவான நிலை மட்டுமே. கல்வியையும், முயற்சியையும், அர்ப்பணிப்பையும்

துணையாகக் கொண்டு முன்னேறினால், சமூகத்தின் எந்த உயரத்தையும் எட்ட முடியும். ஏன், ஒரு தலைமுறையினரின் அர்ப்பணிப்பும் தொடர்ச்சியான முயற்சியும் இருந்தால், தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துவரும் அவல வாழ்வுமுறையையே மாற்றியமைக்க முடியும். அதற்குத் தேவையானது வாய்ப்புக்காகக் காத்திருப்பது மட்டுமல்ல; கிடைக்கும் வாய்ப்பை மாற்றத்திற்கான கருவியாக்கும் அர்ப் பணிப்பும் விடாமுயற்சியுமே ஆகும். எனவே, ராஜமாணிக் கத்தின் வாழ்க்கையும் பணி ஓய்வும் ஒரு தனிமனிதரின் பணிக்கால நிறைவாக மட்டும் பார்க்கப்படக் கூடாது. 'தோட்டத் தொழிலாளியின் மகனும் தலைமை தாங்க முடியும்; ஒரு தொழிலாளியாகத் தொடங்கியவரும் ஒரு கல்வி நிறுவனத்தை தேசிய மட்டத்திற்கு உயர்த்த முடியும்' என்ற நம்பிக்கையை மலையகத்தின் ஒவ்வொரு தலைமுறை யினரிடமும் விதைக்கும் வரலாற்றுச் செய்தியாகவே அது வாசிக்கப்பட வேண்டும்.

## நிறைவாக:

இலங்கையின் சுற்றுலாத் துறையில் இன்று இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ள ஊராக 'எல்ல' விளங்குகிறது. அழகிய சிறிய சிவனொளிபாதமலை, இதமான சுத்தமான காற்று, தெமோதர புகையிரத நிலையம், புகழ்பெற்ற ஒன்பது வளைவுப் பாலம் (Nine Arch Bridge) என இயற்கையும் மனிதப் படைப்பாற்றலும் இணைந்து உருவாக்கிய பல்வேறு காட்சிகள் எல்லையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டு கின்றன. இத்தகைய சிறப்புகளின் வரிசையில், இப்பிரதே சத்தின் வரலாற்றுச் சுவடுகளையும் கல்விப் பாரம்பரியத் தையும் தாங்கி நிற்கும் நிவ்பேர்க் பாடசாலையையும் இணைத்துக்கொள்ளலாம். இந்த வரலாற்றுப் பயணத்தின் மற்றுமொரு சுவையான தொடர்ச்சியாக, அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவரே இன்று அதே பாடசாலையின் அதிப ராகப் பொறுப்பேற்று வந்திருப்பது அமைகிறது. ஒரு காலத்தில் மாணவனாகப் பள்ளி வளாகத்தில் பயின்றவர், காலத்தின் சுழற்சியில் மீண்டும் அதே கல்விக்கூடத்திற்குத் தலைமை தாங்கும் நிலைக்கு வந்திருப்பது, அந்தப் பாடசா லையின் வரலாற்றுக்கும் அதன் கல்விப் பாரம்பரியத்திற்கும் கிடைத்த ஒரு நிறைவான அங்கீகாரமாகவே கொள்ளலாம்.



thilagar@thaiveedu.com



# ஈழத்து அரசியல் எதிர்ப்புக் கவிதை மரபும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமானும்:

## ஒரு நவீனத்துவ - அமைப்பியலாய்வு

ஈழக்கவி



prasadbatti@gmail.com

### வரலாற்று வெளியும் கவித்துவ எதிர்வினையும்:

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில், வன்முறையும் அரச பயங்கரவாதமும் சமூகப் பிரக்ஞையின் மீது நிகழ்த்திய ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான படைப்புச் செயற்பாடுகள் மிக முக்கியமான வரலாற்றுச் சாட்சியங்களாகும். 1970-களின் பிற்பகுதியில் உருப்பெற்ற இன முரண்பாடுகளும் அடக்குமுறைகளும் தமிழ் இலக்கியத்தின் அழகியல் எல்லைகளை மறுவரையறை செய்தன. இக்காலகட்டத்தில், பாரம்பரிய உணர்ச்சிசார் பாடல் தன்மையிலிருந்து விலகி, அப்பட்டமான வரலாற்று நிதர்சனத்தையும் அரசியல் கூர்மையையும் கவிதையின் களமாகக் கொண்டுவந்த முன்னோடிகளுள் முதன்மையானவர் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் ஆவார்.

அரசியல் எதிர்ப்புக் கவிதை (Political Protest Poetry) என்பதை வெறும் கோஷமாகவோ அல்லது அரசியல் பிரச்சாரமாகவோ சுருக்கிவிடாமல், நவீன கவித்துவத்தின் வடிவத் தெளிவு, மொழிக் கச்சிதம், மற்றும் ஸ்தூலமான குறியீடுகள் வழியே சர்வதேசத் தரத்திலான இலக்கியப் பிரதிகளாக உயர்த்திய பெருமை நுஃமானுக்குரியது. இக்கட்டுரை, நுஃமானின் கவித்துவப் பங்களிப்பை - குறிப்பான அவரது ‘நேற்றைய மாலையும் இன்றைய காலையும்’, ‘துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்’, ‘புத்தரின் படுகொலை’ ஆகிய கவிதைகளையும், ‘துப்பாக்கிக்கு மூளை இல்லை’ தொகுதி மற்றும் ‘பலஸ்தீனக் கவிதைகள்’ மொழியாக்கத்தையும் - அமைப்பியல், அரசியல் அழகியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதக் கோட்பாடுகளின் பின்னணியில் ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

### எதிர்ப்புக் கவிதையின் ஆதிப்புள்ளியும் வடிவமாற்றமும் உள்ளடக்கமும்:

1977 டிசம்பர் ‘அலை’ (இதழ் 10, பக். 239 - 241) இல் வெளிவந்த நுஃமானின் இரு கவிதைகள் - ‘நேற்றைய மாலையும் இன்றைய காலையும்’ மற்றும் ‘துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்’ - ஈழத்துப் போர்க்காலக் கவிதை வரலாற்றின் பிரிகோடாகவும் ஆதிப்புள்ளியாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றன. 1977-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அரசுக் காவலர்களால் நிகழ்த்தப்பட்ட வன்முறைக்கு உடனடி எதிர்வினையாக எழுதப்பட்ட இக்கவிதைகள், பின்னாளில் வந்த நூற்றுக்கணக்கான போர்க்காலக் கவிதைகளுக்கு அருட்டுணர்வாகவும் (Impulse) வடிவ மாதிரியாகவும் அமைந்தன.

‘நேற்றைய மாலையும் இன்றைய காலையும்’ என்ற இக்கவிதை ஈரடுக்கு அமைப்பைக் கொண்டது. முதலாவது பகுதி (நேற்று மாலை) அமைதியான, அன்றாட யதார்த்த வாழ்வை அமைதியாகக் காட்சிப்படுத்துகிறது. சனங்கள் நிறைந்த யாழ் தெரு, பூபாலசிங்கம் புத்தக நிலையம், பஸ் நிலையம், பண்ணை வெளி, ‘றீகல்’ திரையரங்கில் ஜாக் லண்டனின் ‘வனத்தின் அழைப்பு’ திரைப்படம் பார்த்தல், தேனீர் அருந்துதல் என ஒரு தனிமனிதரின் நேற்றைய வாழ்வில் நடந்த ஸ்தூலக் காட்சிகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

> *பேராசிரியர் எம்.ஏ. நுஃமானின் அரசியல் எதிர்ப்புக் கவிதைகள், ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய அழகியல் அலையைத் தோற்றுவித்தன. உணர்ச்சிவசப்பட்ட கோஜங்களாகவும், பிரசார நெடி அடிக்கும் வரிகளாகவும் வீழ்ந்துவிடக்கூடிய அரசியல் கவிதையை, வடிவத் தெளிவு, மொழிக் சிக்கனம், ஆழமான உருவகங்கள் மற்றும் உலகளாவிய மானுடப் பிரக்ஞை ஆகியவற்றின் வழியே சர்வதேசத் தரத்திலான கவித்துவ உச்சத்திற்குக் கொண்டு சென்றார்.*

கவிதையில் மொழிக் கச்சிதமாகத் துலங்குகிறது. நுஃமான் ஆடம்பரமான அணிகளையோ, செயற்கையான எதுகை மோனைகளையோ பயன்படுத்துவதில்லை. அன்றாட புழங்கு மொழியிலேயே சூழலைக் கட்டமைக்கிறார்.

இரண்டாவது பகுதி (இன்று காலை) அந்த அமைதியான வாழ்வு திடீரென வன்முறையால் சிதைக்கப்படுவதைப் படம் பிடிக்கிறது:

*'நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்*
*காக்கி உடையில் துவக்குகள் திரிந்தன*
*குண்டுகள் பொழிந்தன...*
*பஸ்நிலையம் மரணித் திருந்தது.*
*மனித வாடையை நகரம் இழந்தது.'*

இங்கே மனிதர்கள் மறைந்து 'துவக்குகள் திரிவதாக' உருவ கிக்கப்படுவது, இராணுவமயமாக்கலின் மூலம் மனித ஆளுமை அழிக்கப்பட்டு, ஆயுதம் மட்டுமே முதன்மைப் பொருளாக மாறும் அவலத்தை இக்கவிதை புலப்படுத்து கிறது. 'மனித வாடையை நகரம் இழந்தது' என்ற வரி, வெறுமனே கட்டிடங்கள் இடிந்ததை மட்டுமல்லாமல், நாகரி கத்தினதும் கூட்டு வாழ்வினதும் அழிவையே குறிக்கிறது.

முதலாவது கவிதை அவலத்தைப் பதிவுசெய்ய, 'துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்' என்ற கவிதை அடக்குமு றைக்கு எதிரான வெளிப்படையான அரசியல் கேள்வியாக உருவெடுக்கிறது:

*'உத்தரவாதம் அற்ற வாழ்க்கையே*
*மனிதனின் விதியா?*
*அடக்கு முறைக்கு அடிபணிவதே*
*அரசியல் அறமா?*
*அதை நாம் எதிர்ப்போம்!'*

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் குறிப்பிடுவது போல, கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் எழுதப் பட்ட பெரும்பாலான போர்க்காலக் கவிதைகள், இவ்விரு கவிதைகளின் உருவ மற்றும் உள்ளடக்க ரீதியிலான வெவ்வேறு வடிவங்களே ஆகும். 1985-இல் வெளிவந்த 'மர ணத்துள் வாழ்வோம்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கவிதைத் தொகுதிக்கு விதைகள் இங்கிருந்தே தூவப் பட்டன.

ஈழத்துப் போராட்டச் சூழலிலும் தமிழ் இலக்கியப் பரப்பிலும் சர்வதேச அரசியல் பிரக்ஞையை விதைத்ததில் நுஃமான் மொழிபெயர்த்த 'பலஸ்தீனக் கவிதைகள்' தொகுதிக்கு மிகப் பெரிய பங்குண்டு. இலக்கியம் என்பது வரலாற்றின் விளைவு மட்டுமல்ல, அது வரலாற்றை உருவாக்கும் வினை யூக்கியும்கூட என்ற வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கோட் பாட்டை இச்சூழல் உறுதிப்படுத்துகிறது. இது குறித்துப் மூத்த தமிழியல் அறிஞர் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பி டுவதாவது:

'இலக்கியம் என்பது வரலாற்றின் சிசு என்பது எத்துணை உண்மையோ அத்துணை உண்மை 'இலக்கியமும் வரலாற்றை உருவாக்குவது' என்பதாகும். அதாவது இப் புதிய புலப்பதிவுகளுக்குக் காலாகவிருந்த இலக்கியங்கள் யாவை? இளைஞரியக்கம் மீதிருந்த இலக்கியச் செல்வாக் குகள் யாவை? இந்த இளைஞர்கள் யார் யாரை வாசித் தார்கள், யார் யார் எழுதிய எவ்வெவ்விலக்கியங்கள் அவர்க ளுக்கான தூண்டுதல்கள், உந்துதல்களாக அமைந்தன என்பதும் முக்கியமான ஒரு வினாவாகும். இது சம்பந்தமாக, எனக்குத் தெரிந்த அளவில், போராளிகள் மீது கவிதை ஏற்ப டுத்திய தாக்கம் மிகப் பெரியது என்றே கருதுகின்றேன். நுஃமான் மொழிபெயர்த்த 'பாலஸ்தீனக் கவிதைகள்' தொகுதி முக்கிய செல்வாக்கு ஊற்றுக்களில் ஒன்றாகும்.' ('ஈழத்து தமிழிலக்கியத் தடம்', 2000:42)

மஹ்மூத் தர்வீஷ், சமீஹ் அல் காசிம் போன்ற பலஸ்தீனக் கவிஞர்களின் எதிர்ப்புக் குரல்கள், நுஃமானின் நேர்த்தியான மொழியாக்கம் வழியே ஈழத்து இளைஞர்களுக்கும் கவிஞர்க ளுக்கும் தங்கள் சொந்த மண்ணின் துயரத்தையும் போராட் டத்தையும் உலகளாவிய விடுதலை அரசியலோடு இணைத்துப் பார்க்கும் கோட்பாட்டுப் பார்வையை வழங்கின.

1981 மே / ஜூன் மாதத்தில் தென்னாசியாவின் அறிவுப் பொக்கிஷமான யாழ் பொது நூலகம் சிங்கள இனவாத அரசப் படைகளால் தீக்கிரையாக்கப்பட்ட பேரவலத்தின் மீது எழுதப்பட்ட 'புத்தரின் படுகொலை', ஈழத்து இலக்கிய வர லாற்றின் மிக முக்கியமான திருப்புமுனைப் பிரதியாகும் (Landmark Text). பேராசிரியர் சி. மௌனகுரு இதனை 'ஒரு காத்திரமான கவிதை' என்றும், முல்லை முஸ்ரிபா 'தமிழ்க்க விதையின் இன்னுமொரு மீட்சி' என்றும், பேராசிரியர் கா. சிவத்தம்பி 'நூல்நிலைய எரிப்புப் பற்றி அமரத்துவம் பெற்ற படைப்பு' (ஈழத்து தமிழிலக்கியத் தடம், 2000:72) என்றும் கணிப்பர்.

அத்துடன், 1970 ஜூனில் 'மல்லிகை' இதழில் நுஃமான் எழுதிய 'விடிவை நோக்கி' நெடுங்கவிதையில் வெளிப்பட்ட சாதியெதிர்ப்புப் படிமங்களின் வன்மையிலிருந்து, 1980-க்குப் பிந்தைய 'புத்தரின் படுகொலை' கவிதை எவ்வாறு கூர்மையான அரசெதிர்ப்புப் படிமமாக உருமாறியது என்பதை எழுத்தாளர் முருகபூபதியும் சுட்டிக்காட்டியுள்ளார். இக்கவிதை ஒரு கனவின் சித்தரிப்பாகத் தொடங்குகிறது:

*'நேற்று என் கனவில்*
*புத்தர் பெருமான்*
*சுடப்பட்டிருந்தார்.*
*சிவில் உடை அணிந்த*
*அரச காவலர் அவரைக் கொன்றனர்...*
*யாழ் நூலகத்தின்*
*படிக்கட்டருகே*
*அவரது சடலம்*
*குருதியில் கிடந்தது...!'*

இங்கே நுஃமான் உருவாக்கும் படிமம் மிக ஆழமானது. பௌத்த பேரினவாதத்தின் பெயரால் நிகழ்த்தப்பட்ட ஒரு கலாசாரப் படுகொலையை (Cultural Genocide), பௌத்தத்தின் நிறுவுனரான புத்தருக்கே நிகழும் படுகொலையாக மாற்றுவதன் மூலம், அரச வன்முறையின் முரண்பாட்டை (Irony) அம்பலப்படுத்துகிறார்.

அமைச்சர்கள் இரவில் வந்து 'எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லையே, ஏன் கொன்றீர்?' எனக் கேட்கும்போது, காவலர்கள் கூறும் பதில் பாசிசத்தின் உச்சகட்டத் தர்க்க வெளிப்பாடாகும்.

*'இல்லை ஐயா,*
*தவறுகள் எதுவும் நிகழவே இல்லை*
*இவரைச் சுடாமல்*
*ஓர் ஈயினைக் கூடச்*
*சுடமுடியாது போயிற்று எம்மால்*
*ஆகையினால்...'*

சிங்கள எழுத்தாளர் காமினி வியங்கொட விவரிப்பது போல, புத்தரின் முதன்மை அறம் 'அகிம்சை' (கொல்லாமை). அன்பு செலுத்துதலையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட புத்த தர்மத்தை அழித்தால் மட்டுமே, ஒரு அரசால் தன் சொந்தக் குடிமக்கள் மீது கொலைவெறித் தாக்குதலை நடத்த முடியும். வரலாற்றுரீதியாக, 6-ஆம் நூற்றாண்டில் மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரர் Gautama Buddha-வை ஒரு யுத்தம் சார்ந்த புத்தராக மாற்றியமைத்ததன் தொடர்ச்சியையே 1981 நூலக எரிப்பு வெளிப்படுத்தியது.

*'தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்*
*புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்*
*சிகாலோகவாத சூத்திரத்தினைக்*
*கொழுத்தி எரித்தனர்.*
*புத்தரின் சடலம் அஸ்தியானது*
*தம்ம பதமும்தான் சாம்பரானது.'*

நூலகத்தில் எரிந்த தொண்ணூறாயிரம் புத்தகங்களும் வெறுமனே காகிதங்கள் அல்ல; அவை 'சிகாலோகவாத சூத்திரம்' (இல்லறத்தோருக்கான சமூக அறம்) மற்றும் 'தம்ம பதம்' (புத்தரின் போதனைகள்). நூலகத்தை எரித்ததன் மூலம் சிங்கள பேரினவாதம் புத்தரின் மெய்யியலையே சாம்பலாக்கிவிட்டது என்பதை இக்கவிதை நுட்பமாக நிறுவுகிறது.

நுஃமானின் அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் உச்சகட்ட முதிர்ச்சியை அவரது 'துப்பாக்கிக்கு மூளை இல்லை' என்ற தொகுதி வெளிப்படுத்துகிறது. இத்தொகுப்பு, குறுகிய தேசியவாத எல்லைகளையோ, மத-மொழி அடையாளங்களையோ கடந்து, அனைத்து விதமான வன்முறைகளுக்கும் போருக்கும் எதிரான சாசுவதமான மானுடக் குரலை (Universal Humanist Voice) முன்னிறுத்துகிறது.

இக்கவிதைகள் எந்தவொரு குறிப்பிட்ட ஆயுதக் குழுவின் அல்லது அரசின் தரப்பு நியாயங்களையும் பேசாமல், துப்பாக்கியின் அரசியலையே நிராகரிக்கின்றன. 'போரில் வெற்றி பெறுபவர் எவருமில்லை' என்ற வரலாற்று உண்மையை உரத்துச் சொல்கின்றன.

நுஃமானின் இக்கவிதைகள் எளிமையும் சோடனையற்ற தன்மையும் கொண்டவை. திறனாய்வாளர் 'தங்கம்' குறிப்பிடுவது போல, நுஃமானின் கவிதைகளில் செயற்கையான அலங்காரங்களோ, அகராதியைத் தேட வைக்கும் கடினச் சொற்களோ இல்லை. நாளாந்த புழங்கு மொழியைக் கொண்டே பேரதிர்ச்சியை உருவாக்கும் கச்சிதமான கட்டமைப்பு இவருடையது.

2009 போருக்குப் பிந்தைய இளஞ்சந்ததியினருக்கு, இலங்கைத் தமிழ்ச் சமூகம் கடந்துவந்த வலிமிகுந்த வரலாற்றையும் உரிமையியல் போராட்டத்தையும் கடத்தும் முதன்மையான 'காலத்தின் சாட்சியாக' (Testimony of History) இத்தொகுதி விளங்குகிறது.

பேராசிரியர் எம்.ஏ. நுஃமானின் அரசியல் எதிர்ப்புக் கவிதைகள், ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய அழகியல் அலையைத் தோற்றுவித்தன. உணர்ச்சிவசப்பட்ட கோஷங்களாகவும், பிரசார நெடி அடிக்கும் வரிகளாகவும் வீழ்ந்துவிடக்கூடிய அரசியல் கவிதையை, வடிவத் தெளிவு, மொழிக் சிக்கனம், ஆழமான உருவகங்கள் மற்றும் உலகளாவிய மானுடப் பிரக்ஞை ஆகியவற்றின் வழியே சர்வதேசத் தரத்திலான கவித்துவ உச்சத்திற்குக் கொண்டு சென்றார்.

அவரது கவிதைகள் வெறும் கடந்தகாலப் பதிவுகளாக மட்டுமன்றி, அதிகார ஒடுக்குமுறை, வன்முறைச் செயற்பாடுகள், மனித உரிமை மறுப்புகள் ஆகியவற்றுக்கு எதிரான குரலாகவும் ஒலித்தன. ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும் உரிமைக்கான ஏக்கங்களையும் வெளிப்படுத்திய இக்கவிதைகள், காலங்கடந்த சாட்சியங்களாகவும் விளங்குகின்றன.



eelakavi@thaiveedu.com

இக்பால் அலி

# பல்துறை அறிவின் தமிழ்த் தடம்: பேராசிரியர் சபா. ஜெயராசா



ஈழத்தில் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் தனது கல்விப்புலப் பதிவுகளையும் இலக்கியப் பதிவுகளையும் ஆழமாகவும் ஆணித்தரமாகவும் நிலைநிறுத்தி வருபவர் பேராசிரியர் சபா. ஜெயராசா. நீண்ட காலமாகக் கல்விப்புலத்திலும் படைப்பிலக்கியத் துறையிலும் கால் பதித்து, புதுமையும் பொலிவும் குன்றாமல் உயிர்ப்புள்ள புத்தாக்க நூல்களைத் தொடர்ந்து எழுதிவருவது எளிதான காரியமன்று. முதுமையையும் பொருட்படுத்தாது இன்றும் தொடர்ந்து இயங்கிவரும் அவரது அறிவுப்பணி, அவரை காலத்தை வென்ற கல்விமானாகவும், ஆய்வறிஞராகவும், படைப்பிலக்கியவாதியாகவும் பல்வேறு பன்முகப் பரிமாணங்களுடன் நிலைநிறுத்துகிறது.

அவர் ஆக்கித் தந்துள்ள நூல்கள் ஒவ்வொன்றும் ஈழத்தின் கல்விப்புலத்திலும் இலக்கியத்திலும் புதிய சிந்தனைகளையும் பார்வைகளையும் உருவாக்கக்கூடியவை. எனவே, அவரது படைப்புகளைப் பாதுகாத்துப் பத்திரப்படுத்துவதும், அவற்றை அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்வதும் நம் அனைவரினதும் அறப்பொறுப்பாகும். அவரது அறிவுப் பங்களிப்புகள் ஈழத்தின் கல்வி மற்றும் இலக்கிய வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தை உரிய முறையில் பதிவு செய்வதும் காலத்தின் தேவையாகும்.

ஈழத்துப் புதுக்கவிதை இலக்கியத்தின் சுவையின்பங்களில் ஊஞ்சலாடவும், குழந்தை உளவியலின் மகிமைகளில் ஊறித் திளைக்கவும், மார்க்சிய மற்றும் நவமார்க்சியச் சிந்தனைகளோடு கலந்து மிதக்கவும், பின்நவீனத்துவப் புலன்விசாரணையில் மூழ்கவும், கோட்பாட்டு வடிவங்களின் எழுச்சிகளில் ஆர்ப்பரிக்கவும், திறனாய்வுக் கலை இலக்கியத்தின் விருந்துகளில் பசியாறவும், கல்விப்புலமையின் வாசல்களில் மின்னொளி பாய்ச்சவும் அவரது எழுத்துக்கள் கலைத்துவ வெளிப்பாடுகளாகவும், வலுக்குன்றாத படைப்பாற்றலுடனும், ஜனரஞ்சகத் தன்மையுடனும் மேலெழுந்து நிற்கின்றன.

இவரது ஒவ்வொரு படைப்பிலும் உயிர்ப்புணர்வும், யதார்த்தத்தை உள்வாங்கிய பார்வையும் ஆழமாகப் பதிவாகியுள்ளன. மார்க்சியப் பார்வைகள், நோக்குகள், கல்விப் பின்புலங்கள், சமூகச் சித்திரிப்புகள், கல்வி அழகியல் கூறுகள், நுண்கலைப் பரிமாணங்கள் எனப் அவரது எழுத்து விரிந்து செல்கிறது. இவ்வனைத்துத் றுத்துச் செல்லும் பொதுவான ஆற்றலாகத் தமிழ் வளமும் விளங்குகின்றன. அதன் வழியாக, தமிழ் லகில் ஒரு கருவியாக மட்டும் அமையாமல், பல்துறை வெளிப்பாட்டையும் இணைக்கும் ஆற்றல்மிக்க அவர் இதுவரை வெளிக்கொணர்ந்த 70 ல் இனிய செந்தமிழின் புதிய சொல் வடிவங்களையும் சிந்தனைப் போக்குகளையும் அறிமுகப்படுத்தும் திறவுகோல்களாக விளங்குகின்றன. அவற்றின் வழியாகப் பல்வேறு இசங்கள், போக்குகள், மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிவதோடு, காலத்தை விஞ்சி நிற்கும் அவரது ஆளுமையின் வலிமையையும் உணர முடிகிறது. குறிப்பாக, சிறுவர் இலக்கிய வளர்ச்சி குறித்த அவரது நூல், அதன் வரலாறு, சிறுவர் உளவியல், கற்றல் - கற்பித்தல், எண்ணக்கரு, பாடுபொருள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து முன் வைக்கும் அறிவார்ந்த படைப்பாகத்

prasadbatti@gmail.com

திகழ்கிறது. தாலாட்டு, பாட்டி கதை, படங்கள் போன்ற தொடக்கநிலை அனுபவங்களிலிருந்து குழந்தையின் மொழிக்கூர்மை, சுயசிந்தனை, அறி வாற்றல் ஆகியவற்றை வளர்க்கும் இலக்கியத்தின் பங்கை அவர் வலியுறுத்துகிறார். மாயஜாலக் கதைகளின் எல்லையைக் கடந்து, சமூகவியல், அறிவியல், தொழில் நுட்பம், சமகாலச் சமூகப் பிரச்சினைகள், சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அறி வார்ந்த நல்லிலக்கியத்திற்குச் சிறுவர் இலக்கி யத்தை அவர் நகர்த்தியுள்ளார்.

சிறுவர் படைப்பிலக்கியத்தின் தொடக்ககாலப் படைப்பாளிகள் முதல் இற்றைவரையிலான படைப் புகளை அடியொ ற்றி, சிறுவர் இலக்கியத்தின் பல்வேறு வகைகளையும் போக்குகளையும் ஆய்வு செய்தவர் பேராசிரியர் சபா. ஜெயராசா. அதன் தொடர்ச்சியாகக் கருத்தாழமிக்க உலகச் சிறுவர் இலக்கியங்களை வகைப்படுத்திக் கல்விச் சமூகத் திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். அவரது ஆய்வு களில் குறிப்பிடத்தக்க மற்றொரு தளம் கல்வி உள வியலாகும். மாணவர்களின் மொழித்திறன், சிந்தனை, உளவளம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு கற்றல், கற்பித்தலை மேம்படுத்துவதற்கான அவரது பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இலங் கையில் ‘உள ஆற்றுப்படுத்தல்’ என்ற சொல் 2004 சுனாமிக்குப் பின்னர் பொதுவெளியில் பரவலாகப் பயன்படத் தொடங்கியபோதிலும், அதற்கு முன்னரே கல்வியுடன் இணைந்த உளவளம் சார்ந்த கருத்து களைத் தனது நூல்கள், கட்டுரைகள், கற்பித்தல் வழியாக வலியுறுத்தி வந்தவர் பேராசிரியர் சபா. ஜெயராசா.

இவ்விடயத்தை அவர் எழுதிய ஒட்டுமொத்த நூல்க ளினூடாக நுணுக்கமாக அறிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக, 2004 சுனாமிக்குப் பின்னர் இடைத்தங்கல் முகாம்களில் பாதிக்கப்பட்ட மக்களின் உளநலனை மீட்டெடுப்பதற்காக வைத்தியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோர் உள வள ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட் டனர். ஆனால், அதற்கு முன்னரே கல்வியோடு இணைந்த உளவளம் குறித்த சிந்தனைகளைத் தனது நூல்கள், கட்டுரைகள், கற்பித்தல் வழியாக வலியுறுத்தி வந்தவர் பேராசிரியர் சபா. ஜெயராசா. இதனால், உளவளக் கல்வியில் ஆழ்ந்த புலமை யுடைய கல்வியாளராக அவரது பங்களிப்பு குறிப்பி டத்தக்கது. அவர் எழுதிய உளவளக் கல்வி சார்ந்த நூல்கள் மாணவர் சமூகத்திற்கு மட்டுமன்றி, தனிமனித வாழ்வுக்கும் பொதுச் சமூகத்திற்கும் பயனளிக்கும் அறிவுப் பதிவுகளாகத் திகழ்கின்றன.

சிறுவர் இலக்கிய வளர்ச்சி என்ற நூலில் சிறுவர் இலக்கியக் கோட்பாடுகளை முன்வைத்து, தொடக் ககாலம் முதல் இற்றைவரையிலான படைப்பாளர்க ளையும் அவர்களது பங்களிப்புகளையும் தொகுத்துப் பதிவுசெய்துள்ளார். நவீன சிறுவர் இலக்கியத்தில் அறிவியல், தொழில் நுட்பம், சமூக அறிவியல் போன்ற துறைகளில் எழுதக்கூடிய படைப்பாளர்களையும் அடையாளப்படுத்தி, சிறு வர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குச் சிறுவர் இலக்கியம் வழியாகத் தீர்வுகாண வேண்டி யதன் தேவையையும் வலியுறுத்துகிறார்.





ஆய்வோடு நின்றுவிடாது சிறுவர் கதைக ளையும் நூல்களையும் படைத்து, அவற்றைக் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளிலும் பாடப் பரப்புகளிலும் இணைத்தவர். இதனால், சிறுவர் இலக்கிய ஆய்வு, படைப்பு, கற்பித்தல் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்த முன்னுதாரணக் கல்வியாளராகப் பேராசிரியர் சபா. ஜெயராசா விளங்குகிறார். அவரது சமூகநோக்குச் சிந் தனைகளாலும் பணிகளாலும் ஈர்க்கப்பட்ட நான் (இக்பால் அலி), அவற்றைச் சிறார்களுக்கான பாடலாகப் படைத்ததுடன், எனது ‘குரங்குத் தம்பி’ (டிசம்பர் 2023) நூலில், ‘பேராசிரியர் சபா. ஜெயராசா - குழந்தை இலக்கியத்தின் காவலர்’ என்ற தலைப்பில் பாடல் ஒன்றை இடம்பெறச் செய்து, அவரது குழந்தை உளவியல் அறிவு, சிறுவர் இலக்கியப் பங்க ளிப்பு, செந்தமிழ்ப் புலமை, முற்போக்குச் சிந்தனை, கல்வியியல் வழிகாட்டல் ஆகி யற்றைப் பாராட்டியிருந்தேன்.





பேராசிரியர் சபா. ஜெயராசா கல்விப்புலமையா ளராக மட்டுமன்றி, ஆளுமைமிக்க கவிஞரா கவும் விளங்கியுள்ளார் என்பதை ஜீவநதி சஞ்சிகை வெளியிட்ட ‘பேராசிரியர் சபா. ஜெயராசா சிறப்பு மலரில்’ சி. ரமேஷ் எழுதிய கட்டுரையினூடாக அறிந்துகொள்ள முடிகிறது. தமிழ்ச் சிந்தனை மரபும் மார்க்சியச் சிந்தனையும் கலந்த சூழலில் கவிதையுலகிற்கு அறிமுகமான அவரது கவிதைகள் பொருளாதாரச் சுரண்டல், வர்க்க வேறுபாடு, முற் போக்குச் சிந்தனை, மனிதநேயம் ஆகிய வற்றைத் தம் பாடுபொருள்களாகக் கொண் டுள்ளன. காலத்தோடு அவரது ஆளுமை வளர்ந் ததுபோல, அவரது கவிதைகளும் கருத்துச் செறிவும் முதிர்ச்சியும் பெற்று விளங்குகின்றன. தொய்வற்ற, தூக்கலான நடையில் கருத்தோவி யங்களையும் கொள்கை முழக்கங்களையும் முன்வைக்கும் அவரது கவிதை ஆளுமையைச் சி. ரமேஷின் கட்டுரை தெளிவாக வெளிப்படுத்து கிறது.







கற்றல் - கற்பித்தல் முறையியலில் மாணவர்களின் தேடலையும் சுயசிந்தனையையும் ஊக்குவிப் பதோடு, ஆசிரியர்களுக்கான கல்வி முகா மைத்துவ சிந்தனைகளையும் பேராசிரியர் சபா. ஜெயராசா முன்வைத்துள்ளார். அவரது திறனாய்வு சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளால் பல்க லைக்கழக மாணவர்கள் பயன் பெற்றதுடன்,





















நவீன கல்வியியலின் நோக்கங்களை அறிந்து தத்தமது கற்றல் இலக்குகளை அடைவதற்கான வழிகாட்டலையும் பெற்றுள்ளனர். இதுவே அவரது கல்வியியல் பங்களிப்பில் குறிப்பிடத்தக்க அம்சமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

தமிழியலில் கற்றல்-கற்பித்தலுக்குத் தேவையான புதிய கலைச்சொற்களையும் சொற்களஞ்சியத்தையும் உருவாக்கியமை அவரது கல்விப் பணியின் மற்றொரு முக்கியப் பங்களிப்பாகும். மனிதவள மேம்பாடு, ஆசிரியர் வகிபங்கு, பாடசாலை ஒழுங்கமைப்பு, கல்வித் திட்டமிடல், கற்றல் செயன்முறை போன்ற கல்வியியலின் பல்வேறு தளங்களையும் தத்துவ அடிப்படையுடன் அணுகி, கல்விச் சிந்தனையின் பரந்த எல்லைகளை மாணவர்களுக்குத் திறந்துவைத்தவர் பேராசிரியர் சபா. ஜெயராசா.

சுருங்கக் கூறின், கல்வியியல், கவிதை, சிறுவர் இலக்கியம், நாடகம், நுண்கலை எனப் பல்துறைத் தளங்களில் பேராசிரியர் சபா. ஜெயராசா தமது ஆளுமையைப் பதிவுசெய்துள்ளார். பாடசாலை முகாமைத்துவம், கல்வி நிர்வாகம், கல்வியியல் எண்ணக்கருக்கள், நவீன கல்வி மொழியியல், பல்கலைக்கழக ஆய்வு வழிகாட்டல், பெற்றோர் கல்வி, கல்விச் சமூகத்தின் எதிர்காலப் பாதை எனப் பல துறைகளில் அவரது பங்களிப்புகள் வெளிப்பட்டுள்ளன. காலத்திற்கேற்ப மாறிவரும் கல்வித் தேவைகளுக்கு ஏற்ற பாடத்திட்டங்களையும் கல்விச் சிந்தனைகளையும் முன்வைத்து மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் கல்வி மேம்பாட்டிற்கும் அவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

இணுவில் மண்ணில் பிறந்து, இணுவில் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற அவர், மாணவப் பருவத்திலேயே சஞ்சிகைச் செயற்பாடுகள் வழியாக இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். 1960-களில் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்ந்தபோது தமிழ், கல்வியியல் உள்ளிட்ட பல துறைகளைக் கற்றதுடன், அக்கால அறிஞர்களின் கற்றல் - கற்பித்தல் மரபுகளும் முற்போக்குச் சிந்தனைகளும் அவரது ஆளுமை வளர்ச்சிக்கு அடித்தளமாயின. சமூக அநீதிகளுக்கும் தீண்டாமைக்கும் எதிரான அவரது கவிதைகளும் எழுத்துகளும் இதன் வெளிப்பாடுகளாக அமைந்தன.

பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களுடனான அவரது கல்விப் பணிப் பயணம், விரிவுரையாளர், பேராசிரியர், துறைத் தலைவர், பாடநூல் ஆக்கக் குழு உறுப்பினர் உள்ளிட்ட பல பொறுப்புகளின் ஊடாக விரிந்தது. கல்வியியலையும் நாட்டாரியலையும் இணைத்துப் பார்க்கும் புதிய ஆய்வுத் தளத்தை நாட்டாரியற் கல்வி போன்ற நூல்களின் வழியாக முன்வைத்ததுடன், தமிழ்ப் பண்பாட்டு மரபையும் சுதேசக் கல்வி மரபையும் மீள்வாசிப்புக்கு உட்படுத்தினார். அதேவேளை, ஈழத்தின் கல்விக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகளையும் விமர்சன நோக்குடன் அணுகி நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறையின் பொறுப்பை வகித்த காலத்தில் இசை, நடனம், சித்திரம், வடிவமைப்பு போன்ற துறைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, புதிய கற்கைப் பாடப்பரப்புகளையும் பட்டப் படிப்புகளையும் அறிமுகப்படுத்தினார். தமிழிசை, பரதநாட்டியம், தமிழ்த் திரைப்படம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, ஒளிப்படக்கலை, பதிப்புக்கலை, இசை, நடனம், நாடகம் ஆகிய நுண்கலைத் தளங்களைத் தமிழ்ப் பண்பாட்டு மரபுடனும் நாட்டார் கலை மரபுடனும் இணைத்து ஆய்வு செய்தார். இதன்மூலம் கல்வி, இலக்கியம், பண்பாடு, நுண்கலை ஆகிய துறைகளைத் தனித்தனியாக நோக்காமல் அவற்றின் ஊடாட்டத்தை வெளிப்படுத்திய பன்முக அறிவாளியாகப் பேராசிரியர் சபா. ஜெயராசா திகழ்கிறார்.

ஒரு பிரதேசத்தின் மொழி வளர்ச்சி அங்கு முன்னெடுக்கப்படும் கலை, இலக்கிய, பண்பாட்டுச் செயற்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையது. இச்செயற்பாடுகள் நலிவடையும் போது மொழியோடு சமூகத்தின் வரலாறும் பண்பாட்டு அடையாளமும் பாதிக்கப்படுகின்றன. இதனை உணர்ந்து வடபுலத்தில் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பல இலக்கிய அமைப்புகள் செயற்பட்டு வந்துள்ளன.

அந்த வகையில், கலாபரமகேஸ்வரன், டாக்டர் மகாலிங்கம் ஆகியோருடன் இணைந்து 'யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கம்' உருவாகப் பேராசிரியர் சபா. ஜெயராசா பங்களித்தார். இதன் வழியாக இளம் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து, அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவித்ததுடன், மரபுசார் இலக்கியம், பண்பாட்டியல், கலை, மெய்யியல் ஆகியவற்றை வாசிக்கவும் அவை தொடர்பான விமர்சனங்களையும் ஆய்வுகளையும் முன்னெடுக்கவும் தூண்டினார். மேலும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடனும் இணைந்து செயற்பட்ட அவர், பிரேம்ஜி, நந்தி, நீர்வைப்பொன்னையன், இளங்கீரன், டானியல், டொமினிக் ஜீவா, அந்தனி ஜீவா, செ. யோகநாதன், பெனடிக்பாலன் உள்ளிட்ட பல எழுத்தாளர்களுடன் நெருங்கிய



**கல்வியால் தனிமனிதரையும் சமூகத்தையும் உயர்த்த முடியும்; கல்வி அறிவும் சமத்துவப் பார்வையும் சமூக நல்லிணக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமையும் என்ற சிந்தனையைத் தனது வாழ்வாலும் பணியாலும் நிலைநிறுத்தியவர் பேராசிரியர் சபா. ஜெயராசா.**

இலக்கியத் தொடர்பைப் பேணியுள்ளார். இதனால், இளம் தலைமுறையினரை இலக்கியச் செயற்பாட்டுக்குள் கொண்டுவந்த அமைப்புசார் இலக்கியப் பணியாளராகவும் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

இலக்கியச் செயற்பாடுகளுடன் இணைந்து, பல்கலைக்கழகக் கற்றல் - கற்பித்தல் தளத்திலும் மாணவர்களின் பொது நலன், கடமை உணர்வு, அறிவு வளர்ச்சி ஆகியவற்றில் தார்மீகப் பொறுப்புடன் பேராசிரியர் சபா. ஜெயராசா செயற்பட்டுள் ளார். அவரது மாணவர் பரம்பரையினர் கல்விப் புலத்தில் தொடர்ந்து அறிவெழுச்சிக்கான குரலை ஒலிக்கச் செய்வதே அவரது கற்பித்தலின் நீடித்த பயனாகும். இலங்கைக்கு அப்பாலும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்ததன் மூலம் அவரது கல்விச் சிந்தனை உலகளாவிய கல்வியியல் தளத்திலும் பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பணிக்காலத்தில் ஏ.ஜே. கனகரத்தினா, பேராசிரியர் க. சிவத்தம்பி, பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, முனைவர் சுரேஷ் கனகராஜா உள்ளிட்ட அறிஞர்களுடன் கலை, இலக்கியம், பண்பாடு, தத்துவம், அழகியல் சார்ந்த அறிவார்ந்த உரையாடல்களில் ஈடுபட்டார். அவரது தீவிர வாசிப்பும் இவ்வறிவுத் தொடர்புகளும் நவமார்க்சியம், மார்க்சிய உளவியல், சமூகவியல், பண்பாட்டியல், சமூகமொழியியல், மெய்யியல், நுண்கலையியல், நாட்டார் வழக்காற்றியல் உள்ளிட்ட பல்துறை அறிவில் அவரது ஈடுபாட்டை விரிவுபடுத்தின. உண்மை, பொறுப்பு, மொழிநயம், படைப்பாற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் நிலைப்பட்ட மாற்றுச் சிந்தனைக்கான வலுவான அறிவுத் தளத்தை உருவாக்கியவர் பேராசிரியர் சபா. ஜெயராசா.

இன்றைய டிஜிட்டல் உலகில் இணையத்தளங்கள், வலைப்பதிவுகள், சமூக ஊடகங்கள், மின்னூல்கள் என எழுத்தின் வடிவங்கள் மாறிவரும் நிலையில், அவற்றை உன்னிப்பாக அவதானித்து, தொழில் நுட்பம் மற்றும் சிந்தனைத் துறைகளில் ஏற்படும் புதிய வளர்ச்சிகளைத் தமிழில் எடுத்துரைக்கும் பணியிலும் பேராசிரியர் சபா. ஜெயராசா ஈடுபட்டுள்ளார். நவீன கல்வி மாற்றங்களுக்கேற்ப புதிய பாடப்பரப்புகள், கலைச்சொற்கள், அறிவியல் தகவல்கள் ஆகியவற்றை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களின் அறிவுத் திறனையும் மீள்திறனையும் வளர்ப்பதில் அவர் பங்களித்துள்ளார். நுண்கலை, சிறுவர் இலக்கியம், உளவியல், மெய்யியல், கல்வியியல், மொழியியல் ஆகிய துறைகளில் அவரது பன்முகப் புலமை இதன் வழியாக வெளிப்படுகிறது.

பேராசிரியர் சபா. ஜெயராசாவின் கல்விப் பங்களிப்பு மாணவர் சமூகத்திற்கும் கல்விச் சமூகத்திற்கும் நிலையான அறிவு வளமாகத் திகழ்கிறது. பரதநாட்டியம், நாடகம், அழகி யல், நுண்கலை, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை ஒரு சமூகத்தின் எல்லைக்குள் மட்டும் நிறுத்தாமல், பல்லினச் சமூகங்களும் அறிந்து கொள்ள வேண்டிய பொதுப் பண்பாட்டு வளமாகக் காணும் பரந்த பார்வை அவரிடம் காணப்படுகிறது. தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவத்தை நிலைநிறுத்தியபடியே அதன் கலை, இலக்கிய விழுமியங்களைப் பிற சமூகங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற சிந்தனையையும் அவர் முன்னெடுத்தார்.

அவரது பன்முக ஆளுமையின் அடித்தளங்களாக அயராத வாசிப்பும் சோர்வற்ற தேடலும் கடுமையான உழைப்பும் தொடர்ச்சியான எழுத்தும் விளங்குகின்றன.கல்வி உளவியல், சிறுவர் உளவியல், சிறுவர் இலக்கியம், நுண்கலை, கல்வித் தத்துவம், மொழியியல், மார்க்சியச் சிந்தனை, புதிய கல்விக் கோட்பாடுகள் எனப் பல்வேறு துறைகளில் அறிவைத் தேடிப் பெற்று, அதனை நூல்கள், கட்டுரைகள், கற்பித்தல் ஆகியவற்றின் வழியாகப் பரப்பியுள்ளார். குறிப்பாக, தமிழில் புதிய கலைச்சொற்களையும் எண்ணக்கருக்களையும் அறிமுகப்படுத்தும் அவரது முயற்சி தொடர்ச்சியானது.

ஓய்வுநிலையிலும் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் கல்வியின் முக்கியத்துவத்தையும், தமிழரின் நுண்கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வேர்களையும் விழுமியங்களையும் உணர்த்தி வருகிறார். கல்வியால் தனிமனிதரையும் சமூகத்தையும் உயர்த்த முடியும்; கல்வி அறிவும் சமத்துவப் பார்வையும் சமூக நல்லிணக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமையும் என்ற சிந்தனையைத் தனது வாழ்வாலும் பணியாலும் நிலைநிறுத்தியவர் பேராசிரியர் சபா. ஜெயராசா. அவரது பன்னூல்கள், தேடல், வாசிப்பு, படைப்பாற்றல், சிந்தனை ஆகியவை புதிய தலைமுறையின் கல்விச் சிந்தனைக்கு நீடித்த அறிவு வளமாகத் தொடரும்.



Iqbal.ali@thaiveedu.com

# வரலாற்றின் பக்கங்களில் மறைக்கப்பட்ட சுவடு

## பொன். கந்தையாவின் வாழ்வும் அரசியலும்

**கனகசபை ஸ்ரீஸ்கந்தன்**



tg.theeban@gmail.com

இலங்கையின் இடதுசாரி வரலாற்றின் பக்கங்களைப் புரட்டும்போது, பல தலைவர்களின் பெயர்கள் கம்பீரமாக ஒலிப்பதையும் அவர்களின் நினைவுகள் ஆண்டு தோறும் கோலாகலமாகக் கொண்டாடப்படுவதையும் பார்க்க முடிகிறது. ஆனால், அதே வரலாற்றின் ஏடுகளில் அமைதியாக மறைக்கப்பட்ட அல்லது மறக்கப்பட்ட ஒரு மாபெரும் ஆளுமைதான் பொன்னம்பலம் கந்தையா.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சியின் தாபகர்களில் ஒருவரான அவர், வட புலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவதும் கடைசியுமானதுமான கம்யூனிஸ்ட் பிரதிநிதி ஆவார். அவர் மறைந்து ஆறு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்ட போதிலும், வரலாற்றுப் பக்கங்களில் அவருக்கான உரிய இடம் இன்னும் மறுக்கப்பட்டே வருகிறது என்றுதான் கூறவேண்டும். அவர் இறந்த திகதியைக் கூட எவரிடமிருந்தும் அறிய முடியாமல் இருக்கிறது.

வடமராட்சியின் கரவெட்டி உட்பட பல கிராமங்கள் இன்று வரை இடதுசாரிச் சிந்தனையின் சுவடுகளையும் அடையாளங்களையும் ஏதோ ஒரு விதத்தில் அவற்றுள் தாங்கி நிற்கின்றன என்றால், அதற்குப் பின்னால் விளங்குபவர்களில் பிரதானமானவர் பொன். கந்தையா.

கரவெட்டி தந்த இந்த தீர்க்கதரிசியான அரசியல்வாதி, வெறும் கொள்கைப் பேச்சாளராக மாத்திரம் இருக்கவில்லை, மாறாக மக்களின் அன்றாட வாழ்வியலோடு இடதுசாரியத்தைப் பிணைத்தவர். இன்று கம்யூனிச இயக்கத்தின் கம்பீர குரல்கள் ஓய்ந்து, அதன் தடங்கள் மெல்ல அழிந்து வரும் நிலையிலும், கரவெட்டி உட்பட வடமராட்சியின் கிராமங்களின் வீதிகளில் வாழும் அந்தச் சிறிய சுவடுகளும் கந்தையா எனும் ஒரு தனிமனிதனின் ஆளுமைக்கு சான்றாகவே எஞ்சியிருக்கின்றன.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் வடக்கின் பிரதிநிதித்துவமும் கம்யூனிசக் கொள்கையும் இணைந்த புள்ளிகள் மிகச் சிலவே. அதில் முதன்மையானவரான கந்தையா, நாடாளுமன்றத்தை அலங்கரித்த மிகச் சிறந்த அறிவுஜீவிகளில் ஒருவர். ஆயினும், ஏனைய கம்யூனிஸ்ட் தலைவர்கள் அளவுக்கு அவரது பங்களிப்பு பரவலாக நினைவு கூரப்படுவதோ அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுவதோ இல்லை. பொன். கந்தையா மறைந்து 66 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், வரலாற்றின் இருண்ட மூலைகளில் அவர் தள்ளப்பட்டிருப்பது, தமிழ் அரசியல் சூழல் இடதுசாரி சிந்தனையாளர்களைக் கையாண்ட விதத்தின் மீதான ஒரு கேள்வியையே எழுப்புகிறது.

பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஒரு பேரறிஞராக இருந்த போதிலும், எளிய மக்களின் விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் பொன். கந்தையா.

1956 பொதுத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் அவர் பெற்ற வெற்றி, வெறும் அரசியல் வெற்றியன்று, அது வடக்கில் அன்று உருவெடுக்கத் தொடங்கிய சமூக மாற் றத்தின் அடையாளமாகும். கல்வியிலும் அரசியல் சிந்தனை யிலும் உன்னத நிலையில் இருந்த ஒரு தலைவர், காலப் போக்கில் நினைவுகளிலிருந்து மறைக்கப்பட்டு விட்டது, நமது வரலாற்றுப் பதிவுகளின் பெரும் குறைபாடாகவே பார்க் கப்பட வேண்டும்.

காலத்தின் ஓட்டத்தில் எத்தனையோ அரசியல் மாற்றங் களைக் கண்டு விட்ட வடபுலத்தில், இன்றளவும் இடதுசாரித் துவத்தின் எஞ்சிய அடையாளங்கள் கந்தையாவின் பெய ரோடு பிணைக்கப்பட்டுள்ளன. பிற கம்யூனிஸ்ட் தலைவர்க ளுக்கு மணிமண்டபங்களும் நினைவேந்தல்களும் வரிசை கட்டி நிற்கும் சூழலில், கந்தையாவின் பங்களிப்பு மறைக்கப் பட்டு வருவது ஒரு வரலாற்றுச் சோகமாகும். இந்தத் தரு ணத்தில், அவரது வாழ்வையும் அவர் வடமராட்சி மண்ணுக் கும் இலங்கை இடதுசாரி இயக்கத்திற்கும் ஆற்றிய அரும் பணிகளையும் மீண்டும் ஒருமுறை வெளிச்சத்திற்குக் கொண் டுவருவது காலத்தின் அவசியமாகிறது.

இத்தகைய பின்புலத்தில், சமூக ஊடகங்களில் அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், சட்டமேதைகள், கலைஞர்கள் என்று சமூக வாழ்வின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த கடந்த காலத்தைய ஆளுமைகளைப் பற்றி விரிவான பதிவு களைச் செய்துவரும் டிஜிட்டல் படைப்பாளியான டில்ஷான் மதுரங்கவின் பொன். கந்தையா குறித்து பதிவில் இருந்து இன்றைய தலைமுறை அறிந்துகொள்வதற்கு பெருவாரியான தகவல்கள் இருக்கின்றன.

பொன்னம்பலம் கந்தையா 1914-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் திகதி இலங்கையின் வடபகுதியில் உள்ள வடமராட் சியின் கரவெட்டி கிராமத்தில் பிறந்தார். அவரது வாழ்நாள் நாற்பத்தாறு ஆண்டுகள் மட்டுமே நீடித்தது. இருப்பினும் அந்த ஆண்டுகளுக்குள் அவர் ஒரு கல்வியாளராக, ஓர் அறிஞராக, ஒரு கம்யூனிச அமைப்பாளராக, ஒரு நாடாளு மன்ற உறுப்பினராக, மொழி மற்றும் இனத்தால் பெருமள வுக்கு பிளவுபட்ட ஒரு நாட்டில் சமத்துவத்திற்கான ஒரு முக் கியமான குரலாக மாறினார்.

பொன். கந்தையா வடக்கு இலங்கையின் கல்விச் சூழலில் வளர்ந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் படித்தார். உயர் கல்வி என்பது பெரும்பாலான மக்களுக்கு எட்டாத ஒன்றாக இருந்த காலத்தில், அவர் தனது கல்வித் திறமையால் சிறந்து விளங்கினார். அவர் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் (University College Colombo) சேர்ந்து 1935-ஆம் ஆண்டில் தனது இளங்கலைப் பட்டத்தைப் முடித்தார். அவரது கல்வி வெற்றி மிக பரந்த உலகை அவருக்குத் திறந்தது. பிரித்தானியாவில் தனது கல்வியைத் தொடர அவ ருக்கு புலமைப்பரிசில் கிடைத்தது. கேம்பிரிட்ஜில் உள்ள டிரினிட்டி ஹாலில் (Trinity Hall) அவர் பொருளாதாரம் மற் றும் விளிம்பு நிலை / கிழக்கத்தேய மொழிகளைக் கற்றார்.

பின்னர் அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சுமார் இரண்டு ஆண்டுகள் செலவிட்டார். அவரது கல்வி அவரது அரசியல் வாழ்க்கை முழுவதிலும் முக்கியத்துவம் பெறப் போகும் இரண்டு துறைகளை ஒன்றிணைத்தது. பொருளா தாரம் வர்க்கத்தையும் சமத்துவமின்மையையும் புரிந்து கொள்ள அவருக்கு உதவியது. அவரது மொழிப் படிப்பு தொடர்பு மற்றும் கலாசார அடையாளத்தின் அரசியல் முக்கி யத்துவத்தைப் பாராட்ட உதவியது. பிரித்தானியாவும் அவ ரது வாழ்க்கையின் திசையை மாற்றியது.

மிகப்பெரிய அரசியல் மற்றும் சமூக மாற்றங்கள் நிகழ்ந்த காலத்தில் பொன். கந்தையா பிரித்தானியாவைச் சென்ற டைந்தார். உலகம் பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருந்தது. ஐரோப்பா முழுவதும் பாசிசம் விரிவ டைந்து கொண்டிருந்தது. தொழிலாளர் இயக்கங்கள் அதிக செல்வாக்கு பெற்று வந்தன. காலனித்துவ எதிர்ப்புப் போராட் டங்கள் வலிமை பெற்று வந்தன. மாணவர்களிடையே சோச லிச மற்றும் மார்க்சிச கருத்துக்கள் தீவிரமாக விவாதிக்கப் பட்டு வந்தன.

கேம்பிரிட்ஜில் அவர் இடதுசாரிச் சிந்தனைகளை நோக்கி நகர்ந்த ஏனைய இலங்கை மாணவர்களுடன் தொடர்பு கொண்டார். அவர்களில் பீட்டர் கெனமன், எஸ்.ஏ. விக்கிரம சிங்க, ஏ. வைத்தியலிங்கம் போன்றவர்கள் அடங்குவர். பொன். கந்தையா பிரித்தானியாவில் கம்யூனிச இயக்கத்தில் ஈடுபட்டார். எனவே மார்க்சிசம் அவருக்கு ஒரு கல்விசார் கோட்பாட்டிற்கு மேலான ஒன்றாக மாறியது. காலனித்துவ இலங்கையில் தான் கண்ட சமத்துவமின்மைகளைப் புரிந்து கொள்வதற்கான ஒரு வழியாக அது மாறியது. அவர் வறுமை, வர்க்கப் பிளவுகள், காலனித்துவ அதிகாரம், மொழிப் பாகு பாடு மற்றும் இனப் பிளவுகள் ஆகியவற்றை ஒரு பரந்த சமூக அமைப்பின் தொடர்புபட்ட பகுதிகளாகப் பார்க்கத் தொடங்கினார்.

அவர் இலங்கைக்குத் திரும்பியபோது, தனது தலைமுறை யைச் சேர்ந்த உயர் கல்வி கற்றவர்கள் பலர் தேர்ந்தெடுத்த பாதையைப் பின்பற்றியிருக்கலாம். அவர் ஒரு பாதுகாப் பான தொழில்முறை வாழ்க்கையைத் தொடர்ந்திருக்கலாம். அதற்குப் பதிலாக அவர் அரசியல் பணி மற்றும் பொதுச் சேவையைத் தனது வாழ்க்கைப் பாதையாக தேர்ந்தெடுத் தார். கந்தையா கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் துணை நூலகராகப் பணியாற்றினார். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற் றினார். இந்தப் பதவிகள் அவரை கல்வி உலகின் வெவ்வேறு பகுதிகளில் நிறுத்தின. ஒரு விரிவுரையாளராக அவர் அறிவு சார் வாழ்க்கையில் பங்கேற்றார். ஒரு நூலகராக அவர் அறிவு மற்றும் தகவல்களை அணுகும் வழிகளுடன் பணியாற்றினார். ஓர் ஆசிரியராக அவர் இளைஞர்கள் மற்றும் சாதாரண குடும் பங்களின் அனுபவங்களுக்கு நெருக்கமாக வந்தார்.

பொன். கந்தையாவைப் பொறுத்தவரை அவர் கல்வியை தனிப்பட்ட முன்னேற்றத்திற்கான ஒரு வழியாகப் பார்க்க வில்லை, மாறாக, அறிவு சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பதே அவரது சிந்தனையாக இருந்தது. கல்வி என்பது சமூகப் பிளவுகளை வெறுமனே மீண்டும் உருவாக்கு வதற்குப் பதிலாக, சமத்துவமின்மையைக் கேள்வி கேட்க மக்களுக்கு உதவ வேண்டும் என்று அவர் நம்பினார்.

## ஐக்கிய சோசலிச கட்சி:

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் இவரது அரசியல் ஈடுபாடு மேலும் வலுப்பெற்றது. 1941-ஆம் ஆண்டில் ஐக்கிய சோசலிசக் கட்சி (United Socialist Party) உருவாக்கியவர்களில் ஒருவராக அவர் விளங்கினார். 1943-ஆம் ஆண்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப் பட்டபோது, அதன் தாபகத் தலைவர்களில் ஒருவராக அவர் உருவெடுத்தார்.

அந்த காலகட்டத்தில் நாடு இன்னும் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சின்கீழ்தான் இருந்தது. பொருளாதார அதிகாரம் அனைத்தும் சக்திவாய்ந்த வணிக அமைப்புகள் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் வசமே குவிந்திருந்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் வறுமையிலும், அரசியல் அதிகாரமின்றியும் தவித்தன. பிரிட்டிஷாரின் வெளியேற்றத்துடன் மட்டும் அரசியல் சுதந்திரம் முடிந்துவிடக் கூடாது என்பதில் பொன். கந்தையா உறுதியாக இருந்தார். சுதந்திரம் என்பது அதிக பொருளாதார பாதுகாப்பு, சிறந்த கல்வி, தொழிலாளர் உரிமைகள், அரசியல் சமத்துவம் மற்றும் சமூக நீதியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இன, மதப் பிரிவினைகள் உழைக்கும் மக்களின் ஒற்றுமையை பலவீனப்படுத்தும் என்றும் அவர் நம்பினார். அதே நேரம், இன ரீதியான அநீதிகளை புறக்கணிப்பது அவரது நோக்கமல்ல. சிங்கள தொழிலாளர்கள், தமிழ் தொழிலாளர்கள் மற்றும் மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் தங்களது உரிமைகளுக்காக ஒன்றாகப் போராடக்கூடிய ஒரு விரிவான இயக்கத்தைக் கட்டியெழுப்புவதே அவரது தீர்வாக இருந்தது.

## முதல் தேர்தல் சவால்:

அவரது முதல் முக்கிய தேர்தல் சவாலாக 1947 நாடாளுமன்றத் தேர்தல் அமைந்தது. பருத்தித்துறைத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக கந்தையா போட்டியிட்டார். அதில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் டி. இராமலிங்கத்திடம் அவர் தோல்வியடைந்தார். 1952 பொதுத் தேர்தலில் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் தோல்வியைத் தழுவினார். இருப்பினும், இந்த இரண்டாவது தேர்தல் பிரச்சாரம் அவரது அரசியல் கொள்கைகளுக்கு மக்களிடையே கணிசமான ஆதரவு உருவாகியிருப்பதை நிரூபித்தது. அவர் 8,617 வாக்குகளைப் பெற்றார். இது பதிவான வாக்குகளில் ஏறத்தாழ 31 சதவீதமாகும். இந்த தோல்விகளுக்கு மத்தியிலும் அவர் தொடர்ந்து மக்களுக்காகப் பணியாற்றினார்.

1956 பொதுத் தேர்தலில் அவரது தொடர் முயற்சிக்கு இறுதியாக நற்பலன் கிடைத்தது. பருத்தித்துறைத் தொகுதியில் 14,381 வாக்குகளைப் பெற்று கந்தையா வெற்றி பெற்றார். அவர் செல்லுபடியான வாக்குகளில் பாதியை விடவும் அதிகமான வாக்குகளைக் கைப்பற்றினார். அவரது வெற்றி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், அப்போதைய வடக்கு அரசியல் தமிழ் அரசியல் அமைப்புகளின் வலுவான செல்வாக்கில் இருந்தது. இருப்பினும், ஒரு நாடு தழுவிய இடதுசாரி இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக அவர் பருத்தித்துறையில் வெற்றி பெற்றிருந்தார். இலங்கை அரசியல் வரலாற்றின் மிகவும் ஆபத்தான காலகட்டங்களில் ஒன்றில் தான் அவரது நாடாளுமன்றப் பயணம் தொடங்கியது.

1956-ஆம் ஆண்டில் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் அரசாங்கம் சிங்களத்தை மட்டுமே ஒரே ஆட்சி மொழியாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆங்கிலத்தின் ஆதிக்க முடிவாகவே அந்த மாற்றம் முன்னிறுத்தப் பட்டது. காலனித்துவ மொழியின் ஆதிக்கத்தை அகற்றுவது அவசியம் என்பதை கந்தையாவும் அவரது அரசியல் தோழர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் சிங்களம் மட்டுமே நாட்டின் ஆட்சி மொழியாக மாற வேண்டும் என்ற கருத்தை அவர்கள் முற்றாக நிராகரித்தனர்.

பொன். கந்தையாவைப் பொறுத்தவரை, இது படித்த தமிழ் நிபுணர்கள் தங்கள் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்வது பற்றிய விடயம் மட்டுமல்ல. மொழிப் பிரச்சினை சாதாரண மக்களையும் பாதித்தது. அது அரசு சேவைகள், வேலை வாய்ப்பு, கல்வி, நிர்வாகம் மற்றும் பொதுவாழ்வில் பங்கேற்பது ஆகியவற்றில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சமமான அங்கீகாரம் வழங்கிட வேண்டும் என்ற வாதங்களை அவர் முன்வைத்தார். ஒரு சமூகம் தனது மொழி உரிமைகளை விட்டுக் கொடுக்க நிர்பந்திக்கப்பட்டால், அங்கு ஒரு உண்மையான உழைக்கும் வர்க்க இயக்கம் ஒன்றிணைய முடியாது என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். இது அவருடைய அரசியல் சிந்தனையின் மிகச் சிறப்பான அம்சங்களில் ஒன்றாக மாறியது.

பொன். கந்தையா வர்க்க ஒற்றுமைக்கும் தமிழ் மொழி உரிமைகளுக்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க மறுத்தார். இரண்டுமே அவசியமானவை என்று அவர் நம்பினார். ஒரு சிங்களத் தொழிலாளியும் ஒரு தமிழ் தொழிலாளியும் பொதுவான பொருளாதார நலன்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். ஆனால், அந்தப் பொதுவான நலன் எந்தவொரு தொழிலாளியின் மொழிக்கும் எதிரான பாகுபாட்டின் மீது கட்டமைக்கப்பட முடியாது. அதே நேரத்தில், தமிழ் உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சிங்கள மக்களை எதிரிகளாக நடத்த வேண்டும் என்று அவர் நம்பவில்லை. பெரும்பான்மை வாதத்தை எவ்வளவு உறுதியாக எதிர்த்தாரோ, அதே அளவுக்கு குறுகிய இன அரசியலையும் அவர் நிராகரித்தார்.

சாதிப் பிரிவினைகள் ஆழமாக வேரூன்றியிருந்த வட இலங்கையில் அவருடைய அணுகுமுறை மிகவும் முக்கியமானதாக இருந்தது. சாதி ஒடுக்குமுறையைச் சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மையின் பரந்த அமைப்பின் ஒரு பகுதியாகவே பொன். கந்தையா பார்த்தார். அவரைப் பொறுத்தவரை, தமிழ் உரிமைகள் தமிழ் சமூகத்தின் சலுகை பெற்ற பிரிவினருக்கு மட்டுமே சொந்தமானதாக இருக்க முடியாது. அவற்றில் தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரும் சேர்க்கப்பட வேண்டும்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய சட்டங்கள் மூலம் குடியுரிமை மற்றும் வாக்குரிமை பறிக்கப்பட்ட இந்தியத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளையும் அவர் ஆதரித்தார்.

கந்தையா இந்தத் தொழிலாளர்களை வெறும் ஒரு சிறுபான்மையினராக மட்டும் பார்க்கவில்லை. அவர்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அவர்களின் உழைப்பே தோட்டப் பொருளாதாரத்தைத் தாங்கிப் பிடித்தது என்பதையும் அவர் கண்டார். எனவே, வடக்குத் தமிழர்களின் மொழி உரிமைகள், தோட்டத் தமிழர்களின் குடியுரிமை, மற்றும் தொழிலாளர்களின் பொருளாதார உரிமைகள் ஆகிய அனைத்தும் அவருடைய அரசியல் பார்வையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன.

பொன். கந்தையா 1956 ஏப்பிரல் முதல் 1959 டிசம்பரில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவருடைய நாடாளுமன்ற வாழ்க்கை நான்கு ஆண்டுகளுக்கும் குறைவாகவே நீடித்தது. இருப்பினும், மொழிச் சமத்துவம், சமூக நீதி, தொழிலாளர் உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் குறித்துப் பேச அவர் அந்தக் குறுகிய காலத்தைப் பயன்படுத்தினார்.

## உடுப்பிட்டி தொகுதி:

தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் மாற்றப்பட்ட பிறகு, 1960 மார்ச் பொதுத் தேர்தலில் அவர் புதிதாக உருவாக்கப்பட்ட உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்டார். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் முருகேசு சிவசிதம்பரத்திடம் அவர் தோல்வியடைந்தார். முன்னதாக சிவசிதம்பரமும் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து கந்தையாவை ஆதரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தத் தோல்வி அவருடைய நாடாளுமன்ற வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால், அது அவருடைய அரசியல் பங்களிப்பின் முக்கியத்துவத்தை முடிவுக்குக் கொண்டு வரவில்லை.

1960 செப்ரெம்பரில் பொன். கந்தையா தமது 46-வது வயதில் காலமானார். இலங்கை மொழி மற்றும் இன அரசியலின் மற்றொரு கொந்தளிப்பான காலகட்டத்திற்குள் நுழையும் போதே அவருடைய வாழ்க்கை முடிவுக்கு வந்தது. அவரது மறைவு அவரது மனைவி பரமேஸ்வரி மற்றும் மகள் ராதா ஆகியோரையும் விட்டுச் சென்றது. அவரது அரசியல் தோழரான என். சண்முகதாசன் பின்னர் அந்தக் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, இறுதியில் பரமேஸ்வரியை மணந்தார். அவர் ராதாவைத் தனது சொந்த மகளாகவே வளர்த்தார்.

கந்தையா நீண்ட காலம் வாழ்ந்திருந்தால் என்ன மாதிரியான அரசியல் நிலைப்பாடுகளை எடுத்திருப்பார் என்பதை அறிவது சாத்தியமில்லை. கம்யூனிச இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிந்தைய மோதல்கள், தீவிரமடைந்த தமிழ் தேசியம், வடக்கின் சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் 1960-களின் அரசியல் நெருக்கடிகள் அனைத்தும் அவரது மறைவுக்குப் பின்னரே உருவெடுத்தன. எனவே, பிந்தைய காலத்து அரசியல் நிலைப்பாடுகளை அவர் மீது சுமத்துவது தவறான அணுகுமுறையாகவே அமையும். பொன்.கந்தையா அமைச்சரவை அமைச்சராகவில்லை. அவர் ஒரு பெரிய தேசிய அரசாங்கத்தை வழிநடத்தவில்லை. அவரது நாடாளுமன்ற வாழ்க்கை குறுகியதாக இருந்தது. அவரது கம்யூனிஸ்ட் இயக்கம் வட இலங்கையில் ஒருபோதும் ஆதிக்கம் செலுத்திய ஒன்றாக மாறவில்லை. அவரது முக்கியத்துவம் வேறு இடத்தில் இருக்கிறது.

மொழியியல் சமத்துவமும் வர்க்க தோழமையும் ஒன்றோடொன்று முரண்படும் கருத்துகள் அல்ல என்பதை அவர் நிரூபித்தார். தமிழ் மொழியுரிமைகளைப் பாதுகாப்பதற்கு சிங்கள மக்களுக்கு எதிரான பகைமை தேவையில்லை என்பதை அவர் காட்டினார். அதேபோல, தமிழ் சமூகத்திற்குள் நிலவும் வர்க்க ஏற்றத் தாழ்வுகளையோ சாதிய அடக்குமுறைகளையோ புறக்கணிப்பதற்குத் தமிழ் அரசியல் உரிமைகள் ஒரு சாக்காக அமையக் கூடாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மாற்றுச் சிந்தனை:

அவரது வாழ்க்கை இலங்கை அரசியல் பற்றிய மாற்றுச் சிந்தனை வழியொன்றை வழங்குகிறது. தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் சிறுபான்மையினரை பாகுபாட்டை ஏற்றுக் கொள்ளச் சொல்வதன் மூலம் சமத்துவத்தை அடைய முடியாது. அதேபோல, இன அடையாளத்தைப் பயன்படுத்திச் சமூகங்களுக்குள் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை மறைப்பதன் மூலமும் சமூக நீதியை அடைய முடியாது.

பொன். கந்தையா, அரசியல் மூலம் சமூகத்தை மாற்றியமைக்க முடியும் என்று நம்பிய ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர். கேம்பிரிட்ஜ் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களில் பெற்ற அறிவுசார் அனுபவத்தை அவர் சாதாரண மக்களின் போராட்டங்களுக்குப் பயன்படுத்தினார். அவர் கல்வித் துறையில் நுழைந்தார். கம்யூனிச இயக்கத்தில் இணைந்தார். நாடாளுமன்றத்திற்குச் சென்றார். அந்த ஒவ்வொரு தளத்தையும் ஒரு சமத்துவமிக்க இலங்கையை வலியுறுத்துவதற்கே அவர் பயன்படுத்தினார்.

அவரது அரசியல் பயணம் குறுகியது. அவரது இலட்சியங்களோ அவரது வாழ்நாளை விடப் பெரியவை. அவரது அரசியல் பாதை முழுமையாக நிறைவு பெறவில்லை. இருப்பினும், அவரது மையச் செய்தி இன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே உள்ளது.

சமத்துவம் இல்லாமல் உண்மையான வர்க்கத் தோழமை இருக்க முடியாது. மொழி நீதி இல்லாமல் அர்த்தமுள்ள தேசிய ஒருமைப்பாடு இருக்க முடியாது. மேலும், சமூக மற்றும் பொருளாதார அடக்குமுறைகள் புறக்கணிக்கப்படும் போது முழுமையான விடுதலை சாத்தியமில்லை. அதுவே பொன். கந்தையாவின் நிறைவுறாத மரபாகும்.

sriskanthan.kanagasabi@thaiveedu.com

■ ■ ■

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் ‘சாஹித்ய ரத்னா’ மு. சிவலிங்கம் அவர்களின் ‘அமுத விழா’ நிகழ்வும் அதனையொட்டி ‘சிவாமுதம்’ சிறப்பிதழ் வெளியீடும் மலையகத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையக் கேட்போர் கூடத்தில் அவரது எண்பதாவது பிறந்த நாளான ஓகஸ்ட் 26-ஆம் திகதியினை அடுத்து 27-ஆம் திகதி நடைபெற்றது.

யார் இந்த மு. சிவலிங்கம் ?

அவர் ஒரு பத்திரிகையாளர்!. ‘வீரகேசரி’ தேசிய நாளிதழில் தொடங்கி ‘ஜனநாயகத் தொழிலாளி’ எனும் தொழிற்சங்க பத்திரிகை வரை அனுபவம் பெற்றவர்.

அவர் ஓர் ஆங்கில ஆசிரியர்!. தோட்டப் பள்ளி ஆசிரியர் தொடங்கி அரசாங்க பாடசாலை ஆசிராயராகவும் பணி செய்தவர்.

அவர் ஒரு நடிகர்!. தலைநகர் நாடக மேடைகளில் மரிக்கார் ராம்தாஸ், ராஜேஸ்வரி சண்முகம், ராஜபாண்டியன் போன்ற முன்னணி கலைஞர் களோடு நடிக்க ஆரம்பித்து ‘புதிய காற்று’ எனும் இலங்கைத் தமிழ் திரைப்படத்தில் நடிகராகவும் உதவி இயக்குநராகவும் இயங்கியவர்.

அவர் ஒரு தொழிற்சங்கவாதி! ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் தொடங்கி மலையக தொழிலாளர் முன்னணி வரை உழைப்பாளர் உரிமைக் குரல் எழுப்பியவர்.

அவர் ஓர் அரசியல்வாதி!. மலையக மக்கள் முன்னணி கட்சியைத் தொடங்கியதில் இருந்து மத்திய மாகாண சபை துணை அவைத் தலைவர் பதவி வரை அலங்கரித்தவர்.

அவர் ஓர் இலக்கியவாதி!. ‘மலைகளின் மக்கள்’ சிறுகதைத் தொகுதி முதல் ‘பஞ்சம் பிழைக்க வந்த சீமை’ நாவல் வரை எழுதிய தேர்ந்த இலக்கியவாதி.

அவர் ஓர் ஆங்கில இலக்கிய படைப்பாளி!, சிவி.-யின் ‘Born to Labour’ எனும் Anecdotes இலக்கிய வகைமையை ‘தேயிலைத் தேசம்’ என்ற பெயரில் தமிழில் தந்த மொழி பெயர்ப்பாளர். தமது தமிழ் மொழி மூல படைப்புகளை Sweat, Life, Forgotten people, Citizen of Mist என ஆங்கிலத்திலும் எழுதியவர்.

இவர் ஒரு கலைஞர்!. மலையக நாட்டார் பாடல்களை தொகுத்ததுடன் அவற்றை ராகத்தோடு பாடும் பாடகர்.

இப்படி இன்னோரன்ன இயல்புகளை தன்னோடு கொண்டிருந்த இவருக்குள் எப்போதும் இருந்தவர் ஓர் இளைஞர். எழுபதுகள் கடந்த பின்னும் டெனிம் ஜீன்ஸ், டீ சேர்ட் என பாரதிராஜா பாணியில் வலம் வருபவர். இளைஞர்களைக் கண்டதும் என்ன செய்கிறீர்கள் ? என வினவி… ச்சா அருமை என ஆதரித்து பேசும் ஊக்குவிப்பாளர். இளவயது கலைஞர்களை, இலக்கியவாதிகளை, ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் சுபாவம் நிறைந்தவர்.

# வாழ்நாள் சாதனையாளர் மு. சிவலிங்கத்தின் சிறப்பும் ‘சிவாமுதம்’ சிறப்பிதழும் !

ஜீவா சதாசிவம்



tg.theeban@gmail.com

சாதனைகள் பல செய்து 'சாஹித்ய ரத்னா' எனும் அரச உயர் இலக்கிய விருது வென்ற போதும் எளிமையே உருவ மாக எல்லோருடனும் பழகும், பேசும் ஒருவர். எல்லா இலக் கிய கூட்டங்களிலும் அரசியல் சமூக உரையாடல்களிலும் மனமகிழ்ச்சியுடன் பங்கேற்பவர். அத்தகைய உரையாடல் பொழுதுகளில் நையாண்டி கலந்துபேசும் அங்கத மனம் கொண்ட பேச்சாளர்.

## மு. சிவலிங்கம் வாழ்க்கைப் பயணமும் சாதனைகளும்:

இலங்கை சுதந்திரமடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக, 1946-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26-ஆம் நாள் தலவாக்கலை 'பெரிய மல்லியப்பு' தோட்டத்தில் முத்து முருகன் - அழகன் கண்ணம்மா எனும் இணையருக்கு மகனா கப் பிறந்தவர் சிவலிங்கம்.

தனது ஆரம்பக்கல்வியை தலவாக்கலை, மல்லியப்பு தோட் டப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை தலைவாக் கலை, சென். பெற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றவர். ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் பெருமைமிகு அதிபர்களாகத் திகழ்ந்த இர. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோரை ஆசான்களாகப் பெற்று அவர்களது பெருமை மிகு மாணவ னாக உயர் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார். களனிப் பல் கலைக்கழகத்துக்குத் தெரிவானபோதும் குழப்ப சூழ்நிலை கள் காரணமாக தொழிலுக்கு செல்லலானார்.

தனது முதல் தொழிலாக 'வீரகேசரி' பத்திரிகையில் எழுத்து கோப்பாளராக ஆரம்பித்து ஒப்பு நோக்காளராகவும் உரு வெடுத்து உதவி ஆசிரியர்களில் ஒருவராக வளர்ச்சி கண் டார். வீரகேசரி பத்திரிகை பணியில் இருந்து விலகிய மு. சிவலிங்கம், அந்த நாட்களில் தோட்டத் தொழிலாளர் களிடையே பிரபலமாகவிருந்த ஜனாப் அப்துல் அஸீஸ் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் எனும் தொழிற்சங்கத்தின் 'ஜனநாயகத் தொழிலாளி' என்ற பத்திரிகைக்கு பொறுப்பாசிரியரானார்.

இதே சமகாலத்தில் தொழிற்சங்கம்சார் மூன்று மாத கால கற்கை நெறியைப் பயில்வதற்காகப் பல்கேரியா நாட்டின் தலைநகர் சேபியாவில் அமைந்த ஜோஜ் திமித்ரோவ் பல் கலைக்கழகத்திற்கு சென்றார்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாள ராக இருந்த வி.பி. கணேசன், தயாரித்த 'புதியகாற்று' எனும் இலங்கைத் தமிழ்த் திரைப்படத்தில் அதில் மு. சிவலிங்கம் உதவி இயக்குநராகப் பணியாற்றியதோடு தோட்ட தொழி லாளி மாயாண்டி தலைவர் என்ற கதாபாத்திரத்தையும் ஏற்று நடித்தார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸிலிருந்து விலகிய மு. சிவ லிங்கம் அக்கரப்பத்தனை ஊட்டுவள்ளி தோட்டப் பாடசாலை யில் ஆசிரியராகவும் மாலைநேரத்தில் தோட்ட குமாஸ்தா வாகவும் பணி செய்தார். தொடர்ந்து மு. சிவலிங்கம் 1982-ஆம் ஆண்டு அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலயத்தில் ஆங்கில பாட ஆசிரியராக அரச பணியில் சேர்ந்தார்.

அரசியல் நாட்டம் கொண்ட மு. சிவலிங்கம் 1989-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் பெ. சந்திரசேகரனுடன் இணைந்து 'நங்கூரம்' சின்னத்தில் இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவராக தேர்தல் களத் தில் இறங்கினார். இதனால், முழுநேர அரசியல் செயற்பாட் டில் இயங்கும் வகையில் மு. சிவலிங்கம் தனது ஆசிரியத் தொழிலை விட்டு விலக நேர்ந்தது.

அதே ஆண்டில் 'மலையக மக்கள் முன்னணி' என்ற அரசி யல் கட்சியை உருவாக்கினார்கள். அந்தக் கட்சியின் உப தலைவர்களில் ஒருவராகவும் பொறுப்பேற்றார். 1999-ஆம் ஆண்டு கட்சியின் செயலாளர் நாயகமாக மத்தியக் குழு வினரால் தெரிவு செய்யப்பட்டார். மலையக மக்கள் முன் னணியின் கட்சிப் பத்திரிகையான 'புதிய காற்று' பத்திரி கையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அதே ஆண்டு மத்திய மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மத்திய மாகாண சபையின் துணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டார். 2005-ஆம் ஆண்டு தானாகவே கட்சியி லிருந்து விலகிக் கொண்டதன் பின்னர் தன்னை முழு நேர மாக இலக்கியத் துறையிலும் சமூக அரசியலிலும் ஈடுபடுத் திக்கொண்டார்.

ஹைலண்ட்ஸ் கல்லூரியில் படித்த காலத்தில் 'சுமைதாங்கி' எனும் பெயரில் 1963-ஆம் ஆண்டு எழுதிய அவரது முதல் சிறுகதையே பின்னாளில் 'பேப்பர் பிரஜைகள்' என அவரது 'மலைகளின் மக்கள்' தொகுப்பில் பிரசுரமானது. 'மலை களின் மக்கள்', 'ஒரு விதை நெல்', 'ஒப்பாரிக் கோச்சி', 'வெந்து தணிந்தது காலம்', 'சிறுவர் பண்ணைகள்' போன்ற சிறுகதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். 'மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்' எனும் ஒரு ஆய்வு நூலையும் எழுதியுள்ளார்.

'பஞ்சம் பிழைக்கவந்த சீமை' எனும் மலையக வரலாற்று புதினத்தை தமிழிலும், அதனையே 'Sweat' எனும் தலைப் பில் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார். தொடர்ந்து 'உயிர்' எனும் ஒரு நாவலையும் எழுதியுள்ளார்.

தனது இலக்கிய படைப்புகளுக்காக நான்கு முறை அரச சாகித்திய விருதுகளைப் பெற்றுள்ள மு. சிவலிங்கம், கலா சார அமைச்சின், கலாபூஷணம் விருதினையும், லண்டன் - இலங்கை இலக்கிய நிறுவனம், கொடகே வெளியீட்டு நிறு வனம் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதையும் வென்றுள்ளார். 'ஒப்பாரி கோச்சி' சிறுகதை தொகுப்புக்கு கனக செந்திநாதன் கதா விருதையும் பெற்றதோடு இவர் எழுதிய 'பஞ்சம் பிழைக்க வந்த சீமை' என்ற வரலாற்று நெடுங்கதைக்கு 2017-ஆம் ஆண்டு தஞ்சைத் தமிழ்ப் பல் கலைக்கழகம் 'கரிகாற் சோழன்' விருதினையும் வழங்கி கௌரவித்தது.

இதே நெடுங்கதைக்கு Fairway நிறுவனத்தின் சார்பில் காலி இலக்கியத் திருவிழாவில் ஐந்து லட்சம் ரூபாய் பணப்பரிசும் கிடைக்கப் பெற்றது. ஈழத்துப் பூதந்தேவனார் தமிழப் புலவர் கழகம் சிலப்பதிகார முத்தமிழ்க் காப்பிய பெருவிழாவில் 'தமிழ்ப் புரவலர்' விருதும் வழங்கி கௌரவித்தது.

2017-ஆம் ஆண்டு திண்டுக்கல், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்திலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்ற ஒரு நாள் மலையக இலக்கிய ஆய்வரங்கிலும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் உப தலைவராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் இவரின் வாழ் நாள் இலக்கியப் பணிகளைப் பாராட்டி 'சங்கச் சான்றோர்' விருதை வழங்கி கௌரவித்துள்ளது. இலங்கையின் அதியுயர் அரச இலக்கிய விருதான சாகித்திய ரத்னா 2021-ஆம் ஆண்டு மு. சிவலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

மு. சிவலிங்கத்தின் எழுத்துப் பணிக்கு எப்போதும் துணையாக விளங்கிவரும் அவரது துணைவியார் தமயந்தி சியாமளா குமாரியுடன், அவர் நுவரேலியா மாவட்டத்தில் வசித்து வருகிறார். இம்மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலையில் அவரது மூத்த மகன் மருத்துவராகப் பணியாற்றி வருவதுடன், இரண்டாவது மகன் அமெரிக்காவிலும், இளைய மகன் சிங்கப்பூரிலும் பணியாற்றி வருகின்றனர். இன்று எண்பதாவது அகவையில் கால்பதிக்கும் மு. சிவலிங்கம் எழுதிய நான்கு ஆங்கில நூல்கள் அமெரிக்காவின் அமேசொன் இணையவழித் தளத்தில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இது அவரது தொடர்ச்சியான அறிவுசார் ஈடுபாட்டையும் எழுத்தாற்றலையும் வெளிப்படுத்துவதோடு, இளைய மலையகத் தலைமுறையினருக்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாகவும் விளங்குகிறது.

## சிவாமுதம் சிறப்பிதழும் அமுதவிழாவும்:

இத்தகைய பன்முக ஆளுமை எண்பதாவது அகவையை எட்டிய அமுத விழா நாளைச் சிறப்பிக்கும் வகையில், 'சிவாமுதம்' எனும் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. அவரது நீண்டகால இலக்கிய, சமூகப் பணிகளையும் மலையக சமூகத்திற்கான பங்களிப்புகளையும் கௌரவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட இச்சிறப்பிதழ், அவரது ஆளுமைக்கும் பணிகளுக்கும் அளிக்கப்பட்ட சிறப்பான அங்கீகாரமாக அமைந்தது.

நுவரெலியா மாவட்டம் ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தின் ரி.வி.ரி.சி. கலையரங்கத்தில் கவிஞரும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகமுமான சு. முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை மு. சிவலிங்கம் குடும்பத்தார் உறவினர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். மு. சிவலிங்கம் கல்வி கற்ற ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தனர்.

நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி ஒழுங்கமைத்த எழுத்தாளரும் பதிப்பாளருமான மல்லியப்புசந்தி திலகர் வரவேற்புரை வழங்கினார். அவர் தனது உரையில், '200 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் பேசிய மொழியை அந்நியர்கள் 'கூலித்தமிழ்' என அடையாளப்படுத்திய நிலையில், அதனை 'மலையகத் தமிழ்' என மொழியாகவும், இலக்கியமாகவும், தேசிய இன அடையாளமாகவும் மாற்றியமைத்த பெருமை மலையக சமூகத்துக்கு உண்டு. அந்தப் பெருமை மலையகக் கலை இலக்கியத்துக்கே உரிய பெருமிதமாகும்' எனக் குறிப்பிட்டார்.

மேலும், அந்தக் கலை இலக்கியச் செல்நெறியில் கால்பதித்து, அரசியல் மற்றும் தொழிற்சங்கத் தளங்களில் சமூக இயக்கத்திலும் பங்கேற்ற மு. சிவலிங்கத்தின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் ஆக்கங்களின் தொகுப்பாகவே 'சிவாமுதம்' வெளியிடப்படுகிறது என அவர் தெரிவித்தார். நூலாக்கக் குழுவினரால் மு. சிவலிங்கம் தம்பதியினருக்கும், நிகழ்வில் முன்னிலை வகித்த மூத்த சட்டத்தரணி டி. தாயுமானவர் மற்றும் எழுத்தாளர் மொழிவரதன் ஆகியோருக்கும் 'சிவாமுதம்' சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் காணொளி ஊடாக தனது வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்துகொண்டார். மூத்த விரிவுரையாளரும் கலாநிதியுமான பெ. சரவணகுமார், 'சிவாமுதம்' இதழில் 'கலை இலக்கியப் பார்வை' எனும் தலைப்பில் உரையாற்றினார். மு. சிவலிங்கத்தின் எழுத்துகளிலும் செயற்பாடுகளிலும் அரசியல் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகத் திகழ்கிறது எனக் குறிப்பிட்ட அவர், அவரது படைப்புகள் உழைக்கும் வர்க்கத்தை முன்னிறுத்தியதுடன், இளைஞர்களின் பங்களிப்பையும் முக்கியத்துவத்தையும் கொண்டாடியுள்ளன எனத் தெரிவித்தார்.

சிரேஷ்ட விரிவுரையாளரும் கலாநிதியுமான எம்.எம். ஜெயசீலன், 'சிவாமுதம்' இதழில் 'சமூக அரசியல் பார்வை' எனும் தலைப்பில் உரையாற்றினார். கலை, இலக்கியச் செயற்பாட்டாளர்கள் அரசியல் களத்தில் இயங்கியிருப்பது உலகளாவிய ரீதியில் இடம்பெற்றுள்ள ஒரு பொதுவான நிகழ்வாக















இருந்தாலும், மலையகச் சூழலில் அதன் வீச்சும் தாக்கமும் தனித்துவமானதாகவும் உயர்வானதாகவும் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டார். இதனை எடுத்துக்காட்டும் வகையில், 'சிவாமுதம்' இதழில் மல்லியப்புசந்தி திலகர், மு. சிவலிங்கத்தை முன்னிறுத்தி எழுதியுள்ள கட்டுரை வியக்கத்தக்க பல தகவல்களை வெளிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

மு. சிவலிங்கத்தின் சக சமூக ஊடாட்டம் குறித்து சமூகவியலாளர் சிராஜ் மஷ்ஹூர், 'மு. சிவலிங்கத்தின் நிறை வாழ்க்கை - காலம் நின்று பேசும்' எனும் தலைப்பில் உரையாற்றினார். மத்திய மாகாண சபையில் மு. சிவலிங்கத்தின் வகிபாகம் குறித்து முன்னாள் அவைத் தலைவர் துரை மதியுகராஜா உரையாற்றினார். மு. சிவலிங்கத்தின் தனித்துவமானதும் இதுவரை அதிகம் வெளிப்படுத்தப்படாததுமான ஒரு பக்கத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைந்த இவரது உரை, தனியான ஒரு தொகுப்பாக வெளிவர வேண்டிய அளவுக்குப் புதுமையான தகவல்களை முன்வைத்தது. மு. சிவலிங்கத்தின் அரசியல் மற்றும் சமூகத் தடம் குறித்து திருமதி சந்திரலேகா கிங்ஸ்லியும், அவரது கலை இலக்கியத் தடம் குறித்து சு. தவச்செல்வனும் உரையாற்றினர்.

நிகழ்வில், சிறப்பம்சமாக மு. சிவலிங்கம் எழுதிய 'ஒப்பாரிக்கோச்சு' சிறுகதையினைத் தழுவி டின்சின் தமிழ் வித்தியாலய அதிபர் பொன். பிரபாகரனின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களால் நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டது.

மு.சிவலிங்கத்தின் திரைத்துறைக் கலைக்கான பங்களிப்பை நினைவுபடுத்தும் வகையில் 'சிவலிங்கத்தின் வாழ்க்கைச் சுவடு' எனும் ஆவணப்படமும் திரையிடப்பட்டது.

## மலையகத் தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது:

இரு நூற்றாண்டுகால மலையக வரலாற்றில், நூற்றாண்டுக்கு முன்னர் மலையகத் தேசபிதா கோ. நடேசய்யர் தொடங்கிவைத்த தொழிற்சங்க, அரசியல், ஊடக, நாடக, கலை இலக்கிய, மொழிபெயர்ப்பு, நூற்பதிப்பு முதலான புலமை மரபைப் பேணிவந்தவர்களுள் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர். அவரது தொடர்ச்சியாக, சமகாலத்தில் இத்தகைய மரபைப் பிரதிபலித்து நிற்பதோடு, திரைத்துறையிலும் கால்பதித்து தனித்துவமான சாதனைகளைப் படைத்த 'சாகித்ய ரத்னா' மு. சிவலிங்கம் அவர்களை, மலையக சமூக, கலை இலக்கியப் புலமை மரபின் சமகால அடையாளமாகக் கௌரவிக்கும் வகையில், 'மலையகத் தமிழ்ச் சங்கம்' தனது வாழ்நாள் சாதனையாளர் விருதை அவரது அமுதவிழா நாளில் வழங்கிக் கௌரவித்தது.

விழாவுக்குத் தலைமை வகித்த கவிஞர் சு. முரளிதரன், முன்னிலை வகித்த மூத்த சட்டத்தரணி டி. தாயுமானவர், மொழிவரதன் சி. மகாலிங்கம் மற்றும் மு. சிவலிங்கத்தின் மூத்த சகோதரர் முருகன் முத்து ஆகியோர் இணைந்து விருதினை வழங்கினர். மு. சிவலிங்கத்தின் துணைவியார் திருமதி சியாமளா சிவலிங்கத்துக்கும் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து கௌரவம் வழங்கப்பட்டது.

மு. சிவலிங்கத்தின் கரங்களால், நாடகத்தில் பங்கேற்ற பாடசாலை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. சபை நிறைந்த பங்கேற்பாளர்கள் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வருகை தந்த அனைவருக்கும் 'சிவாமுதம்' சிறப்பிதழ்கள் வழங்கப்பட்டன. இதழின் தொகுப்பாளர் மு. சிவானந்தனின் நன்றியுரையுடன், மு. சிவலிங்கத்தின் அமுதவிழா அழகியதோர் வரலாற்று நிகழ்வாக நிறைவுபெற்றது.



jeeva.s@thaiveedu.com

# ‘சாகித்திய ரத்னா’

# மு. சிவலிங்கம்

▪ மல்லியப்புசந்தி திலகர்



1946-ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26-ஆம் நாள் தலவாக்கலை பெரிய 'மல்லியப்பு' தோட்டத்தில் முத்து முருகன் - அழகன் கண்ணம்மா எனும் இணையருக்கு மகனாகப் பிறந்தவர் சிவலிங்கம்.

தனது ஆரம்பக்கல்வியை தலவாக்கலை, மல்லியப்பு தோட்டப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை தலைவாக்கலை, சென். பெற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றவர். ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் பெருமைமிகு அதிபர்களாகத் திகழ்ந்த இர. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோரை பேராசான்களாகப் பெற்று, அவர்களது பெருமைமிகு மாணவனாக உயர் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார். களனிப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு கிடைத்தும் குடும்ப சுமை காரணமாக தொழிலுக்குச் சென்றுவிட்டார்.

தனது முதல் தொழிலாக ‘வீரகேசரி’ பத்திரிகையில் எழுத்து கோப்பாளராக ஆரம்பித்து ஒப்பு நோக்காளராகவும் உருவெடுத்து உதவி ஆசிரியர்களில் ஒருவராக வளர்ச்சி கண்டார். வீரகேசரி பத்திரிகை பணியில் இருந்து விலகிய மு. சிவலிங்கம், தோட்டத் தொழிலாளர்களிடையே பிரபலமாகவிருந்த ஜனாப் அப்துல் அஸீஸ் அவர்களின் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் எனும் தொழிற்சங்கத்தின் ‘ஜனநாயகத் தொழிலாளி’ என்ற பத்திரிகைக்கு பொறுப்பாசிரியரானார்.

இதே சமகாலத்தில் தொழிற்சங்கம்சார் மூன்று மாத கால கற்கை நெறியைப் பயில்வதற்காக பல்கேரியா நாட்டின் தலைநகர் சோபியாவில் அமைந்த ஜோஜ் திமித்ரோவ் பல்கலைக்கழகத்திற்கு சென்றார்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக இருந்த வி.பி. கணேசன் தயாரித்த ‘புதிய காற்று’ எனும் இலங்கைத் தமிழ்த் திரைப்படத்தில் மு. சிவலிங்கம் உதவி இயக்குநராக பணியாற்றியதோடு தோட்ட தொழிலாளி மாயாண்டி தலைவர் என்ற கதா பாத்திரத்தையும் ஏற்று நடித்தார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸிலிருந்து விலகிய மு. சிவலிங்கம் அக்கரப்பத்தனை ஊட்டுவள்ளி தோட்ட பாடசாலையில் ஆசிரியராகவும் மாலை நேரத்தில் தோட்ட குமாஸ்தாவாகவும் பணி செய்தார்.

தொடர்ந்து மு. சிவலிங்கம் 1982-ஆம் ஆண்டு அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலயத்தில் ஆங்கில பாட ஆசிரியராக அரச பணியில் சேர்ந்தார்.

அரசியல் நாட்டம் கொண்ட மு. சிவலிங்கம் 1989-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் பெ. சந்திரசேகரனுடன் இணைந்து 'நங்கூரம்' சின்னத்தில் இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவராக தேர்தல் களத்தில் இறங்கினார்.

இதனால் முழுநேர அரசியல் செயற்பாட்டில் இயங்கும் வகையில் மு. சிவலிங்கம் தனது ஆசிரியத் தொழிலை விட்டு விலக நேர்ந்தது.

அதே ஆண்டில் ‘மலையக மக்கள் முன்னணி’ என்ற அரசியல் கட்சியை உருவாக்கினார்கள். அந்தக் கட்சியின் உப தலைவர்களில் ஒருவராகவும் பொறுப்பேற்றார்.

1999-ஆம் ஆண்டு கட்சியின் செயலாளர் நாயகமாக மத்தியக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டார். அதே ஆண்டு மத்திய மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மத்திய மாகாண சபையின் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

2005-ஆம் ஆண்டு தானாகவே கட்சியிலிருந்து விலகிக் கொண்டதன் பின்னர் தன்னை முழு நேரமாக இலக்கியத் துறையிலும் சமூக அரசியலிலும் ஈடுபடுத்திக்கொண்டார்.

ஹைலண்ட்ஸ் கல்லூரி காலத்தில் ‘சுமைதாங்கி’ எனும் பெயரில் 1963-ஆம் ஆண்டு எழுதிய அவரது முதல் சிறுகதையே பின்னாளில் ‘பேப்பர் பிரஜைகள்’ என அவரது ‘மலைகளின் மக்கள்’ தொகுப்பில் பிரசுரமானது.

‘மலைகளின் மக்கள்’, ‘ஒரு விதை நெல்’, ‘ஒப்பாரிக் கோச்சி’, ‘வெந்து தணிந்தது காலம்’, ‘சிறுவர் பண்ணைகள்’, ‘கிடனி கிடைக்குமிடம்’ போன்ற சிறுகதை தொகுப்புகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் Born to Labour என்ற ஆங்கில நூலை ‘தேயிலைத் தேசம்’ என்ற பெயரில் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்.

‘மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்’ எனும் ஒரு ஆய்வு நூலையும் எழுதியுள்ளார்.

‘பஞ்சம் பிழைக்கவந்த சீமை’ எனும் மலையக வரலாற்று புதினத்தை தமிழிலும், அதனையே Sweat எனும் தலைப்பில் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார்.

தொடர்ந்து ‘உயிர்’ எனும் ஒரு நாவலையும் எழுதியுள்ளார்.

தனது இலக்கிய படைப்புகளுக்காக நான்கு முறை அரச சாகித்திய விருதுகளைப் பெற்றுள்ள மு. சிவலிங்கம், கலாசார அமைச்சின், கலாபூஷணம் விருதினையும், லண்டன் - இலங்கை இலக்கிய மன்றம் கொடகே வெளியீட்டு நிறுவனம் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதையும் ‘ஒப்பாரி கோச்சி’ தொகுப்புக்கு கனக. செந்திநாதன் 'கதா' விருதையும் பெற்றதோடு இவர் எழுதிய ‘பஞ்சம் பிழைக்க வந்த சீமை’ என்ற வரலாற்று நெடுங்கதைக்கு 2017-ஆம் ஆண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் - ‘கரிகாற் சோழன்’ விருது வழங்கி கௌரவிதத்து. இதே நெடுங்கதைக்கு Fairway நிறுவனத்தின் சார்பில் காலி இலக்கியத் திருவிழாவில் ஐந்து லட்சம் ரூபாய் பணப்பரிசும் கிடைக்கப் பெற்றது.

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் சிலப்பதிகார முத்தமிழ்க் காப்பிய பெருவிழாவில் ‘தமிழ்ப் புரவலர்’ விருது வழங்கி கௌரவித்தது. 2017-ஆம் ஆண்டு திண்டுக்கல், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்திலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற ஒரு நாள் மலையக இலக்கிய ஆய்வரங்கிலும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் உப தலைவராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் இவரின் வாழ்நாள் இலக்கியப் பணிகளைப் பாராட்டி ‘சங்கச் சான்றோர்’ விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

இலங்கையின் அதியுயர் அரச இலக்கிய விருதான சாகித்திய ரத்னா 2021-ஆம் ஆண்டு மு. சிவலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

வாழ்க்கைத் துணையாக சியாமளா குமாரியை மணம் முடித்த மு. சிவலிங்கம், மூன்று ஆண் மகன்களின் தந்தை யாவார். மூத்த மகன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியராகவும் அடுத்த மகன் அமெரிக்காவிலும் இளைய மகன் சிங்கப்பூரிலும் வசிக்கின்றனர்.

அவர் எழுதி இருந்த நான்கு நூல்கள் அமெரிக்காவின் அமெசொன் இணையத்தில் வெளியாகியுள்ளமை இளைய மலையக தலைமுறைக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டாகும்.

2026 ஓகஸ்ட் 26-ஆம் திகதி தனது எண்பதாவது அகவையை அடைந்த நாளில் மலையக சமூக, கலை இலக்கியப் புலமை மரபின் சமகால அடையாளமாக, இருநூறாண்டுகால மலையக வரலாற்றில் நூறாண்டு காலத்துக்கு முன்னர் மலையக தேசபிதா கோ. நடேசயய்யர் தொடங்கி வைத்த தொழிற்சங்க, அரசியல், ஊடக, நாடக, கலை இலக்கிய, மொழிபெயர்ப்பு, நூல்பதிப்பு முதலான புலமை மரபைப் பேணிவந்தவர்களுள், கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளையின் தொடர்ச்சியாக, சமகாலத்தில் அத்தகைய மரபைப் பிரதிப்பலித்து நிற்பதோடு, திரைத்துறையிலும் கால் பதித்து தனித்துவம் காட்டிய சாதனைகளுக்காக ‘சாகித்ய ரத்னா’ மு. சிவலிங்கம் அவர்களுக்கு ‘மலையகத் தமிழ்ச் சங்கம்’ - வாழ்நாள் சாதனையாளர் விருதினை அவரது அமுதவிழா நாளில் வழங்கி கௌரவம் செய்தது.

இடைவிடாது எழுதிக் கொண்டும் செயற்பட்டுக் கொண்டும் இருந்த மு. சிவலிங்கம் மலையகத் தொழிற்சங்க வரலாற்றை எழுதிக்கொண்டிருந்தார். இந்த நிலையில் வயது மூப்பு உடல்நலக் குறைவு காரணமாக 24.09.2026 அன்று நுவரெலியாவில் காலமானார். அன்னாரது இறுதி மரியாதை நிகழ்வுகள் 27-ஆம் திகதி கொட்டகலையில் இடம்பெற்றது.



thilagar@thaiveedu.com

■ புட்பா கிறிட்டி

# தமிழ்ப் பட்டிமன்ற உலகில் நீங்கா இடம்பிடித்த சாலமன் பாப்பையா



tg.theeban@gmail.com

‘அன்பு பெரியோர்களே!... அருமைத் தாய்மார்களே!... இனிய குழந்தைகளே’ என பட்டிமன்றங்களில் பல்லாண்டுகளாக ஒலித்து, உலகத் தமிழர்களை மகிழ்வித்த தமிழறிஞர் சாலமன் பாப்பையாவின் குரல் ஓய்வெடுத்துக்கொண்டது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள சாத்தங்குடி கிராமத்தில் 1936-இல் பிறந்தவர் சாலமன் பாப்பையா. மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். வெறும் வகுப்பறையோடு தனது தமிழ்ப் பணியைச் சுருக்கிக் கொள்ளாமல், 1961-ஆம் ஆண்டு முதல் சுமார் 65 ஆண்டுகள் அவரது கம்பீரக்குரல் மேடைகளில் ஒலித்தது. ‘வைகை வளவன்’ என்ற புனைபெயரில் மேடைகளில் பேசியவர், பிற்காலத்தில் ‘சாலமன் பாப்பையா’ எனப் பெற்றோர் வைத்த பெயருடன் பேசத் தொடங்கினார். தோழர் ஜீவாவுக்கு பிடித்த பேச்சாளராக இருந்தவர். தமிழ் மொழிக்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி, 2000-ஆம் ஆண்டு, தமிழக அரசு இவருக்கு கலைமாமணி விருது வழங்கி கௌரவித்தது. அதனைத் தொடர்ந்து 2021-ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு ‘பத்மஸ்ரீ’ விருது வழங்கி கௌரவித்தது. மேலும், இவரது தமிழ்ப் புலமையால் உலகெங்கும் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன.

கிராமத்துத் திருவிழாக்கள் தொடங்கி, தீபாவளி, பொங்கல் விழாக் காலங்களில் தொலைக்காட்சி வரை இவரது சிறப்புப் பட்டிமன்றத்தை மொத்தக் குடும்பத்தினரும் கண்டு ரசிப்பது தமிழர்களின் விருப்பமான ஒன்றானது. தமிழறிஞர் சாலமன் பாப்பையா, கடந்த செப்ரெம்பர் 11 அன்று, அவரின் பிடித்தமான பாரதியாரின் நினைவு நாளில் தன் வாழ்க்கைப் பயணத்தை தனது 90-வது வயதில் நிறுத்திக் கொண்டார்.

மதுரை ஞானஒளிபுரத்தில் வசித்துவந்த பாப்பையா, உடல்நலக் குறைவு காரணமாக அப்போலோ மருத்துவமனையில் இரண்டு நாட்களாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றிக் காலமானார். அவரது மறைவுச் செய்தி அறிந்தவுடன் அரசியல் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள், இலக்கியவாதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நேரிலும் சமூகவலைத் தளங்களிலும் அஞ்சலி செலுத்தி வந்தனர்.

சாதி, மதச் சடங்குகளுக்கு அப்பாற்பட்டு அவரது உடலை தகனம் செய்ய வேண்டுமென்று சாலமன் பாப்பையா உயிலில் தெரிவித்ததைப் போலவே மதுரை தத்தனேரி மின் மயானத்தில், தமிழ்நாடு அரசின் காவற்றுறையின் துப்பாக்கிக் குண்டுகள் முழக்கம் இல்லாத கௌரவ அரசு மரியாதை வழங்கப்பட்டது. அரசு சார்பில் அமைச்சர்கள் இறுதி மரியாதை செலுத்தினர். தி.மு.க.-வின் மாமன்ற தலைவர் மா. ஜெயராமனும் சாலமன் பாப்பையாவின் மகனும் அவரது உடலை தூக்கித் தகன மேடையில் வைக்க, உடல் தகனம் செய்யப்பட்டது.

மதுரை அரசரடியில் உள்ள ஞானஒளிபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வந்த சாலமன் பாப்பையா, தனியார் தொலைக்காட்சியின் பட்டிமன்றங்களில் நடுவராகப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். நகைச்சுவை ததும்பும் அவரது இயல்பான பேச்சுக்கு மக்கள் மத்தியில் பெருவரவேற்பு கிடைத்தது. இதன் காரணமாக, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உட்பட உலகின் பல நாடுகளுக்கும் சென்று அவர் பட்டிமன்றங்களை நடத்தியுள்ளார். மரணமடைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, சிவகாசியில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சியில்தான் அவர் இறுதியாகப் பங்கேற்றுப் பேசினார்.

அதன் பிறகு அவர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டதாகப் பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா தெரிவிக்கின்றார். ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், 'இது எங்களுக்குப் பேரிடியாக உள்ளது; அவர் இல்லையென்பதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தகப்பனாகவும் தாத்தாவாகவும் அவர் திகழ்ந்தார்' எனத் தனது ஆற்றாமையை வெளிப்படுத்தினார்.

சிவகாசியில் நடந்த பட்டிமன்றத்தின்போது சாலமன் பாப்பையா இயல்பாக இருந்தததாகக் கூறும் ராஜா, 'வீட்டுக்கு வந்தவுடன் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டதாகக் கூறினார். இந்நிலையில் காலையில் திடீரென மயக்கம் ஏற்பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்' எனக் கூறியுள்ளார். அவர் செய்த சாதனைகளுக்கு அளவில்லை. அவருடன் சுமார் 50 ஆண்டுகளாக உடன் இருந்துள்ளேன்' எனக் கூறும் ராஜா, 'அவர் இல்லை என்ற துயரமான செய்தியை மனதில் வாங்கிக் கொள்ள முடியவில்லை' எனத் தெரிவித்துள்ளார்.

### முதலமைச்சர் இரங்கல்:

தமிழின் பெருமையையும், தமிழர்களின் வாழ்வியலையும் பட்டிமன்ற மேடை கள் வழியாக உலகறியச் செய்த சாலமன் பாப்பையா மறைந்த செய்தியறிந்து துயரமும், வேதனையும் அடைந்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் எக்ஸ் பதிவில், 'நகைச்சுவை கலந்த பேச்சாலும், ஆழ்ந்த தமிழ்ப் புலமையாலும், சமூகச் சிந்தனைகளை எளிய முறையில் மக்களிடம் கொண்டு சேர்த்ததோடு, பட்டிமன்றங்களை வெறும்



பொழுது போக்கு நிகழ்வுகளாக அல்லாமல், சிந்தனையைத் தூண்டும் அறிவுத் தளங்களாக மாற்றியவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பண்டிகையும் பட்டிமன்றமும்:

'உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்பைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரும் அடைந்தேன்.' என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவரது எக்ஸ் பக்கத்தில், 'பொங்கல், புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகை நாட்கள் பாப்பையாவின் பட்டிமன்றத்தோடுதான் தமிழர்களுக்குத் தொடங்கும் எனும் அளவுக்குத் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையோடு இரண்டற இயைந்துவிட்ட பெருமைக்குரியவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'கடந்த ஆண்டு மே மாதம் மக்கள் சந்திப்புக்காக மதுரை சென்றிருந்தபோது அவரது வீட்டு வாசலுக்கு வந்து என்னை வரவேற்றார். இன்று நம்மை விட்டுப் பிரிந்ததை மனம் ஏற்க மறுக்கிறது.' என்று தனது பதிவில் அவர் குறிப்பிட்டார்.

### சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர்:

தமிழின் இனிமையையும், பட்டிமன்றத்தின் சிறப்பையும் தனது தனித்துவமான பேச்சாற்றலால் உலகெங்கும் கொண்டு சேர்த்த சாலமன் பாப்பையாவின் மறைவுச் செய்தி வேதனையும் அதிர்ச்சியையும் அளிப்பதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



தமிழ் இலக்கியத்தைச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பட்டிமன்றத்தைச் சாலமன் பாப்பையா நடத்தி வந்தார். பட்டிமன்றங்களில் இரு தரப்பினரும் முன்வைக்கும் கருத்துகளை நகைச்சுவை கலந்து பகுப்பாய்ந்து அவர் அளிக்கும் தீர்ப்புகள் வரவேற்பைப் பெற்றன. நடுவராக மட்டுமன்றி எழுத்தாளராக 'புறநானூறு புதிய வரிசை வகை', 'பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒரு பார்வை', 'திருக்குறள் உரையுடன்' எனப் பல்வேறு நூல்களை சாலமன் பாப்பையா எழுதியுள்ளார்.

2010-ஆம் ஆண்டு முத்தமிழ்ப் பேரறிஞர் என்ற விருதை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது. பேச்சாளர் சுகி சிவம் தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், 'பாமரர்களுக்கு பண்டிதர்களின் தமிழைக் கொண்டு சென்ற பாரதியை போலவே பேச்சுலகில் பாமரர்களுக்கு பண்டிதர்களின் இலக்கியத்தைக் கொண்டு சென்ற பட்டிமன்ற பேரரசராக சாலமன் பாப்பையா இருந்தார்' எனக் கூறியுள்ளார்.

ஒரு பேச்சாளருக்கு உலகம் தழுவிய அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை அவரைச் சேரும் எனத் தெரிவித்துள்ள சுகி சிவம், 'மதுரையில் 40-ஆண்டுகளுக்கு முன்பு பேசிய சாலமன் பாப்பையாவை நான் பார்த்திருக்கிறேன். அப்போது அவர் பேச்சுகளில் அனல் பறக்கும்' என்றார்.

'அவரது வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது இரத்தக் கண்ணீர் வரும். அவ்வளவு சிரமங்களை சந்தித்தார். தனது கடைசிக் காலகட்டங்களிலும் சுறுசுறுப்பாக இருந்தார். ஒரு நொடியைக்கூட வீணாக்க மாட்டார்' என்று சுகி சிவம் தெரிவித்துள்ளார்.

தமிழ் உரைநடைக்கும் பட்டிமன்றக் கலைக்கும் புத்துயிர் ஊட்டி, சாமானிய மனிதர்களிடமும் தமிழ் இலக்கியச் சுவையை எளிமையாகக் கொண்டு சேர்த்த ஒரு மகத்தான மக்கள் தமிழறிஞரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சாதி, மத எல்லைகளைக் கடந்து, எளிய மக்களின் வாழ்வியலையும் மொழியையும் நேசித்த அவரது வாழ்வும், தமிழ்க்குடிக்கு அவர் வழங்கிச் சென்ற இலக்கியப் பங்களிப்பும் என்றென்றும் நினைவு கூரப்படும். தமிழும் பட்டிமன்றக் கலையும் வாழும் வரை அண்ணல் சாலமன் பாப்பையாவின் பெயரும் புகழும் அழியாது நிலைத்திருக்கும்.



Pushpa.Christy@thaiveedu.com

# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

**15**

## தொல்காப்பியத்தில் தொடரியல் – 2


நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

tg.theeban@gmail.com


**தொ**ல்காப்பியரின் தொடரியல் சிந்தனையில் நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கண நிலைப்பாடு ஒருபுறமிருக்க, நவீன தொடரியல் அமைப்பைச் சிறப்பாக விளக்கிய தமிழ்நாட்டு மொழியியல் அறிஞர்களின் பங்களிப்பை இத் தொடர் மிக ஆழமாக அலசி ஆராய்கிறது. அந்த வகையில், மரபு இலக்கணத்திற்கும் தற்கால மொழியியல் அறிவியல் கோட்பாடுகளுக்கும் இடையே வலுவானதொரு பாலத்தை அமைத்த பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்களின் பார்வை, தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை அமைப்புமுறை, பயன்பாடு ஆகிய இரு தளங்களிலும் மீள்வாசிப்புச் செய்து, வாக்கியங்களின் அக-புற அமைப்பை உரையாசிரியர்களின் விளக்கங்களோடு ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்வதாக அமைந்தது. இவருக்கு இணையாக, இத்துறையின் முன்னோடியான பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்கள், தொல்காப்பியர் சொற்களை விவரிக்கும் போதே அவை வாக்கியங்களில் தோன்றும் தொடரியல் சூழலையும் இணைத்தே பேசியுள்ளார் என்பதைத் தனது விரிவான வாக்கிய அமைப்பியல் ஆய்வுகளின் வழி நிலைநிறுத்தினார்.

இவர்களது ஆய்வுப் பாதையில் கணிதவியல் வடிவிலான கோட்பாட்டுத் தெளிவையும் தனித்துவமான புதிய அணுகுமுறையையும் புகுத்திய பேராசிரியர் பொற்கோ அவர்கள், கிளவியாக்கப் பகுதியை வழுவற்ற வாக்கியங்களை உருவாக்குவதற்கான ஒரு தூய தொடரியல் கூறாக அடையாளப்படுத்தி, தமிழில் எழுவாய்-பயனிலை இயைபுகளைத் துல்லியமாக வரையறுத்துக் காட்டினார். மேலும், உலகளாவிய மொழியியல் தளத்தில் தமிழின் தனித்துவத்தைப் பறைசாற்றிய பேராசிரியர் இ. அண்ணாமலை அவர்கள், தமிழில் சொற்கள் இடம் மாறுவதற்கான நெகிழ்வுத்தன்மை (Free Word Order) இருந்தாலும், வாக்கியத்தின் ஆழமான அக அமைப்பைத் தொல்காப்பியம் எவ்வாறு எச்சத் தொடர்களின் வழி நுட்பமாகக் கட்டுப்படுத்துகிறது என்பதைப் புலப்படுத்தி, தொடரியலை மொழியின் உளவியல் மற்றும் சமூகப் பயன்பாட்டோடு இணைத்துக் காட்டினார். இவர்களோடு இணைந்து, தமிழ் வினையியல் மற்றும் தொடரியல் ஆய்வுகளில் புதியதொரு திருப்புமுனையை ஏற்படுத்திய பேராசிரியர் கு. பரமசிவம் அவர்கள், தன் வினை-பிறவினை போன்ற வினைக் கூறுகள் வாக்கிய அமைப்பிலும் அதன் பொருண்மையிலும் எத்தகைய ஆழமான ஆளுகையைச் செலுத்துகின்றன என்பதை விளக்கி, தமிழ் வாக்கிய அமைப்பியல் ஆய்வுகளுக்குப் புதியதொரு திசையைக் காட்டினார். ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இத்தமிழ்க் கூர் அறிஞர்களின் பார்வைகளும் ஆய்வுகளும் தொல்காப்பியத் தொடரியல் என்பது காலங்கடந்த, எக்காலத்து நவீன மொழியியலுக்கும் வழிகாட்டக் கூடிய ஒரு சர்வதேசப் பொதுமைத் தத்துவம் என்பதை அறிவியல்பூர்வமாக நிறுவிக் காட்டுகின்றன. இந்த அறிஞர்களின் கூற்றுகளைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

### செ.வை. சண்முகம்:

பேராசிரியர் செ.வை. சண்முகம் (S.V. Shanmugam) இருபதாம் நூற்றாண்டின் நவீன தமிழ் மொழியியல் உலகிலும் தொல்காப்பியக் கோட்பாட்டு ஆய்வுகளிலும் மிக ஆழமான,



தத்துவார்த்தப் பங்களிப்பை வழங்கிய அறிஞராவார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் உயர் ஆய்வு மையத்தில் பேராசிரியராக விளங்கிய இவர், மரபு இலக்கணத்திற்கும் நவீன மொழியியலுக்கும் இடையிலான பாலமாகத் திகழ்ந்து, தொல்காப்பியத்தை மேலைநாட்டு மொழியியல் கோட்பாடுகளின் துணைகொண்டு மீள்வாசிப்புச் செய்த முதன்மை ஆய்வாளராவார். நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடுகளை மிக ஆழமாக உள்வாங்கிய இவர், தொல்காப்பியத் தொடரியல் என்பது வெறும் சொற்களின் புறவடிவ அடுக்கு (Surface Structure) மட்டுமல்ல, அது மொழியின் ஆழமான பொருண்மையோடு இயைந்த ஓர் அகக்கட்டமைப்பு (Deep Structure) என்பதைத் தனது அசைக்க முடியாத சான்றுகளின் வழி நிறுவினார். இவரது புகழ்பெற்ற 'தொல்காப்பியத் தொடரியல்' என்ற ஆய்வு நூல், 'சொல்லதிகாரத்தின் ஒன்பது இயல்களையும் தொடரியல் நோக்கில் அணுகி, அவற்றில் வெளிப்படும் பெயர்த்தொடர், வினைத்தொடர், வேற்றுமைத் தொடர், தொகைத் தொடர், எச்சத் தொடர் போன்ற தொடரமைப்புக் கூறுகளை ஆராய்கிறது. ஒரு மொழியின் 'அமைப்புமுறை' (System) மற்றும் 'பயன்பாடு' (Function) ஆகிய இரண்டு தளங்களையும் சமமாகப் பேணும் வகையில் தொல்காப்பியர் எவ்வாறு இலக்கணம் வகுத்துள்ளார் என்பதை உலகளாவிய மொழியியல் தரத்தில் நிலைநிறுத்திய பேராசிரியர் செ.வை. சண்முகம், தமிழ் வாக்கிய அமைப்பியலை அறிவியல்பூர்வமாக அணுகிய தனித்துவமிக்க சிந்தனையாளராவார்.



***செ.வை. சண்முகம்***

தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடுகள் என்பது வெறும் வரட்டுத்தனமான இலக்கண விதிகளின் தொகுப்பு மட்டுமல்லாமல், மொழியின் ஆழமான உளவியல், பொருண்மை மற்றும் சூழல் சார்ந்த கட்டமைப்பை விளக்கும் ஒரு மாபெரும் மொழியியல் அறிவியல் கொடையாகும். சொல்லதிகாரத்தின் கிளவியாக்கம், வேற்றுமையியல், எச்சவியல் போன்ற பகுதிகளில் அவர் வகுத்துள்ள விதிகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழின் வாக்கியக் கட்டமைப்பை அவர் எத்துணை நுட்பமாக ஆராய்ந்துள்ளார் என்பதற்குச் சான்றாக விளங்குவதுடன், நவீன மொழியியலோடு வியக்கத்தக்க வகையில் பொருந்திப் போகின்றன. குறிப்பாக, நோம் சோம்ஸ்கியின் மாற்றுருவாக்கப் பிறப்பிலக்கணக் கோட்பாடு மற்றும் அக அமைப்பு, புற அமைப்பு ஆகிய கருத்துகளைத் தொல்காப்பியரின் எச்சவியல் மற்றும் வேற்றுமை மயங்கியல் விதிகளோடு ஒப்பிட முடியும் என்பதுடன், மொழியின் ஆழமான பொருளதிகார அமைப்பிலிருந்து புறத்தே தொடர்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதைத் தொல்காப்பியர் அன்றே சுட்டிக்காட்டியுள்ளார்.

> ***“தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடுகள் என்பது வெறும் வரட்டுத்தனமான இலக்கண விதிகளின் தொகுப்பு மட்டுமல்லாமல், மொழியின் ஆழமான உளவியல், பொருண்மை மற்றும் சூழல் சார்ந்த கட்டமைப்பை விளக்கும் ஒரு மாபெரும் மொழியியல் அறிவியல் கொடையாகும்.”***

இத்தகைய மூலநூலின் தொடரியல் பின்னணியை விளங்கிக் கொள்வதற்கு அதற்கு உரை வழங்கிய உரையாசிரியர்களின் விளக்கங்கள் இன்றியமையாத தரவுகளாகத் திகழ்கின்றன. இப்புரிதலை உண்டாக்கும் முதன்மை முயற்சியாக, தொல்காப்பிய இலக்கணத்தைத் தற்கால மொழியியல் கோட்பாடுகளின் துணைகொண்டு மீள்வாசிப்புச் செய்த பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்களின் 'தொல்காப்பியத் தொடரியல்' நூல் அமைகிறது. இந்நூலில் கிளவியாக்கத்தின் பேசுபொருள் பற்றித் தொல்காப்பிய நூற்பாக்களையும் உரையாசிரியர்களின் கருத்துகளையும் ஒப்பிட்டு, தொல்காப்பியரின் தொடரியல் கூறுகள் எவ்வாறு ஒரு மொழியின் 'அமைப்பு முறை' மற்றும் 'பயன்பாடு' ஆகிய இரண்டையும் சமமாகப் பேணுகின்றன என்பதை அவர் நிலைநிறுத்தியுள்ளார். மரபுவழி உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார் தொடரியல் நோக்கில் மிக முக்கியமான உரைநெறியைக் கொண்டவர் ஆவார். வேற்றுமை உருபுகள் மட்டுமன்றிச் சொற்களின் பொருளும் வாக்கியத்தின் அமைப்பும் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் மிக நுட்பமாக விளக்கியுள்ளார்.

நோம் சோம்ஸ்கியின் கோட்பாடுகள் உலக அளவில் விவாதிக்கப்பட்ட அதே காலகட்டத்தில், தெய்வச்சிலையார் மற்றும் செ.வை. சண்முகம் ஆகியோரின் பார்வைகளைப் போன்றே தொல்காப்பியத் தொடரியலை உலகளாவிய மொழியியல் தளத்திற்கு எடுத்துச் சென்ற பெருமை தமிழ்நாட்டின் பிற முன்னணி மொழியியலாளர்களுக்கும் உண்டு. அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் மொழியியல் வரலாற்றில் மிக முதன்மையானவராக கருதத்தக்க பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்கள், சோம்ஸ்கியின் கோட்பாட்டின் துணைகொண்டு தொல்காப்பியர் சொற்களை விளக்கும்போதே அவை வாக்கியத்தில் அமையும் தொடரியல் சூழலை எவ்வாறு வரையறுக்கிறார் என்பதைத் தனது 'Tolkappiyar's Treatment of Syntax' முதலான முன்னோடி ஆய்வுகளின் வழியே அழுத்தமாக நிறுவினார்.

இந்த வரிசையில் தமிழ் வாக்கிய அமைப்பியல் குறித்த ஆய்வுகளில் கணிதவியல் மற்றும் கோட்பாட்டுத் தெளிவை முதன்முதலாகப் புகுத்திய சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ (பொன். கோதண்டராமன்) அவர்கள், கிளவியாக்கப் பகுதியை வழுவற்ற வாக்கியங்களை உருவாக்குவதற்கான ஒரு தூய தொடரியல் கூறாக அடையாளப்படுத்தி, எழுவாய்-பயனிலை இயைபுகளை மிகத் துல்லியமாக விளக்கினார்.

மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்தின் மேனாள் இயக்குநரான பேராசிரியர் இ. அண்ணாமலை அவர்கள், தமிழில் சொற்கள்

இடம் மாறினாலும் பொருள் மாறாத நெகிழ்வுத்தன்மை இருந்தாலும், வாக்கியத்தின் ஆழமான அக அமைப்பைத் தொல்காப்பியம் எவ்வாறு எச்சத் தொடர்களின் வழி நுட்பமாகக் கட்டுப்படுத்துகிறது என்பதைப் புலப்படுத்தி, தொல்காப்பியத் தொடரியல் என்பது மொழியின் ஆழமான உளவியல் மற்றும் சமூகப் பயன்பாட்டோடு தொடர்புடையது என்பதை உலகத் தரத்தில் நிலைநிறுத்தினார்.

மேலும், சர்வதேச மொழியியல் தளத்தில் தமிழ் வினையியல் ஆய்வுகளைப் புதியதொரு உச்சத்திற்கு எடுத்துச் சென்ற பேராசிரியர் கு. பரமசிவம் அவர்களின் பிறப்புப் பொருண்மையியல் நோக்கிய ஆய்வு, தன்வினை-பிறவினை போன்ற வினைக் கூறுகள் வாக்கிய அமைப்பிலும் அதன் பொருண்மையிலும் எத்தகைய ஆழமான ஆளுகையைச் செலுத்துகின்றன என்பதைத் தொல்காப்பியப் பின்னணியில் வெளிப்படுத்தியது.



பேராசிரியர்
ச. அகத்தியலிங்கம்

## பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்:

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் மொழியியல் வரலாற்றில், குறிப்பாகத் தொல்காப்பியத் தொடரியலை உலகளாவிய நவீன கோட்பாடுகளின் தளத்திற்கு எடுத்துச் சென்றதில் மிக முதன்மையான வழிகாட்டியாகத் திகழ்கிறார். நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடு (Transformational Generative Grammar) உலக மொழியியல் அரங்கில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய 1960-களில், அக்கோட்பாட்டின் துணைகொண்டு தமிழ் இலக்கண மரபை, விசேடமாகத் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தை முற்றிலும் புதியதொரு கண்ணோட்டத்தில் அணுகிய பெருமை இவருக்குரியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் உயர் ஆய்வு மையத்தை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திய பெருமகன், தொல்காப்பியர் சொற்களைப் பற்றிப் பேசும்போதே அவை வாக்கியங்களில் அமையும் தொடரியல் சூழலையும் (Syntactic environment) இணைத்தே பேசியுள்ளார் என்பதைத் தனது 'Tolkappiyar's Treatment of Syntax' (1966) முதலான முன்னோடி ஆய்வுகளின் வழியே அழுத்தமாக நிறுவினார்.

மொழியியலின் ஆழமான இலக்கணக் கோட்பாடுகளைத் தூய தமிழ்க் கலைச்சொற்களோடு 'மாற்றிலக்கண மொழியியல்' போன்ற நூல்களாக அவர் தந்த பங்களிப்பு, தொல்காப்பியத் தொடரியல் உலகளாவிய மொழியியல் விதிகளுக்கு எங்ஙனம் முன்னோடியாக விளங்குகிறது என்பதை இக்கால மொழியியல் மாணவர்கள் உணர்ந்துகொள்ளும் மாபெரும் திறவுகோலாக இன்றும் அமைகிறது. மாற்றிலக்கணக் கோட்பாட்டைத் தமிழ் மொழிக்கும் தொல்காப்பியத்திற்கும் பொருத்திப் பார்ப்பதில் மிக முதன்மையான முன்னோடி இவர்தான். சோம்ஸ்கியின் 'Transformational Grammar' கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். தொல்காப்பியரின் எச்சவியல், கிளவியாக்கம், வேற்றுமையியல் விதிகளை நவீன வாக்கிய அமைப்பியலோடு (Syntactic analysis) பொருத்திக் காட்டினார். தொல்காப்பியர் சொற்களை விளக்கும்போதே, அவை வாக்கியத்தில் அமையும் 'தொடரியல் சூழலை' (Syntactic environment) எப்படி வரையறுக்கிறார் என்பதைத் தனது ஆய்வுகள் மூலம் நிறுவினார்.



பேராசிரியர் பொன்.
கோதண்டராமன்
(பொற்கோ)

## பேராசிரியர் பொன். கோதண்டராமன் (பொற்கோ):

பேராசிரியர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் மொழியியல் மற்றும் தொல்காப்பியத் தொடரியல் ஆய்வுகளுக்கு ஒரு புதிய தத்துவார்த்தப் பரிமாணத்தை வழங்கிய முன்னணி அறிஞராவார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தரான இவர், தமிழ் வாக்கிய அமைப்பியல் (Tamil Syntax) குறித்த ஆய்வுகளில் கணிதவியல் மற்றும் கோட்பாட்டுத் தெளிவை முதன்முதலாகப் புகுத்திய பெருமைக்குரியவர். நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடுகளைத் தமிழ் இலக்கண மரபோடு மிக நுட்பமாக இயைத்துப் பார்த்த பொற்கோ அவர்கள், தொல்காப்பியத்தின் தொடக்கப் பகுதியான கிளவியாக்கத்தை வெறும் சொற்களின் சேர்க்கையாகப் பார்க்காமல், அது வழுவற்ற வாக்கியங்களை உருவாக்குவதற்கான விதிகளைப் பேசும் ஒரு தூய தொடரியல் பகுதி' (Syntactic component) என்று உலகிற்கு அழுத்தமாக நிறுவினார்.

தொல்காப்பியம் கூறும் 'கிளவியாக்கம்' என்பது சொற்களை உருவாக்கும் பகுதி மட்டுமல்ல, அது அடிப்படையில் ஒரு 'தொடரியல் பகுதி' என்ற மாற்றுச் சிந்தனையை வலுவாக முன்வைத்தார். தமிழில் எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இட அடிப்படையில் எவ்வாறு இயைந்து வருகின்றன (Subject-Predicate Agreement) என்பதையும், வாக்கிய மாற்றங்கள் (Sentence Transformations) எவ்வாறு நிகழ்கின்றன என்பதையும் தொல்காப்பியச் சூத்திரங்களின் வழி விளக்கிய இவரது ஆய்வுகள், மரபு இலக்கணத்திற்கும் நவீன மொழியியலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தன. 'இக்காலத் தமிழ் இலக்கணம்', ('A Grammar of Modern Tamil') போன்ற நூல்களின் வாயிலாகத் தொல்காப்பியரின் தொடரியல் சிந்தனைகளைச் சமகால அறிவியல் நோக்கில் மீள்வாசிப்புச் செய்து, தமிழின் வாக்கியக் கட்டமைப்பை உலகத் தரத்திற்குப் பறைசாற்றிய மாபெரும் சிந்தனையாளராக இவர் திகழ்கிறார்.

## பேராசிரியர் சு.ப. அண்ணாமலை:

இருபதாம் நூற்றாண்டின் நவீன தமிழ் மொழியியல் மற்றும் தொடரியல் ஆய்வுகளில் மிக ஆழமான, தத்துவார்த்தப் பங்களிப்பை வழங்கிய சர்வதேச அளவிலான முன்னணி

> **தொல்காப்பியத் தொடரியல் குறித்த மரபுவழி உரையாசிரியர்களின் பார்வைகளும், இருபதாம் நூற்றாண்டில் நோம் சோம்ஸ்கி ஏற்படுத்திய மொழியியல் புரட்சியின் பின்னணியில் எழுந்த தமிழ்நாட்டு மொழியியலாளர்களின் நவீன ஆய்வுகளும் இக்கோட்பாட்டிற்கு உலகளாவிய தகுதியைத் தந்துள்ளன.**

அறிஞராவார். மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்தின் (CIIL) மேனாள் இயக்குநராகவும், சிகாகோ மற்றும் யேல் போன்ற புகழ்பெற்ற உலகப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியராகவும் விளங்கிய இவர், நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடுகளைத் தமிழின் தனித்துவமான வாக்கியக் கட்டமைப்போடு ஒப்பிட்டு ஆராய்வதில் இணையற்ற நுட்பத்தைக் காட்டினார்.

தொல்காப்பிய எச்சவியல் விதிகளையும், தமிழில் வினையெச்சம் மற்றும் பெயரெச்சத் தொடர்கள் வாக்கியங்களை எவ்வாறு இணைக்கின்றன என்பதையும் நவீன மொழியியல் தத்துவங்களின் பின்னணியில் இவர் விரிவாக விளக்கினார். தமிழில் எச்சத் தொடர்கள் மற்றும் வாக்கிய இணைப்புகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைத் தொல்காப்பிய எச்சவியல் விதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்தார். தமிழில் சொற்கள் முன் பின்னாக இடம் மாறினாலும் பொருள் மாறாத நெகிழ்வுத் தன்மை இருந்தாலும், வாக்கியத்தின் ஆழமான பொருண்மைக் கட்டமைப்பை தொல்காப்பியம் எவ்வாறு நுட்பமாகக் கட்டுப்படுத்துகிறது என்பதைத் தனது ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தினார். இவரது 'Aspects of Tamil Syntax' முதலான நூல்களும் கட்டுரைகளும், தொல்காப்பியத் தொடரியல் என்பது வெறும் புறவடிவ விவரிப்பு அல்ல, அது மொழியின் ஆழமான உளவியல் மற்றும் சமூகப் பயன்பாட்டோடு தொடர்புடையது என்பதை உலகத் தரத்தில் நிலைநிறுத்திய மாபெரும் திறவுகோலாகத் திகழ்கின்றன.



**பேராசிரியர் சு.ப. அண்ணாமலை**

## பேராசிரியர் கு. பரமசிவம்:

பேராசிரியர் கு. பரமசிவம் தமிழ் வினையியல் மற்றும் தொடரியல் ஆய்வுகளைச் சர்வதேச மொழியியல் தளத்தில் புதியதொரு உச்சத்திற்கு எடுத்துச் சென்ற மாபெரும் அறிஞராவார். மதுரை தியாகராசர் கல்லூரி மற்றும் அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகம் உள்ளிட்ட புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடுகளுக்குப் பிந்தைய 'பிறப்புப் பொருண்மையியல்' (Generative Semantics) நோக்கில் தமிழின் வாக்கியக் கட்டமைப்பை ஆராய்ந்த முதன்மை முன்னோடியாவார்.



**பேராசிரியர் கு. பரமசிவம்**

தமிழில் உள்ள 'தன்வினை - பிறவினை' போன்ற வினைக் கூறுகள், வெறும் சொல் சார்ந்த மாற்றங்கள் அல்ல, அவை வாக்கிய அமைப்பிலும் அதன் பொருண்மையிலும் எத்தகைய ஆழமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதைத் தொல்காப்பிய வினையியல் பின்னணியோடு ஒப்பிட்டு உலகிற்கு நிலைநாட்டினார். ஒரு வாக்கியத்தில் உள்ள வினையின் பொருள், அங்குள்ள எழுவாய் மற்றும் செயற்படுபொருள்களை எவ்வாறு ஆளுகை செய்கிறது என்பதை விளக்கிய இவரது புகழ்பெற்ற 'Effectivity and Affectivity in Tamil' (1979) என்ற ஆய்வு நூல், தமிழ் வாக்கிய அமைப்பியல் ஆய்வுகளுக்கு ஒரு புதிய திசையைக் காட்டியது. தூய இலக்கண ஆய்வோடு நின்றுவிடாமல், மேலைநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் மொழியை எளிமையாகக் கற்பிப்பதற்கான தொடரியல் நெறிமுறைகளையும் வகுத்துத் தந்த பேராசிரியர் கு. பரமசிவம், தொல்காப்பியத் தொடரியல் சிந்தனைகளைச் சமகால மொழியியல் அறிவியல் மொழியில் உலகிற்குப் பறைசாற்றிய உன்னத சிந்தனையாளர் ஆவார்.

தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடுகள் என்பது வெறும் மொழி இலக்கண விதிகளின் தொகுப்பு மட்டுமல்லாமல், மொழியின் ஆழமான உளவியல், பொருண்மை மற்றும் சூழல் சார்ந்த கட்டமைப்பை விளக்கும் ஒரு மாபெரும் மொழியியல் அறிவியல் கொடையாகும். சொல்லதிகாரத்தின் கிளவியாக்கம், வேற்றுமையியல், எச்சவியல் போன்ற பகுதிகளில் தொல்காப்பியர் வகுத்துள்ள விதிகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழின் வாக்கியக் கட்டமைப்பை அவர் எத்துணை நுட்பமாக ஆராய்ந்துள்ளார் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

தொல்காப்பியத் தொடரியல் குறித்த மரபுவழி உரையாசிரியர்களின் பார்வைகளும், இருபதாம் நூற்றாண்டில் நோம் சோம்ஸ்கி ஏற்படுத்திய மொழியியல் புரட்சியின் பின்னணியில் எழுந்த தமிழ்நாட்டு மொழியியலாளர்களின் நவீன ஆய்வுகளும் இக்கோட்பாட்டிற்கு உலகளாவிய தகுதியைத் தந்துள்ளன. மரபுவழி உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார், வேற்றுமை உருபுகள் மட்டுமன்றிச் சொற்களின் பொருளும் வாக்கியத்தின் அமைப்பும் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பதைத் தனது நுட்பமான உரைநெறியின் மூலம் முதன்முதலில் வெளிப்படுத்தினார்.

நோம் சோம்ஸ்கியின் மாற்றுருவாக்கப் பிறப்பிலக்கணக் கோட்பாடு உலக அளவில் செல்வாக்கு செலுத்தியபோது, பேராசிரியர்கள்



ச. அகத்தியலிங்கம் மற்றும் செ.வை. சண்முகம் ஆகியோர் தொல்காப்பியர் சொற்களை விளக்கும்போதே அவை வாக்கியத்தில் அமையும் தொடரியல் சூழலை எவ்வாறு வரையறுக்கிறார் என்பதையும், அது வெறும் புறவடிவம் மட்டுமல்லாமல் பொருண்மையோடு இயைந்த ஓர் ஆழமான அகக்கட்டமைப்பு என்பதையும் நவீன மொழியியல் தளத்தில் நிறுவினர். இந்த வரிசையில் பேராசிரியர் பொற்கோ அவர்கள் கிளவியாக்கப் பகுதியை வழுவற்ற வாக்கியங்களை உருவாக்குவதற்கான ஒரு தூய தொடரியல் கூறாக அடையாளப்படுத்தி, எழுவாய்-பயனிலை இயைபுகளைக் கணிதவியல் தெளிவோடு விளக்கினார்.

பேராசிரியர் இ. அண்ணாமலை அவர்கள், தமிழில் சொற்கள் இடம் மாறினாலும் பொருள் மாறாத நெகிழ்வுத்தன்மை இருந்தாலும், வாக்கியத்தின் ஆழமான அக அமைப்பைத் தொல்காப்பியம் எவ்வாறு எச்சத் தொடர்களின் வழி நுட்பமாகக் கட்டுப்படுத்துகிறது என்பதைப் புலப்படுத்தினார்.

மேலும், பேராசிரியர் கு. பரமசிவம் அவர்களின் பிறப்புப் பொருண்மையியல் நோக்கிய ஆய்வு, தன்வினை-பிறவினை போன்ற வினைக் கூறுகள் வாக்கிய அமைப்பிலும் அதன் பொருண்மையிலும் எத்தகைய ஆழமான ஆளுகையைச் செலுத்துகின்றன என்பதைத் தொல்காப்பியப் பின்னணியில் உலகிற்கு வெளிப்படுத்தியது.

சுருங்கக் கூறின், நோம் சோம்ஸ்கியின் உலகளாவிய மொழியியல் விதிகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழ் மொழியின் தனித்துவமான தொடரமைப்பைத் தொல்காப்பியர் வடிவமைத்துள்ளார். தெய்வச்சிலையாரின் மரபுவழி உரை விளக்கங்களும் அகத்தியலிங்கம், செ.வை.சண்முகம், பொற்கோ, அண்ணாமலை, பரமசிவம் போன்ற தற்கால அறிஞர்களின் நவீன மொழியியல் மீள்வாசிப்புகளும் தொல்காப்பியத் தொடரியல் காலத்தைக் கடந்த எக்காலத்து மொழியியலுக்கும் வழிகாட்டக் கூடிய ஒரு சர்வதேசப் பொதுமைத் தத்துவம் என்பதைத் தெள்ளத்தெளிவாகப் பறைசாற்றி நிற்கின்றன.

தொல்காப்பியத் தொடரியல் என்பது வெறும் சொற்களின் சேர்க்கை அன்று, அது கருத்தையும் சூழலையும் இணைக்கும் ஒரு மாபெரும் மொழிப் பாலம். நோம் சோம்ஸ்கியின் உலகளாவிய மொழியியல் கோட்பாடுகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழ் மொழியின் தனித்துவமான தொடரமைப்பைத் தொல்காப்பியர் வகுத்துள்ளார்.



nageswary@thaiveedu.com



ஆங்கிலத்தில்: அனுஷ்கா கஹந்தகமகே
**தமிழில்: ஜிஃப்ரி ஹாசன்**

# புனித மலையும் பண்பாட்டு மானுடவியலும்

## அலெக்ஸாண்டர் மெக்கின்லி எழுதிய 'Mountain at a Center of the World' நூல் மீதான ஒரு மானுடவியல் வாசிப்பு

**(அனுஷ்கா கஹந்தகமகே (Ph.D., Otago) போருக்குப் பிந்தைய இலங்கையில் நவீன பௌத்த போக்குகள் குறித்து ஆராய்ச்சி செய்துள்ளார். இவர் 2025 – 2026 காலப்பகுதிக்கான ஹாவார்ட் டிவினிட்டடி பள்ளியின் (Harvard Divinity School) கலாநிதிப்பட்ட மேற்படிப்பு ஆய்வாளர் (postdoctoral fellow) ஆவார்.)**

இப்புத்தகத்தின் வரிகளுக்கு ஊடாக, சிவனொளிபாத மலை (Siripada) வெறுமனே ஒரு இடமாக மட்டும் அல்லாமல், உயிருள்ள, சுவாசிக்கும் ஒரு உருவமாக - மனிதர்கள், விலங்குகள் மற்றும் நெடுங்காலத்தோடு தொடர்பு கொண்ட ஒரு பழைமையான உயிரினமாக வெளிப்படுகிறது. இது பருப்பொருள் நிலையைத் தாண்டி குறியீடு மற்றும் ஆன்மீக உலகிற்குள் நுழைகிறது. காலத்தால் முந்தியதாக, அசைவற்றிருப்பினும் ஆச்சரியமூட்டும் வகையில் உயிர்ச்சக்தி நிரம்பியதாகக் காட்சியளிக்கிறது. நினைவுகளும் கற்பனைகளும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்து, தலைமுறை தலைமுறையாகவும் நாடுகளைக் கடந்தும் சொல்லப்படும் கதைகளில் சிவனொளிபாதமலை வீற்றிருக்கிறது. மனிதர்கள் மற்றும் விலங்குகளின் வாழ்வு, தொன்மம் மற்றும் வரலாறு, பக்தி மற்றும் கவிதை என அனைத்தின் கலவையாக, எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் கருத்தியல் சுழலுக்குள் (discursive vortex) இம்மலை நிலைத்திருக்கிறது. இம்மலை காலங்கடந்தது, அழிவற்றது.

அறிமுக உரையைத் தவிர்த்து, இந்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவது பகுதியான 'ஒரு மலையும் அதன் மக்களும்' (A Mountain and its People) என்பது, 'பாறை, நீர் மற்றும் மலையின் இயங்குதிறன்' (Rock, Water and Montane Agency), 'அன்றாட மலை' (The Workaday Mountain) ஆகிய இரண்டு அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது. முதல் அத்தியாயத்தில் இம்மலையே மையப்பொருள் ஆகிறது.

மானுடவியல் பார்வையிலிருந்து மலையை விடுவிக்கும் ஆசிரியர் மெக்கின்லி (McKinley), அதனை ஒரு பன்முகப் பிரபஞ்சத்திற்குள் பொருத்தி, கோள் பன்மைத்துவத்திற்கான (planetary pluralism) ஓர் உதாரணமாக முன்மொழிகிறார். சமூக மானுடவியலாளர்களுக்கு அதிகம் பரிச்சயமில்லாத புவியியல் அறிவின் துணைகொண்டு, நெடுங்காலமாக நிகழ்ந்த இம்மலையின் உருவாக்கத்தை ஆசிரியர் ஆழமாக ஆராய்கிறார். இம்மலைக்கெனத் தனியாக நிலவும் தோற்றத் தொன்மக் கதைகளுக்குள் (Origin Myths) மாயவியல் சார்ந்த புனைவுகளையும் மிகத் துல்லியமான புவியியல் தரவுகளையும் ஆசிரியர் மிகத்திறமையாகப் பிணைக்கின்றார். பௌத்தத்தின் நெடுங்காலக் கோட்பாடு என்ற



tg.theeban@gmail.com

myth ஏதுமில்லாத காரணத்தால், பௌத்தத்தின் நெடுங் காலக் கோட்பாடு (Buddhist deep time) போன்ற இந்தக் கருத்தாக்கம், கணநாத் ஒபயசேகர (Obeyesekere) எழுதிய Awakened Ones (2012) என்ற சிறப்பான படைப்பை எனக்கு நினைவூட்டியது. புத்தர் ஞானோதயம் பெற்ற (நிர்வாண நிலை) அந்த இரவை உதாரணமாகக் கொண்டு, தரிசன அனுபவங்களில் (visionary experience) காலமும் வெளியும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அந்நூல் பகுப்பாய்வு செய்திருக்கும். இப்பின்னணியில், பல்லாயிரக்கணக்கான நினைவுகளிலும் பல கதைகளிலும் இம்மலை காட்சியளிக் கிறது: கடலோடிகளால் தரிசிக்கப்படுவதாகவும், சமுத்திரத் தின் இதயப்பகுதியிலிருந்து மேலெழுவதாகவும், நதிகளின் உற்பத்தியாகவும், மழை மற்றும் மாணிக்கக் கற்களில் காணப்படுவதாகவும், புத்தரின் பாதச்சுவட்டினை வணங்கு வதற்காக மலை ஏறிச்செல்லும் விலங்குகளால் போற்றப் படுவதாகவும் இது விவரிக்கப்படுகிறது. பல்வேறு காலகட் டங்களைச் சேர்ந்த கவிதைகள், பயணிகளின் குறிப்புகள் மற்றும் பல தரப்புகளிலிருந்து பெறப்பட்ட, ஆங்காங்கே இடம்பெறும் நிழற்படங்கள் ஆகியவற்றை இணைத்து ஆசிரி யர் தனது இந்த வாதத்திற்கு வலுவூட்டுகிறார். இறுதியாக, இம்மலையின் பன்முகப்பட்ட இருத்தலியல் வடிவங்களை ஆசிரியர் கொண்டாடுகிறார்.

The Workaday Mountain - அன்றாடப்பணிகளின் மலை என்ற இரண்டாவது அத்தியாயத்தில், மலையுச்சியைச் சுற்றியுள்ள அரசியல் இயக்கவியலை ஆசிரியர் ஆராய்கிறார். காலப் போக்கில் பல்வேறு சமூக மற்றும் அரசியல் தரப்பினர் அந்த இடத்தின் உள்கட்டமைப்பு மற்றும் கட்டடக்கலையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முயன்றனர் என்பதை இது நோக் குகிறது. காலனித்துவத்திற்கு முந்தைய காலம், காலனித்துவ காலம் மற்றும் சமீபத்திய காலம் ஆகிய மூன்று வரலாற்று காலகட்டங்களை மெக்கின்லியின் (McKinley) இந்த விவா தம் உள்ளடக்கியுள்ளது. பௌதீ கக் கட்டுமானங்களை எழுப் புவது முதல் அவற்றை அடையாளபூர்வமாக அலங்கரிப்பது வரையிலான அவர் களின் பல்வேறு முயற்சிகள், புண்ணியத்தைப் பெறுதல், அரசியல் அல்லது தனிப்பட்ட செல்வாக்கை அதிகரித்தல் மற்றும் அதிகாரத்தைப் பெறுதல் ஆகிய நோக்கங்களால் எவ்வாறு தூண்டப்பட்டன என்பதை இந்த அத்தியாயம் ஆராய்கிறது. அண்மைக்காலத்தில் இராணுவமயமாக்கல் மலை அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை ஆசிரியர் பரிசீலிப்பதுடன், 'புரவலர்கள்' (sponsors) அல்லது சந்தை அழுத்தங்கள் எவ்வாறு மலையேறுபவர் களுக்கு பௌத்த முறைப்படி புண்ணியத்தைப் பெறவும், பிர பலமடையவும் உதவின என்பதையும், இந்தத் தரப்பினரின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை ஆராய்வதன் மூலம் விளக்குகிறார். அண்மைக்கால நிகழ்வுகளைப் பிரதிபலிப் பதன் மூலம், தீவில் நிலவும் இராணுவமயமாக்கல் மலை யின் அரசியலில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். மேலும், இராணுவ மயமாக்கல் குறித்த விவாதத்துடன் தொடர்புடையதாக, புரவலர்களின் ஆதரவுகள், காணிக்கைகள் மற்றும் அது சார்ந்த சந்தை சக்திகள் எவ்வாறு புண்ணியம் தேடும் செயற் பாட்டிலும் மலையேறுபவர்களிடையே புகழைப் பெறுவதி லும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதையும் ஆசிரியர் விவாதிக்கிறார். இந்தத் தரப்பினரின் நோக்கங்கள் மற்றும் செயல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், வரலாறு முழுவதும் இந்த மலை தொடர்பான அரசியல், கலாசாரம் மற்றும் மக்களின் பொதுவான பார்வைகள் ஒன்றிணையும் விதம் குறித்த ஆழமான புரிதல்களை ஆசிரியர் வழங்குகிறார்.

புத்தகத்தின் இரண்டாவது பகுதியான A Mountain of Myth - புராணங்களின் மலை இரண்டு அத்தியாயங்களைக் கொண் டுள்ளது. இம்மலை தொடர்பான முஸ்லிம், இந்து மற்றும் பௌத்த சமூகங்களின் கதைகள் எவ்வாறு ஒன்றோடொன்று பொருந்தி, பின்னிப் பிணைந்துள்ளன என்பதை இவை விவாதிக்கின்றன. அவற்றில் முதலாவது (புத்தகத்தின் மூன் றாவது அத்தியாயமான), Adam's Peak and Buddhist Visions on Mecca - (ஆதம் மலையும் மக்கா மீதான பௌத்த தரிசனங்களும்), முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள், மாலுமிகள் மற்றும் பிற எழுத்தாளர்களின் பதிவுகளில் இந்த மலை எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்கிறது. அக்காலச் சிங்களக் கவிதைகளில் மக்கா எவ்வாறு சித் தரிக்கப்பட்டுள்ளது என்பதையும் நோக்கும் ஆசிரியர், புத்தர் நடந்ததாக நம்பப்படும் ஒரு இடமாக அது வெளிப்படுத் தப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். பௌத்தர்கள் மக் காவிற்கு உரிமை கோருகிறார்கள் என்று வெறுமனே கூறு வதைத் தவிர்த்து, பாலி மற்றும் சமஸ்கிருதச் சொற்களின் பயன்பாட்டையும், வெவ்வேறு சூழல்களுக்கேற்ப அவற்றின் அர்த்தங்கள் எவ்வாறு மாறுகின்றன என்பதையும் ஆசிரியர் ஆராய்கிறார். உதாரணமாக, 'யோனகபுர' (yonakapura) என்ற சொல் ஒரு முஸ்லிம் நகரத்தையும் குறிக்கலாம், அல்லது மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்த ஒருவரை யும் குறிக்கலாம். பிரித்தானியர் காலத்தில் வளர்ச்சி யடைந்த இன அடையாளங்கள், 1915-ஆம் ஆண்டின் கலவரங்கள் உட்பட, இந்த மலை மீதான உரிமை கோரல்களில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை ஆசிரியர் ஆராய்கிறார். 1915-ஆம் ஆண்டிற்கு முன்னர், சில முஸ்லிம்கள் இந்த மலையை ஆதாமுடன் தொடர்புடைய மிகத் தொன்மையான வரலாற்றுப் பின்னணியில்



(Adamic deep time) பொருத்திப் பார்த்தனர். அண்மைக் கால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் ஆசிரியர், முஸ்லிம் விரோத உணர்வுகளும், சிங்கள-பௌத்த மேலாதிக்கமும் எவ்வாறு ஏனைய மதங்களின் தொடர்புகளைப் புறந்தள்ளி விட்டு, இந்த மலையை ஒரு பிரத்தியேகமான சிங்கள-பௌத்த தளமாக மாற்றுவதற்குப் பங்களித்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறார். ஒரு காலத்தில் பல்வேறு சமூகங்களையும் ஒன்றிணைத்த கதைகள், இன்று பௌத்தர்கள் அல்லாதவர்களை இந்த மலையிலிருந்து அப்புறப்படுத்தும் நோக்கில் எவ்வாறு புதிய விளக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பது சுவாரஸ்யமான விடயமாகும்.

நான்காம் அத்தியாயமான, 'மலையில் சிவனை அனுமதித்தலும் தடுத்தலும்' (Admitting and Forbidding Siva at the Peak) என்பதில், தமிழ் புராணங்களில் இந்த மலை எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதையும், அல்லது சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் அது எவ்வாறு ஆழ்ந்த முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்பதையும் ஆசிரியர் ஆராய்கிறார். எழுதப்பட்ட வரலாற்றின் மூலம் வலுப்பெற்ற சிங்கள-பௌத்த மேலாதிக்கக் கதையாடல், மலை மீதான இந்து சைவ உரிமை கோரல்களை எவ்வாறு பலவீனப்படுத்தியுள்ளது என்பதை மெக்கின்லி (McKinley) பரிசீலிக்கிறார். சிங்கள மற்றும் தமிழ் மரபுகளில் இருந்து எழுதப்பட்ட, சொல்லப்பட்ட அல்லது நம்பப்படும் பல்வேறு கதைகள், கவிதைகள் மற்றும் பிற ஆதாரங்களை ஒன்றிணைப்பதன் மூலம், இந்த வெவ்வேறு கதையாடல்களின் சந்திப்பில் மலையை ஆசிரியர் திறம்பட நிலைநிறுத்துகிறார்.

புத்தகத்தின் மூன்றாம் பகுதியான 'ஒரு மலையைப் போலிருத்தல்' (Being Like a Mountain) என்பதில் இடம்பெறும் ஐந்தாம் அத்தியாயம், 'பன்மைத்துவத்திலிருந்து புனிதப் பயண அறம்' (Pilgrimage Ethics from Pluralism) என்பதாகும். இது மலையில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு முயற்சிகளில், குறிப்பாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக, பௌத்த மேலாதிக்கம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை ஆராய்கிறது. அரசாங்க அதிகாரிகள்கூட பௌத்தத்திற்கு ஆதரவான சார்புநிலையைப் பிரதிபலிக்கும் வகையிலான அறிவிப்புப் பலகைகளை அமைத்துள்ளனர். அனுமானிக்கப்பட்ட பன்மைத்துவம் என்பது அங்கு நடைமுறையில் இல்லை என்று வாதிடும் ஆசிரியர், அதற்கு மாற்றாக 'கோள்-சார் பன்மைத்துவம்' (planetary pluralism) என்ற கருத்தாக்கத்தைப் பரிந்துரைக்கிறார். இந்த அத்தியாயத்தின் முதல் பிரிவில், சுற்றுச்சூழல் வரலாற்றுடன் இணைக்கப்பட்ட புனிதப்பயண அறம் குறித்த உள்ளூர் வரலாறுகளைப் பற்றி ஆசிரியர் விவாதிக்கிறார். இரண்டாவது பிரிவில், சுற்றுச்சூழலின் மீது ஏற்படும் மனிதத் தாக்கங்களைக் கையாள்வதற்கு மதமொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை அவர் ஆராய்கிறார். மூன்றாவது மற்றும் இறுதிப் பிரிவில், மலையின் கோள்-சார் பன்மைத்துவக் கண்ணோட்டத்தின் வாயிலாகப் புனிதப்பயண அறம் ஆராயப்படுகிறது.

'ஆழமான ஈடுபாடுகள்' (Deep Stakes) என்ற நெகிழ்ச்சியான தலைப்பைக் கொண்ட இப்புத்தகத்தின் முடிவுரையானது, ஆசிரியர் நூல் முழுவதிலும் திறமையாகப் பின்னியுள்ள பல்வேறு கண்ணோட்டங்களின் சிந்தனைப் பூர்வமான தொகுப்பை வழங்குகிறது. நேர்கோட்டு வரலாற்றின் எல்லைகளுக்கு அப்பால் சென்று, கற்பனை செய்ய முடியாத புவியியல் காலகட்டமான 'ஆழ்ந்த காலத்தின்' பரந்த வெளிக்குள் நுழைய இந்த இறுதிப்பகுதியில் அவர் வாசகர்களுக்குச் சவால்விடுகிறார். இது பூமியைப் பற்றிய நமது புரிதலையும், அதில் நமது இடத்தையும் மாற்றியமைக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தின்படி, மலைகள் என்பவை மனிதக் கதையாடல்களுக்கான வெறும் நிலையான பின்னணிகள் அல்ல; அவை பல யுகங்களாகப் பூமியால் செதுக்கப்பட்டும், அதே பூமியில் தாக்கத்தை ஏற்படுத்தியும் வரும் ஆற்றல்மிகு இயங்கு சக்திகளாகவும் (dynamic actors), பழைமையான காவலர்களாகவும் விளங்குகின்றன.

வரலாறு நெடுகிலும், பண்பாட்டு எல்லைகளைத் தாண்டியும், தொன்மங்களுக்காகவும் வாழ்வின் அர்த்தத்திற்காகவும் ஆன்மீக நிலைத்தன்மைக்காகவும் மனிதர்கள் இயற்கையை, குறிப்பாக மலைகளை எவ்வாறு நாடியிருக்கிறார்கள் என்பதை நூலாசிரியர் ஆராய்கிறார். நமது ஆழ்மனதின் தேவைகள், அச்சங்கள் மற்றும் ஏக்கங்களோடு தொடர்புடைய கதைகளின் வாயிலாக, இந்த கம்பீரமான மலை வடிவங்கள் புனிதமான, இதிகாசத் தன்மை வாய்ந்த, மற்றும் உணர்வுள்ள உயிர்களாகவே உருமாறுகின்றன. இத்தகைய கவித்துவமான தொன்மக் கூறுகளுக்குள் (mythopoetic elements) ஆழமாகச் செல்வதன் மூலம், நிலப்பரப்புகளுடனான நமது உறவு வெறும் பௌதீக ரீதியிலானது மட்டுமல்ல, அது ஆழ்ந்த உணர்வுபூர்வமானதும் கற்பனை வளமிக்கதும் ஆகும் என்பதை அவர் உணர்த்துகிறார்.

இப்புத்தகத்தின் பக்கங்களில் நான் ஆழமாக இலயித்த போது, எனது சொந்த இருப்பு மிக இலேசானதாகவும், முக்கியத்துவமற்றுப் போனதாகவும் எனக்குத் தோன்றியது. அதேவேளையில், அந்த மலையின் புவியியல் இருப்பும், அது சுமந்து நிற்கும் கதைகளின் கனமும் மேன்மேலும் பளுவாகவும் பிரம்மாண்டமாகவும் பேருருக்கொண்டன. என்னை நானே மிகச்சிறியவனாக உணர்ந்த போதிலும், அந்த மலையுடன் சற்றும் எதிர்பாராத ஒரு நெருக்கத்தையும் நான் அனுபவித்தேன். குறுகியதேயானாலும் அதிர்வூட்டும் அந்த ஒரு கணத்தில், மலையின் நெடுங்கால இருப்புக்குள் - அதன் மண்ணுக்குள்ளும், உடைக்க முடியாத அதன் மௌனத்திற்குள்ளும் - எனது ஆன்மா விரிந்து பரவுவதைப் போல உணர்ந்தேன். அந்த மலையின் உணர்வுகளோடு நான் ஒன்றிப் போனேன். அது என்னுள் குடியேறத் தொடங்கியது. அந்த ஒரு கணத்தில், மலையும் நானும் ஒன்றாகவே மாறிப் போனோம்.

அர்த்தம் அல்லது பொருளின் மீதான ஆதிக்கம் செலுத்தும் ஒற்றை மையக் கட்டமைப்பைத் தகர்க்கும் இப்புத்தகம், அதற்குப் பதிலாகப் பன்முக மையங்களை முன்வைக்கிறது. இதன் மூலம், தனிமைப்படுத்தப்பட்ட நுகர்வோர்-குடிமக்கள் (atomised consumer-citizen) எனும் நவீன தாராளவாதக் கோட்பாட்டிற்குச் சவால்விடும் ஆசிரியர், அதற்கு மாற்றாக மனிதர்கள், விலங்குகள், ஆன்மீகம் மற்றும் புவியியல் சார்ந்த உயிர்களால் பின்னப்பட்ட ஒரு வலைப்பின்னலுக்குள் பிணைந்துள்ள வாழ்க்கை முறையை முன்னிறுத்துகிறார். இது வெறுமனே மதங்கள் அல்லது சமூகங்களின் பன்மைத்துவம் மட்டுமல்ல; கற்கள், கதைகள், நினைவுகள், நதிகள், வண்ணத்துப்பூச்சிகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் தொன்மங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு

பூகோள அளவிலான பன்மைத்துவமாகும் (planetary pluralism). காலம் மற்றும் வெளிகளைக் கடந்து மக்கள் இயற்கையோடு - குறிப்பாக மலைச் சிகரங்களோடு - தொடர்புடைய தொன்மங்களையும் கதைகளையும் எவ்வாறு உருவாக்கியுள்ளனர் என்பதை ஆராய்ந்து, தேடிக்கண்டறிந்து, மீண்டும் கூறுவதன் மூலம், Mountain at a Center of the World என்ற இப்புத்தகம், வாசகர்களின் கண்ணோட்டத்தை முற்றிலுமாக மாற்றியமைக்கும் ஒரு புதிய உலகத்திற்கு அவர்களை அழைத்துச் செல்கிறது.




மனிதப் பார்வை, மலையின் பார்வை உட்படப் பல பார்வைகளில் ஒன்றாக முன்வைப்பதன் மூலம், பெருமளவில் நிலவிவரும் மனிதமைய உலகப் பார்வையை (anthropocentric view point) இந்தப் புத்தகம் ஆட்டம் காணச்செய்கிறது. மனிதர்களே உலகின் மையப்புள்ளி மற்றும் தனித்த பார்வையாளர்கள் என்ற எண்ணத்திலிருந்து நம்மை விடுவித்து அசைத்துப் பார்க்கும் இப்பார்வை, வாசகர்கள் இந்த உலகில் தங்களின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யவும், மறுமதிப்பீடு செய்யவும் அழைப்பு விடுக்கிறது. மலையுச்சியின் அர்த்தத்தை உருவாக்கும், அதில் பங்கேற்கும், ஊடாடும் மற்ற பல உயிர்களுக்கிடையே தாமும் ஒரு நிலையற்ற உயிரினமே என்ற தமது நிலையை மறுபரிசீலனை செய்ய ஊக்குவிப்பதன் மூலம், இந்தப் பார்வை மனிதர்களைப் பணிவடையச் செய்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் படித்த 'Living Earth Community: Multiple Ways of Being and Knowing' என்ற புத்தகத்தோடு இந்தப் பார்வை ஆழமாகப் பொருந்திப் போகிறது. சாம் மிக்கி (Sam Mickey), மேரி ஈவ்லின் டக்கர் (Mary Evelyn Tucker) மற்றும் ஜோன் கிரிம் (John Grim) ஆகியோரால் தொகுக்கப்பட்டு 2020-இல் வெளியான அந்தப் புத்தகம், மனிதர்களை மனிதரல்லாத பிற இயற்கையிலிருந்து பிரித்துப் பார்ப்பதை எதிர்க்கிறது. குறிப்பாகப் பழங்குடியின, சூழலியல் மற்றும் உறவுமுறை சார்ந்த பல்வேறு அறிதல் முறைகளை முன்னிறுத்தி, இதேபோல் மனித மையக்கட்டமைப்பிற்கு சவால் விடுகிறது. இந்த இரண்டு படைப்புகளுமே ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு (inter connection) மற்றும் பரஸ்பர பரிமாற்றம் (reciprocity) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த உலகப் பார்வையை ஆதரிக்கின்றன. மனிதர்களை மையப்படுத்திய கதையாடல்களைத் தாண்டிச் செல்லவும், அர்த்தங்களை உருவாக்கும் உயிர்களின் ஒரு சமூகமாக, உயிருள்ள பூமியுடன் இன்னும் ஆழமாகத் தொடர்பு கொள்ளவும் அவை நம்மை அழைக்கின்றன.

வண்ணத்துப் பூச்சிகளைப் பற்றிய ஒரு அழகான கதையுடன் மெக்கின்லி இப்புத்தகத்தை நிறைவு செய்கிறார். சிங்கள மொழியில், இந்த மலையைக் குறிக்கும் பெயர்களில் ஒன்று 'சமனள கந்த' (samanala kanda), அதாவது 'வண்ணத்துப் பூச்சிகளின் மலை' என்பதாகும். உள்ளூர் தொன்மக்கதையின் படி, வண்ணத்துப்பூச்சிகளும் புனிதப்பயணிகளே; அவை மலையை வழிபடுவதற்காகவே அங்கு செல்கின்றன. மனிதப் பயணிகளைப் போலவே அவையும் அதே ஆபத்தான பாதையில் பயணிக்கின்றன. மலையுச்சியை அடைந்தவுடன், தங்களது பயணத்தை முடித்த மன நிறைவோடு அவை இறந்து விடுகின்றன.

புனிதப் பயணங்கள் மனிதர்களுக்கு மட்டுமே உரித்தானவை அல்ல என்ற கருத்தை இந்த நெகிழ்ச்சியான உருவகம் மிகச் சிறப்பாக உணர்த்துகிறது. மாறாக, இந்த மலைப் புனிதப் பயணமானது, மனிதர்கள் மற்றும் மனிதரல்லாத பிற உயிரினங்களுக்கு இடையிலான எல்லைகளைக் கரைக்கும் ஒரு கூட்டு, பல்லுயிர் சடங்காகப் (multispecies ritual) பரிணமிக்கிறது. தவிர, அர்ப்பணிப்பின் விரிவானதொரு சூழலியலை (ecology of devotion) இது கண்முன் நிறுத்துகிறது.

காலிங்க டியூடர் சில்வா, பிரேம குமார டி சில்வா மற்றும் மார்க் விடேக்கர் போன்ற அறிஞர்களால் முன்னர் ஆராயப்பட்ட விடயமான, இலங்கையின் பல்மதத்தன்மை (multi-religiosity) குறித்த வளர்ந்து வரும் கல்விசார் ஆய்வுகளுக்கு இந்நூல் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. இந்த முந்தைய ஆய்வுகள் முதன்மையாக பல்மதத்தன்மையை ஒரு சமூக-மானிடவியல் கண்ணோட்டத்தில் அணுகி, சடங்குகள், ஒன்றுபடுதல்கள் மற்றும் ஒருங்கிணைவுகளை மனிதரை மையப்படுத்திய பார்வையினூடாக ஆராய்கின்றன. அதே நேரம், இங்கு விவாதிக்கப்படும் இந்நூல் பல தசாப்தங்களாக சமூக அறிவியல் ஆய்வுகளில் ஆதிக்கம் செலுத்தும் மனித மையவாதத்தின் (anthropocentric view) மீது கேள்வி எழுப்புகிறது. அதற்குப் பதிலாக, மனிதரையும் தாண்டிய, அதிகாரம் மற்றும் செயலாற்றல் கொண்ட ஒரு பரந்த வலையமைப்பிற்குள் ஒரு மையச் செயற்பாட்டாளராக மலையை இந்நூல் நிலைநிறுத்துகிறது. மலையை மதச் செயற்பாடுகளுக்கான ஒரு செயலற்ற பின்னணியாகக் கருதாமல், மத அனுபவங்களை உருவாக்குவதில் ஒரு செயற்பாட்டாளராக மறுவரையறை செய்வதன் மூலம் ஆசிரியர் ஒரு புதிய இருப்பியல் (ontological) மற்றும் சூழலியல் அணுகுமுறையை வழங்குகிறார். இந்த அணுகுமுறையானது முந்தைய ஆய்வுகளால் உருவாக்கப்பட்ட பல கருத்தியல் தடைகளைத் தகர்ப்பதோடு, இலங்கையில் மதம், இடம் மற்றும் செயலாற்றல் (agency) தொடர்பான விவாதங்களுக்குப் புதியதும் வலுவானதுமான பங்களிப்பை வழங்குகிறது.

சூழலியல், தத்துவம், தொன்மவியல் மற்றும் மானிடவியல் ஆகியவற்றுக்கு இடையேயான அதன் நேர்த்தியான நகர்வு

மற்றும் தனித்துவத்தால் இந்நூல் தனித்து நிற்கிறது. இந்நூல் அழகாக எழுதப்பட்ட, கவித்துவமான, வாசிப்பதற்கு இனிமையான ஒரு நூலாக மட்டுமன்றி, அறிவுபூர்வமாகத் தூண்டக் கூடிய ஒரு வளமான இனவரைவியல் (ethnography) நூலாகவும் மிளிர்கிறது. மலையின் புவியியல் உருவாக்கம் மற்றும் அப்பிராந்தியத்தின் இரத்தினக்கல் படிவுகளை விளக்கும் அறிவியல் பகுதிகள், சில சமயங்களில் இனவரைவியல் விவரிப்பின் இயற்கையான ஓட்டத்தைத் தடைசெய்தாலும், நூலுக்கு ஆழத்தையும் தெளிவான பின்னணியையும் சேர்க்கின்றன. இருப்பினும், மனித மையப் பார்வையிலிருந்து விலகி, மௌனமாக்கப்பட்ட இயற்கையைப் பேச அனுமதிப்பது என்பதே இந்நூலின் அடிப்படை நோக்கம் என்பதால், அதில் கூறப்படும் மண்ணின் கதை அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

மனிதர்களை இயற்கையின் இன்றியமையாத அல்லது உயர்ந்த பிரிவினராகக் கருதாமல், இயற்கையின் சகஉயிரிகளாகப் பார்க்கும் ஒரு விரிவான தத்துவ மற்றும் சூழலியல் கட்டமைப்பிற்குள், கோள்சார் பன்மைத்துவம் (planetary pluralism) என்ற கருப்பொருளை ஆசிரியர் ஆராய்கிறார். மலையை வெறும் அழகிய காட்சிப் பின்னணியாகவோ அல்லது குறியீட்டு அடையாளமாகவோ கருதாமல், மனிதர்கள் தோன்றுவதற்கு முன்பே இருந்த, இனியும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கப் போகும் ஒரு உயிருள்ள தளமாக மெக்கின்லி சித்தரிக்கிறார். இந்தக் கோணத்தில் பார்க்கும் போது, அம்மலை மனித வரலாற்றுக்குச் சாட்சியாக நிற்பதோடு மட்டுமன்றி, மனிதர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் ஆயுட்காலங்களைத் தாண்டிய கால மற்றும் புவியியல் பரிமாணங்களின் நினைவூட்டலாகவும் செயற்படுகிறது.

உலகில் வாழ்வதற்குப் பல வழிகள் உள்ளன என்றும், அவை ஒவ்வொன்றுக்கும் அதற்கேயுரிய தனிமதிப்பு உண்டு என்ற கருத்தையும் இப்புத்தகம் நிறுவுகிறது. இந்தக் கண்ணோட்டம் கலாசார, சுற்றுச்சூழல் அல்லது மதரீதியான பன்முகத்தன்மையின் நன்மைகளை ஆராய்ந்தாலும், பல்வேறு மதக்குழுக்கள் உயர்ந்த மட்டத்தில் அமைதியாகவும் இயல்பாகவும் இணைந்து வாழக்கூடும் என்ற கருத்தை இப்புத்தகம் விமர்சனரீதியாக ஆராய்கிறது. மலையுச்சியில் பல்வேறு இன மற்றும் மதக்குழுக்கள் நல்லிணக்கத்துடன் அருகருகே வாழ்கின்றனர் எனப் பரவலாகக் காணப்படும் நம்பிக்கையை ஆசிரியர் கேள்விக்குள்ளாக்குகிறார். மாறாக, சமூகங்களுக்குள்ளும், அதேபோன்று சமூகங்களுக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் இடையிலும் நிகழும் பல்வேறுபட்ட உறவுகள், மோதல்கள் மற்றும் பதற்றங்களையும் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது.



jiffry.hassan@thaiveedu.com



சு. வேணுகோபால்

# ஆ. மாதவன் கதைகள்

# தலைகீழாகும் கணிப்புகள்

tg.theeban@gmail.com

மனிதர்கள் நல்ல நடத்தைகளை, குணங்களை உடையவர்கள் என்று மேலோட்டமாக முடிவுகட்டி விடமுடியாது. அறியாத ஒரு மர்மத்தைக் கண்டு சொல்வதுதான் கலை என்று நம்புபவர் ஆ. மாதவன். அந்தவகையில் அவரது சிறந்த கதைகளுள் ஒன்று 'காளை.'

அப்பளம் தயாரித்து கடையில் விற்கும் கோபால் பட்டருக்கு இரண்டு இளம்பெண்கள். பெரியவள் பாப்பி. சின்னவள் மஞ்சு. தாய் இறந்தபின் குஞ்ஞி என்ற வேலைக்கார பெண் பாப்பியுடன் இணைந்து அப்பளம் தயாரிப்பில் முழு வீச்சுடன் ஈடுபடுகிறாள். இவள் ஆறு ஆண்களோடு வாழ்ந்தவள். ஆடவர் பற்றித் தெரிந்தவள். பாப்பி கொஞ்சம் படித்தவள். அமைதியானவள். அப்பாவின் தொழிலுக்காக உழைப்பவள். குடும்ப பாசம் மிக்கவள். கோபால் பட்டர் மூத்த மகள் மீது நேசமும் பரிவும் கொண்டவர். அவளது கருத்திற்கு மதிப்புத் தருபவர். இளையமகள் பள்ளிப்படிப்போடு தட்டச்சும் படிப்பவள். விடுமுறை நாட்களில் தட்டச்சுக்குச் செல்வதாகக்கூறி தோழிகளோடு சினிமா பார்ப்பவள். ஊர் சுற்றுபவள். அவளுக்கு வயது பதினெட்டு. இளைய மகள் பொய்கூறி வெளியில் சென்று, அதனைத் தந்தை அறிந்தால், செமத்தையாக அடியும் வாங்குபவள். இதனால், படிப்பை நிறுத்திவிட பட்டர் முயலும்போதெல்லாம் பாப்பி தடுத்து 'அவளாவது படிக்கட்டும்பா' என்று தங்கைக்கு உதவுவாள். இந்தச் சின்னமகள் பெரியமகள் போல பொறுப்பாக இல்லையே என்று தந்தைக்குக் கவலை. சினிமா, ஆடம்பரம், தோழிமார்களுடன் ஊர்சுற்றுதல் என்ற இந்தப் போக்கினால் ஆடவர் வலையில் சிக்கி தன் பெயரைக் கெடுத்துவிடுவாளோ என்று பயப்படுகிறார். இவர்கள் எதைத் தேடிக்கொண்டவர்கள். என்ன நேர்கிறது என்பதுதான் கதை.

கோபால் கடைக்கு வரும் சிநேகிதர் சிவம்பிள்ளை, மற்றொரு நண்பர் பூக்கடை வாசு, வேலைக்கார அம்மாள் குஞ்ஞி, பட்டறை வைத்திருக்கும் சின்னான் என வரும் மாந்தர்களின் வெளிப்படையான பேச்சுக்களை, அவர்களது எண்ணங்களை, பார்வைகளை, பவ்வியங்களை மிக்க இயல்போடு உருவாக்கிக் காட்டியிருக்கிறார். மலையாள பேச்சு வழக்கு வசீகரத்தைத் தருகிறது.

பட்டர் வீட்டின் பின்புறம் வண்டி மாடுகள் நிறுத்தும் பெரிய இடம், இரும்புப்பட்டறை, பசுவிற்கு இணைசேர்க்கும் இடம், இரவு நேரங்களில் கேட்கும் பட்டறை ஒலி என விரியும் பின்னணியை ஓவியம்போல தீட்டியிருக்கிறார். வீட்டைச் சுற்றி கோட்டைச்சுவர். துவைகல்லில் ஏறிப் பார்த்தால் வண்டிப்பேட்டையில் நடப்பது தெரியும். ஒருமுறை குஞ்ஞி துவைகல்லில் ஏறியபோது இணைசேர்ப்பு நடப்பதைக் கண்டு சுமுகச்சுழிப்போடு இறங்குகிறாள். என்ன என்று பாப்பியும் ஏறிப்பார்த்து பட்டெனெ இறங்குகிறாள். அந்தக் காளை வளர்க்கும் பட்டறை சின்னான் இவர்களைப் பார்க்கிறான்.



அந்த வருடம் பெருமழை விழுந்து தெருத்திண்ணையே மூழ்க மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இப்படியொரு மழை பெய்திருக்கிறது. அந்த மழையின் வீட்டின் பின் சுற்றுச்சுவர் வீழ்ந்துவிடுகிறது. சுவருக்குப் பதிலாக பட்டறை இளைஞன்

சின்னானை அழைத்து கிடுகு மறைப்பு கட்டுகிறார். இந்த கிடுகு கட்டிய வேலையிலிருந்து கிண்டல் பேச்சு பேசுகிறான். இதனை அப்பாவிடம் சொல்லத்தான் பாப்பி நினைக்கிறாள். அடிதடி வந்துவிடும் என்பதால் விட்டுவிடுகிறாள். மெல்ல மெல்ல அவனால் ஆட்கொள்ளப்பட்டு தன்னை இழக்கிறாள். அதனால் உண்டான கர்ப்பத்தை குஞ்ஞியிடம் சொல்லி கதறுகிறாள். விபரீதத்தை குஞ்ஞியும் தங்கையும் உணர்ந்து தேற்றுகின்றனர்.

காமக்கடும்புனல் நாம் உருவாக்கிக்கொண்ட சமூக மேன்மை களை, மதிப்புகளை ஏதோ ஒரு நிமிடத்தில் ஏதோ ஒருவகை யில் பொசுக்கிவிட்டு அத்துமீறி பாய்ந்து பற்றுகிறது. அந்த உக்கிரம் உடலில் பதுங்கி இருந்து முடுக்குகிறது. அடக்கிப் பார்க்கிறார்கள் அடங்கவும் மறுக்கிறது. இந்த ஊற்றுக் கண்ணை இயல்புணர்வுடன் காட்டிய கதை ‘காளை’.

சினிமா, திருவிழா, சிநேகிதிகளின் வீடு என்று விட்டேத்தி யாகச் சுற்றித் திரிந்த தங்கை எந்தவித விபரீதத்தையும் எதிர் கொள்ளவில்லை. ஆனால், குடும்பத்திற்காக உழைத்து, வீட்டிலேயே இருந்து, எல்லோரிடமும் நேசத்தோடு பழகிய பாப்பி இதில் வீழ்ந்து மாட்டிக்கொள்கிறாள். மாதவன் ஒரு சூழலை முன்வைத்துச் சொல்லும் விதம் நமக்குத் திகைப் பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. குஞ்ஞி, ‘பப்பி அம்மோ இருப்புப்பெட்டிபோல இருந்த வீட்டிலே எப்படி நடக்கும்’ என்று வருந்துகிறாள். உள்ளத்தின் தகிப்பை அவ் வளவு எளிதில் எடைபோட்டுவிட முடியாது. களிப்புகளின் இந்தத் தலைகீழ் மாற்றத்தை, இச்சையின் உள்ளக்கொதிப் போடும் நேர்த்தியோடும் வலுவான பின்னணியோடும், கண் ணியத்தை விரும்பிய ஒரு பெண்ணின் வாழ்விலும் நிகழக்கூ டியதாக மிகுந்த பரிவுடன் எடுத்துரைத்த முதன்மையான கதை ‘காளை’. படைப்பெழுச்சியும் கலையாற்றலும் கூடிக் கலந்து உருவான அபாரமான கதைகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

‘பாப்பி அம்மோவ், அந்தோ எட்டிப் பாருங்க, கொல்லன் ஓலையிலே தீ கெடந்து தெனைக்குது. அவனுக்கு நம்ம அடுப்புத்தீதான் பீடிக்குப் பொகையும் போல இருக்கு. அப் பாகிட்ட சொல்லிர வேண்டியதுதான்.’

‘சின்னக் கொல்லன் சுற்றியால் தட்டிக்கொண்டிருக்கும் ஓசை கேட்கிறது. அந்தச் சத்தத்தைச் செவிகொடுத்துக் கேட்கக் கேட்க அந்த ஓசை மனதில் அமிழ்ந்து வர்ணக் குமிழிகள் சிதறுவதுபோல எண்ணங்கள் பிரிந்தன.’

‘தீயை ஊதி ஊதிப் பெருக்கிக்கொண்டே இருந்தேன். இப்போ குஞ்ஞியோ மஞ்சுவோ ஆராவது வந்தா கொள்ளாம் என்று நெனச்சேன். அய்யோ வந்திரக்கூடாதேன்னும் தோணிச்சு... வாழை மரத்திலே ரெண்டு காக்காய்கள் வந்திருந்து கா... கா என்று பிராணனை அறுத்துக்கொண்டிருந்தது அடிவயிற்றி லிருந்து தீ எரிகிறது மாதிரி.’ இப்படி இந்தக் கதையில் வரும் எண்ணற்ற வரிகள் படித்துமுடித்தப் பின்னும் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன.

ஆ. மாதவனின் ‘காமினி மூலம்’ என்று மற்றொரு கதை. மியன்னா லாட்ஜின் வாட்ச்மேன் முஸ்தபா. லாட்ஜின் தரை தளம் ரேசன் அரிசி வைக்கும் குடோன். மேல்தளம் 33 அறை களில் தங்கி பல்வேறு பணிகளுக்குச் செல்பவர்கள். முஸ்தபா மிகவும் நேர்மையானவன். கண்டக்டராக வேலை பார்க்கும் செபஸ்டியான் ஒருநாள் நள்ளிரவில் இளம்பெண்ணை அழைத்து வருகிறான். முஸ்தபா தடுத்து துரத்திவிடுகிறான். ‘எல்லாம் சரியாவா நடக்கு’ என்று செபஸ்டியான் எரிச்சல் படுகிறான்.

ரேசன் அரிசி மூடைகள் எடுக்கிறார்கள். எடுத்து முடிந்ததும் ஒருமுறை உள்ளே இருக்கும் ஸ்டாக்கை எண்ணி கணக்குப் பார்க்கும்படி சொல்கிறான் கிளார்க். வண்டிகள் எல்லாம் போனபின் மூன்று ஆள் உயரத்தில் அடுக்கப்பட்டிருக்கும் மற்ற மூட்டைகளை எண்ணுகிறான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த செபஸ்டியான் முஸ்தபாவிற்கு சிறு தண்டனை தர நினைக்கிறான். பின்மதியநேரம். ஆள்நடமாட்டமில்லாத ஒரு நேரத்தில் குடோனுக்குள் சட்டென நுழைகிறான். முஸ்த பாவை பயமுறுத்த முதலில் நினைக்கிறான். அதைவிடுத்து சிறு தண்டனை தர நினைக்கிறான். இருபுறம் அடுக்கி வைக் கப்பட்ட மூன்றாள் உயர மூடைகளின் இடையே முஸ்தபா எண்ணிக்கொண்டு இருப்பது தெரிகிறது. கழுத்து உயரத் தில் இருக்கும் ஒரு மூட்டையின் காதை பிடித்து இழுக்கிறான் செபஸ்டியான். எதிர்பாராதவிதமாக பல மூட்டைகள் சரிந்து விழுந்து அமுக்கி விடுகின்றன. வேலைக்குச் சென்று மறு நாள் செபஸ்டியான் திரும்பி வருகிறான். மூட்டைக்குள் இருந்து உயிரற்ற முஸ்தபாவை மீட்டு கிடத்தியிருக்கிறார் கள். ஏதும் தெரியாததுபோல அறைக்குச் செல்கிறான் செபஸ் டியான். நினைத்தது ஒரு சிறு தண்டனை. அவன் எதிர்பாராத நிகழ்வு நடந்துவிடுகிறது. கணிப்பு தவறிப்போகிறது.

தான் செய்யும் காரியம் தவறென்று தெரிந்தே செய்யத் துணி கிறவனைத் தடுக்கிறபோது நேர்மையைப் பரிசீலிப்பதற்குப் பதிலாக தடுக்கிறவன் மீது வன்மம் தோன்றுகிறது. அது எதிர்பாராத ஒன்றையும் நிகழ்த்திவிடுகிற விசித்திரத்தை சொல் கிற கதைதான் ‘காமினிமூலம்’. இந்த குற்றச்செயலுக்கு மூல ஊற்றாக காமம் இருந்திருக்கிறது. இவ்விதம் அகத்தின் ஆட்டங்களைத் திறந்து வைத்த கலைஞன் ஆ.மாதவன்.

‘காளை’, ‘காமினிமூலம்’ ஆகிய இரு கதைகளிலும் ஆ. மாதவன் மனித அகத்தின் நுண்ணிய அசைவுகளையும், இச்சை, வன்மம், பொறாமை போன்ற உணர்வுகள் எவ்வாறு எதிர்பாராத விபரீதங்களுக்கு இட்டுச் செல்கின்றன என்பதை யும் நுட்பமாக வெளிப்படுத்துகிறார். ‘காளை’யில் இச்சை யின் உள்ளக்கொதிப்பு ஒரு பெண்ணின் வாழ்வில் ஏற்படுத் தும் தலைகீழ் மாற்றம் சித்திரிக்கப்படுகின்றது என்றால், ‘காமினிமூலம்’ கதையில் காமத்திலிருந்து கிளைத்த வன்மம் எதிர்பாராத கொலை விபரீதமாக முடிகிறது. இரு கதைக ளிலும் புறநிகழ்வுகளை விட அவற்றுக்குப் பின்னால் இயங் கும் அகத்தின் இருண்ட ஆட்டங்களுக்கே ஆ. மாதவன் முதன்மை அளிக்கிறார். மனித மனதின் இந்த நுட்பமான இயக்கங்களைப் பரிவுடனும் கலை நேர்த்தியுடனும் வெளிப் படுத்தியதன் வழியாக, மனித அகத்தின் சிக்கல்களை ஆழமாகப் பதிவு செய்யும் படைப்பாளியாக ஆ. மாதவன் திகழ்கிறார்.



venugopal@thaiveedu.com

# போருக்குப் பிந்தைய ‘தேசப்பற்று’ இலங்கையில் வரலாறு தேசியப் பழமரபாக உருமாற்றப்படுதல்

ஆங்கிலத்தில் நீரா விக்கிரமசிங்க
தழுவல் தமிழாக்கம் ச. சத்யதேவன்

II

## நிகழ்கால மேலாதிக்கச் சொல்லாடலின் கட்டுமானம்



அரசு, நிறுவனங்கள், தனிநபர்கள், அரசு சாரா அமைப்புகள், உள்ளூர் மற்றும் சர்வதேச முகவர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட தரப்பினர் ஒன்றிணைந்து, ‘தேசியப் பழமரபும்’ (Heritage) எனப்படும் ஒரு புதிய கருத்தாடல் தளத்தை உருவாக்குகின்றனர். இந்தத் தளமானது, படிப்படியாக ‘வரலாறு’ என்று பொதுவாக அறியப்படும் அறிவியல் துறையோடு தந்திரமாகத் தன்னை இணைத்துக்கொண்டு, அதன் மீது ஒரு மேலாதிக்கத்தை நிறுவுகிறது.

தேசியப் பழமரபின் இத்தகைய புதிய கருத்தாடல் வடிவம், பின்வரும் சில தெளிவான வழிமுறைகள் மூலம் திட்டமிட்டு வடிவமைக்கப்படுகிறது:

- புதிய ‘அறிவுருவாக்க’ நடைமுறைகள்: தேசியப் பழமரபும் குறித்த மாற்றுச் சிந்தனைகளை முடக்கி, ஒற்றைப்படையான மேலாதிக்கக் கருத்துகளை மட்டுமே அறிவுத் தளத்தில் உற்பத்தி செய்தல்.
- சட்ட மற்றும் காவல் துறை அதிகாரங்கள்: சட்டம் மற்றும் காவல்துறை அதிகாரங்களின் ஊடாகப் தேசியப் பழமரபுப் பாதுகாப்பிற்கு மிகத் தீவிரமான அதிகாரபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்.
- நிதி ஒதுக்கீட்டு அரசியல்: குறிப்பிட்ட சில தளங்களுக்கு மட்டும் பாரியளவில் நிதி ஒதுக்கீடு செய்து அவற்றுக்கு ‘மதிப்பேற்றுவதும்’ (Valorization), மற்றைய சமூகங்களின் வரலாற்றுத் தளங்களை முற்றாகப் புறக்கணித்து ‘மதிப்பிறக்குவதும்’ (Devaluation).

### தேசியப் பழமரபுக் கல்வியும் பாடப்புத்தக அரசியலும்:

சமூகவியலாளர் பியர் பூர்தியோ (Pierre Bourdieu) வாதிடுவது போல:

‘கல்விக் கட்டமைப்புகள் என்பவை - ஒரு குறிப்பிட்ட ஆளும் வர்க்கத்தின் கலாசாரப் பாரம்பரியத்தைப் பெறுவதற்கும், அதனை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதற்கும் தகுதியும் திறனும் கொண்ட ‘சமூக முகவர்களை’ (Social Agents) உருவாக்குவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன.’

இலங்கையில் ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்விகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. கல்வி அமைச்சின் புள்ளிவிவரங்களின்படி, சுமார் 3.9 மில்லியன் மாணவர்கள் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியைப் பயின்று வருகின்றனர். இத்தகைய பரந்த பொதுமக்களுக்குப் பாரம்பரியம் பற்றிய மேலாதிக்கக் கருத்துகள் கடத்தப்படும் முதன்மை

prasadbatti@gmail.com

ஊடகங்களாக பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், 'தஹம் பாசல' (Daham Pasala - பௌத்த ஞாயிறு பள்ளிகள் - தம்ம பாடசாலை) மற்றும் அரசால் அங்கீகரித்துத் தயாரிக் கப்படும் பாடப்புத்தகங்கள் விளங்குகின்றன.

உண்மையில், இப்பாடப்புத்தகங்கள் கடந்த காலத்தைப் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வாக விளங்கிய 'வரலாறு' என்ற அறிவியல் பாடத்தைத் திட்டமிட்டு ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக எவ்விதக் கேள்விகளுமற்ற, தட்டை யான மற்றும் சிக்கல்களற்ற ஒரு மேலோட்டமான கதை யாடலை எவ்வாறு மாற்றீடு செய்துள்ளன என்பதற்கான துல்லியமான சான்றுகளாகும். இந்தத் திசைதிருப்பல் செயல்முறை புதியதொன்றல்ல; எனினும், வடக்கு மற்றும் கிழக்கில் நிலவிய பிரிவினைவாத இயக்கத்திற்கு எதிரான உள்நாட்டுப் போர் அதன் இறுதி மற்றும் இரத்தம் தோய்ந்த கட்டத்தை எட்டியதற்குப் பின்னர் (2009-க்குப் பின்), இப்போக்கு மிகத் தீவிரமானதொரு வேகத்தைப் பெற்றுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை, சமூகத்தில் எப்போதுமே ஒரு வகையான 'வரலாற்று வெறி' (Historical Obsession) நிலவி வருகின்றது. இதனால்தான், இங்கு வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் எப்போதுமே அரசியல் ரீதியாக மிகுந்த சர்ச்சைக்குரியவையாக இருந்து வருகின்றன. 1990-கள் வரை, இடதுசாரி மற்றும் வலதுசாரி அரசாங்கங்கள் இரண்டுமே, தேசத்தைப் பற்றிய ஒரு ஒருங்கிணைந்த ஒற்றைக் கதையாடலை உருவாக்கும் ஏகபோகப் பொறுப்பு அரசுக்கே உரியது என்று நம்பின. தேசிய கல்வி நிறுவ கத்தின் (NIE) ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்ட ஆசிரியர் களும், ஆளும் அமைச்சின் அரசியல் உத்தரவுகளுக்கு இணங்கும் வகையிலேயே பாடப்புத்தகங்களை வடிவ மைத்தனர்.

தற்போது, பாடப்புத்தக உற்பத்தித்துறை ஓரளவு தனியார் மயமாக்கப்பட்டு, திறந்த சந்தையாக மாறியுள்ள போதிலும், மில்லியன் கணக்கான குழந்தைகளுக்கு அறிவை உருவாக்கும் நபர்கள் இப்போதும் அதே பழைய கருத்தியல் பின்னணியைக் கொண்டவர்களாகவே நீடிக் கின்றனர். இதில் ஏற்பட்டுள்ள ஒரே வித்தியாசம்: முன் பெல்லாம் இத்தகைய ஆசிரியர்களுக்கு அரசால் நேரடி யாகச் சம்பளம் வழங்கப்பட்டது; இப்போதோ தனியார் வெளியீட்டாளர்களால் ரோயல்டி (Royalty) வழங்கப்படு கிறது.

இத்தகைய பாரம்பரியம் மற்றும் மதம் சார்ந்த கருத்துகள், முறையான வரலாற்றுப் பாடப்புத்தகங்களிலும் பௌத்த மதப் பாடப்புத்தகங்களிலும் மிகத் தந்திரமாகப் புகுத்தப் படுகின்றன. வரலாறு தற்போது க.பொ.த சாதாரண தரம் (O/L) வரை ஒரு கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி நிறுவனத்தால் (NIE) தயாரிக்கப்பட்ட புதிய வர லாற்றுப் பாடப்புத்தகங்களை உற்றுநோக்கினால், அவை கடந்த கால சமூக-பொருளாதார இயக்கவியலை விளக் குவதை விடுத்து, 'அரச வம்சங்களின் நினைவுச் சின் னங்களை' மகிமைப்படுத்துவதற்கே முதன்மை முக்கியத் துவம் வழங்குகின்றன.

கடந்த காலத்தை அறிவியல் பூர்வமாக விளக்கும் ஒரு சமூக அறிவியல் பாடமாகத் திகழ வேண்டிய வரலாறு, இப் புத்தகங்களில் அடையாளம் காண முடியாத அளவிற்குச் சிதைக்கப்பட்டுள்ளது. அவை குழந்தைகளுக்கு வழங்கும் ஒற்றைச் சித்திரம் என்னவெனில்:

'இந்தியாவில் இருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்களும், மேற் கத்திய காலனித்துவ சக்திகளும் நமது சமூகத்தின் உன்னத சமநிலையை உடைத்து, நவீனத்துவத்தைக் கொண்டு வருவதற்கு முன்பு, இங்கு ஒரு மாபெரும் பௌத்த பொற்காலம் நிலவியது'

என்றதொரு தட்டையான கற்பனைக் கதையை மட்டுமே ஆகும்.

முறையான அரச பள்ளி வரலாற்றுப் பாடப்புத்தகங்க ளுடன் இணைந்து, 'தஹம் பாசல' (பௌத்த ஞாயிறு பள்ளிகள்) மூலம் பௌத்த மதத்தைக் கற்பிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பாடத்திட்டங்களும் உரைகளும், இளைய மற்றும் எளிதில் திசைதிருப்பப்படக்கூடிய ஒரு தலைமுறையினரிடையே மேலாதிக்கப் தேசியப் பழமரபுக் கருத்துக்களைப் பரப்புவதற்கான மிக முதன்மையான கருத்தியல் தளங்களாகப் பார்க்கப்பட வேண்டும்.

தஹம் பாசல / தம்ம பாடசாலை (ஞாயிற்றுக்கிழமை பௌத்த பள்ளி) களுக்கான 1 முதல் 11-ஆம் வகுப்பு வரையிலான பாடப்புத்தகங்கள் அனைத்தும் அரச பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தால் (Department of Buddhist Affairs) நேரடியாக அச்சிடப்பட்டு விநி யோகிக்கப்படுகின்றன. 1961-ஆம் ஆண்டு வரை, 'இளைஞர் பௌத்த சங்கம்' (YMBA) தான் இத்தகைய ஞாயிறு பள்ளிகளின் தேசிய வலையமைப்பை நிறுவி, அவற்றுக்கான பாடநூல்களையும் கல்வி வளங்களையும் வழங்கி வந்தது. அதன் பின்னர் வந்த அரசாங்கங்கள், இந்த வரலாற்றுப் பொறுப்பைத் தங்களின் அமைச்சுகளின் கீழ் முழுமையாகக் கையிலெடுத்துக் கொண்டுள்ளன.

தற்போதைய தஹம் பாசல / தம்ம பாடசாலை பாடப்புத்த கங்களை ஒரு மேலோட்டமான ஆய்வுக்கு உட்படுத்தி னாலும், அவை இலங்கை வரலாறு குறித்துக் கொண்டுள்ள ஒரு குறிப்பிட்ட சித்தாந்தப் போக்கை (Ideological Trend) வெளிப்படுத்துகின்றன. பள்ளி வரலாற்றுப் பாடப்புத்தகங்களைப் போலவே, இங்கும் பௌத்த சாசனத்தை வளர்த்தெடுத்ததற்காகப் போற்றப்படும் 'ஸ்ரேஷ்ட மினிஸ்ஸு' (Srestha Minissu - மாபெரும் மனி தர்கள்) மற்றும் அரச வம்சாவளியினர் மட்டுமே முதன் மைப்படுத்தப்படுகின்றனர். இதன் மூலம், பௌத்தத்தின் வரலாறு என்பது உன்னத செயல்களாலும் விதிவிலக்கான தனிமனிதர்களின் சாதனைகளாலும் மட்டுமே நிரம்பிய ஒன்றாகக் காட்டப்படுகிறது. வரலாற்று முரண்பாடுகளைத் தவிர்த்து, சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து மகிமைப்ப டுத்தும் இப்போக்கானது, நவீன அறிவியல் பூர்வமான வரலாற்று ஆய்வை விடவும், பழைய தொன்ம / பாரம்பரிய முறையையே (Mythological Method) பெரிதும் ஒத் துள்ளது.

இங்கு பயன்படுத்தப்படும் 'சாசன வரலாறு' (Sasana History) அல்லது பௌத்த மதத்தின் வரலாறு என்ற சொல்லாடலே ஆழமான ஆய்வுக்குரியதாகும். ஏனெனில், இது நவீன 'தேச-அரசு' (Nation-State) என்ற கருத்தாக்கத்திற்கு மாற்றாக, பௌத்த மத நிறுவன மையப் படிநிலையை ஒரு மாற்று வரலாற்றுச் சட்டகமாக (Alternative Historical Framework) மாணவர்களுக்குக் கற்பிக்கிறது.

சமூகவியலாளர் கணநாத் ஒபயசேகர, நவீன காலத்திற்கு முந்தைய பௌத்த சமூகத்தின் கூட்டு மனநிலையை விளக்குவதற்கு மேற்கத்திய அரசியல் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறார். அதற்குப் பதிலாக, பண்டைய கால அரசுகள் என்பவை:

'அமைப்பு ரீதியாக வேறுபட்டுக் காணப்பட்ட போதிலும், கருத்தியல் ரீதியாக அவை ஒரு பிரம்மாண்டமான பௌத்த 'அடையாளம் ஒன்றாக (Buddhist 'Something') கற்பனை செய்யப்பட்டன' என்று வாதிடுகிறார்.

இந்த 'அடையாளம்' என்பதை நாம் 'சாசனம்' (Sasana) என்ற சொல்லுக்குள் அடக்க முடியும். இச்சாசனம் என்பது யாத்திரைகள் போன்ற பல்வேறு கூட்டு மத வழிபாட்டு முறைகள் மூலம் பௌத்த மக்களால் கட்டமைக்கப்பட்ட ஒரு ஆன்மீகக் கற்பிதச் சமூகம் (Imagined Community) ஆகும்.

இதன் விளைவாக, தஹம் பாசல / தம்ம பாடசாலை மாணவர்கள் கடந்த காலத்தை ஒரு மதச்சார்பற்ற 'தேசத்தின் வரலாறாகப்' பார்ப்பதை விட, 'சாசனத்தின் வரலாறாகவே' உள்வாங்கப் பழகுகின்றனர். இந்த கடந்த காலம் என்பது மாபெரும் அரசர்களின் சாதனைகள், அவர்களின் மகத்துவத்தைப் பறைசாற்றும் நினைவுச் சின்னங்கள் (Viharas and Stupas) மற்றும் அரச அதிகாரத்திற்கும் பௌத்த சாசனத்திற்கும் இடையே நிலவிய பிரிக்க முடியாத புனித உறவு ஆகியவற்றால் மட்டுமே கட்டமைக்கப்பட்டுள்ளது.

'தேசியப் பழமரபு என்பது, அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் அல்லது வரலாற்றுத் தடயங்களின் மீது நிகழ்கால அதிகாரம் சுமத்தும் புதிய அர்த்தங்கள் சார்ந்தது எனின், ' தஹம் பாசல / தம்ம பாடசாலை'யில் வழங்கப்படுவது வரலாற்றின் ஒரு தீவிரத் தேசியப் பழமரபுமயமாக்கப்பட்ட வடிவமே (A Heritagized Version of History) ஆகும். அங்கு, கடந்த காலம் குறித்த அந்தப் பழைய பிரதிநிதித்துவங்கள் அனைத்தும், எவ்வித விவாதங்களுக்கும் அல்லது மறுபரிசீலனைகளுக்கும் இடமற்ற அறுதி உண்மைகளாகவே (Absolute Truths) மாணவர்களின் முன் வைக்கப்படுகின்றன.

### பல்கலைக்கழகங்களும் 'நிபுணத்துவ அறிவின்' அரசியலும் (Universities and the Politics of Expert Knowledge):

நான் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் பேராசிரியராகக் கற்பித்த கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஒரு சுவாரசியமான போக்கைக் காண முடிகிறது. வேகமாக மாறிவரும் நவீன உலகிற்கு மத்தியில், தங்களுக்குப் பழக்கமான ஓர் அசையாத, கற்பிதமான தேசிய கலாசாரப் பெருமிதங்களைத் (Static National Culture) தேடி, இளம் பௌத்த பிக்குகள் பெரும்பாலும் வரலாற்றைத் தங்களின் சிறப்புப் பாடமாகத் தெரிவு செய்கின்றனர்.

இருப்பினும், பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் வரலாற்றுப் பாடங்கள், பழைய காலவரிசை ஏடுகளின் துறவற வரலாறுகளை (Chronicle Histories of Mahavamsa) அப்படியே ஏற்கும் பாரம்பரிய அணுகுமுறையைக் கொண்டிருப்பதில்லை. மாறாக, அவை அறிவியல்பூர்வமான விவாதங்களின் மூலம் மாணவர்களின் முற்கற்பிதங்களை (Preconceptions) முற்றிலும் தலைகீழாக மாற்றியமைக்கும் போது, அவர்கள் பெருத்த ஏமாற்றமடைகின்றனர். ஏனெனில், அங்கு கற்பிக்கப்படும் நவீன வரலாற்றுத் துறை என்பது, இத்தகைய மேலோட்டமான 'பாரம்பரிய ஆய்வுகளின்' (Heritage Studies) நேரெதிர் துருவமாகவே விளங்குகிறது.

ஆனால், கடந்த காலத்தைப் பற்றிய கருத்துக்கள் வடிவமைக்கப்படும் வரலாறு, தொல்லியல், பாலி மற்றும் பௌத்த ஆய்வுகள் போன்ற துறைகளைக் கொண்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இதுதான் பொதுவான யதார்த்தம் என்று கூறிவிட முடியாது. இந்த வெவ்வேறு, நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் வரலாறு மற்றும் பாரம்பரியம் பற்றிய அறிவின் உள்ளடக்கத்தில் எவ்வித ஒருமைப்பாடும் (Unifor-





mity) நிலவுவதில்லை. பாடங்களின் உள்ளடக்கம் என்பது, அவை கற்பிக்கப் படும் பாடத்திட்டத்தின் தன்மை மற்றும் எதற்கு அதிக மதிப்பு வழங்க வேண்டும் (What is to be Valued) என்பது குறித்த தனிப்பட்ட விரிவுரையாளர் களின் சொந்தச் கருத்தியல் விளக்கங்களைப் பொறுத்தே அமைகிறது.

இருப்பினும், இவற்றுக்கு இடையே உள்ள ஒரு பொதுவான அம்சம் என்ன வெனில், இந்தப் பல்கலைக்கழக உள்ளடக்கங்கள் அனைத்தும் சமூகத்தில் 'நிபுணத்துவ அறிவு' (Expert Knowledge) ஆகச் செயல்படுவதால், அவை தங் களுக்குள் ஒரு சட்டபூர்வத் தன்மையையும், கேள்விக்குட்படுத்த முடியாத 'புனி தத்துவத்தின் ஒளியையும்' (Aura of Sanctity) இயல்பாகவே சுமந்து வரு கின்றன என்பதாகும்.

## அரச எந்திரங்களும் நிறுவனக் கட்டமைப்புகளும்:

பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயும், கடந்த காலத்தின் எந்தப் பகுதியைப் பாதுகாக்க வேண்டும் அல்லது எதனைப் புறக்கணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் இறுதி அதிகாரத்தை இந்த 'நிபுணர்களுக்கு' வழங்குவதில் அரச நிறுவனங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. பாரம்பரியத்தின் வரையறை, உற்பத்தி மற்றும் பாதுகாப்பில் இலங்கையின் பல அமைச்சுகளும் அர சாங்கத் திணைக்களங்களும் நேரடியாக ஈடுபட்டுள்ளன. அவற்றுள் சில:

- புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
- தேசிய மரபுரிமைகள், கலைகள் மற்றும் கிராமியக் கலைநயப் பொருட்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு
- தொல்பொருளியல் திணைக்களம் (Department of Archaeology)
- தேசிய சுவடிகள் காப்பகம் (National Archives) மற்றும் தேசிய நூதனசா லைகள் திணைக்களம் (Department of National Museums)
- பௌத்த அலுவல்கள் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய மத அலு வல்கள் திணைக்களங்கள்.

இந்நிறுவனங்கள் அனைத்தும் அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் மூலம் தங்களின் செயல்பாடுகளைத் தொடர்ந்து பொதுவெளியில் காட்சிப்படுத்து வதன் மூலமே, சமூகத்தில் தங்களின் அதிகாரத்தையும் நம்பகத்தன்மை யையும் (Authority and Credibility) நிலைநிறுத்திக் கொள்கின்றன.

அரசாங்க அமைச்சுகளுக்கு அப்பாற்பட்டு, பல சட்டபூர்வ அமைப்புகளும் (Statutory Bodies) அரசு சாரா முகவர்களும் நிதி ஒதுக்கீடு மற்றும் முறையான ஆராய்ச்சிகள் மூலம் பாரம்பரியக் கட்டுமானத்தில் தீவிரமாகப் பங்கேற்கின் றனர். அவற்றுள் பின்வருவன முதன்மையானவை:

- மத்திய கலாசார நிதியம் (Central Cultural Fund - CCF)
- காலி பாரம்பரிய அறக்கட்டளை (Galle Heritage Foundation - GHF)
- தேசிய கலைமன்றம் (National Art Council (these might cover non-tangible heritage))
- தேசிய கைவினைக் கழகம் (National Crafts Council - NCC)
- தேசிய நிகழ்த்துகலை மையம் (The National Centre for the Performing Arts)
- யுனெஸ்கோ தேசிய ஆணையம் (The UNESCO National Commission)

இந்த ஆணைக்குழுக்களின் உயர் பதவிகளில், அதே 'பாரம்பரியப் பாதுகாவ லர்களான' நிபுணத்துவ வல்லுநர்களே மீண்டும் மீண்டும் அமர்த்தப்படுகின்றனர். இதன் விளைவாக, பாரம்பரியத்தின் தத்துவார்த்த அடித்தளங்களைக் கேள்விக் குட்படுத்துவதை விடுத்து, அவற்றை மேலும் பலப்படுத்தும் ஒரு தன்னைத் தானே நிலைநிறுத்திக்கொள்ளும் தேசியப் பழமரபுசார் மேலாதிக்கச் செய்தி (Self-perpetuating Message of Heritage) இவற்றுக்குள்ளேயே உற்பத்தி செய் யப்படுகிறது.



இறுதியாக, சில குறிப்பிட்ட சித்தாந்தச் சார்பற்ற அரசு சாரா அமைப்புகளும் (NGOs) தேசியப் பழமரபுப் பிரச்சினைகளில் சமூக ஆர்வத்தை உருவாக்குவதில் கணிசமான பங்காற்றுகின்றன:

- இலங்கையின் ரோயல் ஏசியாட்டிக் சொசைட்டி (Royal Asiatic Society of Sri Lanka - RASSL)
- இலங்கையின் தேசிய பாரம்பரிய அறக்கட்டளை (The National Trust - Sri Lanka)
- டச்சு பர்கர் யூனியன் (Dutch Burger Union - DBU)
- இலங்கைத் தொல்பொருளியலாளர்கள் சங்கம் (Sri Lanka Council of Archaeologists)
- சர்வதேச அருங்காட்சியகங்கள் கவுன்சில் (The International Commission on Museums - ICOM)
- சர்வதேச நினைவுச் சின்னங்கள் கவுன்சிலின் (The local chapter of the International Council on Monuments and Sites - ICOMOS) உள்ளூர் கிளைகள்.

## வெகுஜன ஆதரவைப்பெறப் போட்டியிடுதல் (Vying for Popular Appeal):

மறுபுறம், இலங்கையின் பிரபலமான வெகுஜனக் கலாசாரத் துறை, எப்போதுமே மக்களின் அமோக ஆதரவைப் பெறுவதற்காகப் போட்டியிடும் வகையில், புராணக் கதைகள் மற்றும் ஜாதகக் கதைகளிலிருந்து பெறப்பட்ட புனைவுகளாலேயே கட்டமைக்கப்பட்டு வருகின்றது. அத்துறை சமூக மாற்றங்களை வர்க்க மோதல்களின் அல்லது சமூக-பொருளாதாரச் சக்திகளின் இயங்கியலின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதைத் தவிர்த்து, தனிப்பட்ட 'நாயகர்களையும்' 'கடவுளரையுமே' வரலாற்றை இயக்கும் முதன்மை உந்துசக்திகளாகச் சித்தரிக்கிறது.

பின்காலனித்துவ இலங்கையில், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'கல்விசார் வரலாறுகளுக்கும்' (Academic History), உள்ளூர் மொழிகளில் (சிங்களம் / தமிழ்) வழங்கிவரும் 'வெகுஜன வரலாறுகளுக்கும்' (Popular History) இடையே நிலவும் இந்த இடைவெளி புதியதொன்றல்ல. எனினும், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் (1970–1977) மூடிய பொருளாதாரக் காலத்தின் கடுமையான வறுமைக்குப் பிறகு, ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதும், மேற்கத்திய நவீனத்துவத்தை நுகரும் ஒரு புதிய 'உலகளாவிய மேல்தட்டு வர்க்கம்' (Cosmopolitan Class) உருவெடுத்ததன் விளைவாக, இந்த அறிவுசார் இடைவெளி முன்னெப்போதையும் விட இன்று பலமடங்கு தீவிரமடைந்துள்ளது.

இலங்கையின் உள்ளூர் மொழி சார்ந்த கலாசார வெளி (Vernacular Cultural Sphere) என்பது பல்வேறு உள்-அடுக்குகளைக் கொண்டதாகும். எனினும், அதன் பெரும்பாலான பகுதிகள் மிக விரைவாகவே ஒரு 'வெகுஜனப் பொழுதுபோக்குத் தொழில்துறையின்' (Entertainment Industry) ஆளுகைக்குள் சிக்கின. தேசம் பிரிவினைவாத ஆயுதக் குழுக்களால் அச்சுறுத்தப்பட்டதாகக் கட்டமைக்கப்பட்ட போர்க்காலச் சூழலில், பெரும்பான்மைச் சமூகத்தின் கூட்டு உளவியலுக்குத் தேவையான 'தேசபற்றுத் தீனியை' வழங்குவதையே இத்துறை தனது முதன்மை நோக்கமாகக் கொண்டது.

குறிப்பாக, 2008-ஆம் ஆண்டில் தமிழ்க் கிளர்ச்சியாளர்களிடமிருந்து (LTTE) கிழக்கு மற்றும் வட மாகாணங்களை இராணுவ ரீதியாக மீளக் கைப்பற்றுவதற்காக அரசு ஒரு முழு அளவிலான 'தேசபக்திப் போரை' (Patriotic War) முன்னெடுத்தபோது இப்போக்கு அதன் உச்சத்தை எட்டியது.

2008 ஒகஸ்டில், 'அபா' (Aba) என்ற பிரம்மாண்ட வரலாற்றுத் திரைப்படம் இலங்கை முழுவதும் 38 திரையரங்குகளில் வெளியானது. இத்திரைப்படத்தைச் சுமார் 21,05,000 (2.1 மில்லியன்) பேர் பார்வையிட்டு வியக்கத்தக்க சாதனை படைத்தனர். இது தீவின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 10 சதவீதமாகும். இத்திரைப்படம், இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனமான 'சுவர்ணவாகினி' (Swarnavahini) தொலைக்காட்சியின் உரிமையாளர்களான 'ஈ.ஏ.பி. எதிரிசிங்க' (E.A.P. Edirisinghe) வணிகக் குழுமத்தின் தயாரிப்பாகும். பிரபல திரைப்பட நடிகரும் ஊடக ஆளுமையுமான ஜாக்சன் அந்தோனியால் (Jackson Anthony) இயக்கப்பட்ட இத்திரைப்படம், ஏறத்தாழ 2,400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கருதப்படும் பாண்டுகாபய மன்னனின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கிறது. மகாவம்சத்தின் கூற்

றுப்படி, அனுராதபுர இராச்சியத்தின் முதல் அரசரான பாண்டுகாபயன் 70 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது.

அதே 2008-ஆம் ஆண்டில், இத்தகைய வரலாற்றுச் சாய்வு கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஊடகங்களின் முதன்மை நேரங்களில் (Prime Time) ஒளிபரப்பப்படத் தொடங்கின. இவற்றுள், ஜாக்சன் அந்தோனி தொகுத்து வழங்கிய 'மகா சிங்களே வங்ச கதாவ' (Maha Sinhale Vansa Kathawa) என்ற வரலாற்றுத் தொடர் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சியானது இலங்கையின் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளை விவாதிப்பதற்காக ஒரு 'நிபுணர் குழுவை' (Panel of Experts) ஒன்றிணைத்தது. ஆனால், அவ்விவாதங்கள் முற்றிலும் உணர்ச்சிமயமான, ஒரு கதை சொல்லும் பாணியிலேயே அமைந்திருந்தன. இக்குழுவில் சில வேளைகளில் கல்விசார் வரலாற்றாசிரியர்கள் இடம்பெற்றபோதிலும், அவர்களின் தர்க்கரீதியான விளக்கங்கள் அனைத்தும், கடந்தகால மன்னர்களின் மாபெரும் சாதனைகளைப் போற்றும் அந்த மேலாதிக்கப் புகழுரைக் கதையாடலின் (Dominant Praise Narrative) பேரிரைச்சலால் முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டன.

இத்தகைய அனைத்துப் படைப்புகளிலும் முதன்மைப் படுத்தப்படும் அழகியல் வடிவங்கள் எவையெனில்: பண்டைய நீர்ப்பாசன நாகரிகமும் அதன் பிரம்மாண்டமுமே ஆகும். அங்கு சித்தரிக்கப்படுவது கடந்த காலத்தின் யதார்த்த நிலை அல்ல; மாறாக, இலங்கையின் தற்போதைய புகழை நிலைநிறுத்துவதற்காக, கடந்த காலத்தில் நிலவிய தொழில்நுட்பத் திறன் மட்டுமே காட்சிப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, பண்டைய உலகிலேயே மிகப் பெரிய செங்கல் கட்டமைப்புகளாகக் கருதப்படும் பிரம்மாண்ட 'தூபிகளை' அன்று கட்டிய பெருமை முன்னிறுத்தப்படுகிறது. அங்குள்ள புத்தர் சிலைகள் கூட, அவற்றின் ஆன்மீக அல்லது அழகியல் விழுமியங்களுக்காக அன்றி, '11.5 மீட்டர் உயரமுடைய, உலகின் மிகப்பெரிய தனித்து நிற்கும் புத்தர் சிலை' என்று கருதப்படும் மாளிகாவில 7-ஆம் நூற்றாண்டுச் சிலையுடன் ஒப்பிட முடிகிறது... என்ற அந்தப் 'பிரம்மாண்டத்தின்' அடிப்படையிலேயே பெரிதும் சிலாகிக்கப்படுகின்றன.

இத்தகைய 'நினைவுச் சின்னத்தன்மை' என்பது அரசு, வணிக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஆலோசகர்களால் 'தேசியப் பழமரபை' உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் ஒரு மைய விழுமியமாக மாறுகிறது. இவற்றுக்கு நிகழ்கால யதார்த்தத்துடன் இருக்கும் தொடர்பு மிகவும் மறைமுகமானதாகும். இன்றைய 'தேசபற்று' அரசுக்கு, ஒரு புதிய தேசியக் கற்பிதத்தை (National Imagination) மக்கள் மத்தியில் கட்டமைக்க 'கட்புலனாகும் அடையாளங்கள்' (Signatures of Visibility) அவசியப்படுகின்றன. இத்தகைய கலைப் படைப்புகளும், பிரம்மாண்ட நினைவுச் சின்னங்களும், தொல்லியல் கண்டுபிடிப்புகளுமே அந்தத் ' கட்புலனாகும் அடையாளங்களாக' மாறி, தேசிய அடையாளத்தையும் ஆளும் சில குறிப்பிட்ட அரசியல் ஆளுமைகளின் பிம்பத்தையும் பலப்படுத்தும் தேசியப் பழமரபை நுகர்வுப் பொருட்களாக உருமாற்றுகின்றன.

வளர்ந்தவர்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் எழுதப்படும் புனைகதையாக்கப்பட்ட வரலாற்று நூல்களும் இத்தகைய மேலாதிக்க தேசியப் பழமரபுச் சொல்லாடலின் முக்கிய ஊடகங்களாகத் தொழிற்படுகின்றன. அவை தேசம், இனம் மற்றும் மேலாதிக்கத் தேசியவாதம் சார்ந்த சில குறிப்பிட்ட கதையாடல்களை மக்களின் கலாசார மற்றும் சமூக அனுபவங்களுடன் பிணைத்து, அவற்றை இயல்பான உண்மைகளாக (Naturalize) மாற்றுகின்றன.

இலங்கையில் இத்தகைய வரலாற்று நாவல்களும் நாடகங்களும் மிகவும் பிரபலம் வாய்ந்தவை. இயக்குனர் ஜயந்த சந்திரசிறியின் படைப்பான 'மகாராஜா துட்டகைமுனு' (Maharaja Gemunu) இதற்குச் சிறந்த சான்றாகும். பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த, தமிழ் மன்னன் எல்லாளனைப் போரில் வென்று அனுராதபுர இராச்சியத்தை ஒருங்கிணைத்த சிங்கள வீரனாகச் சித்தரிக்கப்படும் துட்டகைமுனுவின் சிறப்புகளை விவரிக்கும் இந்நாடகம் / நாவல், ஒரு பிரம்மாண்ட திரைப்படமாக உருவாக்கப்பட்டு வெளியீடு செய்யப்படுவது இதன் வணிகத் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

இன்று, கடந்த காலம் குறித்த பொதுப் புத்தியும் சமூகப் பார்வையும் ஒரு தீவிரமான 'வணிகச் சூழலினாலேயே' தீர்மானிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள், திரைப்பட மற்றும் தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோர், நவீன அச்சு ஊடகங்கள், காட்சித் தொழில் நுட்பங்கள் மற்றும் இணையப் பரப்பைப் பயன்படுத்தி, தீவிரச் சிங்கள மேலாதிக்கத் தேசியவாதக் கருத்து நிலைகளைப் பொது வெளியில் மீளுற்பத்தி செய்கின்றனர். கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு இயந்திரங்களின் வழியே வெளிப்படுத்தப்படும், முற்றிலும் 'ஆளுமை மைய வரலாற்றுப் பார்வையை' (Personality-centered Past) அவர்கள் தேசியப் பழமரபின் பெயரால் இயல்பான உண்மைபோல மீண்டும் மீண்டும் கட்டமைக்கின்றனர்.

இருப்பினும், இத்தகைய மேலாதிக்கப் பார்வை என்பது எப்போதும் எவ்வித எதிர்ப்புமின்றித் தங்குதடையின்றி நிலைபெற்று விடுவதில்லை. இம்மேலாதிக்கச் சொல்லாடலுக்குள் உள்ளூர நிலவும் உள்-முரண்பாடுகளினாலும், இக்கூட்டு வரலாற்றுப் புனைவிலிருந்து திட்டமிட்டு விலக்கப்பட்ட ஏனைய சமூகங்களின் (சிறுபான்மையினரின்) குரல்களினாலும் இப்போக்கு தொடர்ச்சியாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டுச் சவாலுக்கு உட்படுத்தப்பட்டே வருகின்றது.

மூலக்கட்டுரை Economic & Political Weekly (EPW) ஆய்விதழில் (ஒக்ரோபர் 26, 2013, தொகுதி: XLVIII, இதழ்: 43) 'Producing the Present: History as Heritage in Post-War Patriotic Sri Lanka' எனும் தலைப்பில் பிரசுரமானது. முன்னதாக, இதே தலைப்பிலான ஆய்வுரை ஜூலை 2012-இல் இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினால் (International Centre for Ethnic Studies - ICES) வெளியிடப்பட்ட ICES Research Papers தொடரின் 2-ஆம் இலக்க ஆய்வறிக்கையாகவும் (Research Paper No: 2) வெளிவந்தது. தற்போது இங்கு பிரசுரமாகியுள்ள தழுவல் தமிழாக்கமானது, EPW ஆய்விதழில் வெளிவந்த கட்டுரையையே பெரிதும் சார்ந்துள்ளது.



sathiyathevan.s@thaiveedu.com

# ஆனந்த குமாரசுவாமி எனும் பேரறிஞன்

## மறந்தவர்களும் மறைத்தவர்களும்

என். சரவணன்

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைதியான ஒரு தெருவில் அமைந்திருந்த 'றைன்லன்ட்' எனும் இல்லத்தில் 1877-ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22-ஆம் திகதி புதன்கிழமையன்று பிறந்த ஒரு குழந்தை, பின்னாளில் ஆசியக் கலை வரலாற்றின் திசையையே மாற்றியமைத்த அறிஞராக உருவெடுக்குமென யாரும் அன்று கணிக்கவில்லை. அந்தக் குழந்தையின் பெயர் ஆனந்த கென்டிஷ் குமாரசுவாமி. இலங்கையில் பிறந்து, இங்கிலாந்தில் வளர்ந்து, இந்தியக் கலையையும் பௌத்த நாகரிகத்தையும் மேனாட்டு அறிவுலகுக்கு அறிமுகப்படுத்திய அவரின் வாழ்க்கை, தமிழரின் அறிவுத்துறைப் பங்களிப்பு பற்றிய ஒரு மறக்கப்பட்ட அத்தியாயமாகவே எஞ்சியுள்ளது. இன்று அவர் மறைந்து 80 ஆண்டுகளை எட்டுகிறது, ஈழத்தமிழ் அறிவுலகில் அவரைப் பற்றிய தனித்துவமான ஆய்வு எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதே யதார்த்தம். இந்நிலையில், அவரின் பரம்பரை, கல்வி, பங்களிப்பு, இறுதிக் காலம் என்பவற்றை மீள்பார்வையிடுவது காலத்தின் தேவையாகும். இக்கட்டுரை, அவரையும், அவரின் பணிகளையும் ஆராய்ந்து அறிமுகமாக முன்வைக்கும் கட்டுரையாகும்.



**பரம்பரையும் குடும்பப் பின்னணியும்:**

ஆனந்த குமாரசுவாமியின் கொள்ளுப்பாட்டனார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி 1783-ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில், பருத்தித்துறை பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள கருதாவில் எனும் கிராமத்தில் பிறந்தார். அக்காலகட்டத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகள் ஒல்லாந்தரின் ஆளுகையின் கீழிருக்க, மத்திய மலைநாட்டு கண்டிப் பகுதியை ராஜாதிராஜசிங்கன் (1780 - 1798) ஆண்டு வந்தார். ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி தமது கல்வியை யாழ்ப்பாணத்தில் அல்லாது, ஒல்லாந்தர் காலத்தில் கொழும்பில் இயங்கிய பிரதான கல்வி நிலையமான செமினரியிலேயே (Seminary) பயின்றார். 1798-இல் ஆங்கிலேயரின் வருகையுடன் இது மூடப்பட்டு, 1799 ஒக்ரோபர் மாதம் பிரெடெரிக் நோர்த் ஆளுநரால் 'நோர்த்தின் கல்விக்கூடம்' (North's School) எனும் பெயரில் மீள ஆரம்பிக்கப்பட்டது. கல்வியில் சிறந்து விளங்கிய ஆறுமுகம்பிள்ளை, 1805-இல் கொழும்புக் கோட்டை நீதவான் அலுவலகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியமர்த்தப்பட்டார். 1808-இல் அன்றைய இரண்டாவது ஆங்கிலேய ஆளுநரான தோமஸ் மெயிட்லேன்ட்டின் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு உயர்த்தப்பட்ட அவர், 1810 மே மாதம் வாசல் முதலியார் பதவிக்கும் பிரதான மலபாரி (தமிழ்) மொழிபெயர்ப்பாளர் பதவிக்கும் நியமிக்கப்பட்டார். அக்காலப்பகுதியில் ஒரு ஈழத் தமிழரால் அடையப்பட்ட மிக உயர்ந்த அரச பதவி இதுவேயாகும்.

ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி இருமுறை மணம் முடித்தார். முதல் மனைவி முருகரத்தினம் முதலியாரின் புதல்வியான முத்துப்பிள்ளை. இந்த முதல் திருமணத்தில் பிறந்த ஒரே புதல்வியான நாகம்மா, பின்னாளில் சட்டமன்ற

உறுப்பினரான எதிரிவீரசிங்கம் முதலியாரை மணந்தார். முத்துப்பிள்ளை 31-ஆவது வயதில் 1831-இல் காலமானார். 1833 ஜனவரியில் ஆறுமுகம்பிள்ளை இரண்டாம் தடவையாக விசாலாட்சி என்பவரை மணந்தார். இவர் வைரவந்த முதலி யாரின் புதல்வி. இவ்விரண்டாம் திருமணத்தில் இரு பிள்ளைகள் பிறந்தனர். 1834 ஜனவரி 23-ஆம் திகதி பிறந்த புதல்வர் முத்து குமாரசுவாமியும், 1835-இல் பிறந்த புதல்வி செல்லாச்சியுமே அவர்கள். செல்லாச்சி பொன்னம் பலம் முதலியாரை மணம் முடித்தார். அத்தம்பதியரின் புதல்வர்களே ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் தனிச் சிறப்பிடம் பெறும் சேர் பொன்னம்பலம் இராமநாதன் (1851 - 1930), சேர் பொன்னம்பலம் அருணாசலம் (1853 - 1924) சகோதரர்கள் ஆவர். இதன் மூலம் ஆனந்த குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் ஆகியோரின் தந்தை வழிச் சகோதரி மகனாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

1830-இல் பிரித்தானிய ஆட்சியாளர்களால் கொழும்பு செட் டியார்களினதும் கிறிஸ்தவரல்லாத தமிழர்களினதும் தலைவராக ஆறுமுகம்பிள்ளை நியமிக்கப்பட்டார். இலங் கையில் 1833-இல் கோல்புறுக் சீர்திருத்தத்தின் மூலம் முதன்முறை ஜனநாயக ஆட்சிமுறையின் அம்சமாக சட்ட சபை நிறுவப்பட்டது. அச்சட்டமன்றத்தின் முதலாவது கூட் டத்தொடர் 1834 மே 22-ஆம் திகதி நடைபெற்றது. 1835-இல் அதன் முதலாவது தமிழ் பிரதிநிதியாக முதலியார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி நியமிக்கப்பட்டார். ஆனால் ஓராண்டின் பின்னர் 1836-இல் அவர் காலமானார்.

ஆசியாவில் நீதித்துறை வரலாற்றில் அழியாத அத்தியாய மொன்றை எழுதிய முத்து குமாரசுவாமி, ஆறுமுகம்பிள் ளையின் ஏக புதல்வராவார். முகத்துவாரத்தில் 1834 ஜனவரி 23-ஆம் திகதி பிறந்த அவர், 1842-இல் கொழும்பு அகடமிக்கு (பின்னர் ரோயல் கல்லூரி எனப் பெயர்மாற்றம் பெற்றது) அனுமதிக்கப்பட்டார். இரு வயதிலேயே தந்தையை இழந்த போதிலும், தாயார் அவருக்கு உயரிய கல்வியை வழங்குவதில் தீவிரம் காட்டினார். 1851-இல் கிரேக்கம், இலத்தீன், ஆங்கில இலக்கியங்களில் தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவருக்கான டேர்நோர் (Turnour Prize) பரிசினை முத்து குமாரசுவாமி பெற்றார். பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின், கொழும்பு கச்சேரியில் பணிபுரிந்த அவர், 1854-இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் போலிஸ் நீத வானாகவும் உதவி மாவட்டச் செயலராகவும் நியமிக்கப் பட்டார். அப்பணியில் அதிருப்தி கொண்ட அவர், மீண்டும் கொழும்பு வந்து சட்டம் பயின்று, 1856-இல் உயர்நீதிமன்ற வழக்கறிஞராகச் சத்தியப் பிரமாணம் செய்தார். மொழித் திறமை, பேச்சாற்றல் காரணமாக விரைவிலேயே கொழும்பின் திறமையான இளம் வழக்கறிஞராக அவர் அறியப்பட்டார். 1861-இல் இலங்கைச் சட்டமன்றத்தில் தமிழர் பிரதிநி தியாக முத்து குமாரசுவாமி நியமிக்கப்பட்டார்.

1862-இல் முதன்முறையாக இங்கிலாந்து சென்ற முத்து குமாரசுவாமி, மூன்றாண்டுகள் ஐரோப்பாவில் கழித்தார். 1863-இல் இங்கி லாந்தின் புகழ்பெற்ற லிங்கன்ஸ் இன் (Lincoln's Inn) சட்டவியல் சங்கத்தில் உறுப்பி னராகி, இங்கிலாந்தில் தொழில்முறை வழக்க றிஞராகக் கடமையாற்றிய முதலாவது கிறிஸ்தவரல்லாத ஆசிய ராகும் பெருமையை அவர் பெற்றார். முத்து குமாரசுவாமியின் கம்பீரமான தோற்றமும், மனங்கவரும் ஆளுமையும், மொழித் திறமையும், செல்வச் செழிப்பும் விக்டோரிய கால இங்கிலாந்தின் உயர் சமூகத்தில் அவருக்கு நெருக்கத்தை ஏற்படுத்தின. பிரித்தானிய பிரதமரும் நாவலாசிரியருமான பெஞ்சமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) அவரின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவராவார். இந்த நட்பே முத்து குமாரசுவாமியை நூலாக்கத்தில் ஈடுபடத் தூண்டியிருக்கக் கூடும். வழக்கறிஞர் தொழிலில் இருந்த போதிலும், பாளி, சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ், சிங்களம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளில் பூரண அறிவும் பௌத்த தர்மம் குறித்த ஆழ்ந்த புரிதலும் அவருக்கிருந்தன. அவரின் முதலாவது இலக்கியப் பணி 'அரிச்சந்திரா' எனும் தமிழ் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை யாகும். இது 1863-இல் லண்டனில் ஸ்மித் எல்டர் நிறு வனத்தால் அச்சிடப்பட்டது. இங்கிலாந்தில் ஒரு நூலை வெளியிட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமையை முத்து குமாரசுவாமி பெற்றார். 1874-இல் புத்த தந்தத் தாதின் வரலாறு பற்றிய 'தாத்துவம்சம்' எனும் பாளி நூலை ஆங்கில விளக்கவுரையுடன் வெளியிட்ட அவர், அதே ஆண்டு சுத்த நிபாதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் வெளியிட்டார். இவை இரண்டுமே இன்று அரிதாகவே கிடைக்கும் நூல்களாகும்.

1865 - 67 காலப்பகுதியில் இலங்கையில் தங்கியிருந்த முத்து குமாரசுவாமி, 1867-இல் இந்தியாவின் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்திலும் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1868 மார்ச் முதல் 1873 பெப்பிரவரி வரை கொழும்பு மாநகர சபையின் பிரதிநிதியாகவும் கடமையாற்றினார். 1874-இல் மீண்டும் இங்கிலாந்து சென்ற அவர், அதே ஆண்டு ஓகஸ்ட் 11-ஆம் திகதி விக்டோரியா அர சியாரிடமிருந்து மணிமுடி விருதினைப் பெற்ற முதலாவது ஆசியராக மாறினார். இதே ஆண்டு எலிசபெத் கிளே பீபி என்பவரை அவர் சந்தித்தார். கென்ட் மாகாணத்தின் செல் வந்த குடும்பத்தைச் சேர்ந்த எலிசபெத், 1875 மார்ச் 18-ஆம் திகதி முத்து குமார சுவாமியை



மணந்தார். ஆசிய இளைஞர் ஆங்கிலப் பெண்ணை மணந்த அரிய நிகழ்வாக இது அக்காலத்தில் பேசப்பட்டது. கென்டர்பரி பேராயரால் ஆங்கில சடங்குமுறைப்படி தேவாலயத்தில் இத்திருமணம் நிகழ்த்தப்பட்டது. புதுமணத் தம்பதி இலங்கை திரும்பி, புறக்கோட்டையையும் முகத்துவாரத்தையும் இணைக்கும் இடத்தில் அமைந்திருந்த 'குமாரசுவாமி வத்தை' எனும் தமது மூதாதையர் இல்லத்தில் ஆரம்பத்தில் தங்கினர். பின்னர் கொள்ளுப்பிட்டியில் 'றைன்லன்ட்' எனும் அமைதியான புதிய இல்லத்தை வாங்கினர். அங்கு தான் 1877 ஓகஸ்ட் 22 புதன்கிழமை ஆனந்த கென்டிஷ் குமாரசுவாமி பிறந்தார்.

## பிறப்பும் கல்வியும்:

இலங்கையின் காலநிலை இளம் எலிசபெத்திற்கு ஒத்துவராமையால், மருத்துவரின் அறிவுரைப்படி எட்டு மாத ஆனந்தனை அழைத்துக்கொண்டு அவர் இங்கிலாந்து திரும்பினார். தமது குடும்பத்துடன் இணைய இங்கிலாந்து செல்லத் திட்டமிட்ட முத்து குமாரசுவாமி, 1879 மே 4-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை, யாத்திரை புறப்படவிருந்த அந்த நாளிலேயே சிறுநீரக நோயால் திடீரெனக் கொழும்பில் காலமானார். அப்போது அவருக்கு வயது 46. ஆனந்தனுக்கோ வயது ஒரு வருடமும் எட்டு மாதங்களும்தான். கணவரின் திடீர் மறைவால் கடும் மனவேதனைக்குள்ளான 25 வயது எலிசபெத், இலங்கை திரும்புவது மீண்டும் வேதனையைத் தரும் அனுபவமாக அமையுமென்பதால், தமது வாழ்நாள் முழுவதையும் இங்கிலாந்திலேயே கழிக்கவும், மறுமணம் செய்யாதிருக்கவும் உறுதியான முடிவெடுத்தார்.



கென்ட் மாகாணத்தில் ஒரு சிறிய இல்லத்தை வாங்கிய அவர், தமது தாயார், மணமாகாத மூத்த சகோதரி ஆகியோருடன் இணைந்து ஆனந்தனை வளர்த்தார். தந்தையின் அரவணைப்பை இழந்த குழந்தைக்கு, தாயாரின் அன்புடன் பாட்டியினதும் பெரியம்மாவினதும் பராமரிப்பும் குறையாது கிடைத்தது. 'ஆனந்த கென்டிஷ் குமாரசுவாமி' எனும் பெயரே மூன்று மொழிகளின் கலவையாகும். ஆனந்த என்பது இன்பம் எனும் பொருள் தரும் சமஸ்கிருத-சிங்கள கலப்புச் சொல்லாகவும், கென்டிஷ் என்பது தாயாரின் பிறந்த இடமான கென்ட் மாகாணத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகவும், குமாரசுவாமி என்பது தந்தை வழிக் குடும்பப்பெயரான தமிழ்ச் சொல்லாகவும் அமைந்துள்ளது. லேடி குமாரசுவாமி 1942 வரை உயிரோடிருந்தார். இதனால் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுக்குப் பின்னரே ஆனந்த குமாரசுவாமிக்கு தமது பிறந்த மண்ணுக்குத் திரும்ப வாய்ப்புக் கிடைத்தது.

1889-இல் பன்னிரண்டு வயதில் குளோஸ்டர்ஷயர் மாகாணத்தின் ஸ்டோன்ஹவுஸ் நகரில் அமைந்த வைக்லிஃப் கல்லூரியில் (Wycliffe College) சேர்ந்த ஆனந்தன், ஆறு ஆண்டுகள் அங்கு கல்வி பயின்றார். 1882-இல் கல்வியாளர் ஜி.டபிள்யூ. சிப்லியால் தொடங்கப்பட்ட இக்கல்லூரி, புகழ்பெற்ற கலப்புப் பாடசாலையாகும். சைவ உணவு மட்டுமே உண்ணும் நிலைப்பாடு கொண்டிருந்த முதல்வர் சிப்லி, அதே பழக்கமுடைய மாணவர்களைச் சேர்க்க ஆர்வம் காட்டினார். சிறுவயது முதலே சைவ உணவே உண்டு வளர்ந்த ஆனந்தனுக்கு, இது இயல்பாகவே பொருந்திய சூழலாக அமைந்தது. கல்லூரிக்கு அருகிலிருந்த டொவரோ மலைப் பகுதி, படிமச் சுவடுகள் (Fossils) சேகரிக்க இங்கிலாந்திலேயே சிறந்த இடங்களுள் ஒன்றெனக் கருதப்பட்டது. அப்பகுதியில் அவர் மேற்கொண்ட படிமச்சுவடு சேகரிப்புப் பொழுதுபோக்கே, பிற்காலத்தில் நிலவியலாளனாக அவர் உருவாவதற்கான ஆரம்ப தூண்டுகோலாக அமைந்தது எனலாம். 1892-இல் அதன் இல்ல மேற்பார்வையாளராகவும், 1893-இல் கள ஆய்வுக் குழுவின் தலைவராகவும் பொறுப்பேற்ற அவர், 1894-இல் பதினைந்தாம் வயதில் லண்டன் பல்கலைக்கழகத்தின் நுழைவுத் தேர்வில் முதலாம் வகுப்பில் சித்தியெய்தினார். 1895-இல் தலைமை மாணவத் தலைவராக நியமிக்கப்பட்ட அவர், அதே ஆண்டு பாடசாலைச் சஞ்சிகைக்கு நிலவியல் தொடர்பான கட்டுரையொன்றை எழுதினார். 'உணவுக்காக மிருகங்களைக் கொல்வது அவசியமானதோ, நன்மை பயப்பதோ, நியாயமானதோ அல்ல' எனும் தலைப்பில் இலக்கியச் சங்கத்தில் அவர் நிகழ்த்திய விவாதம் அக்கால அமர்வுகளுள் சிறந்ததென மதிப்பிடப்பட்டது. இளம் வயதிலேயே தார்மீக சிந்தனையும், மேனாட்டு நாகரிகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விமர்சனப் பார்வையில் நோக்கும் பழக்கமும் அவருக்கு இருந்தது.

1897-இல் வைக்லிஃப் கல்லூரிக்குத் திரும்பிய ஆனந்தன், கல்லூரியின் காற்பந்துக் குழுவில் ஆடி, வகுப்புத் தேர்வையும் நிறைவு செய்தார். 1897 - 1900 காலப்பகுதியில்

“ 'உணவுக்காக மிருகங்களைக் கொல்வது அவசியமானதோ, நன்மை பயப்பதோ, நியாயமானதோ அல்ல' எனும் தலைப்பில் இலக்கியச் சங்கத்தில் அவர் நிகழ்த்திய விவாதம் அக்கால அமர்வுகளுள் சிறந்ததென மதிப்பிடப்பட்டது. இளம் வயதிலேயே தார்மீக சிந்தனையும், மேனாட்டு நாகரிகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விமர்சனப் பார்வையில் நோக்கும் பழக்கமும் அவருக்கு இருந்தது. ”

லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் (University College London) கல்வி பயின்ற அவர், முதல் ஆண்டிலேயே ஜூஸ் நினைவுப் புலமைப்பரிசு, தொடக்கநிலை இயந்திரவியல் பரிசு, சிறு விலங்கியலுக்கான வெள்ளிப் பதக்கம், பொது தாவரவியலுக்கான தங்கப் பதக்கம் ஆகியவற்றைப் பெற்றார். 1898-இல் தாவரவியலில் சிறப்புடன் லண்டன் இடைநிலை அறிவியல் தேர்வில் தேறிய அவர், 1899-இல் மேம்பட்ட தாவ ரவியலில் பரிசு வென்றார். 1900-இல் நிலவியல், தாவரவியல் ஆகிய இருதுறைகளிலும் முதல்வகுப்புச் சிறப்புடன் இயற் கையியல் பட்டம் (B.Sc.) பெற்றார். இக்காலப்பகுதியில் நிலவியல் துறையில் அவரைக் கற்பித்தோருள் புகழ்பெற்ற ரோயல் சொசைட்டி உறுப்பினர்களான பேராசிரியர்கள் அடங்குவர். தாவரவியலில் பேராசிரியர் எஃப்.டபிள்யூ. ஒலிவரும், புவியியல் பேராசிரியர் இ.ஜே. கார்வுட்டும், விலங் கியலில் பேராசிரியர்கள் டபிள்யூ.எஃப்.ஆர். வெல்டனும் இ.ஏ. மின்சினும் இக்காலகட்டத்தில் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் பணியாற்றியவர்கள். இத்தகைய கண்டிப்பான அறிவியல் பயிற்சியே, பிற்காலத்தில் கலை ஆய்வுகளில் அவர் கடைப்பிடித்த நுணுக்கமான ஆவணப்படுத்தல் முறைக்கும், மூலநூல் அடிப்படையிலான தீர்க்கமான ஆய்வு நடைக்கும் அடித்தளமிட்டது எனலாம். 1903-இல் லண்டன் பல்கலைக்க ழகக் கல்லூரியின் உறுப்பினராகத் தெரிவான ஆனந்த குமா ரசுவாமி, அதே ஆண்டு இலங்கை கனிமச் ஆராய்ச்சிக் கழ கத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் 'தோரி யனைட்' எனும் அதிக ஈர்ப்பியல்பு கொண்ட கனிமப் பொரு ளைக் கண்டுபிடித்ததும் இக்காலகட்டத்திலேயே ஆகும். 1906-இல் இலங்கையின் புவியியல் குறித்த தமது ஆய்வுக ளுக்காக லண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானத் தத்து வமாணி (D.Sc.) பட்டத்தை அவர் பெற்றார்.

## இலங்கைக்குத் திரும்புதலும் ஆரம்பகாலப் பங்களிப்பும்:

இளமையில் ஜோன் ரஸ்கினினதும் வில்லியம் மொரிசினதும் கலை-கைவினைப் பாணி இயக்கத்தின் தாக்கத்திற்கு உள்ளான ஆனந்த குமாரசுவாமி, கனிமவியல் இயக்குந ராகப் பொறுப்பேற்ற பின்னர் இலங்கையின் பாரம்பரிய கைவினைக் கலைகள் மேனாட்டு தொழில்மயமாக்கலால் அழிவை நோக்கி நகர்வதைக் கண்டு மனம் வேதனை யுற்றார். ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தால் இலங்கையின் இளம் சமுதாயம் தமது சுதேசிய பண்பாட்டு அடையா ளத்தை இழந்து செல்வதையும் அவர் அவதானித்தார். இதன் விளைவாக, 1905-இல் இலங்கைச் சமூக சீர்திருத்த சங்கத்தை (Ceylon Social Reform Society) நிறுவினார். அச் சங்கத்தின் தலைவராக 1909 வரை பணியாற்றிய அவர், கண்டி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதேசங்களில் அதன் கிளைகளை ஏற்படுத்தினார். 1906-இல் இலங்கை தேசிய மதிப்பாய்வு (Ceylon National Review) எனும் சஞ்சி கையைத் தொடங்கி, அதன் ஆசிரியராகவும் பிரதான பங்க ளிப்பாளராகவும் 1911 வரை பணியாற்றினார். இச்சஞ்சிகை இலங்கையின் பூர்வீகப் பண்பாட்டின் மதிப்பையும் அழகிய லையும் வலியுறுத்தும் தளமாக அமைந்தது.

இங்கு ஒரு முக்கிய குடும்பப் பின்னணியையும் நினைவுகூர வேண்டும். சேர் பொன்னம்பலம் இராமநாதனும் சேர் பொன் னம்பலம் அருணாசலமும் தமிழர் அரசியல் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றவர்கள். அருணாசலம் இலங்கை தேசிய காங்கிரசின் 'தந்தை' எனப் போற்றப்பட் டவர். அருணாசலம் இலங்கைப் பல்கலைக்கழக இயக் கத்தை முன்னெடுத்த சட்டமன்ற உறுப்பினர். இவ்விருவரும் ஆனந்த குமாரசுவாமியின் தந்தை வழிச் சகோதரி செல்லாச் சியின் புதல்வர்கள் என்பதால், குமாரசுவாமி குடும்பமும் பொன்னம்பலம் குடும்பமும் ஒரே அறிவுலகப் பரம்பரையின் இரு கிளைகளாகவே கருதப்பட வேண்டும். ஆயினும், இராம நாதனும் அருணாசலமும் தமது செயல்பாட்டு மையமாக இலங்கை அரசியலைத் தெரிவு செய்ய, ஆனந்த குமார சுவாமி மாறாக மேனாட்டு அறிவுலகில் ஆசியக் கலை-தத்து வத்தை நிலைநாட்டும் பணியைத் தமது வாழ்நாள் இலக் காகக் கொண்டார். இக்குடும்பத்தின் மூன்று உறுப்பினர் களும், வெவ்வேறு துறைகளில்; அதேவேளை ஒரே தேசிய விழிப்புணர்வு செயற்பாட்டின் அங்கங்களாகவே இயங்கினர் எனலாம்.

1906-இல் தமது உறவினர்களான சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோருடன் இணைந்து இலங் கைப் பல்கலைக்கழக இயக்கத்தில் ஆனந்த குமாரசுவாமி பங்கேற்றார். 'மேனாட்டு மயமாக்கலின் பிரச்சி னைகள்' குறித்த உரையை 1906 ஏப்பிரல் 17-ஆம் திகதி நிகழ்த்திய அவர், அதே ஆண்டு யாழ்ப் பாணம் விஜயம் மேற் கொண்டு, ஜூன் 10-ஆம் திகதி யாழ்ப்பாணத் தமிழ் சங்கத்தால்



"1903-இல் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியின் உறுப்பினராகத் தெரிவான ஆனந்த குமாரசுவாமி, அதே ஆண்டு இலங்கை கனிமச் ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் 'தோரியனைட்' எனும் அதிக ஈர்ப்பியல்பு கொண்ட கனிமப் பொரு ளைக் கண்டுபிடித்ததும் இக்கால கட்டத்திலேயே ஆகும்."

'வித்யாவினோதன்' (கல்விப் புரவலர்) எனும் பட்டம் வழங்கப் பட்டு கௌரவிக்கப்பட்டார். 1906 இறுதியில் தமது கனிம வியல் இயக்குநர் பதவியை விட்டு விலகி இந்தியா சென்ற அவர், மூன்று மாத ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டார். இந்தப் பயணமே அவரின் வாழ்க்கையின் திசையை மாற்றிய முடிவாக அமைந்தது.

## இந்தியக் கலை ஆய்வுக்குத் திரும்புதல்:

1908-இல் எஸெக்ஸ் ஹவுஸ் அச்சகத்தால் வெளியிடப்பட்ட 'The Aims of Indian Art' எனும் அவரின் சிறு நூல், அவரின் வாழ்நாள் ஆய்வுப் பணிக்கான வழிகாட்டியாக அமைந்தது. இதற்கு முன்னர், சி.ஆர். ஆஷ்பீ (C. R. Ashbee) தலைமை யிலான ஆங்கில சமூகவியல் தத்துவவாதிகளின் குழுவில் இணைந்த அவர், கொழும்பு கோட்டைக்கு அருகில் இருந்த காலத்தில் மேற்கொண்ட நுணுக்கமான ஆய்வுகளின் அடிப் படையில், 'மத்திய கால சிங்கள கலை' (Mediaeval Sinha-lese Art) எனும் ஆய்வு நூலை 1908-இல் வெளியிட்டார். இந்நூலின் புகைப்படங்களில் பெரும்பகுதியை எடுத்தது அவரின் முதலாவது துணைவியார் எதெல் மேரி பார்ட்ரிட்ஜ் (Ethel Mary Partridge) ஆவார். புகைப்படக் கலைஞராக இருந்த அவர், இலங்கையின் பாரம்பரிய கைவினைப் பொருட்களையும் கட்டடக் கலைக் கூறுகளையும் நுணுக்க மாகப் படம்பிடித்து, இந்நூலின் ஆவணப்படுத்தல் தரத்தை உயர்த்தினார். புகைப்படங்களாலும் தமது சொந்தக் கைவ ரைபடங்களாலும் நிரம்பியிருந்த இந்நூல், ஐரோப்பிய இடைக்கால கலை குறித்த எந்தவொரு முதன்மையான படைப்பையும் தாண்டிய தரமுடையதென அறிஞர்களால் பாராட்டப்பட்டது. இந்நூலின் வெற்றி, விஞ்ஞான ஆய்வுகளி லிருந்து அவரின் கவனத்தை கலை ஆய்வுகள் நோக்கித் திருப்பிய திருப்புமுனையாக அமைந்தது.

1909-இல் இந்தியா சென்ற ஆனந்த குமாரசுவாமி, சுதேசி இயக்கத்தின் உச்சகட்டத்தில் கல்கத்தாவை அடைந்தார். தாகூர் குடும்பத்தினரின் விருந்தோம்பலில் சில வார ங்கள் தங்கியிருந்த அவர், அப்போது புதிதாக உருவாகிக் கொண்டிருந்த இந்திய ஓவியப் பாணியின் தலைமை நிலையமாக விளங்கிய தாகூரின் இல்லத்தை மையமாகக் கொண்டு செயற்பட்டார். தேசிய கல்விச் சபை, இளைஞர் கிறிஸ்தவ சங்கம், இந்திய பௌராண்டிக் கலைச் சங்கம் ஆகியவற்றில் அவர் நிகழ்த்திய விரிவுரைகள், இந்திய தேசியவாத அறிவுலகில் பேரதிர்வை ஏற்படுத்தின. அச்சமயத்திலேயே, கல்கத்தா விஜயத்தின்போது நிகழ்ந்த மிக முக்கியமான தனிப்பட்ட நிகழ்வாக, கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த அவர் ஒரு பழைய கல்கத்தா கோஸ்வாமியிடம் வைஷ்ணவ சமயத்தில் தீட்சை பெற்றார். இதுவே அவர் தமது கிறிஸ்தவப் பெயரான கென்டிஷ் என்பதைப் பின்னாளைய பல படைப்புகளில் கைவிட்டமைக்கான காரணமாகும். கிறிஸ்தவப் பெற்றோ ருக்குப் பிறந்திருந்தும், தாகூரின் புகழ்பெற்ற 'கோரா' நாவலின் கதாநாயகனைப் போன்று, தமக்குப் பிறவி யிலேயே திணிக்கப்பட்ட கிறிஸ்தவ அடையாளம் இந்திய ஆன்மீகத்தேடலுக்குப் பொருந்தாதென உணர்ந்த அவர், சொந்த முயற்சியில் தமது ஆன்மீக அடையாளத்தை மீள்வ ரையறை செய்துகொண்டார் என்றே கூற வேண்டும். இந்திய தேசியவாதத்தின் உயர் நிபுணராக இக்காலப்பகுதியில் அவர் கொண்டாடப்பட்டார்.

1910-இல் வட இந்தியா முழுவதும் விரிவான பயணம் மேற்கொண்ட அவர், இந்திய ஓவியங்களினதும் வரைபடங்க ளினதும் மகத்தான தொகுப்பொன்றைச் சேகரித்தார். இத் தொகுப்பை பெனாரசில் அமைக்கப்படவிருந்த அருங்காட்சி யகமொன்றுக்கு அன்பளிப்பாக வழங்க அவர் முன்வந்த போதிலும், அத்தகைய அருங்காட்சியகம் அமையா மையால், இறுதியில் இத்தொகுப்பு 1917-இல் பொஸ்டன் நுண்கலை அருங்காட்சியகத்தை வந்தடைந்தது. 1911-இல் லண்டன் திரும்பிய அவர், 'இந்தியா சங்கம்' (India Society, London) என்பதை நிறுவுவதில் முன்னின்று உழைத்தார். இச் சங்கமே பின்னாளில் ரோயல் இந்திய, பாக்கிஸ்தான், இலங்கை சங்கமாக (Royal India, Pakistan and Ceylon So-ciety) விரிவடைந்தது.

1911 மே - ஜூன் மாதங்களில் காஷ்மீர் பிரதேசத்திற்குச் சென்ற ஆனந்த குமாரசுவாமி, பஞ்சாப், காஷ்மீரிய நாட்டுப் புறப் பாடல்களைச் சேகரித்து ஆங்கிலத்தில் மொழிபெ யர்த்தார். இப்பணியில் அவருக்குத் துணையாக இருந்தவர் அவரின் இரண்டாவது துணைவியார், இரதன் தேவி (Ratan Devi) எனும் மேடைப் பெயரில் அறியப்பட்ட ஆலிஸ் ரிச் சர்ட்சன் (Alice Richardson) ஆவார். இந்திய பாரம்பரிய இசையில் பயிற்சி பெற்றிருந்த அவர், இப்பாடல்களைப்



"

தாகூரின் புகழ்பெற்ற 'கோரா' நாவலின் கதாநாய கனைப் போன்று, தமக்குப் பிறவியிலேயே திணிக்கப்பட்ட கிறிஸ்தவ அடையாளம் இந்திய ஆன்மீகத்தேடலுக்குப் பொருந்தாதென உணர்ந்த அவர், சொந்த முயற்சியில் தமது ஆன்மீக அடையாளத்தை மீள்வரையறை செய்துகொண்டார்

"

பாடிக் காட்ட, ஆனந்த குமாரசுவாமி அவற்றை குறிப்பெடுத்து மொழிபெயர்த்தார். இவ்விருவரதும் கூட்டு முயற்சியின் விளைவே 1913-இல் வெளியான 'Thirty Songs from the Punjab and Kashmir' எனும் நூலாகும். ராஜபுத்திர, இமய மலைப் பர்ஹாரி ஓவியப் பாணிகள் தொடர்பான ஆய்வையும் அங்கு தொடர்ந்தார். 1912-இல் சாந்திநிகேதன் விஜயம் மேற்கொண்ட அவர், கவிஞர் இரவீந்திரநாத் தாகூருடன் சிறிது காலம் தங்கியிருந்தார். 1913 - 14 காலப்பகுதியில் 'Isis' எனும் அறிவியல்-நாகரிக வரலாற்று சர்வதேச சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் பணியாற்றினார். 1920-இல் உலகப் பயணமொன்றை மேற்கொண்ட அவர், ஆய்வு நோக்கில் ஜப்பான், கம்போடியா, ஜாவா ஆகிய நாடுகளுக்குச் சென்று, அங்கிருந்து அமெரிக்கா திரும்பினார். இப்பயணத்தின்போது சிங்கப்பூர் ராஃபிள்ஸ் அருங்காட்சியகத்திற்கும் விஜயம் செய்தார். 1921 பெப்பிரவரி 15-ஆம் திகதி உலகப் பயணத்தின் ஒரு கட்டமாக இலங்கை வந்தடைந்த அவர், அனுராதபுரத்திற்குச் சென்று பண்டைய இலங்கைக் கலை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார். ரோயல் ஏசியாடிக் சங்கத்தின் (Royal Asiatic Society) கொழும்புக் கிளையில் 'இந்திய ஓவியங்கள் பற்றி' எனும் தலைப்பில் ஆற்றிய உரையில் சேர் பொன்னம்பலம் அருணாசலம் தலைமை தாங்கினார். ஆனந்த கல்லூரி மாணவர்களுக்கு 'பண்டைய சிங்கள கலை' குறித்தும் உரையாற்றினார். இப்பயணங்கள் யாவும், ஆசியக் கலை மரபுகளை ஒரு ஒருங்கிணைந்த நாகரிகத் தொடர்ச்சியாகப் புரிந்துகொள்ளும் அவரின் ஒப்பீட்டு அணுகுமுறையை மேலும் வலுப்படுத்தின.

ரோயல் ஆசியாடிக் சங்கத்துடனான அவரின் தொடர்பு இந்த ஒரு உரையுடன் மட்டும் நின்றுவிடவில்லை. 1911-இல் லண்டன் ரோயல் ஆசியாடிக் சங்கத்தில் 'இந்தியக் கலை ஆய்வு பற்றி' எனும் தலைப்பில் அவர் ஆற்றிய உரை, மேனாட்டு கீழைத்தேயவியல் அறிவுலகில் அவரின் அந்தஸ்தை மேலும் உறுதிசெய்தது. இதே ஆண்டு ரோயல் இலங்கை மாநாட்டு விருந்தில் தலைமை தாங்கிய அவர், 'இலங்கையில் கல்வி' எனும் தலைப்பில் தலைமை உரை நிகழ்த்தினார். இச்சங்கத்துடனான தொடர்ச்சியான உறவு, இலங்கை, இந்தியா, இங்கிலாந்து மூன்று நாடுகளிலும் ஒரே சமயத்தில் அவர் பெற்றிருந்த அறிவுலக அங்கீகாரத்தைக் நமக்கு உணர்த்துகிறது.

## பொஸ்டன் அருங்காட்சியகமும் உலகளாவிய அங்கீகாரமும்:

1917 ஏப்பிரல் மாதம் பொஸ்டன் நுண்கலை அருங்காட்சியகத்தில் இந்தியக் கலைப் பாதுகாவலராக (Keeper of Indian Art) நியமிக்கப்பட்ட ஆனந்த குமாரசுவாமி, தமது வாழ்நாளின் எஞ்சிய முப்பது ஆண்டுகளை அவ்வருங்காட்சியகத்திலேயே கழித்தார். அருங்காட்சியக அறங்காவலர் குழுவின் ஆலோசகராக இருந்த கலை வல்லுநர் டென்ஹாம் ராஸின் பரிந்துரையின் பேரிலேயே இந்நியமனம் நிகழ்ந்தது. இந்திய கலைத் தொகுப்புக்காக அருங்காட்சியகத்தில் ஒரு புதிய பிரிவையே திறந்து, அதன் பொறுப்பையும் அவரிடமே ஒப்படைத்தமை, மேனாட்டு அருங்காட்சியக நிறுவனங்கள் ஆசியக் கலையை எவ்வளவு தீவிரமாக மதிக்கத் தொடங்கியிருந்தன என்பதற்குச் சான்றாகும். 1922-இல் இந்திய, இஸ்லாமிய கலைப் பாதுகாவலராகவும், 1933-இல் இந்திய, பாரசீக, இஸ்லாமிய கலை ஆய்வுக்கான ஆய்வாளராகவும் பதவி உயர்வு பெற்றார். இந்தக் காலப்பகுதியில் அவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் ஆசியக் கலை வரலாற்றின் அடித்தளக் கல்வெட்டுகளாகக் கருதப்படுகின்றன.

1918-இல் வெளியிடப்பட்ட 'சிவானந்த நடனம்' (The Dance of Siva) எனும் பதினான்கு இந்தியக் கட்டுரைகளின் தொகுப்பு, அவரின் மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றெனப் பரவலாகக் கருதப்படுகிறது. இந்நூலுக்கு பிரெஞ்சு அறிஞர் ரோமன் ரோலான் (Romain Rolland) முன்னுரை வழங்கினார். நடராஜப் படிமத்தின் ஆன்மீக அர்த்தத்தை மேனாட்டு அறிவுலகுக்கு விளக்கிய முதலாவது ஆய்வாக இது மதிப்பிடப்படுகிறது. தமிழக சிற்பக் கலையின் உன்னதமான வெளிப்பாடான நடராஜர் உருவம், குமாரசுவாமியின் விளக்கவுரையின் மூலமே உலகளாவிய அழகியல் அந்தஸ்தைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. 1927-இல் வெளியான 'இந்திய இந்தோனேசியக் கலையின் வரலாறு' (History of Indian and Indonesian Art) எனும் நூல் அவரின் மிக முக்கியமான படைப்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. 1935-இல் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட 'பௌத்த படிமவியலின் கூறுகள்' (Elements of Buddhist Iconography) எனும் நூல், பௌத்த சிற்பக் குறியீட்டியலை முறையாக விளக்கிய முன்னோடி ஆய்வாகும். 1927-இல் 'American Art Bulletin' சஞ்சிகையில் வெளியான அவரின் 'The Origin of the Buddha Image' எனும் கட்டுரை, புத்தரின் மனித வடிவப் படிமத்தின் தோற்றம் குறித்த சர்வதேச



"'சிவானந்த நடனம்' எனும் பதினான்கு இந்தியக் கட்டுரைகளின் தொகுப்பு, அவரின் மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றெனப் பரவலாகக் கருதப்படுகிறது. நடராஜப் படிமத்தின் ஆன்மீக அர்த்தத்தை மேனாட்டு அறிவுலகுக்கு விளக்கிய முதலாவது ஆய்வாக இது மதிப்பிடப்படுகிறது."

விவாதத்தை புதிய திசையில் திருப்பியது. 1930-களுக்குப் பின்னர் தத்துவமும் ஆன்மீகமும் நோக்கி மேலதிகமாக திரும்பிய அவர், படிப்படியாக 'பாரம்பரியவாதம்' (Traditionalism) எனும் தத்துவப் பள்ளியின் முன்னோடிகளுள் ஒருவராக மாறினார்; அனைத்துப் பெரும் சமய மரபுகளுக்கும் பொதுவான ஒரு 'நிலையான ஞானம்' (Perennial Wisdom) இருப்பதாக வாதிட்டார். 1933-இல் 'வேதங்களுக்கான புதிய அணுகுமுறை' (A New Approach to the Vedas) என்பதை வெளியிட்ட அவர், 1939-இல் 'கிறிஸ்தவ, கீழைத்தேய அல்லது கலையின் உண்மையான தத்துவம்' (The Christian and Oriental or True Philosophy of Art) எனும் சொற்பொழிவையும் நிகழ்த்தினார். 1938-இல் வாஷிங்டனில் இந்தியாவின் விடுதலைக்கான தேசிய குழுவின் முதலாவது கௌரவ தேசியத் தலைவராகப் பொறுப்பேற்ற அவர், இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அமெரிக்காவில் ஆதரவு திரட்டும் பணியிலும் ஈடுபட்டார்.

## பௌத்த நாகரிக மறுகண்டுபிடிப்பும் தமிழரின் வரலாற்றுப் பங்களிப்பும்:

ஆனந்த குமாரசுவாமியின் வாழ்க்கை வரலாற்றில் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய, ஆனால் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு பரிமாணம் உண்டு. தமிழராக இருந்தாலும் அவர், சிங்கள பௌத்த நாகரிகத்தையும் பரந்த பொருளில் பௌத்த கலை பாரம்பரியத்தையும் மேனாட்டு அறிவுலகுக்கு விளக்கிய முதன்மையான மேதையாக விளங்கினார் என்பதே அது. அவரின் நினைவஞ்சலி நூலில் எழுதிய 'V. Subramanian' எழுத்தாளர் குறிப்பிடுவது போல், 'கலை மற்றும் இந்து சமய மாணவர்களுக்கு அவர் நடராஜப் படிமத்தின் மகிமையை மீண்டும் கண்டுபிடித்தவராகவே அறியப்படுகிறார்'. ஆனாலும் அவரின் பங்களிப்பு நடராஜப் படிமத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. 'பௌத்த படிமவியலின் கூறுகள்' எனும் நூலும், புத்த உருவப் படிமத்தின் தோற்றம் தொடர்பான ஆய்வுகளும், 'புத்தரும் பௌத்த தத்துவமும்' (Buddha and the Gospel of Buddhism, 1916) எனும் நானூறு பக்க நூலும் பௌத்த நாகரிகத்தின் கலை-தத்துவ அடிப்படைகளை முறையான ஆய்வு முறையில் உலகுக்கு அறிமுகப்படுத்திய முன்னோடி முயற்சிகளாகும். இந்நூல் தாகூர், என். எல். போஸ் ஆகியோரின் எட்டு வண்ண நிறப் படங்களுடன் வெளியானது.



இங்கு ஒரு வரலாற்று முரண்பாட்டை கவனிப்பதும் அவசியமாகிறது. இலங்கையின் பௌத்த நாகரிகத்தையும், அதன் சிற்ப, ஓவிய, படிமக் கலைகளையும் முறையான கல்வியியல் அடிப்படையில் உலகுக்கு விளக்கிய முதன்மையான அறிஞர், சிங்கள இனத்தவரல்ல, தமிழ் இனத்தைச் சேர்ந்த ஆனந்த குமாரசுவாமியே ஆவார். அவர் தமது 'மத்திய கால சிங்கள கலை' எனும் ஆய்வின் மூலமே சிங்கள கைவினைக் கலைகளுக்கு அறிவியல்பூர்வமான ஆவணப்படுத்தலை முதன்முதலாக வழங்கினார். கண்டி கைவினைக் கலைகளை மறுமலர்ச்சி செய்வதற்காக அவர் நிறுவிய கண்டி கலை-கைவினைச் சங்கமும், சிங்கள பாரம்பரியக் கலைகளின் தொடர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இருப்பினும், சிங்கள தேசியவாத வரலாற்று நூல்கள் பலவற்றில் அவர் பெரும்பாலும் ஒரு 'கலப்பின அந்நியர்' என்ற நிலையிலேயே வைக்கப்பட்டு வந்திருக்கிறார் என்பதையும் கவனிக்கிறோம். மகாவம்சம் மையப்படுத்திய பௌத்த தேசியவரலாற்றெழுதியல் மரபில், தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒரு அறிஞர் பௌத்த நாகரிகத்தின் உலகளாவிய மறுகண்டுபிடிப்புக்கு அடித்தளமிட்டமை, இன்றுவரை போதுமான அளவு அங்கீகரிக்கப்படாத ஒரு வரலாற்று உண்மையாகவே உள்ளது.

மேலும், தமிழக நடராஜச் சிற்பத்தை பௌத்த, இந்து இரு மரபுகளுக்கும் பொதுவான ஆன்மீக அழகியலின் உச்சகட்ட வெளிப்பாடாக அவர் விளக்கிய முறை, தமிழ் சிற்பக் கலையையும் பௌத்த தத்துவத்தையும் ஒரே ஆய்வுக் கண்ணோட்டத்தில் இணைத்துப் பார்க்கும் ஒரு பரந்த ஆசிய அழகியல் மரபை உருவாக்கியது. இந்திய, இலங்கை, தென்கிழக்காசியப் பௌத்த கலைப் பாரம்பரியங்களை ஒரு தொடர்ச்சியான கலாச்சார ஓட்டமாக அவர் காணும் அணுகுமுறை, தமிழ்-பௌத்த-இந்து பண்பாட்டு உறவுகளை பிரிக்க முடியாத ஒற்றுமையாகக் கட்டமைத்தது எனலாம். இதனால்தான், டாக்டர் இரகுநாதன் தமது நினைவுரையில், 'இந்திய, இந்தோனேசிய கலையின் வரலாறு', 'புத்த படிமத்தின் தோற்றம்' ஆகிய அவரின் படைப்புகள் தமது சொந்த ஆய்வுகளுக்கு நிரந்தரத் துணையாக அமைந்தன எனக் குறிப்பிட்டார். ஒரு தமிழரின் அறிவுத்திறன் பௌத்த நாகரிகத்தின் ஆழ்ந்த விளக்கத்திற்கு அடித்தளமிட்டது என்பது, இனவாத எல்லைகளைக் கடந்த அறிவார்ந்த பொதுப் பங்களிப்பாகும். இந்திய கலாச்சார மையம் நியூயார்க்கை 1924-இல் நிறுவி அதன் முதலாவது தலைவராகவும் அவர் பணியாற்

> “இலங்கையின் பௌத்த நாகரிகத்தையும், அதன் சிற்ப, ஓவிய, படிமக் கலைகளையும் முறையான கல்வியியல் அடிப்படையில் உலகுக்கு விளக்கிய முதன்மையான அறிஞர், சிங்கள இனத்தவரல்ல, தமிழ் இனத்தைச் சேர்ந்த ஆனந்த குமாரசுவாமியே ஆவார்.”

றினார் என்பதும், இந்திய-அமெரிக்க பண்பாட்டுப் பாலமாக அவர் விளங்கியதற்குச் சான்று பகர்கிறது.

மலேசியாவில் வாழ்ந்த தமிழறிஞர் எஸ். துரை ராஜா சிங்கம் (S. Durai Raja Singam), 'ஆனந்த குமாரசுவாமி - எனது பார்வையில் ஒரு புதிய கோள்' எனும் தமது சிறு நூலில் இந்தத் தமிழ்-பௌத்த பிணைப்பை உணர்ச்சிகரமாக விவரிக்கிறார். ஜப்பானிய ஆக்கிரமிப்புக் காலத்தில் மலாயாவில் வாழ்ந்த தமிழ் குடும்பங்கள், ஆனந்த குமாரசுவாமியின் சிவானந்த நடனம் நூலை மாலைப் பொழுதுகளில் ஒன்று கூடி வாசித்தமையையும், அது தமது பிள்ளைகளுக்கு இந்திய-கீழைத்தேய பண்பாட்டு அடையாளத்தை உணர்த்தும் ஆன்மீக ஊட்டமாக அமைந்ததையும் அவர் பதிவு செய்கிறார். 'கலைமான்', 'சிவானந்த நடனம்' போன்ற நூல்களின் மூலம், மலாயாவில் பிறந்து வளர்ந்த தமிழ் சிறுவர்கள் இராமாயணம், மகாபாரதம், புராணக் கதைகள் போன்றவற்றின் ஆன்மீக ஆழத்தை உணரும் வாய்ப்பைப் பெற்றனர். இது ஒரு தமிழ் அறிஞரின் எழுத்து, தமிழ் மக்களிடையே பரந்த ஆசிய ஆன்மீக அடையாளத்தை வளர்க்கும் கருவியாக இயங்கிய ஒரு உண்மையான வரலாற்றுக்கு எடுத்துக்காட்டாகும்.

இக்கருத்தை மேலும் விரிவாக்கிப் பார்க்கும்போது, ஆனந்த குமாரசுவாமியின் அறிவுலகப் பங்களிப்பின் தனித்துவம் இன்னொரு கோணத்திலும் புலப்படுகிறது. மேனாட்டு கலை வரலாற்று நூல்களில் அக்காலகட்டம் வரை பௌத்த கலையானது இந்திய இந்து கலையின் ஒரு துணைப் பிரிவாகவோ, அல்லது கிரேக்க காந்தார பாணியின் தாக்கம் பெற்ற பிற்போக்கு வடிவமாகவோ மட்டுமே பார்க்கப்பட்டு வந்தது. ஆனந்த குமாரசுவாமி இக்கருத்தை உறுதியாக மறுத்து, புத்த உருவப் படிமமும் நடராஜப் படிமமும் ஒரே ஆன்மீக அழகியல் மரபின் இரு வெளிப்பாடுகள் எனும் வாதத்தை முன்வைத்தார். 'பௌத்த கலையின் தன்மை' (The Nature of Buddhist Art) எனும் அவரின் கட்டுரை இக்கருத்தை விரிவாக முன்வைக்கிறது. இவ்வாறாக, பௌத்த கலையை ஒரு தனித்துவமான, சுயேச்சையான ஆன்மீக மரபாக நிலைநிறுத்திய பணியில் அவர் மேற்கொண்ட பங்களிப்பு, இன்றைய பௌத்த கலை வரலாற்றுத் துறையின் அடித்தளமாக அமைந்துள்ளது.

### அவரது முழுமையான படைப்புப் பட்டியல்:

ஆனந்த குமாரசுவாமியின் இலக்கியப் பணி 650-க்கு மேற்பட்ட நூல்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், உலகளாவிய விரிவுரைக் குறிப்புகள் என விரிவடைந்து காணப்படுகிறது. இப்பட்டியலில் அவரின் ஆரம்ப கால நிலவியல் ஆய்வுகளும் அடங்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இருபத்திரண்டு வயதில் 'இலங்கை பாறைகளும் கிராஃபைட்டும்' (Ceylon Rocks and Graphites) எனும் கட்டுரையை புவியியல் சங்கத்தின் காலாண்டு இதழில் வெளியிட்ட அவர், 'இலங்கையின் நிலவியலுக்கான பங்களிப்புகள்' எனும் தலைப்பிலான தமது ஆய்வேடுகளின் தொகுப்பையே 1906-இல் தமது டி.எஸ்.சி. பட்டத்திற்கான ஆய்வுநெறிப்பாடாகச் சமர்ப்பித்தார். இவை தவிர, 1914-இல் வெளியான 'கொழும்பு அருங்காட்சியக வெண்கலச் சிலைகளின் பட்டியல்' எனும் நூலும், 1916-இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்ட 'இராஜ புத்திர ஓவியம்' எனும் ஆய்வேடும் இந்திய ஓவியக் கலை வரலாற்றுத் துறையின் அடிப்படையான மூலக்குறிப்புகளாக கருதப்படுகின்றன. அவரின் முக்கியமான நூல்களுள் 'இந்தியக் கலையின் நோக்கங்கள்' (The Aims of Indian Art, 1908), 'மத்திய கால சிங்கள கலை' (Mediaeval Sinhalese Art, 1908), 'கலையும் சுதேசியும்' (Art and Swadeshi, 1910), 'கொழும்பு அருங்காட்சியக வெண்கலச் சிலைகளின் பட்டியல்' (1914), 'இராஜபுத்திர ஓவியம்' (Rajput Painting, 1916), 'புத்தரும் பௌத்த தத்துவமும்' (Buddha and the Gospel of Buddhism, 1916), 'நடராஜனின் நடனம்' (The Dance of Siva, 1918), ஆறு பகுதிகளாக வெளியான 'போஸ்டன் இந்தியத் தொகுப்புப் பட்டியல்' (1923 - 1930), 'இந்திய இந்தோனேசியக் கலையின் வரலாறு' (The History of Indian and Indonesian Art, 1927), 'புத்த உருவப் படிமத்தின் தோற்றம்' (The Origin of the Buddha Image, 1927), 'வேதங்களுக்கான புதிய அணுகுமுறை' (A New Approach to the Vedas, 1933), 'பௌத்த படிமவியலின் கூறுகள்' (Elements of Buddhist Iconography, 1935), 'கிறிஸ்தவ, கீழைத்தேய அல்லது உண்மையான கலைத் தத்துவம்' (The Christian and Oriental or True Philosophy of Art, 1939) ஆகியன குறிப்பிடத் தக்கவை. மரணத்திற்குப் பின் 1948-இல் ஐ. பி. ஹோர்னருடன் இணைந்து அவர் எழுதிய 'கௌதம புத்தரின் வாழும் சிந்தனைகள்' (The Living Thoughts of Gotama the Buddha) வெளியானது.



> "ஆனந்த குமாரசுவாமியின் அறிவுலகப் பங்களிப்பின் தனித்துவம் இன்னொரு கோணத்திலும் புலப்படுகிறது. மேனாட்டு கலை வரலாற்று நூல்களில் அக்காலகட்டம் வரை பௌத்த கலையானது இந்திய இந்து கலையின் ஒரு துணைப் பிரிவாகவோ, அல்லது கிரேக்க காந்தார பாணியின் தாக்கம் பெற்ற பிற்போக்கு வடிவமாகவோ மட்டுமே பார்க்கப்பட்டு வந்தது."

இவை தவிர, 'Isis' எனும் அறிவியல்-நாகரிக வரலாற்று சஞ்சிகையின் இணை ஆசிரியராக 1913 - 14-இல் பணியாற்றியதும், நூற்றுக் கணக்கான கட்டுரைகளையும் மதிப்புரைகளையும் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா மட்டுமல்லாது பிரான்ஸ், ஜேர்மனி, பின்லாந்து, சுவீடன், போர்த்துகல், ருமேனியா ஆகிய நாடுகளிலும் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## சுதேசிய இயக்கமும் அரசியல் சிந்தனையும்:

ஆனந்த குமாரசுவாமியை வெறுமனே ஒரு கலை வரலாற்றாசிரியராக மட்டும் பார்ப்பது அவரின் ஆளுமையின் ஒரு பகுதியை மட்டுமே புரிந்துகொள்வதாக அமையும். 1910-இல் அலகாபாத் தொழில்துறை மாநாட்டில் அவர் வாசித்த 'சுதேசி, உண்மையும் பொய்யும்' (Swadeshi, True and False) எனும் கட்டுரை, பொருளாதார தேசியவாதத்தையும் ஆன்மீக அடையாளத்தையும் இணைத்துப் பார்க்கும் அவரின் தனித்துவமான அரசியல் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. 'சுதேசி என்பது ஒரு அரசியல் ஆயுதத்தை விட அதிகமானதாக இருக்க வேண்டும். அது ஒரு சமய கலைக் கோட்பாடாக இருக்க வேண்டும்' என அவர் எழுதியிருந்தார். தேசிய இயக்கங்கள் தமது சக்திகளை தற்காலிக அரசியல் மோதலில் வீணடிக்காமல், கலையையும் தொழில்களையும் உறுதியான அடிப்படையில் மீள்நிறுவும் நோக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர் எழுதினார். 1914 ஓகஸ்ட் 8-ஆம் திகதி லண்டன் செசில் விடுதியில் காந்திஜிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில், முகமது அலி ஜின்னா, சரோஜினி நாயுடு ஆகியோருடன் இணைந்து ஆனந்த குமாரசுவாமியும் கலந்துகொண்டு, தென்னாபிரிக்க போராட்ட நாயகனுக்குப் புகழாரம் சூட்டினார். 1919-இல் ரோமன் ரோலான் முன்னெடுத்த 'மனித சிந்தனையின் விடுதலை பிரகடனத்தில்' ஒரே கீழைத்தேயருக்குரிய கையொப்பமாக, இரவீந்திரநாத் தாகூருடன் (Rabindranath Tagore) இணைந்து ஆனந்த குமாரசுவாமியும் கையெழுத்திட்டார். இது அவரின் சர்வதேச அறிவுலக அந்தஸ்தைக் காட்டும் ஒரு நிகழ்வு.



அரசியல் ரீதியாக அவர் காந்தியையும் நேருவையும் ஒப்பிடும் விதம் சுவாரசியமானது. 'நேரு இக்கணத்தின் மனிதர், ஏனெனில் நாம் தயாரிப்பின்றி காலனித்துவத்தை எதிர்கொண்ட காலத்தில் மேனாடு புரிந்துகொள்ளும் மொழியில் அவர் பேசுகிறார். ஆயினும் காந்தி இக்காலத்தின் மனிதர், ஏனெனில் சீரழிவின் காலத்தில் அகிம்சை, சமாதானம், சகோதரத்துவம் பற்றி பேச அவர் துணிந்தார்' என அவர் குறிப்பிட்டிருந்தார். மேனாட்டு நாகரிகத்தை பொருள்முதல்வாதத்தின் அடிப்படையில் விமர்சித்த அவர், கீழைத்தேய ஆன்மீக மரபுகளை மீட்டெடுப்பதே காலனித்துவத்திற்குப் பிந்திய தேசங்களின் உண்மையான விடுதலைக்கான வழியென அவர் கருதினார். இச்சிந்தனைகள் யாவும், ஒரு கலை ஆய்வாளர் என்பதற்கு அப்பால், காலனித்துவத்திற்கு எதிரான ஆசிய அறிவுலக எழுச்சியின் முன்னோடிக் குரல்களுள் ஒருவராக அவரை நிலைநிறுத்துகின்றன.

அறிஞர் ரிச்சர்ட் எட்டிங்ஹவுசன் (Richard Ettinghausen) குறிப்பிடுவது போல, 'உலகில் வேறு எந்த அறிஞரினதும் வெளியீடுகள் டாக்டர் ஆனந்த குமாரசுவாமியினதைப் போல பரந்த தளத்தை உள்ளடக்கியதில்லை. அவரின் ஆய்வுகள் தத்துவம், அளவியல், சமயம், படிமவியல், இந்திய இலக்கியம் மற்றும் கலை, இஸ்லாமியக் கலை, இடைக்கால கலை, இசை, நிலவியல் என விரிந்து, குறிப்பாக சமூகத்தில் கலையின் இடம் என்ன என்பதை உள்ளடக்கியிருந்தன.' இத்தகைய பன்முகத்தன்மை, ஒரு விஞ்ஞானியாக பயிற்சி பெற்று, கலை-தத்துவ ஆய்வாளராக உருமாறிய அவரின் பரந்துபட்ட அறிவுலகப் பயணத்தின் விளைவாகவே கருதப்பட வேண்டும். மூலமொழி நூல்களை நேரடியாக அணுகி, அவற்றின் அடிப்படையில் தீர்க்கமான, சமரசமற்ற முடிவுகளை முன்வைக்கும் ஆற்றல் அவருக்கு மட்டுமே உரித்தானதொன்றெனவும் அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

## இறுதிக் காலமும் மறைவும்:

1941-இல் பேர்ல் பக் தலைமையிலான 'கீழைத்தேய-மேனாட்டு சங்கத்தில்' (East and West Association) தீவிர அக்கறை காட்டிய ஆனந்த குமாரசுவாமி, 1942-இல் தாயார் லேடி குமாரசுவாமியை 92-ஆவது வயதில் இழந்தார். 1944-இல் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தில் 'இந்தியப் பண்பாடும் ஆங்கிலத் தாக்கமும்' எனும் தலைப்பில் இந்திய மாணவர்களுக்கு உரையாற்றினார். 1945-இல் ஹங்கேரிய அறிஞர் டாக்டர் ஃபெலிக்ஸ் வால்யேவுடன் இணைந்து வாஷிங்டனில் 'உயர்கல்விக்கான உலக சபையை' நிறுவுவதில் பங்களித்தார். 1946 ஒக்ரோபரில் கென்யன் கல்லூரி மாநாட்டில் கடைசி முக்கியமான உரைகளுள் ஒன்றை

“ 'உலகில் வேறு எந்த அறிஞரினதும் வெளியீடுகள் டாக்டர் ஆனந்த குமாரசுவாமியினதைப் போல பரந்த தளத்தை உள்ளடக்கியதில்லை. அவரின் ஆய்வுகள் தத்துவம், அளவியல், சமயம், படிமவியல், இந்திய இலக்கியம் மற்றும் கலை இஸ்லாமியக் கலை, இடைக்கால கலை, இசை, நிலவியல் என விரிந்து, குறிப்பாக சமூகத்தில் கலையின் இடம் என்ன என்பதை உள்ளடக்கியிருந்தன. ”

நிகழ்த்திய அவர், 1947 மார்ச் 25 முதல் 27 வரை பிரின்ஸ்டன் பல்கலைக்கழக இருநூறாண்டு விழாவின் ஒரு பகுதியான ‘கீழைத்தேய பண்பாடும் சமூகமும்’ மாநாட்டில் கலந்து கொண்டார். இதே ஆண்டு ஓகஸ்ட் 15-ஆம் திகதி பொஸ்டன் ஹார்வர்ட் கழகத்தில் இந்திய-பாக்கிஸ்தான் விடுதலை தின கொண்டாட்டத்தில் முக்கிய பங்கு வகித்த அவர், தமது எழுபதாவது பிறந்தநாளையும் பொஸ்டனில் கொண்டாடினார். அதே சமயம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாம் ஜோர்ஜ் மண்டபத்தில் சேர் சார்ல்ஸ் கொலின்ஸால் அவரின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

ஆயினும், இந்த எழுபதாவது ஆண்டு கொண்டாட்டங்களுக்குப் பின் சில வாரங்களிலேயே ஆனந்த குமாரசுவாமி காலமானார். 1947 செப்ரெம்பர் 9-ஆம் திகதி மாசாசூசெட்ஸ் மாநிலம் நீதாமில் அவர் உயிர்நீத்தார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் விடுதலை கிடைத்த அதே ஆண்டில், தமது வாழ்நாள் கனவான வட இந்தியாவில் ஓய்வு வாழ்க்கை நடத்த திட்டமிட்டிருந்த அவர், அத்திட்டத்தை நிறைவேற்ற முடியாமலேயே மறைந்தார். அவரின் மறைவுக்குப் பின்னர், டாக்டர் ரகுநாதன் லெ மே (Reginald le May) இலங்கை, பாக்கிஸ்தான், இந்திய அரச சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் 1952 மே 1-ஆம் திகதி நிகழ்த்திய நினைவஞ்சலி உரையில், ‘இந்திய மறுமலர்ச்சிக்கு மட்டுமல்லாது, உலக மறுமலர்ச்சிக்குமே பங்களித்தவர்களில் டாக்டர் குமாரசுவாமி முன்னணி இடத்தில் நிற்கிறார்’ எனும் தமது ஆசிரியர் ராதாகிருஷ்ணனின் (S. Radhakrishnan) வாசகத்தை மேற்கோள் காட்டினார். கே.பி. ஐயர் தொகுத்த ‘கலையும் சிந்தனையும்’ எனும் நினைவஞ்சலி நூலும், மலேசியாவைச் சேர்ந்த எஸ். துரை ராஜாசிங்கம் தொகுத்த ‘கலாயோகி ஆனந்த குமாரசுவாமிக்கு அஞ்சலி’ எனும் இருதொகுதி நூலும் அவரின் எழுபதாவது பிறந்தநாளன்றே, அதாவது 1947 ஓகஸ்ட் 22-ஆம் திகதி வெளியிடப்பட்டன. ஓ.சி. கங்கோலி (O.C. Gangoly) எழுதிய நினைவஞ்சலிக் கட்டுரையில், ‘இவரின் மரணம் உலகக் கலை, இலக்கிய வரலாற்றில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு உன்னதமான ஆளுமையை இழக்கச் செய்தது’ என்று பதிவு செய்யப்பட்டது. கங்கோலி மேலும் குறிப்பிடுகையில், ‘அவர் வெறுமனே ஒரு புகழ்பெற்ற கீழைத்தேயவியல் அறிஞர் மட்டுமல்ல, கீழைத்தேயக் கலையின் ஒரே நம்பகமான வரலாற்றாசிரியரும், மேலைத்தேய-கீழைத்தேய கலை மரபுகளுக்கிடையேயான அடிப்படை ஒற்றுமையை மிகச் சிறப்பாக விளக்கிய அறிஞருமாவார்’ எனக் கூறியுள்ளார். இந்திய தேசிய உணர்வு எழுச்சியின் ஆரம்ப காலகட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பு, அரசியல் நடவடிக்கைகளின் பட்டியலில் அல்லாது, அறிவின் எல்லைகளை விரிவாக்கிய ஒரு அறிஞனின் அமைதியான சாதனைகளில் பொதிந்திருப்பதாக கங்கோலி மதிப்பிடுகிறார்.

ஆங்கில விமர்சகர் ஜியோஃப்ரி கிரிக்சன் (Geoffrey Grigson) 1947 பெப்பிரவரி 14-ஆம் திகதி பி.பி.சி. வானொலியில் நிகழ்த்திய உரையில், ஆனந்த குமாரசுவாமியின் நூல்களின் பின்அட்டையில் ‘அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டவை’ (All Rights Reserved) எனும் வழக்கமான குறிப்புக்குப் பதிலாக, ‘எவ்வித உரிமையும் ஒதுக்கப்படவில்லை’ (No Rights Reserved) என்றும், மேற்கோள்களை அனுமதியின்றியே பயன்படுத்தலாம் எனும் அறிவிப்பும் இடம்பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டினார். இது ஒரு முக்கியமான ஒரு விடயம். இன்று பலரும் தமது காப்புரிமை என எழுத்தை ஒரு சொத்துரிமையாக ஆக்கிக்கொள்ளும் வழக்கத்தைக் காண்கிறோம். ஆனால் நூறாண்டுகளுக்கு முன்னிருந்தே அவர் அவ்வெழுத்துக்களை மக்களுக்கான திறந்த சொத்துக்களாக அறிவித்திருக்கிறார். ஆனால் அவரின் நூல்களை பல தடவைகள் மறுபதிப்பு செய்த பதிப்பகங்கள் பல ‘பதிப்புரிமை’ (Copy rights) என்று இட்டிருப்பதை இன்றும் காண்கிறோம்.

‘குமாரசுவாமியின் நூல் அவரின் இருப்பே. அவர் தமது கருத்தை நம்புகிறார். ஏனெனில் குமாரசுவாமி ஒரு பணிவிடையாளன், ஒரு போற்றுதலாளன் அல்ல. அவர் ஒரு தூதுவன், ஆர்வலனல்லன்’ என கிரிக்சன் குறிப்பிட்டார். இந்த ஒரு சிறு விபரமே, அறிவை தனியுடைமையாக்காமல் பொது உடைமையாக்கும் அவரின் ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

ஆனந்த குமாரசுவாமியின் வாழ்க்கை, தமிழ் அறிவுலகும் பரந்துபட்ட ஆசிய நாகரிகமும் ஒன்றுக்கொன்று அந்நியமானவை அல்ல, மாறாக ஒரே பண்பாட்டு ஓட்டத்தின் வெவ்வேறு கிளைகள் எனும் உண்மையை உணர்த்துகிறது. யாழ்ப்பாணத்தில் வேரூன்றிய ஒரு தமிழ் குடும்பத்தில் தோன்றி, சிங்கள கைவினைக் கலைகளைப் பாதுகாத்து, இந்திய பௌத்த-இந்து கலைத் தத்துவங்களை உலகுக்கு விளக்கிய அவரின் அறிவுப் பயணம், இன உணர்வுகளால் பிரிக்கப்பட்ட எமது வரலாற்றெழுதியலுக்கு ஒரு எதிர்மறுப்பாக நிற்கிறது. இன்றைய ஈழத் தமிழ் அரசியல் வரலாற்றெழுதியல் பெரும்பாலும் இராமநாதன், அருணாசலம் ஆகியோரின் அரசியல் பங்களிப்பையே முதன்மைப்படுத்தி வந்திருக்கிறது. அதே குடும்பத்தில் பிறந்து அறிவுலகத் தளத்தில் இயங்கிய ஆனந்த குமாரசுவாமியின் பங்களிப்போ, இன்றுவரை தமிழ் மொழியில் போதிய அளவு ஆவணப்படுத்தப்படவில்லை. முத்துக்குமாரசுவாமி பரம்பரையில் அரசியல் புரியாத கீழைத்தேய கலை, இலக்கியத்துக்கு பெரும்பங்காற்றிய பேரறிஞன் அவர். தன்னை ஒரு இனக்குழுமத்துக்குள்ளோ, சாதிக்குள்ளோ, மதத்துக்குள்ளோ ஏன் ஒரு தேசத்துக்குள்ளோ கூட குறுக்கிக் கொள்ளாத ஒரு அறிஞன்.

அவர் இலங்கையின் வரலாற்றில் மறுக்க முடியாத ஒரு பாத்திரமாக நீடித்து வருகிறார். சிங்கள பௌத்த தேசிய வரலாற்றாளர்கள் மகாவம்சத்தை மையப்படுத்தும் அதேவேளையில், அப்பௌத்த நாகரிகத்தின் கலை-அழகியல் அடித்தளத்தை உலகுக்கு விளக்கிய இந்தத் தமிழ் அறிஞரின் பங்களிப்பை நினைவுகூராமல் இருப்பது வரலாற்று நியாயத்திற்குச் செய்யும் அநியாயமே. ஒரு தமிழ் அறிஞனின் அறிவுத் தேடல் இனம் கடந்த மனித நாகரிகத்தின் பொது உடைமையாக எவ்வாறு மாறமுடியும் என்பதற்கு, ஆனந்த கென்டிஷ் குமாரசுவாமியின் வாழ்க்கை என்றென்றும் ஒரு உன்னதமான எடுத்துக்காட்டாக நிலைத்திருக்கும்.



sarawanan.n@thaiveedu.com

# மா சேதுங் 50

## மாவோ: நவீன சீனாவின் சிற்பி

மீநிலங்கோ தெய்வேந்திரன்



**அறிமுகக் குறிப்புகள்:**

மாவோ என்று அன்பாக அழைக்கப்படுகின்ற தோழர் மா சேதுங் எம்மை விட்டு மறைந்து 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. மாவோவை உலகம் இன்றும் நினைவில் வைத்துள்ளது. இன்று சீனா உலகின் தலையாய சக்தியாக வளர்ந்துள்ளது. இந்த உருமாற்றத்தில் மாவோ முதன்மையான பாத்திரத்தை வகித்தார். மார்க்சிய லெனினிச ஸ்டாலினிச வரலாற்று வழித்தடத்தை அடுத்த கட்டத்திற்கு தத்துவார்த்த ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் வளர்த்துச் சென்றார். இதனாலேயே 'மா சேதுங் சிந்தனை' முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலகெங்கும் மாவோயிச இயக்கங்கள் உருவாகியுள்ளன, ஆட்சியைப் பிடித்துள்ளன, இன்றும் உயிர்ப்புடன் இயங்குகின்றன. இந்தப் பின்புலத்தில் மாவோவை மீள் அறிமுகம் செய்யும் முயற்சியே இந்தக் கட்டுரைத் தொடர்.

1976-ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9-ஆம் திகதி மாலையில், சீனப் புரட்சியின் தலைவரும், சீன மக்கள் குடியரசின் நிறுவனத் தலைவருமான மா சேதுங் தனது எண்பத்திரண்டாவது வயதில் காலமானார். இலட்சக்கணக்கான சீனர்களுக்கு, மாவோவின் மறைவு என்பது ஒரு அரசாங்கத் தலைவரின் இறப்பு மட்டுமல்ல, அது ஒரு புரட்சிகரமான காலகட்டத்தின் முடிவையும் குறிப்பதாக இருந்தது. சீன மக்கள் குடியரசின் வரலாற்றிலிருந்து மாவோவின் பிம்பம் பிரிக்க முடியாத ஒன்றாக மாறியிருந்தது. பல சீனர்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கும் கிராமப்புற பின்னணியில் இருந்து வந்தவர்களுக்கும், ஒரு காலத்தில் அதிகாரமற்றவர்களாகக் கருதப்பட்ட மக்கள் வரலாற்றை உருவாக்கும் சக்தியாக மாற முடியும் என்பதற்கான நம்பிக்கையின் அடையாளமாக மாவோ திகழ்ந்தார். அவரது மறைவுக்குப் பிறகு ஐம்பது ஆண்டுகள் கடந்த நிலையிலும், இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவராக மாவோ திகழ்கிறார். அவரை வெறும் புகழ்ச்சியின் மூலமோ அல்லது அவரது வாழ்க்கையின் மோசமான தோல்விகளை மட்டும் முன்னிறுத்தியோ முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஒரு விவசாயியின் மகன் எவ்வாறு சீனாவை மாற்றியமைத்த, உலகம் முழுவதும் அரசியல் இயக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு புரட்சியின் தலைவராக உயர்ந்தார் என்ற கேள்வியின் வழி அவரைப் புரிந்து கொள்ள முயல்வதே முக்கியமானது.

### ஹனான் கிராமத்திலிருந்து சீனப் புரட்சி வரை:

மாவோ 1893-ஆம் ஆண்டு டிசம்பர் 26-அன்று சீனாவின் ஹனான் மாகாணத்தில் உள்ள ஷாவோஷான் (Shaoshan) என்ற கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு காலத்தில் ஏழை விவசாயியாக இருந்தார். பிற்காலத்தில் அவரது புரட்சிகர சிந்தனைக்கு மையமாக அமையவிருந்த கிராமப்புறச் சூழலிலிருந்தே அவர் வந்திருந்தார். சிறுவயதில் மாவோ வயல்வெளிகளில் வேலை செய்தாலும், புத்தகங்களின் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பேரரசர்கள், போர்வீரர்கள், கிளர்ச்சிகள் மற்றும் வீரஞ்செறிந்த எதிர்ப்புகள் குறித்த பாரம்பரிய சீனக் கதைகளை அவர் வாசித்தார். கண்டிப்பான தன் தந்தையுடன் அவருக்கு இணக்கமற்ற உறவே இருந்தது. மேலும், குடும்பத்தினர் அவர் மீது திணிக்க முயன்ற கட்டாயத்



திருமணத்தையும் அவர் எதிர்த்தார். இத்தகைய அனுபவங்கள் அவரை உடனடியாக ஒரு புரட்சியாளராக மாற்றிவிடவில்லை என்றாலும், தன்னிச்சையான அல்லது அநீதியான அதிகார அமைப்புகளுக்கு எதிரான அவரது ஆரம்பகால எதிர்ப்பை அவை ஊக்குவித்தன.

மாவோ பிறந்த காலகட்டத்தில் சீனா ஒரு தீவிரமான தேசிய நெருக்கடியைச் சந்தித்துக்கொண்டிருந்தது. அப்போது ‘சிங்’ (Qing) வம்சம் நாட்டை ஆட்சி செய்துகொண்டிருந்தாலும், இராணுவத் தோல்விகள், உள்நாட்டுக் கிளர்ச்சிகள், வெளிநாடுகளின் தலையீடு ஆகியவற்றால் அது பலவீனமடைந்திருந்தது. அந்நியர்களுக்குப் பொருளாதாரச் சலுகைகளையும் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களைப் பயன்படுத்தும் உரிமையையும் வழங்கும் சமமற்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திடுமாறு பிரித்தானியா உள்ளிட்ட பிற ஐரோப்பிய நாடுகள் சீனாவை நிர்ப்பந்தித்தன. சீன நகரங்களில் அந்நிய அரசாங்கங்கள் தங்களுக்குரிய சிறப்புப் பகுதிகளை நிர்வகித்தன. சீனச் சட்டங்களிலிருந்து தங்கள் குடிமக்களைப் பாதுகாத்துக்கொண்டன. அத்துடன் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிட்டன. ஜப்பானும் ஒரு விரிவடையும் ஏகாதிபத்திய சக்தியாக உருவெடுத்திருந்தது. 1895-இல் சீனாவைத் தோற்கடித்து தாய்வானைக் கைப்பற்றிய ஜப்பான், பின்னர் சீனப் பெருநிலப்பரப்பிலும் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தியது.

இந்தியா அல்லது ஆபிரிக்காவின் பெரும்பகுதியைப் போல சீனா அதிகாரபூர்வமாக ஒரு காலனி நாடாக மாற்றப்படவில்லை. இருப்பினும், அதன் இறையாண்மை கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அந்நிய சக்திகளால் தங்கள் நாடு ‘ஒரு பூசணிக்காயைப் போல’ துண்டுபோடப்படுவதாகப் பல சீனர்கள் கருதினர். இத்தகைய அவமான உணர்வு, மாவோவின் தலைமுறையினர் மீது மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளில் ஒன்றாக அமைந்தது.

அது பேரரசுகளின் பொற்காலமாகவும் இருந்தது. பிரிட்டன் இந்தியாவையும், ஆசியா, ஆபிரிக்கா முழுவதிலும் உள்ள பிரதேசங்களையும் ஆண்டது. பிரான்ஸ் இந்தோசீனாவைக் கட்டுப்படுத்தியது. நெதர்லாந்து இந்தோனேசியாவை ஆண்டது. ஐரோப்பிய சக்திகள் ஆபிரிக்காவின் பெரும்பகுதியைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டன. ஜப்பான் கொரியாவை ஆண்டதுடன், கிழக்கு ஆசியாவில் தனது சொந்தப் பேரரசைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. இன மேன்மை குறித்த கருத்துகள், படையெடுப்புகளையும் காலனித்துவ ஆட்சியையும் நியாயப்படுத்த வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆசியாவிலிருந்து ஆபிரிக்கா வரை, இலட்சக்கணக்கான மக்கள் தாங்கள் தேர்ந்தெடுக்காத அரசாங்கங்களின் கீழ் வாழ்ந்தனர்.

1911-ஆம் ஆண்டு நிகழ்ந்த புரட்சியின் போது சீனாவின் ஏகாதிபத்திய அமைப்பு சரிந்தது. மாவோ சிறிது காலம் ஒரு புரட்சிகர இராணுவத்தில் சேர்ந்தார். முடியாட்சி வீழ்ந்தது. ஆனால், அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை. புதிய குடியரசு பலவீனமாகவே இருந்தது. வெவ்வேறு இராணுவத் தளபதிகள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளைக் கட்டுப்படுத்தினர். இந்த போர்ப்பிரபுத்துவக் காலத்தில், அரசாங்கங்கள் எழுந்தன; வீழ்ந்தன; படைகள் பிரதேசங்களுக்காகப் போரிட்டன. சாதாரண மக்கள் வரிவிதிப்பு, கட்டாய ஆட்சேர்ப்பு, வன்முறை, பாதுகாப்பின்மை ஆகியவற்றின் மூலம் அதற்கான விலையைக் கொடுத்தனர். மாவோவின் தலைமுறை எதிர்கொண்ட பிரச்சினை, ஒரு அரசாங்கத்தை மாற்றுவதை விடப் பெரியதாக இருந்தது. அவர்கள் துண்டாடப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும், அந்நிய ஆதிக்கத்தை எதிர்க்கவும், ஆழமான ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தை மாற்றியமைக்கவும் ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

மாவோ ஆரம்பத்தில் பல அரசியல் மரபுகளை ஆராய்ந்தார். பல இளம் சீன அறிவுஜீவிகளைப் போலவே, அவரும் சீனாவின் பலவீனத்திற்கான விளக்கத்தையும், தேசியப் புத்துயிர் பெறுவதற்கான பாதையையும் தேடினார். தாராளவாதம், தேசியவாதம், அராஜகவாதம், சோசலிசம் ஆகிய அனைத்தும் ஆதரவாளர்களை ஈர்த்தன. 1917-ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சி இந்த விவாதத்தை மாற்றியமைத்தது. ஒரு பழைய அரசியல் அமைப்பைத் தூக்கி எறிய முடியும் என்பதையும், தொழிலாளர்களும் விவசாயிகளும் அரசியல் அதிகாரத்தைக் கோர முடியும் என்பதையும் அது நிரூபித்தது. 1921-இல், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகக் காலத்தில் மாவோ அதில் பங்கேற்றார். அக்காலத்தில், அது குறைந்த

செல்வாக்கு கொண்ட ஒரு சிறிய அமைப்பாக இருந்தது. அது இறுதியில், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டை ஆளும் என்று ஒரு சிலரே கற்பனை செய்திருக்க முடியும்.

கார்ல் மார்க்ஸ் அல்லது விளாடிமிர் லெனினின் எழுத்துகளை வெறுமனே திரும்பச் சொல்வதிலிருந்து மாவோவின் முக்கியத்துவம் வரவில்லை. மார்க்சியத்தை சீனாவின் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்க முயன்றதிலிருந்து அவரது பங்களிப்பு வந்தது. ஐரோப்பாவில் இருந்த மார்க்சிய இயக்கங்கள், பொதுவாக நகர்ப்புறத் தொழிலாள வர்க்கத்தையே சோசலிசப் புரட்சியின் பிரதான சக்தியாகக் கருதி வந்தன. ஆனால், சீனாவில் தொழிற்றுறை தொழிலாளர் படை ஒப்பீட்டளவில் சிறியதாகவே இருந்தது. பெரும்பாலான சீனர்கள் கிராமப்புறங்களில் விவசாயிகளாகவோ, குத்தகை விவசாயிகளாகவோ அல்லது விவசாயத் தொழிலாளர்களாகவோ வாழ்ந்தனர்.

நிலத்தைப் பெறுவதற்கும் கடன் பெறுவதற்கும் இலட்சக்கணக்கான கிராமப்புறக் குடும்பங்கள் நிலப்பிரபுக்களையும் வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களையும் சார்ந்திருந்தன. அதிக வாடகை, கடன், பயிர்ச் சேதம், ஊழல் மிகுந்த உள்ளூர் அதிகாரிகள் ஆகியவை ஒரு குடும்பத்தையே முற்றிலுமாக அழித்துவிடக்கூடியவையாக இருந்தன. அத்தகைய குடும்பங்களைப் பொறுத்தவரை, புரட்சி என்பது அரசியல் நூல்களில் காணப்படும் ஒரு விவாதம் மட்டுமல்ல. அது நிலம், உணவு, பாதுகாப்பு, கடன், மனித கண்ணியம் சார்ந்த விஷயமாக இருந்தது.

சீனாவின் விவசாயிகள் ஒரு தீவிரமான புரட்சிகர சக்தியாக மாற முடியும் என்பதை மாவோ உணர்ந்தார். இது அவரது மிக முக்கியமான அரசியல் நுண்ணறிவுகளில் ஒன்றாகும். பிரித்தானியா அல்லது ஜேர் மனியைப் போல சீனா ஒரு தொழில்மயமான சமூகமாக வளரும் வரை காத்திருப்பதற்குப் பதிலாக, புரட்சியாளர்கள் உண்மையில் நிலவும் சமூகத்திலிருந்தே தங்கள் பணியைத் தொடங்க வேண்டும் என்று அவர் வாதிட்டார். நிலம், வாடகை மற்றும் கடன் தொடர்பான விவசாயிகளின் அன்றாடப் போராட்டங்கள் ஒரு தேசிய புரட்சிகர இயக்கத்தின் அடித்தளமாக அமையக்கூடும் என்று அவர் நம்பினார்.

## புரட்சி, தேசிய விடுதலை, புதிய சீனாவின் உதயம்:

சீன கம்யூனிஸ்டுகள் படிப்படியாக கிராமப்புறங்களில் தங்கள் நிலையை வலுப்படுத்திக்கொண்டனர். அவர்கள் விவசாயிகளை ஒருங்கிணைத்தனர், நிலத்தை மறுபகிர்வு செய்தனர், உள்ளூர் நிர்வாகங்களை உருவாக்கினர், புரட்சிகர இராணுவத் தளங்களை அமைத்தனர். தங்களை விடப் பெரிய, சிறந்த ஆயுதங்களைக் கொண்ட படைகளை எதிர்கொள்ளும்போது, அவர்கள் விரைவான நகர்வு, கொரில்லா போர்முறை, மக்களின் ஆதரவு ஆகியவற்றைச் சார்ந்திருந்தனர். புரட்சிகர இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உறவை, மீனுக்கும் தண்ணீருக்கும் இடையிலான உறவோடு மாவோ ஒப்பிட்டார். மக்களிடமிருந்து பிரிக்கப்பட்ட இராணுவம், நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீனைப் போல ஆகிவிடும். அதாவது தனிமைப்படுத்தப்பட்டு, பலவீனமடைந்து, உயிர்வாழ முடியாமல் போய்விடும். மாவோவின் சிந்தனையில், இராணுவ வெற்றியை அரசியல் அமைப்பிலிருந்து பிரிக்க முடியாது. கிராமப்புற சமூகங்களைக் கொள்ளையடிக்கும் அல்லது அச்சுறுத்தும் படைகளிலிருந்து மாறுபட்ட விதத்தில் வீரர்கள் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. கம்யூனிச அமைப்பாளர்கள் விவசாயிகளின் கவலைகளைப் புரிந்துகொண்டு, புரட்சியானது ஒரு மாறுபட்ட எதிர்காலத்தை வழங்குகிறது என்று அவர்களை நம்ப வைக்க வேண்டியிருந்தது.

இந்த அணுகுமுறை பிற்காலத்தில் ‘மக்கள் வழிமுறை’ (mass line) என்று அறியப்பட்ட முறைக்கு வித்திட்டது. எளிமையாகச் சொன்னால், அரசியல் தலைவர்கள் சாதாரண மக்களின் கருத்துகளுக்குச் செவிசாய்க்க வேண்டும்; அவர்களின் அனுபவங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்; அவர்களின் பல்வேறுபட்ட கோரிக்கைகளை ஒரு பொதுவான திட்டமாக ஒருங்கிணைக்க வேண்டும் என்பதே இதன் பொருள். பின்னர் அந்தத் திட்டம் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டு, செயற்பாட்டின் மூலம் சோதிக்கப்பட்டு, அனுபவத்தின் அடிப்படையில் திருத்தப்பட வேண்டும். அறிவு என்பது படித்த அதிகாரிகள் அல்லது தொழில்முறை நிபுணர்களுக்கு மட்டுமே உரியது அல்ல என்ற கருத்தை இது முன்வைத்தது. தொழிலாளர்களும் விவசாயிகளும் கூட தங்கள் அன்றாட





வாழ்க்கையின் மூலம் பெறப்பட்ட அறிவைக் கொண்டிருந்தனர்.

1934-இல், கம்யூனிஸ்ட் படைகள் 'நீண்ட பயணம்' என்றழைக்கப்பட்ட, ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவிலுள்ள மலைகள், ஆறுகள், புல்வெளிகள் மற்றும் பகைமை நிறைந்த நிலப்பரப்புகளைக் கடந்து பயணித்தன. போர், பசி, நோய், சோர்வு ஆகியவற்றால் பெருமளவிலானோர் இறந்தனர். பயணத்தைத் தொடங்கியவர்களில் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே வடமேற்கு சீனாவில் உள்ள புதிய கம்யூனிஸ்ட் தளத்தை அடைந்தனர். ஆயினும், அந்த இயக்கம் தப்பிப் பிழைத்தது. அந்த அனுபவத்திலிருந்து மாவோ அதன் மிக முக்கியமான தலைவராக உருவெடுத்தார்.

பின்னர் சீனா, ஜப்பானுக்கு எதிரான ஒரு பேரழிவுகரமான போரில் இழுக்கப்பட்டது. ஜப்பானியப் படைகள் நாட்டின் பெரும் பகுதிகளை ஆக்கிரமித்து, பொதுமக்களுக்கு எதிராகக் கொடூரமான அட்டூழியங்களைச் செய்தன. மில்லியன் கணக்கான சீனப் படைவீரர்களும் பொதுமக்களும் இறந்தனர். போரின் போது, கம்யூனிஸ்ட் படைகள் தங்கள் கிராமப்புற அமைப்பை விரிவுபடுத்தி, சீன தேசத்தின் உறுதியான பாதுகாவலர்களாகத் தங்களைத் தகவமைத்தன.

இக்காலப்பகுதியின் உலகளாவிய சூழல் இன்றியமையாதது. ஐரோப்பாவில் பாசிசம் எழுச்சி பெற்று வந்தது. நாஜி ஜேர்மனி அதன் அண்டை நாடுகளை ஆக்கிரமித்தது. இரண்டாம் உலகப் போர் ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவைச் சூழ்ந்தது. ஜப்பான் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதையும் கைப்பற்றி ஒரு பேரரசை உருவாக்க முயன்றது. இந்தப் போர் ஐரோப்பிய காலனித்துவ சக்திகளைப் பலவீனப்படுத்தியது. உலகெங்கிலும் உள்ள காலனித்துவ எதிர்ப்பு இயக்கங்களை வலுப்படுத்தியது. எனவே, சீனப் போராட்டம் என்பது ஒரே நேரத்தில் ஒரு வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டமாகவும், சீனாவின் எதிர்காலம் குறித்த உள்நாட்டுப் போராகவும், ஏகாதிபத்திய சக்தியின் உலகளாவிய நெருக்கடியின் ஒரு பகுதியாகவும் இருந்தது.

1945-இல் ஜப்பானின் தோல்விக்குப் பிறகு, சீன உள்நாட்டுப் போர் மீண்டும் தொடங்கியது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, கம்யூனிஸ்ட் படைகள் பிரதான நிலப்பரப்பில் தேசியவாத அரசாங்கத்தைத் தோற்கடித்தன. 1949 ஒக்ரோபர் 1 அன்று, மாவோ பெய்ஜிங்கில் உள்ள தியானன்மென் சதுக்கத்தின் மேலே நின்று, சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டதை அறிவித்தார்.

அந்தத் தருணத்துடன் மிக நெருக்கமாகத் தொடர்புடைய சொற்களான 'சீன மக்கள் நிமிர்ந்து நின்றுவிட்டனர்' (the Chinese people have stood up) என்பது, 1949 செப்ரெம்பர் 21 அன்று சீன மக்களின் அரசியல் ஆலோசனை மாநாட்டில் மாவோ ஆற்றிய தொடக்க உரையிலிருந்து வந்தவை. அந்த உரையில், 'சீனா இனி ஒருபோதும் அவமதிப்புக்கும் இழிவுக்கும் ஆளான நாடாக' இருக்காது என்று மாவோ அறிவித்தார். அந்தச் சொற்கள் இன்றும் சீனாவின் கொள்கை வகுப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அக்காலப்பகுதியில் அந்நிய ஆக்கிரமிப்பு, உள்நாட்டுப் போர், அரசியல் சிதைவு ஆகியவற்றை அனுபவித்த மக்களுக்கு, இந்தச் செய்தி மிகுந்த உணர்வுபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியது. சீனாவின் எதிர்காலத்தை இனி அந்நிய சக்திகள் தீர்மானிக்காது என்பதை அது அறிவித்தது. அந்தப் புரட்சி ஒரு புதிய அரசாங்கத்தை மட்டுமல்லாமல், தேசிய கண்ணியத்தை மீட்டெடுப்பதையும் உறுதி அளித்தது. மாவோவின் பிம்பம் இவ்வளவு வலிமைமிக்கதாக மாறியதற்கு இதுவும் ஒரு காரணமாகும். பலவீனத்திலிருந்தும் இழிவிலிருந்தும் சீனா மீண்டு எழுந்துவிட்டது என்ற நம்பிக்கையின் அடையாளமாக அவர் திகழ்ந்தார்.

இந்த மாற்றத்தை மாவோ தனித்துச் சாதிக்கவில்லை. இலட்சக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், வீரர்கள், பெண்கள், அரசியல் அமைப்பாளர்கள், உள்ளூர் தலைவர்கள் ஆகியோராலே அந்தப் புரட்சி முன்னெடுக்கப்பட்டது. சிலர் கம்யூனிசத்தின் மீதான நம்பிக்கையால் இதில் இணைந்தனர்; வேறு சிலர் நிலம், கல்வி, பாதுகாப்பு அல்லது தேசிய சுதந்திரத்தை விரும்பினர். நிலப்பிரபுக்களுக்கும் ஊழல் அதிகாரிகளுக்கும் எதிரான கோபம் சிலரைத் தூண்டியது. போரின் சூழ்நிலைகள் காரணமாக இன்னும் சிலர் இப்போராட்டத்தில் ஈர்க்கப்பட்டனர். இருப்பினும், அப்புரட்சிக்கான உத்திகள், சொல்லாடல்கள், அரசியல் திசைவழி ஆகியவற்றில் பெரும்பங்கை மாவோவே வழங்கினார்.

## மாவோவின் சாதனைகள், உலகளாவிய தாக்கம் மற்றும் முரண்பாடுகள்:

மாவோவின் தலைமையின் கீழ், புதிய அரசு சீனப் பெருநிலப்பரப்பின் பெரும்பகுதியை ஒரே மைய அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. இது

பல வெளிநாட்டுச் சலுகைகளை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், சீனாவை ஒரு சுதந்திரமான சர்வதேச சக்தியாக நிலைநிறுத்தியது. நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் பாரம்பரிய நிலப்பிரபுத்துவ முறையை பலவீனப்படுத்தின. பல இடங்களில் அதை முற்றிலுமாக ஒழித்தன. ஏழை விவசாயிகளைப் பொறுத்தவரை, நிலத்தைப் பெறுவது என்பது அவர்களின் பொருளாதாரப் பாதுகாப்பையும் சமூக நிலையில் ஒரு அடிப்படை மாற்றத்தைக் குறிப்பதாகவும் அமைந்தது. இப்புரட்சி தேசிய அரசியலை மட்டுமல்லாமல், அன்றாட வாழ்க்கையையும் மாற்றியமைக்க முயன்றது. 1950-ஆம் ஆண்டின் திருமணச் சட்டம், நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள், பலபெண் திருமண முறை, பெண்களைக் குடும்பச் சொத்தாகக் கருதும் போக்கு ஆகியவற்றை எதிர்த்தது. விவாகரத்து, கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் பங்கேற்பு ஆகியவற்றில் பெண்களுக்கு அதிக சட்டபூர்வ உரிமைகள் கிடைத்தன. இப்புரட்சி ஆணாதிக்கத்தை முழுமையாக ஒழிக்கவில்லை. பாலின சமத்துவத்திற்கான வாக்குறுதியும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. ஆயினும், இது இலட்சக்கணக்கான சீனப் பெண்களின் சட்ட மற்றும் சமூக நிலையை கணிசமாக மாற்றியமைத்தது.

எழுத்தறிவு இயக்கங்களும் பாடசாலைகளின் விரிவாக்கமும் முன்னதாகக் கல்வி வசதி குறைவாக இருந்த சமூகங்களுக்குக் கல்வியைக் கொண்டு சேர்த்தன. பொது சுகாதார இயக்கங்கள் சுகாதாரம், தடுப்பூசி, தாய்மைப் பேறு காலப் பராமரிப்பு மற்றும் நோய் தடுப்பு ஆகியவற்றை ஊக்குவித்தன. முறையான பயிற்சி பெற்ற மருத்துவர்கள் பற்றாக்குறையாக இருந்த கிராமங்களுக்கு அடிப்படை மருத்துவ சேவைகளைக் கொண்டு செல்ல, கிராமப்புற சுகாதாரப் பணியாளர்கள் (இவர்கள் பின்னர் சர்வதேச அளவில் 'வெறுங்கால் மருத்துவர்கள்' (barefoot doctors) என்று அறியப்பட்டனர்) அமர்த்தப்பட்டனர்.

சீனா தொழிற்சாலைகள், சாலைகள், புகையிரதப் பாதைகள், நீர்ப்பாசன அமைப்புகள், அறிவியல் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்ட வலுவான தேசிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியது. மாவோ இறந்தபோது சீனா பொருளாதார வல்லரசாக மாறுவதற்கு வெகு தொலைவிலேயே இருந்தது. இருப்பினும், மாவோவின் இளமைக்காலத்தில் இருந்ததைப் போல அரசியல் ரீதியாகச் சிதறுண்ட மற்றும் பாதுகாப்பற்ற நாடாக அது அப்போது இருக்கவில்லை. அது ஒரு வலுவான அரசு, வளர்ந்து வரும் தொழிற்றுறை அடித்தளம், பரந்த கல்வி, சுகாதார வசதிகள், தனது சர்வதேச நிலையைத் தீர்மானிக்கும் திறன் ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

சீனாவிற்கு அப்பாலும் மாவோ ஏன் போற்றப்பட்டார் என்பதைப் புரிந்துகொள்ள இச்சாதனைகள் உதவுகின்றன. ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பலருக்கு, சீனப் புரட்சியானது கம்யூனிசம் மற்றும் முதலாளித்துவத்திற்கு இடையிலான கெடுபிடிப்போர் போட்டியின் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கப்படவில்லை. மாறாக, அது காலனித்துவம் மற்றும் வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தின் ஒரு பகுதியாகவே புரிந்துகொள்ளப்பட்டது. இந்தியா 1947-இல் சுதந்திரம் அடைந்திருந்தது. இந்தோனேசியா டச்சு ஆட்சியிலிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தது. வியட்நாம் முதலில் பிரான்சுக்கு எதிராகவும், பின்னர் அமெரிக்காவுக்கு எதிராகவும் போராடிக்கொண்டிருந்தது. ஆபிரிக்க விடுதலை இயக்கங்கள் ஐரோப்பியப் பேரரசுகளைத் தகர்த்தெறிந்து கொண்டிருந்தன. இந்த உலகளாவிய சூழலில், ஏழ்மையான மற்றும் பெரும்பாலும் கிராமப்புறங்களைக் கொண்ட ஒரு நாடானது, தன்னைவிட வலிமைமிக்க எதிரிகளைத் தோற்கடித்து, தனது சொந்த அரசியல் பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும் என்பதற்கான சாத்தியக்கூறின் அடையாளமாக மாவோ திகழ்ந்தார்.

### தொடரும் குறிப்புகள்:

மாவோ இன்றும் முக்கியத்துவம் வாய்ந்தவர். ஏனெனில், அவர் இல்லாமல் நவீன சீனாவைப் புரிந்துகொள்ள முடியாது. தேசிய இறையாண்மைக்கு சீனா அளித்த வலுவான முக்கியத்துவம், மீண்டும் ஒருபோதும் வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு அடிபணியாது என்ற அதன் பிடிவாதம், ஒரு முக்கிய உலக வல்லரசாகத் தனது நிலை குறித்த அதன் நம்பிக்கை ஆகிய அனைத்தும் அவரால் புரட்சிக் காலத்தால் வடிவமைக்கப்பட்டன.

இன்றைய சீனா, மாவோவின் சீனாவிலிருந்து மிகவும் வேறுபட்டது. குறிப்பாக, அதன் பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு மற்றும் உலகளாவிய முதலாளித்துவத்துடனான அதன் உறவு ஆகியவற்றில் இந்த வேறுபாடு





காணப்படுகிறது. மாவோவின் மரணத்திற்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், அவர் ஒருவேளை ஏற்றுக்கொண்டிருக்காத வழிகளில் நாட்டை மாற்றியமைத்தன. ஆயினும்கூட, அந்தச் சீர்திருத்தங்கள், புரட்சியால் உருவாக்கப்பட்ட ஒரு அரசின் மூலமாகவும், நிலச் சீர்திருத்தம், வெகுஜனக் கல்வி, பொது சுகாதாரம், தொழில்மயமாக்கல், தேசிய ஒருங்கிணைப்பு ஆகியவற்றால் ஏற்கனவே உருமாற்றம் அடைந்திருந்த ஒரு சமூகத்திற்குள்ளிருந்தும் மேற்கொள்ளப்பட்டன. மாவோவுக்குப் பிந்தைய சீனா ஒன்றுமில்லாததிலிருந்து தொடங்கவில்லை.

மாவோவின் கருத்துகள் சீனாவைத் தாண்டி வெகுதூரம் பரவியதால் அவர் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். வியட்நாம், இந்தியா, நேபாளம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளிலும் ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகியவற்றிலும் இருந்த புரட்சியாளர்கள் அவரது உத்திகளைப் பயின்றனர். அமெரிக்காவில் இருந்த கறுப்பினப் புரட்சிகரச் சிந்தனையாளர்கள் அவரது எழுத்துகளை வாசித்தனர். 1960-களின் போராட்டங்களின்போது ஐரோப்பிய மாணவர்கள் அவரது உருவப்படத்தை ஏந்திச் சென்றனர். விவசாயப் புரட்சி, கொரில்லாப் போர்முறை, சுயசார்பு மற்றும் மக்களிடமிருந்து கற்றல் குறித்த அவரது கருத்துகள் பல்வேறு அரசியல் சூழல்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டன. சில சமயங்களில் அவை காலனித்துவம், இனவெறி மற்றும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களுக்கு உத்வேகம் அளித்தன. மாவோவின் மறைவுக்குப் பிறகு, வரலாற்றாசிரியர் ஜான் கே. ஃபேர்பேங்க் (John K. Fairbank) ஒரு எச்சரிக்கையை விடுத்தார். மாவோவை ஒரு தனிநபராக மட்டுமே மையப்படுத்துவது, 'அவரது மேதைமைக்கு வாய்ப்பளித்த அந்த மாபெரும் புரட்சியை' மறைத்துவிடக்கூடும். இது ஒரு முக்கியமான நினைவூட்டல். மாவோவின் கதை என்பது அசாதாரணமான ஆற்றல் கொண்ட ஒரு மனிதரின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல. அது கிளர்ச்சியில் ஈடுபட்ட ஒரு சமூகத்தின் கதையும், வறுமை, நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம், போர் ஆகியவற்றிலிருந்து விடுபட முயன்ற இலட்சக்கணக்கான மக்களின் கதையுமாகும்.

மாவோவை வழிபடவோ அல்லது அவரை ஒரு அரக்கனாகச் சித்தரிக்கவோ கூடாது. இவ்விரு அணுகுமுறைகளும் வரலாற்றை மிக எளிமைப்படுத்திவிடுகின்றன. வழிபாட்டு மனப்பான்மை, ஒரு மாபெரும் தலைவரால் தவறு செய்ய முடியாது என்று பாவனை செய்வதன் மூலம் பொறுப்புணர்வை நீக்குகிறது. அரக்கனாகச் சித்தரிப்பது, இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்தக் குறைகள், நம்பிக்கைகள் அல்லது காரணங்கள் ஏதுமின்றி மாவோவைப் பின்பற்றினார்கள் என்று பாவனை செய்வதன் மூலம் வரலாற்றுச் சூழலை நீக்குகிறது. மிகவும் சவாலான ஒரு முடிவே உண்மையான முடிவாகவும் அமைகிறது. சீனாவின் இறையாண்மையை மீட்டெடுக்கவும், அதன் சமூக அடித்தளங்களை மாற்றியமைக்கவும், நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் அரசியல் போராட்டங்களுக்கு உத்வேகம் அளிக்கவும் மாவோ உதவினார். வறுமையில் வாடிய மற்றும் அடித்தட்டு மக்களில் பலருக்கு கண்ணியம், பங்கேற்பு, கிளர்ச்சி ஆகியவற்றிற்கான ஒரு மொழியை அவர் வழங்கினார். அவரது மறைவுக்குப் பிறகு ஐம்பது ஆண்டுகள் கடந்த நிலையிலும், மாவோவின் வாழ்க்கையின் மையத்திலுள்ள கேள்விகள் மறைந்துவிடவில்லை. ஒரு ஏழை நாடு எவ்வாறு அந்நிய ஆதிக்கத்தை முறியடிக்க முடியும்? சக்திவாய்ந்த நாடுகளைச் சார்ந்திருக்காமல் வளர்ச்சியை அடைய முடியுமா? அரசியலில் வெறும் பார்வையாளர்களாக இல்லாமல், சாதாரண மக்கள் எவ்வாறு தீவிரப் பங்கேற்பாளர்களாக மாற முடியும்? புரட்சித் தலைவர்கள் ஒரு புதிய சலுகை பெற்ற வர்க்கமாக மாறுவதை ஒரு புரட்சி எவ்வாறு தடுக்க முடியும்?

இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க, நாம் மீண்டும் தொடக்கத்திற்குச் செல்ல வேண்டும். மாவோ தனது குழந்தைப் பருவத்தைக் கழித்த அந்தச் சீனச் சூழலுக்குள் நாம் நுழைய வேண்டும். அது வெளிநாடுகளின் ஆதிக்கத்தால் பலவீனமடைந்தும், கிளர்ச்சிகளால் உலுக்கப்பட்டும், போர்ப் பிரபுக்களால் துண்டாடப்பட்டும், தேசிய மறுமலர்ச்சிக்கான வழியைத் தீவிரமாகத் தேடிக்கொண்டிருந்த ஒரு பரந்த நாடாக இருந்தது. இத்தொடரின் இரண்டாவது கட்டுரையான 'மாவோவை உருவாக்கிய சீனா', அந்த உலகத்தை ஆராய்வதுடன்; தேசிய அவமானம், கிராமப்புற ஏற்றத்தாழ்வு, ஏகாதிபத்தியம் மற்றும் அரசியல் சரிவு ஆகியவை எவ்வாறு பிற்காலத்தில் சீனப் புரட்சிக்குத் தலைமை தாங்கவிருந்த அந்த இளைஞரை வடிவமைத்தன என்பதையும் விளக்கும்.



meenilankco@thaiveedu.com

# சித்தன் வாக்கும் கவியின் போக்கும்

கிருங்கை சேதுபதி

'கவியுளம் என்ன நினைக்கிறது? எதைப் பாடுகிறது?' என்று உடன் சொல்லிவிட முடியாது. எழுதலாம் என நினைத்து உட்கார்ந்தால் நினைத்ததை எழுதிவிட வராது. நினைவுக்கு அப்பால் ஒன்று எழுந்து எழுத்தில் உட்கார்ந்து கொள்ளும்.

பொதுவான கவிப்போக்கு இத்தகையது என்றால், சித்தன் போக்கு? அது 'சிவன் போக்கு' என்று ஏற்கனவே கணித்துச் சொல்லிவிட்டார்கள். அந்தவகையில் ஒரு சித்தனாகத் தன்னை உணர்ந்து பாரதி பாடிய 66 பாடல்களே 'பாரதி அறுபத்தாறு' என்று பெயர் கொண்டு அமைந்துவிட்டது.

அதில், தன் வாக்காக, கவி பாடிய வாக்குகளும் உண்டு. தன் குருநாதர்கள் கூறியதாகக் கூறிய பாடல்களும் உண்டு. இரண்டையும் பாடியவர் பாரதிதான் என்றாலும், தன் குரு நாதர் கூறிய உபதேச மொழிகளை உள்ளடக்கிப் பாடும் போது, தன்னில் பாதியோ, மீதியோ, அவர் வசமாகி விடு கிறது. அதனால், கவித்துவத்தை விடவும் கருத்துச் செறிவி னைவிடவும், குருநாதர் சொற்களையே உள் அமைத்துப் பாட வேண்டிய நிலைக்கு, பாரதி ஆகியிருக்கிறார் என்ப தற்கு இந்நூல் ஒரு சான்று. அதிலும், குள்ளச்சாமி கூறிய உபதேச மொழிகளைப் பாடுவதற்கும், கோவிந்தசாமி கூறிய உபதேச மொழிகளைப் பதிவிடுவதற்கும் அவரிடம் சற்றே வேறுபாடு அமைந்திருப்பது தெரியவருகிறது.

குள்ளச்சாமி சொல்லிக் காட்டியதைவிடவும் சூக்குமமாக உணர்த்திக் காட்டியவையே அதிகம். எனவே, பாரதியின் பாட்டின் முக்கால் பங்கு, அவருடையதாகவும் ஏனைய கால் பங்கின் கருத்தாக்கம் குள்ளச்சாமியுடையதாகவும் கொள்ள முடியும். அதனாலேயே, கவித்துவமும், சித்த மனோபாவமும் மொத்தமாய் அந்தப் பாடல்களில் புலப்படுகின்றன. ஆனால், கோவிந்தசாமி கூறிய உபதேசங்களில், அவர் வாக்கு அழுத் தந் திருத்தமாக அப்படியே வந்துவிடுகிறது. எதுகை மோனை, இயைபு, விருத்த இலக்கணம் இவற்றைக் கருதிப் பாடிய அளவோடு இவ்வுபதேசப் பாடல்கள் அமைந்துவிட்டன. இப் பாங்கினை, கோவிந்த சாமியின் பின்வரும் உபதேசப்பாட லில் தெளிவாகப் புலப்படப் பார்க்கலாம்.

***'பாரான உடம்பினிலே மயிர்களைப் போல்***
***பலப்பலவாம் பூண்டு வரும் இயற்கையாலே;***
***நேராக மானுடர் தாம் பிறரைக் கொல்ல***
***நினையாமல் வாழ்ந்திட்டால்அழுதல் வேண்டா;***
***காரான நிலத்தைப் போய்த் திருத்த வேண்டா;***
***கால்வாய்கள் பாய்ச்சுவதில் கலகம் வேண்டா;***
***சீரான மழை பெய்யும்; தெய்வம்உண்டு;***
***சிவன் செத்தால்அன்றி மண்மேல் செழுமையுண்டு***

*பாரதி அறுபத்தாறு - 61*

இந்தப் பாடலின் தொடக்கமே, அவரின் உபதேச மொழி நடையை உள்ளடக்கியதாகத் தோன்றுகிறது. முடிவோ, முற் றிலும் பொருளை மட்டுமே கருத்தில் கொண்டு நிறைகிறது. உடம்பினில் மயிர்களைப் போல், உலகில் முளைப்பவை பற்பல உயிர்கள் என்பது கவிவாக்கு இல்லை. குருநாதரின் அருள் வாக்கு. காரான நிலம், கால்வாய்கள், மழை யாவும் அதனை அடுத்து அவர் சொல்லிய விளக்கத் தொடர்கள். இந்த இடத்தில் மோனைக்கு இயையச் சொன்னதுதான்



tg.theeban@gmail.com

பாரதி. முற்று முழுக்க இவையாவும் குருவின் வாசகங்களே. அதன் உச்சம்,

***சிவன் செத்தால்அன்றி மண்மேல் செழுமையுண்டு...***

என்கிற தொடர். பாரதி பாடியது எனினும், இது குருநாதர் உபதேசம். சற்றே குழப்பத்தை உண்டாக்கும் வாக்கு இது.

சிவன் செத்தால் அன்றி - சீவன்தான் சாகுமே அன்றிச் சிவனுக்குச் சாவேது? ஆகவே, சாகாத சிவன் செத்தால் அன்றி, இம்மண்மேல் செழுமையானது அழிந்துவிடாது என்று விளக்கமாகிறது. அதாவது, சிவன் செத்தால், இம்மண் ணின் செழுமையும் அழிந்துபோகும். சிவன்செத்தால்ஒழிய - 'சிவன்அழியாதவரை மண்மேல் செழுமையுண்டு' என்பது உணர்த்தவரு பொருள். இந்தப் பொருளை மனக்கொண்டு முன் அமைந்துள்ள வரிகளை மீளப்படித்தால், இவ்வுபதேச உண்மை இன்னும் தெளிவாகப் புரிபடும்.

'மரத்தை வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்' என்பது வேளாண் மொழியானாலும், வேதாந்தமொழியாகக் கொள்ளவும் இடமளிக்கிறது. அதுபோல் இத்தொடரும் அமைகிறது.

•

தனிப்பாடல் திரட்டில், திருவள்ளுவநாயனார் பாடியதாக ஒரு வெண்பா உண்டு. அதன் பின்னணியில் ஒரு புனைவும் உண்டு.

ஆதி என்ற புலைச்சியும் பகவன் என்ற பிராமணனும் பெற்ற ஏழு பிள்ளைகளில் ஒருவர் இந்தத் திருவள்ளுவநாயனார். ஔவை முதலாக, திருவள்ளுவர் ஈறாக, இவர்கள் பெற்ற எழுவரும் பெற்ற உடனேயே கைவிட்டுவிட்டுக் கிளம்ப வேண்டும் என்ற பகவனின் கட்டளைப்படி, ஆதியால் கைவிடப்பட்ட பிள்ளைகள். பெற்ற மனம் பேதலிக்கும்போது பிள்ளைகள் ஒவ்வொருவரும் பாடியதாக ஒவ்வொரு வெண்பாக்கள் மொத்தம் ஏழு வெண்பாக்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இந்தத் திருவள்ளுவநாயனார் பாடியது.

***எவ்வுயிரும் காக்கஒரு ஈசன்உண்டோ இல்லையோ***
***அவ்வுயிரில் யான்ஒருவன் அல்லனோ - வவ்வி***
***அருகுவது கொண்டிங்(கு) அலைவதேன், அன்னே***
***வருகுவது தானே வரும்***

கதை, மெய்யோ, பொய்யோ? இப்பாடல் உணர்த்தும் கருத்துதான் இங்கு நம் கவனத்தில் கொள்ள வேண்டியது.

எவ்வுயிரும் காக்க ஓர் ஈசன் உண்டோ இல்லையோ - இக்கேள்விக்குப் பதில் உண்டு என்பது. அப்படியானால், அவ்வுயிரில் யான்ஒருவன் அல்லனோ - ஆம். அதனால், வவ்விஅருகுவது கொண்டிங்(கு) அலைவதேன்? அன்னே - அன்னையே வருவது தானே வரும் என்கிறது இப்பாடல்.

வருவதுதானே வரும் - வேறு ஏதும் வராது என்பது ஒரு பொருள். வருவது தானே வரும் - அதற்காக அரும்பாடு பட வேண்டாம் என அமைதிப்படுத்தும் பொருளும் இதனுள் அடக்கம். இதே தொனியில் அனைத்துக்கும் முன்னதாக ஔவை பாடியதான ஒரு வெண்பா.

***இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்(று)எழுதி***
***விட்டசிவ னும்செத்து விட்டானோ - முட்டமுட்டப்***
***பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக்(கு) அன்னாய்***
***நெஞ்சமே அஞ்சாதே நீ***

இப்படி தைரியம் சொல்கிற பாடல்கள் தமிழில் நிறையவுண்டு. இந்த வரிசையில் இதுவும் ஒன்று. என்றாலும், இது உபதேசம் அல்லவா?

•

'சிவன் இருக்கும் வரை இவ்வுலகில் செழுமை குன்றாது. அதனால் மானிடர்களே களவை விடுங்கள். ஒருவருக்கொருவர் பேதித்து, கலகம் செய்து வேலிகள் கட்டிப் பின்னர் அதற்குக் காவலும் செய்து நீதி இல்லாத கள்வர்களுக்கு ஏன் நெறிமுறைகள் வகுக்கிறீர்கள்? இதனை நினைத்துப் பார்த்தால் இதுவே கொடிய நிகழ்ச்சி ஆக இருக்கிறது' என்கிறார் கோவிந்தசாமி.

காப்பாளர்கள் இருக்கும் வரை கள்வர்கள் இருப்பார்கள். 'கள்வன் பெரியவனா? காப்பாளன் பெரியவனா? என்கிற கேள்வி இன்றும் கிராமங்களில் உண்டு. அதில் கள்வனே பெரியவன் என்ற பதிலும் அடங்கிவரும். இதுதான் கள்வர் நெறி. இதற்குக் காரணம், கள்வர்கள் அல்லர். காப்பவர்களின் வேண்டாத முயற்சிதான்.

'உண்மையைச் சொன்னால், மானிடர்களே, நீங்கள் காப்பாளர்கள் அல்லர். உங்களையும் காப்பவள். இதுதான் உலக தருமம். இதனை உலகறிய நீ பகர்வாயாக' என்றும் உபதேசிக்கிறார்.

'கதவைக் கண்டவன் கலைஞன். பூட்டைக் கண்டுபிடித்தவன் திருடன்' என்று எனது கவிதை ஒன்று வரும். திறக்கப்படாத பூட்டுகள் உடைக்கப்படும். அது மனிதர்கள்பால் கொண்டிருக்கும் அவநம்பிக்கையைப் பூட்டுகிறது. சகமனிதர்களைச் சந்தேகிக்கிறது. அவமதிக்கிறது. ஒரு காலத்தில் பொதுவில் இருக்கும் எதையும் திருடர்கள் அபகரிப்பதில்லை. பதுக்கிப் பாதுகாக்கும் பொருள்களே களவுக்கு உரியனவாக இருந்தன. இன்றைக்குப் பொதுப்பொருள்களை அபகரித்துப் பதுக்கும் போக்கு அதிகரித்திருக்கிறது. அவை பொன்னும் பொருளும் ஆக இருந்தன. இன்றோ, மண்ணும் மலைகளும் மணலுமாக இருக்கின்றன. எனவே, மண்மேல் செழுமை எப்படி உண்டாகும்? அவற்றைப் பாதுகாக்கும் பராசக்தி வெகுளாமல் எப்படி இருப்பாள்? தருமம் எப்படித் தழைக்கும்?

இவ்வாறெல்லாம் காலத்திற்கேற்பக் கேள்விகள் எழுப்பத் தூண்டும் பாரதியின் கவிதை, கோவிந்தசாமியின் உபதேசமாகப் பின்வருமாறு உதிக்கிறது.

***'ஆதலால் மானிடர்கள் களவை விட்டால்***
***அனைவருக்கும் உழைப்பின்றி உண(வு)உண்டாகும்;***
***பேத(ம்)இட்டுக் கலக(ம்)இட்டு வேலிகட்டிப்***
***பின் அதற்குக் காவல்என்று பேரும்இட்டு***
***நீதமில்லாக் கள்வர் நெறி ஆயிற்(று) அப்பா?***
***நினைக்குங் கால்இது கொடிய நிகழ்ச்சியன்றோ?***
***பாதமலர் காட்டி நினை அன்னை காத்தாள்***
***பாரினில்இத் தருமம் நீ பகருவாயே***

*பாரதி அறுபத்தாறு - 62*

***'உணவு இயற்கை கொடுக்கும்.***
***உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்'***

என்பதைத் தன் மதக்கோட்பாடாக பாரதி மொழிந்ததை முந்தையக் கட்டுகரைகளில் நாம் கண்டிருக்கிறோமே, அதற்கு உந்தாற்றல் தந்த உபதேசம்தான் இது. அடுத்த உபதேசம் இறைவன் குறித்தது. இதற்கும் முன்னதாக, தமிழுக்கு நலம் பயக்கும் ஒரு சொல்லை மற்றோரிடத்தில் சொன்னவர் மகாகவி பாரதி.

***'ஒருசொல் கேளீர் -***
***சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'***

என்பதுதான் அது.

•

அங்கே ஒரு சொல். இங்கே ஒரு மொழி. இது Language என வரும் மொழியைக் குறிக்காது, மொழியப்படும் அதாவது சொல்லப்படும் தொடரைக் குறிப்பது. மொழிய மொழிய வளரும் மொழி, மனிதமொழி. ஒரு நெல் இன்னொரு நெல்லை

உருவாக்கும். அதுபோல், ஒரு சொல் மற்றொரு சொல்லை உருவாக்கும். இப்படி ஒற்றை நெல் கற்றை நெல்லை உரு வாக்குவதுபோல், ஒற்றைச் சொல், கற்றைச் சொற்களை உரு வாக்கும். அவை எண்ணிக்கையில் நிறைந்திருந்தாலும் நெல் தான். புல்லோ, பிறவோ ஆகாது. அதுபோல், ஒரு மொழி, வெவ்வேறாக இருந்தாலும் ஒரே மொழிதான். இங்கே அந்த ஒருமொழி, மலம் ஒழிக்கும் திருமொழியாக, குருநாதர் வழி உபதேசம் ஆகிறது. 'அந்த ஒருமொழியைக் கருத்தில் நிறுத்தி ஓதுக' என்று இவர் உபதேசிக்கும் மொழி, மறைமொ ழியாகிய மந்திரம். அது 'ஓம் நமச்சிவாய.' அந்த ஒருமொழியே மலம் (ஆகிய அழுக்குகளை) ஒழிக்கும். அவ்வாறு ஒழிக்கும் என்ற ஒருமொழியைக் கருத்தில் நிறுத்தும் வண்ணம் உபதே சிக்கும் ஒருமொழி என்று ஓங்காரத்துடன் இணைந்த திரு வைந்தெழுத்தினை உபதேசிக்கும் குருநாதர் கோவிந்தசாமி, இந்த இடத்தில் புது விளக்கத்தை, பொதுவிளக்கத்தை அளிக்கிறார்.

'ஒருமொழியே பல மொழிக்கும் இடம் கொடுக்கும்.' இது பொதுவான பொருள். அந்த ஒரு மொழியே மலம் ஒழிக்கும். அவ்வாறு ஒழிக்கும் என்ற ஒருமொழியைக் கருத்தில் நிறுத் தும் வண்ணம் வரும் ஒரு மொழியே, பல மொழிக்கும் இடம் கொடுக்கும் என்பது சிறப்புப் பொருள். அந்த ஒருமொழியை, 'ஓம் நமச்சிவாய' என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். அதுவே, மலம் ஒழிக்கும் பல மொழிக்கும் இடம் கொடுக் கிறது. மலம் ஒழிக்கும் நாமத்துக்கு, சிவன் மட்டும் உரியவன் அல்லன். ஹரியும் உரியவன். அவனே இராமன். அதுவே சக்தி. இன்னும் மேலோர்கள் ஜெபிக்கும் மந்திர மொழி அனைத்தும் உரியன. அது கிறித்தவர்கள் முதலானவருக்கும் உரியது என்பது உள்பொருள். இதனை இதற்கு அடுத்த பாடல் எடுத்து விளக்கும்.

இவ்வாறு விளக்கம் சொல்ல எழுதப்பட்ட கவிதையன்று, இது. விளங்கிச் செயல்பட உதவும் மந்திரம். அதனால்தான், தான் உணர்ந்த உண்மையை, பாரதி பின்வருமாறு உணர்த்திடப் பாடுகிறார்.

***ஒரு மொழியே பலமொழிக்கும்இடம் கொடுக்கும்;***
***ஒரு மொழியே மலமொழிக்கும்ஒழிக்கும்என்ற***
***ஒரு மொழியைக் கருத்தினிலே நிறுத்தும் வண்ணம்***
***ஒரு மொழி 'ஓம் நமச்சிவாய' என்பர்;***
***'ஹரி ஹரி' என்றிடினும்அஃதே; 'ராம ராம'***
***'சிவ சிவ'; என்றிட்டாலும்அஃதே யாகும்;***
***தெரி வுறவே 'ஓம் சக்தி'என்று மேலோர்***
***ஜெபம் புரிவதுஅப் பொருளின் பெயரே ஆகும்***

*பாரதி அறுபத்தாறு - 63*

•

***'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'***

என்று சிவபுராணம் ஓதிய மாணிக்க வாசகர்,

***'தென்னாடுடைய சிவனே போற்றி***
***எந்நாட்டுக்கும் இறைவா போற்றி'***

என்று பாடியிருக்கிறாரே. எந்நாட்டுக்கும் இறைவனாகிய பரம் பொருளுக்கு, இங்கே இத்தென்னாட்டில், 'சிவன்' என்று பெயர். இந்நாட்டில், 'சிவ, சிவ', 'ராம, ராம', 'ஹரி ஹரி', 'ஓம் சக்தி' என்றும் திருநாமங்கள் உண்டு.

'சிவ' எனும் இப்பெயர்ச் சொல்லின் பொருள் யாது?

குருநாதர் உபதேசமாக, அடுத்து விளக்குகிறார் பாரதி.

***'ஸாரமுள்ள பொருளினை நான் சொல்லி விட்டேன்:***
***சஞ்சலங்கள்இனி வேண்டா, சரதம் தெய்வம்;***
***ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;***
***எப்போதும்அருளை மனத்(து) இசைத்துக் கொள்வாய்;***

*பாரதி அறுபத்தாறு - 64*

•

இந்தச் சிந்தனை மரபு, பாரதிக்குள் முன்னர் இருந்தே முளைத்ததுதான். பின்னர் இப்போது இன்னும் தெரிவுறச் சொல்லும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. திருநாவுக்கரசர், நம் மாழ்வார், வள்ளலார், தாயுமானவர் உள்ளிட்ட அருளாளர்கள் ஆங்காங்கே உரைத்த செய்தியின் சிறப்பு வெளிப்பாடு இது என்பதை, வாய்ப்பு நேரும்போதெல்லாம் பாரதி, தன் கவிதை களில், கட்டுரைகளில், கதைகளில், உரைக்குறிப்புகளில் வெளிப்படுத்திக் கொண்டே இருந்திருக்கிறார். அவற்றின் விரி வான விளக்கங்களை எனது, தெய்வக் கனல் பாரதி (பழனி யப்பா பிரதர்ஸ் வெளியீடு, 2016) என்ற நூலில் காணலாம். இப்போது குருநாதரின் உபதேசத்தைத் தொடரலாம்.

•

எல்லா மொழிகளின் சாரமும் ஒன்றுதான். அது அன்பு. அன்பே சிவம் என்கிறது திருமந்திரம். அன்பும் சிவமும் வெவ்வேறு என்பவர்கள் அறிவிலாதவர்கள். இந்த உண்மையின் பெயரே தெய்வம். சரதம் தெய்வம். தெய்வமே உண்மை. உண்மையே தெய்வம். இதில் சஞ்சலங்கள் இருக்கக் கூடாது. அன்பு ஊற் றெடுக்கும் இடம் நெஞ்சம். நெஞ்சகமே தெய்வம் கொலுவி ருக்கும் கோயில். அங்கே அன்பின் ஈரம் இல்லையெனில், சிவன் இல்லை என்று பொருள். ஈரம் இல்லாத நெஞ்சினை உடையவர் சிவனைக் காண மாட்டார். அதனால் 'எப்போதும் அருளினை மனத்தில் இசைத்துக் கொள்வாயாக' என்று உப தேசிக்கிறார்.

இது வரையில் சரி. இதற்குமேல் ஒரு வரி வருகிறது.

***வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;***

இதற்கு முந்தையதற்கும் முந்தைய தொடர்,

***ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;***

இவ்விரு தொடர்களிலும் முதல் எழுத்தில் மட்டும் தான் மாற்றம். ஈரம், வீரம். ஆனால் உணர்த்து பொருள் ஒன்றே. ஈரமோ, வீரமோ இல்லாத நெஞ்சுடையவர்களால் சிவனைக் காண முடியாது என்பதே இவ்வரிகளின் சாரம். ஈரமும் வீரமும் எப்படி ஒன்றாகும்? சித்தன் வாக்கும் கவியின் போக்கும் ஒன்றாகிச் சிந்திக்க வைக்கும் தொடர் இது. மேலும் பாரதி யைத் தொடர்வோம்.



sethupathi@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

54

– மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

> ***“‘ஊற்றுறு கண்ணின் நீர் ஒழுக என்று முதல் அடியில் சோகத்தால் ஏற்பட்ட கண்ணீர்ப் பெருக்கும், பால் துறும் பனிமுலை ஆ என்னும் ஈற்றடியில் மகிழ்ச்சியால் ஏற்பட்ட கண்ணீர்ப் பெருக்கும் ஒழுக இராமன் நின்றான் என்று இராமனின் கண்ணீருக்கு இரண்டு பொருள் கூறும் கம்பரின் கருத்தாழம் மிக்க செய்யுளின் சிறப்பை இங்கே காண்கின்றோம்.”***

சென்ற மாத இதழில் கம்பராமாயணம், ஆரணிய காண்டத்தின் ஒன்பதாவது படலமாகிய அயோமுகிப் படலத்தில் இரும்புமுகம் கொண்டவளான அயோமுகி என்பாள் இலக்குமணனைத் தூக்கிக்கொண்டு வானத்திலே சென்றதைத் திங்களுடன் செல்கின்ற மேகத்தைப்போலச் சென்றாள் என்னும் கம்பரின் வருணனையுடன் பார்த்தோம். தொடர்ந்து நிகழ்வனவற்றை இவ்விதழில் கம்பனின் கவிநயத்தோடு சுவைத்து மகிழலாம். அயோமுகியால் இலக்குமணன் தூக்கிச்செல்லப்பட்ட காட்சியைக் கம்பர் மேலும் இவ்வாறு வருணிக்கின்றார்.

***ஆங்கவள் மார்பொடுகையிலடங்கிப்***
***பூங்கழல் வார்சிலைமீளிபொலிந்தான்***
***வீங்கியவெஞ்சினவீழ்மதவெம்போர்***
***ஓங்கலுரிக்குள் உருத்திரன் ஒத்தான்***

*கம்ப. ஆரணிய.1097*

ஆங்கு அவள் மார்போடு கையில் அடங்கிப் பொலிந்தான் - அங்கே அயோமுகியின் மார்போடும் கைகளினுள்ளும் அடங்கி விளங்கியவனாக, பூங்கழல் வார்சிலைமீளி - அழகிய வீரக் கழலை அணிந்த பெரிய வில்லை உடைய வீரனான இலக்குமணன், வீங்கிய வெஞ்சின - மிகக்கொடிய சினத்தையுடைய, வீழ்மத - பெருகுகின்ற மதநீரையுடைய, வெம்போர்ஓங்கல் உரிக்குள் - கொடிய போரைச் செய்கின்ற யானையின் தோலை உரித்துப் போர்த்த, உருத்திரன் ஒத்தான் - சிவபிரானை ஒத்தவனாகக் காணப்பட்டான்.

அயோமுகி தனது மார்போடு இலக்குமணனின் உடல் முழுவதும் மறையும்படி அவளது இரண்டு கைகளாலும் தழுவிஎடுத்துச் சென்ற காட்சியிலே இலக்குமணனின் தோற்றத்தை, யானையின் உரித்தோலைப் போர்த்த சிவபிரானுக்குக் கம்பர் ஒப்புமை கூறி இருப்பது பொருள் நயம் மிக்கது, இருண்ட தோற்றத்துடன் இலக்குமணனின் உடலை மறைத்துத் தழுவி இருந்ததால் யானையின் உரித்தோலாக அயோமுகியை உருவகப்படுத்திய கம்பர் மிகச் சினம்கொண்டு காணப்படும் உருத்திரமூர்த்தியாகிய சிவபிரானை இலக்குமணனுக்கு உவமை கூறியுள்ளார்.

சிவபிரான் தன்னை மதியாத தாருகாவனத்து முனிவர்களது மனநிலையைச் சோதிக்க நினைத்து ஒரு விடவுருவங்கொண்டு வீடுதோறும் சென்று இரந்துண்டு வருகையில், சிவனிடம் காதல் கொண்ட முனிவர்களின் மனைவிமார்களது கற்பைக் கெடச்செய்யவும், அதனைக் கண்டு சினம் கொண்ட அம்முனிவர்கள், ஓமத்தீயை வளர்த்து அதிலிருந்து எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, யானை முதலியவற்றைச் சிவனைக் கொன்று வரும்படி ஏவுகின்றார்கள். சிவபிரான் தன்மேற் சீறி வந்த நாகங்களை தனது அணிகலன்களாகவும், பூதங்களைத் தன்னுடைய கணங்களாகவும் கொண்டு, மானைக் கையிலேந்தி, புலியின் தோலை உரித்து, யானையின் உடலைப் பிளந்து அதன் உரியைப் போர்த்துக்கொண்டு அவற்றையெல்லாம் அடக்கிவிட்டதாகப் புராணக் கதையொன்று சிவன் யானையுரி போர்த்த சம்பவத்தைப் பற்றிக் கூறும்.

இலக்குமணனை அயோமுகி தழுவி எடுத்துச்செல்கின்ற காட்சியிலிருந்து இராமனின் பக்கமாக கம்பர் நமது பார்வையைத் திரும்ப வைக்கின்றார். தண்ணீர் எடுத்துவரச் சென்ற இலக்குமணன் திரும்பி வராததைக் கண்டு அவனைத் தேடத் தொடங்குகின்றான். விவேகம் மிகுந்தவனும், எடுத்த காரியத்தை முடிக்காமல் திரும்பாதவனுமான இலக்குமணன் இவ்வளவு நேரமாகியும் வராதது எதனாலோ என்று கலக்கமடைகின்றான். சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கருடன் போரிடச் சென்றுவிட்டானோ என்று எண்ணுகிறான். தனது கண்ணைப் போலவே தன்னுடன் கூட இருந்து எல்லா வழிகளிலும் உதவிய இலக்குமணனை இழந்து எங்ஙனம் அவனைத் தேடுவேன் என்று ஒரு வழியும் அறியாமல் வருந்துகின்றான். எத்துயரம் எனக்கு நேர்ந்தாலும் அதனையெல்லாம் போக்க வல்லவனாகிய நீஎன்னை வெறுத்துவிட்டுச் சென்றுவிட்டாயே என்று புலம்புகின்றான்.



***என்னைத் தருமெந் தையையென் னையரைப்***
***பொன்னைப் பொருகின் றபொலங் குழையாள்***
***தன்னைப் பிரிவேனுளெனாவதுதான்***
***உன்னைப் பிரியாதவுயிர்ப் பலவோ***

*கம்ப. ஆரணிய. 1106*

என்னைத் தரும் எந்தையை - என்னைப் பெற்றெடுத்த தந்தையையும், என் ஐயரைப் - என் தாய்மாரையும், பொன்னைப் பொருகின்ற பொலங் குழையாள் தன்னை - திருமகளை ஒத்தவளான பொன்னாலான காதணியை அணிந்த சீதையையும், பிரிவேன் - பிரிந்தநான், உளென் ஆவதுதான் - உயிருடன் இருப்பதென்பது, உன்னைப் பிரியாத உயிர்ப்பு அலவோ - உன்னைப் பிரியாதிருக்கின்ற உயிர்ப்பினால் அல்லவா? என்று இராமன் புலம்புகின்றான்.

இராமன் இலக்குமணனைப் பிரியாதிருந்ததால்தான் அவனுக்குத் தன் தந்தை, தாயர், சீதை ஆகியோரின் பிரிவைத் தாங்கிக்கொண்டு உயிரோடு இருக்க முடிந்தது என்பதை இச் செய்யுளில் கம்பர் வெளிப்படுத்துகிறார். மேலும் மற்றையோரிலும் இலக்குமணன் மீது இராமன் மிகுதியான அன்பை வைத்திருக்கிறான் என்பதையும் கம்பர் இச்செய்யுளில் எடுத்துக்காட்டுகிறார்.

இலக்குமணன் திரும்பி வராததால் அவனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதோ என்று எண்ணியவாறு தம்பியும் தானும் மறுபடியும் உடன் பிறப்புகளாகப் பிறக்கும்படி நல்வினை வந்து உதவினால் அப்படியே பிறந்து உயிர்வாழக் கடவோம் என்றுசொல்லி இராமன் உயிர்விடத் துணிகிறான். இப்பொழுது கம்பர் எம்மை இலக்குமணன் பக்கம் திருப்புகிறார்.

***பேர்ந்தானெடுமாயையினிற் பிரியா***
***ஈர்ந்தானவள்நாசிபிடித் திளையோன்***
***சோர்ந்தாளிடுபூ சல்செவித் துளையிற்***
***சேர்ந்தார் தலுமேதிருமாறெருளா***

*கம்ப. ஆரணிய. 1114*

இளையோன் பேர்ந்தான் நெடுமாயையினில் - இலக்குமணன் அயோமுகியின் பெரும் மாயையிலிருந்து நீங்கினான், பிரியா -அவ்வாறு நீங்கியவன், ஈர்ந்தான் அவள் நாசிபிடித்து - அயோமுகியின் மூக்கு முதலிய உறுப்புகளைப் பிடித்து இழுத்து அறுத்தான், சோர்ந்தாள் - உறுப்புகள் அறுபட்டதால் அவள் தளர்ந்து போனவள், இடுபூசல் - எழுப்பிய பேரொலி, செவித் துளையிற் சேர்ந்து ஆர்தலும் - இராமனது காதுகளிற் பட்டு ஒலித்தபோது, திருமால் தெருளா - திருமாலாகிய இராமன் கலக்கம் தெளிகிறான்.

நள்ளிரவில், நடுக்காட்டில் பெண்குரல் கேட்டபோது, அது அரக்கியர் குரல் தவிர வேறு மகளிரது குரலாக இருக்க முடியாது, இலக்குமணன் அவனை எதிர்த்த அரக்கி ஒருத்தியை வதம் செய்துவிட்டான் எனத் தெளிகிறான். இராக்கதர்களுக்கு இரவு நேரம் வலிமை அதிகரிக்குமாதலால், நடுக்காட்டில் தனியாக அகப்பட்டுக்கொண்ட இலக்குமணனுக்குத் தீங்கு விளையுமோ என்று ஐயுற்று அக்கினியாஸ்த்திரம் என்னும் நெருப்பை உமிழும் அம்பைத் தொடுக்கின்றான்.

***நெடுவரைபொடிபடநிவந்தமாமரம்***
***ஒடிவுறநிலமக ளுலைய வூங்கெலாம்***
***சடசடவெனுமொலிதழைப்பத் தாக்குமா***
***முடுகினனிராமன்வெங் காலின் மும்மையான்***

*கம்ப. ஆரணிய. 1117*

நெடுவரைபொடிபட - நெடிய மலைகள் பொடிப்பொடியாகவும், நிவந்தமாமரம் ஒடிவுற - உயர்ந்த பெரிய மரங்கள் எல்லாம் ஒடிந்து விழவும், நிலமகள் உலைய - நிலமகள் வருந்தவும், ஊங்கெலாம் சடசடஎனுமொலிதழைப்ப - எல்லாத் திசைகளிலும் சடசட என்னும் ஒலி மிகுந்து வரவும், வெங் காலின் மும்மையான் - கொடுங்காற்றின் மூன்று மடங்கான வேகத்துடன், தாக்குமாமுடுகினன் இராமன் - அயோமுகியை எதிர்த்துத் தாக்குவதற்காக இராமன் விரைந்து செல்கிறான். மலைகள் பொடிப்பொடியாவதும், பெரிய மரங்களெல்லாம்

ஒடிந்து விழுவதும், எல்லாப் பக்கங்களிலும் பேரொலி மிகு வதும் இராமன் தொடுத்த அக்கினியாஸ்த்திரம் என்னும் நெருப்பை உமிழும் அம்பினாலேயாம்.

ஊழிக்காலத்தில் பொங்கிவரும் கருங்கடலைப் போல இரா மன் வருகின்ற காட்சியை இலக்குமணன் காண்கின்றான். அவன் இராமனை நெருங்கிவந்து 'நீவருந்தாதே வருந்தாதே' என்று ஆறுதற்படுத்துகிறான்.

***வந்தனெனடியனேன் வருந்தல் வாழிநின்***
***அந்தமிலுள்ளமென் றறியக் கூறுவான்***
***சந்தமென் றளிர்புரைசரணம் சார்ந்தனன்***
***சிந்தினநயனம்வந் தனையசெய்கையான்***

*கம்ப. ஆரணிய. 1119*

வந்தனென் அடியனேன் - அடியேன் வந்துவிட்டேன், வருந்தல் நின் அந்தமில் உள்ளம் - மயக்கமற்ற உள்ளத்தை உடைய நீ வருந்த வேண்டாம். என்று அறியக் கூறுவான் - என்று இரா மனுக்குச் சொல்லிக்கொண்டு, வாழிசந்தமென் தளிர் புரைச ரணம் சார்ந்தனன் - வாழிய என்று அன்போடு வாழ்த்திக் கொண்டு, அழகிய மென்மையான தளிரை ஒத்த இராமனது அடிகளில் வீழ்ந்து வணங்கினான், சிந்தின நயனம் வந்த னைய செய்கையான் - அதனால் இராமன் தான் இழந்துபோ யிருந்த கண் மறுபடியும் வந்துவிட்டதனைப் போன்ற தன் மையை அடைந்தான்.

இலக்குமணனைக் கண்ணாகவே எண்ணியிருந்த இராமன் அவனை இழந்து மீண்டும் பெற்றதனால் போன கண் வரப் பெற்றவனைப் போன்றான் என்று கம்பர் வருணித்திருப்பது சிறப்பு. இதேபோலச் சுந்தரகாண்டத்திலும் இராமனது மோதி ரத்தைக் கண்ட சீதையைப் பற்றிக் கூறும்போது, 'உழந்துவிழி பெற்றதொரு உயிர்ப்பொறையும் ஒத்தாள்' என்று வருணிப் பதையும் இச்செய்யுளுடன் ஒப்பிட்டு நோக்கலாம்.

இலக்குமணன் வந்துசேரப் பெற்றதும் அளவிலா மகிழ்ச்சிய டைந்த இராமனது நிலைமையைக் கம்பர் இவ்வாறு வருணிக் கின்றார்.

***ஊற்றுறு கண்ணினீரொழுகநின்றவன்***
***ஏற்றிளங் கன்றினைப் பிரிவுற் றெங்கணும்***
***ஆற்றலினாற்றுவதரிதினெய்திய***
***பாற்றுறும் பனிமுலையாவின் பான்மையான்***

*கம்ப. ஆரணிய. 1120*

ஊற்றுறு கண்ணின் நீர் ஒழுக நின்றவன் - இலக்குமணனைப் பிரிந்ததனால் கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றைப்போலப் பெருகும்படி நின்ற இராமன், ஏற்று இளங் கன்றினைப் பிரி வுற்று - தனது இளமையான ஆண் கன்றினைப் பிரிந்து, எங் கணும் ஆற்றலின் ஆற்றுவது அரிதின் - தனது வல்லமை யால் எவ்விடத்திலும் தேடிக் காணமுடியாதிருந்தபொழுது, எய்திய - அக்கன்று தானே வந்து தாய்ப் பசுவிடம் சேரப்பெற, பால் துறும் பனிமுலைஆவின் பான்மையான் - பால் நிறைந்து சோர்கின்ற மடியையுடைய பசுவினது தன்மையை உடைய வனானான்.

தன் தம்பியின் பிரிவால் நீர் ஊற்றினைப்போலக் கண்ணீர் பெருக்கெடுக்க நின்ற இராமன், தன் கன்றினைப் பிரிந்த பசு அதனைத் தேடிக் காணமுடியாமல் தவிக்கும் நிலையில்,






அந்தக் கன்று தானே வந்து சேர்ந்தால் எவ்வாறு இருக்குமோ அப்படியான உணர்வைக் கொண்டவனானான் என்பது கவிக் கூற்று. ஊற்றுறு கண்ணின் நீர் ஒழுக என்று முதல் அடியில் சோகத்தால் ஏற்பட்ட கண்ணீர்ப் பெருக்கும், பால் துறும் பனிமுலை ஆஎன்னும் ஈற்றடியில் மகிழ்ச்சியால் ஏற்பட்ட கண்ணீர்ப் பெருக்கும் ஒழுக இராமன் நின்றான் என்று இரா மனின் கண்ணீருக்கு இரண்டு பொருள் கூறும் கம்பரின் கருத் தாழம் மிக்க செய்யுளின் சிறப்பை இங்கே காண்கின்றோம்.

இலக்குமணனைத் தழுவி எடுத்து மனம் நெகிழ்ந்த இராமன், நிகழ்ந்தனவற்றை அவனிடம் கேட்டறிகின்றான். இலக்கு மணன் அரக்கியின் வசப்பட்டதனால் ஏற்பட்ட வருத்தத்தை யும், அவளிடமிருந்து மீண்டுவந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி யையும் இராமன் ஒருசேரக் கொள்கின்றான்.

***பிரிபவர் யாவரும் பிரிக,பேரிடர்***
***வருவனயாவையும் வருக,வார்கழற்***
***செருவலிவீரநிற் றீருமல்லது***
***பருவரலென்வயிற் பயிலற் பாலதோ***

*கம்ப. ஆரணிய. 1125*

பிரிபவர் யாவரும் பிரிக - என்னைவிட்டுப் பிரிகின்றவர் எல் லோரும் பிரியக்கடவர், பேரிடர் வருவன யாவையும் வருக - எனக்கு வருகின்ற பெருந்துன்பங்கள் யாவும் வரக் கடவன, வார்கழற் செருவலிவீர - ஒலிக்கின்ற வீரக் கழலையும் போர்த் திறமையையுமுடைய வீரனே! பருவரல் நின் தீரும் அல்லது - எனக்கு நேரிடும் துன்பம் உன்னால் நீங்குமே அல்லாது, என்வயின் பயிலற் பாலதோ - என்னிடத்தில் தங்கிவருத்தும் இயல்புடையதோ? இல்லை என்பதாம்.

எவர் பிரிந்தாலும் எவ்வகையான துன்பம் நேர்ந்தாலும் அவை யாவும் உன்னாலே தீர்ந்துவிடும் என்று தன் தம்பியை இராமன் பலவாறு புகழ்ந்து போற்றுகின்றான். 'திண்பொருள் எய்தலாகும் தெவ்வரைச் செகுக்கலாகும் நண்பொடுபெண் டிர் மக்கள் யாவையும் நண்ணலாகும், ஒண்பொருள் ஆவதை யாஉடன்பிறப் பாக்கலாகா, எம்பியை ஈங்குப் பெற்றேன் என் னெனக்கு அரியது என்றான்' என்னும் சீவக சிந்தாமணிச் செய் யுளையும் இச்செய்யுளுடன் ஒப்புநோக்கலாம்.

பின்னர் இராம இலக்குமணர் இருவரும் ஒருமலையில் தங்கி இரவைக் கழிக்கின்றார்கள். எனினும் சீதையின் நினைவோடு இராமனுக்கு அந்த இரவு தூக்கமின்றிக் கழிகிறது. விரக தாபம் அவனை வாட்டுகிறது.

***மானவள் மெய்யிறைமறக்கலாமையின்***
***ஆனதோ வன்றெனிஅரக்கர் மாயமோ***
***கானகமுழுவதுங் கண்ணிநோக்குங்கால்***
***சானகிஉருவெனத் தோன்றுந் தன்மையே***

*கம்ப. ஆரணிய. 1132*

கானகமுழுவதுங் கண்ணின் நோக்குங்கால் - இந்தக் காடு முழுவதையும் எனது கண்கள் பார்க்கின்றபொழுது, சானகி உருவெனத் தோன்றுந் தன்மையே - சீதையின் உருவமாகவே எனக்குத் தெரிகிறதே, மானவள் மெய் இறைமறக்கலாமை யின் ஆனதோ - இது பெருமையுடைய சீதையின் மேனியை நான் சிறுபொழுதும் மறக்கமுடியாததால் உண்டானதோ? அன்றெனில் அரக்கர் மாயமோ - அல்லாவிட்டால் அரக்கர் களின் வஞ்சனையால் உண்டானதோ? என்று இராமன் கலங் குகிறான்.

உருவெளித் தோற்றத்தால் காடு முழுவதும் சீதையின் தோற்றமே இராமனது கண்களுக்குத் தெரிகிறது. சீதையின் மீதுள்ள விரகதாபத்தால் இராமன் அந்த இரவு முழுவதும் பலவாறு எண்ணி வருந்துகின்றான். இத்துடன் அயோமுகிப் படலம் முற்றுப்பெறுகின்றது. பொழுது விடிந்து சீதையைத் தேடிப் புறப்படும் இராம இலக்குமணர்கள் அடுத்து என்ன எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதை அடுத்துவரும் இதழில் கம்பரின் கவிநயத்தோடு சுவைத்து மகிழக் காத்தி ருப்போம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 132

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**




## தமிழ்வலை-132 வினா

### இடமிருந்து வலம்

1 ஒரு குறளின் தொடக்கம்

5 வாருங்கள்

6 அறிவிலிகள்

7 அதிர்ச்சியடை

8 படி

9 ஒரு வனவிலங்கு

11 மாலுமி

12 புதுமைப்பித்தனின் பேர்போன கதை

15 மேலதிகம்

16 வேப்பம்வடை

17 அதிரடி மாற்றம்

### மேலிருந்து கீழ்

1 பாக்கு நீரிணையை முதன்முதல் நீந்திக் கடந்த சாதனையாளர்

2 ஆசான்

3 ஓர் உலோகம்

4 ஓர் இயல்

6 ஒரு பிரித்தானிய நகரம்

9 முடியரசுமுறை

10 புனுகுப்பூனை

11 ஓர் இராசி

13 எதிரிகள்

14 ஒரு சிற்றுண்டி

17 உலகு

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-131-க்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வெ | கு | ■ | 2 வ | ட | 3 க | ம் | ■ | ■ | 4 வை | கோ |
| ன் | ■ | ■ | ■ | ■ | டை | ■ | ■ | 5 த | ■ | ட |
| கோ | ■ | 6 வெ | ள் | ளி | ப் | 7 பா | த | ச | ர | ம் |
| ட் | ■ | ங் | ■ | ■ | 8 மி | ரி | ■ | ர | ■ | பா |
| ட | ■ | கி | ■ | 9 நா | டி | ■ | ■ | த | ■ | க் |
| ம் | ■ | ணை | ■ | க | ■ | 10 ஆ | த | ன் | ■ | க |
| ■ | 11 பொ | த் | து | வி | ல் | ■ | ■ | ■ | ■ | ம் |
| ■ | ■ | தி | ■ | கா | ■ | 12 வ | ■ | 13 கு | ■ | ■ |
| ■ | 14 ஏ | ■ | 15 வ | ரை | யா | து | வ | ழ | ங் | கு |
| ■ | 16 கு | வை | ■ | ■ | ■ | வை | ■ | வி | ■ | ■ |

## தமிழ்வலை-131 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

கனகராஜா சிவகுரு, வவுனியா.
ஜெனியா, ஏஜெக்ஸ்
நேசன் சபாராணி, பிரான்ஸ்
ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ.
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து
த.செ. நடராசா, ரொறன்ரோ.
உமா கதிர், ஏஜெக்ஸ்

### பரிசுபெறும் போட்டியாளர்

**சின்னத்தம்பி பார்வதி,**
**வவுனியா,**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# சுந்தரப்பா

**- பஞ்சகல்யாணி -**

பனை நாரால் வரிந்து கட்டிய தென்னம்பாளைக் கட்டைத் தலையிற் சுமந்தபடி ஒய்யாரமாய் நடந்து போய்க் கொண்டிருந்தார் சுந்தரம். பாளைக் கட்டுக்குள் தெருவில் எடுத்த தேங்காயோ, அல்லது ஈச்சம் பழக்குலையோ, சிலவேளை தேன் வதையோ கூட இருக்கும். அதோட... ஒரு செம்பும் அவர் வைத்திருப்பார். காட்டிலிருந்து வீட்டிற்குப் போற வழியில் பறுவதம் அக்கா வீட்டுத் திண்ணையில் குந்துவது அவர் வழமை.

பறுவதம் அக்கா ஆக்கள் ஊரிற் 'பெரியாக்கள்'. எடுபிடிகள் வைத்து வாழ்ந்து வந்தவை. பறுவதம் அக்கா வீட்டுத் திண்ணை முகப்பில் சுந்தரத்தோட வழமை பறையப் பெண்கள் கூட்டம் குந்திக் கொண்டிருக்கும். சுந்தரமும் சுமையை இறக்கி வைத்துவிட்டுத் தன்ர மொட்டைத் தலையைத் தடவித் தடவிக் கதைகள் சொல்லிக் கொண்டிருப்பார். ஊரார் அவரைப் 'பெண்டுகள் சுந்தரம்' என்றும் சொல்லுவர். ஊர்ப்புதினங்கள் எல்லாம் அலசுப் படும். இடையில தன்ர செம்பைக் கொடுத்துப் பறுவதம் அக்காட்டைத் தண்ணியும் வாங்கிக் குடிப்பார் சுந்தரம்.

போகும்போது சுந்தரத்திற்குப் பறுவதம் அக்கா கொஞ்சம் எலுமிச்சம்பழம், மோர் மிளகாய் கொடுத்துவிடுவா. சுந்தரமும் பறுவதம் அக்கா வீட்டுப் பிள்ளைகளிற்கு நொங்கு (நுங்கு) வெட்டிக் கொடுப்பார். பனம் பூரான் வெட்டிக் கொடுப்பார். காட்டில் விழுந்து கிடக்கிற இறகுகளையும் பொறுக்கிக் கொண்டந்து கொடுப்பார். மயில் இறகிற்குத்தான் பிள்ளைகள் சண்டை பிடிப்பர். அவர்கள் 'சுந்தரப்பா! சுந்த ரப்பா!' என்று அவரோடு நல்ல வாரப்பாடு.

வயசு போன காலத்திலயும் சுந்தரம் தன்ர வேலைகளைத் தானே பார்த்துக் கொண்டிருந்தார். தோலெல்லாம் சுருங்கிக் காறை எலும்பு குழியாகிப் போய் இருந்தது. கண் ணொன்றும் பார்வையிழந்திருந்தது. சிறு குழந்தைகள் வேப் பமரத்தடியில் சுந்தரத்தை இருத்திக் காறை எலும்புப் பொந்துக்குள் மண்ணைப் போட்டுத் திருநீற்றுப் பொந்தென்று கூறி விளையாடினர். சுந்தரம் அவர்களுடன் சீறிச் சினந்த தில்லை. பொறுமையாக விளையாடினார். மணலில் படங்கள் கீறிக் காட்டினார். அவருக்கு எழுதத் தெரியாது. படிக்கவும் இல்லை.

சுந்தரத்தை ஊரில் யாரும் வெறுத்ததில்லை. அவரும் யாருடனும் சோலிசுறட்டுக்குப் போனதில்லை. குடிவெறி என்ற எந்தக் கெட்ட பழக்கமும் அவருக்கில்லை.

சுந்தரத்துக்கு இயல்பாகவே ஒரு கீச்சுக் குரல் அமைந் திருந்தது. சிறுவர்களிற்கு அது கொஞ்சம் சிரிப்பைத்



tg.theeban@gmail.com

தந்தது. 'என்ன சுந்தரப்பா இடுப்பில சீலையைக் கட்டியிருக் கிறியள்? நெற்றியில பொட்டுப் போட்டிருக்கிறியள், நீங்கள் பெம்பிளையோ?' என்று பெடிப்பிள்ளைகள் அவரைச் சீண்டுவது வழமை.

அன்றும் அப்படித்தான் அவரைப் பார்த்துப் பெடியள் சொல்லிக் கொண்டு நிற்க அந்த வழியாலை வந்த பாக்கியம் அக்கா 'ஓடுங்கடா! குறுக்கால போனவங்களே' என்று சுள்ளித்தடி எடுத்துத் துரத்திக் கொண்டு நின்றா.

நானும், 'என்னவாமணை சுந்தரப்பா?' என்று கேட்க...

'உந்தச் சின்ன முளையானுகளுக்கு என்னோட ஒரு சேட்டை' என்றபடி கடைச் சாமான்களைக் கீழ வச்சிட்டு வேப்பமர நிழலில குந்தினார் சுந்தரம்.

எனக்கும் ஆர்வக் கோளாறு 'எங்கை உங்கட பிள்ளை குட்டிகள்?' என்று பேச்சைத் தொடங்கினன். ஒன்றுமே கேட்காதது போல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம் பெருமூச்சொன்று விட்டார்.

'நீ ஆற்றை பிள்ளையோ எனக்குத் தெரியாது, என்னோட வாரப்பாடாய்க் கதைக்கிறாய், அதால நான் உனக்குச் சொல்லுவன்; என்ர மாதா - பிதா ஆரெண்டே எனக்குத் தெரியாது. ஏதோ... கொள்ளை நோயில இரண்டு பேரும் நான் குழந்தையாய் இருக்கேக்கயே போட்டினமாம். இராசம்மா அம்மா வீட்டிலதான் நான் வளர்ந்தேனாம். அறிவு தெரிந்த நாளில இருந்து அவைக்கு ஆடு மேய்ச்சிருக்கிறன்.

ஆடு மேய்க்கிறது எனக்குச் சரியான விருப்பம். காடு கரம்பையெல்லாம் சுத்தித் திரியலாம். காட்டுக்கை என்ன வெல்லாம் இருக்கும்! விதம் விதமான பறவைகளும் கூடுகளும், பாய்ந்து ஓடும் முயல்கள், உடும்புகள், பாம்புகள், காட்டுப் பன்றி, தேவாங்கு, நரி என்று பலவற்றைக் காணலாம்.

காட்டுப் பழங்கள்தான் என் பசியைப் போக்கின. சோத்துப் பழம், ஈச்சம் பழம், நாவற்பழம், மரமுந்திரிப்பழம், அணிஞ்சில், நாகதாளி என்று நல்ல பழங்கள். தண்ணி விடாய்ச்சால் ஆட்டுப் பாலையும் கறந்து குடிச்சிருக்கிறன். வீட்டுக்கு வரேக்க சின்னச் சுள்ளி விறகுகளைக் கட்டித் தலையில சுமந்து வருவன். அதை இராசம்மா அம்மா தேத்தண்ணி போடப் பாவிப்பா. அதைவிட இலுப்பங்கொட்டை, மஞ்சாடிக் கொட்டையெல்லாம் பொறுக்குவன்.'

'இராசம்மா அம்மா வீட்டில எல்லாரும் பெட்டைகள். அவையின்ர அளவில்லாத பாவாடை சட்டைகளைத்தான் எனக்குப் போடத்தருவினம். இரவில அதைத்தான் போட்டுக் கொண்டு ஆட்டுக் கொட்டிற் பக்கம் இருந்த சாய்ப்பில பனம்மட்டையால வரிஞ்ச பரண் ஒன்றில படுப்பன். பரணில இராசம்மா அம்மா பழைய சீலைகளை மடிச்சுப் போட்டிருப்பா, உடம்பில மட்டை அண்டாது. ஒரு நாள் கூட நான் பரணில யிருந்து கீழே விழுந்ததில்லை. மாரி காலத்தில தூவானம் அடிக்கும், பன்னாங்கு கட்டிவிடுவினம். அடைமழை என்றால் இராசம்மா அம்மா வீட்டுக் கதவோடை அண்டிக் கொண்டு படுப்பன்.

வளர்ந்தாப் போல இராசம்மா அம்மா தங்கட சொந்தக்காரர் பறுவதம் அக்காவையிட்ட என்னை அனுப்பீட்டா. அவையின்ர தென்னந்தோப்பைப் பராமரிக்கிறதுதான் என்ர வேலை. எனக்கு கூட்டாளிகள் ஆரும் இல்லை. நானும் ஆரோடையும் சேரேல்ல. பள்ளிக்கூடமும் போகேல்ல. பள்ளிக்கூடத்தில பால், பிஸ்கற் எல்லாம் குடுக்கிறாங்களாம் என்று கேள்விப் பட்டு பள்ளிக்கூடம் போகோணும் என்று சின்னனில கொஞ்ச நாள் அடம்பிடிச்சனான். ஆனால் போகக் கிடைக்கேல்ல.

என்ர உலகம் வித்தியாசம். எப்பவுமே நான் கனவு கண்டு கொண்டிருப்பன். சத்தியவான் சாவித்திரியில வந்த சாவித்திரியில எனக்கு நல்ல விருப்பமாப் போச்சு. பட்டுச் சேலை கட்டிக் கூத்து ஆடுமாப் போல எல்லாம் கனவு வந்திருக்கு.

இளமைக் காலத்தில சீலை கட்ட முன்னம் நான் ஒழுங்கையால நடந்து போகப் படலைக்குள்ள ஒளிச்சிருந்து பார்த்த பெண்கள் கனபேர். சுந்தரம் என்ற பெயரிற்கேற்ப ஓர் அழகனாகவே இருந்தேன். ஆனால் நான் கலியாணம் செய்து கொள்ளவே இல்லை. பிறகெங்காலை எனக்குப் பிள்ளைகுட்டி?' என்று என்னைப் பார்த்தார் சுந்தரம்.

'சின்னனிலை பாவாடை சட்டை போட்டதோ என்னமோ எனக்குச் சீலை கட்ட ஆசை வந்திட்டுது.

பெம்பிளை மாதிரி வெளிக்கிட விருப்பமாய் இருந்திச்சு. ஒரு நாள் நான் பறுவதம் அக்காட்டை சீலை வேணும் என்று கேட்க, அவ என்னை ஏற இறங்கப் பார்த்திட்டு 'நான் நினைச்சது சரிதான், இந்தா! இந்த இரண்டு சீலையையும் கொண்டு போ, நீ தென்னந் தோப்புக் கொட்டிலிலயே சமைச்சுச் சாப்பிட்டு அங்கயே படு, உன்ர பாதுகாப்பை நீயே பார்த்துக்கொள்' என்று அனுப்பிவிட்டா. அண்டையில இருந்து வருசக் கணக்கில அங்கதான் இருந்தன்.

இப்பவல்லோ எனக்கு மொட்டை, அப்ப நான் தலைமயி ரெல்லாம் வளர்த்துக் கொண்டையெல்லாம் போட்டிருப்பன். சிலவேளை பின்னியும் விடுவன். தோப்பில இருந்த கிணற்றில அடிக்கடி எட்டிப் பார்த்து என் அழகை நானே இரசிப்பன்.

தோப்பில தென்னங்கள்ளிறக்க வாற வேலனுக்கு என்னில ஒரு நாட்டம். எனக்கு ஒரு முகம் பார்க்கிற கண்ணாடி வாங்கித்தந்தான். அப்பப்ப சின்னச்சின்னச் சாமானுகள் வாங்கித் தருவான். என்னில அன்பாயிருந்தான்.

ஒருமுறை ஊரில பெரிய வட்டிக்காரன் தோப்புக்கை இறங்கீட்டான். 'அடேய் அலி! நீ இண்டைக்கு என்னோட வாவன் என்று' என்ரை கையைப் பிடிச்சிட்டான். எனக்கு ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சு. நல்ல காலத்துக்கு வேலன் பாளைக் கத்தியோட வந்து அவனைப் பேசித் துரத்திவிட்டான்.

அப்பத்தான் பக்கத்தில இருக்கிற இந்தியாவில என்னைப் போல ஆக்கள் படுற கஷ்டங்களை எல்லாம் அவன் கேள் விப்பட்டதாகச் சொன்னான்.

என்னைக் கவலைப்பட வேண்டாம் என்றும் தான் எனக்காக இருக்கிறன் என்றும் ஆறுதல் சொன்னான். அதுக்குப் பிறகு

இரவில சின்னச் சத்தம் கேட்டாலே எனக்குப் பயம். வட்டிக் காரனுக்குப் பிறகு யாரும் வரவில்லை. குரங்குகள்தான் தாவிக்கொண்டு திரியுங்கள்.

உண்ணாணைச் சொல்லப் போனால் இப்ப இவங்கள் பழிக்கிற போல அப்ப இல்லை. நானும் இவளவுதான் வாழ்க்கை என்று அந்தத் தோப்புக்கையே கனகாலம் இருந்திட்டன். கோயில் குளம் எண்டால் இராத்திருவிழாக்குப் போயிருக்கிறன். சின்னமேளமெல்லாம் பார்த்திருக்கிறன்.

வேலன் சில நாட்களில தோப்புக்கை தங்கிச் செல்லுவான். சில வருசங்களில வேலன் ஏதோ வருத்தம் வந்து செத்துப் போனானாம் என்று அறிந்து நெஞ்சு வெடித்து அழுதேன். தோப்புத் தென்னைமரங்கள்தான் என் சோகம் அறியும்.

பிறகு எனக்கும் வயசு போய் பெரிய வேலைகள் செய்யேலாமற் போட்டுது. பறுவதம் அக்காட்டை சொல்லீட்டுத் தென்னந் தோப்பை விட்டிட்டுப் பனங்காணிக்குள்ள ஒரு கொட்டில் போட்டு இருந்தன். இப்பவும் அங்கதான் இருக்கிறன்.

கோதுமை மாவைக் கரைச்சு அதுக்குள்ள வெங்காயம், பிஞ்சு மிளகாய், உப்புப் போட்டுத் தோசை போலச் சுடும் கரைச்ச ரொட்டிதான் என்ர நாளாந்த உணவு.

பகற்பொழுதுகளில பனங்காய் பிழிந்து பனாட்டுப் பாயில் தடவிக் காயவிடுவன். காய்ந்த பனாட்டுகளை வெட்டி மடித்துப் பானையில கட்டி வைத்துப் பாதுகாத்து, மழை காலங்களில உண்பன். பறுவதம் அக்காவிற்கும் ஒரு பங்கு கொடுப்பன். பனம்பாத்தி போட்டுக் கிண்டி, ஒடியல் புழுக் கொடியல் செய்து எனக்கு வைத்துக் கொண்டு ஆட்களிற்கும் விற்பன். இப்ப புழுக்கொடியல் சப்ப எனக்குப் பல்லில்லை.

இரவென்றால் கைவிளக்கை அணைத்துவிட்டு, ஒரு நெருப்புப் பெட்டியோடை, கொட்டிலின் ஒரு மூலையில, உரப்பை ஒன்றைப் பாயாக்கித் தலைக்குக் கை வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ளுவன். மழைகாலத்தில வெள்ளம், ஒழுக்கென்றால் வேளைக்கே கோவிலடியில ஒதுங்கிக் கொள்ளுவன்.’ என்று நெடுமூச்சுவிட்டார் சுந்தரம்.

எனக்கும், என் பலநாட் கேள்விகளுக்குப் பதில் கிடைத்த திருப்தி, ‘அப்ப நான் வாறனணை, கவனமா வீட்டை போங்கோ சுந்தரப்பா’ என்று விடைபெற்றேன்.

ஒரு மாரி காலப் புயலில் காணிக்குள் நின்ற பனையொன்று சுந்தரத்தின் கொட்டிலின் மேற் சரிந்து விழுந்து அவரின் உயிரைத் தின்றது. செய்தி ஊரில் தீயாய்ப் பரவியது. ‘சுந் தரம்! தம்பீ! என்ர இரத்தமடா நீ’ என்று ஒப்பாரி வைத்தபடி வந்தார் பறுவதம் அக்கா.



Panchakalyany@thaiveedu.com



சுடரி சிவகௌரி



tg.theeban@gmail.com

# இயந்திர உலகு

அந்தப் பரபரப்பான நகரத்தின் மத்தியில், ஒதுக்குப்புறமாக இருந்த அந்த சிறுவர் பூங்காவின் ஓரத்தில் நின்ற மரத்தின் கீழ், எங்கும் செல்லாமல் அங்கேயே நிரந்தரமாக இருக்கும் அந்த சீமேந்து இருக்கையில் வந்து அமர்ந்த சுந்தரம் நகரத்தைப் பார்த்தார். அது வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அவருக்கும் ஆசையாகத்தான் இருந்தது. தானும் அந்த ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று. ஆனால் காலம் அவரை ஓரம் கட்டி விட்டிருந்தது. இனி எங்கு போவது? சென்றடைய வேண்டிய இடம் எது? எனத் தெரியாமலேயே அலைந்து திரிந்து களைத்து விட்டவரது வெறித்த பார்வை இலக்கின்றி ஏதோ ஒரு புள்ளியில் குத்திட்டு நின்றது.

காலையில் வீட்டில் இருந்து கிளம்பும் போதே இன்று எப்படியாவது ஒரு வேலை தேடி விட வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் வந்தார்.

ஏதாவது வேண்டுமா? என்று மனைவியைக் கேட்கவில்ல.

என்ன வேண்டும் என்று அவளும் சொல்லவில்லை.

அங்கே எதுவுமே இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

அதைச் சொல்லிப் பயனில்லை என்று அவளுக்கும் தெரியும்.

வெறும் வயிற்றில் நீரைப் பருகி விட்டு வந்தவர் மதியம் கடந்தும் அந்த வெறும் வயிற்றுடனேயே அமர்ந்திருந்தார். இருபத்தைந்து வருடங்கள் ஓடி ஓடி உழைத்தவரது உழைப்பினை தின்று தீர்த்து விட்டிருந்த அந்த நிறுவனம் இன்று அவரை வெறுங்கையுடன் வெளியே அனுப்பியிருந்தது. அவரது ஒட்டு மொத்த வாழ்க்கையின் வரும்படியைக் கொண்டு வளர்த்து ஆளாக்கி விட்ட பிள்ளைகள் அவரவர் வாழ்வைப் பார்த்துக் கொண்டு சென்றுவிட்டனர். கடைசியாக நிறுவனம் கொடுத்த நிதி உதவியும், அவ்வப்போது பிள்ளைகள் கைச்செலவுக்கு கொடுக்கும் பணமும் மனைவியின் மருந்துச் செலவுக்கே போதுமானதாயிருக்கவில்லை. ஆசைக்கு இல்லாவிடினும் உயிர்வாழவாவது ஒரு நேரம் உணவு உண்பது என்பது பெரும் போராட்டமாகி விட்டிருந்தது. தட்டச்சுடன் தொடங்கிய அவரது வாழ்க்கை, தட்டச்சுடனேயே முடிந்து விட்டிருந்தது. கணினி மயமாகத் தொடங்கியிருந்த நவீன உலகில் அவரது தட்டச்சின் வேகத்தால் ஈடுகொடுக்க முடியவில்லை. தூக்கத்தில் கூட ஒரு எழுத்துப் பிசிராமல் தட்டச்சுச் செய்யத் தெரிந்த அவருக்கு அதை தவிர வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை. வேலையை விட்டு வெளியேற்றப்பட்டபோது அவரது அத்தனை வருட அனுபவமும் அந்த தட்டச்சு இயந்திரத்தைப் போலவே ஓரங்கட்டப்பட்டுவிட்டது. வேறு எங்கும் அவரது தட்டச்சு வேலைக்குத் தேவை இருக்கவில்லை. தேவைக்கேற்றவாறு தனது திறனை வளர்த்துக் கொள்ள அவராலும் முடியவில்லை. திசையறியா ஓடம் போல் அவரது வாழ்க்கை தத்தளித்துக் கொண்டிருந்தது.

‘வணக்கம் ஐயா!’

இலக்கின்றி எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம், அருகில் வந்து நின்ற மனிதரை நிமிர்ந்து பார்த்தார்.

அறுபது வயது மதிக்கத்தக்க முதியவர். கையில் ஒரு கோவையோடு நின்றிருந்தார். எதுவும் பேசாது அமர்ந்திருந்த சுந்தரத்தைப் பார்த்தவர் ‘எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா’ என்று தயங்கித் தயங்கிக் கேட்டார்.

தான் இருக்கும் நிலையில் அவருக்கு என்ன உதவி செய்ய முடியும், என்ற யோசனையோடு ‘சொல்லுங்கோ, முடிந்தால் செய்யுறேன்’ என்று நிமிர்ந்து உட்கார்ந்தார் சுந்தரம்.

‘இந்த படிவங்களைக் கொஞ்சம் நிரப்பித் தர முடியுமா? எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அந்த வங்கியில் அரசாங்க உதவிக் காசு எடுக்கணும்’ என்றபடி சில படிவங்களைக் கொடுத்தார்.

அவற்றை வாங்கிப் பார்த்தவர், பசியில் மங்கியிருந்த பார்வையைக் கூர்மையாக்கி நடுங்கிய விரல்களை இறுக்கிப் பிடித்து படி பெரியவரிடம் ஒவ்வொரு விபரமாகக் கேட்டுக் கேட்டு ஒருவாறு அதனை நிரப்பிக் கொடுத்து விட்டு அந்த இருக்கையில் சாய்ந்து படுத்துக் கொண்டார். நன்றியுடன் அவரைப் பார்த்த பெரியவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, தன் பையைத் துழாவி ஒரு ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து சுந்தரத்தின் கையில் வைத்து விட்டுச் சென்றார்.

ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்து நின்ற சுந்தரத்தின் மனதில் மின்னல் வெட்டியது போல் ஒரு எண்ணம் தோன்றியது. உள்ளத்தில் உற்சாகம் பீறிட்டு வர, துள்ளிக் குதித்து எழுந்தவர் வேகமாக தான் வேலை செய்த நிறுவனத்தை நோக்கி நடந்தார்.

தன் முன்னால் வந்து நின்ற சுந்தரத்தைப் பார்த்த முதலாளி, கேள்வியோடு நெற்றியைச் சுருக்கினார். 'அதுதான் உன்னைக் கணக்கு முடித்து அனுப்பி விட்டாச்சே, பிறகு எதுக்கு இங்க வந்து நிற்கிறாய்?' என்று கேட்பது போல் இருந்தது அவரது பார்வை.

‘வணக்கம் முதலாளி’

‘ம்’

‘எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்’

'என்ன?' என்பது போல் அவர் சுந்தரத்தைப் பார்த்தார்.

‘என்னைப் போல் தானே நான் வேலை செய்த தட்டச்சு இயந்திரமும் இப்போ சும்மா கிடக்குது. அதை எனக்குத் தர முடியுமா? நான் அதுக்குரிய காச பிறகு தாறன்’

எந்தப் பயனுமின்றி இடத்தை அடைத்துக் கொண்டு அலுவலகத்தின் மூலையில் சும்மா கிடந்த தட்டச்சு இயந்திரத்தின் மீது அவரது பார்வை சென்றது. 'இதை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. சும்மா கிடக்கிறதுக்கு சுந்தரத்தின் தலையில் கட்டி விடலாம்' என எண்ணியவர் அதை எடுத்துச் செல்ல சுந்தரத்தை அனுமதித்தார்.

இத்தனை நாள் தன்னை விட்டுப் பிரிந்திருந்த ஒரு குழந்தையை அணைப்பது போல் கண்ணீரோடு அதனை அள்ளி எடுத்து தோளில் வைத்துக் கொண்ட சுந்தரம் ஒரு மன்னனைப் போல் வீர நடையோடு வீடு நோக்கிச் சென்றார்.

இன்றிலிருந்து அவர் ஒரு தொழிலுக்குச் சொந்தக்காரர். இனி அவரது உழைப்பு அவருக்கு மட்டும் சொந்தம். நாளையிலிருந்து அந்தப் பூங்காவின் மரத்தடியில் உள்ள சீமேந்து இருக்கையில் சுந்தரத்தின் தட்டச்சு இயந்திரத்தின் ஓசை கேட்டுக் கொண்டிருக்கும்.

கணினிகள், கைப்பேசிகள், இணையம், செயற்கை நுண்ணறிவு உலகம் இன்னும் புதிது புதிதாக மாறிக்கொண்டிருந்தது. ஆனால் அந்த மாற்றங்களின் ஓரத்தில், மனிதர்களுக்கிடையிலான ஒரு சிறிய தேவைக்காக, ஒரு பழைய தட்டச்சு இயந்திரம் மீண்டும் உயிர்பெற்றிருந்தது.

அதன் ஒவ்வொரு தட்டும் ஒலியும் ஒரு செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தது.



sivagowry@thaiveedu.com

# முலையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை–19

– மா. சித்திவினாயகம்




நெடுந்தீவின் மணற்பரப்பில் மோதுகின்ற அலைகளின் ஓசை என்றுமே அமைதியானது அல்ல. அது இந்த மண்ணின் பூர்வகுடிகள் காலங்காலமாகப் போராடி வாழ்ந்த கம்பீர முழக்கம். ஆனால், இன்று அந்த ஓசையில் மரண பயமும், ஆழமான வலியும் கலந்திருந்தது.

கிழக்கே சூரியன் மெல்ல எட்டிப்பார்த்த அதிகாலையிலேயே, பனங்கிழங்குப் பாத்திகளுக்குத் தண்ணீர் ஊற்றக் கிளம்பியிருந்தார் எண்பத்தைந்து வயதான பெரியவர் கதிரவேலு. அவரது உடம்பில் ஓடியது தூய உழைப்பின் ரத்தம். நூறு வயதிற்கு மேலும் நோய் நொடியின்றி வாழும் நெடுந்தீவு ஜாம்பவான்களின் பரம்பரை அவருடையது. கதிரவேலு ஒரு பரம்பரைப் பரியாரி. வைத்தியசாலைகள் இல்லாத அந்தத் தீவில், தேரையரின் வாகடச் சித்த வைத்தியத்தை மனப்பாடம் செய்து, தலைமுறை தலைமுறையாக கடத்தி வரும் இந்தப் பரியாரி குடும்பத்தினர்தான் அவ்வூரின் முத்திரை பதித்த மருத்துவ வித்தகர்கள்.

நோயாளியின் நாடியைப் பிடிக்காமலேயே, வெறும் கை முத்திரைகளை வைத்தே நோயடக்கும் அபூர்வக் கலை அவருக்கு அத்துபடி. ‘வருடத்திற்கு இருமுறை பேதி மருந்து குடித்து உடலைச் சுத்தப்படுத்த வேண்டும்’ என்பதும், அதனால் தான் உடலில் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று தாதுக்களும் சமநிலையில் இருக்குமென்பதும், இதில் பித்தத்தின் உறைவிடம் வயிறு மற்றும் குடல் என்றும், பித்தம் அதிகரிக்கும் போது உடலில் பல நோய்கள் ஏற்படுவதால் பேதி மருந்து கொடுப்பதன் மூலம் இந்த அதிகப்படியான பித்தம் உடலை விட்டு வெளியேற்றப்பட்டு, தாதுக்கள் சமநிலைக்கு வருகின்றன என்கிற வாழ்வியல் நெறிகளைத் தீவு மக்களுக்குக் கற்றுக்கொடுத்து சுகவாழ்வு போதிக்கின்ற ஆசான் அவர்.

ஆனால், இன்று அவர் முகத்தில் இனம் புரியாத சோகம் கவிழ்ந்திருந்தது. அவர் வளர்த்து வந்த கால்நடைகளின் அலறல் தீவெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. 1520-ஆம் ஆண்டு வாக்கில் போர்த்துக்கேயர்கள் இங்கு வந்தபோது, இந்தத் தீவில் பெருகிக் கிடந்த கால்நடைகளைக் கண்டு வியந்து, இதற்கு 'பசுத்தீவு' (Ilha das Vacas) என்று பெயரிட்டனர். போர்த்துக்கேயர்கள் நூறு ஆண்டுகள் இங்கிருந்து, கோவில்களை இடித்து நிலப்பரப்பைக் கைப்பற்றி தம் வர்த்தகத்தில் அதிக ஆர்வம் காட்டினர். அவர்களுக்குப் பின் வந்த டச்சுக்காரர்கள் இந்த நெடிய அழகான தீவிற்கு தங்கள் ஊரின் பெயரான டெல்வ்ற் என்று பெயரிட்டு தங்கள் கோட்டையை எழுப்பித் தம் செல்வாக்கை விரிவுபடுத்தினர். அதற்குப் பிறகு நாட்டைப் பிடித்த, இன்றைய ஆளும் பிரிட்டிஸாரோ ‘உள்ளூரவர்க்குச் சேவையாற்றவே நாங்கள் பிறந்தோம்’ என்கிற தந்திர வாசகத்தோடு காய்களை நகர்த்தினார்கள்.

கதிரவேலு கையில் இருந்த தண்ணீர் வாளியைக் கீழே வைத்தார். அவரது நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. தூரத்தில் பிரித்தானியப் படையினர் குதிரைகளில் வேகமாக வந்துகொண்டிருந்தனர். அவர்களின் கைகளில் இருந்த துப்பாக்கிகள், வாட்கள், சவுக்குப் பிரம்புகள் நெடுந் தீவின் பூர்வகுடி மாடுகளையும், கம்பீரமான காட்டுக் குதிரைகளையும் குறிவைத்தன. அவற்றை கட்டி இழுத்து பாரிய படகுகளில் ஏற்றுமதியாக்குவதில் முனைப்போடு இருந்தார்கள் அவர்கள்.

கதிரவேலரின் கண்ணெதிரிலேயே பிரித்தானிய அதிகாரி ஒருவன் சவுக்கால் ஒரு பசு மாட்டை ஓங்கி அடித்தான். வலி

தாங்காமல் அது கத்திய சத்தம் கதிரவேலுவின் இதயத்தைக் கிழிப்பது போலிருந்தது.

'நிறுத்துங்கள்!' என்று சத்தமிட்டபடி கதிரவேலு முன்னோக்கிப் பாய்ந்தார். எண்பத்தைந்து வயது உடம்பில் எங்கிருந்துதான் அந்த வேகம் வந்ததோ தெரியவில்லை.

அதிகாரி குதிரையை நிறுத்தி, கதிரவேலுவை அலட்சியமாகப் பார்த்தான். 'கிழவா, வழிவிடு! இந்தத் தீவின் குதிரைகளும் மாடுகளும் இனி எங்கள் கிழக்கிந்தியக் கம்பனிக்குச் சொந்தம். எங்களை எதிர்த்தால் இந்த மண்ணில் உனக்குச் சமாதிதான்' என்று ஆங்கிலத்தில் கத்தினான். அவனோடு வந்த மொழிபெயர்ப்பாளன் அதைத் தமிழில் கூறினான்.

கதிரவேலுவின் கண்கள் சிவந்தன. 'இந்த மிருகங்கள் எங்களின் உடன்பிறப்புகள். நீங்கள் உங்கள் சுய இலாபத் திற்காக இவற்றை அழிக்கப் பார்க்கிறீர்கள். எங்களை மீறி உங்களால் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது!' என்றார் மிடுக்கான குரலில்.

அதிகாரி கோபத்துடன் துப்பாக்கியை எடுத்து கதிரவேலுவின் நெற்றிப் பொட்டில் வைத்தான். கூடி நின்ற தீவு மக்கள் ஸ்தம்பித்து நின்றார்கள். அலைகளின் ஓசைகூட ஒரு கணம் நின்றாற்போல் இருந்தது.

கதிரவேலு பயப்படவில்லை. மாறாக, தனது பரியாரிக் கலைக்குரிய விசேஷ கை முத்திரை ஒன்றை ரகசியமாகச் செய்தார். அது எதிரியின் மனதை அடக்கும் ஒரு வர்மக் கலை. அதே விநாடி, பிரித்தானிய அதிகாரி ஏறி வந்த குதிரை திடீரென மிரண்டு, கனைத்துக்கொண்டு பின் கால்களால் எழுந்து உதறியது. நிலை தடுமாறிய அதிகாரி தரையில் குப்புறத் தூக்கி வீசப்பட்டான். துப்பாக்கி கைநழுவி மணலில் விழுந்தது.

இவன் என்ன மந்திரவாதியோ ?

சுற்றிலும் இருந்த பிரித்தானிய சிப்பாய்கள் பதற்றமடைந்து கதிரவேலுவைச் சூழ்ந்துகொண்டனர். காலாதிகாலமாகப் போராடிய பூர்வகுடிகளின் வீரம் கதிரவேலுவின் கண்களில் மின்னியது. நெடுந்தீவின் வரலாற்றில் மற்றுமொரு போருக்கான அஸ்திவாரம் அன்று அதிகாலைப் பொழுதில் ஆரம்பமானது.

வெள்ளைத்துரையை உள்ளூர் அடிமை வீழ்த்திவிட்ட செய்தியைக் கேட்ட ஆளுநர் நோலனுக்கு மிகுந்த ஆத்திரம். கட்டி இழுத்து வாருங்கள் அந்த நாயை என்று உத்தரவோடு தானே கயிறெறிந்து கயிற்றில் கதிரவேலரைப் பிணைத்து தெருத் தெருவாக இழுத்து வெட்டுக்கழிக்கு கொண்டு வந்தான்.

வந்தேறிய வெள்ளையர்கள் இலங்கையடங்கிலும் கோப்பி, தேயிலைத் தோட்டங்களையமைத்தார்கள். சணல் பயிரிட்டார்கள், சுரங்கங்கள் தோண்டினார்கள். இரத்தினக் கற்களையும், வைரக் கற்களையும் சூறையிட்டார்கள். அவர்கள் அடிமைப்படுத்திய தேசங்களிலிருந்து செல்வங்களை அள்ளிச் செல்ல ஊரவர்களைக் கொண்டே பாதையமைத்தார்கள். அது உள்ளூரவரின் போக்குவரத்திற்கு உதவ தாம் அமைக்கிற பாரோபகாரம் என்று கதைவேறு புனைந்தார்கள். தம் அதிகாரத்தை நிலைநாட்ட தம் மொழி பேசத் தெரிந்தவர்களை மேலும் படிப்பிப்பதாகக் கூறித் தங்கள் அடிமைகளாக உருவாக்கினார்கள். அவர்களுக்கு அதிகாரங்களை வழங்கி உள்ளூரவர்களை அவர்களைக் கொண்டு அடிமையாக்கி தங்கள் காரியம் சாதித்தார்கள்.

இப்படியெல்லாம் இந்த தீவகத்தைச் சூறையிட மூலகாரணமாக பிரிட்டிஷ் நிர்வாகம் நியமித்த ஆளுநராக இருந்தவன்தான் ஐரிஷ் நாட்டவனான இந்த (Edward Nolan )எட்வர்ட் நோலன்.

ஆயிரத்து எண்ணூற்று பதினோராம் ஆண்டு முதன் முதலாக இவன் நெடுந்தீவில் கால்பதித்த பொழுதுகளில் காற்றுப் பெருஞ்சூறையாகி கடல் கொந்தளித்தது. முக்கடலும் சந்திக்கிற மலையடி ஆர்ப்பரித்தது. அதற்குப் பிறகு பதின் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்தத் தீவைத் தனது சொந்த ராஜ்ஜியம் போலவும் தானே முடிக்குரிய இராசாவா கவும் நடந்து, மக்களை அடிமைகளாக்கி துயரத்தின் விளிம்பிற்கு அவன் தள்ளியிருந்தான்.

கதிரவேலரின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி வைத்து தெருத்தெருவாக கட்டி இழுக்கிற அளவிற்கு இந்த வந்தேறி வெள்ளையர்கள் துணிந்து விட்ட செய்தி முத்தருக்கும் எட்டியிருந்தது. செய்தி கேட்டவுடன் துடித்துப் பதைத்து வெட்டுக்கழி நோக்கிப் புறப்பட்டார். அவரோடு கூடவே அவரது பேரனும் வந்தான். இந்தியாவிருந்து வந்த செம்பகத்தையும் கணேசனையும் அவர் விபரீதமுணர்ந்து வீட்டில் நிற்கச் சொல்லியிருந்தார்.

தாத்தா, அங்கே பாருங்க!' என்று கத்திக்கொண்டே அவரருகே ஓடிவந்தான் பேரன் சிட்டு. அவன் கைகளில் ஒரு பனையோலைக் குட்டான் பாதியிலேயே இழைக்கப்பட்டு நின்றிருந்தது.

கதிரவேலு நிமிர்ந்து பார்த்தார். தூரத்தில், அந்த நெய்தல் நிலத்தின் பெருமையாக நின்றிருந்த அடர்ந்த பனை மரங்களும், தென்னை மரங்களும் ஒவ்வொன்றாக வெட்டிச் சாய்க்கப்பட்டுக்கொண்டிருந்தன. கடல் வழியாகப் படகு களில், கைகளில் வாள்களோடும் துப்பாக்கிகளோடும் வந்திறங்கிய அந்த அந்நியர்கள், அந்தச் சோலைவனத்தைப் பாலைவனமாக்கும் வெறியோடு காடுகளை அழித்துக் கொண்டிருந்தனர். ஊரைப் பிளந்து வெட்டுக்கழியெனும் பெருங் கால்வாய் திறந்தார்கள். இதன் மூலம் கடலில் வரும் கப்பல்கள் சந்தடியில்லாமல் நோலன் மாளிகைக்கு வர முடிந்தது.

ஜிப்லைன் (Zip line) எனப்படும் கம்பிகளில், கயிறுகளில் தொங்கியவாறு மனிதர் ஆற்றைக் கடந்த வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முந்தையது. பண்டைய சீனாவில், மக்கள் ஆறுகளையும் பிற அபாயகரமான பகுதிகளையும் கடக்க ஜிப்லைன்களைப் பயன்படுத்தினர். அந்த, ஜிப்லைன்கள் பாதுகாப்பு இன்மையால் அவற்றுக்குப் பதிலாகப் பிறகு பாலங்கள் கட்டப்பட்டன. அந்தப் பழங்காலத் தொழினுட் பத்தை, முதன்முதலாக நெடுந்தீவில் பனைகளில் ஜிப் லைன்களை மாட்டி, அதன் வழியே மக்களின் நடமாட்டத் தையும் குதிரைகளையும் கண்காணித்த 'குதிரைக்கார' ஆளுநராக இந்த நோலன் உருவெடுத்தான்.

வேண்டிய மட்டும் பனங்கள்ளை மாந்திக் குடித்தான். கற்பாறைகளை ஆளத்தோண்டி பூதங் கிண்டிய பெருங் கிணறுகள் என ஆளமறியாத பெருங் கிணறுகளை சாறாப்பிட்டி உட்பட நெடுந்தீவின் பல பகுதிகளில் உள்ளூர்வாசிகளைத் தோண்டச்செய்து குதிரை வளர்த்தான். அவனுடைய அடாவடிக் கொடுமை, தீவின் ஆன்மாவை சிதைத்துக் கொண்டிருந்தது.

அவன் தனது சொந்த நாடான அயர்லாந்தில் உள்ள பாரம்பரிய கல்லினால் அமைந்த சுற்றுச்சுவர்வேலிகளைப் பின்பற்றி, நெடுந்தீவு முழுவதும் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும், தனித்துவமான தாழ்வான, உலர்ந்த பகுதியெங் கணும் பவளக்கற் சுவர்களைக் கட்டிய பெருமை அவனுக்கு இருந்தது. உள்ளூர் மக்களின் உழைப்பை உறிஞ்சி, கடலின் கரைகளிலும் தரையிலும் தோண்டி எடுக்கப்பட்ட கோளான் பவளப் பாறைகளைக் கொண்டே தீவைச் சிறைச்சாலை போல அவன் சுவராக்கிக் குதிரைகளையும், கால்நடைகளையும் அடைத்தான். பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் இந்த நோலனை, ஆரம்பத்தில் கப்பல்களுக்கான கேன்வாஸ் துணிகளுக்காகவும், பொருட்களை அள்ளிச் செல்லுகிற சாக்கு மூட்டைகளுக்காகவும் சணல் சாகுபடியை ஊக்குவிக்கச் செய்திருந்தது. அதற்காகப் பெருமளவு காடுகள் அழிக்கப் பட்டது ஆனாலும் சணல் வளர்ச்சி வெற்றி தரவில்லை.

நெடுந்தீவுக் காடுகளின் அழிவும், நோலனின் புதிய அடிமைக் கட்டுப்பாடுகளும் தீவக மக்கள் நெஞ்சில் தீயாய் எரிந்தன.

எங்கள் பாட்டன் முப்பாட்டன் வாழ்ந்த பூமியடா இது' என்ற முத்தரின் குரல் கம்மியது. கதிரவேலர் இன்னமும் கயிற்றில் பிணைக்கப்பட்டே கிடந்தார். அவிழ்த்து விடுங்கள் அவரை என்றபடி 'இயற்கையோடு இயைந்து, கடல் தந்த மீனையும், நிலம் தந்த சிறுதானியங்களையும் தின்று தற்சார்போடு வாழ்ந்த எங்களின் மண்ணுடா இது. இதில் வெறியாட்டம் ஆட நீங்கள யாரடா? நீங்கள் நவீனமயமாக்கல் என்ற பெயரில் நம் முன்னோர்களின் உன்னத வாழ்வியலையே ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறீர்களே!' என்று அவர் வெள்ளை யர்களைச் சபித்தார். கயிற்றை அவிழ்த்த முத்தரை எரிச்ச லுடன் பார்த்தான் நோலன்.

துப்பாக்கிக் குண்டுகளின் சத்தம் அந்த அமைதியான தீவின் ஆன்மாவைக் கிழித்துக் கொண்டிருந்தது.

'அந்நியர்களே, நீங்கள் உங்கள் நாட்டிற்கே திரும்பிப் போங்கள்!' என்று முத்தரின் தொண்டைக் குழி அலறியது.

ஆனால், அந்தச் சுதேசிகளின் கூக்குரலை அங்கிருந்த துப்பாக்கி வேட்டுகள் கேட்கத் தயாராக இல்லை. அந்நிய வந்தேறிகளால் அறமும், அன்பும் அற்றுப்போன அந்த மண்ணில், நவீனத்தின் பெயரால் கொள்ளை நோய்களும், பஞ்சமும், பசியும் கால் பதிக்கத் தொடங்கி, அந்த பூர்விக நிலத்தின் ஆன்மா விழுங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுக் கிறிஸ்து போல இரத்தம் வழிய தெருத் தெருவாக இழுபட்ட கதிரவேலரை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு முத்தர் வேகமாக நடக்கத் தொடங்கினார். முத்தருக்கு பெருஞ்சோகம். ஆத்திரத்தோடு நோலன் சொன்னான்... இதுதான் கடைசி... எம் அதிகாரத்தை நோக்கி யார் கேள்வி எழுப்பினாலும் நாம் அழித்து விடுவோமென...

சிறிது தூரம் நடந்த பிறகு ஒரு கொட்டுப் பனையில் கதிர வேலர் தன்னை இருத்தச் சொன்னார். இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. மூலிகை வனமான நெடுந்தீவின் ஒவ்வொரு செடியும் ஒவ்வொரு ஔடதம். ஒரு கொடியை பிடுங்கி வரச்செய்த கதிரவேலர் அதை நசுக்கி சாற்றை தெருச்சிராய்த்த புண்களின் மேல் அப்பினார். என்ன ஆச்சரியம்... இரத்தம் பீறிட்ட புண்கள் உடனேயே இரத்தம் வடிவதை நிறுத்தின.

ஊரைப் பிளந்து கடல் நீரை உள்ளே விட்டு நோலன் அமைத்திருந்த வெட்டுக் கழிக் கால்வாயை அண்டிய அவன் வாசல்ஸ்தலமும், அதன் பின்னால் உள்ள விஸ்தரிக்கப்பட்ட துறைமுகத்தின் பின்னாலும் உள்ள நிஜமான உண்மை குதிரைகள், கால்நடைகள் ஏற்றுவது மட்டுமல்ல முத்தர் என்றார் கதிரவேலர் காதோடு காதாக...

சுற்றியிருக்கும் கிராமங்கள், தீவுகளில் வாழும் நமது சுதேசிப் பெண்களை வன்புணர்ந்து, அவர்களை ரகசியமாக ஐரோப்பிய நாடுகளுக்குக் கடத்தி ஏற்றி அனுப்பும் ரகசியத் துறைமுகமாகவும் இந்த இடத்தைத்தான் அவன் பயன்படுத் துகிறான்' என்றார் கோபமாக...

அந்தக் கொடூரமான உண்மையைக் கேட்ட முத்தரின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்தன. உடம்பு நடுங்கியது. கதிரவேலர் தன் கையில் இருந்த கம்பை இறுக்கிப் பற்றிக் கொண்டார். அவர் சொன்னதை நிரூபிப்பது போல் வேறு தீவுகளில் இருந்து இரகசியமாக ஆட்களை கொணரும் சிறு தோணிகள் அங்கே வந்து கொண்டிருந்தன.

'இந்தக் கேடுகெட்ட நோலனின் கொடுங்கோல் ஆட்சியோடு தான் நாம் இப்போது மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறோம், நம் மண்ணையும் மானத்தையும் சும்மா இப்படியே தூக்கிக் கொடுத்துவிட முடியாது' என்று குமுறிய வண்ணம், அந்த வெட்டுக் கழியின் மையமான நோலனின் அதிகாரப் பகுதியை அழித்துப் போட வேண்டும்? எப்படி அதை அழிப்பது? எதிர்த்துப் போரிடும் வல்லமையிழந்தவராக சோர்வாக கேட்டார் கதிரவேலர்.

கதிரவேலர் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் முத்தரின் நெஞ்சில் நெருப்பாய் இறங்கின. அமைதி சூழ்ந்த இந்த நெய்தல் நிலத்தில், இப்படி ஒரு பெருந்துரோகமும், வன் கொடுமையும் அரங்கேறிக் கொண்டிருப்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. சுற்றியிருந்த மணல் மேடுகள் மேல் மிதக்கும் நெடுந்தீவின் கடல், நீர்முத்துக்களாய் மின்னுவதை விடுத்து, இப்போது இரத்தத் துளிகளாய் சிவந்து நெளிவது போல் அவருக்குத் தோன்றியது.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



*(இயற்பெயர் **ஜேம்ஸ் ஙுகி. ஙுகி வா தியாங்கோ** இவருடைய கிகியு இனப் பெயர். இவர் வாழ்ந்த காலம் ஜனவரி 1938 - மே 2025. கென்ய நாவலாசிரியர், நாட காசிரியர், கட்டுரையாளர், பேராசிரியர். கிழக்கு ஆபிரிக்காவின் முக்கிய நாவலாசி ரியர். ஆபிரிக்க இலக்கியத்தின் முக்கிய ஆளுமை.*

*உகான்டாவில் உள்ள மகரெரா பல்கலைக்கழகக் கல்லூரியிலும் இங்கிலாந்தில் உள்ள லீட்ஸ் பல்கலைக்கழகத்திலும் ஆங்கில இலக்கியம் கற்றார். நைரோபி பல் கலையில் ஆங்கில இலக்கியப் பேராசிரியராக இருந்தார். பல பல்கலைக்கழகங் களில் கற்பித்திருக்கிறார். அவற்றில் யேல், நோர்த் வெஸ்ரேன், கலிபோர்ணிய பல் கலைக்கழகம், நியுயோர்க் பல்கலைக்கழகம் போன்றவை சில. பல புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியராக இருந்திருக்கிறார்.*

*ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் தன் சொந்தப் பெயரில் தான் எழுதிவந்தார். பின்னர் பின்காலனித்துவ எதிர்ப்பைக் காட்டுவதற்காகவும் தன் குரமரபுக்குழு மொழியையும் பண்பாட்டையும் பிரகடனப்படுத்துவதற்கா கவும் தன் இனப் பெயரை தனக்கு வைத்துக்கொண்டார். அதன் பின் தாய் மொழியான கிகியுவில் எழுதினார். சில நாவல்களை அதிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார்.*

*1977-இல் கென்ய அரசுக்கு எதிராக எழுதிய நாடகத்திற்காக - 'நான் விரும்பியநேரம்தான், மணம் முடிப்பேன்' என்ற நாடகத்திற்காக - எந்தக் குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யாமல் அவரை அரசு ஒரு வருடம் சிறையில் அடைத்து வைத்திருந்தது. சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகளின் கண்டனங்களுக்கு பின் அவரை விடுதலை செய்தது. பின் டானியல் அரப் மொய்யின் ஆட்சியில் 1984-இல் அவரை நாடு கடத் தியது. 2004-இல் மொய்யின் சர்வாதிகார ஆட்சி முடிவுற்றபோது அவர் திரும்பவும் கென்யா வந்தார். அப்போது அவர் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டார்.*

*Weep Not Child, The River Between, A Grain of Wheat, Petals of Blood, Matigari, Wizard of the Crow, Devil in the Cross ஆகியவை அவர் எழுதிய நாவல்கள். அவர் எழுதிய பின்காலனித்துவ கட்டுரை நூல்கள் - Decolonising of the Mind, Moving the Centre, Penpoints, Gun points, and Dreams. பல இலக்கிய சஞ்சிகை களுக்கு ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். இவருடைய Weep Not, Child நாவலை எஸ். பொன்னுத்துரை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். டெவில் இன் த க்றொஸ் நாவலும் தமிழில் வெளிவந்துள்ளது.*

*அவருடைய வாழ்க்கை ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் பின்காலனித்துவத்துக்கு எதிராகவும் இருந்தது. அதனால் கென்யநாட்டைவிட்டு ஓடி அமெரிக்காவில் தஞ்சம் புக வேண்டியதாயிற்று.*

*அவர் தந்தைக்கு 28 குழந்தைகள். நாலு மனைவிகள். தந்தை விவசாயி. மாவ் மாவ் இயக்கத்தின் காலத்தில் பல இன்னல்களுக்கு ஆளானார். இவருக்கும் இரண்டு மனைவிகளும் எட்டுக் குழந்தைகளும். அவர்களில் சிலர் எழுத்தாளர்கள்.)*

tg.theeban@gmail.com

# சில மணித்துளி நேரப் புகழ்

**ஙுகி வா தியாங்கோ** **தமிழில்: என்.கே. மகாலிங்கம்**

அவளுடைய பெயர் வஞ்சிறு. ஆனால் அவள் தன் கிறிஸ்தவப் பெயரான பியற்றிஸ் என்பதையே பெரிதும் விரும்பினாள். அது தூய்மையானதாகவும் அழகானதா கவும் அவளுக்கு ஒலித்தது. அவள் அழகற்றவள் அல்ல. ஆனால் அழகானவள் என்றும் சொல்லவும் முடியாது. கறுப்பு நிறம். நல்ல சதைப்பிடிப்பானவளும் கூட. அவ ளின் உருவமும் ஆன்மாவால் நிரப்பப்படுவதற்காக காத் திருப்பது போன்றிருந்தது. அவள் மதுக்கூடத்தில் வேலை செய்தாள். அங்கே ஆண்கள் தங்கள் உள்ளுறுப்புக்களை பியர் நுரையில் மூழ்கடிக்க வந்தார்கள். ஆனால் எவரும் அவளைக் கவனிப்பதில்லை. சிலவேளைகளில் மதுக்கூட உரிமையாளன் அல்லது பொறுமையற்ற ஒரு வாடிக்கை யாளன் பியற்றிஸ் என்று அழைத்தால் மட்டுமே அவர்கள் ஒருகணம் தலையைத் தூக்கி அவளைக் கவனிப்பார்கள். அதன் பிறகு மற்ற வாடிக்கையாளர்கள் ஒருசில நிமிடங் கள் தங்கள் தலையைத் தூக்கி பார்ப்பார்கள். அதாவது, அழகான அந்தப் பெயரை வைத்திருந்தவளைப் பார்ப்ப தற்காக. ஆனால் அவர்கள் அப்படியான ஒருத்தரையும்

காணாதபோது திரும்பவும் மதுவருந்தத் தொடங்குவார்கள். ஆபாசமான பகிடிகளைச் சொல்லுவார்கள். சிரிப்பார்கள். மற்றப் பெண் பரிசாரர்களிடம் தனகுவார்கள். அதனால் காயப் பட்ட பறவையைப் போல தள்ளாடிக் கொண்டு கென்யாவின் இன்னொரு நகரமான லிமிருவில் உள்ள அலாஸ்கா, பரடைஸ், தமொடேன், தோம் போன்ற பெயர்களையுடைய பல மதுபானக் கடைகளில் அவள் வேலை செய்தாள். சிலவே ளைகளில் சிடுசிடுப்பான மதுபானக் கடை உரிமையாளர்கள், அவள் அதிக வாடிக்கையாளர்களை ஈர்ப்பதில்லை என்று கூறி எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் சம்பளமும் கொடுக் காமல் அவளை வேலையைவிட்டு நீக்கிவிடுவார்கள். பின் இன்னொரு மதுபானக் கடைக்குச் சென்று அங்கே சேர்ந்து கொள்வாள். சிலவேளை ஓரிடத்தில் வேலை செய்வதிலும் ஒரே காட்சிகளைத் தினமும் காண்பதிலும் களைத்துப் போவாள். அவளிலும் பார்க்க அழகற்ற பெண்களுக்காகப் பல வாடிக் கையாளர்கள் கடை பூட்டும் சமயத்தில் சண்டை பிடிப்பதைப் பார்த்திருக்கிறாள். தன்னிடம் இருப்பதைக் காட்டிலும் அவர்க ளிடம் அவர்கள் என்னத்தைக் கண்டார்கள் என்று மனம் சோர்ந்துபோய் தன்னையே கேட்டுக் கொள்வாள். மதுபானக் கடை இராச்சியம் ஒன்று இருக்கவேண்டும் என்று ஆசைப் பட்டாள். அதில் குறைந்தது தானும் ஒரு ஆளுநனாக இருக்க வேண்டும் என்று விரும்பினாள். அங்கே விண்ணப்பதாரர்கள் தங்கள் விரக்தியான புன்சிரிப்புடன் அடிக்கடி சபித்துக் கொண்டும் வருவார்கள். அந்தச் சபிப்பின் பின்னால் வெறுப் பும் அதிலும் பார்க்க அதிக இச்சையும் காதலும் இருக்கும். பரிசுப் பொருளாக பியரும் கொண்டும் வருவார்கள் என்று நினைத்தாள்.

அவள் லிமரு நகரத்தைவிட்டு வெளியேறி அதைச் சுற்றி காளான்கள் போல பெருகிவரும் சிறுநகரங்களில் தன் அதிர்ஷ்டத்தை முயன்று பார்த்தாள். நிகாறறிகா, கமிறித்தோ, றிறோனி, ரிகுனு போன்ற இடங்களில் முயன்றாள். எல்லாவி டமும் கதை ஒன்றாகத்தான் இருந்தது. ஓம், எப்போதாவது ஒருமுறை ஒரு வாடிக்கையாளன் அகப்படுவான். ஆனால் அவள் விரும்பியதுபோல எவரும் அகப்படவில்லை. எவருமே இல்லை. அவளுக்காக சண்டைபோட்டு அவளை விரும்பு பவர்கள் எவருமே இல்லை. எப்போதாவது போனால் போகட் டும் என்று கிடைக்கும் கடைசி வாடிக்கையானுக்கான காத்தி ருக்கும் ஒருத்திதான் அவள். ஐந்து போத்தல் பியரை அருந் திய பின் இனிக்க இனிக்கப் பேசிப் பாசாங்குபண்ணும் ஒரு வாடிக்கையாளன் கூடக் கிடைப்பதில்லை. அடுத்த நாள் இரவோ சம்பள நாளோ அதே வாடிக்கையாளன் அவளைக் கண்டாலும் காணாததுபோல நடிப்பான். பின் அவன் தன்னு டைய பணத்தின் ஆற்றலை வேறு பெண்களிடம் காட்டுவான். அவர்களுக்கு ஏற்கனவே போதியளவு ரசிகர்கள் இருப்பார் கள். அதை அவள் வெறுத்தாள். ஒவ்வொரு பெண்ணையும் எதிரியாகவே அவள் பார்த்தாள். அவள் அவர்களை முறைத் துப் பார்ப்பாள். குறிப்பாக நியாகுதீ என்ற பெண் அவளுக் குக் கடுப்பை ஏற்றுவாள். நியாகுதீ திமிர் பிடித்தவள். அத்து டன் மற்றவர்களுடன் ஒட்டாமல் விலகியும் இருந்தும் கொள் வாள். ஆனால் ஆண்கள் அவளைச் சுற்றிச் சுற்றித்தான் வரு வார்கள். நியாகுதீ ஆண்களுடன் சண்டையிடுவாள். அவர் கள் அவளைச் சமாதானப்படுத்த பரிசுப் பொருட்கள் கொண் டுவருவார்கள். அவற்றை அவள் தனக்குரியது போல ஏற்றுக் கொள்வாள். நியாகுதீ சலிப்படைந்தது போலவும் பொறுமை யிழந்தவள் போலவும் அல்லது முற்றாக அவமதிப்பது



போலவும் நடந்துகொள்வாள். கடும் சொற்களால் அவள் இகழ்ந்து பேசினாலும், உதடுகளை நெளித்தாலும், சுதந்திர மான ஒரு பெண் போல அலட்சியமான கண்களால் அவமதித் தாலும் அவற்றை அவர்கள் ரசிப்பதுபோல அவளுடன் ஒட்டிக் கொண்டே திரிவார்கள். நியாகுதீ ஒரு பறவையைப் போல அலைந்து திரிவாள். ஓரிடத்தில் நிரந்தரமாக இருக்கமாட் டாள். அவளைப் பொறுத்தவரையில் அவள் மாற்றத்தையும் பரபரப்பையும் விரும்பினாள். வெல்வதற்காகப் புதிய முகங்க ளையும் புதிய பிரதேசங்களையும் விரும்பினாள். ஆனால் பியற்றிஸ் தன் நிழலையே வெறுத்தாள். அவள் தன்னில் தான் விரும்பும் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கண் டாள். அதாவது, அவள் முற்றுமுழுதாக அமிழ்ந்தும் அதே வேளை பாதாள உலகத்தில் நடைபெறும் வன்முறையிலும் பாலுறவுகளிலும் இருந்தும் முற்றாக விலகியும் உயர்ந்த ஒரு பெண்ணாக இருக்கவிரும்பினாள். பியற்றிஸ் போன இடம் எல்லாம் நியாகுதீயின் நீண்ட நிழல் விரைவாகவோ அதன் பிறகோ அவளைத் தொடர்ந்து வந்தது.

அவள் லிமிறோ நகரத்தைவிட்டு சிறிமாவட்டத்திலுள்ள இல் மொறொக்காவுக்கு தப்பி ஓடினாள். இல்மொறொக் கைவிடப் பட்ட ஒரு பேய்க் கிராமமாகக் கிடந்தது. ஆனால் நியாங் கென்டோ என்ற புகழ் பெற்ற பெண்ணால் அது புத்துயிர்பெற் றது. அவளுக்கு ஒவ்வொரு பாப் இசைக் குழுவும் தங்கள் அஞ்சலியை செலுத்தி உள்ளது. அவளைப் பற்றித்தான் இளம் நடனக்காரி முத்துவும் முச்சுங்காவும் பாடி இருக்கி றார்கள்.

***நான் நைரோபியைவிட்டு***
***இல்மொறாக்குவிற்குப் போனபோது***
***எனக்குத் தெரியாது - இந்த***
***அதிசயமான குழந்தை***
***நியாங்கென்டோவை***
***நான் பெறுவேன் என்று***

அதனால் இல்மொறொக் நம்பிக்கை நகரம் என்று எப்பொ ழுதும் பார்க்கப்பட்டது. அங்கே களைத்துப்போனவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் தமக்கான இளைப்பாறுதலையும் நல்ல தண்ணீரையும் பெற்றுக் கொள்வார்கள். அதனால் நியாகு தீயும் அவர்களைத் தொடர்ந்துசென்றாள்.

இல்மொறொக் நகரம் அதன் புகழையும் பாடல்களையும் நடனங்களையும் கடந்து லிமுறு நகரைவிட அதிக வித்தியாச மானதாக இருக்கவில்லை. பியற்றிசும் பலவகையான தந்தி ரங்களைக் கையாண்டு பார்த்தாள். உடைகளை மாற்றினாள். இருந்தும் இங்கேயும் பளபளக்கும் ஆடைகளை வாங்குவ தற்குத் தேவையான பணத்தை அவளால் சம்பாதிக்க முடிய வில்லை. ஒரு மாதத்திற்கு எழுபத்தைந்து ஷிலிங் போதுமா? போஷோ என்ற வீட்டுப்படி இல்லாமல், மாதாந்தம் சம்பளம் பெறும் காதலன் இல்லாமல் எந்த மூலைக்கு அது போதும்? அந்த நேரம் அம்பி என்ற கிறீமின் புகழ் இல்மொறொக் நகரத் துக்கு வந்து சேர்ந்துவிட்டது. பியற்றிஸ் தன் கஷ்டத்துக்கான விடை அதில்தான் தங்கியுள்ளது என்று நினைத்தாள். லிமறு வில் தன்னிலும் பார்க்க கறுத்த நிறப் பெண்கள் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களைப் பாவித்து ஒரே இரவில் அசிங்கமான பாவத்திலிருந்து வெண்ணிறத் தேவதைகளாக மாறியதை அவள் பார்க்கவில்லையா? அவர்களை ஆண் கள் காமக் கண்களால் பார்க்கவில்லையா? தங்களின் புதிய பெண் சிநேகிதிகளைப் பற்றி அவர்கள் மிகைப்படுத்தி பெரு மையுடன் பேசவில்லையா? ஆண்கள் விசித்திரமான பிறவி கள் என்று தன் கணநேரப் பகுப்பாய்வில் நினைத்துக் கொண் டாள். அம்பி புட்டோன், ஃபயர்சிநோ, மூன்சிநோ ஆகிய தோலைப் பளுப்பாக்கும் கிறீம்களைப் பற்றியும், பொய் முடி, நேராக்கப்பட்ட முடி பற்றியும் சிலர் கடுமையாகத் தாக்கிப் பேசினார்கள். ஆனால் ஆண்கள் பளுப்புநிறப் பெண்களி டமும் தலையில் பொய் முடி வைக்கப்பட்ட பெண்களிடமுமே சென்றார்கள். அந்த முடிகள் ஐரோப்பிய அல்லது இந்தியத் தலைமுடிபோல இருக்கவில்லை. செயற்கையானதாகவே இருந்தன. கறுப்பினப் பெண்கள் தங்களைத் தாங்களே வெறுப்பதற்குரிய அடிப்படைக் காரணம் எதுவென்று கண்டு பிடிக்க பியற்றிசால் முடியவில்லை. அந்த முரண்பாட்டை அவள் சாதாரணமாக ஏற்றுக் கொண்டு அம்பி கிறீமைப் பழி வாங்குவதைப்போல அதிகம் பூசினாள். தன் கறுப்புநிற வெறுப்பை இல்லாமலாக்க முயன்றாள். ஆனால் அம்பியைக் கூட அவளால் மிகையாகப் பூசமுடியவில்லை. முகத்துக்கும் தோள்களுக்கு மட்டுமே பூசமுடிந்தது. அதனால் அவளுடைய கால்கள் கழுத்து முதலானவை கறுப்பாகவே இருந்தன. முகத்தின் சில பகுதிகளில் கூட எட்டிப் பூசமுடியவில்லை. முக்கியமாக காதின் பின்புறத்திலும் கண்ணிமைகளின் மேலே உள்ள இடங்களிலும் பூச முடியவில்லை. அம்பியால் கூட அவளின் அவமானத்தையும் எரிச்சலையும் நீக்க முடிய வில்லை.

அம்பியைப் பூசி உடலைப் பளுப்பாக்க நினைத்த அந்தக் காலத்தை பின்னால் வந்த துளிநேரப் புகழ் காலத்துக்கு முன் வந்த ஆழமான அவமானமான காலமாகவே அவள் நினை வில் எப்பொழுதும் இருந்துகொண்டிருந்தது. அவள் அப்போது இல்மொறொக்காவில் உள்ள ஸ்ரார்லயிற் மதுபானக் கடை யிலும் விடுதியிலும் வேலைசெய்துகொண்டிருந்தாள். நியாகு தீதன் காப்புப்போட்ட கைகளுடனும் பெரிய காதணிகளு டனும் முகப்பு மேசையின் பின்னால் வேலைசெய்துகொண்டி ருந்தாள். மதுக்கடை உரிமையாளன் நல்லதொரு கிறிஸ்தவ ஆன்மா கொண்டவன். தவறாமல் தேவாலயத்திற்குப் போய் வருபவன். ஹரம்பிதிட்டத்திற்கு - மாவட்டத்திலுள்ள கல்வி, அபிவிருத்தி சுயஉதவித் திட்டம் - தன் பங்கைத் தவறாமல் செலுத்திவந்தவன். முட்டிவயிறும் நரைத்த முடியும் மென்மை யான பேச்சும் கொண்டவன். மரியாதையான குடும்பம் உள்ள வன். இல்மொறொக் நகரில் நன்கு அறியப்பட்டவன். கடின மான உழைப்பாளியும் கூட. ஏனென்றால் மதுபானக் கடையை மூடும் நேரம் வரை அவன் அங்கே இருப்பான். இன்னும் துல் லியமாகச் சொல்லப்போனால் நியாகுதீ செல்லும் வரை அவன் அங்கே இருப்பான். மற்றப் பெண்களை அவன் கவனிப்பதில்லை. நியாகுதீயையே சுற்றிச்சுற்றியே வந்தான். இரகசியமாக அவளுக்கு உடைகள் வாங்கிப் பரிசளித்தான். அதற்கு மாற்றாக எந்த நன்றியையும் அவன் பெற்றுக் கொள்

ளவில்லை. அவன் செய்தது ஒருவகை உடன்படிக்கை. நாளைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை. மற்றப் பெண்க ளுக்கு மாதம் எண்பது ஷிலிங் கொடுத்தான். நியாகுதீக்கு அதைவிட தனியாக ஒரு அறையும் கொடுத்தான். அவள் விரும்பியபோது எழுந்து சரக்கிருப்பு எடுப்பாள். ஆனால் பியற்றிசும் மற்றப் பெண்களும் ஐந்து மணிக்கே எழும்பிவிட வேண்டும். எழுந்து விடுதியில் உள்ளவர்களுக்கு தேநீர் போடவேண்டும். மதுக்கூடத்தை சுத்தம் செய்யவேண்டும். சட்டி, பானை, கிளாசுகளைக் கழுவ வேண்டும். பின் மதுக் கூடத்தில் மாற்றுமுறையில் மாறிமாறி இரண்டு மணி வரை வேலைசெய்யவேண்டும். பின் சிறிய இடைவேளை இருக்கும். ஐந்து மணிக்கு திரும்பவும் அங்கே நிற்க வேண்டும். வாடிக் கையாளர்களை எதிர்பார்த்து தயாராக நிற்க வேண்டும். அவர்களுக்குப் புன்னகையுடன் இரவு பன்னிரண்டு மணி வரை நுரை பொங்கும் பியர் பரிமாற வேண்டும். அல்லது வாடிக்கையாளர்கள் ரஸ்கேர்ஸ் அல்லது பில்சினர்ஸ் பியர் வேண்டும் என்று கேட்கும்வரை கொடுக்கவேண்டும். பியற் றிசை அடிக்கடி எரிச்சல் அடையச் செய்தது என்னவென்றால் உரிமையாளன் அவர்களை ஸ்ரார்லயிற் என்ற விடுதியில் தான் படுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தியது. பியற்றி சைப் பொறுத்தவரை அது அவளுக்குப் பிரச்சினை இல்லை. அங்கே தூங்காவிட்டால் அவர்களால் வேலைக்கு வர பிந்தி விடும் என்று சொல்லுவான். ஆனால் அந்தப் பெண்கள் தங்கள் உடலைக் காட்டி இன்னும் அதிக வாடிக்கையாளர் களை ஸ்ரார்லயிற்றுக்கு வரவைக்கவேண்டும் என்பதுதான் அவனுடைய நோக்கம். ஆனால் அதிகமான பெண்கள் நியா குதீயின் தலைமையில் அந்த விதியை மீறி காவலாளிக்கு லஞ்சம் கொடுத்துவெளியே போய் வருவார்கள். அவர்கள் வெளியே போய் வழக்கமான அல்லது ஒருநாள் கூடும் சிநேகி தர்களுடைய இடங்களில் இருந்துவிட்டு வருவார்கள். அங்கே அவர்கள் சுதந்திரமாக இருப்பார்கள். மதுக்கடை ஊழியர் களைப் போல நடத்தப்படமாட்டார்கள். பியற்றிஸ் எப் பொழுதும் தன் தங்குமிடத்திலே தங்கிவிடுவாள். அவள் சந் திக்கும் ஓரிரவுச் சிநேகிதர்கள் குறைவாகத்தான் பணத்தைச் செலவழிப்பார்கள். ஒருநாள் இரவு நியாகுதீ உரிமையாள னைத் தன்னுடன் இருக்க அனுமதிக்காதபோது அவன் பியற் றிசை அணுகினான். முதலில் அவளுடைய வேலை திருப்திக ரமானதாக இல்லை என்று சொல்லி பேச்சை ஆரம்பித்தான். அவளை பல கெட்டகெட்ட பெயர்களால் அழைத்தான். பின் சடுதியாக அவளைக் காழ்ப்புடன் ஓரளவு அவமதிக்கும் பாணியில் பாராட்ட ஆரம்பித்தான். அவளைப் பிடித்திழுத் தான். அப்போது அவனுடைய பானை வயிறும் நரைத்த முடியும் வெளியே தெரிந்தன. பியற்றிசுக்கு அவனில் அருவ ருப்பான வெறுப்பு ஏற்பட்டது. நியாகுதீயால் ஒதுக்கப்பட்ட ஒருத்தனை அவளால் ஏற்றுக்கொள்ளவோ நினைத்துப் பார்க் கவோ முடியவில்லை. என் கடவுளே என்று அவள் தன் மன துள்ளே அழுதாள். என்னிடம் இல்லாத எது நியாகுதீயிடம் இருக்கிறது? அவள் முன்னிலையிலேயே இப்பொழுது அவன் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறான். இருந்தும் அவன் மன்றா டினான். அவளுக்குப் பரிசுப் பொருட்கள் வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்தான். அவள் மசியவில்லை. அன்றிரவு அவளும் விடுதி விதியை மீறினாள். ஒரு யன்னலால் புகுந்து வெளியேறி இன்னொரு மதுபானக் கடையில் தங்கி காலை ஆறு மணிக்குத் திரும்பி வந்தாள். உரிமையாளன் மற்றவர்க ளுக்கு முன்னால் அவளை அழைத்து வேலையைவிட்டு நீக்கினான். பியற்றிஸ் தான் செய்த செயல்களை எண்ணி தானே ஆச்சரியம் அடைந்தாள்.

ஒரு மாதம் வரை வேலை இல்லாமல் இருந்தாள். மற்றப் பெண்களின் நிச்சயமற்ற தயவில் வெவ்வேறு அறைகளில் தங்கினாள். லிமொறொக்கைவிட்டு சென்று இன்னொரு நக ரத்தில் புதிதாக வேலை தேடி வாழ மனமில்லாமல் அங் கேயே இருந்தாள். அது அவளைக் காயப்படுத்தியது. அலைந்து திரிந்ததில் களைத்துப் போனாள். அம்பியைப் பூசுவதை நிறுத்திவிட்டாள். அவளிடம் பணம் இல்லை. கண் ணாடியில் அவள் தன்னைப் பார்த்தாள். ஒரு வருடத்திற் குள்ளேயே வயது போனவள் போல ஆகிவிட்டாள். அப்படி யென்றால் ஏன் பழிபாவத்திற்கு அஞ்சுகிறாள் என்று தன் னையே கேட்டுக் கொண்டாள். ஏன் ஆண்களைத் தேடுவதில் அல்லது தன் உடலை பணத்திற்காக அடகு வைப்பதில் பயங்கரத்தை உணர்கிறாள்? அவள் விரும்புவது ஒழுங்கான ஒரு வேலையும் தன்னில் அன்பு செலுத்தும் ஒரு ஆணையோ பல ஆண்களையோ தான். சிலவேளை ஓர் ஆண் தேவை என்று அவள் நினைத்திருக்கலாம். இருக்க ஒரு வீட்டையும் படுக்க ஒரு ஆணையும், கட்டிலுக்கு எடுத்துச் செல்ல ஒரு குழந்தையும் தேவை என்று அவள் எண்ணியிருக்கலாம். அவளுடைய இந்த உண்மையான தேவைதான் அவளிடமி ருந்து பல ஆண்களை துரத்திவிட்டிருக்கலாம். ஏனெனில் மதுச்சாலைப் பெண்களிடமிருந்து அவர்களுக்குத் தேவையா னது வேறெதுவோ. பின் இரவுகளில் இருந்து அழுதாள். அப்போது தன் பிறந்த வீடு நினைவுக்கு வந்தது. அந்தக் கணங்களில் அவளுடைய தாயின் கிராமமான நியேரி, கடவுள் படைத்த நிலத்திலேயே இனிமையான இடமாக அவளுக்குத் தோன்றியது. அவளுடைய விவசாயத் தாய் தந்தையின் வாழ்க்கையைப் பற்றிய கற்பனாவாத மாயைகளில் திளைத் தாள். அங்கே அளவிட முடியாத அமைதியும் இணக்கமும் இருந்தன என்று நினைத்தாள். அவர்களைப் பார்ப்பதற்காக அங்கே போகவேண்டும் என்று ஆவலாக இருந்தாள். வெறுங் கையுடன் அங்கே எப்படிப் போவது? இருந்தும் அந்த இடம் அவளுடைய நினைவில் தூரமான நிலப்பரப்புத்தான். இந்த மதுபானக் கடையில் தொலைந்துபோன அந்நியர்களின் கூட் டத்தில் தான் அவளுடைய வாழ்க்கை இருந்து கொண்டிருக் கிறது. கடவுளின் கிருபையிலிருந்து கீழே விழுந்துபோய்க் கிடக்கிறாள். ஒரு தலைமுறையின் ஒரு பகுதியான அந்தத் தலைமுறை திரும்பவும் தன் மண்ணுடனோ பயிர்களுடனோ காற்றுடனோ நிலவுடனோ சேரமுடியாத ஒரு தலைமுறை. இருட்டு வேலிகளின் மூலைகளிலிருந்து கிசுகிசுப்பவர்க ளுக்கோ நிலவுவெளிச்சத்தின் கீழும் வானத்தைத் தொடுவ தற்காக எழும் திமுதிமு என்ற மலைகளின் கீழ் ஆடியும் பாடியும் காதல் செய்பவளுக்கோ அல்ல அது. அவளுக்கு ஒருத்தியைப் பற்றிய நினைவு வந்தது. தன் சொந்தக் கிராமத் திலிருந்து வந்த ஒரு பெண் லிமொறுவில் பணக்காரன் ஒருத் தனின் ஆசைநாயகியாகவும் பின் இன்னொருத்தனின் ஆசை நாயகியாகவும் கவர்ச்சியானதொரு வாழ்க்கையை வாழ்ந்

தாள். ஒரு நாள் அவள் நச்சு வாயுவை மணந்து இறந்து போனாள். ஏன்? இந்தத் தலைமுறை மரணத்திற்கு அச்சப்படு வதில்லை. அதேபோல வாழ்க்கை பற்றிய மர்மத்தையும் அவர்கள் இரக்கமற்றவர்களாக பார்க்கிறார்கள். கவர்ச்சி யான வாழ்க்கையைத் துறக்க முடியாமல் எத்தனை மண மாகாத பெண்கள் தான் பெற்ற குழந்தைகளை கழிப்பறைக ளுக்குள் வீசுகிறார்கள். நச்சு வாயுவை மணந்து இறந்த அந்தப் பெண்ணின் மரணம் அவர்களிடையே நகைச்சுவைக் குரிய பேசுபொருளாகியது. வலியில்லாமல் புள்ளி விபரங் களில் ஒருத்தியாகிவிட்டாள் என்றார்கள். அதன் பின் ஒரு கிழமை பியற்றிசும் தானும் அந்தப் புள்ளிவிபரத்தில் ஒருத்தி யாகலாமா என்று நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் அப்படிச் செய்ய அவளால் முடியவில்லை.

அவளுக்கு அன்பு தேவைப்பட்டது. வாழ்க்கை தேவைப் பட்டது.

இல்மொறொக்கில் ஒரு புதிய மதுபானக்கூடம் திறக்கப்பட் டது. அதன் பெயர் றீரொப் பார். விடுதியும் உணவகமும் சேர்ந்தது. ஏன் றீரொப் - மரத்தின் உச்சியில் - என்ற பெயர் என்பதை பியற்றிசால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது இரண்டு மாடிக் கட்டடம். கீழ்த்தளத்தில் தேநீர்க் கடை. மேல் தளத்தின் ஒரு அறையில் ஒரு பியர்க் கடை. மற்றவை எல்லாம் ஐந்து நிமிசப் பாவனைக்கு அல்லது ஓரிரவு தங்கு வதற்குரிய அறைகள். உரிமையாளன் ஓய்வுபெற்ற ஓர் அரச ஊழியன். ஆனால் அரசியலில் இன்னும் ஈடுபாடு காட்டிவரு கிறான். அவன் மிகப் பெரிய செல்வந்தன். கென்யாவின் பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் வர்த்தக நிலையங்களும் நிறுவனங்களும் இருந்தன. நாட்டிலுள்ள பெரும் புள்ளிகள் எல்லாரும் அவனுடைய மதுச்சாலைக்கு வந்தார்கள். பெரிய ஆண்கள் மேர்சிடிஸ் கார்களில். இன்னும் பெரிய ஆண்கள் பென்லிஸ்களில். இன்னும் பெரிய ஆண்கள் ஜகுவார்களிலும் டெய்ம்ளேர்சுகளிலும் வந்தார்கள். சீருடை அணிந்த சாரதி கள் கார்களில் காத்துக்கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் சிலர் அலுப்புடன் வெளியே காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் போல பெரிய மனிதர்கள் அல்லாதவர்கள் அந்தப் பெரிய மனிதர்களுக்கு மரியாதை செலுத்த வந்தார் கள். அவர்கள் அதிகமாக அரசியலே பேசினார்கள். அத்து டன் தங்கள் வேலை பற்றியும் கதைத்தார்கள். நிறைய வம்புப் பேச்சுகள். உங்களுக்குத் தெரியாதா இந்த இந்த ஆட்கள் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்! உண்மையாகவா? இந்த இந்த ஆட்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்! பொதுப்பணத்தைத் திருடியுள்ளார்கள்! பெரும் முட்டாள் தனம்! புத்திசாலிகள் இல்லை! வாதிட்டார்கள். வாய்ச்சண்டை செய்தார்கள். சிலவேளை முட்டிகளால் மோதிக் கொண் டார்கள், விசேசமாக தேர்தல் பிரசார காலங்களில். அவர்கள் உடன்பாட்டுக்கு வந்த ஒரேயொரு விஷயம் கென்யாவின் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் மூல காரணம் லுவோ என்ற இனம் தான் என்பதும், அறிவாளிகளும் பல்கலைக்கழக மாண வர்களும் சலுவைகளுடனும் அகங்காரத்துடனும் வாழ்கிறார் கள் என்பதும், கியாம்பு - நைரோபிக்கு வடக்கே உள்ள ஒரு நகரம். அது விவசாய அபிவிருத்தி, ஆதனச் சொத்துக்கள், கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடம் - அபிவிருத்தியில் அதிக பங்கை எடுத்துக் கொள்கிறது என்பதும், நியேரி, முறங்கா மக்கள் நைரோபியிலுள்ள பெரிய வர்த்தக நிலை யங்களைத் தம் கைகளுக்குள் எடுத்துள்ளார்கள் என்பதும், அவர்கள் சிறிய மாவட்டத்தையும் ஆக்கிரமிக்கிறார்கள் என்ப தும், ஆபிரிக்க தொழிலாளர்கள் விசேசமாக பண்ணைகளில் வேலை செய்பவர்கள் மிகவும் சோம்பேறிகள் என்றும், அவர் கள் மிகவும் கடுமையாக உழைத்து சடுதியாக செழிப்பாக நாங்கள் வாழ்கிறார்கள் என்றும் ‘எங்களில்’ பொறாமை கொண்டிருக்கிறார்கள் என்பது போன்றவற்றில் அவர்கள் ஒற் றுமையான கருத்துடையவர்களாக இருந்தார்கள். அப்படி இல்லையேல் ஒவ்வொருவரும் தங்களையே போற்றிப் பாடு வார்கள் அல்லது திருப்பிப் பாடுவார்கள். எப்போதாவது ஒரு முறை போதை தலைக்கேறிய பொழுது தங்களைத் தாங் களே புகழ்ந்து மதுக்கூடத்தில் இருந்த ஒவ்வொருக்கும் இரண்டு போத்தல் பியருக்கு ஆணையும் கொடுப்பார்கள். லிமொறொக்கின் ஏழைகளும் றீரொப் மதுச்சாலைக்கு புதுப் பணக்காரர்களின் தயவில் உணவருந்த வருவார்கள்.

இங்கே பியற்றசுக்கு துப்புரவு செய்பவளாகவும் படுக்கை விரிப்பவளாகவும் ஒரு வேலை கிடைத்தது. இங்கே சில கிழமைகள் தன்னை ஒரு பெரியவளாக உணர்ந்தாள். இப் போது முன்பு பெயர்களாக கேட்ட பெரியவர்களுக்கு படுக்கை விரித்தாள். அந்தப் பெரியவர்களுக்கு முன்னால் ஏழைகளும் மதுவருந்தி பெரியவர்களாக முயன்றார்கள். ஆனால் பியற் றிசின் விதி இப்போதும் அவளை விடவில்லை. அடுத்த மதுக் கூடங்களிலிருந்த பெண்கள் இங்கே கூட்டமாக வர வெளிக் கிட்டார்கள். அவளுக்கு லிமுறுவில் தெரிந்த பெண்களும் இல்மொறொக்கில் தெரிந்த பெண்களும் அதில் இருந்தார் கள். அதிகமானோர் பெரிய மனிதர்கள் ஒருத்தருடன் அல்லது பலருடன் கள்ள உறவில் இருந்தவர்கள். அத்துடன் அவர்களில் பலர் தங்கள் காதலர்களுக்குத் தெரியாமல் ஒளித்தும் மறைந்தும் நாடகமாடினார்கள். நியாகுதீ கவுண்ட ருக்குப் பின்னால் வேலை செய்தாள். அவளின் மேல் பணக் காரர்களின் கண்களும் ஏழைகளின் கண்களும் இருந்தன. அவளும் தன் பெரிய கண்களுடனும் காப்பணிந்த கைகளு டனும் காதுகளில் காதணிகள் அணிந்து தன் சலிப்பான அலட்சியப் பார்வையுடன் காட்சியளித்தாள். பியற்றிஸ் தன் எளிய வேலையால் கண்ணுக்குப் புலனாகாதவளாகவே இருந்தாள். நல்லதிர்ஷ்டம் பெற்ற பெண்கள் அவளை இழி வாகப் பார்த்தார்கள்.

பியற்றிஸ் வாழ்க்கையைக் கனவுகளால் எதிர்த்துச் சண்டை யிட்டாள். சுத்தமான படுக்கை விரிப்புக்களை கட்டிலில் விரிப் பதற்கு முன் முன்பிருந்த விரிப்புக்களை அகற்றுவாள். அவை சற்று முன்னர் கட்டிலில் படுத்திருந்தவர்களின் ஐந்து நிமிசப் போராட்டத்தையும் இறுதியில் நீர்த் தேக்கத்துடன் முடிந்த தையும் கண்டிருந்தது. கட்டிலில் சுத்தமான விரிப்புகளைப் போட்ட பின் அவள் யன்னல் பக்கத்தில் நின்று கார்கள் போவதையும் கார்ச் சாரதிகளையும் பார்த்துக் கொண்டிருந் தாள். அவளுக்கு இப்பொழுது கார்களின் இலக்கத் தகடு களைக் கொண்டும் கார்ச் சாரதிகளின் சீருடைகளின் நிறம்

முதலானவற்றைக் கொண்டும் அவற்றின் உரிமையாளர்கள் யார் என்று தெரியும். இருவருக்கான இருக்கைகள் கொண்ட அழகான மேர்சிடிஸ் ஸ்போர்ட்ஸ் கார்களில் அவளுடைய காதலர்களும் வருவார்கள் என்று கனவு கண்டாள். அப்படி ஒரு காதலனுடன் கைகளைக் கோர்த்துக் கொண்டு நைரோபி மொம்பாசா வீதிகளில் நடப்பதாக கனவுக் காண்பாள். குதி உயர்ந்த காலணிகளை தரையில் தட்டிக் கொண்டு விரைவாக நடப்பதாகக் கனவு காண்பாள். சடுதியாக கிளாஸ் போட்ட காட்சிச் சாளரங்களின் முன்னால் நின்று வியப்புடன் விளித்து, 'ஓ டாளிங், அந்தப் பொருளை எனக்கு வாங்கித் தருகிறாயா?' என்று கேட்பாள். போலிக் கோபத்துடன் எது என்ன? என்று அவன் கேட்பான். அந்த நீண்ட காலுறைகள், டாளிங். அதாவது ஓட்டை விழாத நீண்ட காலுறைகள். அவளிடம் ஓட்டை விழும் நீண்ட காலுறைகள் இருந்தன. இனி மேலும் காலுறை ஓட்டைகளைத் தைக்கத் தேவையில்லை. அதன் பின் அவள் பொய்த் தலைமுடி இருக்கும் இடத்திற்கு வருவாள். விதம் விதமான நிறத்திலுள்ள பொய் முடிகள். பொன்னிற முடிகள், கரும்பழுப்புநிற முடிகள், செம்மயிர்முடிகள், ஆஃப்ரோ முடிகள், உலகத்திலுள்ள அத்தனை நிற முடிகளும் இருக்கும். அப்போது உலகம் முழுவதும் அல்லேலுயா என்று அவளைப் புகழ்ந்து பாடுவார்கள். அப்படியான தருணங்களில் அவள் தன்னைப் பெருமையுடன் உணர்வாள். இருண்ட உலகத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள் போல உணர்வாள். தரையைச் சுத்தம் செய்பவளோ ஐந்து நிமிச திடீர் காதலுக்காக படுக்கை விரிப்பவளோ அல்ல. அவள் இப்பொழுது பியற்றிஸ் வங்கு-வா-மாகேரியின் வழித்தோன்றல். (வங்குமகேரிகிகியு இனக்குழுவின் ஒரே தலைவி. எதேச்சாதிகாரி. 1856 - 1915) அவளுடைய நிர்வாண உடலை நிலாவொளியில் கண்ட ஆண்கள் காமத்தால் நடுங்குவார்கள். அவள் நியாங்கென்டோவின் மகள். இல்மொறொக்கின் தாபகர். அவள் பல காதலர்களை ஆண்மையற்றவர்களாக்கியவள் என்று புகழ்ந்தும் சொல்வார்கள்.

அதன் பின் தான் அவனைக் கண்டாள். அவன் அவளுடைய கனவுகளில் கண்ட காதலர்களுக்கு எதிர்மாறானவன். ஒரு சனிக்கிழமை பின் மதியம் பெரிய ஐந்து-தொன் லொறியை ஓட்டிக் கொண்டு வந்தான். பென்ஸ், ஜக்குவார், டெய்ம்லெர்ஸ் கார்களுக்குப் பக்கத்தில் தன் லொறியைக் கவனமாக நிறுத்தினான். அதை லொறிபோல அல்லாமல் அழகான பால் வெண்ணை நிறவண்டி ஒன்றைப் போல நிறுத்தினான். அந்த லொறியைப் பற்றி அவன் மிகவும் பெருமை கொண்டவன் போலக் காணப்பட்டான். தொழுதொழுத்த சாம்பல் நிற கோட் சூட் அணிந்திருந்தான். அதன்மேல் அவன் மொத்தமான காக்கி இராணுவ மேலங்கி அணிந்திருந்தான். அவன் மேலங்கியைக் கழற்றி கவனமாக மடித்து லொறியின் முன் இருக்கையில் வைத்தான். லொறியின் எல்லாக் கதவுகளையும் சாத்திப் பூட்டினான். தன் உடைகளிலிருந்த தூசியைத் தட்டினான். பின் லொறியைச் சுற்றிவந்தான். ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதைப் பரிசோதிப்பது போல. ரீரொப் உணவகத்திற்குள் நுழைவதற்கு சிலஅடிகள் முன் நின்று இறுதியாக லொறியைத் திரும்பவும் பார்த்தான். ரீரொப் உணவகத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து பலமான பெரிய குரலில் கென்ய நாட்டு பியர் ஒன்றுக்கு ஆணை கொடுத்தான். அதை அவன் ருசித்துக் குடித்தான். அதே வேளை அவனுக்குத் தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா என்று எல்லாப் பக்கமும் திரும்பிப் பார்த்தான். உண்மையில் அவனுக்குத் தெரிந்த ஒரு பெரிய மனிதனைக் கண்டு அவனுக்கு ஒரு கால் போத்தல் ஸ்கொச் விஸ்கிக்கு ஆணை கொடுத்தான். பெற்றுக்கொண்டவனும் சிறிய தலை ஆட்டலுடனும் மரியாதையான புன்னகையுடனும் அதை ஏற்றுக் கொண்டான். ஆனால் தயாள குணத்தைத் தொடர்ந்து அதை ஏற்றுக் கொண்டவனுடன் ஓர் உரையாடலைத் தொடங்குவதற்காக முயன்றபொழுது அவனை அந்தப் பெரியவன் உறுதியாக அலட்சியம் செய்துவிட்டான். அவன் உறைந்து போய் முறட்டினா என்ற மதுவுக்குள் திரும்பவும் ஆழ்ந்து போனான். (முறட்டினா கென்யாவின் கிகியு இனம் குடிக்கும் பாரம்பரிய மதுவின் பெயர்) ஆனால் அது ஒரு கொஞ்ச நேரம்தான். அவன் திரும்பவும் உரையாட முயன்றான். அவனை எல்லோரும் முகம் சுளித்துப் பார்த்தார்கள். அவனைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. பெரிதாகச் சிரித்தான். அது அந்தப் பெரிய மனிதர்கள் செய்துகொண்டிந்ததை நிறுத்தியது. அவன் குரல் தனித்து ஒலித்தது. பின் மாலைப்பொழுதில் எழுந்து நூறு ஷிலிங் பணத்தாள்கள் பலவற்றை எண்ணி கவுண்டரின் பின்னால் நின்ற நியாகுதீயின் கையில் பாதுகாத்து வைப்பதற்காக வெளிப்படையாகவே கொடுத்தான். அதைக்கண்ட பொதுமக்கள் முணுமுணுத்தார்கள், குசுகுசுத்தார்கள். சிலர் ஏளனமாகச் சிரித்தார்கள். ஆச்சரியப்பட்டார்கள். அந்தச் செய்கை உடனடியாக அவனுக்கு எந்த அங்கீகாரத்தையும் கொடுக்கவில்லை. பின் அவன் வாடகைக்கு எடுத்த ஏழாம் இலக்க அறைக்கு தட்டுத் தடுமாறிச் சென்றான். பியற்றிஸ் அந்த அறையின் திறப்பை அவனிடம் கொடுத்தாள். அவன் அவளை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அவளில் அக்கறை காட்டாமல் திரும்பிக்கொண்டான்.

அதன் பின்னர் அவன் ஒவ்வொரு சனிக்கிழமையும் அந்த உணவகத்துக்கு வருவான். ஐந்து மணிக்கு பெரிய மனிதர்கள் எல்லாரும் ஏற்கனவே அமர்ந்திருக்கும்போது அவன் வருவான். முன்னர் செய்த அந்த சடங்கையே ஒவ்வொரு முறையும் செய்வான். நியாகுதீயிடம் பணம் கொடுப்பதைத் தவிர. ஒவ்வொரு முறையும் தோல்வியடைவான். ஒவ்வொரு முறை வரும்போதும் அவன் வழக்கமாக அமரும் அதே மூலையில் அமருவான். ஏழாம் இலக்க அறையையே வாடகைக்கும் எடுப்பான். பியற்றிசும் சுயஉணர்வில்லாமலே அவன் வருகைக்காக காத்திருப்பாள். அவனுக்காக அந்த அறையையும் தயாராக வைத்திருப்பாள். அவனை பெரிய மனிதர்கள் அவமானப்படுத்திய பின் பியற்றிசை அழைத்து அவளுடன் கதைப்பான். அல்லது அவள் முன்னால் தனக்குத் தானே கதைப்பான். அவன் வாழ்க்கை ஒரு போராட்டமாகவே இருந்துள்ளது. அவன் பள்ளிக்கூடம் சென்றதே இல்லை. ஆனால் அங்கு போவதே அவனுடைய இலட்சியமாக இருந்திருக்கிறது. ஆனால் அவனுக்கு அந்தச் சந்தர்ப்பம் ஒருபோதும் கிடைக்கவில்லை. அவனுடைய தந்தை றிஃவ்ற் வலியில் ஐரோப்பியர்கள் வாழ்ந்த இடத்தில் அனுமதி இல்லாமல்

அவர்களின் காணியில் குடியிருந்தவன். அந்த காலனித்துவ நாட்களில் அது பெரிய காரியம். அவனும் அவனுடைய குழந்தைகளும், வெள்ளைக்காரர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் காலம் முழுவதும் உழைக்க வேண்டிய தலைவிதி அவர்களுக்கு இருந்தது. அவன் கென்ய நாட்டுச் சுதந்திரப் போராட்டத்திலும் இணைந்துகொண்டான். அதனால் அவனையும் மற்றவர்களைப் போல தடுப்புக்காவலில் வைத்தார்கள். தடுப்புக்காவலில் இருந்து வெளிவந்தபோது அவன் தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தது இருந்ததுபோல, புதிதாகப் பிறந்து வந்தது போலவே இருந்தான். அவனிடம் எதுவும் இல்லை. சுதந்திரம் கிடைத்தபோது அவன் கல்வி கற்காதவன் என்றபடியால் அவனுக்கு மற்றவர்களுக்குக் கிடைத்த உயர் பதவிகள் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் அவன் நிலக்கரி எரிப்பவனாக தன் தொழிலைத் தொடங்கினான். பின் இறைச்சி வெட்டுபவனாகத் தொழில் செய்தான். பின் படிப்படியாக தானே உழைத்து மரக்கறிகளையும் உருளைக் கிழங்கையும் வண்டிகளில் ஏற்றி நைரோபியிலுள்ள றிஃவ்ற் வலியிலிருந்து சிறிமாவட்டத்திற்கு கொண்டு சென்று விற்கும் பெரும் விற்பனையாளனாகவும் வந்தான். தன் வெற்றியில் அவன் பெருமையும் கொண்டான். கடன் எடுத்தும் மானியம் பெற்றும் கல்வி பெற்றுப் படித்த பணக்காரர்களை வெறுத்தான். அவர்கள் தன்னைப் போன்றவர்களைக் கண்டுகொள்வதில்லை என்பதையும் கண்டுகொண்டான். இப்படி அவன் மனம் போனபடி பேசிக் கொண்டே இருப்பான். தன்னால் பெற்றுக் கொள்ளவே முடியாத கல்வி பற்றியும், தன் குழந்தைகள் பெறப்போகும் நல்வாய்ப்புக்கள் பற்றியும் பேசிக் கொண்டே இருப்பான். அதன் பின் மிகக் கவனமாக தன் பணத்தை எண்ணி தலையணைக்குக் கீழே வைப்பான். பின் பியற்றிசைப் போகவிடுவான். எப்போதாவது அவளுக்கு ஒரு பியர் வாங்கிக் கொடுப்பான். ஆனால் ஆண்களை காசுக்காக ஏமாற்றும் பெண்களைப் பற்றிய சந்தேகம் அவனிடம் தெளிவாகவே இருந்தது. அவன் இன்னும் மணம் முடித்திருக்கவில்லை.

ஒரு நாள் இரவு அவன் பியற்றசுடன் படுத்தான். காலையில் எழும்பி ஓர் இருபது ஷிலிங் தாளை எடுத்து அவளுக்குக் கொடுத்தான். அவள் அதை ஒருவித குற்றவுணர்வுடன் ஏற்றுக் கொண்டாள். அப்படி அவன் பல கிழமைகள் தொடர்ந்து செய்தான். அவள் பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. அது அவளுக்கு உபயோகமானது. ஆனால் ஒரு சாக்கு உருளைக்கிழங்கு அல்லது முட்டைக்கோவாவுக்குப் பணம் கொடுப்பதுபோல அதைக் கொடுத்தான் என்பதில் தான் அவளுக்கு கவலை இருந்தது. அதிகாரத்தின் மேல் படிகளில் இருப்பவர்களைப் பற்றி அவன் சொல்லிய குற்றச்சாட்டுக்களைக் கேட்டதற்காகவும் அவனுடன் ஓரிரவு படுத்ததற்காகவும் அவன் ஒரு பவுண் பணத்தை அவளுக்குக் கொடுத்தான் என்றே அவள் நினைத்தாள். அவனுடைய தன் முனைப்பையும் உள்ளடக்கத்தில் மாற்றமில்லாத கதைகளையும் கேட்டு அவள் சலிப்படைந்தாள். இருந்தும் அவனிடம் ஆழத்தில் ஏதோ ஒன்று இருந்தது. அந்த தீப்பொறி, அந்த விதை, அந்த மலர், அவனுள் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. அவனில் பாதிக்கப்பட்ட ஒரு சக உயிரைக் கண்டாள். அவனுடைய வருகைகளை அவள் எதிர்பார்த்திருந்தாள். அவளும் எவருடனாவது பேசுவதற்கு ஆவலுடன் தான் இருந்தாள். தன்னைப் புரிந்துகொள்ளக் கூடிய இன்னொரு நம்பிக்கையான ஒரு மனிதனிடம் தன் கவலைகளைச் சொல்ல ஆவலுடன் இருந்தாள்.

ஒரு சனிக்கிழமை இரவு, அதிகாரத்தின் உயரத்துக்கு ஏறுவதைப் பற்றி அவன் சொல்லிக் கொண்டிருந்த ஒரு கதையைச் சடுதியாக அவள் இடைமறித்தாள். ஏன் அப்படிச் செய்தாள் என்று அவளுக்குத் தெரியாது. வெளியே பெய்யும் மழை அதற்குக் காரணமாக இருக்கலாம். மழை மென்மையாக அலை அலையாக நெளிந்த இரும்புத் தகடுகளால் ஆன கூரைமீது தாளமிட்டுக் கொண்டிருந்தது. அந்தத் தாளம் தூக்கமற்ற ஓர் அலட்சியத்தையும் அந்தச் சூழலுக்குக் கொடுத்தது. அவள் சொன்ன அந்தக் கதையை அவன் கேட்டுக் கொண்டிருந்தான். கட்டாயம் அதைக் கேட்க வேண்டியிருந்தது. அவள் நியேறியில் கறட்டினான என்ற இடத்திலிருந்து வந்தவள். (நியேறி, மத்திய கென்யாவில் உள்ள செழிப்பான நகரம். அது அதன் வளமான வரலாற்றுக்காகவும் பண்பாட்டுக்காகவும் பெயர் பெற்றது.) அவளுடைய இரண்டு சகோதரர்களை பிரித்தானிய படைவீரர்கள் சுட்டுக் கொன்றுவிட்டனர். இன்னொருவன் தடுப்புக்காவலில் இருந்தபோது இறந்து போனான். அப்படிச் சொன்னால் அவள் பெற்றோருக்கு ஒரேயொரு குழந்தை. பெற்றோர் ஏழைகள். ஆனால் அவர்கள் அவர்களுடைய வெற்று நிலத் துண்டில் கடுமையாக உழைத்து அவளுடைய ஆரம்ப பள்ளிக்கான கட்டணத்தைக் கட்டினார்கள். முதல் ஆறு வகுப்பு வரை அவள் மிகவும் கடுமையாக உழைத்துப் படித்தாள். ஏழாம் ஆண்டில் உழைப்பதைக் குறைத்துக் கொண்டிருக்கவேண்டும். அதனால் அந்த வகுப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று சித்தியடையவில்லை. அந்த மதிப்பெண்களை வைத்தே பலர் நல்ல இரண்டாம் நிலை அரசபள்ளிகளுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அதிலும் பார்க்கக் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற சிலர் தம் பெற்றோரின் தொடர்புகளினால் மிக உயர்ந்த பள்ளிகளுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் எந்த உயர்தரப் பாடசாலையும் நியாயமான கட்டணத்தில் அவளை அழைக்கவில்லை. ஹரம்பியிலுள்ள பாடசாலைக்கு அவளை அனுப்ப அவளுடைய பெற்றோர்களிடம் பணம் இருக்கவில்லை. ஏழாம் வகுப்பில் இரண்டாவது முறையும் இருந்து திரும்பவும் படிப்பதைப் பற்றி அவள் நினைத்துப் பார்க்கவே இல்லை. அவள் வீட்டில் பெற்றோருடன் தங்கிவிட்டாள். எப்போதாவது அவளுடைய பெற்றோருக்கு அவர்களுடைய ஷாம்பா என்ற பயிர்ச்செய்கையிலும் வீட்டு வேலைகளிலும் உதவி செய்வாள். கடந்த ஆறு ஆண்டுகளாக பெற்றோர்களிலும் பார்க்க வித்தியாசமான வாழ்க்கைமுறையில் வாழ்ந்த அவள் இப்பொழுது பெற்றோருடைய வாழ்க்கை முறையையே திரும்பவும் பின்பற்றுவதா? கிராம வாழ்க்கை மந்தமானது. அவள் அடிக்கடி கறற்றினாவுக்கும் நியேறிக்கும் வேலை தேடிச் செல்வாள். எல்லா அலுவலகத்திலும் ஒரே கேள்விகளையே கேட்டார்கள். உனக்கு என்ன வேலை வேண்டும்? உனக்கென்ன தெரியும்? உன்னால் தட்டச்சுச் செய்ய முடியுமா? சுருக்கெழுத்து எடுக்க

முடியுமா? அதனால் அவள் அவநம்பிக்கை அடைந்தாள். ஒரு நாள் நியேறியில் கண்களில் கண்ணீர் வர, ஃபன்ராபானம் குடித்துக் கொண்டு இருந்தாள். அப்போது கறுத்த உடையில் கருப்பு கண்ணாடி அணிந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் வந்தான். அவளுடைய துயர நிலையைக் கண்டு அவளுடன் கதைத்தான். நைரோபியில் இருந்து வந்திருந்தான். வேலை தேடிக் கொண்டிருக்கிறாய் அல்லவா? ஒரு பெரிய நகரத்தில் வேலை தேடுவது மிகச் சுலபம். அவன் கட்டாயம் உதவி செய்வான் என்று நினைத்தாள். போக்குவரத்துக்கு? அவனி டம் கார் இருந்தது. பாலாடை நிற பேஜோ கார். கடவுளே! அதுவொரு அழகான பயணம். விடியல் வரும் என்ற உறு திப்பாடு அதில் இருந்தது.

நைரோபியில் அவன் ஒரு மொட்டைமாடி மதுக்கூடத்திற்கு அழைத்துச் சென்றான். இருவரும் பியர் குடித்துக்கொண்டு நைரோபியைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். யன்னலுக்கூடாக நியோன் விளக்கு வெளிச்சத்தில் நகரத்தைப் பார்த்தாள். அங்கே நம்பிக்கை இருக்கிறது என்று நம்பினாள். அன்றிரவு அவள் தன்னை அவனிடம் சமர்ப்பித்தாள். விடியல் வரும் என்ற நம்பிக்கை அவளுக்கு மகிழ்ச்சியையும் எடையின்மையையும் அளித்தன. மிக ஆழமாகத் துயின்றாள். காலையில் எழுந்தபோது வெண்ணிற பேஜோ கார் அங்கே இல்லை. அவனைத் திரும்ப ஒருபோதும் காணவும் இல்லை. அப்படித்தான் அவள் மதுக்கடை பரிசாரகப் பெண்ணாக வாழ்க்கையை ஆரம்பித்தாள். அதன் பின் அவள் ஒன்றரை ஆண்டாக ஒரு முறையாவது தன் பெற்றோரைப் பார்க்கப் போகவில்லை. இப்போது பியற்றிஸ் தேம்பி அழ ஆரம் பித்தாள். சுய இரக்கத்தால் பெரும் விம்மலுடன் அழுதாள். அவமானத்திலும் தொடர்ச்சியான அலைச்சலிலும் கூட நல்ல காலம் ஒருநாள் வரும் என்று நம்பினாள். ஆனால் அவள் அந்த வாழ்க்கையில் சிக்கிக் கொண்டாள். அந்த வாழ்க்கை மட்டுந்தான் அவளுக்குத் தெரிந்த ஒரே வாழ்க்கை. இருந்தும் அதன் சட்டங்களையும் விதிமுறைகளையும் அவள் உண்மையில் கற்கவே இல்லை. திரும்பவும் மூச்சை உள்ளே இழுத்து வெளியேவிட்டாள். ஒவ்வொரு தேம்பலுடனும் கண்ணீர்த்துளிகள் வெளியேறின. சடுதியாக அவள் உறைந்துபோனாள். தேம்பலும் சடுதியாக நின்றது. அவன் எப்போதோ தன்னை போர்த்துக் கொண்டு படுத்திருந்தான். அவனுடைய குறட்டை ஒலி பெரிதாக தனித்துக் கேட்டது.

அவள் விசித்திரமானதொரு வெறுமையை உணர்ந்தாள். கசப்பான பித்தம் அவளுள் சிந்தியது. தன் புதிய தோல்வியை நினைத்து அழவேண்டும் போல இருந்தது. அவள் பல ஆண்களைச் சந்தித்திருக்கிறாள். அவர்கள் அவளை கொடூரமாக நடத்தியும் இருக்கிறார்கள். அவளுடைய நல் நம்பிக்கைகளால் ஏற்பட்ட தயக்கத்தை அறிந்து அவளை எள்ளி நகையாடியும் இருக்கிறார்கள். அவை அனைத்தும் அவளுடைய மாசற்ற தன்மை என்று காட்டிக் கொள்ள மறைக்க எடுத்த முயற்சி என்று சிரித்திருக்கிறார்கள். அவை எல்லாவற்றையும் அவள் ஏற்றுக் கொண்டிருக்கிறாள். ஆனால் ஆண்டவனே இதை அல்ல. இந்த மனிதன் தன்னைப் போல பாதிக்கப்பட்டவன் அல்லவா? அப்படி இல்லாவிட்டால் சனிக்கிழமைக்கு சனிக்கிழமை அவன் ஏன் தன்னைப் பற்றி இவளுக்கு சொல்லி தன் சுமைகளை இறக்கிவைத்தான்? அவன் மனிதர்களுக்காகச் செய்யவேண்டிய சேவைகளைச் செய்துள்ளான். அவனுடைய கடமையை அவர்களுக்குக் கொடுக்கும் ரஸ்கர் பியர்களாலும் பணத்தாலும் முடிக்கிறான். அவளுடைய உள்ளக் கொந்தளிப்பு அவனுடைய தாலாட்டு. சடுதியாக அவளுள் இருந்த ஏதோவொன்று உடைந்து நொருங்கியது. ஒன்றரை ஆண்டுகளாக இருந்த கோபத்தையும் எல்லாவகையான அவமதிப்புக்களையும் கசப்புக்களையும் அவனிடம் அவள் காட்டினாள்.

அவள் பின்னால் செய்த அந்த வேலையில் அனுபவம் வாய்ந்த ஒருத்தனின் இயந்திரத்தனமான துல்லியம் இருந்தது.

அவனுடைய கண்களைத் தொட்டாள். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவனுடைய தலையைத் தூக்கினாள். பின் அதை விழவிட்டாள். அவளுடைய கண்ணீரற்ற கண்களில் உறுதியும் தெளிவும் இருந்தது. அவனுடைய தலையணையை அவன் கழுத்துக்கடியில் இருந்து இழுத்தெடுத்தாள். அதற்குள் எதையோ தேடினாள். அங்கிருந்த பணத்தை எடுத்தாள். இளஞ் சிவப்புநிற பளபளப்பான ஐந்து தாள்களை எண்ணி எடுத்தாள். அதை தன் மார்புக் கச்சைக்குள் சொருகி வைத்தாள்.

ஏழாம் இலக்க அறையைவிட்டு வெளியேறினாள். வெளியே இன்னும் மழை பெய்துகொண்டிருந்தது. வழக்கமாகத் தான் தங்கும் இடத்திற்கு அவள் போக விரும்பவில்லை. சிறிய பெட்டி போன்ற அறைக்குப் போகவோ தன் வாயாடி அறைத் தோழியைப் பார்க்கவோ விரும்பவில்லை. சேற்றிலும் மழையிலும் நனைந்துகொண்டு நடந்தாள். அவள் நியாகுதீயின் அறைக்குப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அவளுடைய அறைக் கதவில் தட்டினாள். முதலில் எந்தவித எதிர்வினையும் வரவில்லை. அதன் பின் நியாகுதீயின் தூக்கக் குரல் மழைச் சத்தத்தின் மேலாகக் கேட்டது.

'யாரது?

'இது நான் தான், தயவுசெய்து கதவைத்திற.'

'யார்?'

'பியற்றிஸ்'

'இரவில் இந்த நேரத்தில்?'

'தயவுசெய்து கதவைத் திற.'

மின்வெளிச்சங்கள் வந்தன. பூட்டுகள் திருகி திறக்கப்பட்டன. கதவு திறந்தது. பியற்றிஸ் உள்ளே சென்றாள். நியாகுதீயும் பியற்றிசும் எதிர் எதிரே நின்றார்கள். நியாகுதீ உள்உறுப்புக்களைப் பார்க்கக் கூடிய இரவுடையில் நின்றாள். தோளில்

பச்சை நிற சுவெற்றர் அணிந்திருந்தாள்.

'பியற்றிஸ், ஏதாவது பிரச்சினையா?' கடைசியில் நியாகுதீ கேட்டாள். அவளுடைய குரலில் அக்கறை தெரிந்தது.

'நான் இங்கே கொஞ்சம் இருந்து இளைப்பாறவா? நான் களைத்துப் போயிருக்கிறேன். உன்னோடு கதைக்கவும் வேணும்,' பியற்றிசின் குரலில் உறுதியும் வலுவும் இருந்தன.

'ஆனால் என்ன நடந்தது, சொல்?'

'உன்னிடம் ஒரு கேள்வி மட்டுந்தான் கேட்கவேணும், நியாகுதீ.'

அவர்கள் இருவரும் இன்னும் நின்றுகொண்டுதான் இருந்தார்கள். பின் எந்த வார்த்தையும் பேசாமல் இருவரும் கட்டிலில் இருந்தனர்.

'நீ ஏன் உன் பிறந்த வீட்டை விட்டுவந்தாய், நியாகுதீ?' என்று பியற்றிஸ் கேட்டாள். அதன் பின் இன்னொரு அமைதியான கணம் தொடர்ந்தது. நியாகுதீ அந்தக் கேள்வியைப் பற்றி நினைத்தாள். பியற்றிஸ் காத்துக் கொண்டிருந்தாள். நியாகுதீயின் குரல் கடைசியில் வெளிவந்தபோது அதில் ஒருவித நடுக்கமும் தள்ளாட்டமும் இருந்தது.

'அதுவொரு நீண்ட கதை, பியற்றிஸ். என்னுடைய தாயும் தந்தையும் ஓரளவு வசதியானவர்கள். அத்துடன் நல்ல கிறிஸ்தவர்கள். எங்களுக்கு விதிமுறைகள் இருந்தன. கிறிஸ்தவர் அல்லாதவர்களுடன் பழகக் கூடாது. அவர்களுடைய பொய்க் கடவுளின் பழக்கவழக்க சடங்குகளில் பங்குபற்றக் கூடாது. அவர்களின் நடனங்கள், விருத்தசேதன சடங்குகள் போன்றவற்றில் பங்குபற்றக் கூடாது. எப்படி உண்ணவேண்டும், எதை எப்போது உண்ணவேண்டும் போன்ற விதிகளும் இருந்தன. ஒரு கிறிஸ்தவச் சீமாட்டி போலவே நடக்கவும் வேணும். என்னுடன் எந்தவொரு ஆணையும் காணக்கூடாது. விதிகள் விதிகள். ஒரு நாள் பாடசாலையிலிருந்து நேராகத் திரும்பி வராமல் என்னைப் போன்ற இன்னொரு பெண்ணுடன் வெளியேறி ஈஸ்ற்லீக்குச் சென்றேன். அன்றிலிருந்து நாலு ஆண்டுகளாக நான் வீட்டுக்குச் சென்றதே இல்லை. அவ்வளவுந்தான்.'

இன்னொரு அமைதி. பின் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவரை ஒருவர் அறிந்தவர் போல.

'இன்னொரு கேள்வி, நியாகுதீ. அதற்கு நீ பதில் சொல்ல வேண்டும். நீ என்னை எப்பொழுதும் வெறுத்தாய் என்றுதான் நான் நினைத்திருக்கிறேன். இழிவாகக் கருதினாய் என்று நான் நினைத்திருக்கிறேன்.'

'இல்லை, இல்லை, பியற்றிஸ். நான் உன்னை ஒருக்காலுமே வெறுக்கவில்லை. நான் எவரையுமே வெறுத்ததில்லை. எனக்கு எதுவும் ஆர்வத்தை ஏற்படுத்துவதில்லை. இப்பொழுது ஆண்கள் கூட என்னைக் கவர்வதில்லை. இருந்தும் உடனடியான மனவெழுச்சி எனக்குத் தேவை. போலியாக முகஸ்திதி செய்யும் ஆண்களின் கண்கள் என்னை ஒரு பெண்ணாக உணரச் செய்யும். அது எனக்குத் தேவை. ஆனால் நான் அப்படியானவள் இல்லை. நீ அதற்கும் மேலானவள். எப்படியோ உன்னிடம் ஏதோவொன்று இருந்தது, என்னிடம் இருக்கவில்லை.'

பியற்றிஸ் கண்ணீர் வெளிவருவதை சிரமப்பட்டு அடக்கினாள்.

அடுத்தநாள் அதிகாலையில் அவள் நைரோபிக்குச் செல்லும் பேருந்தில் ஏறினாள். நைரோபியில் இறங்கி பஸார் வீதியால் கடைகளைப் பார்த்துக் கொண்டு நடந்தாள். பின் கவண்மென்ற் தெருவுக்கும் கென்யாற்றா அவெனியுக்கும் பின் கிமதிவீதிக்கும் சென்றாள். சுலைமான் வீதியில் இருக்கும் ஒரு கடைக்குச் சென்று பல நீண்ட காலுறைகளை வாங்கினாள். ஒன்றைக் காலில் அணிந்து கொண்டாள். தனக்கென்று புதிய ஆடை ஒன்றையும் வாங்கினாள். அதையும் அணிந்துகொண்டாள். ஒரு பாட்டா சப்பாத்துக் கடையில் குதி உயர்ந்த காலணி ஒன்றையும் வாங்கிக் கொண்டாள். அதையும் அணிந்துகொண்டு பழையதட்டையான காலணியை வீசி எறிந்தாள். அகிம்பா பெட்டிக் கடையில் ஒரு காதணியை வாங்கி போட்டுக் கொண்டாள். ஒரு கண்ணாடி இருக்கும் இடத்திற்குச் சென்று தன் புதிய உருவத்தைப் பார்த்தாள். சடுதியாக கடுமையாகப் பசி எடுப்பதை உணர்ந்தாள், வாழ்நாள் முழுவதும் பசி கிடந்தவள் போல. மோதி மகாலுக்கு முன் தயங்கிநின்றாள். பின் நடந்தாள். கடைசியாக ஃபிரான் சேக்குச் சென்றாள். அவள் கண்கள் பளபளத்தன. ஆண்களின் கண்களை அவளைத் திரும்பிப் பார்க்கவைத்தன. அது அவளுக்கு உற்சாகத்தை ஊட்டியது. அவள் இருப்பதற்கு மூலையிலிருந்த மேசையைத் தெரிவுசெய்தாள். இந்தியன் கறி உணவுக்கு ஆணை கொடுத்தாள். வேறு மேசையில் இருந்த ஓர் ஆண் தன் மேசையைவிட்டு அவளுடைய மேசையில் வந்து அமர்ந்தான். அவனை அவள் பார்த்தாள். அவளுடைய கண்கள் மகிழ்ச்சியால் ஒளிர்ந்தன. அவன் கருப்புநிற கோட் சூட் அணிந்திருந்தான். அவனுடைய கண்களில் காமம் வெளிப்பட்டது. அவளுக்கு ஒரு பியர் வாங்கினான். அவளுடன் உரையாட முயன்றான். ஆனால் அவள் அமைதியாக உணவருந்தினாள். அவன் தன் கையை மேசையின் கீழே வைத்து அவளுடைய தொடையைத் தொட்டான். அவன் அப்படிச் செய்வதற்கு அவள் இடமளித்தாள். அவனுடைய கை தொடையில் மேலேமேலே சென்றது. சடுதியாக அவள் தான் சாப்பிட்ட உணவையும் அருந்தாத மதுவையும் கைவிட்டு வெளியேறினாள். அவள் தான் செய்வதில் திருப்தி அடைந்தாள். அவன் அவளைத் தொடர்ந்து வந்தான். அவன் தொடர்ந்து வருகிறான் என்பது தன் கண்களைத் திருப்பி ஒருமுறை கூடப் பார்க்காமலே அவளுக்குத் தெரியும். அவன் அவளுக்குப் பக்கத்தில் ஒருசில யார் தூரம் பின்னால் நடந்து வந்தான். அவள் தனக்குத்தானே புன்னகை புரிந்தாள். ஆனால் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் தன் நம்பிக்கையை இழந்தான். அவன் ஜினோ கடையின் முன்

நின்று அவமானத்துடன் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு நிற்கவைத்துவிட்டு அவனைக் கைவிட்டு அவள் சென்று விட்டாள். இல்மொறொவுக்குப் போகிற பேருந்தில் ஏறினாள். ஆண்கள் தங்கள் இருக்கைகளை அவளுக்குக் கொடுத் தார்கள். அவளும் அதை உரிமையுடன் ஏற்றுக் கொண்டாள். றீரொப் மதுக்கூட கவுண்டருக்கு நேராகச் சென்றாள். வழக் கமான பெரிய மனிதர்கள் அங்கே இருந்தார்கள். அவள் உள்ளே வந்தபோது அவர்களுடைய உரையாடல் சில மணித்துளிகள் மட்டுமே நடந்தது. அவர்களுடைய காமக் கண்கள் அவளில் திரும்பின. நியாகுதீயால் கூட தன் சலிப்ப டைந்த அலட்சியத்தை நீட்டிக்க முடியவில்லை. பியற்றிஸ் அவர்களுக்கு மதுபானம் வாங்கிக் கொடுத்தாள். முகாமை யாளன் ஒருவித சந்தேகத்துடன் அவளிடம் வந்து ஓர் உரையாடலை தொடங்க முயன்றான். ஏன் அவள் தன் வேலையை விட்டு விலகினாள்? எங்கே போயிருந்தாள்? நியாகுதீக்கு உதவியாக மதுக்கடையில் கவுண்டரில் வேலைசெய்ய விருப்பமா? என்று கேட்டான். அப்போது மதுக் கடைப் பணிப்பெண் ஒருத்தி அவளுக்கு ஒரு குறிப்புச் சீட்டு கொண்டுவந்து கொடுத்தாள். ஒரு பெரியபுள்ளி அவனுடைய மேசையில் அவளை இருக்க வருவாயா என்று கேட்டு எழுதி அனுப்பியிருந்தான். இன்னும் பல சீட்டுக்கள் வித்தியாசமான பெரிய இடங்களில் இருந்து ஒரேயொரு கேள்வியுடன் வந்தன. அதாவது, இன்றிரவு நீ வேலையில்லாமல் சும்மாவா இருக் கிறாய்? நைரோபிக்கு ஒரு பயணம் போய் வருவோமா? அவள் கவண்டரை விட்டு விலகாமல் நின்றாள். ஆனால் அவ ளுக்குக் கிடைத்த மதுவை உரிமையுடன் ஏற்றுக் கொண் டாள். அப்போது அவள் ஒரு புதிய வலுவையும் தன்னம்பிக் கையையும் பெற்றிருந்தாள்.

ஒரு ஷிலிங் பணத்தை கையில் எடுத்து ஒரு துளைக்குள் போட்டாள். தானியங்கி இசைப்பெட்டியில் இருந்து றொபின் சன் மவாங்கியின் குரல் அதிரொலியாக அதிலிருந்து ஒலித் தது. 'ஹுன்யு வா மாசாம்பானி' என்று ஒருத்தன் பாடினான். பண்ணைகளில் வேலைசெய்யும் பெண்களைப் பற்றிப் பாடிய பாடல் அது. அவர்களை நகரத்திலுள்ள பெண்களுடன் ஒப் பிட்டுப் பாடினான். அதன் பின் கமறுகிகியுவின் பாடல்களைப் பாடினான். பின் டானியல் கமாவின் - டி.கே.-இன் - பாடல் களைப் பாடினான். ஆண்கள் அவளுடன் நடனம் ஆட விரும் பினார்கள். அவர்களை அவள் அலட்சியப்படுத்தினாள். ஆனால் அவளைச் சுற்றி அவர்கள் சிறகடிப்பதை அவள் விரும்பினாள். டி.கே.-யின் பாடலுக்கு அவள் தன் இடுப்பை வளைத்து ஆடினாள். அவளுடைய உடல் சுதந்திரமாக ஆடி யது. அவளும் சுதந்திரமாக இருந்தாள். காற்றில் இருந்த பர பரப்பையும் பதற்றத்தையும் அவள் தனக்குள் இழுத்து ரசித்தாள்.

பின் திடீரென்று ஆறு மணியளவில் ஐந்து-தொன் லொறியை வைத்திருந்தவன் மதுக்கூடத்துக்குள் பாய்ந்து வந்தான். இந்தமுறை அவன் தன் இராணுவ மேலங்கியை அணிந்தி ருந்தான். அவனுக்குப் பின்னால் ஒரு பொலிஸ்காரன் நின் றான். அவன் எல்லாவிடத்தையும் சுற்றிப் பார்த்தான். எல்லா ருடைய கண்களும் அவனில் இருந்தன. ஆனால் பியற்றிஸ் மட்டும் இன்னும் இடுப்பை நெளித்து ஆடிக் கொண்டே இருந்தாள். முதலில் பியற்றிசை, ஒரு சில துளிநேரப் புகழில் இசைப்பெட்டியில் வரும் இசைக்கு ஆடிக் கொண்டிருந்த பெண்ணை, அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிய வில்லை. பின் அவளை அடையாளம் கண்டுபிடித்த வெற்றிக் களிப்பில் 'அவள்தான் அவள்தான். திருடி! திருடி!' என்று சத்தம் போட்டான்.

அங்கிருந்தவர்கள் தங்கள் இருக்கைகளில் நிமிர்ந்து அமர்ந் துகொண்டார்கள். பொலிஸ்காரன் அவளிடம் சென்று அவள் கைகளில் கைவிலங்கிட்டான். அவள் அதைத் தடுக்க வில்லை. கதவடியில் மட்டும் தன் தலையைத் திருப்பி துப் பினாள். பின் வெளியேறினாள். பொலிஸ்காரன் பின்னால் சென்றான்.

மதுக்கூடத்தில் திகைத்துப் போய் அமைதியாக இருந்தவர் களில் யாரோ ஒருத்தன் வன்முறையற்ற சுவையான கொள்ளை என்று அதை நகைச்சுவைபொங்கச் சொன்னான். அங்கிருந்த வர்கள் பெருங்களிப்புடன் வெடித்து சிரித்தார்கள். பின் அவ ளைப் பற்றிக் கதைக்க ஆரம்பித்தார்கள். அவளுக்கு பொலிஸ்காரர் அடித்திருப்பார்கள் என்று சிலர் சொன் னார்கள். 'இந்த மதுக்கடைப் பெண்கள்' என்று இழிவாகப் பேசினார்கள். இன்னும் சிலர் உயர்ந்து கொண்டுபோகும் குற்ற விகிதத்தைப்பற்றிக் கவலையுடன் பேசினார்கள். நம்ப முடியாமல் தலைகளை ஆட்டிக் கொண்டார்கள். 'தொங்கும் மசோதா' (கென்யாவில் மருத்துவச் செலவுக் கட்டணம் முழு வதையும் கட்ட முடியாதவர்களின் உடலை மருத்துவமனை புதைக்கக் கொடுக்க மறுக்கும் மசோதா.) அதை இப்படிப் பட்ட சொத்து திருட்டு வழக்குகளுக்கும் நீட்டிக்க முடியாதா? என்று கதைத்தார்கள். எவருக்கும் தெரியாமலே ஐந்து தொன் - லொறி வைத்திருந்தவன் ஒரு கதாநாயகனாக ஆகிவிட் டான். இப்பொழுது அவனிடம் பலவகையான கேள்விக ளையும் கேட்டு முழுக் கதையையும் சொல்லச் சொல்லிக் கேட்டார்கள். சிலர் அவனுக்கு மது கூட வாங்கிக் கொடுத் தார்கள். இன்னும் குறிப்பிடத்தக்கது என்ன வென்றால் அவன் சொல்வதை அவர்கள் கேட்டார்கள். அவர்களுடைய கவன மான மௌனம், பாராட்டத்தக்க சிரிப்பால் நிறுத்திவைக்கப் பட்டது. சொத்துடைமைக்கு எதிரான அச்சுறுத்தல் தற்காலிக மாகப் பலரையும் ஒரு குடும்பமாக்கியது. முதல் முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த மனிதன் தன் கதையை சுவைபடக் கூறிக் கொண்டிருந்தான்.

கவுண்டருக்குப் பின்னால் நின்ற நியாகுதீ அழுதுகொண்டி ருந்தாள்.



mahalingam.k@thaiveedu.com

# தாய்வீடு இதழ் இலங்கையில் கிடைக்குமிடங்கள்...

## மட்டக்களப்பில்...

பிரசாத் சொக்கலிங்கம்
ஆரையம்பதி
71 648 6666

வி. மைக்கல் கொலின்
மட்டக்களப்பு
77 433 8878

ஜிப்ரி ஹாசன்
ஓட்டமாவடி
76 973 5350

பாத்திமா புத்தக நிலையம்
ஏறாவூர்
77 080 7787

## அம்பாறையில்...

எம். ஐ. முஹம்மட் சாக்கீர்
சம்மாந்துறை
77 160 7490

நிரோஜன் சதாசிவம்
தம்பிலுவில்
77 785 0825

பேஜஸ் புத்தக நிலையம்
அக்கரைப்பற்று
74 239 7395

## யாழ்ப்பாணத்தில்...

எஸ். சத்தியதேவன்
யாழ்ப்பாணம்
77 729 4287

சஜீலன்
மல்லாகம்
77 669 8386

தானா விஷ்ணு
இமையாணன், வடமராட்சி
74 007 3200

புக் லாப்
சேர். பொன். இராமநாதன் வீதி
(யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு எதிரில்)
யாழ்ப்பாணம்
77 128 5749

எங்கட புத்தகங்கள்
18/2, திருவடி நிழல்
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
77 378 8795

குமின்சி புக் சொப்
271, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
77 226 8486

## கொழும்பில்...

மல்லியப்புசந்தி திலகர்
கொழும்பு
71 120 8061

## மலையகத்தில்...

அருணாசலம் லெட்சுமணன்
நாவலப்பிட்டி
77 165 4372

அருள்கார்க்கி
பண்டாரவளை
77 519 4817

## கிளிநொச்சியில்...

சிந்தனா ஓட்டோ பாட்ஸ்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
76 459 1459

கிளி மக்கள் அமைப்பு
கிளிநொச்சி
77 134 3832

## அஞ்சலில் பெறுவதற்கு...

பிரசாத் சொக்கலிங்கம்
71 648 6666

எஸ். சத்தியதேவன்
77 729 4287



# கொழும்பில் இடம்பெற்ற
# "சரசோதி மாலை - மூலமும் உரையும்"
# நூல் அறிமுக விழா







**தா**ய்வீடு பதிப்பகத்தின் வெளியீடான முனைவர் பாலசிவகடாட்சம் அவர்களின் 'சரசோதி மாலை - மூலமும் உரையும்' நூல் அறிமுக விழா, 2026 செப்டம்பர் 26 அன்று கொழும்பு தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் தமிழ் அறிஞர்கள், ஊடக வியலாளர்கள் மற்றும் ஆர்வலர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. இலங்கையில் ஆக்கப்பெற்ற முதலாவது தமிழ் நூலாக அடையாளம் காணப்படும் இந் நூல், இரண்டாம் பண்டித பராக்கிரமபாகுவின் ஆணையின்பேரில் போசராச பண்டிதரால் இயற்றப்பட்டு, பொ.ஆ. 1310 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் அரங்கேற்றப்பட்டதாக நூலின் அகச்சான்றுகளின் அடிப்படையில் ஆய்வாளர்களால் கொள்ளப்படுகின்றது.

நீண்டகாலமாக விளக்கவுரை எழுதப்படாமல் இருந்த இந்நூலுக்கான விரிவுரையையும் ஆய்வுக்குறிப்புகளையும் 'வீரகேசரி' நாளிதழின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் அவர்களின் ஊக்கத்துடன் முனைவர் பாலசிவகடாட்சம் உருவாக்கி, அந்நாளிதழில் தொடராக வெளியிட்டிருந்தார். காலத்தால் விலகிச்சென்ற ஓர் அறிவுப் பதிவை மீண்டும் வாசிப்புப் பரப்பிற்குக் கொண்டுவந்து, தமிழ் நூல் வரலாறு மற்றும் அறிவு மரபு சார்ந்த புதிய ஆய்வுகளுக்கு வழிகோலும் நோக்கில் தாய்வீடு பதிப்பகம் அதனை நூலாகப் பதிப்பித்துள்ளது.














இந் நிகழ்வின் ஏற்பாடுகளை 'வீரகேசரி' நாளிதழின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் ஒருங்கிணைத்து முன்னிலை வகித்தார். கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவரும் தகைசால் பேராசிரியருமான வ. மகேஸ்வரன் தலைமைத் தாங்கி, நூலின் வரலாற்றுப் பின்புலம் குறித்தும் அதன் பாயிரத்தையொட்டியும் தலைமையுரையாற்றினார்.

தொடர்ந்து, 'தமிழ்மாமணி' காரைக்கவி கந்தையா பத்மநாதன் நூல் அறிமுகவுரையையும், திருமதி சுபாஷினி துவராஜ் விரிவான ஆய்வுரையையும் நிகழ்த்தினர். 'தாய்வீடு' பத்திரிகையின் ஆலோசகர் குழு உறுப்பினர் ச. சத்தியதேவன் தாய்வீடு பதிப்பகம் சார்பில் உரையாற்றினார். 'கலைமாமணி' ஸ்ரீதயாளன் நூலுக்கான விதப்புரையை வழங்கியதுடன், நூலியலாளர் என். செல்வராஜா, 'அரங்கம்' இதழின் ஆசிரியர் பூபாலரட்ணம் சீவகன் மற்றும் கொழும்பு தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். நூலாசிரியர் முனைவர் பாலசிவகடாட்சம் அவர்களின் ஏற்புரையைத் தொடர்ந்து, கொழும்பு தமிழ்ச் சங்க இலக்கியக் குழுச் செயலாளர் கி. பொன்னுத்துரை நன்றியுரையாற்றினார். சமூகத் தமிழார்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்த இந் நிகழ்வைச் செல்வி தனுஜா தொகுத்து வழங்கினார்.















உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?





பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com





BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
விற்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion Lotion Capilar
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

$8475.00
416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE

HomeLife Today Realty Ltd.
Brokerage
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

Aozon
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFE Financial Services Inc.
416-909-0400 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX NORTH REALTY
LATHAN VARATHARAJAH
Broker Owner